ஒக்ரோபர்
2025

# எழுநா

இதழ் 39



# உள்ளே...


வல்லிபுரமும் நாகர்கோயிலும் — 03
- சிவ தியாகராஜா

இலங்கையில் உள்ளூராட்சி அரசாங்கம்: பிரித்தானியர் ஆட்சியின் தொடக்கம் முதல் 1920 வரையான வரலாறு — 16
- ஆங்கில மூலம்: பிரேமசிறி ஹெட்டியாராச்சி
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

அருணாசலமும் அனைத்து இலங்கையர் தேசியவாதமும் — 22
- கார்த்திகேசு இந்திரபாலா

கதிர்காமம்: தமிழ் நாட்டவர்க்கான யாத்திரை வழிகாட்டி — 28
- எம். எம். ஜெயசீலன்

தற்கொலைகள்: சமூக அவலத்தின் கண்ணாடி — 39
- மீநிலங்கோ தெய்வேந்திரன்

பன்மைத் தேசங்களில் கண்ணகை: தாய்த் தெய்வ மரபில் கண்ணகையை மீள்வரையறை செய்தல் — 60
- பக்தவத்சல பாரதி

தொலைந்த கிறிஸ்தவத் திருமறைகள் — 73
- சச்சிதானந்தன் சுகிர்தராஜா

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் வலிகாமம் — புத்தூர் — 81
-இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

இலங்கையின் சமய மறுமலர்ச்சி இயக்கமும் முதலாளித்துவமும்: அநகாரிக தர்மபாலவின் வகிபாகம் — 86
- ஆங்கில மூலம்: குமாரி ஜயவர்த்தன
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

1949 — 1968: ஈழத்தமிழரின் தேசிய அரசியல் உருமாற்றமும் எதிர்ப்புப் போராட்டங்களும் — பகுதி — 4 — 91
- சி. அ. யோதிலிங்கம்

ஈழத் தமிழ்க்கூத்தின் நாடகக் கட்டமைப்பு முறை — 100
- சின்னையா மௌனகுரு

கூத்தின் ஆட்ட முறைகளும் அதன் ஆற்றுகை அமைப்பும் — 109
- சின்னையா மௌனகுரு

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அரசியல் விஞ்ஞானக் கல்வியின் வரலாறு — 114
- ஆங்கில மூலம்: ஏ.எம். நவரத்தின பண்டார, ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

இன்றைய இருப்பின் மீதான கடந்த காலத் தாக்கம் — 121
- நடேசன் இரவீந்திரன்

முள்ளிவாய்க்கால் படுகொலையின் கொடிய வேர்களை இலங்கையின் நீண்டகால அரசியல், சமூக, பொருளாதாரக் கட்டமைப்புகளில் காண முடிவது எப்படி? — 128
- மு. திருநாவுக்கரசு

இந்தியச் சமஷ்டி முறை — 133
- ஆங்கில மூலம்: ஜயம்பதி விக்கிரமரட்ண
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

மலையகத்தில் கூட்டுறவு முயற்சிகள் — 138
- வை. ஜெயமுருகன்

வடக்கு — கிழக்கு மாகாணங்களின் நீர்வளம், வேளாண்மைத் துறை பற்றிய அடிப்படைத் தகவல்கள்: முரண்பாட்டுக்கு முன்னரும் பின்னரும் — 146
- சுப்ரமணியம் சிவகுமார்

ISSN 3093-5210

# எழுநா

இதழ் 39

**அட்டைப்படம் :**
பறைமேளக் கூத்துக் கலைஞர்களை சமூகமயப்படுத்தல்.
ஓவியர்: கந்தசாமி ஆதித்தன்.

### இயக்குநர் சபை

**கணேசானந்தன் சசீவன்**
ஆளுகை

**தில்லைநாதன் கோபிநாத்**
வெளியீடு

**கனகலிங்கம் சுகுமார்**
வளத்திரட்டல்

### வெளியீட்டுக்குழு

**கணேசானந்தன் சசீவன்**
பதிப்பாளர்/ பிரதம ஆசிரியர்

**ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்**
உதவி ஆசிரியர் / நகல் திருத்தம் / நூல் தயாரிப்பு / தர நிர்ணயம்

**தர்ஷனா பிறேம்குமார்**
கற்கை வட்டம் / நிகழ்வுகள் / ஊடக ஒருங்கிணைப்பு

**மதுராங்கி குணசீதன்**
கலை பண்பாட்டு ஒருங்கிணைப்பு / ஆய்வு ஒருங்கிணைப்பு

**பியூலா பரமேஸ்வரன்**
வலைத்தளம் / பரவலாக்கம் / அச்சு ஒருங்கிணைப்பு / விநியோகம்

**தனுஜன் சுந்தரலிங்கம்**
ஆவணப்பட ஒருங்கிணைப்பு

### தயாரிப்புக் குழு

**ஜீவமணி பாலன்**
நூல் வடிவமைப்பு /அட்டை வடிவமைப்பு

**ரவீந்திரன் கருப்பையா**
நூல் வடிவமைப்பு/அட்டை வடிவமைப்பு

**வேணி ஆனந்தா**
சஞ்சிகை வடிவமைப்பு

**கௌரிகாந்தன் சித்தாந்தன்**
மெய்ப்புப்பார்ப்பு

**நிரோஷா தியாகராசா**
மெய்ப்புப்பார்ப்பு

**கலாமணி பரணீதரன்**
அச்சு ஒருங்கிணைப்பு

### வளவாளர்கள்

**தில்லைநாதன் கோபிநாத்**
நூல் தயாரிப்பு / நூல் அச்சாக்கம்

**தங்கராஜா பிரபாகரன்**
ஊடக வீச்சு / மனிதவளத் தொடர்பு

**சிறிதரன் சோமிதரன்**
ஆவணப்படம்

**இ. பத்மநாப ஐயர்**
உசாத்துணை சேவை

**சுஜீவன் தர்மரட்ணம்**
நிகழ்வுகள் / கற்கை வட்டம்

**ஜனனி பாலசுந்தரம்**
வலைத்தளம் / பரவலாக்கம்

### ஆதரவளிப்போர்

**மானுடம் நிறுவனம்**
நூல் தயாரிப்பு / சஞ்சிகை விநியோகம் / உசாத்துணை சேவை

**ஆதிரை வெளியீடு**
ஆவணப்படம்

**நிகரி**
ஆவணப்படம்

**நாளை வெளியீடு**
ஆவணப்படம்

### கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

**நடராஜா முரளிதரன்** – கனடா
**சிவராஜா ரூபன்** – நோர்வே

### கூட்டுறவு புத்தக மன்ற ஒருங்கிணைப்பாளர்கள்

**கனகலிங்கம் சுகுமார்** – ஐக்கிய இராச்சியம்
**கணேசானந்தன் சசீவன்** –ஐக்கிய இராச்சியம்
**இ. பத்மநாப ஐயர்** – ஐக்கிய இராச்சியம்
**சதீசன் தனபாலசுந்தரம்** – ஐக்கிய இராச்சியம்
**மாதவி சிவலீலன்** – ஐக்கிய இராச்சியம்
**சிவகுமார் பாலசுப்ரமணியம்** – ஐக்கிய இராச்சியம்
**எஸ்.கே.விக்னேஸ்வரன்** – கனடா
**இளங்கோ** – கனடா
**ரமணன் சந்திரசேகரமூர்த்தி** – கனடா
**தமிழ்நதி** – கனடா
**சிவராஜா ரூபன்** – நோர்வே
**சஞ்சயன் செல்வமாணிக்கம்**–நோர்வே
**தில்லைநாதன் கோபிநாத்**–அவுஸ்திரேலியா
**அசோக் யோகன் கண்ணமுத்து** –பிரான்ஸ்
**கந்தையா ரமணிதரன்** – ஐக்கிய அமெரிக்க நாடுகள்
**ராஜ்குமார் ரஜீவ்காந்த்** –இலங்கை

### நிகழ்வு ஒருங்கிணைப்புப் பங்காளர்கள்

**சிறகுகள் அமையம்** – யாழ்ப்பாணம்
**சத்தியமனை நூலகம்** – யாழ்ப்பாணம்
**தமிழ்த் தேசிய கலை இலக்கிய பேரவை**
கிளிநொச்சி
**மீசோ** – கிளிநொச்சி
**எழுகை அமையம்** – கிளிநொச்சி
**கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**
வவுனியா
**சந்திரோதயம் கலை இலக்கிய பெருமன்றம்**
மட்டக்களப்பு
**'கா' கலை இலக்கிய வட்டம்** – மட்டக்களப்பு
**திரைப்படக் கழகம்** – மட்டக்களப்பு
**ஏறாவூர் வாசிப்பு வட்டம்** – மட்டக்களப்பு
**தளம் கட்டமைப்பு** –திருகோணமலை
**முத்தமிழ்ச்சங்கம்** – திருகோணமலை
**நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்** – கண்டி
**கலை இலக்கிய வட்டம்** – பதுளை
**தியேட்டர் மேட்ஸ் பண்பாட்டு கழகம்** – நுவரெலியா
**கொழும்புத் தமிழ்ச் சங்கம்** – கொழும்பு

### விநியோகப் பங்காளர்கள்

**பனுவல் புத்தகசாலை** – யாழ்ப்பாணம்
**குயின்சி புத்தகசாலை** – யாழ்ப்பாணம்
**வெண்பா புத்தகசாலை** – யாழ்ப்பாணம்
**எங்கட புத்தகங்கள்** – யாழ்ப்பாணம்
**பாத்திமா புத்தக நிலையம்** – மட்டக்களப்பு
**மொழி புத்தகம் பதிப்பகம்** – வெள்ளவத்தை

### அச்சுப்பதித்து விநியோகிப்போர்

**நாளை வெளியீடு** – கனடா

### கலை பண்பாட்டு நடுவம் துறைசார் மதியுரைஞர் குழு

**நிலாந்தன் மகாதேவா**
இலக்கியம் – கவிதை

**பாக்கியநாதன் அகிலன்**
காண்பியக்கலை – கட்டடக்கலை

**ஜோசப் ஜோன்சன் ராஜ்குமார்**
ஆற்றுகைக்கலை – அரங்கக்கலை

**இலங்கரெட்ணம் சஜித்**
ஆற்றுகைக்கலை – நடனம்

**சபேஸ் சுகுணசபேசன்**
காண்பியக்கலை – புகைப்படக்கலை

### துறைசார் மதியுரைஞர் குழு

**ஶ்ரீவரதராஜன் பிரசாந்தன்**
மொழியும் இலக்கியமும்

**கந்தையா ரமணிதரன்**
நீரியலும் நீர்ப்பாசனமும்

**குமாரவடிவேல் குருபரன்**
சட்டமும் சட்ட முறைமையும்

**நடராஜா சிறீஸ்கந்தராஜா**
சூழலும் உயிர்ப் பல்வகைமையும்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**
சமயமும் இறையியலும்

**பால சிவகடாட்சம்**
சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்

**நாகமுத்து பிரதீபராஜா**
புவியியலும் திட்டமிடலும்

**பரமு புஸ்பரட்ணம்**
வரலாறும் தொல்லியலும்

**சனாதனன் தமோதரம்பிள்ளை**
கட்புல அரங்கேற்றக் கலைகள்

**சேரன் உருத்திரமூர்த்தி**
சமூகவியலும் மானிடவியலும்

**முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன்**
பொருளியலும் நிதியியலும்

**சபா ஜெயராசா**
கல்வியியலும் கற்றலும்

**மரியோ அருள்தாஸ்**
அரசியலும் மெய்யியலும்

**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**
கட்டடக்கலையும் வடிவமைப்பும்

**கந்தையா பகீரதன்**
விவசாயமும் மீன்பிடியும்

### வழிப்படுத்தும் குழு

**மீநிலங்கோ தெய்வேந்திரன்**



சிவ தியாகராஜா

கலாநிதி சிவ தியாகராஜா மருத்துவம், மரபணுவியல், தொல்லியல், வரலாறு ஆகிய கற்கைத் துறைகளில் பட்டங்கள்பெற்று பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (University of Ceylon) B.Sc பட்டத்தையும், இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து M.B.B.S பட்டத்தையும், இலண் டன் பல்கலைக்கழகத்திலிருந்து Ph.D. பட்டத்தையும் பெற்றவராவார். கலாநிதி சிவ தியாகராஜா கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருபத்து ஆறு நூல்களைப் படைத்திருக்கி றார். Peoples and Cultures of Early Sri Lanka, Genetic Origins of the Tamils, Kantarodai Civilization of Ancient Jaffna 500 BCE800CE, The Tamils of Lanka – A Timeless Heritage, Archaeological Excavations at the Jaffna Fort, பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் ஆகியவை அவற்றுள் சிலவாகும்.

# வல்லிபுரமும் நாகர்கோயிலும்

யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால வரலாற்றுக்கான நேரடி எழுத்துப் பதிவுகள் குறைவாக இருந்தாலும், தொல்லியல் அகழாய்வுகள் இதன் பழங்காலக் குடியேற்றங்கள், பண்பாடு, மற்றும் சமூக – பொருளாதார வளர்ச்சி பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வெளிக்கொணருகின்றன. அதன் அடிப்படையில் கந்தரோடை, பண்டைய யாழ்ப்பாண நாகரிகத்தின் ஆதிகேந்திரமாக விளங்கிய ஒரு முக்கியப் பகுதி ஆகும். தொல்லியல் ஆய்வுகள், பொ.யு.மு. 500 ஆம் ஆண்டளவில் கந்தரோடை ஒரு நகரமாகி விட்டதை எடுத்துக்காட்டுகின்றன. இந்த இடத்தில் அடர்த்தியான மக்கள் குடியேற்றம் அன்றிலிருந்து இன்றுவரை, மத்திய காலத்தில் ஒரு சிறு இடைவெளியைத் தவிர, தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. நாணயவியல், தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் பொ.யு. எட்டாம் நூற்றாண்டுவரை கந்தரோடை பண்டைய யாழ்ப்பாணமான நாகநாட்டின் தலைநகரமாக விளங்கி வந்திருப்பதைக் காட்டி நிற்கின்றன. கந்தரோடையிலும், அதன் பெருங்கற் பண்பாட்டின் தாக்க விளைவுகளுக்கு உட்படுத்தப்பட்ட வடஇலங்கையின் ஆதி இரும்புக்கால மையங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் அறிக்கைகளைக் கொண்டு எழுதப்படும் 'பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்' என்னும் இக் கட்டுரைத் தொடர் வடஇலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட காலங்களிலும், வரலாற்று உதய காலங்களிலும், வரலாற்றுக் காலங்களிலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல், ஆளுமை, பண்பாடு, பெருமுயற்சி, துணிவாண்மை என்பனவற்றின் பரந்த காட்சிப்பதிவாக விளங்கும்.

வல்லிபுரம் யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சிப் பகுதியில் இன்று ஒரு சிறு கிராமமாகக் காட்சியளிக்கிறது. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மக்கள் குடியேற்றம் செறிந்த, பிரபலமான, ஓர் ஆரம்பகால கடற்கரை நகரமாக அது விளங்கியிருக்கிறது என்பதை நம்மில் எத்தனை பேர் அறிந்திருக்கிறோம்? இன்று புன்னாலையிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் வடக்குக் கடற்கரை வீதி வழியே சென்றால், வீதி முடிவிலிருந்து இரண்டு மைல்களுக்கு அப்பால் இக்கிராமம் இருக்கிறது. இப்போதைய வல்லிபுரம் கிராமம் கடற்கரையிலிருந்து சற்றுத் தொலைவில் இருக்கிறது.

இன்றைய வல்லிபுரம் கிராமத்திலிருந்து கடற்கரைவரை நீண்டு கிடக்கும் - நான்கு மைல் நீளமும், ஒரு மைல் அகலமும் கொண்ட மணற்குவியல் - அவ்விடத்தில் வாழ்ந்த பண்டைக்கால மக்களின் அடிச்சுவடுகளையும், குடியேற்ற எச்சங்களையும் தன்னிடத்தில் தாங்கி நிற்கிறது. அப்பகுதியில் நிலத்தை அகழ நேரிட்ட கிராமத்தவர்கள் கட்டடங்களின் அடித்தளங்களையும், செங்கற்களையும், மட்பாண்டங்களையும், நாணயங்களையும் கண்டெடுப்பதாக அடிக்கடி தெரிவிப்பார்கள். வடமேற்கிலிருந்து தென்கிழக்குத் திசையில் மூன்று மைல் தொலைவிற்கு நீண்டு கிடக்கும் மணல் குன்றின் உள்ளே புராதனக் கட்டடங்களின் சுண்ணாம்புக்கல் குவியல்கள் காணப்படுகின்றன. இந்த மணற்குன்றுகளினிடையே புராதனமான ஓர் ஆழ்வார் (மகாவிஷ்ணு) கோவில் - மீண்டும் மீண்டும் புனர்நிர்மாணம் பெற்று - கோபுரமும் கூடமுமாக எழுந்து நிற்கிறது. அக்கோயிலின் வளாகத்திலிருந்து கடற்கரைவரை ஒரு நீண்ட மதில் சுவரின் அழிபாடுகள் புதைந்து கிடக்கின்றன (Lewis, J.P. 1916-17: 96-97).

தொல்லியல் ஆய்வாளரும், அன்றைய யாழ்ப்பாண அரசாங்க அதிபருமான ஜே.பி. லூயிஸ், “ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் குறிப்பிட்ட நான்கு மைல் நீளமும், ஒரு மைல் அகலமும் கொண்ட மணல் மூடிய பகுதியே பண்டைய வல்லிபுர நகரமாகும். இப்பழைய நகரம் இன்றுவரை இலங்கை அரச தொல்லியல் துறையினரால் அகழ்வாய்வு செய்யப்படவில்லை என்பது வருந்தத்தக்க விடயம்” எனக் குறிப்பிட்டார்.

1900 ஆம் ஆண்டில் ஆழ்வார் ஆலயத்திலிருந்து வடகிழக்காக 50 யார் தொலைவில் மணலில் புதைக்கப்பட்டிருந்த ஒரு புத்தர் சிலை கோயில் பூசகர்களால் கண்டெடுக்கப்பட்டு கோயிலின் மரக்காலை அறையில் 1902 ஆம் ஆண்டுவரை வைக்கப்பட்டு, பின்னர் பிரித்தானிய அரச அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது. அவர்கள் அந்தப் புத்தரின் சிலையை யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நிறுத்தி வைத்தார்கள் (Lewis, J.P. 1916-17: 96-97).

1936 ஆம் ஆண்டில் புத்தரின் சிலை கண்டெடுக்கப்பட்ட இடத்தில் நிலத்தைக் தோண்ட நேரிட்டபோது பழைய தொல்பொருட்களினிடையே எழுத்துப் பொறிக்கப்பட்ட ஒரு பொற்சாசனம் கிடைத்தது. இலங்கை முழுவதிலும் இதுவரை காலமும் நடைபெற்று வந்த அகழ்வுகளில் இப்படியானதொரு பொற்சாசனம் கிடைத்தது இதுவே முதற் தடவையாகும். இது பற்றிப் பின்னர் விரிவாகப் பேசப்படும்.

போர்த்துக்கேயரால் முற்றாக அழிக்கப்பட்டு 19 ஆம், 20 ஆம் ஆண்டுகளில் புனர்நிர்மாணம் பெற்ற ஆழ்வார் கோயில், அழிந்துபோன பண்டைய வல்லிபுர நகரத்தின் புகழ்தாங்கிய சான்றடையாளமாகும் (Vestige of a Glorious Past). ஐதீகக் கதைகளின்படி இந்த ஆலயம் ‘பெரும்பாணாற்றுப்படை புகழ்’ பல்லவ அரசன் தொண்டைமான் இளந்திரையனால் கட்டப்பட்டது (இது ஏற்கனவே ‘நாகநாடும் நாகர்களும்’ என்ற பகுதியில் கூறப்பட்டிருக்கிறது). தமிழ்ப் பௌத்த நூலான வீரசோழியம் தொண்டைமான் இளந்திரையன் விஷ்ணு, புத்த பகவான் இருவரினதும் பக்தன் எனக் கூறுகிறது. புத்த பிரானை விஷ்ணுவின் அவதாரம் எனக் கூறும் இந்துமத இதிகாச நூல்கள் உள்ளன.

கந்தரோடையைப் போன்று புத்த மதத்தைக் கடைப்பிடித்த மக்களும் வாழ்ந்த பூமி வல்லிபுரம். ஏற்கனவே கூறியதுபோல புத்த பிரான் விஷ்ணுவின் அவதாரம் என பல இந்துக்கள் நம்பினார்கள். இன்றுவரையும் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் ஆதி மூலத்தில் வைத்து வணங்கப்படுவது திருமாலின் சக்கராயுதமே ஆகும். இதன் மாற்று வடிவமே பௌத்தர்களின் தர்மச்சக்கரம். வல்லிபுரத்து விஷ்ணு கோயிலை நாம் ஆழ்வார் ஆலயம் என்றே அழைக்கிறோம். தமிழர்கள் பேணிய பௌத்த மரபுரிமையில் (Buddhist Tradition) புத்த பிரானும் ஆழ்வார் என்ற பெயரினாலே அழைக்கப்படுகிறார் என பேரறிஞர் உ.வே. சாமிநாதய்யர் எடுத்துக்காட்டியிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது (சாமிநாதையர், உ.வே. 1951: பக். 36).

சிங்களக் கவிதை நூலான கோகில சந்தேஸ போர்த்துக்கேயரால் அழிக்கப்படுவதற்கு முன்பிருந்த வல்லிபுர விஷ்ணு கோயிலைப் பற்றிக் கூறுகிறது. புராதன வல்லிபுர நகரம் பல்லவத்துறை என்ற பெயர் கொண்ட ஒரு துறைமுகத்தைக் கொண்டிருந்தது. இன்றைக்கும் அத்துறைமுகம் இருந்த கடற்கரைப் பகுதி பல்லப்பை என்ற பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. மகாவம்சம் இத்துறைமுகத்தை (பாளி மொழியில்) பல்லதித்த எனக் குறிப்பிடுகிறது. அநுராதபுர அரசியின்

மேல் காதல் கொண்ட அபயநாகன், அது தெரிய வந்ததும் அரசனது வஞ்சத்திற்குப் பயந்து இந்தியாவிற்குப் பல்லதித்த துறையினூடாக தப்பி ஓடியதை மகாவம்சம் கூறுகிறது (Mahavamsa Ch. XXXVI: 43).

**பெருங்கற் பண்பாட்டுப் புதையல்கள்**

**நீள்கிடத்திய புதையல்**

1848 ஆம் ஆண்டில் வல்லிபுரக் கடற்கரைப் பகுதியில் நிலத்திலிருந்து மூன்று அடி ஆழத்தில் நீளக்கிடத்தி, மேற்குக் - கிழக்குத் திசையை நோக்கிய வண்ணம் புதைக்கப்பட்டிருந்த ஒரு எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது. அதன் இடது கரத்தில் தங்க மோதிரம் உட்பட பல வகையான தங்க ஆபரணங்களும் காணப்பட்டன. அந்த எலும்புக்கூட்டின் காலடியில் நீலமும் - வெண்ணிறத்திலுமான பளபளப்பான ஒரு சாடியினுள்ளே 7,000 புராதன நாணயங்கள் காணப்பட்டன (Journal of the Royal Asiatic Society, Ceylon Branch, Vol. 1, No. 3, p. 156). இந்த விவரங்களிலிருந்து புதையுண்டிருப்பவர் ஒரு பெரிய செல்வந்தராகவோ அல்லது அரச வம்சத்தைச் சேர்ந்தவராகவோ இருந்திருப்பார் என எண்ணத் தோன்றுகிறது.

**புதைகிடங்கினுள் தாழிப்புதையல்**

1972 ஆம் ஆண்டில் வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்குச் சமீபமாக இருந்த ஒரு மண்மேட்டை அகழ்ந்தபோது பெரிய கல் மேசையினால் மூடப்பட்டு, கற்களினால் சுவரமைக்கப்பட்ட ஒரு புதைகுழியும் அதனுள்ளே எலும்புகளைக் கொண்ட ஒரு தாழியும் (Urn in a Cist) காணப்பட்டது. இப்பெருங்கற் பண்பாட்டுப் புதையலில் கார்ணிலியன் மற்றும் மதிப்புமிக்க கற்கள், கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், குடுவைகள், இரும்பு ஆணிகள், நாணயங்கள் என்பன காணப்பட்டன (இந்திரபாலா, கா. 1973).வல்லிபுரப் புத்தர் சிலை

வல்லிபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலையின் உருவ அமைப்பும் (Iconography) அதன் அமராவதி மூலமும் (பண்டைய ஆந்திர தேசத்திலிருந்த பௌத்த மையம்) அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பிரபலமாகவிருந்த மகாயான பௌத்தப் பாரம்பரியத்தை விளங்கிக்கொள்வதற்கான முக்கியமான அம்சங்களுள் ஒன்றாகும். 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1618 ஆந் திகதிகளில் பின்லாந்தில் நடைபெற்ற மதம் சம்பந்தமான கருத்தரங்கில், சுவீடன் உப்சலா பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் ஷாக் வல்லிபுரப் புத்தர் சிலை பற்றிக் கூறிய கருத்துகள் இங்கு குறிப்பிடத்தக்கவை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில், வடஇலங்கையின் வடமராட்சிப் பகுதியில், அழியுண்டிருந்த பெருமாள் கோயில் திரும்பக் கட்டப்பட்ட பொழுதில், அக்கோயில் வளாகத்திலிருந்து வடகிழக்கே 50 யார் தள்ளி மணலில் புதையுண்டிருந்த புத்தர் சிலை வெளிக்கொண்டுவரப்பட்டது. கோயிலின் மரக்காலை அறையில் வைக்கப்பட்டிருந்த இப்புத்தர் சிலை பிரித்தானிய அரச அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டு 1902 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் ஓர் அரசமரத்தின் கீழ் ஒரு நில மேடையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 1906 ஆம் ஆண்டில் இலங்கையின் ஆளுநராகவிருந்த (Governor) ஸேர் ஹென்றி பிளேக்கினால் சியாம் நாட்டு (இன்றைய தாய்லாந்து) அரசருக்கு இச்சிலை அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இது புத்த பிரானின் ஆரம்பகாலச் சிலைகளில் ஒன்றாக இருந்தபடியினால் சியாம் நாட்டு அரசர் அதைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வம்கொண்டிருந்தார் (The Ceylon Antiquary and Literary Register, 1916-17, Vol. 2, Part 2, p.96-97).



வல்லிபுரம் ஆழ்வார் கோயில் 1990

Image Source - S. Sivathasan USA

இச்சம்பவம் அதன் பின்னர் அடுத்த 90 ஆண்டுகளுக்கு மக்களின் நினைவுகளிலிருந்து மறந்துபோய்விட்டது. 1906 ஆம் ஆண்டின் பின் பிறந்த இலங்கை மக்கள், தாய்லாந்திற்கு பயணம் செய்திருந்தாலொழிய இப்புத்தர் சிலையைப் பார்த்திருக்கமாட்டார்கள்.

வல்லிபுரப் பொற்சாசனம் இவ்விடத்தில் ஒரு பௌத்த விகாரை கட்டப்பட்ட செய்தியைப் பதிவு செய்திருக்கிறது. அந்த விகாரை இருந்த இடமெதுவும் இன்று வெளியே தெரியவில்லை. இந்தப் புத்தர் சிலை ஒன்றுதான் அந்த விகாரையின் எஞ்சியிருக்கும் பகுதிகளில் ஒன்றாக இருக்கும். இம்மாதிரியான பெரிய புத்தர் சிலைகள் விகாரைகளில்தான் காணப்படும். ஓரிடத்தில் ஒரு புத்தர் சிலை காணப்பட்டால் அங்கே ஒரு விகாரை இருக்கிறது அல்லது இருந்தது என்றுதான் அர்த்தம். வல்லிபுரப் பொற்சாசனத்தில் காணப்படும் எழுத்துப்பதிவு அப்புத்தர் சிலை வல்லிபுரத்தில் கட்டப்பட்ட பௌத்த நிறுவனத்திற்கு உரியது என்பதை உறுதிப்படுத்துகிறது (Schalk, Peter 1994).

ஜனவரி 1994 இல் பீற்றர் ஷாக் தாய்லாந்தில் பாங்கொக்கிற்கு விஜயம் செய்தபோது 'வாற் பெஞ்சா' என்ற பௌத்த ஆலயத்திலிருந்த வல்லிபுரப் புத்தர் சிலையை இனங்கண்டு கொண்டார். பாங்கொக்கிலுள்ள இந்தப் பிரபல மத்திய பௌத்த ஆலயம் 'பளிங்குக் கோயில்' (Marble Temple) என அழைக்கப்படுகிறது. இந்த ஆலயத்தில் வல்லிபுரப் புத்தர்சிலைக்கு கோயில் மண்டபத்தினுள் இடமேதும் கொடுக்கப்படவில்லை. கோயிலின் பின்பக்கத்தில் ஒரு மூலையில், ஓர் இரும்புக் கிராதியின் பின்னால் வைக்கப்பட்டிருக்கும் இச்சிலையை மக்களால் இலகுவில் கவனிக்க இயலாது (Schalk, Peter 1994).

அக்கோயிலில் பணிபுரியும் காவலர்களுக்கோ, சுற்றுலாப் பயணிகளின் வழிகாட்டிகளுக்கோ, ஒரு வாழ்நாட்காலம் அங்கே சேவை புரியும் குருமார்களுக்கோ அச்சிலையின் பூர்வீகமோ, அதன் பெயரோ, அது இலங்கையில் வல்லிபுரத்திலிருந்து அங்கே வந்தது என்ற தகவலோ எதுவுமே தெரியாது (Schalk, Peter 1994).

பேராசிரியர் பீற்றர் ஷாக்கின் பாங்கொக்கில் கண்ட வல்லிபுரப் புத்தர் சிலையின் மனக்கிளர்ச்சி உண்டாக்கக்கூடிய விரிவுரை இதுவாகும்.

"கல்லிலே செதுக்கப்பட்ட இயற்கை வடிவளவான சிலை இது. புத்தர் நிற்கும் நிலையில் இது செதுக்கப்பட்டிருக்கிறது. மூலச்சிலையில் உடைந்திருந்த வலதுகையில் புதிய கரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இடது கையில் நான்கு விரல்கள் புதிதாக திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றன. தலைமுடி சிறிய சுருள்களாகக் காணப்படுகிறது. முகம் வட்ட வடிவாகவும், மிகுதி உடலைப் போலவும் சதைப்பிடிப்பாகக் காணப்படுகிறது. உயர்ந்த புருவங்கள் கொண்ட முக அமைப்பு. விழித்திரை தெளிவாக இல்லை. நாசி பெரியதாக அகன்றும், உதடுகள் தடித்தும் காணப்படுகின்றன. உதட்டில் மெல்லிய புன்சிரிப்பு. காதுகள் கழுத்தின் அடிப்பாகம் வரை நீண்டிருக்கின்றன. காதுகளின் அடிப்பகுதி கணுக்கள் நிரம்பிய மடல்களாகக் காட்சியளிக்கின்றன".

"மேலே அணிந்திருக்கும் அங்கவஸ்திரமான 'உத்தரசங்கவின்' (Upper Garment) கீழே வேறு கீழ் ஆடையான 'அந்தரவாசக' (Lower Garment) எதுவும் காணப்படவில்லை. மேல் அங்கவஸ்திரம் நீண்ட தடித்த தளர்வான மடிப்புகளாக உள்ளது. வலது கரத்தில் (அது திருத்த முன்னர்) முதலில் இருந்தது 'அபய முத்திரையாக' (Fearlessness Gesture) இருந்திருக்கலாம். அதைத் திருத்தி அமைத்தவர்கள் புதிய கரத்தை நேர்த்தியாக அமைக்கவில்லை. புதிய கரத்தில் காணப்படும் 'அஸிஸ முத்திரை' (Blessing Gesture) சரியாக



**வல்லிபுரம் ஆழ்வார் கோயிலின் இன்றைய தோற்றம்**

Image Source - Elite Travels

அமைக்கப்படவில்லை. இப்படியான அமைப்பு 57 ஆம் நூற்றாண்டிற்குரிய 'சிங்கள பௌத்த உருவ அமைப்பில்' மட்டுமே காணப்படுகிறது. அமராவதியில் தயாரிக்கப்பட்ட, நிற்கும் புத்தசிலைகள் அனைத்திலும் அபய முத்திரை காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இடதுகரம் மேல் அங்கவஸ்திரத்தின் முழு நீளத்தையும் தாங்கி நிற்கிறது. அங்கவஸ்திரம் காலடி வரையும், கால் விரல்கள் மட்டும் தெரியும் வண்ணம் நீண்டிருக்கிறது. குறுகிய இடுப்பும், அகன்ற மார்பும் உடல்வலிமை நிறைந்த தோற்றத்தைக் கொடுக்கிறது" (Schalk, Peter 1994).

இந்த மாதிரியான உருவ அமைப்புக்கொண்ட புத்தர் சிலைகள் ஆந்திராவில் சத்வாகன அரசவம்ச ஆட்சிக்காலத்திலும் (கி.பி. 200232), அவர்களைத் தொடர்ந்த இக்ஷ்வாகு அரசர்களின் ஆட்சிக்காலத்திலும் (கி.பி. 249-440) தயாரிக்கப்பட்டன. இவர்களின் ஆட்சிக்காலத்தில், கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதிப் பகுதியில், இலங்கையின் பௌத்த குருமாருக்குரிய - சிகள விகாரை பற்றிய (சிங்கள குருமாருக்கு அல்ல) - சிகள என்ற தீவிலிருந்து வந்த குருமார் தங்குவதற்கான விகாரை பற்றிய தகவல் தரும் கல்வெட்டு பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆந்திர கலைப் பாணியில் உருவாக்கப்பட்ட ஒரு புத்தர் சிலை வல்லிபுரத்தில் அமைவதற்கான காலமும் நேரமும் இக்காலப் பண்பாட்டுச் சூழலில் கைகூடி வந்திருக்கிறது (Schalk, Peter 1994).

## அமராவதி - அநுராதபுர பௌத்த கலைப் பள்ளிகள்

அக்காலத்தில் ஆந்திர நாட்டின் அமராவதியிலிருந்த பௌத்த கலைப்பள்ளியில் உருவாக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்ட பௌத்தமதக் கலைச்சின்னங்களின் திராவிடக் கலைப்பண்புகள் இலங்கையிலும், தென்கிழக்கு ஆசியாவிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன. தூரகிழக்கு நாடுகளுக்கும், இலங்கைக்கும் வியாபித்திருந்த தமிழகத்தின் வர்த்தக நடவடிக்கைகள், சங்ககாலத் தமிழகத்தில் இந்நாடுகளுக்கிடையிலான கலாசாரப் பரிமாறல்களுக்கும் ஏதுவாக இருந்தன. உதாரணமாக கந்தரோடையிலும், வல்லிபுரத்திலும் காணப்பட்ட புத்தரின் சிலைகள் ஆந்திராவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான கலாசார உறவின் இயக்க விளைவுகளைக் காட்டுவதாக இருந்தன.

அக்காலத்தில் இலங்கையில் காணப்பட்ட சுண்ணாம்புக் கற்களினாலான பௌத்த சிலைகளினதும், கல்வெட்டு உருவங்களினதும் பண்புகளை ஆராய்ந்த ஜேர்மனிய சிற்பவியல் வல்லுனரான கலாநிதி உல்றிச் வொன் ஷ்ரோடர் (Dr Ulrich von Schroeder) இவை அனைத்தும் அமராவதி பௌத்தக் கலைப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் இறக்குமதி செய்யப்பட்ட சிற்பங்கள் எனக் கூறிச் சென்றிருக்கிறார்: Imported Sculptures from Early Amaravati School and Imported Sculptures from Late Amravati (Nagarjunakonda) (Schroeder, U.V. 1990).

மேற்குறிப்பிட்டுள்ள உல்றிச் வொன் ஷ்ரேடரின் ஆய்வுகளிலிருந்தும், பிரித்தானிய பேராசிரியர் ஆஷ்லி தொம்ஸனின் ஆய்வுகளிலிருந்தும், ஆந்திராவில் அமராவதியிலும், நாகர்ஜுனாகொண்டவிலுமிருந்த கலைஞர் சபைகள் (Artist Guilds) இலங்கைக்கும் மற்றும் தூரகிழக்கு நாடுகளுக்கும் பெருவாரியான பௌத்த சிற்பங்களை விநியோகம் செய்வதில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது. சமயக் கோட்பாடுகள், பண்டைய வர்த்தக சமூகங்களுக்கான தனித்துவத்திற்கும், ஒருங்கிணைவுக்கும் ஏதுவான இறுக்கமான உந்துதலைக் கொண்டிருந்தபடியினால், இவர்கள் மூலமாகவே இலங்கைக்கு பௌத்த சிற்பங்கள் வந்தடைந்தன. வரலாற்று ரீதியாக இப்பௌத்த சிற்பங்களின் வருகையைக் கற்பது முக்கியமானது. வல்லிபுரம் புத்தர் சிலையின் உருவாக்கம், அமராவதிக் கலைப்பண்பின் வெளிப்பாடாகும். இதன் வருகை, ஈழத்தில் பௌத்தத்தின் வருகையையும், அநுராதபுரக் கலைப்பள்ளியில் அமராவதிக் கலைப்பாணியின் தாக்கம் வெளிப்பட்ட காலத்தையும் பதிவு செய்கிறது. இதன் முதலாவது கட்டம் அமராவதி, அநுராதபுரம், வல்லிபுரம் ஆகிய மையங்களுக்கிடையே இடம்பெற்ற முக்கோணக் கலாசார தொடர்புகளையும் எடுத்துரைக்கும் காலப்பகுதியாகும் (Peter Schalk 1994).

இது நடைபெற்ற காலப்பகுதியில், இலங்கையில் பரவியிருந்த பௌத்த மதம், உலகளாவிய பௌத்த மதமாகப் பார்க்கப்பட்டதே தவிர, சிங்கள பௌத்தமாக இனங்காணப்படவில்லை. இந்தப் புத்த சிலையை கந்தரோடையில் கண்டெடுத்த புத்தரின் சிலைகளோடு ஒப்பு நோக்கினால் ஆந்திர பௌத்தம் ஈழ பௌத்தத்தில் கொண்டிருந்த பாரிய தாக்கவிளைவை உணர முடியும் (Peter Schalk 1994).

வல்லிபுரப் புத்தர் சிலையின் தோற்றம், ஆந்திராவின் கலாசாரத் திறனைக் கொண்ட திராவிட மையங்களான அமராவதி, பத்திப்புரோலு, யக்கையபேட்டை, கண்டசாலா, கோலி, நாகர்ஜுனகொண்ட ஆகியவற்றின் கலைப் பண்பாட்டுப் பரிமாணமாகக் கருதப்படுகிறது. இம்மையங்களின் புதிதாக ஆக்கும் திறன்கொண்ட பௌத்தக் கலைகளின் வளர்ச்சி கி.பி. இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் சத்வாகன, இஷ்வாகு அரசுகளால் பராமரிக்கப்பட்டது.

இந்தக் கலாசார மையங்களில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து புத்தரின் சிலைகள் தோற்றம் பெற்றன. அதுவரை காலமும் மக்கள் வணங்கி வந்த புத்தபாத பீடிகைகளையும், மற்றும் புத்த பகவானின் சின்னங்களையும், புத்தரின் சிலைகள் பதிலமர்த்தின. இச்சிலைகளின் படிமுறை வளர்ச்சியில் கி.பி. மூன்றாம் - நான்காம் நூற்றாண்டுகளில் தனித்துவமான அமராவதிப் பாணி புத்தர் சிலைகள் உருவாக்கப்பட்டன. வல்லிபுரப் புத்தர் சிலை இந்த அமராவதிக் கலைப்பாணியில் அமைந்த சிலையாகும். இவ்வகையான புத்த படிமங்கள் கி.பி. நான்காம் நூற்றாண்டில் தென்னிந்தியா, இலங்கை, தென்கிழக்காசிய நாடுகளைச் சென்றடைந்தன (Peter Schalk 1994).

இந்தச் சந்தர்ப்பத்தில் உபயோகிக்கப்படும் 'அநுராதபுரக் கலைப்பள்ளி' என்ற சொல்லமைப்பு, அக்காலத்தில் அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த, புத்த சிலைகளை உருவாக்கும் ஒரு சிங்களப் பள்ளி இருந்ததை உணர்த்தி நிற்கிறது. அதனைத் தொடர்ந்து வல்லிபுரப் புத்தர் சிலையில் அநுராதபுரக் கலைப்பள்ளியின் தாக்கங்கள் இருப்பதாகவும் சிலரால் கூறப்படுகிறது. 'அநுராதபுரக் கலைப்பள்ளி' என்றால் என்ன? இதை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். இதன் முதல் பகுதி தாதுசேன அரசனின் கி.பி. 459 ஆம் ஆண்டு வரையிலான பகுதி. அடுத்த பகுதி கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் அநுராதபுரம் கைவிடப்பட்ட காலம் வரையிலான பகுதி. இதன் முதல் பகுதியின் புத்தர் சிலைகள் அமராவதி கலைப் பாணியையே காட்டிநிற்கின்றன. இவற்றில் மிகப் பழையதான, அநுராதபுர மாவட்டத்திலுள்ள மஹா இலுப்பலமவிலுள்ள ஆறு அடி உயரமான, வெண்ணிறப் பளிங்குக் கல்லில் (Marble) அமைந்த புத்தர் சிலை அமராவதிக் கலைப் பாணியிலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பளிங்குக் கல் ஆந்திராவிலுள்ள வேங்கி நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. மதவாச்சியில் கண்டெடுக்கப்பட்ட கி.பி. நான்கம் நூற்றாண்டிற்கான 46 செ.மீ. உயரமான வெண்கலப் புத்தர் சிலையும் அமராவதிக் கலைப் பாணியிலேயே உருவாக்கப்பட்டிருக்கிறது (Peter Schalk 1994).

அநுராதபுரக் கலைப்பள்ளியின் இரண்டாவது பகுதியில்தான் 'சிங்கள பௌத்தத்திற்குரிய' தனித்துவமான பண்புகள் காணப்படுகின்றன. முதலாவது பகுதியான அநுராதபுரத்திலும், இலங்கையின் வட பகுதியிலும், தென்னிந்தியாவிலும், தென்கிழக்காசியாவிலும் காணப்படும் புத்த சிற்பங்கள் அனைத்தும், அமராவதிக் கலைப்பாணியிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. வல்லிபுரப் புத்தர் சிலை அமராவதிக் கலைப்பாணியில் கி.பி. 3 ஆம், 4 ஆம் நூற்றாண்டு காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது (Peter Schalk 1994).

"1906 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்த இலங்கைத் தமிழர் எவரும், தாய்லாந்தில் பாங்கொக்கிலுள்ள வாற் பெஞ்சா ஆலயத்திற்குச் சென்றிருந்தால் ஒழிய வல்லிபுரப் புத்தர் சிலையைக் கண்டிருக்க முடியாது. அதைப் பற்றி தமிழ் மக்களுக்கு இப்போது எடுத்துக்கூறுகிறேன்:

"திராவிடக் கலைப்பண்பாட்டின் மரபுரிமையான இந்த தலைசிறந்த படைப்பை பார்த்து வியக்க வேண்டுமானால் நீங்கள் வாற் பெஞ்சா ஆலயத்திற்குப் போக வேண்டும். வருங்காலத்தில் ஒருநாள், தாய்லாந்து அரசரிடமிருந்து தமிழ் மக்கள் இதை மீண்டும் பெற்றுக்கொள்ள நேரிடலாம். அரசியல் நலங்களுக்காக சிங்களவர்களால் உருவாக்கப்பட்ட இச்சிலையின் பிரதியை மௌனமாகப் புறக்கணித்துவிடலாம். அப்படி மூலச்சிலை கிடைக்குமானால் அதைப் பெயர்த்தெடுத்த யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் மீண்டும் அச்சிலையை நிறுத்தி வைக்கலாம். அங்கிருந்து இலங்காதீபத்தின் சகல தீங்கான நோக்குகளையும் அது ஒழித்துவிடக்கூடும்."

- பேராசிரியர் பீற்றர் ஷாக்.

## வல்லிபுரப் பொற்சாசனம்

யாழ்ப்பாணத்தில் வல்லிபுரத்திலிருக்கும் ஆழ்வார் கோயிலுக்குச் சமீபமாக இருந்த பௌத்த கோயிலின் அழிபாடுகளைப் பற்றி அப்பகுதி மக்கள் பல தலைமுறைகளாக அறிந்திருந்தார்கள். 1916 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராக இருந்த ஜே.பி. லூயிஸ் வல்லிபுரத்தைப் பார்வையிடச் சென்ற சமயம் ஆழ்வார் கோயிலின் பூசகர் அப்பகுதியிலிருந்த பௌத்த கோயிலின் அழிபாடுகளை அரசாங்க அதிபரைக் கூட்டிச் சென்று காண்பித்தார் (Lewis, J.P. 1916).

இதைத் தொடர்ந்து 1936 ஆம் ஆண்டில் பௌத்த கோயிலின் அழிபாடுகள் இருந்த இடத்தில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அகழ்வுகளின் போது புராதன பௌத்த விகாரத்தின் அஸ்திவாரத்தின் கீழ் புதைக்கப்பட்டிருந்த ஒரு கற்பேழையில் வல்லிபுரப் பொற்சாசனம் கண்டெடுக்கப்பட்டது. 39.16 அங்குல நீளமும், ஓர் அங்குல அகலமும், 69.5 கிரெய்ன் நிறையும் கொண்ட இப் பொற்தகடு கற்பேழையினுள் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது (Paranavitana,S.1941).

வல்லிபுரப் பொற்தகட்டின் நடுவில் பிராமி எழுத்துகளால் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருந்த வாசகம் அச்சமயம் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் ஆணையாளராக இருந்த செனரத் பரணவிதான அவர்களால் பொருள் விளக்கம் கூறப்பட்டு, ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு 'எப்பிகிராபியா சிலனிகா' என்ற ஆங்கில அரச கல்வெட்டுச் சாசன நூலில் பிரசுரிக்கப்பட்டது (Epigraphia Zeylanica, Vol. IV, 1934-1941: pp 229-237). அது பிரசுரிக்கப்பட்ட நாட்களிலிருந்தே அச்சாசனத்தின் பொருள் விளக்கமும், பகுப்பாய்வும், மொழி மாற்றமும், முடிபுகளும் ஏகப்பட்ட கற்கை மரபான வாதப்பிரதிவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதலால் அதைச் சற்று விவரமாகப் பார்க்க வேண்டியிருக்கிறது.

அவரது ஆய்வறிக்கையில் அச்சாசனத்தில் காணப்படும் எழுத்துகள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குரிய இலங்கையின் பிராமி எழுத்துகள் என்றும், இலங்கையின் பல பாகங்களிலுள்ள கல்வெட்டுகளில் காணப்படும் பிராமி எழுத்துகளை அது ஒத்திருப்பதாகவும் கூறியிருந்தார். அச்சாசனத்தில் காணப்படும் அ, ற, உ, ல ஆகிய எழுத்துகளின் கீழ்ப்பகுதிகள் நீண்டு கீழே இடப்பக்கமாக வளைந்திருப்பதற்கான காரணம், அவை 'கல்லில் எழுதப்படாமல் வளைந்து கொடுக்கக்கூடிய ஒரு உலோகத் தகட்டில் எழுதப்பட்டிருப்பதே' எனவும் கூறியிருந்தார். மேலும், அச்சாசனம் எழுதப்பட்ட மொழி பழைய சிங்கள மொழி எனவும், அக்காலத்தைய ஆவணங்களின் இலக்கணத் தரத்திற்கு ஏற்புடையதாக இருப்பதாகவும் பதிவு செய்திருந்தார்.

**பெற்சாசனத்தின் உரைமூலம்**

பொற்சாசனத்தில் உள்ள பிராகிருத உரை இது:

1. சித்த மகரஜ வஹயஹ ரஜெஹி அமெதெ

2. இஸிகிரய நகதிவ புஜமெனி

3. படகரஅதநெஹி பியகுகதிஸ

4. விஹர கரிதே

சித்த - சித்தி கிடைக்கட்டும் (சாசனத்தின் ஆரம்பத்திலுள்ள மங்கலச் சொல்).

**மொழிபெயர்ப்பும் முடிவுகளும்**

பேராசிரியர் பரணவிதானவின் பொற்சாசன மொழிபெயர்ப்பும், விளக்கமும், முடிவுகளும் இவை:

1. மகாராஜரான வஹவின் ஆட்சிக்காலத்தில் அவரது பிரதிநிதியான

2. இஸிகிரய நாகதீவை நிர்வாகம் செய்யும் போது

3. படகர அத்தனாவில் பியகுக திஸ்ஸ

4. விகாரையைக் கட்டுவித்தான் (விகாரை கட்டப்பட்டது).

இந்தச் சிறிய வாசகத்தைக்கொண்டு செனரத் பரணவிதான மிகப்பரந்த வரையறையற்ற முடிவுகளுக்கு வந்திருந்தார்.

1. இந்தச் சாசனம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை ஆட்சி செய்த அரசன் வசபனின் மந்திரியான இசிகிரயன் என்பவனால் நாகதீப நிர்வாகிக்கப்பட்டது என்பதை எடுத்துரைக்கிறது.

2. இச்சாசனத்தின் பிராமி எழுத்துகள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குரிய இலங்கையின் பிராமி எழுத்துகள்.

பிராமி எழுத்துகளில் எழுதப்பட்டிருக்கும் இச்சாசனத்தின் மொழி பழைய சிங்கள மொழி (Paranavitana, S. 1934-41: 229).

இச்சாசனத்தை ஆராய்ந்த பேராசிரியர் பரணவிதான இதில் காணப்படும் எழுத்துகள் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இலங்கையின் பெருநிலப்பரப்பில் காணப்பட்ட சாசனங்களை ஒத்திருப்பதாகக் கூறி, இதில் காணப்படும் 'வஹ' என்ற பதம் கி.பி. 124-168 ஆண்டுக்காலத்தில் அநுராதபுரத்திலிருந்து ஆட்சிபுரிந்த வசபனைக் குறிப்பிடுவதாகத் தீர்மானித்தார். இதன் பிரகாரம் நாகதீபம் அநுராதபுர அரசனின் மந்திரியால் நிர்வாகிக்கப்பட்டது என்றும் முடிவெடுத்தார்.

இலங்கையில் காணப்படும் எல்லாப் பிராகிருதக் கல்வெட்டுகளிலும் 'வஸப' என்றும், பாளி மொழியில் 'வஹப' என அழைக்கப்படும் அரசன் வசபனின் பெயர் எந்தக் கல்வெட்டிலும் 'வஹ' என எழுதப்படவில்லை. இலங்கையிலுள்ள புராதன சாசனங்கள் யாவற்றிலும் 'வஸப' என எழுதப்பட்ட வசபனின் பெயர் வல்லிபுரச் சாசனத்தில் 'வஹ' என எழுதப்பட்டதற்கு பரணவிதான தரும் விளக்கம் நமக்குப் பூச்சுற்றுவதாகவே இருக்கிறது.

இந்த எழுத்து வடிவத்தின் மூலத்தை விளக்க சிக்கலான ஒரு கருத்தை முன்வைக்கிறார். வடமொழியில் 'விருஷப' என்றால் எருது அல்லது மேன்மையான பொருள் என அர்த்தம். வடமொழியில் 'விருஷப' என்ற சொற்பதம் சில சமயங்களில் 'விருஷ' அல்லது 'ருஷ' என சுருக்கப்பட்டது போல 'வஹப' என்பது 'வஹ' என சுருக்கப்பட்டிருக்கிறது என்கிறார்.

இலங்கையின் மற்றைய பகுதிகளில் இந்த மன்னனின் பெயரைப் பதிவு செய்த பிராகிருதம், வடமொழி தெரிந்த பௌத்தர்கள் ஏன் இந்த மன்னனின் பெயரை 'வஹ' எனச் சுருக்கவில்லை என்பதற்கு எந்த விளக்கத்தையும் அவர் தரவில்லை. மேலும், மூன்று எழுத்துகள் மட்டுமே கொண்ட ஒரு மன்னனின் பெயரை இந்தச் சாசனத்தில் மட்டும் இரண்டு எழுத்தாகச் சுருக்க வேண்டிய ஒரு தேவை இல்லை.

இந்தச் சாசனத்தை எழுதியவர் கல்வியறிவுள்ள பிராகிருத மொழியில் பயிற்சி பெற்ற ஒரு பௌத்த பிக்குவாகவே இருந்திருக்க வேண்டும். அவருக்கு தனது நாட்டை ஆட்சிபுரிந்த மன்னனது பெயரைச் சரியாகப் பதிவு செய்யத் தெரியவில்லை என்பது ஏற்றுக்கொள்ள முடியாத வாதம்.

மேலும், வசபனின் ஆட்சி வடபகுதியை உள்ளடக்கியிருந்தது என மகாவம்சமோ, சூளவம்சமோ உரைக்கவில்லை. இலங்கை முழுவதும் அநுராதபுரத்தின் ஒற்றை ஆட்சியின்கீழ் ஆட்சி செய்யப்பட்டது என்பதைக் கூறுவதில் மிக அக்கறை கொண்ட பாளி இலக்கியங்கள், வடபகுதி வரை வசபனின் ஆட்சி நீடித்திருந்தால், அப்பகுதியில் அவன் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டிருக்கும்.

இன்னும், வசபனின் கல்வெட்டுகள் எதிலும் வடபகுதியில் அவன் ஆட்சி பரவியிருந்தது பற்றி எதுவிதமான தகவலும் இல்லை. இவற்றை நோக்குமிடத்து வல்லிபுரப் பொற்சாசனத்தில் காணப்படும் 'வஹ' என்ற பதம் வசபனைக் குறிப்பதாகப் பரணவிதான எடுத்த முடிவு அவரது கற்பனை என்றே கருதவேண்டி உள்ளது. 'வஹ' என்ற பெயர் கொண்ட அரசன் ஏன் கந்தரோடையிலிருந்து நாகதீபத்தை ஆண்ட அரசனாகவும், இசிகிராயன் அவனது பிரதிநிதியாகவும் இருக்கக்கூடாது?

இச்சாசனம் எழுதப்பட்டிருக்கும் பிராகிருத மொழியை நாட்டின் பிற இடங்களில் காணப்படுவது போன்ற 'பழைய சிங்கள மொழி' எனக் கூறிய பேராசிரியர் பரணவிதான இச்சாசனத்திலிருக்கும் சொற்களுக்கு 'சிங்கள மொழி மூலங்களையும்' எடுத்துரைத்தார். அவர் சிங்கள மொழி மூலங்கள் என எடுத்துக்காட்டிய பதங்கள் சமஸ்கிருதமும், பிராகிருதமுமே!

அப்படியிருந்தும் அவரால் 'இஸிகிரய' என்ற பெயருக்கு வட மொழிகளிலிருந்தோ, சிங்களத்திலிருந்தோ மூலத்தைக் கண்டுபிடிக்க முடியாமையால், இப்பெயர் இந்நாட்டிற்குப் புறம்பானதொரு பெயர் என முடிவெடுத்தார். 'இஸிகிரய' என்ற பெயர் 'ராயன்' என்ற பதத்திலிருந்து பெறப்பட்டிருக்கலாம் எனக் கருதிய பேராசிரியருக்கு இது ஒரு தமிழ்ப்பெயர் என்பது ஏனோ புலப்படவில்லை. தமிழில் ராயன் என்பது ஒரு குழுத்தலைவனைக் குறிப்பிடும் பெயராகும். முடிநாகராயன், மழவராயன், பல்லவராயன், வசந்தராயன், காத்தவராயன் என்பன தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் பெயர்களாகும். இசிகிராயன் (இசிகிரய) என்ற தலைவன் வல்லிபுரத்திலிருந்து நாகநாட்டின் வடகிழக்கை நிர்வகித்த கந்தரோடை அரசனின் பிரதிநிதியாக இருக்கலாம்.

## படகர அதநெஹி

பிராகிருத மொழியில் 'அதநெ' என்றால் ஆஸ்தானம் என்று பொருள். 'அதநெஹி' என்றால் ஆஸ்தானத்தில் என்று பொருள்படும். யாழ்ப்பாணத்தின் வடகரையிலிருக்கும் வல்லிபுர ஆஸ்தானத்தை இது குறிப்பிடுவதனால் 'படகர' என்பது 'வடகரை' என்ற தமிழ்ப் பதத்தின் பிராகிருதமயமாக்கப்பட்ட பதம் எனக் கொள்வதில் தவறேதும் இருக்க முடியாது. 'படகர அதநெஹி' என்றால் 'வடகரை ஆஸ்தானத்தில்' என்பதே சரியான பொருள்.

## பியகுக விஹர கரிதே

இந்த வாசகத்திற்கு இசிகிராயன் 'பியகுகதிஸ விகாரை' என்ற பெயர் கொண்ட விகாரையைக் கட்டுவித்தான் அல்லது இசிகிராயனின் நிர்வாகக் காலத்தில் பியகுகதிஸ என்பவன் இந்த விகாரையைக் கட்டுவித்தான் என இரு விதமாகப் பொருள் கொள்ளலாம்.

யாழ்ப்பாணத் தீபகத்திற்கு அப்பால் மேற்குக் கடலில் உள்ள தீவுகளில் பௌத்தம் பரவியிருந்த முக்கியமான



**இவ்விடத்திற்கு நாகர்கோயில் என்னும் பெயரை வழங்கிய ஆலயம் இருந்த இடத்தில் பிற்காலத்தில் கட்டப்பட்ட நாகதம்பிரான் கோயில்**

Image Source - Tourismnorth

தீவு புங்குடுதீவு. இத்தீவை பாளி நூல்கள் பியங்கு தீபமெனவும், நம்பொத்த என்ற சிங்கள நூல் புவங்குதீவு எனவும் குறிப்பிடுகிறது. பியங்குதீபம் தூய்மையில் சிறந்த பௌத்தர்கள் வாழ்ந்த இடம் என்பது மகாவம்சம் மூலம் அறியக் கிடக்கிறது.

துட்டகாமினி போரில் எல்லாளனைக் கொன்றபின் தனது மாளிகைக்குத் திரும்பி, போரில் நடைபெற்ற கொடுமைகளை எண்ணி மனக்கவலையுற்ற நேரத்தில் பியங்குதீபத்தின் தவப்பள்ளியிலிருந்த தேரர் எண்மர் துட்டகாமினியிடம் சென்று அவனைத் தேற்றினார்கள் என்ற தகவலை மகாவம்சம் தருகிறது. வல்லிபுர விகாரையைக் கட்டுவித்தவர் பெயர் பியகுகதிஸ என வல்லிபுரப் பொற்சாசனம் தெரிவிப்பதிலிருந்து இந்தத் திஸன் புங்குடுதீவில் வாழ்ந்தவர் என்பதை அறிய முடிகிறது.

### வல்லிப்புரப் பொற்சாசனத்தின் காலமும் எழுத்து வடிவமும்

வல்லிபுரப் பொற்சாசனத்தில் காணப்படும் எழுத்துக்களை ஆராய்ந்த பரணவிதான இச்சாசனத்தின் வரிவடிவம் இலங்கையின் பெருநிலப்பரப்பில் காணப்பட்ட வரிவடிவமே எனக்கூறிய போதிலும், இந்த எழுத்துக்களின் தண்டுகளின் கீழ்ப்பகுதியிலுள்ள நீண்ட வளைவுகளைக் கவனிக்கத் தவறவில்லை. இந்த வளைவுகளுக்கான காரணம் அவ் வெழுத்துக்கள் கற்களிலல்லாமல் மென்மையான பொற்தகட்டில் எழுதியதனால் ஏற்பட்ட வளைவுகள் என்றும் பரணவிதான விளக்கமளித்திருந்தார். இச் சாசனஎழுத்துக்கள் இரண்டாம் நூற்றாண்டிற்கு உரியவை என்றும், இச் சாசனத்தில் காணப்புடும் மொழி இலங்கையின் பிற கல்வெட்டுகளில் காணப்படுவது போன்ற 'ஆதிச் சிங்களப்பிராகிருதம்' என்றும் தீர்ப்பளித்தார்.

வல்லிபுரப் பொற்சாசனத்தின் எழுத்து வடிவங்களை ஆராய்ந்த இந்திய தொல்லியராளரும், தொல்லெழுத்துக் கலைஞருமான பேராசிரியர் ஏ. எச். டானி, ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் வெளியிட்ட 'இந்திய தொல்லெழுத்துக்கலை' (*Indian Paleaography*) என்ற அவரது ஆய்வு நூலில், வல்லிபுரப் பொற்சாசனத்தில் காணப்படும் எழுத்துக்கள் ஆந்திராவில் அமராவதி, நாகர்ஜுனா கொண்டா ஆகிய மையங்களில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிலும், நான்காம் நூற்றாண்டிலும் உபயோகிக்கப்பட்ட இக்ஷ்வாகு வகை எழுத்து வடிவங்கள் எனக் கூறியுள்ளார். இச் சாசனத்தில் காணப்படும் அ, ஐ, உ, க, ம, ய, ற, ல, வ ஆகிய எழுத்துக்கள் இக்ஷ்வாகு வகை எழுத்துக்களே ஆகும். வல்லிபுரப் பொற்சாசனம் பற்றிய அவரது மதிப்பீடு வருமாறு:

**"Of these, the gold plate inscription has an individual character of its own. In this case the lower curves of the verticals are overemphasised and the medial i has a sharp curve to the left. The letters a, i, u, ka, ga, ma, ya, ra, la and va are all Ikshvaku forms.... In the inscription we have definite evidence of the school of Amarvati and Nagarjunakonda writing reaching Ceylon, probably in the latter half of the third century A.D. (Dani, A.H. 1963: 221)**

பேராசிரியர் டானியின் மதிப்பாய்வின்படி வல்லிபுரப் பொற்சாசனத்தில் காணப்படும் அடிப்பகுதி நீண்டு இடப்பக்கம் வளைந்த எழுத்துகள் பொற்தகட்டில் எழுதியமையால் ஏற்பட்டதல்ல. அவற்றின் உண்மையான வடிவமே அதுதான். கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் ஆந்திர நாட்டின் அமராவதி, மற்றும் நாகர்ஜுனாகொண்டா மையங்களில் ஆரம்பமான இக்ஷ்வாகு வகை பிராமி எழுத்து வடிவங்கள் அவை. இதைப் புரிந்துகொள்ளாத பேராசிரியர் பரணவிதான இத்தவறுக்குக் காரணமானார். இந்த வகையான எழுத்து வடிவங்கள், ஆந்திர நாட்டு மையங்களிலிருந்து இலங்கை வந்தடைந்ததற்கு வல்லிபுரப் பொற்சாசனம் ஒரு சான்று எனப் பேராசிரியர் டானி பதிவு செய்திருக்கிறார்.

தென்னாசியச் சாசனங்களை ஆராய்ந்த பேராசிரியர் சிற்றம்பலம், இக் காலகட்டத்தில் தமிழ்நாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் கல்வெட்டுகள் யாவும் பிராகிருத மொழியிலே எழுதப்பட்டிருப்பதையும், இப்பண்பைப் பின்பற்றியே அமராவதி, நாகர்ஜுனாகொண்டா பகுதிகளில் பௌத்தத்தை ஆதரித்த இக்ஷ்வாகு அரச வம்சத்தினரும் தமது ஆட்சிக்கு உட்பட்ட, திராவிட மொழியான தெலுங்கு வழக்கிலிருந்த பிரதேசங்களில் பிராகிருத மொழியிலேயே பௌத்தமத சாசனங்களை எழுதி வைத்திருப்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார் (சிற்றம்பலம், சி.க. 1993: 119-123).

வல்லிபுரச் சாசனத்தை ஆதாரமாகக்கொண்டு இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் தமிழ்மொழி பேசவில்லை, மாறாக சிங்கள பிராகிருதம் பேசினார்கள் எனக் கொள்வது, ஆந்திர மாநிலத்தில் காணப்படும் கல்வெட்டுகளைக் கொண்டு இப்பகுதி மக்கள் தெலுங்கு பேசவில்லை, பிராகிருதம் பேசினார்கள் எனக் கொள்வது போன்ற தவறான கணிப்பாகும்.

வல்லிபுரப் பொன்னேட்டு மொழி பௌத்தர்களின் சமயப் பதிவேட்டு மொழியே ஒழிய, ஓர் இனத்தின் பேச்சு மொழியே அல்ல. பௌத்த மதத்தினரின் சாசன மொழியான பிராகிருதத்தை மக்களின் பேச்சு மொழியாக பரணவிதான குறிப்பிட்டுக் கூறியது மாபெரும் தவறாகும். பேராசிரியர் பரணவிதான வல்லிபுரச் சாசனத்தை ஒரு புறச்சார்வான, பாரபட்சமான கண்களுடனேயே அணுகியிருக்கிறார் என்பதில் எதுவிதமான சந்தேகமும் இல்லை. இவரது தவறான முடிவுகள் பல வரலாற்றாசிரியர்களைப் புராதன யாழ்ப்பாணத்தில் கணிசமான அளவு சிங்கள மக்கள் வாழ்ந்தார்கள் என்றும், யாழ்ப்பாண அரசு (நகதீப அரசு) அநுராதபுர அரசின் மேலாதிக்கத்தின் கீழ் இருந்திருக்கிறது எனவும் தவறாக எழுதுவதற்கு ஏதுவாயிற்று.

### பேராசிரியர் வேலுப்பிள்ளையின் பொற்சாசன விளக்கத் திறனாய்வு

பிரபல கல்வெட்டியலாளரும், தொல்லெழுத்துக் கலைஞருமான பேராசிரியர் ஆள்வாப்பிள்ளை வேலுப்பிள்ளை, பேராசிரியர் செனரத் பரணவிதானவின் வல்லிபுரப் பொற்சாசனம் பற்றிய

பொருள் விளக்கம் பற்றியும், பகுப்பாய்வு பற்றியும் (Interpretations and Analysis) தனது கருத்துகளை நீண்ட கட்டுரையாக எழுதியிருக்கிறார் (Veluppillai A. 1990: 1042). அதைச் சுலபமாக விளங்க வைப்பதற்காக இங்கே சுருக்கமாக இலக்கக் குறிகளாகக் கூறப்படுகிறது.

1. வல்லிபுரப் பொற்சாசனத்தில் காணப்படும் எழுத்து வடிவங்கள் இலங்கையில் காணப்படும் மற்றைய கல்வெட்டுச் சாசனங்களில் காணப்படும் எழுத்துகள் போன்றவை என்றும் அவை இரண்டாம் நூற்றாண்டிற்கு உரியவை என்றும் செனரத் பரணவிதான தீர்ப்பளித்திருக்கிறார். தொல்லெழுத்துக் கலை ரீதியாக இந்த எழுத்து வடிவங்கள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குரிய ஆந்திர நாட்டு இக்ஷ்வாகு வடிவ பிராமி எழுத்துகள் என பேராசிரியர் டானி அறியத்தருகிறார். இக்ஷ்வாகு அமராவதி, நாகர்ஜுனாகொண்டா ஆகிய கலாசார மையங்களை உள்ளடக்கிய அரச பரம்பரையினராவார். இங்கே கவனிக்க வேண்டியது ஆந்திரநாடு ஒரு திராவிடமொழி (தெலுங்கு) பேசிய நாடாக இருந்த போதிலும் பௌத்த குருமார்கள் தங்கள் மத சம்பந்தமான எழுத்துப் பொறிப்புகளை பிராகிருத மொழியிலேயே பதிவு செய்தார்கள்.

2. இந்த வல்லிபுர மையத்திலே அமராவதிக் கலைப் பாணியில் ஒரு புத்தர் சிலையைக் கண்டெடுத்ததாகக் குறிப்பிடும் செனரத் பரணவிதான, அதை ஒரு மறை குறிப்பாகக் கொண்டு வல்லிபுரப் பொற்சாசனத்தை வல்லிபுரப் புத்தர் சிலையோடு தொடர்புபடுத்தியிருக்க வேண்டும். அவரது எண்ணத்தில் அந்த தொடர்பு உதிக்கவே இல்லை. ஆரம்ப நாட்களில் புத்த பகவானின் சிலைகள் பௌத்த விகாரைகளிலேயே காணப்பட்டன. வல்லிபுரப் புத்தர் சிலையும், வல்லிபுரப் பொற்சாசனமும் குறிப்பிட்ட ஒரே இடத்திலிருந்து பெறப்பட்ட போதிலும், அப் புத்தர் சிலை, அப் பொற்சாசனம் குறிப்பிடும் விகாரைக்கு உரியது என்ற எண்ணம் அவருக்கு உறைக்கவே இல்லை.

3. இச்சாசனத்தில் காணப்படும் மொழியை 'பழைய சிங்களம்' என விசைப்பாச்சலாக செனரத் பரணவிதான தீர்மானித்தது விந்தையாக இருக்கிறது. கிறிஸ்தாப்தத்திற்கு முன்னும் பின்னுமான சில நூற்றாண்டுகளில், தமிழகம் ஒன்றைத் தவிர, தென்னாசியாவெங்கும் கல்வெட்டு மொழியாக இருந்தது பிராகிருதம் மட்டுமே. பொற்சாசனத்தில் காணப்படுவது பிராகிருத மொழியே! சிங்களம் அல்ல!

பிற்காலத்தில் பிராகிருத மொழியிலிருந்து சிங்களம் பிறந்த போதிலும், பிராகிருதமும் சிங்களமும் இரு வித்தியாசமான மொழிகள். மேலும், இலங்கையின் ஆரம்பகால பிராகிருத எழுத்துப் பதிவுகளில் வட இந்தியப் பிராகிருதத்திலோ, சமஸ்கிருதத்திலோ, அல்லது பாளி மொழியிலோ இல்லாத பல வார்த்தைப் பிரயோகங்கள் பதிவாகியிருக்கின்றன. இலங்கையின் ஆதிப் பிராகிருதத்திற்கு கிட்டிய உறவான மொழி ஆந்திரப் பிராகிருதமாகும். சில பிராகிருதச் சொற்பதங்களை தமிழ் அல்லது திராவிட மொழிகள் மூலமாகவே விளங்கவைக்க முடியும். இச்சாசனத்தை வாசித்த பொழுதில், அதை விளங்குவதில் சில பிரச்சினைகள் இருந்ததை செனரத் பரணவிதானவே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

4. இச்சாசனத்தில் உள்ள இசிகிரய என்ற சொற்பதத்தை ஆராயுமிடத்து இது சிங்களமோ, சமஸ்கிருதமோ அல்ல என்றும், இச்சொல் ஓர் அயல்நாட்டு மொழியின் தோற்றத்தைத் தருவதாகவும் செனரத் பரணவிதான குறிப்பிடுகிறார். இதன் இறுதி அசைச் சொல்லை ராயன் - ராயர் என வாசிக்கும் பரணவிதானவிற்கு இது ஒரு தமிழ்மொழிப் பதம் என்பது எப்படித் தெரியாமல் போயிற்று? ராயன் என்ற பெயர் ஈழத்தின் அரசன் ஒருவனை அல்லது ஒரு தலைவனைக் குறிக்கும் பெயர். இசிகிராயன் என்பதே ஒரு தமிழ்ப்பெயர்.

5. சாசனத்தில் இடம்பெறும் நகதிவ என்ற பெயர் பகுதி தமிழாக உள்ள பெயர். நாகதீப என்கிற பாளிப் பதத்திற்கும், நாகதீவு என்கிற தமிழ்ப் பதத்திற்கும் இடையில் வரக்கூடிய பெயர் இது.

6. சாசனத்தில் இடம் பெறும் அரசனின் பெயர் வஹா. வஹா என்ற இந்தப் பெயரை செனரத் பரணவிதான இரண்டாம் நூற்றாண்டின் அநுராதபுர அரசன் வசபா (வஹபா) என தீர்மானிக்கிறார். இச்சாசனத்தில் உள்ள எழுத்து வடிவங்கள் மூன்றாம் நூற்றாண்டின் பிற்பாதியில் உருவான இக்ஷ்வாகு வகை எழுத்துகள் என தொல்லெழுத்துக் கலை ரீதியாக பேராசிரியர் டானியால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, அரசன் வசபன் என்ற பேச்சு இங்கே இடம்பெற இயலாது.

(இந்த பொற்சாசனத்திற்கு ஒரு வெப்பேற்றுக் கதிரொளிவீச்சுக் காலக்கணிப்பு Thermoluminescence Dating செய்தால் அதன் சரியான திகதி தெரிந்துவிடும்.)

7. சாசனத்தில் இடம்பெறும் படகர என்ற சொற்பதம் பாளியில் உள்ள படகர என்னும் சொல்லுக்குச் சமனாக இருக்கலாம். ஆனால் வல்லிபுரம் யாழ்ப்பாணத்தின் வடகரையில் இருப்பதனால் வடகரை என்ற தமிழ்ச் சொல்லே இங்கே படகர எனப் பதிவாகியிருக்கிறது என்பதை செனரத் பரணவிதான ஒப்புக்கொள்கிறார்.

ஆனாலும், இந்தச் சாசனத்தில் வடகரை என்ற தமிழ்ச்

சொற்பதம் காணப்படுவதை ஏற்றுக்கொள்ளும் செனரத் பரணவிதான, இந்தச் சாசனம் பழைய சிங்கள மொழியில் எழுதப்பட்டிருக்கிறது என்ற கருத்தை மாற்றவே இல்லை.

8. வல்லிபுரப் பொற்சாசனம் பழைய சிங்கள மொழியில் எழுதப்பட்டிருப்பதாக உரிமை கோரும் செனரத் பரணவிதான, சாசனத்தின் மூல உரைக்கு நேரடியாக பழைய சிங்களத்திலிருந்து கருத்துக் கூறாமல், மூன்று வகையான மாற்றுப் பொருள் விளக்கங்களை (*Three Alternative Interpretations*) முன்வைப்பது விந்தையாக இருக்கிறது. பழைய சிங்களம் எனக் கூறப்படும் மொழியில் தமிழ்ச் சொற்கள் காணப்படுவதற்கு இரு வகையான பொருள் விளக்கங்களை முன்வைக்கலாம்: ஒன்று சிங்கள மொழியின் உருவாக்கத்தில் தமிழ் மொழியின் தாக்கம். மற்றது தமிழ் மொழியின் (திராவிட) அடித்தளத்திலிருந்து சிங்கள மொழி உருவானது என்ற கருத்து. சிங்கள மொழியின் இலக்கணம், வட இந்திய மொழிகளைப் போல அல்லாது தமிழ் இலக்கணத்தை ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

9. தென்னாசியா எங்கும் உள்ள பௌத்த நிறுவனங்களின் கல்வெட்டுகளிலும், எழுத்துப் பொறிப்புகளிலும் பிராகிருத மொழியை உபயோகிப்பது வழக்கம். இக்கல்வெட்டு மொழிக்கும் மக்கள் பேசும் மொழிகளுக்கும் எதுவித தொடர்பும் கிடையாது. ஆந்திர நாட்டில் அமராவதி, நாகர்ஜுனாகொண்டா ஆகிய இடங்களில் காணப்படும் அனைத்துக் கல்வெட்டுகளும் பிராகிருத மொழியில் இருக்குமிடத்து சாதாரண மக்கள் தெலுங்கு மொழியைப் பேசினார்கள். அக்காலத்தில் பிராகிருதம் தென்னாசியாவின் இடையீட்டுப் பொதுமொழியாக (*Lingua Franca*) இருந்தமையால் அது உபயோகத்திலிருந்த ஒரு பிராந்தியத்தில் அதுதான் முக்கியமான பேச்சுமொழியாக இருந்திருக்க வேண்டுமென்பதில்லை. சாசனத்திலிருந்த பிராகிருத மொழியை, பழைய சிங்களம் எனத் திரித்துக்கூறி, அது அப்பிரதேச மக்களின் பேச்சுமொழியாக இருந்தது எனத் தீர்மானம் செய்ததே செனரத் பரணவிதான செய்த மாபெரும் அநீதியாகும் (*Veluppillai, A.* 1981: 6).

## சாசனம் சாற்றும் சரித்திரச் சான்றுகள்
## நாகதீபம்

இலங்கையின் பௌத்தமத வரலாற்று நூல்களான மகாவம்சம், தீபவம்சம் ஆகியன இலங்கையின் வடபகுதியை 'நாகதீப' என அழைக்கின்றன. வல்லிபுரப் பொற்சாசனம் இதை 'நாகதீவ' எனப் பதிவு செய்திருக்கிறது. மணிமேகலை இந்நிலப்பகுதியை 'நாகநாடு' எனக் கூறுகிறது. இலங்கையின் மேற்குக் கரையோரமாகக் கதம்ப நதியின் (அருவியாறு) முகத்துவாரத்திலுள்ள அரிப்பு என்ற இடத்திலிருந்து, அவ்வாற்றுப் படுக்கை நிலங்கள் வழியாக நாகபொக்கணை வரைக்கும், நாகபொக்கணையிலிருந்து கிழக்குக் கரையோரமாக திரிகூடத்தை உள்ளடக்கிய ஒரு கோட்டுக்கு வடக்கேயுள்ள பிரதேசம் யாவும் நாகதீப என அழைக்கப்பட்டது (*Geiger, W.* 1960: 108).

நாகதீபத்தில் இன்றைய யாழ்ப்பாணக் குடாநாடு, அதைச் சுற்றியுள்ள தீவுகள், திருகோணமலை, முல்லைத்தீவு, பூநகரி, மாந்தை, மன்னார், மகாவில்லாச்சி, வவுனியா உள்ளிட்ட வன்னிப் பகுதிகள் அனைத்தும் அடங்கியிருந்தன. இருந்த போதிலும், தமிழில் பாண்டித்தியம் பெற்றதாகக் கூறிக்கொள்ளும் சில அறிஞர்கள் நாகதீபம் என்ற பெயர் நயினாதீவைக் குறிப்பிடுவதாகத் தீர்மானித்துள்ளார்கள். 'வையா' என்ற யாழ்ப்பாண வரலாற்று நூல் நயினாதீவை 'நாகநயினாதீவு' எனக் கூறுவதனால் ஏற்பட்ட மயக்கமாக இது இருக்கலாம்.

இசிகிராயன் (இஸிகிரய) என்னும் தமிழ்ப் பெயர் கொண்ட தலைவன் வல்லிபுரத்திலிருந்து நாகதீபத்தை நிர்வாகம் செய்தான் என்ற சாசனக் கூற்று, நாகதீபம் என்பது நயினாதீவு என்ற சிறிய தீவாக இருக்க முடியாது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. மேலும், புங்குடுதீவு (பியங்கு தீப) இந்த நாகதீபத்தின் ஒரு பகுதியே என்பதையும் இச்சாசனம் சுட்டி நிற்கிறது. மொத்தத்தில் மகாவம்சம், தீபவம்சம் ஆகிய நூல்கள் இலங்கையின் வடபகுதி முழுவதையும் நாகதீபம் எனக் குறிப்பிடுவதையே வல்லிபுரப் பொற்சாசனமும் உறுதி செய்கிறது.

பரணவிதான பொருளுரைத்திருப்பது போல வல்லிபுரப் பொற்சாசனம் நாகதீவில் சிங்கள மக்களின் குடியேற்றம் பற்றிக் கூறவரவில்லை. மாறாக பேராசிரியர் பீற்றர் ஷாக் சுட்டிக்காட்டுவது போல வல்லிபுரச் சாசனம் வடபகுதியில் இசிகிராயன் என்ற தமிழ்ப் பெயரைக்கொண்ட தலைவனின் தலைமையில் தமிழ் மக்களின் குடியேற்றத்தை உறுதிப்படுத்தும் சிறந்த சாசனமாகும். முக்கியமாக வல்லிபுரப் பொற்சாசனம் தென்னிந்தியாவுடன் தொடர்பு கொண்ட தமிழ் மக்களின் வடஇலங்கைக் குடியேற்றங்களைப் பதிவு செய்திருக்கும் சிறந்த பதிவாகும். வல்லிபுரம் தமிழ் மொழி பேசிய பண்பாட்டுப் பிரதேசம் என்பதை இச்சாசனம் உறுதி செய்கிறது (*Peter Schalk* 1994).

ஒரு புதிய விகாரை கட்டப்படுவது அவ்விடத்தில் பௌத்த மதம் பரவியிருந்ததற்கான சான்று. பெரும்பாலும் வல்லிபுரப் புத்தர் சிலை அந்த விகாரையில் நிறுவப்பட்டதாகும். அந்த விகாரை கட்டுவதற்குப் பொறுப்பாக இருந்தது அரசன் அல்ல. அரசனின் பிரதிநிதியான இசிகிராயனே.

### நாகதீப அரசு

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் மகோதரன், சூளோதரன் ஆகிய நாக மன்னர்கள் நாகதீபத்தின் அரசுரிமைக்காகப் போர் புரிந்த வரலாற்றை மகாவம்சம் எடுத்துரைக்கிறது (*Mahavamsa, Ch. 1: 46*). கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வளைவாணன் என்னும் தமிழ் நாக அரசன் நாகநாட்டை ஆட்சிபுரிந்த தகவலை மணிமேகலை கூறுகிறது (மணிமேகலை *xxiv: 54*). இவற்றின் தொடர்ச்சியாக கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வஹ என்ற அரசனின் பிரதிநிதியான இசிகிராயன் என்ற தமிழ்த் தலைவன் வல்லிபுரத்திலிருந்து நாகதீபத்தை நிர்வாகம் செய்த தகவலை இச்சாசனம் தருகிறது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் உக்கிரசிங்கன், சிங்கைநகரை அரச மையமாகக் கொண்ட யாழ்ப்பாண அரசை ஆரம்பிப்பதற்கு முன்னரே, நாகதீபத்தைத் தமிழ் அரசர்கள் நிர்வாகம் செய்து வந்திருக்கிறார்கள் என்பதை உறுதுணை செய்யும் சான்றுகளில் இச்சாசனமும் ஒன்று.

யாழ்ப்பாண மண்ணின் ஆதி வரலாற்றைப் பதிவு செய்த நூல்கள் ஏதும் இன்று இல்லாத போதும், அநுராதபுரத்தை அரச பீடமாகக் கொண்ட இலங்கையின் ஆட்சி அமைப்புக்கு வெளியே, நாகதீபத்தில் தனித்தன்மையான சுதந்திரத் தமிழ் மன்னர்களின் அரசாட்சி நடைபெற்று வந்திருப்பதற்கான ஒரு சான்று இச்சாசனம்.

இச்சாசனம் கூறும் வஹ மன்னனைப் பற்றி இனிமேல்தான் ஆராயவேண்டும்.

### ஆந்திர - யாழ்ப்பாண கலாசாரத் தொடர்புகள்

வல்லிபுரச் சாசனத்தில் காணப்படும் 'அ, உ, க, ம, ய, ற, ல, ள' ஆகிய எழுத்து வடிவங்கள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பாதிக்கும், நான்காம் நூற்றாண்டிற்குமுரிய அமராவதி, நாகர்ஜுனாகொண்டா சாசனங்களில் காணப்படும் பிராகிருத மொழி இக்ஷ்வாகு பாணி (*Ikshvaku Style*) எழுத்து வடிவங்களாகும். இவ்வெழுத்துப் பாணி இலங்கையின் பெருநிலப் பரப்பிலுள்ள கல்வெட்டுகளில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வெழுத்து வடிவங்கள் ஆந்திராவிலிருந்து கடல் வழியாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்து வல்லிபுரச் சாசனத்தில் இடம்பெறுகின்றன என்பது தெளிவாகிறது. இவ் வரிவடிவங்கள் கிறிஸ்தாப்தத்திற்குப் பல நூற்றாண்டுகள் முன்பிருந்தே வட ஈழத்தில் வியாபித்துப் பரவிக்கிடந்த ஆதித் தமிழரின் நீர்ப்பாசன, சமுத்திர வர்த்தக நாகரிகப் பின்னணியில், வட யாழ்ப்பாணத்தின் துறைகளினூடாகக் கசிந்து வந்த கலாசாரப் பரிமாறலின் சின்னங்களாகும்!

ஆந்திர மாநிலத்தில் உருவான அமராவதிக் கலைப்பாணியின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. நான்காம் நூற்றாண்டு வரையாகக் கொள்ளப்படுகிறது. இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திற்கும் ஆந்திர தேசத்திற்குமிடையே நடைபெற்ற வர்த்தக, கலாசாரத் தொடர்புகளால் சிற்பம், சித்திரம், எழுத்து வடிவங்கள் போன்ற பல பண்பாட்டுத் துறைகளில் அமராவதிப் பண்பாடு யாழ்ப்பாண மையங்களை வந்தடைந்தது. கந்தரோடை, வல்லிபுரம், அநுராதபுரம் ஆகிய இடங்களில் காணப்பட்ட ஆரம்பகால பௌத்த சிற்பங்கள் அனைத்தும் அமராவதிப் பாணியில் அமைந்த சிற்பங்களாகும்.

வல்லிபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் ஆந்திர மாநிலத்தை ஆட்சிபுரிந்த சத்வாகன, இக்ஷ்வாகு அரசர்களின் ஆட்சிக்காலத்தில் வெளியிட்ட நாணயங்களும் கிடைத்திருக்கின்றன. இக்காலகட்டத்தில் வல்லிபுரம் துறைமுகத்தைக் கொண்ட ஒரு புகழ்பெற்ற நகரமாகவும், பௌத்த மத வழிபாட்டுத் தலமாகவும் விளங்கியமையால் ஆந்திர மாநிலத்திலிருந்தும், தமிழகத்திலிருந்தும் வர்த்தகர்களும், பௌத்த யாத்திரிகர்களும் இங்கே வருகை தந்தார்கள் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

வல்லிபுரத்தைப் போன்றே கந்தரோடை அகழ்வுகளில் கண்டெடுக்கப்பட்ட ஆந்திர நாட்டு நாணயங்களும், அமராவதிக் கலைப்பாணியில் அமைந்த புத்தபிரானின் சிலைகளும், பௌத்த ஸ்தூபங்களும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் நான்காம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்திற்கும், ஆந்திர மாநிலத்திற்குமிடையே நிலவி வந்த பண்பாட்டுப் பரிமாற்றங்களின் சான்றுகளாக விளங்குகின்றன.

ஆந்திர மாநிலத்தின் நாகர்ஜுனாகொண்டா நகரத்தில் பிறநாட்டுப் பௌத்தர்கள் வசிப்பதற்காகக் கட்டப்பட்ட பள்ளிகளில் சிகள விகாரை என்பது, ஈழத்துப் பௌத்தர்கள் தங்கி, பௌத்த மதக் கல்விகளை மேற்கொள்ளுவதற்காக பிரத்தியேகமாகக் கட்டப்பட்டிருந்தது என்பதை மூன்றாம் நூற்றாண்டிற்குரிய நாகர்ஜுனாக்கொண்டா கல்வெட்டு ஒன்று எடுத்துரைக்கிறது.

### நாகர்கோயில்

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே யாழ்ப்பாணத்தின் புராதன நகரங்களில் ஒன்றாக விளங்கிய நாகர்கோயில் இன்று ஒரு சிறிய கிராமமாகக் காட்சியளிக்கிறது. இக்கிராமம் பருத்தித்துறை - மருதங்கேணி வீதியில் பருத்தித்துறையிலிருந்து 14 மைல் தொலைவில் அமைந்திருக்கிறது. அக்காலத்தில் அவ்விடத்தில் பிரசித்தி பெற்றிருந்த நாகர்கோயிலின்

பெயரே அந்த நகருக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த ஆலயத்தை 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் முற்றாக அழித்தொழித்தனர். அவ்விடத்தில் இன்று ஒரு சிறிய நாகதம்பிரான் கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. அக்கோயிலின் சுற்றாடலில் ஐந்து தீர்த்தக் கேணிகள் காணப்படுகின்றன.

பண்டைய நகரம் இன்றிருக்கும் நாகதம்பிரான் கோயிலிலிருந்து கிழக்கே கடற்கரை வரை பரந்திருந்தது. கடற்கரை வரை பரந்திருக்கும் கருமணற் கும்பிகளினுள்ளே பலதரப்பட்ட பண்டைய மட்பாண்ட ஓடுகள் காணப்படுகின்றன. கறுப்பு - சிவப்பு மட்பாண்ட ஓடுகள், உரோம ரௌலெற்றெட் ஓடுகள், சீனப் பீங்கான்கள், இஸ்லாமிய மட்பாண்டங்கள், தடித்த பள்ள விளிம்பு கொண்ட கலன்கள் எனப் பல (*Ragupathy, P.* 1987: 8788). இவற்றைக் கொண்டு பொதுயுக (கிறிஸ்தாப்த) காலத்தில் இது ஒரு வர்த்தக மையமாக இருந்ததை ஊகிக்கலாம். இவ்விடத்தில் முறையான தொல்லியல் அகழாய்வுகள் மேற்கொள்ளுவதன் மூலமே நாகர்கோயிலின் பண்டைய நாகரிகப் பங்களிப்பை வெளிக்கொணர முடியும்.

### உசாத்துணை நூல்கள், சஞ்சிகைகள்


1. *ARCHAEOLOGICAL REPORT* (1846): *'A Burial at Vallipuram', Journal of the Royal Asiatic Society, Ceylon Branch, Vol.* 1, *No.* 3, *p.* 156.

2. *CMINTAIYAR, U. Ve.* (1951): *Putta Carittiram, Pautta Tarumam, Pautta Cakam (Biography of the Buddha, The Buddhist Dharma and the Buddhist Sangha), Tiyakaraja Vilas Publication, Madras.*

3. *CALDWELL, R.* (1856, *Reprint* 1987): *A Comparative Grammar of Dravidian or South Indian Family of Languages, Asian Educational Services, New Delhi.*

4. *DANI, A.H.* (1963): *Indian Palaeography, Oxford University Press, Oxford.*

5. *GEIGER, WILHELM* (1960): *Culture of Ceylon in Medieval Times, (Ed.) Heinz Bechert, Harrassowitz Publishing House, Germany.*

6. *LEWIS, J.P.* (1895): *Manual of the Vanni Districts, Govt. Press, Colombo.*

*LEWIS, J.P.* (1916-17): *'Some Notes on Archaeological Matters in the Northern Province of Ceylon' in The Ceylon Antiquary and Literary Register* 1916-17, *Vol. II, Part* 2, *pp.* 96-97, *Colombo.*

7. *MAHAVAMSA, THE* (1993): *Translated by Wilhelm Geiger, Asian Educational Services, New Delhi.*

*PARANAVITANA, S.* (1934-1941): *Vallipuram GoldPlate Inscription of the Reign of Vasabha, Epigraphia Zeylanica, Vol. IV, pp.* 229-237.

8. *PARANAVITANA, S.* (1983): *"Vallipuram Gold Inscrip tion", Inscriptions of Ceylon, Vol.* 2, *Part* 1: *Late Brahmi Inscriptions, Dept. of Archaeology, Moratuwa.*

9. *PARKER, HENRY* (1909): *Ancient Ceylon, Luzac & Co., London.*

10. *RAGUPATHY, P.* (1987): *Early Settlements in Jaffna, CreA, Madras.*

11. *SCHALK, PETER* (1994): *The Vallipuram Buddha Image Rediscovered, Paper presented at the Symposium of Dance, Music and Art in Religions, Abo, Finland,* 16*th*18*th August* 1994.

12. *SCHROEDER, ULRICH VON* (1990): *Buddhist Sculptures of Sri Lanka* (752 *pages*), *Visual Dharma Publications.*

13. *VELUPPILLAI, A.* (1981): *"Tamils in Ancient Jaffna and the Vallipuram Gold Plate", Journal of Tamil Studies* 19, *pp.* 114.

14. *VELUPPILLAI, A.* (1990): *"Religions in Yalpanam up to the* 13*th Century A.D.", Lanka* 5, *pp.* 1042.

15. இந்திரபாலா, கா. (1973): 'வல்லிபுரம் தாழிப்புதையல்', வீரகேசரி வார வெளியீடு, 18 பெப்ரவரி 1973, கொழும்பு.

16. சாமிநாதய்யர், உ.வே. (1951): புத்த சரித்திரம், பௌத்த தர்மம், பௌத்த சங்கம், தியாகராஜ விலாஸ் வெளியீடு, சென்னை.

17. மணிமேகலை (1965): உ.வே. சாமிநாதையர் பதிப்பு, அறம் பதிப்பகம், சென்னை.


**NOTE:**

**The Late Professor Alvapillai Veluppillai gained a Triple Doctorate. He received a Ph.D. degree from the University of Ceylon, Peradeniya in 1962; a D. Phil. degree from the University of Oxford in 1964; and a third doctorate (honorary degree) from the Uppsala University, Sweden in 1996.**

கந்தையா சண்முகலிங்கம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.
'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

# இலங்கையில் உள்ளூராட்சி அரசாங்கம்: பிரித்தானியர் ஆட்சியின் தொடக்கம் முதல் 1920 வரையான வரலாறு

'இலங்கையின் அரசியல் 1900 – 1981: பன்முகநோக்கு' என்னும் இத்தொடர் 1900 முதல் 1981 வரையான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றிய பன்முக நோக்கிலான கோட்பாட்டு ஆய்வுகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டதாக அமையும். ஆங்கிலத்தில் பருவ இதழ்களிலும் (Journals) அச்சு ஊடகங்களிலும் வெளியான ஆய்வுக் கட்டுரைகளை தழுவியும் சுருக்கியும் தமிழில் எழுதப்பட்டவையாக இக் கட்டுரைகள் அமையவுள்ளன. இலங்கையின் அரசியல் குறித்த பன்முக நோக்கில் (Multi Disciplinary Approach) அமையும் அரசியல் விமர்சனமும் ஆய்வும் என்ற வகையில் அரசியல் கோட்பாடு, சட்டக் கோட்பாடு என்னும் இரண்டையும் இணைப்பனவான உயராய்வுகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், வரலாறு, அரசியல் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு (Biography of Political personalities) என்னும் துறைகள் சார்ந்த உயராய்வுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகளை தமிழுக்கு இரவல் பெற்றுக் கொண்டு வருதலும் உள்ளீர்த்துத் தன்வயமாக்கிக் கொள்ளுதலும் இன்றைய அவசியத் தேவையாகும். சி. அரசரத்தினம், ஏ.ஜே. வில்சன், குமாரி ஜெயவர்த்தன, ஜயதேவ உயன்கொட, றெஜி சிறீவர்த்தன, நிறா விக்கிரமசிங்க, ஜயம்பதி விக்கிரமரட்ண, லக்ஷ்மன் மாரசிங்க, சுமணசிறி லியனகே ஆகிய புலமையாளர்களின் கட்டுரைகள் இத்தொடரில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இப் பட்டியல் பூரணமானதன்று. இன்னும் பலரைச் சேர்க்க வேண்டியுள்ளது. அவ்வப்போது வேறு பலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 30 மாதங்கள் வரை நீட்சி பெறவுள்ள இத் தொடரில் 30 கட்டுரைகள் வரை இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.

**ஆங்கில மூலம்: பிரேமசிறி ஹெட்டியாராச்சி**

ஆய்வாளர் பிரேமசிறி ஹெட்டியாராச்சி அவர்கள் *The Local Government in Sri Lanka: The Historical Background* என்னும் தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார். பேராசிரியர் ஜயதேவ உயன்கொட அவர்களால் பதிப்பிக்கப்பட்ட *'Local Government and Local Democracy in Sri Lanka: Institutional and Social Dimensions'* என்னும் நூலின் (2015) முதலாவது அத்தியாயமாக அமையும் (பக். 137) இக்கட்டுரை இலங்கையில் அனுராதபுரக் காலத்தின் 'ஹம்சபா' (Gamsaba) எனப்படும் கிராமிய உள்ளூராட்சி முறை முதல் 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றமை வரையான உள்ளூராட்சி அரசாங்கத்தின் நீண்ட வரலாற்றைக் கூறுவதாக அமைந்துள்ளது. இக்கட்டுரையின் உள்ளடக்கத்தை பின்வருமாறு நான்கு பகுதிகளாகப் பிரித்து நோக்குதல் உள்ளூராட்சி முறையின் படிமுறை வளர்ச்சியை வரலாற்று நோக்கில் புரிந்துகொள்ள உதவுவதாக அமையும்.

1. கி.மு 2 ஆம் நூற்றாண்டு முதல் 1500 வரையான காலம். ஜனநாயகமும், ஜனநாயக ஆட்சிமுறையும் நவீன காலத்துக்குரியது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாயினும், இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் கிராம மட்ட நிர்வாகத்தில் உள்ளூர் ஜனநாயகம் (Local Democracy) நடைமுறையில் செயற்பட்டது என்பதை வரலாற்றாய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். 'ஹம்சபா' பற்றி ஹெட்டியாராச்சி அவர்கள் கூறியிருப்பவை இலங்கையின் உள்ளூராட்சி முறையின் பரிணாம வளர்ச்சியை அறிந்துகொள்ள உதவுகிறது. பக்கம் 1 - 4 வரையுள்ள பகுதியில் இவ்வளர்ச்சி விவரிக்கப்பட்டுள்ளது.

2. போர்த்துக்கேயரதும் டச்சுக்காரரதும் ஆட்சிக்காலத்தில் 'ஹம்சபா' முறையினை தமது வர்த்தக நிர்வாகத் தேவைகளுக்கு ஏற்பக் காலனிய ஆட்சியாளர்கள் பயன்படுத்தியது பற்றியும், அக்காலத்தின் (1505-1796) உள்ளூராட்சி முறை பற்றியும் அடுத்துவரும் இரு பக்கங்களில் (பக். 45) கட்டுரையாசிரியர் விவரிக்கிறார்.

3. 1796 முதல் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை (1796-1920) பிரித்தானியர் ஆட்சியில் உள்ளூராட்சி முறையில் மிக முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டன. 1833 ஆம் ஆண்டில் கோல்புறுூக் கமரென் ஆணைக்குழுவின் சிபார்சின் படியான மாற்றங்கள் உள்ளூராட்சி முறையின் வரலாற்றில் மிக முக்கியமான திருப்பமாகும். இதனைத் தொடர்ந்து 1856, 1865, 1871, 1896, 1898 ஆகிய ஆண்டுகளில் இயற்றப்பட்ட சட்டங்களின் பயனாக உள்ளூராட்சி முறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நான்கு வகையான உள்ளூராட்சி அமைப்புகள் இலங்கையில் செயற்பட்டுக் கொண்டிருந்தன. நுவரெலிய நகரத்தின் நிர்வாகத்திற்கு விசேட வகையான சபை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. நாடு முழுமைக்குமான 3 முனிசிபல் சபைகள், 360 கிராம சபைகள், பட்டினங்களை நிர்வகிக்கும் 33 சபைகள் என எல்லாமாக 396 உள்ளூராட்சி சபைகள் இயங்கின.

4. 1920 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சட்டம், உள்ளூராட்சி நிறுவனங்களில் அரசாங்கம் கூடியளவு பங்கேற்பைச் செய்வதற்கு வழிசமைத்தது. இதன் பின்னர் டொனமூர் ஆணைக்குழுவின் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் செயற்படுத்தப்பட்ட போது உள்ளூர் நிர்வாகத்திற்கான நிருவாகக் குழு (Executive Committee on Local Government) அமைக்கப்பட்டது. உள்ளூராட்சித் திணைக்களம் என்னும் புதிய திணைக்களம் உருவாக்கப்பட்டது. உள்ளூராட்சி சபைகள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சுயாதீனமான அமைப்புகளாக இக்காலத்தில் உருவாக்கம் பெற்றன.

மேலே நான்கு பகுதிகளாகப் பிரித்துக் கூறப்பட்ட நீண்ட வரலாற்றில் 1796 முதல் 1920 வரையான காலத்தில் இலங்கையில் நவீன உள்ளூராட்சி முறைமை (Modern Local Government System) ஒன்று படிப்படியாக உருவாக்கம் பெற்றது. இந்த வரலாற்றை பிரேமசிறி அவர்கள் நூலின் 6 முதல் 16 வரையான 10 பக்கங்களில் விவரித்துக் கூறியுள்ளார். இத்தமிழ்க் கட்டுரை மேற்படி 10 பக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளைச் சுருக்கியும் தொகுத்தும் கூறுவதாக அமைந்துள்ளது.

இலங்கையின் வடக்குக் - கிழக்கு மாகாணங்களிலும், தென்னிலங்கையிலும் உள்ளூராட்சி நிறுவனங்களான பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள் என்பன மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு நிருவகிக்கப்பட்டு வருகின்ற இன்றைய சூழ்நிலையில் உள்ளூராட்சி அரசாங்கத்தின் வரலாற்றுப் பின்புலத்தை தமிழ் அறிவுலகின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்கில் இத்தமிழ்க் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

### பிரித்தானியர் ஆட்சிக்காலம்

டச்சுக்காரரின் ஆட்சியின் கீழ் இருந்துவந்த இலங்கையின் கரையோர மாகாணங்களின் நிர்வாகம் 1796 ஆம் ஆண்டு பிரித்தானியரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இதன் பின்னர் 1815 ஆம் ஆண்டில் பிரித்தானியர் கண்டியின் மாகாணங்களையும் கைப்பற்றி முழு இலங்கையையும்

தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். பிரித்தானியருக்கு ஆட்சியதிகாரம் கைமாறிய பின்னரும் இலங்கையில் இருந்து வந்த 'ஹம்சபா' எனப்படும் உள்ளூராட்சி அமைப்புகளைத் தொடர்ந்து இயங்குவதற்குப் பிரித்தானியர் அனுமதித்தனர். ஹம்சபாக்கள் இலங்கையின் விவசாயச் சமூகத்தின் கிராமிய வாழ்க்கையின் அனைத்து அலுவல்களையும், நீதி நிர்வாகத்தையும் சுயாதீனமாக் கையாளும் சுதந்திரமான அமைப்புகளாக இயங்கி வந்தன.

### 1833 ஆம் ஆண்டின் சீர்திருத்தம்

'ஹம்சபா' முறைக்குப் புத்துயிர் அளித்து அதனை மறுசீரமைப்பதற்கு கோல்புறூக் ஆணைக்குழு விருப்பம் தெரிவித்தது. ஆயினும் இலங்கையின் நீதி நிர்வாகம் (Judicial Administration) தொடர்பான விசாரணை அறிக்கையைச் சமர்ப்பித்த கமெரன் (Cameron) ஹம்சபாக்களிடம் இருந்து வந்த நீதியதிகாரங்களை அவற்றிடமிருந்து புதிதாகத் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்களிற்கு மாற்றும் சிபார்சினை முன்மொழிந்தார். பிரித்தானிய அரசினால் கமரெனின் சிபார்சுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மாவட்ட நீதிமன்றங்கள் (District Courts) சிவில் வழக்குகளையும், குற்றவியல் வழக்குகளையும் விசாரணை செய்து தீர்ப்பளிக்கும் அதிகாரம் உடையனவாகச் செயற்பட்டன. இதனால் உள்ளூர் விடயங்களின் நீதி பரிபாலனம் தொடர்பாக இருந்து வந்த அதிகாரங்களை இழந்த ஹம்சபாக்கள் கிராம மட்டத்தில் தமது செல்வாக்கை இழந்தன. ஹம்சபாக்களிடம் மரபு வழியாக இருந்து வந்த அதிகாரங்கள் பறிக்கப்பட்டதனால், கிராம மட்டத்தில் இயங்கிவந்த உள்ளூர் நிர்வாகக் கட்டமைப்புக் குலைவுற்றது. இதனால் நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டது. 1848 கண்டிக் கலகத்திற்கான காரணங்களில் ஒன்றாக உள்ளூர் நிர்வாக முறையின் குலைவு அமைந்தது எனக் கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்றார்.

### கிராம மட்டத்தின் நீர்பாசன நிர்வாகமும் வீதி அமைப்பு நிர்வாகமும்

1856 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நீர்ப்பாசனச்சட்டம் (The Irrigation Ordinance No 9 of 1856) கிராமமட்டத்தில் 'ஹம்சபா'க்களுக்கு ஒப்பான புதிய நிறுவனக் கட்டமைப்பை அறிமுகம் செய்தது. நீர்பாசன அலுவல்களை நிர்வாகம் செய்வதற்கான இப்புதிய அமைப்பு கிராம மட்ட நிர்வாகத்தை மக்களிடமே மீண்டும் ஒப்படைப்பதற்கான முற்போக்கு நடவடிக்கையாக அமைந்தது. இந்த முற்போக்கான நடைமுறையை அறிமுகம் செய்தவர் அக்காலத்தின் ஆளுநராகவிருந்த சேர் ஹென்றி வாட் (Sir. Henry Ward) ஆவார். இதன்பின்னர் பொதுப்போக்குவரத்து வீதிகள் தொடர்பான சட்டம் 1861 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது (Thoroughfares Ordinance No 10 of 1861). இச்சட்டத்தின்படி 'வீதிக்குழுக்கள்' (Road Committees) என்னும் அமைப்புகள் உருவாக்கப்பட்டன. வீதிக்குழுக்கள் மாகாண வீதிக்குழுக்கள் (Provincial Road Committees), மாவட்ட வீதி குழுக்கள் என இரு வகையினவாக இருந்தன. மாவட்ட வீதிக்குழுக்கள், மாகாண வீதிக் குழுக்களின் மேற்பார்வையில் இயங்கும் அமைப்புகளாக விளங்கின. மாவட்ட வீதிக்குழுக்களின் செயற்பாடுகள் பற்றிய விதிகளை ஆக்கும் அதிகாரம் மாகாண வீதிக்குழுக்களுக்கு இருந்தது. இவ்விரு வீதிக்குழுக்களும் வீதிகளை அமைத்தல், பராமரித்தல், விருந்தினர் விடுதிகளை (Rural Rest Houses) நடத்துதல், படகுச் சேவைகளை (Ferry Services) நடத்துதல் ஆகிய பல கடமைப் பொறுப்புகளை ஏற்று நிறைவேற்றின. அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் இருந்து வீதியமைப்புக்கும், பராமரிப்புக்குமான நிதி ஒதுக்கீடு வீதிகளுக்கு வழங்கப்பட்டது.

வீதிகளின் அமைப்பும் பராமரிப்பும் தொடர்பான வீதிக்குழுக்கள் உள்ளூராட்சி அதிகார சபைகளின் இயல்பை உடையனவாய் விளங்கின. இவ் வீதிக்குழுக்கள் 1951 வரை இயங்கின. 1951 ஆம் ஆண்டின் Roads (Transfer of Control) Act No 11 of 1951 சட்டம் பொதுவேலைத் திணைக்களம் (Public Works Department), உள்ளூராட்சி சபைகள் என்னும் இரு அமைப்புகளையும் வீதிகளின் அமைப்புக்கான அதிகாரம் மிக்க நிறுவனங்களாகச் செயற்பட வழிசமைத்தது.

### முனிசிபல் கவுன்சில் சட்டம்

பிரித்தானியர் ஆட்சியின்போது 1865 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட 17 ஆம் இலக்க முனிசிபல் சபைச் சட்டம் (Municipal Councils Ordinance No 17 of 1864) வரலாற்றுத் திருப்பமாக அமைந்த சட்டமாகும். ஆளுநர் சேர். ஹெர்குலிஸ் றொபின்சன் (Sir. Hercules Robinson) அவர்கள் முனிசிப்பல் சபைகளை அமைத்து, இலங்கையின் முக்கியமான நகரங்களின் நிர்வாகத்தை அச்சபைகளைக் கொண்டு இயக்க வேண்டிய தேவையை உணர்ந்தார். அவர் மேற்குறித்த சட்ட வரைவைத் தயாரித்து பிரித்தானிய பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைத்தார். தாம் இலங்கைக்கு வந்துசேர்ந்த போது சில நகரங்களுக்குச் சென்று பார்த்ததாகவும்,




சேர். ஹென்றி வாட்

Image Source - en.wikipedia.org

அமைவாக கொழும்பு, கண்டி ஆகிய இரு பிரதான நகரங்களும் முனிசிபல் சபைகளின் நிர்வாகத்திற்கு உட்பட்ட பகுதிகளாயின. அவ்விரு நகரங்களிலும் உடனடியாக முனிசிபல் சபைகள் தாபிக்கப்பட்டன. ஏனைய நகரங்களிற்கும் பட்டினங்களிற்கும் முனிசிப்பல் சபைகளை இச்சட்டத்தின்படி அமைக்கும் அதிகாரம் ஆளுநருக்கு வழங்கப்பட்டிருந்தது. 1866 ஆம் ஆண்டு காலி நகர முனிசிப்பல் சபை தாபிக்கப்பட்டது. முனிசிப்பல் சபைகள் சட்ட ஆளுமையுடைய கூட்டிணைப்பு (Body Corporate) அமைப்புகளாகும். அவற்றுக்கு நிலையான இருப்பும், வழிவழி உரிமையும் (Perpetual Succes sion) இருந்தது. முனிசிபல் சபைகள் தமக்கென பொது முத்திரையை (Common Seal) உடைய சட்ட ஆளுமை கொண்ட நிறுவனங்களாகும். கொழும்பு முனிசிபல் சபைப் பகுதி 9 வட்டாரங்களாகப் (Wards) பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு பிரதிநிதி தெரிவு செய்யப்பட்டார். 9 தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுடன் ஆளுநரால் நியமிக்கப்பட்ட 5 உறுப்பினர்களையும் சேர்த்து, 14 பேர் கொண்ட அமைப்பாக கொழும்பு முனிசிபல் சபை இயங்கியது. அதன் தவிசாளர் (Chairman) ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டார். கொழும்பு முனிசிப்பல் கவுன்சிலின் தவிசாளராக சிவில் சேவை உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல் வேண்டும் என்ற விதிமுறை பின்பற்றப்பட்டது. அதன் முதலாவது தவிசாளராக மேற்கு மாகாணத்தின் அரசாங்க அதிபரான C.P. லேயாட் (C.P. Layard) நியமிக்கப்பட்டார்.

அவற்றின் சுகாதார நிலைமை மிகவும் மோசமாக இருந்ததாகவும், தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியிருப்பதைத் தாம் உணர்ந்ததாகவும் பிரித்தானிய அரசுக்கு எழுதிய கடிதத்தில் றொபின்சன் குறிப்பிட்டிருந்தார். முனிசிபல் சபைகளை அமைத்து நகரங்களில் கழிவகற்றல் பணிகளை மேற்கொண்டு சுகாதார நிலையை மேம்படுத்தலாம் என்பதை வலியுறுத்தி முனிசிப்பல் சபைச் சட்டத்தின் தேவையை அவர் எடுத்துரைத்தார் (சொக்சி ஆணைக்குழு அறிக்கை, 1955:7). நகரப்பகுதிகளில் வாழ்ந்த சமுதாயங்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய நிர்வாக முறையை முனிசிபல் சபைகளை அமைப்பதன் மூலம் அரசாங்கம் நிறைவேற்றியது. இது ஒரு முக்கியமான சாதனையாகும். 1865 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு

தவிசாளராக நியமனம் பெற்றவருக்கு முனிசிபல் சபையைக் கொண்டு இயக்கும் நிருவாக அதிகாரங்களும், பொறுப்புகளும் (Executive Powers and Responsibilities) இருந்தன.

1865 ஆம் ஆண்டு முனிசிபல் சபைகள் சட்டம் பற்றி சொக்சி ஆணைக்குழு அறிக்கையில் (Choksy Commission Report) பின்வருமாறு கூறப்பட்டது. உள்ளூராட்சி நிர்வாகத்தில் முதன்முதலாக ஜனநாயகத் தத்துவத்தை (Democratic Principle) அறிமுகம் செய்த பெருமை 1865 ஆம் ஆண்டின் முனிசிபல் சபைச் சட்டத்திற்கே உரியது. இச்சட்டம் ரூ.100 பெறுமதிக்குக் குறையாத சொத்தை உடைமையாகக் கொண்டவர்களுக்கும், 21 வயதுக்கு மேற்பட்டவர்களுமான ஆண்களுக்கு முனிசிபல் சபை தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை வழங்கியது. முனிசிபல் சபையின் உறுப்பினராகப் போட்டியிடுவதற்கு ஒருவரக்கு ரூ.500 இற்கு

**பிரித்தானியர் ஆட்சியின்போது 1865 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட 17 ஆம் இலக்க முனிசிபல் சபைச் சட்டம் (Municipal Councils Ordinance No 17 of 1864) வரலாற்றுத் திருப்பமாக அமைந்த சட்டமாகும். ஆளுநர் சேர். ஹெர்குலிஸ் றொபின்சன் (Sir. Hercules Robinson) அவர்கள் முனிசிப்பல் சபைகளை அமைத்து, இலங்கையின் முக்கியமான நகரங்களின் நிர்வாகத்தை அச்சபைகளைக் கொண்டு இயக்க வேண்டிய தேவையை உணர்ந்தார்.**

மேற்பட்ட சொத்துகள் உடைமையாக இருத்தல் வேண்டும் எனவும் விதிக்கப்பட்டது (சொக்சி ஆணைக்குழு அறிக்கை, 1955: 7).

கொழும்பு முனிசிபல் சபைக்கு பொதுச்சுகாதாரம், போக்குவரத்துக்கான வீதிகள், வீடமைப்பு, குடிநீர் போன்ற பிறசேவைகளை வழங்குதல் என்பனவற்றிற்கான பொறுப்புகள் வழங்கப்பட்டதோடு, அச்சேவைகளை வழங்குவதற்குத் தேவையான நிதியினை வரிவிதிப்பு மூலம் அறவிடும் அதிகாரமும் சட்டப்படி வழங்கப்பட்டது. முனிசிப்பல் சபைச் சட்டத்தில் குறிப்பிடப்படாத வேறுபல வருமானம் ஈட்டும் வழிகளையும் அரசாங்கம் கொழும்பு முனிசிப்பல் சபைக்கு வழங்கியது. இதனால், அதுவரை அரசாங்கத்திற்குரியதாக இருந்த வருவாய் மூலங்கள் பல கொழும்பு முனிசிபல் சபைக்கு மாற்றப்பட்டது. முனிசிபல் சபைச் சட்டத்தின் படியான வரிவிதிப்பு அதிகாரங்களும், ஏனைய நிதியீட்டும் வழிகளும் கண்டி, காலி ஆகிய முனிசிபல் சபைகளுக்கும் பின்னர் வழங்கப்பட்டது.

## கிராம சமுதாயங்கள் சட்டம் 1871

1871 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க கிராம சமுதாயங்கள் சட்டம் (Village Communities Act No 26 of 1871) என்னும் சட்டம் ஆளுநர் ஹெர்குலிஸ் றொபின்சன் காலத்தில் இயற்றப்பட்டது. இச்சட்டம் பழைய 'ஹம்சபா' முறையினை மீள் உருவாக்கம் செய்து உள்ளூராட்சி அரசாங்கத்தைக் கிராம மட்டத்தில் உறுதியான அடித்தளத்தில் புனரமைப்பதற்கு உதவியது. இச்சட்டத்திற்கு அமைய அமைக்கப்பட்ட கிராம சபைகள் நீதி பரிபாலனத்திற்குப் பொறுப்பான நிறுவனங்களாக விளங்கின. கிராம மட்டத்தில் சமூகத்தில் எழும் பிணக்குகளை விசாரணை செய்து தீர்ப்பளிக்கும் பொறுப்பை முன்னர் 'ஹம்சபாக்கள்' கொண்டிருந்தன. பிரித்தானியர் ஆட்சியின் முற்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றுகள் இவ்வதிகாரத்தை 'ஹம்சபாக்களிடமிருந்து' பறித்தன. 1871 சட்டம் நீதி பரிபாலன அதிகாரத்தை மீண்டும் கிராம மட்ட நிறுவனங்களான கிராம சபைகளிடம் ஒப்படைத்ததன் மூலம் சுயாட்சியை (Self - Governance) கிராம மட்டத்தில் உறுதிசெய்தது. இச்சட்டத்தின்படி கிராம சபைகள் (Village Committees), கிராமிய நீதிமன்றுகள் (Village Tribunals) என இரு நிறுவனங்களும் அரசாங்க அதிபர்களின் கீழ் அவர்களது மேற்பார்வையில் செயற்பட்டன. அக்கால ஆவணங்களை ஆராய்ந்து பார்க்கும் போது, இவ்விரு நிறுவனங்களும் குறுகிய காலத்திற்குள் சிறப்பாகச் செயற்படத் தொடங்கின; நீதி நிர்வாகத்தில் அரசின் செலவுகளை இவை குறைப்பதற்கு உதவியதோடு கிராம மட்டத்தில் ஜனநாயக சுயாட்சி (Democratic Self - Government) செயற்பட உதவின என்பதை அறிய முடிகிறது.

## சிறிய பட்டினங்களின் சுகாதாரப் பரிபாலனம்

1892 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டமான சிறிய பட்டினங்களின் சுகாதாரப் பரிபாலனச் சட்டம் (Small Towns Sanitary Ordinance No 18 of 1892) 19 ஆம் நூற்றாண்டில் உள்ளூராட்சி அரசாங்கத்தை மேம்படுத்துவதற்குக் கொண்டுவரப்பட்ட புதுமையான சட்டமாகும். அக்காலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறிய பட்டினங்கள் பல தோற்றம் பெற்றன. இப்பட்டினங்களின் எல்லைக்குள் செயற்பட்ட கிராம சபைகள் அப்பட்டினங்களின் தேவைகளை நிறைவேற்றும் ஆற்றல் உடையனவாய் இருக்கவில்லை. கழிவகற்றல், பட்டினத்தின் சுற்றுச்சூழலிலும் வீதிகளிலும் குவியும் குப்பை கூழங்களை அகற்றுதல், சுத்திகரிப்பு வேலைகள்,

பொது வசதிகளை (Common Amenities) ஏற்படுத்துதல் ஆகிய சேவைகளை வழங்குவதற்கு ஏற்ற நிறுவனங்களாக 'சுகாதார சபைகள்' (Sanitary Boards) தாபிக்கப்பட்டன. மாவட்டத்தின் கச்சேரிகளில் பதவிவகித்த உதவி அரசாங்க அதிபர்கள் (Assistant Government Agents) இச்சபைகளின் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். பொதுவேலைப் பகுதி (Public Works Department), சுகாதாரத் திணைக்களம் (Medical Department) ஆகியவற்றின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இச்சபைகளின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். இவ்வுத்தியோகத்தர்களோடு வேறு சில உறுப்பினர்களும் ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டனர். ஒரு மாவட்டத்தின் அனைத்துச் சிறு பட்டினங்களினது நிர்வாகமும் உதவி அரசாங்க அதிபர்களின் தலைமையில் இயங்கிய இந்தச் சபைகளினால் நிர்வகிக்கப்பட வேண்டிய நிலை இருந்தது. இதனால், நிர்வாக நடவடிக்கைகள் தாமதமாயின. மாவட்டத்தின் கச்சேரியில் இயங்கிய ஒரு சபையினால், மாவட்டத்தின் அனைத்துச் சிறுபட்டினங்களின் நிர்வாகத்தைக் கொண்டியக்குதல் சிக்கலான பணியாக அமைந்தது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 'உள்ளூர் சபைகள் சட்டம்' (Local Boards Ordinance) என்னும் சட்டம் 1898 இல் இயற்றப்பட்டது. சுகாதார சபைகளின் (Sanitary Boards) நிர்வாகத்தின் கீழ் அமைந்த சிறு பட்டினங்களை விடப் பெரிய பட்டினங்களின் நிர்வாகம் 1898 ஆம் ஆண்டுச் சட்டப்படி நிறுவப்பட்ட 'Local Boards' என்னும் அமைப்புகளிடம் கையளிக்கப்பட்டது. ஒவ்வொரு பெரிய பட்டினத்திற்கும் தனியான உள்ளூர் சபை அமைக்கப்பட்டது. நான்கு வகையான உள்ளூராட்சி சபைகள் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவாகியிருந்தன. 1896 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க நுவரெலிய முன்னேற்றச் சபைச் சட்டம் (Nuwara Eliya Board of Improvement Ordinance) அந்நகரத்தின் பரிபாலனத்திற்காக உருவாக்கப்பட்டது. இச்சபையில் எட்டு உறுப்பினர்கள் உள்ளடக்கப்பட்டனர். மாவட்டத்தின் அரசாங்க அதிபர் தலைவராகச் செயற்பட்டார். அவரைவிட வேறு இரண்டு உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். ஐந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களும் இச்சபையில் உறுப்பினர்களாக இருந்தனர். இச்சபையின் தலைவராக அரசாங்க அதிபர் இருந்தபோதும், தலைவரின் அதிகாரங்கள் யாவற்றையும் பிரயோகிக்கவும், சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகச் (Chief Executive Officer) செயற்படவும், உதவி அரசாங்க அதிபருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கையின் எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக 396 உள்ளூராட்சிச் சபைகள் இயங்கிக் கொண்டிருந்தன. அவற்றின் விவரம் வருமாறு,

1. முனிசிபல் சபைகள் - 03
2. சுகாதார சபைகள் (Sanitary Boards) - 19
3. உள்ளூர் சபைகள் (Local Boards) - 13
4. கிராமக் குழுக்கள் (Village Committees) - 360
5. நுவரெலியா முன்னேற்றச் சபை (Nuwaraeliya Board Of Improvement) - 01

மேற்குறிப்பிட்ட நிறுவனங்களை விட மாகாண வீதிக்குழுக்கள் (Provincial Road Committees), மாவட்ட வீதிக் குழுக்கள் (District Road Committees) என்பனவும் மாகாண, மாவட்ட மட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தன. இவை முறையே 'PRC', 'DRC' என்னும் சுருக்கப் பெயர்களால் அழைக்கப்பட்டன. வீதிக்குழுக்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருந்தனரேனும், அவற்றில் அரசாங்க உத்தியோகத்தர்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தனர். 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நாடு தழுவிய உள்ளூராட்சி அரசாங்கக் கட்டமைப்பு உருவாக்கம் பெற்றிருந்ததைக் காண முடிகிறது.

இந்த உள்ளூராட்சி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தி வழிநடத்துவதற்கான மத்திய நிறுவனம் அல்லது அரசாங்கத் திணைக்களம் இருக்கவில்லை. கிராம சபைகளும், கிராம நீதிமன்றுகளும் அரசாங்க அதிபரின் மேற்பார்வையில் இயங்கின. கிராமத்தின் மக்களைக் கூட்டி, கூட்டம் நடத்தி, சபையின் உத்தியோகத்தர்களைத் (Office Bearers) தெரிவு செய்தல், நியமனங்களைச் செய்தல், நிதியினை ஒதுக்குதல் ஆகிய பணிகளை அரசாங்க அதிபர் செய்துவந்தார். சுகாதார சபைகளையும், உள்ளூர் சபைகளையும் மேற்பார்வை செய்து வழிகாட்டுவதற்கு, மேலான அதிகாரமுடைய நிறுவனம் எதுவும் இருக்கவில்லை. மூன்று முனிசிபல் சபைகளும், நுவரெலியா முன்னேற்றச் சபையும் மட்டும் அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கின. உள்ளூராட்சி அரசாங்கக் கட்டமைப்பை மத்திய கட்டுப்பாட்டிற்குள்ளும், அரசாங்கத்தின் மேற்பார்வை, வழிகாட்டல் என்பனவற்றிற்கும் உட்பட்ட அமைப்புகளாக மாற்றும் வகையிலான சீர்திருத்தங்கள் 1920 இற்குப் பிற்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. இச்சீர்திருத்தங்கள் பற்றி கட்டுரையின் 13 முதல் 37 வரையான 24 பக்கங்களில் கட்டுரையாசிரியர் விவரித்துக் கூறியுள்ளார்.

கார்த்திகேசு இந்திரபாலா



பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் கல்வெட்டியலாளர், வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியவரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், The Evolution of an Ethnic Identity, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

# அருணாசலமும் அனைத்து இலங்கையர் தேசியவாதமும்

'வேந்தர் இல்லா வையகம்: இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணம்' எனும் இத்தொடர் 'ஒருவர் வாழ்க்கை ஊடாகத் தென்படும் காட்சிகள்' பற்றியதாகும். இத்தொடர் கட்டுரைகள் என் வாழ்க்கையில் கண்ட, கேட்ட, கேள்விப்பட்ட, வாசித்தறிந்த நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மனப்பதிவுகள் பற்றியும் அவற்றால் என் மனதில் உருவாகிய கருத்துகள் பற்றியும் கூறுபவை. இவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. இவை யாழ்ப்பாணத்தைப் பற்றியவை; 20 ஆம் நூற்றாண்டை மையமாகக் கொண்டவை. வரலாற்றை எழுதுவோர்க்குச் சான்றுகளைக் கொடுத்துதவும் சுவடிகள் போன்று இத்தகைய நினைவுப் பதிவுகளும் பயன்படும் என்ற நோக்கத்துடன் இவை எழுதப்படுகின்றன.

## மிதவாதத் தலைவர்கள்

பிரித்தானிய ஏகாதிபத்தியம் 19 ஆம் நூற்றாண்டு முடிவடைந்தபோது தென் ஆசியாவில் உறுதிபெற்ற நிலையில் இருந்தது. மேல்நாட்டார் ஆட்சியை எதிர்ப்பவர்களாகக் குறிப்பிடத்தக்க தலைவர்கள் இருக்கவில்லை. இலங்கையில், ஆங்கிலக் கல்வி பெற்ற மத்திய வகுப்பினரும், காலனி ஆட்சியில் தோன்றிய புதிய வாய்ப்புகளை இறுகப்பற்றி மேலுக்கு வந்தோரும், புதிய ஆட்சி அறிமுகப்படுத்திய சட்டமுறைகளுக்கு அமைய உருவாகிய ஒழுங்குள்ள அமைப்புக்குள் அமைதியுடன் வாழ்ந்த பொதுமக்களும் பிரித்தானியர் ஆட்சியை வெறுக்காது ஏற்றுக்கொண்ட நிலை காணப்பட்டது எனலாம். சுருங்கக்கூறின், இங்கு பிரித்தானிய அமைதி (Pax Britannica) நிலவியது.

இந்தப் பின்புலத்திலேதான் ஐரோப்பாவில் இருந்து பரவிய தேசியவாதக் கருத்துகள் ஆங்கிலக் கல்வி பெற்ற மத்திய வகுப்பினரிடையே தேசிய உணர்வுகளைத் தூண்டின. இவர்களுள் சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற சிலர் நாட்டின் அரசியலிலும் அக்கறை கொள்ளத் தொடங்கினர். இவர்கள் பிரித்தானியர் ஆட்சியை எதிர்த்தவர்கள் அல்லர்; மாறாக, அதை ஏற்றுக்கொண்டவர்கள். இவர்களுள் பலர் 'விடுதலைக்குப் போராடியவர்கள்' என்று இன்று வர்ணிக்கப்படுவர். ஆனால், இவர்கள் விடுதலை நோக்கைக் கொண்டிருக்கவும் இல்லை, போராடியதும் இல்லை.

இந்தியாவில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் சமூகத்தில் சீர்திருத்தங்களைப் புகுத்துவதற்கும் ஆட்சியாளர் கொள்கைகளை விமர்சிப்பதற்கும் அறிவுத்திறனாளர் (Intellectuals) செயற்படத் தொடங்கினர். இவர்களுள் ஒருவரான தாதாபாய் நவ்ரோஜி (Dadabhai Naoroji 1825 - 1917), சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். இந்தியாவின் செல்வத்தைப் பிரித்தானியா எடுத்துச் செல்வதை விமர்சித்து இந்தியத் தேசியவாத எழுச்சிக்கு வழிவகுப்பதில் இவர் பங்குகொண்டார். இவரும் இவரைப் போன்று தேசிய உணர்வுடன் செயற்பட்ட பிற அறிவுத்திறனாளர்களும் 1885 இல் இந்திய தேசியக் காங்கிரஸை (Indian National Congress) அமைத்தனர். இவர்களுக்கு முக்கிய நோக்கமாக இருந்தது இந்திய ஆட்சியில் கூடுதலான பங்கைப் பெறுவதே. இந்தியா பிரித்தானியர் ஆட்சியில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று எவரும் குரல் எழுப்பவில்லை. இருபதாம் நூற்றாண்டு பிறந்ததும் இந்திய விடுதலை பற்றிச் சிந்திப்போர் வெளிவந்தனர். ஆங்கிலக் கல்விபெற்ற அறிவுத்திறனாளரைக் கூடுதலாகக் கொண்டிருந்த வங்காளத்தில் 1902 இல் அநுஷீலன் ஸமிதி என்ற பெயருடன் தொடக்கப்பட்ட கழகம் இந்தியாவுக்கு முழுமையான தன்னாட்சி (பூர்ண ஸ்வராஜ்) வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது. பின்னர் பிரபல யோகியாகப் பெயர்பெறும் அரவிந்தர் (Aurobindo Ghose) இக்கழகத்தைச் சேர்ந்து அரசியல் அரங்கில் ஏறினார். இக்கழகத்தில் இருந்து 1906 இல் பிரிந்து சென்றோர் ஜுகாந்தர் (Jugantar) என்ற வேறொரு கழகத்தைத் தொடக்கி விடுதலைக்காக வன்முறையை ஆதரித்தனர்.

இலங்கையிலும் 19 ஆம் நூற்றாண்டு முடிவடைந்த கட்டத்தில் அரசியல் விழிப்புணர்வுகள் வெளிப்பட்டன. இவற்றை எந்த வகையிலும் தேசியவாத உணர்வுகள் என்று கூறமுடியாது. இக்கட்டத்தில் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த எவராவது அந்நியர் ஆட்சியை எதிர்த்தோ, நாடு விடுதலை பெறவேண்டும் என்றோ குரல் எழுப்பவில்லை.

தேசிய உணர்வுகள் தோன்றுவதற்கு வாய்ப்பளிக்காத வகையில் பிரித்தானியர் ஆட்சிமுறை இலங்கையரை இனக்குழு அடிப்படையில் பிரித்து, ஒவ்வொரு இனக்குழுவுக்கும் அந்தந்தக் குழுவைச் சேர்ந்தோரே பிரதிநிதியாக இருக்கும் வழக்கத்தை உருவாக்கியிருந்தனர். இந்த வழக்கத்தில் 19 ஆம் நூற்றாண்டு முழுவதும் ஊறிப்போய் இருந்த புதிய மத்திய வகுப்பினர் இலகுவில் இன அடிப்படையிலான தேசியத்துக்குள் இறங்கினர். இப்பின்புலத்தில் இலங்கையர் தேசியவாதம் என்ற விதை துளிர்த்து வேரூன்றுவதற்கு உகந்த சூழல் இருக்கவில்லை.

எனினும், ஆங்கிலக் கல்வி கற்று வெளியுலக அரசியல் வளர்ச்சி பற்றிய அறிவைப் பெற்ற மத்திய வகுப்பினர் நாட்டின் ஆட்சியில் தமக்கும் கூடுதலான பங்கைப் பெற விரும்பினர். இதனைத் தேசியவாதமாகக் கொள்ளக்கூடாது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இளைஞனாகப் படிக்கச் சென்ற பொன்னம்பலம் அருணாசலம் (1853-1924) அப்பொழுது நடைபெற்ற இத்தாலியத் தேசிய இயக்கத்தினால் கவரப்பட்டார். இங்கிலாந்தில் தான் கண்டதுபோல இலங்கையிலும் உரிமைகளும் நிர்வாகமும் இருக்கவேண்டும் என்று விரும்பினார். இலங்கைக்குத் திரும்பி வந்தபின் தன் பிரித்தானிய நண்பர்களுடன் இது பற்றிக் கலந்துரையாடினார். அருணாசலத்தின் நெருங்கிய நண்பர்களுள் ஒருவர்

வில்லியம் டிக்பி (*William Digby* 1849 - 1904). இவர் கொழும்பில் இருந்து வெளிவந்த *Ceylon Observer* செய்தித்தாளின் துணைப் பதிப்பாசிரியராகப் பணிபுரிந்து, பின்னர் *Madras Times* இன் ஆசிரியராகச் சென்னைக்குச் சென்றார். அருணாசலத்துடன் இலங்கையின் நிலை பற்றிக் கலந்துரையாடிய டிக்பி இலங்கைக்குத் தன்னாட்சி நடத்தக்கூடிய தகைமை இருப்பதாக எண்ணி, 1877 இல் '*An Oriental Colony Ripe for Selfgovernment*' என்ற ஒரு கட்டுரையை *Calcutta Review* இல் வெளியிட்டார். இதுவே இலங்கைக்குச் சுயாட்சி தேவை என்பது தொடர்பாக எழுப்பப்பட்ட முதலாவது குரல் எனலாம்.

அக்குரலைக் கேட்ட இலங்கையர் எவரும் அது பற்றிச் சிந்தித்துச் செயலாற்ற முன்வரவில்லை. அருணாசலமும் தன் அரச வேலையில் இருந்து ஓய்வு பெறும்வரை இது தொடர்பாக முயற்சிகள் எடுக்கவில்லை. இதேகாலத்தில் இந்தியாவில் தேசிய இயக்கம் உக்கிரமத்துடன் வளர்ந்து செல்லத் தொடங்கியது. இதனை இலங்கை மத்திய வகுப்பினர் அறிந்திருந்தனர். தன் ஆங்கிலேய நண்பர் ஒருவருக்கு அருணாசலம் 1898 இல் எழுதிய கடிதத்தில், ஆங்கிலேய அரசு 'திலகர் போன்ற தேசபக்தர்களுக்குக் கொடூரம் இழைப்பது' ("*...cruel treatment of patriots like Tilak*") பற்றி எழுதியிருந்தார். அவரைப் போன்று இலங்கையில் பிற மத்திய வகுப்பினரும் இந்தியாவில் நடந்துகொண்டிருந்த தேசிய இயக்கம் பற்றி நன்கு அறிந்திருப்பர். ஆனால் அதன் எதிரொலி இலங்கையில் கேட்கப்படவில்லை. அரசியல் முன்னேற்றத்துக்கான செயற்பாடுகள் தொடர்பாக இலங்கையும் இந்தியாவும் தொடக்கத்தில் இருந்தே வெவ்வேறு வழிகளில் பயணித்தன.

## முதல் உலகப் போரின் பின்

முதல் உலகப் போர் 1918 இல் முடிவடைந்தபோது தோல்வியுற்ற பேரரசுகளில் ஒடுக்கப்பட்டிருந்த இனங்களும் நாடுகளும் தேசியவாத எழுச்சிக்கு இலக்காகின. அவ்வேளையில் அமெரிக்க ஜனாதிபதி தேசிய சுயநிர்ணயக் கோட்பாட்டை ஊக்குவித்தார். இதன் விளைவாக ஐரோப்பாவிலும் மேற்கு ஆசியாவிலும் புதிய தேசிய அமைப்புகள் தோன்றின. இந்த நிகழ்ச்சிகள் ஆசியாவிலும் செல்வாக்குச் செலுத்தின எனலாம்.

இலங்கையின் அரசியலைப் பொறுத்த மட்டில் இக்கட்டத்தில் முதல் தடவையாகத் தேசியவாதம் என்ற சொல் பயன்பாட்டுக்கு வருவதைக் காணலாம். எனினும் இதேகாலத்தில் இந்தியாவில் எழுச்சி பெற்றிருந்தது போன்ற தேசிய இயக்கம் இலங்கையில் காணப்படவில்லை. பின்னரும் இருக்கவில்லை.



**வில்லியம் டிக்பி**
Image Source - en.wikipedia.org

அரசியல் சீர்திருத்தங்களைக் கோருவதற்காக 1917 இல் *Ceylon National Association* என்ற ஒரு கழகத்தைக் கூட்டியபோதும், 1919 இல் *Ceylon National Congress* என்ற கட்சியை அருணாசலம் அமைக்க முயன்ற போதும், '*National*' என்ற சொல்லை விரும்பாதவர்களும், '*Congress*' என்ற பெயரை வைப்பதை இட்டு அஞ்சியவர்களும் இருந்தனர்.

இலங்கை அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்த மத்திய வகுப்பினர் முழுமையாகப் பிரித்தானியப் பேரரசுக்கு விசுவாசமாக இருந்தவர்கள். ஆட்சியாளர் தங்கள் மீது சந்தேகம் கொள்ளக்கூடிய வகையில் எந்த ஒரு நடவடிக்கையிலும் இவர்கள் பங்குகொள்ள விரும்பவில்லை. அரசியல் யாப்பில் சீர்திருத்தம் வேண்டும் என விரும்பியோர் நடத்திய கூட்டங்களுக்குப் பல மத்திய வகுப்பினரை வரவைப்பதே கடினமாக இருந்தது பற்றி அருணாசலம் குறிப்பிட்டுள்ளார். இவ்வேளையில் தேசிய எழுச்சி இருந்தமைக்கான அறிகுறிகளைக் காண்பதே அரிது.

## அருணாசலம் விதைத்தது

இவ்வாறான ஒரு பின்புலத்தில் ஓர் இலட்சியவாதி இலங்கையர் அனைவரையும் ஒன்று கூட்டும் நோக்குடன், இந்திய அரசியல் இயக்கத்தை ஒத்த, தேசியவாதத்தை வளர்க்க விதை ஒன்றை விதைத்தார். அது துளிர்விட்டு எழுவதற்குக்கூட மண்ணும் பசளையும் உகந்ததாக இருக்கவில்லை. மனம் உடைந்த இலட்சியவாதி தன் முயற்சியைக் கைவிட்டார். அந்த

இலட்சியவாதி அருணாசலம் ஆவார். நாட்டில் ஒருபோதும் உண்மையான இலங்கையர் தேசியவாதம் (Ceylonese Nationalism) பல்வேறு இனங்களையும் உள்ளடக்கியதாக எழவே இல்லை.

தேர்தல் மூலம் சட்ட சபைக்கு உறுப்பினரை அனுப்பும் முறை அறிமுகப்படுத்தும் வரை யாழ்ப்பாணத்தில் அரசியல் செயற்பாடுகளுக்கு வாய்ப்பு இருக்கவில்லை. பிரித்தானிய ஆளுநரே 1920 வரை ஒவ்வொரு இனத்தின் சார்பில் சட்டசபையில் பிரதிநிதியாக இருப்பவரை நியமித்தார். சில வேளைகளில் ஒரு பிரமுகர் சார்பில் மக்கள் கருத்தை (Public Opinion) ஆளுநருக்குத் தெரிவிப்பதற்காகக் கற்றோரை மட்டும் கொண்ட அரசியல் கூட்டங்கள் நடைபெற்றிருக்கலாம். அப்படியான ஒரு கூட்டத்தில் பொன்னம்பலம் இராமநாதன் சார்பில் ஆறுமுக நாவலர் பேசியிருந்தார்.

ஆளுநர் மனிங் (Governor Manning) 1920 இல் ஏற்படுத்திய சீர்திருத்தங்களுக்கு அமைய முதல்முறையாகப் பிரதேச அடிப்படையிலான தேர்தல் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வேளை குறுகிய எல்லைகளுக்குள் இயங்கும் கழகங்கள் அரசியல் செயற்பாடுகளில் கவனம் செலுத்தத் தொடங்கின.

இவற்றுள் ஒன்று யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு எழுந்த Jaffna Association. இது இலங்கைத் தமிழர் சார்பாக இயங்கிய கழகம் எனலாம். இதைப் போன்று கண்டிச் சிங்களவர் (Kandyan Sinhalese) சார்பாகக் Kandyan National Assembly என்பது அமைக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் பழைய கண்டி அரசின் எல்லைகளுக்குள் வாழ்ந்த சிங்கள மக்களைக் கண்டிச் சிங்களவர் என வேறாகப் பிரித்திருந்தனர். இம்மக்களுடைய தலைவர்களாகத் தம்மைக் கருதிய பாரம்பரியக் கண்டியர் சமூகத்தின் உயர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கண்டிச் சிங்களவர் ஒரு வேறான சிறுபான்மையினர் எனக் கோரி நின்றனர்.

இஸ்லாமிய மதத்தைத் தழுவியோராய் நாட்டின் பல்வேறு பாகங்களில் வாழ்ந்த முஸ்லிம் மக்களிடையிலும் இன விழிப்புணர்ச்சியை எழுப்பும் நோக்குடன் சில ஆங்கிலம் கற்ற தலைவர்கள் செயற்படத் தொடங்கினர். சட்ட சபையில் 1885 இல் பொன்னம்பலம் இராமநாதன், இலங்கை முஸ்லிம்கள் (Ceylon Moors) தமிழ் இனத்தவர் என்று கூறியமை இவர்கள் முயற்சிகளுக்கு வழிவகுத்த தூண்டு சக்திகளுள் ஒன்றாக அமைந்தது எனலாம்.

முஸ்லிம் சமூகத்தினரை ஒருங்கிணைத்து வேறான ஓர் இனக்குழுவாக அறிவிப்பதற்குப் பெரிதும் முயன்ற தலைவர்களுள் இருவர் முக்கியமானவர்கள். ஒருவர் முகம்மது காசிம் சித்தி லெப்பை (M.C. Siddi Lebbe 1838-1898). மற்றவர் அப்துல் அஸீஸ் (I.L.M. Abdul Azeez 1867-1915). இலங்கை முஸ்லிம்கள் அராபிய வணிகர்களின் வழித்தோன்றல்கள் என வாதாடிய சித்தி லெப்பை 1882 இல் முஸ்லிம் நேசன் என்ற ஒரு வார இதழை வெளியிடத் தொடங்கி, இதன்மூலம் முஸ்லிம் மக்களிடையே விழிப்புணர்ச்சியை



சேர். பொன். அருணாசலம்

Image Source - island.lk

ஏற்படுத்தினார். அப்துல் அஸீஸ் 1900 இல் Moors Union என்ற இஸ்லாமியர் கழகத்தை அமைத்து, Muslim Guardian என்ற இதழையும் வெளியிடத் தொடங்கினார். பின்னர், 1910 இல், Young Men's Muslim Association என்ற இளைஞர் கழகம் அமைக்கப்படுவதையும், இதைத் தொடர்ந்து 1913 இல் அனைத்து இலங்கை முஸ்லிம்களையும் ஒன்று கூட்டும் நோக்குடன் All Ceylon Moors' Association தொடக்கப்படுவதையும் காணலாம்.

மாறும் அரசியல் சூழலில் தம் இனக்குழுவையும் ஒற்றுமைப்படுத்தி அதன் நலன்களைப் பேணுவதற்கு ஐரோப்பியர் வழிவந்த குடியினரும் எண்ணத் தொடங்கினர்.

ஐரோப்பியர் இலங்கையில் குடியமரத் தொடங்கியது 16 ஆம் நூற்றாண்டில் ஆகும். முதலில் வந்த ஐரோப்பியராகிய போர்த்துக்கீசர் தங்கள் நாட்டுப் பெண்களை ஆசியாவுக்குக் கூட்டிவரவில்லை. போர்த்துக்கீசப் போராளிகளும் பிறரும் இலங்கைப்

பெண்களை மணம் முடித்துக் குடும்பம் நடத்தத் தயங்கவில்லை. ஐரோப்பிய ஏகாதிபத்தியம் பரவிய முதல் கட்டத்தில், போர்த்துக்கீசரைப் பொறுத்தமட்டில், நிற வேற்றுமை முக்கியத்துவம் பெறவில்லை; இனவாதம் பின்போல் எழவில்லை. மாறாக, போர்த்துக்கீச மன்னன் தன் அதிகாரிகள் ஆண்ட ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க இடங்களில் ஆளப்பட்ட மக்களுடன் இனக்கலப்பை (Miscegenation) ஊக்குவித்து, போர்த்துக்கீசப் பண்பாட்டுக்குள் ஆளப்பட்டோரைச் சேர்த்துக்கொள்ளும் திட்டத்தை ஆதரித்தான். இந்த வகையில் தொடக்ககாலப் போர்த்துக்கீச ஏகாதிபத்தியம் பிற ஐரோப்பிய ஆட்சிமுறையில் இருந்து வேறுபடுகின்றது.

இத்தகைய கொள்கையின் பலனாகத் தனித்துவமான அடையாளம் உள்ள போர்த்துக்கீச இனக்குழு ஒன்று இலங்கையில் உருவாகவில்லை எனலாம். போர்த்துக்கீச மொழி பேசிய, கத்தோலிக்க மதத்தைத் தழுவிய இனக்குழு ஒன்று ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரை இருந்தது. யாழ்ப்பாணத்தில் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்த இனக்குழுவைச் சேர்ந்தோர் பலர் இருந்தனர் என அமெரிக்க மிஷனரிமார் எழுதிவைத்துள்ளனர். இத்தகைய குழு ஒன்று 20 ஆம் நூற்றாண்டில் புத்தளத்தில் (சிறாம்பியடி என்னும் இடத்தில்) இருந்தமை பற்றி அறிகின்றோம். இக்குழு போர்த்துக்கீசர் கூட்டிவந்த ஆபிரிக்கரின் வழித்தோன்றல்களையும் கொண்டிருந்தது.

போர்த்துக்கீசருக்குப் பின்வந்த ஒல்லாந்தர் கடைப்பிடித்த கொள்கை நிறவேற்றுமை, இனவாதம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருந்தது. நிர்வாகத்தில் பணிபுரிய வந்த ஒல்லாந்த இளைஞர்கள் மணம் முடிப்பதற்கு ஒல்லாந்தப் பெண்கள் தாய்நாட்டில் இருந்து வந்தனர். இனக்கலப்புக்கு இடம் அளிக்கப்படவில்லை. இதனால் ஒரு தனியான ஒல்லாந்த இனக்குழு இலங்கையில் உருவாகியது.

இக்குழுவினர் தம்மை Dutch Burgher என அழைத்தனர். போர்த்துக்கீசருக்குப் போல இவர்களுக்கும் தமிழில் பறங்கியர் என்ற பெயர் பொது வழக்கில் உள்ளது. பிற இனக்குழுக்களைப் போன்று 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவர்களும் தம் தனித்துவத்தைப் பேணி உரிமைகளைப் பெறுவதற்காக 1908 இல் Dutch Burgher Union என்ற கழகத்தை அமைத்தனர். இவர்களுடைய பிரதிநிதியாகச் சட்ட சபையில் 1833 இல் இருந்தே ஒருவர் நியமிக்கப்பட்டு வந்தமை கவனிக்கத்தக்கது.

இவ்வாறாக, 1920 களில் அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வேளையில், இலங்கையில் ஒரு பல்லினச் சமூகம் காணப்பட்டது. பல்வகைப்பட்ட இனக்குழுக்கள் இருப்பது இலங்கை வரலாற்றுக்குப் புதியது அல்ல. வரலாற்றின் தொடக்ககாலத்தில் இத்தீவில் பல்வேறு இனக்குழுக்கள் இருந்தன.

இப்படியான இனக்குழுக்கள் காலப்போக்கில் பண்பாட்டு மேலாதிக்கம் பெற்ற, முன்னேற்றமான இனக்குழுவின் செல்வாக்குக்கு உட்பட்டுத் தம் தனி அடையாளத்தை இழந்து அக்குழுவினுள் மறைந்துவிடுவது வரலாற்றின் போக்கு. இலங்கையில் 20 ஆம் நூற்றாண்டிலும் இதனைக் காணலாம். உலகின் வேறு பாகங்களிலும் இதுவே வரலாற்றின் போக்கு. நவீனகாலத் தேசியவாதம் இதற்குத் தடையாக இருக்கின்றது.

இந்த வரலாற்றின் போக்குக்கு ஆங்கிலேயர் இலங்கையில் கையாண்ட கொள்கையும் தடையாக அமைந்தது. ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கியபோது நாட்டில் இரு மொழிகளைப் பேசுவோர் வாழ்வதைக் கண்டு, இவ்விரு மொழிக்குழுக்களின் விவகாரங்கள் தொடர்பாகத் தகவல் பெறவும் ஆலோசனை செய்யவும் மொழிபெயர்ப்புக் கடமைகளுக்கும் பாரம்பரிய உயர் குழாத்தைச் சேர்ந்த சிங்கள முதலியார் ஒருவரையும் தமிழ் முதலியார் ஒருவரையும் ஆளுநர் நியமித்தார். பின்னர், 1833 இல் ஆளுநருக்கு உதவியாக ஒரு சட்டசபை அமைக்கப்பட்டபோது ஒரு சிங்களவர், ஒரு தமிழர், ஒல்லாந்தர் வழிவந்த Burgher ஒருவர் ஆகியோர் உறுப்பினர்களாக நியமனம் பெற்றனர். இவ்வாறு நாட்டின் இனக்குழுக்களை வேறாகப் பிரித்து ஆட்சி நடத்திய பிரித்தானியர், இத்தகைய இன வேறுபாட்டு உணர்ச்சிகள் மேலும் வளரத் தொடங்க, 1889 இல் ஒரு முஸ்லிம் உறுப்பினருடன், ஒரு சிங்கள உறுப்பினருக்குப் பதிலாக, கண்டிச் சிங்களவருக்கு ஒருவரும் கீழ்நாட்டுச் சிங்களவருக்கு ஒருவரும் என உறுப்பினர்களை நியமித்தனர்.

இவ்வாறு ஆங்கிலேயர் கடைப்பிடித்த கொள்கை எல்லா இனக்குழுக்களும் இலங்கையராக ஒன்று சேர்ந்து செயற்படுவதற்குச் சாதகமாக இருக்கவில்லை. இப்பின்புலத்தில், அரசியல் சீர்திருத்தங்கள் எதிர்பார்க்கப்பட்ட 20 ஆம் நூற்றாண்டின் தொடக்க தசாப்தங்களில், ஒவ்வொரு இனக்குழுவும் தனித்தனியே கழகம் அமைத்து அரசியல் சலுகைகளைப் பெற முயன்றதில் வியப்பில்லை. இத்தகைய சூழ்நிலையில், 1919 இல், இலங்கைத்




**சித்தி லெவ்வை**

Image Source - en.wikipedia.org

தேசிய காங்கிரஸை அருணாசலம் தொடக்கிவைத்து, அனைத்து இலங்கையரையும் இணைத்துச் செயல்படும் தேசியவாதத்தை வளர்க்க முயன்றார். அவர் நட்ட இலங்கையர் தேசியவாதம் என்ற விதை துளிர்விட்டுச் செழிப்பாக வளர்வதற்கு வாய்ப்பே இருக்கவில்லை.

முதலாவதாக, அருணாசலத்தின் முயற்சி மிகவும் காலதாமதமாகி வந்தது. இலங்கையர் சமூகத்தின் ஒவ்வொரு இனக்குழுவும் 20 ஆம் நூற்றாண்டு உதயமாகிய வேளை தொட்டு, தன்தன் நலனைப் பேணுவதில் கவனம் செலுத்தத் தொடங்கிய பின்னரே 'நாம் எல்லோரும் இலங்கையர்' என்ற எண்ணக்கரு முன்வைக்கப்பட்டது. இதனை எந்த ஒரு குழுவும் ஆவலுடன் தழுவிக்கொள்ள முன்வந்ததாகத் தெரியவில்லை.

இரண்டாவதாக, இந்தியாவில் அந்நியர் ஆட்சிக்கு எதிராக மத்திய வகுப்புத் தலைவர்கள் நடத்திக்கொண்டிருந்த இயக்கத்தை ஒத்த வகையில் இலங்கையிலும் தேசிய இயக்கம் நடத்த மத்திய வகுப்பின் தலைவர்கள் தயாராக இருக்கவில்லை. ஆட்சியாளரைப் பகைத்துக் கொள்ளாமல், கூடிய சலுகைகளைத் தமக்குப் பெறுவதே இவர்கள் நோக்கமாக அமைந்தது. மூன்றாவதாக, ஒரு தேசிய இயக்கத்துக்கு இன்றியமையாதவாறு தேவைப்படும் கோட்பாடாகிய 'சமத்துவம்' இலங்கையர் தேசியவாதத்தில் இருக்கவில்லை. சாதி வேறுபாடுகள், வடக்கிலும் தெற்கிலும், இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்ட காலம் அது. அரசியல் சீர்திருத்தம் கோரிய மத்திய வகுப்பினர் சமூகத்தின் கீழ்மட்டத்தில் இருந்தோரையும் தழுவித் தேசிய இயக்கம் நடத்தத் தயாராக இருந்தனர் என்று கூறமுடியாது. இதேவேளையில் இந்தியாவில் காந்தி, சுப்பிரமணிய பாரதியார் போன்றோர் சாதிப் பாகுபாட்டை வன்மையாகக் கண்டித்து, சமூகச் சமத்துவத்தை வலியுறுத்தி இயக்கம் நடத்தினர்.

நாலாவதாக, ஒரு தேசியவாத இயக்கத்துக்குத் தேவைப்பட்ட 'Leader' ஒருவர் இருக்கவில்லை. அருணாசலம் காங்கிரஸின் தலைவராக இருந்தாலும் தேசிய இயக்கத்தின் 'Leader' ஆகச் செயலாற்றத் தவறினார் என்றே சொல்லவேண்டும்.

ஆங்கிலச் சொல்லாகிய 'Leader' என்பதற்கு அதன் உட்பொருளைக் கொண்ட பொருத்தமான தமிழ்ச் சொல் ஒன்றை என்னால் பெற முடியவில்லை. பொதுவாக இதற்குத் 'தலைவர்' என்ற சொல்லைப் பயன்படுத்துவர். இது பொருத்தம் அற்றது. 'Leader' என்பது 'Lead' என்ற வினைச்சொல்லில் இருந்து பெறப்படுவது. 'முன்நின்று வழிகாட்டிச் செல்லவேண்டிய இடத்துக்கு அழைத்துச் செல்பவர்' என்ற பொருளில் இச்சொல் வரும்.

இதேகாலத்தில் இந்திய நிலைமை வேறாக இருந்தது. அங்கு பல மத்திய வகுப்பினர் தம் தொழிலையும் கைவிட்டு, பாரதம் என்ற ஒரு நாட்டைத் தம் நாடாக மக்களை ஏற்கவைத்து, அந்த நாட்டின் விடுதலைக்காக அவர்களைச் சமூக வேறுபாடுகள் இன்றி ஒன்றுபடுத்தி, 'ஸ்வராஜ்ய' என்ற இலக்கை நோக்கி வழிநடத்திக் கூட்டிச்செல்ல முன்வந்திருந்தனர். அவர்களுள் முதன்மையானவர் சாதாரண மக்களுடன் ஒன்று சேரும் வகையில் மத்திய வகுப்பினர் உடையைக் களைந்து எறிந்துவிட்டு, நாட்டுப்புற வேளாண்மகன் உடையை உடுத்து, அனைவரையும் கைராட்டினம் கொண்டு செய்யப்பட்ட கதராடையை உடுக்க ஊக்குவித்தார். இலங்கையில் மத்திய வகுப்புத் தலைவர்கள் பெரும்பாலும் ஆட்சியாளரைப் போன்று ஐரோப்பிய உடை உடுத்து மேலைத்தேசப் பண்பாட்டில் மூழ்கி இருந்தனர். அருணாசலம் தென்னிந்தியாவில் இருந்து பெறப்பட்ட உடையை (அது யாழ்ப்பாணத்தவர் உடை அல்ல) அணிந்து தன்னைப் பிற இலங்கையரில் இருந்து வேறுபடுத்தி நின்றார். பிற தலைவர்களுடன் பிரச்சினை ஒன்று தோன்றியதும், தேசிய காங்கிரஸை விட்டு விலகிச் சென்றுவிட்டார். அருணாசலம் விதைத்த இலங்கையர் தேசியவாதம் துளிர்விட்டு எழுமுன் மறைந்துவிட்டது.



● எம். எம். ஜெயசீலன்

எம்.எம். ஜெயசீலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர், இந்தியப் பொதுநலவாய நாடுகளின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (தஞ்சாவூர்) கலாநிதிப் பட்ட ஆய்வைச் சமர்ப்பித்துள்ளார். கல்வெட்டியல், பண்பாட்டு வரலாறு, இலக்கிய விமர்சனம், நவீன இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வமுள்ள இவர், அத்துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் சமர்ப்பித்து வருவதுடன் ஆய்விதழ்களிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்தும் எழுதிவருகிறார்.

# கதிர்காமம்:
## தமிழ் நாட்டவர்க்கான யாத்திரை வழிகாட்டி

மலையகத் தமிழரின் சமூக, அரசியல் விடுதலைக்காகத் தன் வாழ்வின் பெரும்பாகத்தை அர்ப்பணித்த நடேசய்யர் குறித்த ஆய்வுகள் அவரது பங்களிப்பை அறிமுகப்படுத்தல், அவற்றை மதிப்பிடுதல் என்ற தளங்களில் முன்னோடி முயற்சிகளாக விளங்குகின்றன. இருந்தபோதிலும் அவை குறிப்பிட்ட சில மட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளன. நடேசய்யரின் மூல ஆவணங்கள் பல கிடைக்கப்பெறாத காலத்தில், கிடைக்கப்பெற்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்டும், சில புதிய மூலங்களைக் கண்டறிந்தும் அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் அவற்றுள் நடேசய்யரின் மொத்தப் பங்களிப்புகளும், அவரின் கருத்தியல் தளத்தில் ஏற்பட்டுவந்த மாற்றங்களும் இன்னும் முழுமையாக வெளிப்படுத்தப்படாத நிலையே தொடர்கிறது. அந்தவகையில், ஏற்கனவே கிடைக்கப்பட்டுள்ள நூல்களையும் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள நூல்களையும் மதிப்பிடுவதன் மூலம் நடேசய்யரின் பங்களிப்புகளையும், அவர் காலத்து சமூக, அரசியல் அசைவையும் கண்டுகொள்ளவும் நடேசய்யர் பற்றிய ஆய்வுகளில் நிலவும் இடைவெளியை நிரப்பவும் எதிர்கால ஆய்வுகளுக்கான திசைகாட்டல்களை வழங்கவும் 'கணக்குப் பதிவு நூல் முதல் கதிர்காமம் வரை' எனும் இத் தொடர் எழுதப்படுகிறது.

இலங்கையின் புராதன முருகன் ஆலயங்களுள் ஒன்றான கதிர்காமம் சைவர்களதும் பௌத்தர்களதும் பிரதான யாத்திரைத்தலமாக விளங்கி வருகின்றது. நாடு முழுவதுமிருந்து முருக பக்தர்கள் கதிர்காமத்துக்கு யாத்திரை செல்கின்றனர். இந்த யாத்திரையும் யாத்திரைக் காலத்து நடைமுறைகளும் இலங்கையின் கலாசார வாழ்வின் முக்கியமான கூறுகளாக விளங்குவதுடன் ஒவ்வொரு இனத்தினதும் பிராந்தியத்தினதும் வழமைகளுக்கு ஏற்ப, தனித்துவம்மிக்க உபபண்பாட்டுக் கூறுகளும் உருவாக்கம் பெற்றுள்ளன.

கதிர்காமத்தோடும் கதிர்காம யாத்திரையோடும் தொடர்புபட்ட வகையில் ஆலய உருவாக்கங்கள், ஆலய நடைமுறைகள் முதலானவை சைவர்களிடையேயும் பௌத்தர்களிடையேயும் ஏற்பட்டுள்ளன. சைவமரபில் சின்னக்கதிர்காமம், உபயகதிர்காமம் முதலிய பெயர்களில் முருகனாலயங்கள் தோற்றம்பெற்றுள்ளன. கதிர்காம யாத்திரை செல்லும் பாதையையொட்டியுள்ள செல்வச்சந்நிதி, வெருகல், மண்டூர், திருக்கோவில், உகந்தை முதலான முருகன் ஆலயங்கள் அந்த யாத்திரையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன.

சிங்களப் பௌத்த மரபில் முருகன், கதிர்காமத்தில் வீற்றிருக்கும் கதிர்காமக் கடவுள் (கத்தரகம தெவியோ) என்ற பெயரில் அழைக்கப்படுகின்றார். நாட்டினுடைய எப்பாகத்திலும் சிங்களவர்கள் முருகனை, கதிர்காமக் கடவுள் (கத்தரகம தெவியோ) என்றே அழைக்கின்றனர். சிங்களப் பௌத்தமரபில் வழிபடப்படுகின்ற சில கடவுளர்களுக்கும் கதிர்காமக் கந்தனுக்கும் இடையேயான தொடர்பினை வெளிப்படுத்தும் கதைமரபுகள் பல உள்ளன. எடுத்துக்காட்டாக, சிங்களப் பௌத்தர்களிடையே கண்டி இராசதானிக் காலத்தில் தோற்றம்பெற்ற கடவுளான, அலுத்நுவர கடவுள் அல்லது தடிமுண்ட சுவாமி பற்றிய ஐதீகங்கள் கதிர்காமக் கந்தனுடன் இணைந்ததாக விளங்குவதைக் கூறலாம். அலுத்நுவர கடவுள் கந்தகுமாரனின் படைவீரன் என்றும் விக்கிரமபாகு கந்தகுமாரனுக்கு அம்பக்கேயில் ஆலயம் அமைத்து வழிபட்டபோது அந்த ஆலயத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை, கந்தகுமாரன் அலுத்நுவர கடவுளிடம் ஒப்படைத்தார் என்றும் குறிப்பிடப்படுகின்றது. கண்டிப் பிரதேசத்தில் கதிர்காமக் கடவுளுக்கான கோயில்களில் கீழ் ஆலயம் (பள்ளே தேவால) எனத் தடிமுண்ட சுவாமிக்கான ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன (தர்மதாஸ, துன்தெனிய, 1994: 129). அத்துடன் விகாரைகள் சிலவற்றிலும் அலுத்நுவர கடவுளுக்கான தனியான சந்நிதிகள் அமைக்கப்பட்டுள்ளன. கதிர்காமக் கொடியேற்றத்தின்போதே அலுத்நுவர கடவுளின் உற்சவம் ஆரம்பிக்கிறது.

கதிர்காமத்துடனான முஸ்லிம்களின் தொடர்பும் தனித்துவம் மிக்கதாகும். அங்கு அமைந்துள்ள இஸ்லாமியச் சமாதியை வழிபட முஸ்லிம்கள் செல்வது வழமை. இலங்கையில் மேலோங்கிய இஸ்லாமியத் தூய்மைவாத நடவடிக்கைகளால், அடக்க ஸ்தலங்களை வழிபடுகின்ற தர்க்கா வழிபாடு அருகிவந்தாலும் இன்றும் சிலர் கதிர்காமத்துக்குச் சென்றுவருவதைக் காணமுடிகிறது.

கதிர்காமத்தின் யாத்திரை வழிபாடும் அங்கு கோயில் கொண்டுள்ள கந்தனின் அருட்திறம் மீதான நம்பிக்கையும் கதிர்காமத்தின் புகழைக் கடல்கடந்தும் பரவலாக்கம் செய்தன எனலாம். அதனொரு வெளிப்பாடாகவே தென்னிந்தியாவிலிருந்து கதிர்காமத்துக்கு யாத்திரை மேற்கொள்வது நீண்டகாலமாக இடம்பெற்றுவருகின்றது. யாப்பருங்கலக் காரிகை விருத்தியுரை, புகழேந்திப் புலவர் பெயரிலான நாவலர் சரிதை என்பவற்றில் இடம்பெறும் கதிர்காமம் பற்றிய குறிப்புகளும், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழில் இடம்பெறும் கதிர்காமத்தின் மீதான திருப்புகழ்களும் இதற்குச் சிறந்த சான்றாகின்றன (விரிவுக்கு: இரகுபரன்: 2018). கந்தசஷ்டி விரதத்தின் பிரதான பாராயண நூலான கந்தர் சஷ்டிக் கவசத்தில், முருகன் உறையும் பதிகள் குறித்துக் குறிப்பிடும்போது பழனி, ஆவினன்குடி, செந்தின்மாமலை, சமராபுரி ஆகிய தலங்களுடன் கதிர்காமத்தையும் உள்ளடக்கியிருப்பது, தமிழ்நாட்டுச் சூழலில் கதிர்காமம் பெற்ற செல்வாக்கினையே வெளிப்படுத்தி நிற்கிறது. இந்தச் செல்வாக்குக்கான காரணத்தை இரகுபரன் அவர்கள், "காலத்துக்குக் காலம் தென்னிந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் வாணிபம் செய்த வணிகக் கணத்தவர்களாலேயே கதிர்காமக் கந்தன் மேலான நம்பிக்கை கடல்கடந்த நிலையிற் பரவியது எனலாம்.

கண்டி இராச்சியத்தைத் தென்னிந்திய வம்சாவளி அரசர்கள் ஆண்ட காலத்தில் கதிர்காமக் கந்தனின் கடல்கடந்த புகழ் மேலும் அதிகரித்தது போலும். இன்றுவரை தமிழகத்துச் சாதாரண மக்களின் வாயில், 'கண்டிக் கதிர்காமக் கந்தா' என்ற பரவசமான விளிப்பினைக் கேட்கக்கூடியதாக உள்ளமை, அந்த உண்மையையே உணர்த்துகிறது எனலாம்" (மேலது: XVI) எனத் தொகுத்துரைத்துள்ளார்.



Image Source : noolaham.net

தமிழ்நாட்டில் 'கண்டிக் கதிர்காமம்' என்ற வழக்கு இன்றும் உயிர்ப்புடன் இருக்கிறது. பலரும் கண்டியில் தான் கதிர்காமம் இருக்கிறது என்ற கருத்தினைக் கொண்டுள்ளனர். இந்தக் கண்டிக் கதிர்காமம் என்ற வழக்கு எவ்வாறு ஏற்பட்டது என்பது ஆராயப்பட வேண்டியதாகும். ஏனெனில், ஊர்ப்பெயர்களும் ஊர்ப்பெயர்களில் இடம்பெறும் முன் - பின் ஒட்டுகளும் சமூக வரலாற்றுச் செய்திகளைக் கொண்டுள்ளன. பௌதீகச் சூழல், உற்பத்தித் தன்மை, குடியேற்றம், குடியேற்றங்களில் ஏற்படும் மாற்றங்கள், ஊர்களின் தோற்றத் தொன்மங்கள் போன்றவற்றுடன் நேரடி உறவு கொண்டுள்ள ஊர்ப்பெயர்கள் சமூக மாற்றங்கள், அரசியல் ஆக்கிரமிப்புகள் முதலானவற்றால் திரிபுகளுக்கும் மாற்றங்களுக்கும் உள்ளானாலும் அப்பெயர்களின் எச்சங்களையும் ஏனைய ஆவணங்களில் கிடைக்கின்ற முன்னையகாலப் பெயர்களையும் அடிப்படையாகக்கொண்டு குறிப்பிட்ட ஊரினுடைய சமூக வரலாற்றுச் செய்திகளை மீட்டெடுக்கலாம். அவ்வகையில் கதிர்காமத்தைக் குறிக்க வழங்கப்படுகின்ற 'கண்டிக் கதிர்காமம்' என்ற வழக்கும் வரலாற்றுப் பொருண்மைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

ஒரு தொடராக இணைந்துள்ள கண்டியும் கதிர்காமமும் நேரடித் தொடர்பற்ற வெவ்வேறு பிரதேசங்களாகும். இலங்கையின் ஊவா மாகாணத்தின் தென்கோடியில் கதிர்காமமும் மத்திய மாகாணத்தின் நடுவில் கண்டியும் அமைந்துள்ளன. இரு பிராந்தியங்களுக்கும் இடையே 200 கிலோமீற்றருக்கு மேற்பட்ட தூர இடைவெளி உள்ளது. அவ்வாறு நீண்ட தூரத்தில், வெவ்வேறு பிரதேசங்களில் கண்டியும் கதிர்காமமும் அமைந்திருக்க, 'கண்டிக் கதிர்காமம்' என்ற இணைப்பு எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து தீர்க்கமான முடிவுகள் எவையும் இதுவரை எட்டப்படவில்லை.

கண்டிக் கதிர்காமம் என்ற விளிப்பு, இலங்கைத் தமிழர்களிடம் வழக்கில் இருப்பதாகத் தெரியவில்லை. சிறுவாரியாக மலையகத் தமிழர்களிடம் அவ்வழக்குப் பயன்பாட்டில் உள்ளது. அதுவும் பொது உரையாடல்களில் இல்லை. மலையகத்தில் தோன்றிய முருக பக்திப் பாடல்களிலேயே 'கண்டிக் கதிர்காம வேலோனே' என்ற பரவச வெளிப்பாட்டைக் காணமுடிகின்றது. தமிழ்நாட்டில் தான் 'கண்டிக் கதிர்காமம்' என்ற வழக்கு இன்றும் நிலவி வருகிறது.

தமிழ்நாட்டில் கிடைக்கின்ற கதிர்காமத்துடன் தொடர்புடைய பழைய ஆவணங்களில் கண்டி குறித்த எந்தப் பதிவும் இல்லை. கண்டியூர், கண்டியத்தேவன் முதலிய சொற்கள் கல்வெட்டுகளிலும் ஏனைய நூல்களிலும் இடம்பெற்றுள்ளபோதும் அவை இலங்கையின் கண்டியையும் கதிர்காமத்தையும் இணைப்பதற்கான எவ்வித இழைகளையும் கொண்டில்லை. இலங்கையில் கிடைக்கின்ற கதிர்காமம் குறித்த தொடக்ககால ஆவணங்கள் எவற்றிலும் கதிர்காமத்தையும் கண்டியையும் இணைத்துக்கூறும் பதிவுகள் இல்லை. அதனால் 'கண்டிக் கதிர்காமம்' என்ற தொடர் தமிழகம், கண்டி, கதிர்காமம் ஆகியவற்றுக்கு இடையிலான முக்கோணத் தொடர்பினால் விளைந்திருக்க வேண்டும்.

கண்டியையும் கதிர்காமத்தையும் இணைத்த குறிப்பு, திருப்புகழில் இடம்பெற்றுள்ளது. திருப்புகழின் 13 ஆம் பாடலில் 'செந்திலங் கண்டிக் கதிர்வேலா' எனத் திருச்செந்தூரிலும், அழகிய கண்டியிலும் ஒளிவீசும் வேலோடு விளங்குபவனே என்று முருகனைப் போற்றுகின்றார், அருணகிரிநாதர். இங்கு 'கதிர்வேலா' என்பதற்குக் 'கதிர்காமா' என்ற பாடவேறுபாடு உள்ளதாகக் கூறுவர். கண்டியையும் கதிர்காமத்தையும் இணைக்கும் காலத்தால் பழைய பதிவாக இதனைக் கொள்ளலாம்.

அருணகிரிநாதருக்குப்பின் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலப்பகுதியில் தோன்றிய இலக்கியப் பதிவுகளில் 'கண்டிக் கதிர்காமம்' என்ற பதிவு பரவலாக இடம்பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாக, 1914 ஆம் ஆண்டு வெளிவந்துள்ள 'கதிர்காம மாலையில்', 'கண்டி வளநாடாளும் கதிர்காம வேலோனே' (கோபால் நாயக்கர், 1914: 4) என்ற குறிப்பு உள்ளது. 'கண்டிக் கதிர்காம வேலவன் மாலை' என்ற பெயரில் சுவடியொன்று கிடைக்கப்பெற்றுள்ளது. அதில், கண்டிவள நாடான் கதிர்காம வேலோனே, வள்ளி பங்காளா கண்ணஞ்சேர் கண்டிக் கதிர்காம

வேலோனே, கட்டழகா கண்டிக் கதிர்காம வேலோனே (http://kovaimanitamilmanuscripttology.blogspot.com/2018/05/blogpost_21.html) எனப் பல இடங்களில் கதிர்காமம் கண்டியுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கதிர்காம மாலை, கதிர்காமக் கும்மி என வெளிவந்துள்ள பல நூல்களில் கண்டியையும் கதிர்காமத்தையும் இணைத்த பதிவுகள் இடம்பெற்றுள்ளன. இந்த இணைந்த வழக்கு உருவானதற்கு ஏதேனும் காரணங்கள் இருந்திருக்க வேண்டும். வெறுமனே எதுகை, மோனை சந்த ஒத்திசைவுக்காக அவ்வாறான இணைப்புத் தோன்றியிருக்க முடியாது என்பதனை ஊர்ப்பெயர் குறித்த ஆய்வுகள் காட்டுகின்றன.

கண்டிக் கதிர்காமம் என்ற வழக்கின் உருவாக்கத்துக்கு, கண்டி இராசதானியின் எல்லைக்குட்பட்டதாகக் கதிர்காமம் விளங்கியமை முதன்மைக் காரணியாக விளங்கியுள்ளது எனலாம். சீதாவக்கை இராசதானியில் 1581 ஆம் ஆண்டு ஆட்சிப்பீடமேறிய முதலாம் இராஜசிங்கன் கண்டியைக் கைப்பற்றி தன் ஆட்சியின்கீழ் கொண்டுவந்ததோடு கதிர்காமத்துக்கும் பல திருப்பணிகளைச் செய்துள்ளான். அவனது காலத்திலேயே முத்துலிங்கசுவாமி என்று சொல்லப்படுகின்ற கல்யாணகிரி, சங்கராச்சாரியார் மடத்திலிருந்து கதிர்காமம் வந்து, இராஜசிங்கனின் துணையுடன் பல திருப்பணிகளைக் கதிர்காமத்தில் மேற்கொண்டு, முறையான நிர்வாக முறைமையொன்றினைக் கட்டியெழுப்பியதாகக் கருதப்படுகின்றது. அருணகிரிநாதர் அக்காலத்திலேயே கதிர்காமத்துக்கு வந்து, கதிர்காமக் கந்தனை நேரே தரிசித்து, கதிர்காமத் திருப்புகழ்களைப் பாடியதாக நம்பப்படுகின்றது (குமாரசுவாமி: 1935). இப்பின்புலமே அருணகிரிநாதர் கண்டியையும் கதிர்காமத்தையும் இணைப்பதற்கான பின்புலமாக விளங்கியுள்ளது எனலாம். அவ்வாறு உருவான அடையாளம், கண்டி இராசதானியின் ஆட்சிப்பொறுப்பு தென்னிந்திய வம்சாவளி நாயக்கர்களுக்கு உட்பட்டமையால் மேலும் அழுத்தம் பெற்றுள்ளது. கண்டியை ஆண்ட நாயக்க மன்னர்களுக்கும் கதிர்காமத்துக்கும் இடையே நெருக்கமான உறவிருந்திருக்கிறது. கண்டி ராசன் ஒப்பாரி, கண்டி ராஜன் கதை, கண்டிராஜா நாடகம் முதலிய நூல்கள் அதற்குச் சான்றாக உள்ளன. கண்டியின் இறுதி மன்னனான ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனை ஆங்கிலேயர் கைதுசெய்யும் வரை கதிர்காமத்தின் நிர்வாகப் பொறுப்பு தமிழர்களிடமே இருந்துள்ளது. அவனின் கைதுடன் சிங்களவர்கள் அந்த நிர்வாகப் பொறுப்பினைப் பலவந்தமாகப் பிடுங்கியுள்ளனர். பின்னர், பிரித்தானியக் காலனிய



Copy right Govt. Tourist Bureau

கிரிவிகாரை டகோபாவும் — கதிர்காமம் போகும்பாதையும்



Copy right Govt. Tourist Bureau

கதிர்காம க்ஷேத்திரத்தில் காவடி எடுக்கும் பக்தர்

Image Source : noolaham.net

அரசு அதனை மீண்டும் தமிழர்களுக்கே பெற்றுக்கொடுத்துள்ளது. என்றாலும் அவ்வழமை பின்னர் தொடரவில்லை. மேற்கூறியவாறான கண்டி அரசுக்கும் கதிர்காமத்துக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான தொடர்புகள், கண்டிக் கதிர்காமம் என்ற வழக்கின் உருவாக்கத்திற்குப் பின்புலமாக அமைந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

கண்டி இராசதானிக் காலத்தில் கண்டிக் கதிர்காமம் என்ற வழக்குத் தோன்றியிருந்தாலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே அவ்வழக்குப் பரவலான பயன்பாட்டுக்கு வந்துள்ளது. இதற்குப் பெருந்தோட்டத்துறையின் உருவாக்கமும் அதனையொட்டிய நிகழ்வுகளும் அடிப்படையாக அமைந்தன எனலாம். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பெருந்தோட்டத்துறை உருவாக்கம் பெற்றபோது இலங்கையில் கண்டியை மையப்படுத்தியே உருவாக்கப்பட்டது. அப் பெருந்தோட்டத்துறையில் வேலை செய்வதற்காகத் தென்னிந்தியாவிலிருந்து அதிகமான உழைப்பாளர்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர். தென்னிந்தியாவில்

கதிர்காமம் பெற்றிருந்த செல்வாக்கின் காரணமாக, பெருந்தோட்டத் தொழிலுக்காக வந்த தொழிலாளர்கள் கதிர்காமத்துக்கு யாத்திரை செல்வதைத் தம் வாழ்வில் பெரும்பேறாகக் கொண்டிருந்துள்ளனர். அதன் தொடர்ச்சியை இன்றுவரை காணக்கூடியதாக உள்ளது. அத்துடன், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பெரிய வணிக நகராகக் கொழும்பு உருப்பெற்றபோது அங்கு தென்னிந்திய வணிகர்கள் வணிக நடவடிக்கைகளில் பரவலாக ஈடுபட்டுள்ளனர். அவர்களும் கதிர்காம யாத்திரைக்கு முதன்மையளித்துள்ளனர். அதனால், தென்னிந்தியர்களுக்கும் கதிர்காமத்துக்குமான நெருக்கமான உறவு அதிக வலுப்பெற்றுள்ளது.

பெருந்தோட்டத்துறை உருவாக்கத்துடன் தென்னிந்தியத் தமிழரிடத்திலும் தென்னிந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து இலங்கை வந்தவர்களிடத்திலும் 'கண்டி, கண்டிச்சீமை' ஆகிய இடப்பெயர்களினால் பெருந்தோட்டங்களையும், பெருந்தோட்ட வாழ்வியலையும், சில நேரங்களில் இலங்கையையும் சுட்டும் வழக்கம் நிலவியுள்ளது. தொடக்க காலத்தில் பெருந்தோட்டங்கள் கண்டியையொட்டிய பகுதிகளில் உருவாக்கப்பட்டமையும், பெருந்தோட்டங்கள் அமைக்கப்பட்ட பிராந்தியங்களின் பெருநகரமாகக் கண்டி மாத்திரமே விளங்கியமையும் இதற்குக் காரணமாகலாம்.

மலையக நாட்டார் பாடல்களில் கண்டி, கண்டிச்சீமை ஆகிய இடப்பெயர்களே பெருந்தோட்டங்களையும் பெருந்தோட்ட வாழ்வியலையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிலோன், இலங்கை, ஈழம் ஆகிய சொற்களைக் காட்டிலும் கண்டி, கண்டிச் சீமை ஆகிய சொற்களையே பெருந்தோட்டங்களுடன் இணைந்த இலங்கையைக் குறிக்கச் சாதாரண மக்கள் பயன்படுத்தியுள்ளனர். அதனைப்போலவே இலங்கையிலிருந்து தமிழகம் திரும்பியோரைக் கண்டிக்காரர் எனச் சுட்டும் வழக்கு இன்றும் நிலவுகின்றது. அதனால், கண்டி பெருந்தோட்டங்களைக் குறிக்கவும் பெருந்தோட்ட வாழ்வியலைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டது போலவே இலங்கையைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பின்புலம் 'கண்டிக் கதிர்காமம்' என்ற விளிப்புக்கு அதிக அழுத்தம் கொடுத்திருக்கலாம். கண்டி, கதிர்காமம் எனும் ஒத்த ஓசைகள் அந்த இணைவுக்கு மேலும் வலுவூட்டியுள்ளன. அதனாலேயே 20 ஆம் நூற்றாண்டில் கண்டிக் கதிர்காமம் என்ற வழக்கு மிகுந்தளவில் பரவலாக்கம் பெற்றுள்ளது.

ஆகவே, கண்டி இராசதானிக் காலத்தில் கண்டிக்கும் கதிர்காமத்துக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே ஏற்பட்ட உறவும் நெருக்கமும் கண்டியையும் கதிர்காமத்தையும் பிணைத்துள்ளன. அப்பிணைப்பினாலேயே 'கண்டிக் கதிர்காமம்' என்ற விளிப்புத் தோற்றம் பெற்றுள்ளது. அவ்வாறு தோன்றிய வழக்கு, பெருந்தோட்டத்துறை உருவாக்கத்துடன் மற்றுமொரு தளத்தில் நீட்சிபெற்றுள்ளது. அந்நீட்சியே கண்டிக் கதிர்காமம் என்ற வழக்குக்கு நீடித்த இருப்பினை வழங்கியுள்ளது எனலாம்.

பெருந்தோட்டங்களையும் பெருந்தோட்ட உருவாக்கத்தை ஒட்டிய இலங்கையையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட கண்டி, கண்டிச் சீமை என்ற வழக்கு இன்று புழக்கத்தில் இல்லாதபோதிலும், கண்டியும் கதிர்காமமும் வெவ்வேறு பிரதேசங்கள்; அவை இரண்டுக்கும் நேரடித் தொடர்பில்லை என்ற புரிதல் ஏற்பட்டுள்ள போதிலும், கதிர்காமத்தைச் சிங்களப் பௌத்தர்கள் தமக்கு உரித்தாக்கிக்கொண்ட போதிலும் 'கண்டிக் கதிர்காமம்' என்ற வழக்குத் தமிழ்நாட்டில் உயிர்ப்புடனேயே இருந்து வருகின்றது. அந்த இணைவு கதிர்காமத்துக்கும் கண்டிக்கும், கதிர்காமத்துக்கும் தென்னிந்தியத் தமிழர்களுக்கும், தென்னிந்தியாவுக்கும் கண்டிக்கும் இடையே நிலவிய நெருங்கிய தொடர்புகளின் அழிக்க முடியாத சான்றாக விளங்குகிறது. இத்தகவல்கள் கதிர்காமத்தின் சமய, பண்பாட்டு முக்கியத்துவத்தின் மேலெழுகையில் கண்டி இராசதானியினதும் தமிழ்நாட்டினதும் செல்வாக்கும் முதன்மையானதாக விளங்கியுள்ளது என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன. தமிழ்நாட்டுக்கும் கதிர்காமத்துக்கும் இடையிலான மேற்படி நெருங்கிய தொடர்பே, நடேசய்யர் கதிர்காமம் என்ற நூலை எழுதுவதற்கான பின்புலமாக விளங்கியுள்ளது.

கதிர்காமக் கந்தன் மீது புராணங்கள், பிரபந்தங்கள், வழிநடைப்பதங்கள், வெகுஜனப் பாடல்கள் என ஏராளமான பக்திப் பனுவல்கள் தோற்றம் பெற்றுள்ளதோடு தமிழரிடத்தும் சிங்களவரிடத்தும் வாய்மொழி வழக்கில் பெருந்தொகையான பக்திப் பாடல்கள் புழக்கத்தில் உள்ளன. கதிர்காமம் குறித்து வரலாற்றியல், சமூகவியல், மானிடவியல், தொல்லியல் எனப் பலதுறைகள் சார்ந்த ஆய்வுகள் தமிழிலும், சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் வெளிவந்த வண்ணம் உள்ளதோடு சுற்றுலாக் கையேடுகளும் வெளிவந்துள்ளன. அவற்றுள் பெருந்தொகையான ஆய்வுகள், சுதந்திரத்துக்குப் பின்னரான காலத்தில் வெளிவந்தவையாகும். சுதந்திரத்துக்குப் பின்னர் நாட்டில் மேலோங்கிய சிங்களப் பௌத்த மேலாதிக்கம், கதிர்காமத்தின் பூர்வீக உரிமை சைவத் தமிழர்களுடையதா, சிங்களப் பௌத்தர்களுடையதா

சுதந்திரத்துக்கு முன்னர் கதிர்காமம் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஆய்வு முயற்சிகளை மேல்நாட்டவர்களும் உள்நாட்டவர்களும் மேற்கொண்டிருந்தாலும் தமிழில் வெளிவந்தவை எண்ணிக்கையில் மிகமிகக் குறைவாகும். அவற்றுள் நடேசய்யர் எழுதிய கதிர்காமம் என்ற நூல் சிறப்பிடம் பெறுகின்றது.

என்ற முரண், சிங்களவர்கள் மத்தியில் அபரிமிதமாகப் பெருகத் தொடங்கிய கதிர்காம யாத்திரை, கதிர்காமத்தில் நிலவும் பல்கலாசார ஒருங்கிணைவு முதலிய பல காரணங்களால் கதிர்காமம் மீதான ஈர்ப்பு ஆய்வாளர்களிடையே பெருகத் தொடங்கியது எனலாம்.

சுதந்திரத்துக்கு முன்னர் கதிர்காமம் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஆய்வு முயற்சிகளை மேல்நாட்டவர்களும் உள்நாட்டவர்களும் மேற்கொண்டிருந்தாலும் தமிழில் வெளிவந்தவை எண்ணிக்கையில் மிகமிகக் குறைவாகும். அவற்றுள் நடேசய்யர் எழுதிய கதிர்காமம் என்ற நூல் சிறப்பிடம் பெறுகின்றது. மெட்ராஸ் பி.என்.கே. (B.N.K) அச்சகத்தில் 1946 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டுள்ள கதிர்காமம் நூலை, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் மறுபதிப்பாக (2021) வெளியிட்டுள்ளது. இந்நூலின் முக்கியத்துவம் குறித்து இளங்கோ டி சே, 'சுவரொட்டிகளும் கதிர்காம வரலாறும்' என்ற தலைப்பில் நல்லதொரு அறிமுகத்தை வழங்கியுள்ளார்.

இந்தியாவிலிருந்து கதிர்காமத்துக்கு வரும் தமிழ் யாத்திரிகர்களுக்கான கையேடு போல அமைந்துள்ள இந்நூல், பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. சிங்களப் பௌத்த மரபிலும் சைவத்தமிழ் மரபிலும் வழங்கிவந்த இலக்கிய மற்றும் சரித்திரத் தகவல்களையும், வாய்மொழி வழக்காறுகளையும், காலனிய அதிகாரிகளின் குறிப்புகளையும், இந்துமதப் புராணங்களையும் அடிப்படையாகக்கொண்டு கதிர்காமத்துக்கான பிரயாணமுறை, கதிர்காமத்தின் சரித்திரம், கதிர்காமம் குறித்த புராணச் செய்திகள், கதிர்காமத்துக்கு வந்து திருப்பணிகள் புரிந்த கல்யாணகிரி சுவாமி பற்றிய செய்திகள், நூல் எழுதப்பட்ட காலத்தில் கதிர்காமத்தின் நிலை, கதிர்காமத்துடனான முஸ்லிம்களின் தொடர்பு முதலானவை சிறப்பாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் அருணகிரிநாதர் கதிர்காமம் மீது பாடிய திருப்புகழ்களில் பதினொன்றும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.



Copy right Govt. Tourist Bureau

கதிர்காமம்—பெரிய கோவிலுக்குள் நுழைய வாயிற்படி.



Copy right Govt. Tourist Bureau

கதிர்காமம் உட்பிரகாரத்தில் சுவாமி சந்நிதி எதிரில் பக்தர்கள் வேண்டிநிற்றல்.

Image Source : noolaham.net

நூலின் அமைப்பும் எடுத்துரைப்பும் அதனை ஒரு வழிகாட்டி நூலாக வடிவமைத்துள்ளன. அதனால் தமிழ்நாட்டவர்க்கான கதிர்காம யாத்திரைக்கென எழுதப்பட்ட யாத்திரை வழிகாட்டியாக இந்நூலை அடையாளப்படுத்தலாம். கதிர்காம யாத்திரைக்கென வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி நூல்களை வரலாற்றுப் பின்புலத்தில் நோக்குகின்றபோது, நடேசய்யரின் கதிர்காமமே தமிழில் வெளிவந்த காலத்தால் முந்திய கதிர்காம யாத்திரை வழிகாட்டியாக விளங்குகிறது. நடேசய்யர் தன் முகவுரையில் இந்நூலாக்கத்துக்கான நோக்கத்தினை, "கதிர்காமக் கடவுளைக் கண்டு தரிசிக்கவெண்ணும் தமிழர்களுக்கெனவே இப்புஸ்தகம் வெளியிட எண்ணினேன்" என வரையறுத்துள்ளார். இந்நோக்கத்துக்கான தேவை, தமிழ்நாட்டில் கதிர்காமம் குறித்து நிலவுகின்ற தவறான கருத்துகளைக் களைதல், கதிர்காமத்துக்கு யாத்திரை செல்லும்

பக்தர்களை வழிப்படுத்தல் என்ற இரண்டு நிலைகளிலிருந்து தோன்றியுள்ளது. இதனை, "கதிர்காமத்தில் நடப்பதாகச் சொல்லும் அதிசயங்கள் பலவற்றைத் தென் இந்தியாவில் கேள்விப்பட்டிருக்கிறோம். இத்திருக்கோயில் கடலோரம் உள்ளதென்றும், பக்தர்கள் தாங்கள் கொண்டுபோகும் தேங்காய், பழம் முதலியவற்றை அங்கு சந்நிதியில் உள்ள ஒரு சிறு வண்டியில் வைத்து உள்ளே தள்ளுவார்கள் என்றும், அவ்வாறு உள்ளே சென்ற வண்டி தானாகத் திரும்ப, வருங்காலத்தில் தேங்காய் உடைக்கப்பட்டும் கற்பூரம் கொளுத்தப்பெற்றும் இருக்கும் என்றும், அப்பிரசாதங்களைப் பக்தர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லியதை நானே கேள்விப்பட்டிருக்கிறேன். அவ்வித நடைமுறைகள் யாதொன்றுமில்லை" (நடேசய்யர், 1946: I) என நடேசய்யர் குறிப்பிடுவதிலிருந்தும், நூலின் உள்ளே பிரயாணமுறை, கதிர்காமத்தின் வரலாறு, புராணச் செய்திகள் மற்றும் கதிர்காமத்தில் பார்க்க - தரிசிக்க வேண்டிய இடங்கள் முதலியவற்றை விரித்துக் கூறுவதிலிருந்தும் கண்டுகொள்ள முடிகின்றது.

ஒரு யாத்திரை வழிகாட்டியாக இந்நூல் எழுதப்பட்டுள்ளதால் நூலின் தொடக்கத்திலேயே எக்காலத்தில் பயணம் செய்ய வேண்டும், பிரயாணத்தின்போது பின்பற்ற வேண்டிய சட்ட நடைமுறைகள், பிரயாணமுறை என்பனவற்றை விரிவாக விளக்கியுள்ளார், நூலாசிரியர். அந்தவகையில் ஆடிப் பௌர்ணமி, கார்த்திகை தீபம், புதுவருடப் பிறப்பு, மாசிமகம், வைகாச விசாகம், மகரசங்கராந்தி என்பனவற்றைக் கதிர்காமத்தின் விசேட நாட்களாகக் கூறும் ஆசிரியர், கார்த்திகை மாதத்தில் அப்பகுதியில் அதிகமாக மழை பெய்வதால் யாத்திரைக்குப் பொருத்தமான காலமாக, ஆடி மாதத்தை முன்மொழிந்துள்ளார்.

கதிர்காம யாத்திரையில் முற்காலத்தில் நிலவிய அச்சுறுத்தல்கள், அந்த அச்சுறுத்தல்களுக்கான காரணங்கள், அரச தலையீட்டுடன் அவை தவிர்க்கப்பட்டமை முதலானவற்றை எடுத்துரைத்து, கதிர்காம யாத்திரை தொடர்பில் நிலவிய அச்சத்தைக் களைய நடேசய்யர் முயன்றுள்ளார். சான்றாக, பின்வரும் பதிவினைக் குறிப்பிடலாம்:

"கதிர்காமம் போய்வருவது மிகச் சிரமமான காரியம். அதுவும் நல்ல ரஸ்தாக்கள் இல்லாத காலத்தில் யானை, புலிகள் அடர்ந்த காட்டினிடையேயுள்ள ஒரு கோவிலுக்குப் போவது கஷ்டந்தான். சுமார் 30 வருஷ காலங்களுக்கு முன் வரையில் கவர்ன்மெண்டில் லைசன்ஸ் பெற்றுத்தான் போகவேண்டும் என்ற சட்டம் இருந்தது... முற்காலத்தில் கதிர்காம சேத்திரம் போனவர்களில் பெரும்பாலானோர் காட்டுக் காய்ச்சல் - மலைக்காய்ச்சலால் - அவதிப்படாதவர் இல்லை. பாதிக்குமேல் இறந்தும் இருப்பார்கள். இக்காரணங்கள் பற்றியே கதிரகாமம் போவதற்கு அநேகருக்குப் பயம்... மேலே கூறிய கஷ்டங்கள் தற்காலத்தில் இல்லை எனலாம். நல்ல பாதைகள் உண்டு. போக்குவரத்து சாதனங்கள் ரயில் மார்க்கமாகவும், பஸ்கள் மார்க்கமாகவும் இருக்கின்றன. வசதியுள்ளவர்கள் காரில் பிரயாணம் செய்தால் - உற்சவ காலத்தில் கூட்டமாய் உள்ள நாட்கள் தவிர, மற்ற நாட்களில் - கோவில் வரையில் போக வசதியுண்டு."

கதிர்காம யாத்திரை வசதிகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியை எடுத்துரைத்துள்ள மேற்படி தகவல்கள், கதிர்காம யாத்திரையின் வரலாற்று வளர்ச்சியை அறிந்துகொள்ளவும் பயன்படுகின்றன.

தமிழ்நாட்டிலிருந்து வரும் கதிர்காம யாத்திரிகர்கள் பின்பற்ற வேண்டிய சட்ட நடைமுறைகளை எளிமையாகவும் விரிவாகவும் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். தற்போது, கொரோனாப் பெருந்தொற்றினால் பின்பற்றப்பட்ட '*Quarantine*' நடைமுறைகள் போல, இந்நூல் எழுதப்பட்ட காலத்தில் கொலறா, அம்மை போன்ற தொற்றுநோய்களின் பாதிப்பு உச்சமாக இருந்ததால் அந்நோய்கள் பரவாமல் இருக்க, அத்தகைய '*Quarantine*' விதிகள் பின்பற்றப்பட்டுள்ளன.

அவற்றை 'வியாதித் தடுப்பு விதிகள்' (*Quarantine Regula tions*) எனக் குறிப்பிட்டு, விரிவாக விளக்கியுள்ள நடேசய்யர், கதிர்காமத்துக்கு வரும் யாத்திரிகர்கள் இந்தியாவில் பின்பற்ற வேண்டிய சட்ட நடைமுறைகள், இலங்கையில் பின்பற்ற வேண்டிய சட்ட நடைமுறைகள் என்பவற்றை எளிமையாக விளக்கி, பிரயாணம் செய்ய வேண்டிய வழிமுறைகளைக் குறிப்பிட்டுள்ளார். இத்தகவல்கள், தொடர்பு சாதனங்கள் பரந்தளவில் பரவலாக்கம் பெறாத அக்காலத்தில் பலருக்கும் மிகுந்த பயனளித்திருக்கும் எனலாம்.

கதிர்காமத்தின் அமைவிடம், கதிர்காமம் என்ற பெயர்க்காரணம் என்பன குறித்தும் விளக்கியுள்ள ஆசிரியர், கதிர்காமத்தில் பார்க்க - தரிசிக்க வேண்டிய இடங்களையும் சந்நிதிகளையும் குறிப்பிட்டு, அவற்றின் அமைவிடங்கள் பற்றிய தகவல்களைத் தந்துள்ளார். இவை, அக்காலத்தில் கதிர்காமத்தைத் தரிசிக்கச் செல்பவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக, துணையாக விளங்கியிருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

சிங்களப் பௌத்த மரபில் இலக்கியங்கள், வரலாற்றுக் குறிப்புகள் மற்றும் வாய்மொழி வழக்காறுகள் போன்றவற்றில் இடம்பெறும் கதிர்காமம் குறித்த சில முக்கியமான தகவல்களை நடேசய்யர் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். புத்தரின் கதிர்காம வருகை, அனுராதபுரத்தில் இடம்பெற்ற அரச மர நாட்டு வைபவத்துக்குக் கஜராகமம் மற்றும் கந்தனாகாமத்து (சந்தனாகாமத்து) இளவரசர்களும், பிராமணன் திவக்கவும் கலந்துகொண்டமை, கதிர்காமத்தில் அரச மரக்கிளை நாட்டப்பட்டமை, துட்டகைமுனு நேர்த்தி வைத்து கதிர்காமத்தை அமைத்தமை, சூளவம்சத்தில் இடம்பெறும் மானவர்மன் குறித்த ஐதீகம் முதலிய பல தகவல்களைத் தந்துள்ளார். இத்தகவல்களை முழுவதுமாக ஏற்றுக்கொள்ளும் நடேசய்யர், அத்தகவல்களைக் கொண்டு, "இலங்கையில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டு காலத்திலேயே கதிர்காமம் புத்த மதத்தினருடைய புண்ணிய சேத்திரமாக விளங்கியது" (மேலது: 13, 14), "பூர்வ காலத்தில் கதிர்காமம் இந்து மத ஸ்தானமாக விளங்கவில்லை" (மேலது: 31) என்ற முடிவுக்கு வருவதோடு, முதலாம் இராஜசிங்கன் காலம் முதலே கதிர்காமம் இந்து மதத்தினரின் நிர்வாகத்துக்குக் கீழ் வந்தது என்ற பொருள்படவும் கூறியுள்ளார். இம்முடிவுகள் ஏற்கத்தக்கது தானா என்பது குறித்து ஆராய்வது அவசியமாகும்.

நடேசய்யர் சிங்களப் பௌத்த மரபில் இடம்பெறும் தகவல்களை அவ்வாறே ஏற்று வழிமொழிகிறாரே தவிர அதற்குப் பின்னாலான அரசியல், அத்தகைய கருத்தாக்கங்கள் உருவாகியமைக்கான சமூக, அரசியல் தேவை என்பன குறித்து அக்கறை செலுத்தவில்லை. இராஜசிங்கன் தன் இறுதிக்காலத்தில் சைவத்தைத் தழுவி, கதிர்காமத்துக்குத் திருப்பணிகள் பலவற்றைச் செய்தமை, கல்யாணகிரி கதிர்காமத்திற்கு வந்து திருப்பணிகள் செய்து, நிர்வாகத்தை நடத்திவந்தமை என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு அக்காலம் முதலே கதிர்காமம் சைவர்களின் தலமாக, சைவர்களின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் தலமாக மாறியது என்ற பொருள்பட நடேசய்யர் கூறுவது, வரலாற்றுக்கு முரணாக அமைந்திருப்பதோடு, சைவர்களுக்கும் - தமிழர்களுக்கும் - கதிர்காமத்துக்கும் இடையிலான நீண்ட வரலாற்றையும் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் மறுதலிப்பதாகவும் அமைந்துள்ளது.

கதிர்காமம் குறித்த மகாவம்ச தகவலின்படி, இலங்கைக்குப் பௌத்தம் வருவதற்கு முன்னரே கதிர்காமத்தில் சத்திரியர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். பிராமணச் செல்வாக்கு மேலோங்கியிருந்துள்ளது. 'பொதுவாக, பிராமணர் இக்காலத்தில் இந்துக்களாக விளங்கியதால் இச்சத்திரிய மன்னர்களும் பிராமணர்களைப் போல் இந்துக்களாகவே விளங்கினர் எனலாம்' (சிற்றம்பலம், 1990: 28) என்பர். அதனால் அப்பிராந்தியத்தைச் சிங்களப் பௌத்த மயமாக்கும் முயற்சி இடம்பெற்றிருக்கலாம். அதன் ஒரு வெளிப்பாடே அப்பிராந்தியத்தில் அரச மரக்கிளை நாட்டப்பட்டமை எனலாம். அனுராதபுரத்திலிருந்து அரச மரக்கிளை கொண்டுசென்று நாட்டப்பட்டதாகக் கூறப்படுகின்ற இடங்கள் யாவும், பௌத்தம் செல்வாக்குப் பெறாத இடங்களாகவும், யக்ஷ போன்ற பூர்வீக வழிபாடுகள் மேலோங்கியிருந்த இடங்களாகவும் உள்ளன. அரச மரக்கிளை நாட்டலுடனேயே அப்பிராந்தியங்கள் பௌத்தமயமாக்கப்பட்டுள்ளன. இதனை நிரூபிக்கும் வகையிலான இரு பிராமிக் கல்வெட்டுகள் குறித்த செய்தியினைச் சி.க. சிற்றம்பலம் தந்துள்ளார். கதிர்காமத்துக்கு அருகில் உள்ள திஸ்ஸமகாராம, கிரிண்ட ஆகிய இடங்களில் கிடைத்துள்ள அப்பிராமிச் சாசனங்களில் நாக என்ற பெயருடைய உபராஜா, தவறான சமய நம்பிக்கைகளைக் கைவிட்டு புத்தரைச் சரணடைந்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு தவறான சமய நம்பிக்கைகள் என்பது பௌத்தம் சாராத நம்பிக்கைகளாகும். அது இந்து மதத்தைக் குறிக்கிறது (மேலது: 1990). இத்தகவல்கள் கதிர்காமப் பிராந்தியம் முற்காலத்தில் இந்து மதம் மேலோங்கிய பகுதியாக விளங்கியுள்ளமையையும், பின்னர் அப்பகுதி பௌத்த மயமாக்கப்பட்டுள்ளமையையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

சிங்களப் பௌத்த அரச பாரம்பரியத்தில் உருகுணை (றோகணை - ருகுண) இராசதானிக்கு மிகமுக்கிய இடமுண்டு. சிங்களப் பௌத்தப் பாரம்பரியங்களைப் பேணிப்பாதுகாக்கும் இராசதானியாகவும், படை நடவடிக்கைகளின் போது சிங்கள மன்னர்கள் தஞ்சமடைகின்ற பிரதேசமாகவும், எதிர்ப்படையினரை வெல்வதற்குப் படை திரட்டும் களமாகவும் உருகுணை விளங்கியுள்ளது. அதனால் சிங்களப் பௌத்தத்தின் கேந்திர நிலையமாக உருகுணை கருதப்படுகின்றது. இந்நிலையால் உருகுணையின் முக்கிய பிராந்தியமான கதிர்காமமும் அங்கு கோயில் கொண்டுள்ள முருகனும் சிங்களப் பௌத்த மரபுக்குள் உள்ளீர்க்கப்பட வேண்டிய கட்டாயத் தேவை எழுந்திருக்கலாம். இன்றும் சிங்கள மரபில் கதிர்காமமானது 'ருகுணு மஹா கத்தரகம' என அழைக்கப்படுவதை இதனோடு இணைத்து நோக்கலாம்.

கதிர்காமம் குறித்த பதிவு மகாவம்சத்தில் ஒரு தடவை மட்டும் இடம்பெற்றுள்ளதாகக் கூறும் நடேசய்யர், அதற்கான காரணமாக, "தேவநம்பிய திஸ்ஸனின் சகோதரன் மகாகாமம் என்ற ஆலயத்தை அமைத்ததால் கதிர்காமத்தின் பெயர் குறைந்தது என்று கூறப்படுகின்றது" (1946: 12) என்கிறார். அதேவேளை,

சிங்கள ஆய்வாளர்கள் சிலர் மகாவம்சத்தில் கதிர்காமக் கந்தன் குறித்த தகவலின்மைக்கு வேறுபல காரணங்களைக் கூறுகின்றனர். எடுத்துக்காட்டாக, உபுல்வன், சமன் ஆகியோர் பற்றி எல்லாம் கூறியுள்ள மகாவம்சம், முருக வழிபாடு குறித்து எவற்றையும் கூறாததற்கான உறுதியான காரணங்களைக் கூறமுடியாவிட்டாலும், பின்வரும் இரு காரணங்களை அனுமானமாகக் கூறலாம் என்கிறார், தீபிகா மானெல். ஒன்று, உபுல்வன், சமன் ஆகிய கடவுளர்கள் போல முருகன் முதன்மை வாய்ந்த கடவுளாக விளங்காமல் உள்ளூர்க் கடவுளாக வழிபடப்பட்டிருக்கலாம். இரண்டு, இலங்கையில் பண்டைக்காலத்திலேயே புத்த தர்மம் பரவலாகச் செல்வாக்குப் பெற்றிருந்த பிரதேசமாக உருகுணை விளங்கியதால் அப்பிரதேசத்தில் உள்ள முருகனை வழிபடுவோர் எண்ணிக்கை குறைந்திருந்திருக்கலாம்; அதனால் முருகன் முதன்மையற்ற தெய்வமாக விளங்கியிருக்கலாம் (தீபிகா மானெல், 1995: 25). இந்த அனுமானங்களை அடிப்படையாகக்கொண்டு நோக்கும்போது பிற்காலத்தில் முருக வழிபாடு சிங்களப் பௌத்த மரபில் பெற்ற செல்வாக்கினாலும், சிங்களப் பௌத்த வாதத்தின் கேந்திர நிலையமாக உருகுணை விளங்கியதாலும், கதிர்காமக் கந்தனைச் சிங்களப் பௌத்த மரபோடு இணைத்த கதைமரபுகள் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்ற முடிவுக்கு வரமுடிகிறது. துட்டகைமுனுவைக் கதைத் தலைவனாகக் கொண்ட மகாவம்சம், கதிர்காமத்தைத் துட்டகைமுனு கட்டுவித்தான் என்ற செய்தியைக் கூறாமலிருக்க, பிற்காலக் 'கந்த உபத' அச்செய்தியைப் பதிவு செய்துள்ளமையை இதற்கு மேலும் வலுவூட்டும் சான்றாகக் கொள்ளலாம்.

சிங்களப் பௌத்த மரபில் கதிர்காமம் குறித்து இடம்பெறுகின்ற கருத்தாக்கங்களுள் முருகனும் கத்தரகம தெவியோவும் ஒன்றல்ல என்ற கருத்தும் தனித்த கவனத்துக்குரியதாகும். அந்தக் கருத்தாக்கமும் சிங்களப் பௌத்த மரபில் நிலவுவதை நடேசய்யர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. "கதிர்காம தேவதையைப் பற்றி சிங்களவர்கள் கூறும் சில சம்பவங்கள், இந்தியாவில் கந்தப் பெருமானைப் பற்றிக் கூறும் சம்பவங்களுக்குச் சம்பந்தப்பட்டதாகவில்லை. இலங்கையில் காவல் தெய்வமாகக் கொண்டாடப்பெறும் நான்கு தெய்வங்களுள் கதிர்காமத் தெய்வமும் ஒன்றென்றும், அது வருங்காலத்தில் புத்தரின் ஓர் அவதாரமாகத் தோன்றும் என்பதும் சிங்களவர் கொள்கை" என்று அதனைப் பதிவு செய்துள்ளார் (1946: 18). பண்டைய சிங்கள மரபில் 'கந்தே தெய்யா' என்று வழிபடப்பட்ட குன்றின் கடவுளே பிந்திய காலத்தில் முருக வழிபாட்டுடன் இணைந்துவிட்டது என்பது செனரத் பரணவிதான போன்றோரின் கருத்தாகும். அதனை நிரூபிப்பதற்கு, நடேசய்யர் எடுத்துக்காட்டிய காரணத்துடன், கதிர்காமத்தில் சிங்களக் கப்புறாளையால் பூசைகள் மேற்கொள்ளப்படுதல், வருடாந்த எசல திருவிழா போதி மரத்தை மையப்படுத்தி இடம்பெறுதல் என்பனவற்றையும் அவர் குறிப்பிடுகின்றார் (மேற்கோள்: ஹெட்டியாரச்சி, 1978: 111). தமிழ்மரபில் முருகன் ஸ்கந்தனுடன் இணைந்த வரலாற்றை இதனுடன் இணைத்து நோக்கலாம்.

இந்துமரபில் கதிர்காமம் குறித்து இடம்பெறும் தொன்மங்கள் மற்றும் ஐதீகங்களை, புராணங்களையும் வாய்மொழி வழக்காறுகளையும் அடிப்படையாகக் கொண்டு விளக்கும் நடேசய்யர், வள்ளியை முருகன் கதிர்காமத்தில் திருமணம் முடித்தார் என்ற ஐதீகம் இலங்கையில் நிலவுவதாகக் கூறி, தக்ஷிண கைலாய மான்மியத்தில் இடம்பெறும் சம்பவங்களைச் சுருக்கமாகச் சுட்டிக்காட்டி, "வள்ளி நாச்சியார் கலியாணம் கதிர்காமத்தில் அல்லவென்பதும் தென்னிந்தியாவில் வள்ளியங்கிரியில் தான் என்பதும் விளங்கக்கூடியதாக இருக்கிறது" (1946: 22) என அந்தத் தொன்மத்தை மறுத்துரைக்கின்றார். இந்த வள்ளி திருமணம் என்ற தொன்மத்தை எடுத்துக்காட்டுகளுடன் மறுத்துரைக்க முயலும் நடேசய்யர், பௌத்த மரபில் கூறப்படும் தகவல்களை ஏன் அவ்வாறே ஏற்றுக்கொண்டார் என்ற வினா தவிர்க்க முடியாமல் எழுகின்றது. அத்துடன் இந்து மரபிலும் பௌத்த மரபிலும் கதிர்காமம் பற்றி வழங்கப்படுகின்ற கதை மரபுகளையும் வரலாற்றுத் தகவல்களையும் தொகுத்தளிக்க முயன்ற நடேசய்யர், கதிர்காமத்துக்கும் வேடர்களுக்கும் இடையிலான தொடர்பு குறித்து எந்தக் கருத்துகளையும் பதிவு செய்யவில்லை.

கதிர்காமத்தின் வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் முற்றிலும் சிங்களப் பௌத்தசார் ஆவணங்களை ஏற்றுக்கொண்டதால், வரலாற்றுக்கு முரணான முடிவுக்குச் சென்ற நடேசய்யர், பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் சைவர்களிடமிருந்து கதிர்காமத்தைச் சிங்களவர்கள் கையகப்படுத்திய வரலாற்றுச் சூழமைவைச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

"கண்டி மன்னனை பிரிட்டிஷ்காரர்கள் நாடு கடத்திய பிறகு, ஊவை மாகாணத்தில் சிங்களவர்கள் கலகம் செய்து கோவில் ஆராதனை வேலையை இந்துக்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டார்கள். பிரிட்டிஷ் ஆட்சி ஊன்றிய பிறகு 1815ம் வருஷம் சிங்களப் பூசாரிகள் பெரிய கோவில் பூசையிலிருந்து அரசினரால் விலக்கப்பட்டு வள்ளியம்மன் கோவில் பூசையோடு மாத்திரம் இருந்து வந்தார்கள்.

நாளடைவில் சிங்கள நாடான காரணத்தாலும், அங்கிருந்த கோவில் மடாதிபதிகள் தனிக்குடிகளாக விருந்தபடியாலும் போலீஸ், நீதி ஸ்தலம் முதலியன அவ்விடம் இல்லாதிருந்தமையாலும், அப்பகுதியிலுள்ள ஸ்தல அதிகாரிகள் எல்லோரும் சிங்களவர்களாயிருந்தபடியாலும், நாளடைவில் சிங்களப் பூசாரிகள் பெரிய கோவில் பூசையையும் அதிக்கிரமத்தில் பிடுங்கிக் கொண்டார்கள். மடாதிபதிகளும் ஒன்றும் செய்துகொள்ள முடியாது போயிற்று. இந்துக் கோவில் பரிபாலன விஷயமாய்ப் பிரத்தியேகச் சட்டம் இந்நாட்டில் இல்லை. புத்த மதக் கோவில்களுக்குரிய சட்டம் இதற்கும் உரியதென சிங்கள அதிகாரிகள் சொத்து பரிபாலனத்தை மேற்கொண்டு அவர்கள் இஷ்டப் பிரகாரம் காணிகளை விற்பதும், வருமானங்களைச் செலவிடுவதுமாயிருக்கிறது."

நடேசய்யர் கூறும் மேற்கூறிய வரலாற்றுத் தகவல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். சிங்களப் பௌத்தக் கருத்தியலாதிக்க வளர்ச்சியினையும் அவ்வளர்ச்சிக்குத் துணையாக அமைகின்ற காரணிகளையும் அறிந்துகொள்வதற்கும், தற்காலத்தில் பெருகிவருகின்ற சைவ ஆலயங்களின் பூர்வீக பூமி அபகரிப்புகளுக்கான பின்னணி இயங்கு சக்திகள் குறித்த தெளிவைப் பெற்றுக்கொள்வதற்கும் நடேசய்யர் சுட்டிக்காட்டும் மேற்கூறிய வரலாற்றுச் சித்திரம் துணைசெய்கின்றது.

கதிர்காமத்தின் நிர்வாகம் சிங்களவர்களால் கைப்பற்றப்பட்டமையுடன் தொடர்புபடுத்தி நடேசய்யர் கூறும் தகவல்கள், கதிர்காமம் தொடர்பில் அதிகம் ஆராயப்படாத தகவல்களையும் வெளிப்படுத்தியுள்ளன. அவற்றுள் கதிர்காமத்தின் நிர்வாகத்தை இந்துக்களுக்கு வழங்க வேண்டும் என இடம்பெற்ற போராட்டம், தமிழர்கள் கதிர்காமத்துக்குக் கொடையளிப்பதை நிறுத்த வேண்டும் என முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்கள் என்பன முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அவை குறித்த நடேசய்யரின் பதிவு பின்வருமாறு அமைந்துள்ளது:

"ஆடித்திருநாள் காலத்திலும், கார்த்திகை திருநாள் காலத்திலும் ஏராளமான பணம் உண்டியல்களில் வந்து விழுகின்றது. இவ்விதம் உண்டியல்களுக்குப் பணம் போடுபவரைக் கவனித்தால் 100க்கு 90 பேர் தமிழர்களாகவே இருப்பார்கள். இந்துக்களால் பொருள் கொடுக்கப்பெற்று, இந்துக்களால் சேவை செய்யப்பட்டு வரும் இக்கோயில் நிர்வாகம் இந்துக்களிடம் இருக்க வேண்டும் என்பது எல்லா இந்துக்களுடைய அபிப்பிராயம். இந்தியாவில் புத்தகயா நிர்வாகம் இந்து மஹந்துவிடம் இருக்கிறது என்பதைப் பற்றி இலங்கைச் சிங்களவர் கிளர்ச்சியாரம்பித்த காலத்தில் இலங்கையிலும் கதிர்காமம் இந்துக்களிடம் வர வேண்டும் என்ற கிளர்ச்சி ஏற்பட்டது. இந்து மக்களுள் இக்கிளர்ச்சிக்குப் போதிய நல்லெண்ணம் இருந்தும் அது வெளிவந்த பாடில்லை. இக்காரணம் பற்றியே இக்கோவில் உண்டியல்களில் பணம் போடப்படாது எனக் கிளர்ச்சி சில வருஷ காலமாக நடைபெற்று வருகிறது. திருவிழாக் காலங்களில் துண்டுப் பிரசுரங்களும், பிரசங்கங்களும் பல தமிழன்பர்களால் இந்த உண்டியல் சம்பந்தமாய் நடைபெறுகின்றன" (மேலது: 32,33).

மேற்படி தகவல்களின் துணையுடன் கதிர்காம நிர்வாகம் தொடர்பிலும் கொடை - காணிக்கை தொடர்பிலும் தமிழர்கள் முன்னெடுத்த செயற்பாடுகள் ஆவணப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

கதிர்காமத்துடனான முஸ்லிம்களின் தொடர்பு குறித்த நடேசய்யரின் பதிவும் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும். அப்பதிவில், "இலங்கை முஸ்லீம்களைவிட இந்திய முஸ்லீம்கள்தான் கதிர்காமத்துக்கு அதிகம் வருகின்றனர்" (மேலது: 4) என்ற செய்தியைத் தந்துள்ளார். தென்னிந்திய முஸ்லிம்களின் சுதேசிய பண்பாட்டுடன் இணைந்த வாழ்வையும் இலங்கை முஸ்லிம்களின் ஒதுங்குநிலை கொண்ட, இஸ்லாமியத் தூய்மைவாதத்தைப் பின்பற்றும் வாழ்வையும் அச்செய்தியின் ஊடாகக் கண்டுகொள்ள முடிகின்றது.

தமிழ்நாட்டு முருக பக்தர்களை இலக்காகக்கொண்டு இந்நூலை நடேசய்யர் எழுதியுள்ளதால், கதிர்காமத்துக்கும் தமிழ்நாட்டவர்க்கும் குறிப்பாக, நாட்டுக்கோட்டை நகரத்தாருக்கும் இடையிலான தொடர்பு, நாட்டுக்கோட்டை நகரத்தார் உள்ளிட்ட தென்னிந்தியர்களால் கதிர்காம யாத்திரை பிரபல்யமுற்றமை, கொழும்பிலிருந்து வேலும் தென்னிந்தியாவிலிருந்து காவடிகளும் கதிர்காமத்துக்குக் கொண்டு செல்லப்பட்டமை என்பன பற்றியும், கதிர்காமத்துக்கு யாத்திரை மேற்கொள்வதில் உள்ள சிரமங்களால் அங்கு கொண்டு செல்லவேண்டிய 'வேலை' கொழும்புடன் நிறுத்திக்கொண்டமை, கொழும்பில் இடம்பெறும் ஆடிவேல் பூசைக்கும் இந்தியாவிலிருந்து பக்தர்கள் வந்தமை முதலிய பல தகவல்களையும் இந்நூலில் பதிவு செய்துள்ளார். இவை கதிர்காமத்துக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான தொடர்பு, கதிர்காம யாத்திரையில் தென்னிந்தியர்களின் ஈடுபாடு, கொழும்பில் இடம்பெறும் ஆடிவேல் பூசை

போன்றவற்றின் வரலாற்றுப் பின்புலம் முதலானவற்றை அறிந்துகொள்ள உதவும் சான்றுகளாக அமைகின்றன.

கதிர்காமம் குறித்து தமிழில் வெளிவந்த தொடக்ககால நூலாக இது விளங்குவதால், ஆட்பெயர்கள், இடப்பெயர்கள் என்பனவற்றைச் சுட்டுவதில் தமிழ்ச் சூழலில் வழங்கப்படுகின்ற சொற்களுக்கு மாறாக, பிரித்தானியக் காலனிய ஆட்சியாளர்களின் குறிப்புகளிலும், சிங்களப் பௌத்தப் பின்னணியில் ஆங்கிலத்தில் வெளிவந்த நூல்களிலும் வழங்கப்பட்ட சொற்களைத் தமிழ்ப்படுத்தி, அவ்வாறே கையாண்டுள்ளதைக் காணமுடிகின்றது. உதாரணமாக, ஊவை மாகாணம், ரொஹுுண, காச்யப, தேவநம்பிய திஸ்ஸா, கிட்டி, மகாநாகா போன்ற பெயர்களைக் குறிப்பிடலாம். அதேவேளை, அனுராதபுரம் மற்றும் உருகுணை ஆகிய இராசதானிகளின் அரச வரலாறு குறித்த சில பதிவுகளையும் நடேசய்யர் தந்துள்ளார். அவை, வரலாற்று நூல்களினதும் வாய்மொழி வழக்காறுகளினதும் கலவையாக விளங்குவதால் வரலாற்று முரண்கள் சிலவற்றையும் கொண்டுள்ளன. இலங்கையின் வரலாற்று வரைபு குறித்த பரவலான உரையாடல்கள் இடம்பெறாத அக்காலத்தில், மேற்கூறியவாறான குறைபாடுகள் தவிர்க்க முடியாதவை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

யாத்திரிகர்களுக்கு ஈர்ப்பை ஏற்படுத்தும் வகையில், அரச தொல்லியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட கதிர்காமத்தின் படங்கள் சில, நூலில் இணைக்கப்பட்டுள்ளன. அக்காலத்தில் கதிர்காமத்தைத் தரிசிக்க விரும்பிய பக்தர்களுக்கும் தரிசிக்க வாய்ப்பற்ற பக்தர்களுக்கும் அப்படங்கள் மிகுந்த பரவசமூட்டியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அப்புகைப்படங்களில் 'கதிர்காமத்தில் பெரிய கோவில்' என்று வரவேண்டிய இடத்தில் 'சூரன் கோட்டையெனத் தமிழர் சொல்லும் கதிர்காமம் பெரிய கோவிலுக்குப் பின் உள்ள கிரிவிஹாரை' என்றும், கிரிவிஹாரை என்று வரவேண்டிய இடத்தில் 'கதிர்காமத்தில் பெரிய கோவில்' என்றும் தவறுதலாக மாறி அச்சிடப்பட்டுள்ளன.

தென்னிந்தியத் தமிழர்களை இலக்குக் குழுவினராகக் கொண்டு நடேசய்யர் இந்நூலினை எழுதியுள்ளதால், தென்னிந்தியாவிலிருந்து அக்காலத்தில் பெருந்தொகையானோர் கதிர்காம யாத்திரையினை மேற்கொண்டுள்ளனர் என்பதையும், வியாதித் தடுப்பு விதிகளானவை (Quarantine Regulations) பொருளாதார வேறுபாடுகளுக்கு ஏற்ப இரு நிலைகளில் முன்னெடுக்கப்படுவதாகக் கூறுவதன் மூலம் (இந்தியாவின் பல பாகங்களில் இருந்து மூன்றாம் வகுப்பில் வருபவர்கள் மண்டபம் காம்ப்பில் ஆறு நாட்கள் தங்கி, அம்மை குத்தி, துணிமணிகளை அவித்துக்கொண்டு செல்ல வேண்டும். முதலாம், இரண்டாம் வகுப்பில் வருபவர்கள் அவ்வாறு தங்கி வரவேண்டிய அவசியம் இல்லை. அவர்களை அநேகமாக மண்டபத்தில் இறக்கமாட்டார்கள்.), சமூகத்தின் எல்லா மட்டத்தினரும் கதிர்காம யாத்திரையினை மேற்கொண்டுள்ளனர் என்பதையும் அறிந்துகொள்ள முடிகின்றது. கொலறா, அம்மை முதலிய தொற்றுநோய்கள் பரவி, வியாதித்தடுப்பு விதிகளை இறுக்கமாகப் பின்பற்றிய காலத்திலும் தென்னிந்தியாவிலிருந்து கதிர்காம யாத்திரிகர்கள் அதிகமாக வந்துள்ளமையானது, தென்னிந்தியத் தமிழர்களின் கலாசார வாழ்வில் கதிர்காம யாத்திரை பெற்றிருந்த பெரும் செல்வாக்கை வெளிப்படுத்தி நிற்கின்றது. அச்செல்வாக்குக்கு வலுவூட்டுவதாக நடேசய்யர் உருவாக்கிய யாத்திரை வழிகாட்டி விளங்கியுள்ளது. அதேவேளை, இந்நூல் வெறுமனே யாத்திரை வழிகாட்டியாக மட்டுமன்றி, தமிழ்நாட்டுக்கும் கதிர்காமத்துக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பினையும், சிங்களப் பௌத்த மரபிலும் சைவ மரபிலும் கதிர்காமம் பெறும் பண்பாட்டு முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தும் சமூக வரலாற்று ஆவணமாகவும் அமைந்துள்ளது.

### உசாத்துணை நூற்பட்டியல்


1. இரகுபரன், க., (ப.ஆ), (2018), அருணகிரிநாதர் அருளிய ஈழத்து திருத்தல திருப்புகழ்கள், கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

2. குமாரசுவாமி, வ., (ப.ஆ), (1935), கதிரைமலைப் பள்ளு, சென்னை: புரோகிரஸிவ் அச்சுக்கூடம்.

3. சிற்றம்பலம், சி.க., (க.ஆ), (1990). கிறீஸ்தாப்தத்துக்கு முந்திய கதிர்காமம், இந்து நதி 1988/1989, கிழக்குப் பல்கலைக்கழகம்: இந்து மாணவர் மன்றம்.

4. தீபிகா மானெல், எஸ். டீ., (1995), ஸ்ரீ லங்காவே தேசிய ஸத்தரவரம் தெவிவரு (சிங்களம்), கொழும்பு: கொடகே.

5. நடேசய்யர், கோ., (1946), கதிர்காமம், மெட்ராஸ்: பி.என்.கே. அச்சகம்.

6. ஹெட்டியாரச்சி, டி. இ., (1978), சிங்கள விஸ்வகோஷய (சிங்களம்), கொழும்பு: கலாசார திணைக்களம்.



மீநிலங்கோ தெய்வேந்திரன்

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.

# தற்கொலைகள்:
## சமூக அவலத்தின் கண்ணாடி

இலங்கையின் சமகாலச் சூழலில் மூன்று விடயங்கள் தவிர்க்கவியலாமல் செல்வாக்குச் செலுத்துகின்றன. முதலாவது மூன்று தசாப்தகால யுத்தம்; இரண்டாவது போரின் முடிவின் பின்னரான இயங்கியல்; மூன்றாவது பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவுகளும். இவை மூன்றும் தன்னளவிலும், இலங்கைச் சமூகத்திலும் ஏற்படுத்தியுள்ள அதிர்வலைகள் அனைத்தும் கவனிக்கப்படவுமில்லை, கருத்தில் கொள்ளப்படவுமில்லை. சமகாலத்தைப் பொருள்கொள்ளல் என்பது வெறுமனே அன்றாடக் கதையாடல்களுக்குரியவற்றுடனோ அல்லது பொதுப்புத்தியில் எப்போதும் நிலைத்திருக்கும் விடயப்பரப்புகளுடனோ மட்டும் நின்றுவிடுவதல்ல. இலங்கைச் சமூகப் படிநிலையில் நலிந்தோரின் கதைகள் சொல்லப்பட வேண்டும்; அதுசார் வினாக்கள் எழுப்பப்பட வேண்டும். இலங்கையின் சமகாலம் குறித்த பெரும்பான்மையான எமது உரையாடல்கள் கவனம் குவிக்கத் தவறும் விடயங்களையும் அமைதியாகக் கடந்து செல்லும் களங்களையும் ‘சமகாலத்தைப் பொருள்கொள்ளல்: கவனம்பெறா அசைவியக்கங்கள்’ எனும் இத்தொடர் பேசமுனைகிறது.

## தொடக்கக் குறிப்புகள்

2013 ஆம் ஆண்டு கள ஆய்வொன்றிற்காக முல்லைத்தீவுக்குச் சென்றிருந்தோம். குறித்த தினம் எமது கள ஆய்வை நிறைவுசெய்து, எமக்கு உதவிபுரிந்த நண்பர் ஒருவரின் வீட்டில் மாலை இளைப்பாறிக் கொண்டிருந்தோம். தீடிரென ஒருவர் ஓடி வந்தார். அவர்களது அயலவர் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலைக்கு முயன்றதாகவும் அவரைக் காப்பாற்றுவதற்கு உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச்செல்ல வேண்டும் என்றும் சொன்னார். ஆனால் அதற்கான போக்குவரத்து வசதி இருக்கவில்லை. ஏனெனில் நாம் தரித்து நின்ற ஊர் முல்லைத்தீவு நகருக்கு வெகுதொலைவில் அமைந்திருந்தது. நாம் பயணம் செய்த வாகனத்தை எடுத்துக்கொண்டு குறித்த நபரை ஏற்றி வைத்தியசாலைக்கு ஏற்றிச்சென்றோம். அவர் உயிர் பிழைத்துக்கொண்டார்.

இந்த நிகழ்வு என்னைக் கலவரப்படுத்தியது. இதைத் தொடர்ந்து குறித்த நிகழ்வுக்கான காரணங்களைத் தேடத் தொடங்கினேன். அந்த நபர் தனது மனைவியுடனான சண்டையின் பின்னர் நஞ்சருந்தினார் என்று தெரிந்து கொண்டேன். அதைத் தொடர்ந்த சில ஆழமான விசாரணைகள் மூலம், இந்த நிகழ்வுக்கு மனைவியுடனான சண்டை காரணம் அல்ல, அது ஓர் உடனடித் தூண்டுதலுக்கான பொறி மட்டுமே என்பதையும், போருக்குப் பின்னான சூழலில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் சமூக, பொருளாதார, உளவியல் நெருக்கடியின் கூட்டுவிளைவின் வெளிப்பாடே இந்த நிகழ்வு என்பதையும் புரிந்துகொள்ள முடிந்தது.

இதைத் தொடர்ந்து இலங்கையின் வடபுலத்தில் நிகழும் தற்கொலைகள், தற்கொலை முயற்சிகள் குறித்து அவதானம் செலுத்தத் தொடங்கினேன். கள ஆய்வுகளில் ஈடுபடும் போது அவை தொடர்பில் ஆராய்வதையும் கேள்விகள் கேட்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தேன். அவ்வகையில் கடந்த ஒரு தசாப்தகால அனுபவங்களின் பகுதியை இங்கே பகிர்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

போருக்குப் பிந்தைய காலத்தில், இலங்கை மறுகட்டமைப்பு, நல்லிணக்கம் மற்றும் அதிர்ச்சியின் நீடித்த விளைவுகள் ஆகியவற்றுடன் போராடி வருகிறது. இதன் ஒரு முக்கியமான அம்சம் தற்கொலை விகிதங்களின் பரிணாம வளர்ச்சியாகும். இது வரலாற்று ரீதியாக உலகளவில் மிக உயர்ந்ததாக இருந்தாலும், போர் தொடர்பான காரணிகள், சமூக - பொருளாதாரச் சவால்கள் மற்றும் பொது சுகாதார தலையீடுகளால் பாதிக்கப்பட்ட சிக்கலான போக்குகளைக் காட்டுகின்றன. இந்த இயக்கவியலை ஆராய்வது முக்கியமானது. குறிப்பாக 2009க்குப் பிந்தைய காலகட்டத்தின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டும், மனநல நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதற்கான வடிவங்கள், காரணங்கள் மற்றும் தொடர்ச்சியான முயற்சிகளைக் கவனத்தில் எடுத்தும் இதைப் பார்ப்பது பொருத்தம்.

இலங்கையின் தற்கொலை விகிதங்கள் 1990களின் நடுப்பகுதியில் உச்சத்தை எட்டின. 1995 ஆம் ஆண்டில் 100,000 பேருக்கு 47 ஆக இது உயர்ந்தது. இது பெரும்பாலும் கிராமப்புறங்களில் பூச்சிக்கொல்லியை விசமாக உட்கொள்வதால் ஏற்பட்டது.1 இருப்பினும், உள்நாட்டுப் போர் ஒரு முரண்பாடான விளைவை அறிமுகப்படுத்தியது: போரால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், போர்க்காலத்தில் தற்கொலை விகிதங்கள் கணிசமாகக் குறைவாக இருந்தன. அடிப்படை மட்டங்களுக்குக் கீழே இருந்தன. இவை தேசிய சராசரியிலிருந்து 15% இற்குக் குறைவாகவும் இன்னும் சில பகுப்பாய்வுகளின்படி 45% இற்குக் குறைவாகவும் இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.2 இந்தச் சரிவு பெரும்பாலும் போரின் போது அதிகரித்த சமூக ஒற்றுமைக்குக் காரணம் என்று எமிலி டர்கெய்மின் சமூகவியல் கோட்பாடுகள் கூறுகின்றன. அங்கு வெளிப்புற அச்சுறுத்தல்கள் சமூக பிணைப்புகளை வளர்க்கின்றன மற்றும் தனிப்பட்ட விரக்தியைக் குறைக்கின்றன. இந்த விடயம் தனியான ஆய்வை வேண்டுவது. ஆனால் இலங்கையின் தற்கொலைகள் குறித்த ஒரு குறுக்குவெட்டுப் பார்வையைப் பெற முயற்சிக்கும் போது இந்த விடயம் முக்கியமானது; ஆய்வுக்கு மிகவும் உத்வேகமான புதிரையும் தரவல்லது.

அபாயகரமான பூச்சிக்கொல்லிகள் மீதான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் காரணமாக 1990களின் பிற்பகுதியிலிருந்து தேசிய விகிதங்கள் குறையத் தொடங்கின. இது 93,000 இறப்புகளைத் தடுத்தது. 2009 ஆம் ஆண்டு போர் முடிவடையும் போது, ஒட்டுமொத்த விகிதம் ஏற்கனவே குறைவடையத் தொடங்கியிருந்தது. இது போருக்குப் பிந்தைய முன்னேற்றங்களுக்கு களம் அமைத்தது. 2009 ஆம் ஆண்டிற்குப் பிந்தைய ஆண்டுகளில், இலங்கை தற்கொலை விகிதங்களில் தொடர்ந்து கீழ்நோக்கிய போக்கைத் தொடர்ந்தது. 2010 இல் 100,000 பேருக்கு 20 ஆக இருந்தது. 2022 இல் 100,000 பேருக்கு 15 ஆகக் குறைந்தது. இது 1990களின் பிற்பகுதியிலிருந்து கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு குறைப்பைக் குறிக்கிறது. 1997 மற்றும் 2022 இற்கு இடையில் ஆண்

விகிதங்கள் 100,000 பேருக்கு 58 இலிருந்து 27 ஆகவும், பெண் விகிதங்கள் 100,000 பேருக்கு 18 இலிருந்து 5 ஆகவும் குறைந்துள்ளன. முறைகளில் மாற்றம் குறிப்பிடத்தக்கது: பூச்சிக்கொல்லி விஷம் குறைந்தது, அதேநேரத்தில் 2022 ஆம் ஆண்டில் தற்கொலைகளில் 69.9% தூக்கில் தொங்குவதாக அதிகரித்தது.3

இருப்பினும், இந்தத் தேசிய முன்னேற்றம் பிராந்திய வேறுபாடுகளை மறைக்கிறது. குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட வடக்கில், தற்கொலை விகிதங்கள் 100,000 பேருக்கு 30 ஆக உள்ளன. இது தேசிய சராசரியை விட இரண்டு மடங்கு அதிகம். கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் 2011 ஆம் ஆண்டில் 100,000 பேருக்கு 35 ஆகவும், 2012 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 30.6 ஆகவும் தற்கொலை முயற்சிகள் அதிகரித்துள்ளன. 2000 ஆம் ஆண்டில் 26 ஆக இருந்த தற்கொலை முயற்சிகள், 2011 இல் 331 ஆக உயர்ந்துள்ளன. 2023-2024 ஆம் ஆண்டுக்கான சமீபத்திய தரவுகள், போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிட்டத்தட்ட 60% மக்கள் மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதைக் குறிக்கிறது. இதில் 40% பேர் மனச்சோர்வுக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தெற்கில் உள்ள விகிதத்தை விட நான்கு மடங்கு அதிகம்.

2009க்குப் பிந்தைய போக்குகள் 2015 ஆம் ஆண்டு வரை ஆரம்பச் சரிவைக் காட்டுகின்றன. அதைத் தொடர்ந்து ஒரு சமவெளி மற்றும் லேசான உயர்வு, குறிப்பாக ஆண்கள் தூக்கிட்டுத் தற்கொலை செய்வதும், 17-25 வயதுடைய இளம் பெண்கள் தூக்கிடுவதும் அதிகரித்துள்ளன. வெளிப்புற அதிர்ச்சிகள் இதை அதிகப்படுத்தின: 2019 ஈஸ்டர் குண்டுவெடிப்புகள், 2020-2021 இல் கொவிட்19 ஊரடங்குகள், பணவீக்கம், எரிபொருள் பற்றாக்குறை மற்றும் உணவுப் பாதுகாப்பின்மை ஆகியவற்றுடன் 2022 பொருளாதார நெருக்கடி ஆகியன இதை இன்னொரு தளத்திற்கு எடுத்துச் சென்றுள்ளன.

போருக்குப் பிந்தைய தற்கொலைகளின் அதிகரிப்பு, குறிப்பாக வடக்கில், போரினால் தூண்டப்பட்ட அதிர்ச்சி மற்றும் தொடர்ச்சியான சவால்களின் சங்கமத்திலிருந்து உருவாகிறது. இடப்பெயர்வு, சித்திரவதை, அன்புக்குரியவர்களை இழத்தல் மற்றும் வன்முறைக்கு ஆளாகுதல் ஆகியவற்றின் கூட்டு அனுபவங்கள் பரவலான அதிர்ச்சிக்குப் பிந்தைய மனஉளைச்சல் சீர்குலைவு (Posttraumatic stress disorder - PTSD), பதட்டம், மனச்சோர்வு மற்றும் உடலுபாதை நோய்க்குறிக் கோளாறுகளுக்கு (Somatoform disorders) வழிவகுத்தன. உதாரணமாக, வன்னிப் பகுதியைச் சேர்ந்த 82% மாணவர்கள் நேரடிப் போருக்கு ஆளானதாகச் சொல்லியுள்ளனர். 35% பேர் குடும்பம் அல்லது நண்பர்களை இழந்தனர். தலைமுறை தாண்டிய அதிர்ச்சி இளைய தலைமுறையினரைப் பாதிக்கிறது. பெற்றோரின் போர் அனுபவங்கள் வீட்டு வன்முறைக்குப் பங்களிக்கின்றன (யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் 40-50% நிகழ்வுகள் மற்றும் தேசிய அளவில் 17%). மற்றும் குழந்தைகள் புறக்கணிப்புக்குள்ளாவதும் பாரிய சவாலாகும்.

பொருளாதாரக் காரணிகள் இந்தப் பிரச்சினைகளை அதிகரிக்கின்றன: வறுமை, வேலையின்மை மற்றும் போருக்குப் பிந்தைய குறைந்த ஊதிய உழைப்புக்கு மாறுதல் ஆகியவை நம்பிக்கையின்மையை வளர்த்துள்ளன. மதுபானத்தை தவறாகப் பயன்படுத்துவது பரவலாக உள்ளது. இது யாழ்ப்பாணத்தில் 20-30% பேரைப் பாதிக்கிறது.4 மேலும் குடும்ப மோதல்கள் தற்கொலைகளுடன் தொடர்புடையவை. முன்னாள் போராளிகள் சமூக நிராகரிப்பை எதிர்கொள்கின்றனர். இது போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் வன்முறைக்கு வழிவகுக்கிறது. நகரமயமாக்கல் மற்றும் இராணுவ மேற்பார்வையின் கீழ், கட்டுப்படுத்தப்பட்ட பாரம்பரியத் துக்கச் சடங்குகள் உட்பட, கலாசார சீர்குலைவுகள் சமூக மீள்தன்மையை அரித்துவிட்டன.

போர் முடிவுக்கு வந்தாலும் முன்னாள் போர் வலயங்களில் கண்ணுக்குத் தெரியாத காயங்கள் இன்னும் இருக்கின்றன. அவை யாருடைய கண்களுக்கும் தெரிவதில்லை. அவை தீர்க்கப்படாத துக்கம், சாதியக் களங்கம் மற்றும் மீள்குடியேற்ற மன அழுத்தம் ஆகியவற்றுடன் தொடர்புடையன. இந்தப் பகுதிகளில் நடைபெற்றுள்ள தற்கொலைகளைப் பற்றிய வழக்கு ஆய்வுகள் இதைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. அரசாங்க முயற்சிகள் மனநலத்தை விட பௌதிக ரீதியான மறுசீரமைப்புக்கு - சாலைகள், மருத்துவமனைகள் மற்றும் வீட்டுவசதிக்கு - முன்னுரிமை அளித்துள்ளன. இதனால் சேவைகளில் இடைவெளிகள் உள்ளன. வடக்கில், வளப் பற்றாக்குறை உள்ளது. குறிப்பாக, அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் முன்னாள் போராளிகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மறுவாழ்வு மையங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

போருக்குப் பிந்தைய தற்கொலை விகிதங்களில் இலங்கை குறிப்பிடத்தக்க குறைப்புகளை அடைந்துள்ள நிலையில், வடக்கில் உயர்ந்த புள்ளிவிவரங்கள் மோதலின் நீடித்த நிழலை எடுத்துக்காட்டுகின்றன. இதை நிவர்த்தி செய்வதற்கு அதிர்ச்சி, பொருளாதார உறுதியற்ற தன்மை மற்றும்

சேவை இடைவெளிகளைச் சமாளிக்கும் ஒருங்கிணைந்த அணுகுமுறைகள் தேவை. போர் முடிவடைந்து இரண்டு தசாப்தங்களை நாடு நெருங்கி வரும் நிலையில், மேலும் இழப்புகளைத் தடுக்கவும், மேலும் ஒருங்கிணைந்த சமூகத்தை உருவாக்கவும், சமூகம் தலைமையிலான சிகிச்சைமுறை மற்றும் கொள்கைச் சீர்திருத்தங்கள் மூலம் மீள்தன்மையை வளர்ப்பது அவசியம். அதற்கு ஒரு விரிவான ஆழமான புரிதல் அவசியம்.

## போருக்குப் பின்னரான சமூகங்களில் உளக்காயங்களும் தற்கொலையும்

போருக்குப் பிந்தைய சமூகங்கள் பெரும்பாலும் மோதலின் கண்ணுக்குத் தெரியாத வடுக்களுடன் போராடுகின்றன. அங்கு கூட்டு மற்றும் தனிப்பட்ட அதிர்ச்சி, தற்கொலை அபாயங்கள் உட்பட, ஆழ்ந்த மனநலச் சவால்களில் வெளிப்படுகின்றன. இந்தச் சூழல்களில் அதிர்ச்சி என்பது வன்முறை, இடப்பெயர்ச்சி மற்றும் இழப்புக்கு நேரடி வெளிப்பாடாக மட்டுமல்லாமல், சமூகச் சிதைவு, பொருளாதாரக் கஷ்டங்கள் மற்றும் கலாசார எழுச்சியின் நீடித்த விளைவுகளாகவும் உள்ளது. தற்கொலை, ஒரு சோகமான விளைவாக, சிகிச்சையளிக்கப்படாத பிந்தைய மனஉளைச்சல் சீர்குலைவு (PTSD), மனச்சோர்வு மற்றும் பதட்டம் ஆகியவற்றிலிருந்து அடிக்கடி வெளிப்படுகிறது. இலங்கை, நேபாளம் போன்ற நாடுகளில் நிகழ்ந்த உள்நாட்டுப் போர்களும், காஷ்மீர் போன்ற பகுதிகளில் தொடரும் பதட்டங்களும் காரணமாக, குறிக்கப்பட்ட தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தப் பிரச்சினைகள் குறிப்பாகக் கடுமையாக உள்ளன.

போருக்குப் பிந்தைய சூழல்களில், அதிர்ச்சி என்பது ஒரு தனிப்பட்ட துன்பம் மட்டுமல்ல, சமூகக் கட்டமைப்புகளை மறுவடிவமைக்கும் ஒரு கூட்டு நிகழ்வு. கூட்டு அதிர்ச்சி என்பது வன்முறையின் பகிரப்பட்ட அனுபவங்களைக் குறிக்கிறது. இது குழு இயக்கவியலை மாற்றுகிறது. இது சமூக மூலதனம் குறைவதற்கும், குடும்ப செயலிழப்பு அதிகரிப்பதற்கும், மனநலக் கோளாறுகளுக்கு அதிக பாதிப்பு ஏற்படுவதற்கும் வழிவகுக்கிறது. போர் வெளிப்பாடு (PTSD), மனச்சோர்வு மற்றும் பதட்டத்தின் அதிக விகிதங்களுடன் தொடர்புடையது என்று ஆய்வுகள் காட்டுகின்றன. இது தற்கொலை அபாயங்களை அதிகரிக்கிறது. உதாரணமாக, வறுமை, வேலையின்மை மற்றும் பாதுகாப்பின்மை போன்ற நாளாந்த அழுத்தங்கள் போர் அதிர்ச்சிக்கும் உளவியல் துயரத்திற்கும் இடையிலான உறவை மத்தியஸ்தம் செய்கின்றன. இதன் விளைவாக பெரும்பாலும் தற்கொலை எண்ணம் அல்லது முயற்சிகள் ஏற்படுகின்றன.

தெற்காசியாவின் போருக்குப் பிந்தைய காலகட்டம், உளக்காயங்கள் மற்றும் தற்கொலைக்கான பல்வேறு, ஆனால் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உதாரணங்களை வழங்குகின்றன. நேபாளத்தில், தசாப்த கால மாவோயிஸ்ட் கிளர்ச்சி (1996-2006) பரவலான மனநலப் பிரச்சினைகளின் பாரம்பரியத்தை விட்டுச் சென்றது. மோதலுக்குப் பிந்தைய மனச்சோர்வு (40% வரை), பதட்டம் (26% முதல் 47% வரை) மற்றும் PTSD (14%) ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இருப்பதாக ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.5 முன்னாள் சிறார் போராளிகள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களில், ஐந்தில் ஒருவருக்கு வாழ்நாள் முழுவதும் தற்கொலை எண்ணம் இருப்பதாகக் கூறப்படுகிறது. இது தனிப்பட்ட வன்முறை, பாலினம் (பெண்களில் அதிகம்) மற்றும் அதிர்ச்சி வெளிப்பாடு போன்ற காரணிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. அமைதிக்குப் பிறகும், பல ஆண்டுகளுக்குப் பிறகும், PTSD பாதிப்பு போராளிகளிடையே 22%த்தினை எட்டியது, மனச்சோர்வு போர் தொடர்பான அதிர்ச்சியுடன் வலுவாகத் தொடர்புடையது.6 போதுமான தடுப்பு உத்திகள் மற்றும் கலாசாரக் களங்கங்களால் தற்கொலைச் சுமைகள் பெருக்கப்படுவதால், அரசியல் வன்முறை மன உறுதியை எவ்வாறு அரிக்கிறது என்பதை இந்த ஆய்வு முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கையின் உள்நாட்டுப் போர், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிகழ்ந்த தீவிரமான சண்டைகள், இடப்பெயர்வுகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் பரவலாக இருந்த தமிழ்ச் சமூகத்திற்கு, பாரிய துன்பத்தை ஏற்படுத்தின. மூன்று தசாப்தங்களாக தமிழர்கள், படுகொலைகள் செய்யப்படுதல், காணாமலாக்கப்படுதல் மற்றும் பொருளாதார முற்றுகைகளைத் தாங்கினர். இது 2009 இல் போர் முடிவடைந்த ஒரு தசாப்தத்திற்குப் பிறகும் நீடிக்கும் கூட்டு அதிர்ச்சிக்கு வழிவகுத்தது. இலங்கைத் தமிழர்களிடையே தற்கொலை இயக்கவியல் சிக்கலானது. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி போன்ற வடக்குப் பகுதிகளில், போருக்குப் பிந்தைய தற்கொலை முயற்சிகள் அதிகரித்தன. இவை தீர்க்கப்படாத துக்கம், வறுமை மற்றும் சாதிப் பாகுபாடு போன்ற சமூகப் பிரச்சினைகளுடன் தொடர்புடையவை. மீள்குடியேற்ற அழுத்தத்தின் மத்தியில் போருக்குப் பிந்தைய மன அழுத்தத்தால் இயக்கப்படும் தற்கொலைகளை அவைசார் வழக்குகள் பற்றிய ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

போருக்குப் பிந்தைய மன அழுத்தங்கள் இந்த அபாயங்களை அதிகரிக்கின்றன: இராணுவ



Image Source : www.economist.com

ஆக்கிரமிப்பு, நில அபகரிப்பு மற்றும் பொருளாதார ஓரங்கட்டல் ஆகியவை பாதுகாப்பின்மை மற்றும் நம்பிக்கையின்மையை வளர்க்கின்றன. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் உதவியைச் சார்ந்து இருந்தனர், சுய உந்துதலைக் குறைத்து, மனச்சோர்வை அதிகப்படுத்தினர். நோயை கர்ம பழிவாங்கலாகக் கருதும் பௌத்த மற்றும் இந்து நம்பிக்கைகளில் வேரூன்றிய கலாசார களங்கம், உதவி தேடுவதைத் தடுக்கிறது, குறைவாக அறிக்கை செய்வதற்குப் பங்களிக்கிறது.

போருக்குப் பிந்தைய சமூகங்களில் ஏற்படும் அதிர்ச்சி மற்றும் தற்கொலை, மோதலுக்கான நீடித்த மனிதச் செலவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. தெற்காசியாவின் அனுபவங்கள் வரலாற்று வன்முறை, கலாசார காரணிகள் மற்றும் சமூக - பொருளாதாரத் தடைகள் ஆகியவற்றின் இடைத்தொடர்பை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை, போரின் மரபுவழியாக உயர்ந்த PTSD, மனச்சோர்வு மற்றும் ஏற்ற இறக்கமான தற்கொலை விகிதங்கள், மீள்தன்மையை உருவாக்குதல் மற்றும் களங்கக் குறைப்புக்கு முன்னுரிமை அளிக்கும் அவசர, பன்முகத்தன்மை கொண்ட பதில்களைக் கோருகின்றன. நேபாளம் போன்ற பிராந்திய உதாரணங்களிலிருந்து கற்றுக்கொள்வதன் மூலம், கொள்கை வகுப்பாளர்கள் குணப்படுத்துதலை வளர்க்கலாம். மேலும் இந்தக் கண்ணுக்குத் தெரியாத காயங்களை மேலும் தலைமுறைகள் தாங்குவதைத் தடுக்கலாம். இறுதியில், உண்மையான அமைதிக்கு, உடல் ரீதியான மறுசீரமைப்பை மட்டுமல்ல, பாதிக்கப்பட்ட சமூகங்களின் உளவியல் ரீதியான மறுசீரமைப்பையும் கையாள வேண்டும்.

## களங்களின் கதைகள்

போருக்குப் பிந்தைய வடக்கில் தமிழர்களிடையே தற்கொலையைப் புரிந்து கொள்வதென்பது சவாலானது. இத்தற்கொலைகளை மனநலச் சேவைகளால் மட்டும் தடுக்க முடியாது என்ற உண்மை அதிர்ச்சியளிப்பது. கடந்த பத்தாண்டுகாலச் சான்றுகள் பின்னிப்பிணைந்த ஒரு சிக்கலைச் சுட்டிக்காட்டுகின்றன: தீர்க்கப்படாத அதிர்ச்சி, நாள்பட்ட தினசரி அழுத்தங்கள் (குறிப்பாக பொருளாதார மற்றும் சட்ட), கலாசார ரீதியாக பொருத்தமான மனநலப் பராமரிப்புக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் ஆகியவை முக்கிய காரணிகளாகின்றன. ஆய்வுக்குட்பட்ட சில நிகழ்வுகளின் அடிப்படையில் போருக்குப் பிந்தைய சமூகத்தின் தற்கொலைகளின் சிக்கற்தன்மைக்கான ஒரு வரைபடத்தை இப்பகுதியில் சில கதைகளின் வழி பார்க்கலாம்.

## போர் தந்த அதிர்ச்சியும் தீர்க்கப்படாத துயரமும்

26 ஆண்டுகள் நீடித்த போரானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்ற

வடபகுதிகளில் உள்ள தமிழ் மக்கள் மீது கடுமையான உளவியல் வடுக்களை ஏற்படுத்தியது. அங்கு கடுமையான சண்டை, ஷெல் தாக்குதல், காணாமலாக்கப்படுதல் மற்றும் பெருமளவிலான இடப்பெயர்வுகள் பொதுவானவை. இந்தக் கூட்டு அதிர்ச்சி, பிந்தைய மனஉளைச்சல் சீர்கேடு (PTSD), பெரும் மனச்சோர்வு, பதட்டக் கோளாறுகள் மற்றும் தீர்க்கப்படாத துக்கம் என வெளிப்படுகிறது. இது பெரும்பாலும் உயிர் பிழைத்தவரின் குற்ற உணர்ச்சியால் அதிகரிக்கிறது - அன்புக்குரியவர்களை விட அதிகமாக வாழ்வதற்கான அவமானம் அல்லது பொறுப்பின் அதிகப்படியான உணர்வு. இறப்புகள், சித்திரவதைகள் மற்றும் கட்டாய இடப்பெயர்வுகள் உள்ளிட்ட பல அதிர்ச்சிகரமான நிகழ்வுகளுக்கு ஆளாவது, 'கூட்டு விளைவை' உருவாக்குகிறது. அந்த ஒட்டுமொத்த அனுபவங்கள் மனநல நெருக்கடிகளுக்கான பாதிப்பை அதிகரிக்கின்றன என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. உதாரணமாக, வன்னிப் பிராந்தியத்தில் தொற்றுநோயியல் ஆய்வுகள், 92% தொடக்கப் பள்ளி குழந்தைகள் போர் மற்றும் ஷெல் தாக்குதல் போன்ற பயங்கரவாத நிகழ்வுகளுக்கு ஆளாகியுள்ளதாகவும், 25% பேர் PTSD ஆல் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 57% பேர் சமூக விலகல், அறிவாற்றல் குறைபாடு மற்றும் பலவீனமான பள்ளிச் செயல்திறன் போன்ற நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு உள்ளானதாகவும் வெளிப்படுத்தின.7 குடும்ப மட்டத்தில், குடும்பத் தலைவர்களின் காணாமல் போதல் அல்லது மரணம் இயக்கவியலைச் சீர்குலைத்து, 'மௌனத்தின் சதி'யை வளர்க்கிறது. அங்கு சொல்லப்படாத துக்கம் குழந்தைகளின் நடத்தைப் பிரச்சினைகளையும், உயிர்பிழைத்த பெற்றோரின் மனச்சோர்வையும் அதிகரிக்கிறது.

போருக்குப் பிந்தைய காலத்தில், இந்தக் காயங்கள் தொடர்ந்து இராணுவமயமாக்கல், நிலப்பிரச்சினைகள் மற்றும் பொருளாதார உறுதியற்ற தன்மை காரணமாக நீடிக்கின்றன. அவை கடந்தகாலம் மூடப்படுவதைத் தடுக்கின்றன மற்றும் நம்பிக்கையற்ற உணர்வுகளை அதிகரிக்கின்றன. வடக்கு மாவட்டங்களில் தற்கொலை விகிதங்கள் போர்க்காலத்தில் 43-52% ஆகக் குறைந்துள்ளன (100,000 பேருக்கு சுமார் 27-34 என்ற அடிப்படையிலிருந்து 11.8-14.4 குறைவாக), நெருக்கடியின் கீழ் அதிகரித்த சமூக ஒருங்கிணைப்பு மற்றும் இன ஒற்றுமை காரணமாக ('சமூகத்தில் பெரும் எழுச்சிகள், சமூகத்தின் ஒரு பெரிய ஒருங்கிணைப்பைச் சாதிக்கின்றன' என்ற டெர்கெய்மின் கோட்பாட்டுடன் ஒத்துப்போகின்றன). போருக்குப் பிந்தைய காலப்பகுதியில் இந்த விகிதங்கள் அதிகரித்துள்ளன. கிளிநொச்சி போன்ற பகுதிகளில் தற்கொலை முயற்சிகள் அதிகரித்து வருகின்றன. இது போர்க்கால ஒற்றுமையின் வீழ்ச்சியுடன் தொடர்புடையது. தனிமைப்படுத்தல், மன ஆரோக்கியத்தைச் சுற்றியுள்ள களங்கம் (அது நோயைக் கர்மமாகக் கருதும் கலாசாரக் கண்ணோட்டங்களில் வேரூன்றியுள்ளது), போதுமான சேவைகள் இல்லாமை ஆகியவை முக்கிய சவால்களாகின்றன. அரசாங்கத்தின் மனநல உட்கட்டமைப்பு குறைவான வளங்களுடன் இயங்குவதால், அரசு சாரா நிறுவனங்கள் முன்னெடுக்கும் தலையீடுகளே பெரும்பாலும் காணப்படுகின்றன.

கிளிநொச்சியைச் சேர்ந்த 40 வயதுடைய ஒரு தாயின் கதையை ஓர் உதாரணமாகக் கொள்ளலாம். 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் நடந்த கொடூரமான இறுதித் தாக்குதலின் போது, ஷெல் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிச் சூடுகளில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்தனர். குண்டு வெடிப்புகளுக்கு மத்தியில் சேற்று வயல்களில் தப்பிச்செல்வது போன்ற தொடர்ச்சியான குழப்பக் கனவுகளால் வேட்டையாடப்பட்டு, உயிர் பிழைத்திருக்கும் குற்ற உணர்ச்சியால் ('அவர்கள் இல்லாதபோது நான் ஏன் வாழ்கிறேன்?') வேதனைப்பட்டு, அவர் தனது சமூகத்திலிருந்து விலகி, சமூகக் கூட்டங்களைத் தவிர்த்து, வேலைவாய்ப்பைத் தக்க வைத்துக்கொள்ளப் போராடுகிறார். சிகிச்சையளிக்கப்படாத அவரது மனச்சோர்வு விரக்தியாக ஆழமடைகிறது. பூச்சிக்கொல்லியை உட்கொள்வதன் மூலம் தற்கொலையில் அவரது வாழ்க்கை முடிகிறது. எளிதான அணுகல் காரணமாக இலங்கையின் கிராமப்புறங்களில் இது ஒரு பொதுவான முறையாக உள்ளது. இது இடம்பெயர்ந்த விதவைகள், ஆதரவற்ற குடும்பங்களுக்குத் தலைமை தாங்குபவர்கள், கூட்டுத் துக்கத்தையும் வறுமையையும் எதிர்கொள்ளும் பரந்த வடிவங்களைப் பிரதிபலிக்கிறது.

கிளிநொச்சியில் பிறந்த ஒரு பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவி, தலைமுறை தலைமுறையாகப் போரில் ஏற்பட்ட அதிர்ச்சியை எடுத்துக்காட்டுகிறார். முள்ளிவாய்க்காலில் நடந்த ஷெல் தாக்குதலில் தனது தாயார் கொல்லப்பட்டதும், சகோதரி படுகாயமடைந்ததும், அனாதையாகப் படிப்பிற்காக யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்தார். ஆனால் தனிமைப்படுத்தப்பட்டார். தனது அறையில் தன்னைப் பூட்டிக்கொண்டு நண்பர்களுடன் உறவுகளைத் துண்டித்துக் கொண்டார். கல்வித்திறன் இருந்தபோதிலும், அவரது தீர்க்கப்படாத துக்கம் மற்றும் உளவியல் ஆதரவு இல்லாதது 2012 இல் அவரது தற்கொலைக்கு வழிவகுத்தது.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த ஓர் இளம் தம்பதிகள், முல்லைத்தீவில் மீள்குடியேற்ற அழுத்தங்களுக்கு மத்தியில் 2012 இல் தற்கொலை செய்துகொண்டனர். 1988 இல் பிறந்த அந்தப் பெண் பலமுறை இடம்பெயர்ந்தார்; 1983 இல் பிறந்த, விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஈடுபட்டுக் காயமடைந்த வரலாற்றைக் கொண்ட அந்த ஆண் அவருடைய துணைவனாக இருந்தார். இருவரும் சாதி வேறுபாடுகள் காரணமாக குடும்ப எதிர்ப்பை எதிர்கொண்டனர். இழப்புகள் மற்றும் பொருளாதாரக் கஷ்டங்களால் ஏற்பட்ட பொதுவான அதிர்ச்சியால் இது அதிகரித்தது. அவர்கள் பூச்சிக்கொல்லி கலந்த குளிர்பானங்களை உட்கொண்டு, இறப்பதற்கு முன் தங்களை ஒன்றாக இணைத்துக் கொண்டனர். இது அவர்களின் அவநம்பிக்கையான பிணைப்பைக் குறிக்கிறது. துக்கம், சமூக விலக்கு மற்றும் போருக்குப் பிந்தைய உறுதியற்ற தன்மையால் அவர்கள் தற்கொலை செய்துகொண்டார்கள் என்பதை இந்தக் கதை எடுத்துக்காட்டுகிறது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள கடலோரக் கிராமத்தைச் சேர்ந்த 18 வயதுப் பெண், தனது கணவரிடமிருந்து வீட்டு வன்முறையை எதிர்கொண்ட பிறகு தற்கொலைக்கு முயன்றார். இது போரினால் தூண்டப்பட்ட குடும்பச் செயலிழப்பு மற்றும் வறுமையில் வேரூன்றியுள்ளது. இளம் பருவத்தினரின் சுயதீங்கு அதிகரிப்பின் ஒரு பகுதியான அவரது கதை, நாள்பட்ட கஷ்டங்கள் மற்றும் சமாளிக்கும் வழிமுறைகள் இல்லாததுடன் தொடர்புடையது. இதேபோல், மற்றொரு இளம் பருவப் பெண்ணொருத்தியும், உறவு முறிவுகள் மற்றும் சமூகக் களங்கங்களுக்கு மத்தியில் தற்கொலைக்கு முயன்றார், ஆனால் நல்வாய்ப்பாக மீட்கப்பட்டார்.

## வறுமை மற்றும் கடன் பொறிகள்

வடக்கில், குறிப்பாக முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி போன்ற தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில், போருக்குப் பிந்தைய பொருளாதார நிலப்பரப்பு, பரவலான வறுமை, அதிக வேலையின்மை மற்றும் முறையான ஓரங்கட்டல் ஆகியவற்றால் குறிக்கப்படுகிறது. இது தற்கொலை அபாயத்தை அதிகரிக்கிறது. இலங்கை உள்நாட்டுப் போர் வடக்குப் பொருளாதாரத்தை பேரழிவிற்கு உட்படுத்தியது. விவசாய உட்கட்டமைப்பை அழித்தது. சமூகங்களை இடம்பெயர்ந்தது மற்றும் விவசாயம் மற்றும் மீன்பிடித்தல் போன்ற பாரம்பரிய வாழ்வாதாரங்களைச் சீர்குலைத்தது. போருக்குப் பிறகு, இப்பகுதி கூடுதல் சவால்களை எதிர்கொண்டது: இராணுவ ஆக்கிரமிப்பு, மேம்பாட்டுத் திட்டங்களுக்கான நில அபகரிப்பு மற்றும் மீன்பிடி மண்டலங்களுக்கான அணுகலை கட்டுப்படுத்துதல் போன்றவை பொருளாதாரத் தன்னிறைவை அரித்தது. வடக்கு மாகாணத்தில் 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில், குடும்பப் பிரச்சினைகள் (36.4%) மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் பயன்பாடு (86.2%) ஆகியவற்றுடன் 32% சமூகங்கள் வேலையின்மையை ஒரு முக்கிய பிரச்சினையாக அடையாளம் கண்டுள்ளன. இது குறைக்கப்பட்ட சமூக மற்றும் பொருளாதார மூலதனத்தைப் பிரதிபலிக்கிறது.

போருக்குப் பிந்தைய காலத்தில் இப்பகுதியில் பெருகிய நுண்நிதி நிறுவனங்கள் இந்த நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன. பொருளாதார மீட்சிக்கான கருவிகளாக பெரும்பாலும் விளம்பரப்படுத்தப்படும் இந்த நிறுவனங்கள், போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு - சில நேரங்களில் ஆண்டுதோறும் 20-30%த்தினை விட அதிகமாக - நிதி கல்வியறிவு குறைவாக உள்ளவர்களுக்கு - கொள்ளையடிக்கும் வட்டி விகிதங்களுடன் கடன்களை வழங்கின. சீரற்ற வானிலை மற்றும் நவீன உபகரணங்கள் இல்லாததால் ஏற்படும் பயிர்த் தோல்விகள், இந்த உயர் விகிதங்களுடன் இணைந்து, கடன் வாங்குபவர்களை கடன் சுழற்சியில் சிக்க வைத்தன. எடுத்துக்காட்டாக, முல்லைத்தீவில், விவசாயிகள் விவசாயத்தை மீண்டும் தொடங்க ரூ. 50,000-100,000 கடன் வாங்கியதாகத் தெரிவித்தனர். ஆனால் அவர்களால் அதனை அடைக்க முடியவில்லை. கடன் வசூலிப்பவர்களின் பொது அவமானம் உட்பட சமூக அழுத்தங்கள், அவமானம் மற்றும் நம்பிக்கையின்மை உணர்வுகளைத் தீவிரப்படுத்துகின்றன. வடக்கில் பொருளாதார நிலைமை மிகையான விகிதத்தில் கடன்களை வழங்கும் நுண்நிதி நிறுவனங்களின் வருகையால் மோசமடைந்துள்ளது. இது விரக்தியை ஏற்படுத்தும் கடன் பொறிகளுக்கு வழிவகுக்கிறது. போர் அதிர்ச்சியுடன் சேர்ந்து உருவாகும் இந்தப் பொருளாதார நெருக்கடி, தற்கொலையை - பெரும்பாலும் எளிதில் கிடைக்கக்கூடிய பூச்சிக்கொல்லிகளை உட்கொள்வதன் மூலம் - ஒரு தப்பிக்கும் வழியாக மாற்றும் ஓர் ஆபத்தான கூட்டத்தை உருவாக்குகிறது.

முல்லைத்தீவில் 45 வயது விவசாயி ஒருவர் போரின் போது பலமுறை இடம்பெயர்ந்து, 2010 இல் தனது விவசாய நிலத்தை மீட்டெடுக்க தனது கிராமத்திற்குத் திரும்பினார். அவரது வயல்கள் சேதமடைந்து சேமிப்பு இல்லாததால், விதைகள் மற்றும் உபகரணங்களை வாங்குவதற்காக அவர் ஒரு நுண்நிதி

நிறுவனத்திடமிருந்து ரூ. 80,000 கடன் வாங்கினார். வறட்சி மற்றும் மோசமான நீர்ப்பாசன உட்கட்டமைப்பு ஆகியன உண்டாக்கிய தொடர்ச்சியான பயிர் தோல்விகள் காரணமாக கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போனதால், ஆண்டுதோறும் 25% வட்டி கிடைத்தது. கடன் வசூலிப்பவர்கள் அவரது வீட்டிற்குச் சென்று, அண்டை வீட்டாரின் முன்னிலையில் அவரைப் பகிரங்கமாக அவமானப்படுத்தினர். இது நெருக்கமான தமிழ்ச் சமூகங்களில் கலாசார ரீதியாகப் பேரழிவை ஏற்படுத்தும் செயலாகும். தனது நிலத்தை இழந்து தனது குடும்பத்தை ஆதரிக்க முடியாமல் போகும் நெருக்கடியில் மூழ்கி, அவர் பூச்சிக்கொல்லியை உட்கொண்டார். அவரது கதை பரந்த பண்புகளைப் பிரதிபலிக்கிறது. கிராமப்புறத் தற்கொலைகளில் நுண்நிதிக் கடன் ஒரு முக்கிய காரணியாக இருந்தது. வடக்கு மாகாணத்தில் 60% கடன் வாங்குபவர்கள் மன அழுத்தம் தொடர்பான மனநலப் பிரச்சினைகளை எதிர்கொள்வதாகச் சொல்லியுள்ளனர். இம்மக்களுடன் செயற்படும் ஒரு சமூகச் செயற்பாட்டாளர் இவ்வாறு கூறினார்: "இந்தக் கடன்கள் நம்பிக்கையை உறுதியளிக்கின்றன. ஆனால் சங்கிலிகளை வழங்குகின்றன. குடும்பங்கள் உயிர்வாழ்வதற்காக கடன் வாங்குகின்றன. ஆனால் பயிர்கள் தோல்வியடையும் போது, அவர்களுக்கு மரணத்தைத் தவிர வேறு வழி தெரியவில்லை."

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 38 வயதான மீனவர், இதேபோன்ற பொருளாதார அழுத்தங்களை எதிர்கொண்டார். போருக்குப் பிந்தைய மீன்பிடி மண்டலங்களில் பாதுகாப்புக் காரணங்களுக்காக இராணுவத்தால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள், பாரம்பரிய மீன்பிடி நிலங்களுக்கான அணுகலை மட்டுப்படுத்தி, அவரது வருமானத்தைக் குறைத்தன. தனது குடும்பத்தைத் தக்கவைத்துக் கொள்ள, ஒரு புதிய வலையை வாங்கவும், தனது படகைச் சரிசெய்யவும் ஒரு நுண்கடன் நிறுவனத்திலிருந்து ரூ. 60,000 கடனைப் பெற்றார். இருப்பினும், அதிக வட்டி விகிதங்கள் மற்றும் வெளிப்புற இழுவைப் படகுகளின் அதிகப்படியான மீன்பிடித்தல் காரணமாக குறைந்தளவான மீன்பிடியே சாத்தியமானது. இது கடனைச் செலுத்த இயலாதவராக அவரை மாற்றியது. சொத்துப் பறிமுதல் மற்றும் சமூகக் களங்க அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட அவர், மன அழுத்தத்தில் மூழ்கினார். 2013 ஆம் ஆண்டில், அவர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டார். தனது குடும்பத்தை ஏமாற்றியதற்காக அவமானத்தை வெளிப்படுத்தும் ஒரு குறிப்பையும் விட்டுச் சென்றார். போருக்குப் பிந்தைய பொருளாதாரக் கொள்கைகளும் இராணுவமயமாக்கலும் வாழ்வாதாரங்களை எவ்வாறு கட்டுப்படுத்தியுள்ளன, மீனவர்களை கடனிலும் விரக்தியிலும் எவ்வாறு தள்ளியுள்ளன என்பதை அவரது கதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

கிளிநொச்சியில் 50 வயது விதவை ஒருவர், மூன்று குழந்தைகளைப் பராமரிக்கும் நிலையில், ஒரு சிறிய சில்லறை விற்பனைக் கடையைத் தொடங்க பல நுண்கடன் நிறுவனங்களிடமிருந்து ரூ. 100,000 கடன் வாங்கினார். கடன் விதிமுறைகளைப் பற்றி அறியாமலும், ஆக்கிரமிப்புச் சந்தைப்படுத்துதலின் அழுத்தத்தாலும், அவர் கூட்டு வட்டி விகிதங்களை எதிர்கொண்டார். இது இரண்டு ஆண்டுகளுக்குள் அவரது கடனை இரட்டிப்பாக்கியது. திருப்பிச் செலுத்த முடியாமல், நிதிப் போராட்டங்களுக்காக அவரது சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்ட அவர், பூச்சிக்கொல்லியைக் குடித்து தற்கொலைக்கு முயன்றார். ஆனால் மருத்துவமனைத் தலையீட்டின் மூலம் காப்பாற்றப்பட்டார். அவரது கதை, போர் இழப்புகளால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட விதவைகள், நுண்நிதித் திட்டங்களால் குறிவைக்கப்படுகிறார்கள்; இது நிதி அழிவு மற்றும் தற்கொலை எண்ணத்திற்கு வழிவகுக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

வவுனியாவைச் சேர்ந்த 22 வயதான இளைஞர் ஒருவர், தனது தந்தை ஒரு போராளியாக இருந்ததால், தனது குடும்பத்தை ஆதரிக்க பள்ளியை விட்டு வெளியேறினார். விரைவான இலாபம் கிடைக்கும் என்ற வாக்குறுதிகளால் ஊக்குவிக்கப்பட்டு, மோட்டார் சைக்கிள் பழுதுபார்க்கும் தொழிலைத் தொடங்க ரூ. 40,000 நுண்நிதிக் கடனை வாங்கினார். இருப்பினும், குறைந்த வாடிக்கையாளர்கள் மற்றும் அதிக திருப்பிச் செலுத்தும் கோரிக்கைகள் அவரைச் சிக்க வைத்தன. சேகரிப்பாளர்களின் துன்புறுத்தல் மற்றும் அவமானத்திற்குப் பயந்து, அவர் 2014 இல் தூக்குப்போட்டு தற்கொலைக்கு முயன்றார். ஆனால் குடும்பத்தினரால் மீட்கப்பட்டார். அவரது கதை இளைஞர்களிடையே வளர்ந்து வரும் போக்கைப் பிரதிபலிக்கிறது. அங்கு பொருளாதார விரக்தி மற்றும் வாய்ப்புகள் இல்லாமை இளம் தமிழர்களை சுயதீங்குக்குத் தள்ளுகின்றன. மருத்துவமனைப் பதிவுகள் நிதி அழுத்தத்துடன் தொடர்புடைய இளம் பருவத் தற்கொலை முயற்சிகளின் அதிகரிப்பைக் குறிப்பிடுகின்றன.

### இளைஞர் வேலையின்மை மற்றும் இழந்த எதிர்காலம்

வடக்கின் போருக்குப் பிந்தைய நிலப்பரப்பு, இளைஞர்களை முறையான வேலையின்மையுடனும், பரவலான நம்பிக்கையின்மையுடனும் போராட

வைத்துள்ளது. போர் கல்வி முறைகளைச் சீர்குலைத்தது, பொருளாதார உட்கட்டமைப்பை அழித்தது, மேலும் இராணுவமயமாக்கல் மற்றும் நிலக் கட்டுப்பாடுகளுக்கு வழிவகுத்தது, வேலை வாய்ப்புகளை கடுமையாகக் குறைத்தது. வடக்கு மாகாணங்களில் வேலையின்மை விகிதம் 32% வரை அதிகமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. தொழில்கள் பற்றாக்குறை, விவசாயம் மற்றும் மீன்பிடி வளங்களுக்கான அணுகல் கட்டுப்படுத்தப்பட்டது மற்றும் போருக்குப் பிந்தைய பொருளாதாரக் கொள்கைகளில் தமிழர்களை முறையாக ஓரங்கட்டுதல் காரணமாக இளைஞர்கள் (15-24 வயதுடையவர்கள்) குறிப்பாக இருண்ட வாய்ப்புகளை எதிர்கொள்கின்றனர். படித்த இளைஞர்களைப் பொறுத்தவரை, தகுதிகள் மற்றும் கிடைக்கக்கூடிய வேலைகளுக்கு இடையிலான பொருந்தாத்தன்மை - பெரும்பாலும் எதிர்பார்ப்பை விடக் குறைவானது அல்லது நிலையற்றது - விரக்தியையும் 'இழந்த எதிர்காலம்' என்ற உணர்வையும் தூண்டுகின்றன. கல்வி வெற்றி மற்றும் குடும்பப் பொறுப்பை வலியுறுத்தும் தமிழ்ச் சமூகத்தில் கலாசார எதிர்பார்ப்புகள், இளைஞர்கள் சமூக அல்லது குடும்ப எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய முடியாதபோது இந்த விரக்தியை அதிகரிக்கின்றன. 2018 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஓர் ஆய்வு, "வடக்கு இளைஞர்களிடையே வேலையின்மை மற்றும் குடும்பப் பொறுப்பு ஆகியவை மனநலம் மோசமடைவதற்குக் கணிசமாகப் பங்களிக்கின்றன. மேலும் சிக்கிக்கொள்ளும் உணர்வுகள் மற்றும் சமூக துண்டிப்பு தற்கொலை எண்ணத்தை தூண்டுகின்றன" என்று எடுத்துக்காட்டுகிறது. கட்டுப்படுத்தப்பட்ட புலம்பெயர்வதற்கான வாய்ப்புகள் மற்றும் நிதி தடைகள் காரணமாக சாத்தியமான இடப்பெயர்வுப் பாதைகள் இல்லாதது, இளைஞர்களை தேக்கநிலைச் சுழற்சியில் மேலும் சிக்க வைக்கிறது. வடக்கு சமூகங்களில் 36.4% பேர் பொருளாதார மற்றும் சமூக அழுத்தங்களுடன் தொடர்புடைய செயற்பாட்டு இயலாமையைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் 2019 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வணிகப் பட்டம் பெற்றார். தகுதிகள் இருந்தபோதிலும், தனியார் துறையில் வாய்ப்புகள் குறைவாகவும், பொதுத்துறை வேலைகள் பெரும்பாலும் தமிழர்களுக்கு அணுக முடியாத அரசியல் தொடர்புகளின் அடிப்படையில் ஒதுக்கப்படுவதாலும், அவருக்கு நிலையான வேலை கிடைக்கவில்லை. அவர் தனது சகாக்கள் வெளிநாடுகளுக்குக் குடிபெயர்வதை அவதானித்தார். ஆனால் 'விசா' செலவுகள் மற்றும் அதற்கான தொடர்புகள் இல்லாததால் அவரால் அந்தப் பாதையில் பயணிக்க இயலவில்லை. அவர் பகல்நேரக் கூலி அல்லது தெரு விற்பனை போன்ற குறைந்த ஊதியம் தரும், நிலையற்ற வேலைகளை மேற்கொள்கிறார். அவரது வயதான பெற்றோர் மற்றும் இளைய உடன்பிறப்புகளை ஆதரிப்பதற்கான சமூக எதிர்பார்ப்பு பெரிதும் எடைபோடுகிறது. ஏனெனில் தமிழ்க் கலாசாரம் குடும்ப கௌரவத்தையும் நிதி ஸ்திரத்தன்மையையும் நிலைநிறுத்த இளைஞர்களுக்கு குறிப்பிடத்தக்க பொறுப்பை அளிக்கிறது. தொடர்ச்சியான நிராகரிப்புகள் மற்றும் சமூக அழுத்தங்களால் மூழ்கடிக்கப்பட்ட அவர், ஒரு நண்பரிடம், "நான் மிகவும் கஷ்டப்பட்டுப் படித்தேன், ஆனால் இங்கே எனக்கு எதுவும் இல்லை. நான் அனைவரையும் ஏமாற்றுகிறேன்" என்று கூறுகிறார். 2020 ஆம் ஆண்டில், வேலையின்மையின் அவமானத்தையும், நோக்கமற்ற எதிர்காலத்தைப் பற்றிய பயத்தையும் சமாளிக்க முடியாமல், அவர் வீட்டிலேயே தூக்குப்போட்டுத் தற்கொலை செய்து கொள்கிறார். அவரது கதை, வடக்கில் இளைஞர்கள் ஆழ்ந்த நிலையற்ற உணர்வை எதிர்கொள்கின்றனர், வேலையின்மை, பயனற்ற தன்மை மற்றும் விரக்தியின் உணர்வுகளை அதிகரிக்கிறது போன்றவற்றின் பரந்த போக்கைப் பிரதிபலிக்கிறது.

கிளிநொச்சியைச் சேர்ந்த 24 வயது பெண் ஒருவர், கற்பித்தல் துறையில் டிப்ளோமா முடித்தார். ஆனால் உள்ளூர்ப் பள்ளிகளில் வேலைவாய்ப்புகள் கிடைக்கவில்லை. அவை நிதிப் பற்றாக்குறையாகவும், போருக்குப் பிந்தைய இடப்பெயர்ச்சி முறைகள் காரணமாகவும் அதிகமாகவும் உள்ளன. போர் தொடர்பான இழப்புகளிலிருந்து மீள்வதற்கு அவரது குடும்பம் தனது சாத்தியமான வருமானத்தை நம்பியிருப்பதால், அவர் ஒரு கடை உதவியாளராக குறைந்த ஊதியத்தில் வேலை செய்கிறார். இது அவரது விருப்பங்களுக்கு மிகவும் குறைவாக உள்ளது. அவரது கல்விக்கும் அவரது யதார்த்தத்திற்கும் இடையிலான வேறுபாடு, 'மரியாதைக்குரிய வேலை'யைப் பெறுவதில் அவரது 'தோல்வி' குறித்து உறவினர்களிடமிருந்து வரும் கேலிப்பேச்சுகளுடன் சேர்ந்து, அவரது போதாமை உணர்வை ஆழப்படுத்துகிறது. இது குறித்து அவரது நண்பர் இவ்வாறு பகிர்ந்தார்: "அவர் தான் ஒரு சுமையாக உணர்ந்தார், எப்போதும் கனடாவுக்கு குடிபெயர்ந்து வீட்டிற்கு பணம் அனுப்பும் உறவினர்களுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்த்தார்". அவர் தூக்குப்போட்டு தற்கொலைக்கு முயன்றார். ஆனால் ஒரு பக்கத்து வீட்டுக்காரர் தற்செயலாகக் கண்டதால்

மீட்கப்பட்டார். அவரது கதை, படித்த இளைஞர்கள், குறிப்பாகப் பெண்கள், பாரம்பரியக் கடமைகளை நிறைவேற்ற கடுமையான சமூக அழுத்தத்தை எதிர்கொள்கிறார்கள், மேலும் வேலையின்மை கடுமையான மனநல நெருக்கடிகளைத் தூண்டுகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

மன்னாரைச் சேர்ந்த 20 வயது இளைஞர் ஒருவர் போரின் போது இடப்பெயர்ச்சி காரணமாக பாடசாலையை விட்டு வெளியேறி, ஒரு மோட்டார் சைக்கிள் மெக்கானிக்காக முறைசாரா பொருளாதாரத்தில் சேர்ந்தார். போருக்குப் பிறகு, அவர் தனது திறமைகளை முறைப்படுத்த விரும்பினார். ஆனால் பயிற்சித் திட்டங்களோ அல்லது நிலையான வேலைவாய்ப்போ கிடைக்கவில்லை. மீன்பிடிக் கட்டுப்பாடுகள் அவரது குடும்பத்தின் பாரம்பரிய வாழ்வாதாரத்தை மட்டுப்படுத்தியதால், அவர் நிதி ரீதியாக பங்களிக்க அழுத்தத்தை எதிர்கொண்டார். தெற்கு இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள நண்பர்கள் சிறந்த வாய்ப்புகளை அணுகுவதைக் கண்டதன் மூலம் அவரது விரக்தி அதிகரித்தது. தனது சூழ்நிலைகளை மேம்படுத்த எந்த வழியும் இல்லாமல் சிக்கிக்கொண்ட அவர், தனது வீட்டின் கொல்லைப்புறத்தில் கயிற்றைப் பயன்படுத்தி தற்கொலை செய்து கொண்டார். இந்தக் கதை, வடக்கில் பல்கலைக்கழக வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு முறையான கவனிப்பு மற்றும் தொழில் வாய்ப்புகள் இல்லாதது எதிர்காலத்தை இழக்கும் உணர்வுக்கு எவ்வாறு பங்களிக்கிறது என்பதையும், அது எவ்வாறு தற்கொலை விகிதங்களை அதிகரிக்கிறது என்பதையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

## குடும்பம் மற்றும் வீட்டு அழுத்தங்கள்

போருக்குப் பிந்தைய வடக்கில், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்கள் மத்தியில், குடும்பம் மற்றும் வீட்டு அழுத்தங்கள் தற்கொலைக்குக் கணிசமாகப் பங்களிக்கின்றன. உள்நாட்டுப் போர் பாரம்பரியக் குடும்பக் கட்டமைப்புகளை சீர்குலைத்தது. இறப்புகள், காணாமல் போதல் மற்றும் இடப்பெயர்வு காரணமாக பல வீடுகள் துண்டு துண்டாகின. இது தலைமுறைசார் பதட்டங்களுக்கு வழிவகுத்தது. போரினால் பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் அல்லது பெரியவர்கள் குடும்ப மரியாதை மற்றும் ஒற்றுமையைப் பராமரிக்க கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். இது பெரும்பாலும் ஆணாதிக்க தமிழ்க் கலாசார விதிமுறைகளில் வேரூன்றியுள்ளது. இந்த விதிமுறைகள், குறிப்பாக இளம் பெண்களுக்கு, ஆரம்பகாலத் திருமணம், பெண் கற்பு மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றை வலியுறுத்துகின்றன. அதேநேரத்தில் இளைஞர்கள் தங்களுக்குரிய பாத்திரங்களை நிறைவேற்றுவதற்கான அழுத்தத்தை எதிர்கொள்கின்றனர். வடக்குச் சமூகங்களில் 36.4%, செயற்படாத குடும்ப அலகுகளைக் கொண்டிருப்பதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இது வீட்டு வன்முறை, மது அருந்துதல் மற்றும் நபர்களுக்கிடையிலான மோதல்கள் ஆகியவற்றால் குறிக்கப்படுகிறது. இது மனநலப் பிரச்சினைகளை அதிகரிக்கிறது. மனநலத்தைச் சுற்றியுள்ள கலாசார களங்கம் மற்றும் ஆலோசனைக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் காரணமாக, உணர்ச்சி வெளிப்பாட்டிற்கான பாதுகாப்பான வழிகள் இல்லாததால், இளைஞர்கள் சிக்கிக் கொள்கிறார்கள்.

2018 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஓர் ஆய்வில், “குடும்ப மோதல்கள், குறிப்பாக கடுமையான எதிர்பார்ப்புகள் மற்றும் வீட்டு துஷ்பிரயோகம் ஆகியவை வடக்கில் உள்ள இளம் பருவத்தினரிடையே தற்கொலை எண்ணத்தை ஏற்படுத்தும் குறிப்பிடத்தக்க காரணிகளாகும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வவுனியா மற்றும் மட்டக்களப்பில் உள்ள மருத்துவமனைப் பதிவுகள் போருக்குப் பிறகு இளம் பருவத்தினர் தற்கொலை முயற்சிகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கின்றன.

வவுனியாவைச் சேர்ந்த 17 வயதுப் பெண், போரால் பாதிக்கப்பட்ட ஒரு வீட்டில் வசிக்கிறார். அவரது விதவைத் தாயார், 2009 முள்ளிவாய்க்கால் தாக்குதலின் போது தனது கணவரை இழந்ததால் வறுமை மற்றும் அதிர்ச்சியுடன் போராடுகிறார். பெண் அடக்கமாக, கீழ்ப்படிதலாக இருக்க வேண்டும் போன்ற கலாசார இலட்சியங்களை நிலைநிறுத்த அப்பெண் குடும்பத்தின் தீவிர கண்காணிப்பை எதிர்கொள்கிறாள். அவளது 18 வயதில் தனது குடும்பத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் ஆணைத் திருமணம் செய்துகொள்ள அழுத்தம் கொடுக்கப்படுகிறது. தனது பள்ளியைச் சேர்ந்த ஒரு பையனுக்கு குறுஞ்செய்தி அனுப்பும்போது, அவள் குடும்பத்திற்கு அவமானத்தை ஏற்படுத்துவதாகக் குற்றஞ்சாட்டும் அவரது தாயார் மற்றும் மாமாவால் கடுமையாகத் திட்டப்படுகிறார். வாய்மொழியாகக் கண்டிக்கப்பட்ட இந்த வார்த்தைகள் அவர்களின் நெருக்கமான சமூகத்திற்குள் பொது அவமானமாக மாறுகின்றன. உறவினர்கள் அவளை ‘கீழ்ப்படியாதவள்’ என்று முத்திரை குத்துகின்றனர். இந்த எதிர்பார்ப்புகளால் திக்கித் திணறி, ஆலோசனையையோ நண்பர்களின் ஆதரவையோ அணுக முடியாமல், அவள் ஒரு நண்பியிடம், “என்னால் இப்படி வாழ முடியாது. அவர்கள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறார்கள், எனக்குப் பேச யாரும் இல்லை” என்று கூறுகிறாள். சிலகாலத்தின் பின் விரக்தியில் மூழ்கி, பூச்சிக்கொல்லியை உட்கொண்டு இறந்துவிடுகிறாள்.

இந்தக் கதை, வடக்கில் இளம் பருவப் பெண்கள் ஆணாதிக்க குடும்ப அமைப்புகளிலிருந்து கடுமையான அழுத்தத்தை எதிர்கொள்கின்றனர், தற்கொலை முயற்சிகள் பெரும்பாலும் சுயவிருப்புக்கான உரிமை மற்றும் திருமணம் தொடர்பான மோதல்களுடன் தொடர்புடையவை என்பதைக் காட்டுகின்றது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 19 வயதுப் பெண், சிகிச்சை அளிக்கப்படாத 'PTSD' மற்றும் மதுவுக்கு அடிமையான தனது தந்தையுடன் வசிக்கிறாள். அவளது தந்தைக்கு அடிக்கடி ஏற்படும் கோபங்கள் மற்றும் உடல் ரீதியான துஷ்பிரயோகம் போன்றன ஒரு கொந்தளிப்பான வீட்டுச் சூழலை உருவாக்குகின்றன. குடும்பத்தின் நிதிச் சுமைகளைக் குறைக்க ஒரு நிச்சயிக்கப்பட்ட திருமணத்தை ஏற்றுக்கொள்ள அழுத்தம் கொடுக்கப்பட்ட அவள், தனது கல்வியைத் தொடர விரும்புகிறாள். அவளது தந்தை அவளது திருமணத்தை நடாத்துவதாக அச்சுறுத்தியதால் ஏற்பட்ட வாக்குவாதத்திற்குப் பிறகு, அவள் வீட்டைச் சுத்தம் செய்யும் திரவத்தைக் குடித்து தற்கொலைக்கு முயன்றாள். மருத்துவமனையின் உதவியால் அவள் உயிர் பிழைக்கிறாள். அவளது கதை, வீட்டு வன்முறை மற்றும் கடுமையான குடும்ப எதிர்பார்ப்புகள் போன்றவை போர் தொடர்பான அதிர்ச்சியால் மேலும் தீவிரமடைந்து, இளம் பெண்கள் தாங்க முடியாத வீட்டுச் சூழல்களில் இருந்து தப்பிப்பதற்கான ஒரு வழியாக தற்கொலையைப் பார்க்கத் தூண்டுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது.

கிளிநொச்சியைச் சேர்ந்த 21 வயது இளைஞன், போரின் போது தனது தாயார் இறந்த பிறகு, ஒரு வேலையைப் பெறவும், தனது தம்பி, தங்கைகளை ஆதரிக்கவும் தனது பெரிய குடும்பத்தினரிடமிருந்து கடுமையான அழுத்தத்தை எதிர்கொள்கிறார். வேலையின்மையால் போராடி வரும் அவர், குடும்பப் பொறுப்பை ஏற்கும் பாத்திரத்தைக் கொண்டிருப்பதற்கான கலாசார எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய இயலாமையால் சோர்வடைந்ததாக உணர்கிறார். வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்த உறவினர்களுடனான அவரது தந்தையின் தொடர்ச்சியான ஒப்பீடுகள் அவரது தோல்வி உணர்வை அதிகரிக்கின்றன. அவரது தந்தை அவரை 'பயனற்றவர்' என்று அழைத்த ஒரு வாக்குவாதத்திற்குப் பிறகு, அவர் தூக்கில் தொங்குகிறார். இது குறித்துக் கருத்துத் தெரிவித்த பாடசாலை அதிபர் ஒருவர் "இவர் போன்ற இளைஞர்கள் வேலைகள் இல்லாத இடத்தில் குடும்ப எதிர்பார்ப்புகளின் எடையால் நசுக்கப்படுகிறார்கள்; அவர்களுக்கு எந்த நோக்கமும் இல்லை என்று அவர்கள் உணர்கிறார்கள்" என்றார். இந்தக் கதை, ஆணாதிக்க விதிமுறைகள் பெண்களை மட்டுமன்றி இளைஞர்களையும் சுமையாகக் காட்டி, அவர்கள் உணரப்பட்ட தோல்விக்கான பதிலாக தற்கொலையைத் தேர்வு செய்யத் தூண்டுகின்றன என்பதை வெளிப்படுத்துகிறது.

## மது துஷ்பிரயோகம் மற்றும் வீட்டு வன்முறை

போருக்குப் பிந்தைய காலப்பகுதியில் தமிழ்ச் சமூகங்களிடையே, மது துஷ்பிரயோகம் மற்றும் வீட்டு வன்முறை ஆகியவை பரவலாகப் பரவி வரும் பிரச்சினைகளாகும். இது தற்கொலை விகிதங்களுக்கு கணிசமாகப் பங்களிக்கிறது. போர் ஏற்படுத்திய ஆழ்ந்த உளவியல் வடுக்கள், வன்முறை, இடப்பெயர்வு மற்றும் இழப்பு ஆகியவற்றிலிருந்து பரவலான அதிர்ச்சி, சுயமருந்தின் ஒரு வடிவமாக போதைப்பொருள் துஷ்பிரயோகத்திற்கான நிலைமைகளை வளர்க்கிறது. வடக்கு சமூகங்களில் 84.5% ஆன ஆண்களிடம் மதுப்பழக்கம் பரவியுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது பெரும்பாலும் சிகிச்சையளிக்கப்படாத பிந்தைய மனஉளைச்சல் சீர்குலைவு, மனச்சோர்வு, வறுமை மற்றும் வேலையின்மை போன்ற பொருளாதார அழுத்தங்களுடன் தொடர்புடையது. மது துஷ்பிரயோகம் மனநலப் பிரச்சினைகளை அதிகரிக்கிறது, மனக்கிளர்ச்சியை அதிகரிக்கிறது மற்றும் வீட்டு வன்முறை மூலம் வீடுகளைச் சீர்குலைக்கிறது. குறிப்பாகப் போராளிகள், உடல் ரீதியாக காயமடைந்த ஆண்கள், உடல் வலி மற்றும் உணர்ச்சி ரீதியான துயரங்களைச் சமாளிக்க மதுவைப் பயன்படுத்துவதால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். இது வன்முறை நடத்தைக்கு எரிபொருளாகிறது, குடும்ப உறவுகளைச் சீர்குலைக்கிறது மற்றும் குற்ற உணர்வு, அவமானம் மற்றும் தற்கொலை எண்ணங்களுக்கு வழிவகுக்கிறது. 2018 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஓர் ஆய்வு, "வடக்கில் மதுவைத் தவறாகப் பயன்படுத்துவது வீட்டு வன்முறைக்கு ஒரு முக்கிய காரணியாகும். இது உளவியல் துயரத்தையும் தற்கொலை அபாயத்தையும் அதிகரிக்கிறது. குறிப்பாக அதிர்ச்சி மற்றும் சமூக அழுத்தங்களுடன் போராடும் ஆண்கள் மத்தியில் வியாபகமாகவுள்ளது" என்று தெரிவிக்கிறது.

மன்னாரைச் சேர்ந்த 42 வயது முன்னாள் மீனவரின் கதையிது. அவர் 2009 ஆம் ஆண்டு போரின் இறுதிக் கட்டத்தில் சிறு சிறு காயங்களுக்கு ஆளானார். இதனால் அவருக்கு நாள்பட்ட வலி மற்றும் பகுதி இயலாமை ஏற்பட்டது. தடைசெய்யப்பட்ட மீன்பிடி மண்டலங்கள் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக தனது வாழ்வாதாரத்தை மீண்டும் தொடங்க முடியாமல், உடல் வலி மற்றும் போர்

நினைவுகளின் உளவியல் எடை (ஷெல் தாக்குதலில் தனது சகோதரனை இழந்தது உட்பட) இரண்டையும் மரத்துப்போகச் செய்ய உள்ளூரில் காய்ச்சப்பட்ட சாராயத்தை நாடுகிறார். அவரது மதுச் சார்பு, குடும்பத்தின் அற்ப வருமானத்தில் பெரும்பகுதியை இழக்கச் செய்தது. அவரது மனைவி மற்றும் பதின்ம வயதுக் குழந்தைகளுக்கு எதிராக அடிக்கடி வன்முறை வெடிப்புகளுக்கு வழிவகுக்கிறது. இதில் குடிபோதையில் அவர் நிகழ்த்தும் உடல் ரீதியான துஷ்பிரயோகமும் அடங்கும். இதுபோன்ற ஒரு சம்பவத்திற்குப் பிறகு, அண்டை வீட்டாரின் முன்னிலையில் தனது மனைவியைத் தாக்கிய அவர், வெட்கத்தாலும் குற்ற உணர்ச்சியாலும் மூழ்கி, ஒரு உறவினரிடம், "நான் ஓர் அரக்கனாக மாறிவிட்டேன்; நான் இல்லாமல் என் குடும்பம் நன்றாக இருக்கும்" என்று கூறுகிறார். சில நாட்களுக்குப் பிறகு, அவர் தனது வீட்டில் தூக்கில் தொங்குகிறார். சிகிச்சை அளிக்கப்படாத அதிர்ச்சிக்கு பெரும்பாலும் எதிர்வினையாக இருக்கும் மது அருந்துதல், வீட்டு வன்முறையையும் அதைத் தொடர்ந்து வரும் குற்ற உணர்ச்சிகளையும் அதிகரிக்கிறது, போருக்குப் பிந்தைய சமூகங்களில் ஆண்களை தற்கொலைக்கு இட்டுச் செல்கிறது என்ற கருத்துடன் அவரது கதை ஒத்துப்போகிறது.

கிளிநொச்சியைச் சேர்ந்த 35 வயதுடைய முன்னாள் போராளி, 'PTSD' மற்றும் போர்க்கால அனுபவங்களிலிருந்து வரும் கனவுகளுடன் போராடுகிறார். வேலையில்லாமல், போருக்குப் பிறகு இடம்பெயர்ந்தோர் முகாமில் வசிக்கும் அவர், மலிவான மதுவை, தன்னைச் சமாளிக்க நம்பியுள்ளார். அவரது குடிப்பழக்கம் அவரது மனைவியை வாய்மொழியாகவும் உடல் ரீதியாகவும் துன்புறுத்துகிறது. மனைவி இரண்டு குழந்தைகளுடன் வெளியேறுவதாக அச்சுறுத்துகிறார். குடிபோதையில் வீட்டுப் பொருட்களை உடைத்த ஒரு வன்முறைச் சம்பவத்திற்குப் பிறகு, அவர் பூச்சிக்கொல்லியை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றார். ஒரு சுகாதார ஊழியரிடம், "என்னால் குடிப்பதை நிறுத்த முடியாது, நான் அவர்களுக்குச் செய்ததை என்னால் எதிர்கொள்ள முடியாது" என்று கூறினார். மருத்துவமனைச் சிகிச்சைக்குப் பிறகு அவர் உயிர் பிழைக்கிறார். ஆனால் நிலையான மனநல ஆதரவு இல்லாமல் ஆபத்தில் இருக்கிறார். இந்தக் கதை, போர் அதிர்ச்சியில் வேரூன்றிய மதுவால் தூண்டப்பட்ட வீட்டு வன்முறை, அவமானம் மற்றும் தற்கொலை நடத்தையின் தீய சுழற்சியை எவ்வாறு உருவாக்குகிறது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 30 வயது பெண், தனது கணவருடன் வசிக்கிறார். போருக்குப் பிந்தைய பொருளாதாரக் கட்டுப்பாடுகள் காரணமாக வேலையை இழந்த பிறகு, அவரது கணவர் மதுவுக்கு அடிமையானார். அவரது குடிபோதையிலான உடல் மற்றும் உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகங்கள், அப்பெண்ணைத் தனிமைப்படுத்துகின்றன. அவர் ஓர் இணக்கமான குடும்பத்தைப் பராமரிப்பதில் 'தோல்வியடைந்ததற்காக' சமூக அவமானத்தை எதிர்கொள்கிறார். அவரது கணவர் பகிரங்கமாக அவமானப்படுத்திய ஒரு சம்பவத்திற்குப் பிறகு, அப்பெண் சுத்தம் செய்யும் திரவத்தை உட்கொண்டு தற்கொலைக்கு முயற்சிக்கிறார். பக்கத்து வீட்டுக்காரரின் உதவி அவரைக் காப்பாற்றுகிறது. ஆனால் அவரது கதை ஒரு பரந்த போக்கைப் பிரதிபலிக்கிறது: வடக்கில் மதுவால் இயக்கப்படும் வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள், துஷ்பிரயோகம் மற்றும் சமூகத் தீர்ப்பிலிருந்து தப்பிக்க தற்கொலையைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

### முன்னாள் போராளிகளின் சமூக தனிமைப்படுத்தல்

போருக்குப் பிறகு, முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் ஆழ்ந்த சமூக தனிமைப்படுத்தலை எதிர்கொள்கின்றனர். இது யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்ற தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் தற்கொலை விகிதங்களுக்கு கணிசமாகப் பங்களிக்கிறது. போர் ஆயிரக்கணக்கான முன்னாள் போராளிகளை உடல் மற்றும் உளவியல் வடுக்களுடன் போராட வைத்தது. போருக்குப் பிந்தைய, அரசாங்கத்தால் நடத்தப்பட்ட மறுவாழ்வுத் திட்டங்கள், 12,000க்கும் மேற்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களை விடுவித்த போதிலும், பெரும்பாலும் அர்த்தமுள்ள மறுசீரமைப்பு ஆதரவை வழங்கத் தவறிவிட்டன. முன்னாள் போராளிகள் தமிழ்ச் சமூகங்கள் மற்றும் அரசு அதிகாரிகளால் 'துரோகிகள்' அல்லது 'பயங்கரவாதிகள்' என்று களங்கப்படுத்தப்பட்டனர். பாதுகாப்புப் படையினரின் தொடர்ச்சியான கண்காணிப்பு, வேலையின்மை மற்றும் நிலம் மற்றும் வளங்களுக்கான வரம்புக்குட்பட்ட அணுகல் ஆகியவற்றுடன் இணைந்து, அவர்களின் அந்நியப்படுத்தலை அதிகரிக்கிறது. ஒரு காலத்தில் புலிகளின் நோக்கத்துடன் இணைக்கப்பட்ட அடையாள இழப்பு - நோக்கமற்ற உணர்வுகளை அதிகரிக்கிறது. பல முன்னாள் போராளிகள் 'துரோக உணர்வு' மற்றும் சமூகத்தில் சொந்தம் இல்லாதது குறித்து கவலை தெரிவிக்கின்றனர். முன்னாள் போராளிகள் சமூக ரீதியாக ஓரங்கட்டப்படுதல், சிகிச்சையளிக்கப்படாத அதிர்ச்சியுடன் இணைந்து, சமூகம் மற்றும் அரசின் நிராகரிப்பைச் சந்திப்பதால், தற்கொலை அபாயம்

கணிசமாக அதிகரிக்கப்படுகின்றது. கிராமப்புறங்களில் அவற்றின் அணுகல் காரணமாக, தூக்கில் தொங்குதல் அல்லது பூச்சிக்கொல்லி உட்கொள்ளல் போன்ற தற்கொலை முறைகள் பரவலாக உள்ளன. மருத்துவமனைத் தரவுகள் 2009க்குப் பிறகு முன்னாள் போராளிகளிடையே அதிகரித்த தற்கொலை முயற்சிகளைக் காட்டுகின்றன.

முல்லைத்தீவைச் சேர்ந்த 35 வயது முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர், போரின் போது பதின்மவயதில் புலிகள் இயக்கத்தில் இணைந்தார். 2011 இல் அரசாங்க மறுவாழ்வு முகாமில் இரண்டு ஆண்டுகள் கழித்து விடுவிக்கப்பட்ட அவர், தனது கிராமத்திற்குத் திரும்புகிறார். ஆனால் முன்னாள் போராளியுடன் தொடர்பு கொண்டால் இராணுவ விசாரணைக்கு உட்படுத்தப்படலாம் என்று அஞ்சும் அண்டை வீட்டாரின் விரோதத்தை எதிர்கொள்கிறார். விடுதலைப் புலிகளின் வரலாறு மற்றும் திறன் பயிற்சி இல்லாததால் வேலை மறுக்கப்பட்ட அவர், தனது வயதான பெற்றோரை ஆதரிக்கப் போராடுகிறார். வீட்டில் பாதுகாப்புப் படையினரின் வழக்கமான 'செக்இன்கள்' மற்றும் 'துரோகி' என்ற கிசுகிசுக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அவருடைய தனிமைப்படுத்தலினை மேலும் ஆழப்படுத்துகின்றன. வீழ்ந்த தோழர்களின் நினைவுகள் மற்றும் உயிர் பிழைத்தவரின் குற்ற உணர்ச்சியால் வேட்டையாடப்பட்ட அவர், ஓர் உறவினரிடம், "நான் எங்கள் மக்களுக்காகப் போராடினேன். ஆனால் இப்போது நான் அவர்களுக்கு ஒன்றுமில்லை. நான் எந்தச் சமூகத்தையும் சேர்ந்தவன் அல்ல" என்று கூறுகிறார். அந்நியப்படுதலால் மூழ்கி, மனநல உதவி கிடைக்காததால், அவர் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொள்கிறார். அவரது கதை, முன்னாள் போராளிகள் சமூக விலக்கு மற்றும் உளவியல் துயரங்களை எதிர்கொள்கின்றனர், தற்கொலை என்பது அவர்களின் இழந்த அடையாளம் மற்றும் மறு ஒருங்கிணைப்பு இல்லாமையின் துயரமான விளைவாகும் என்பதைக் காட்டுகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 28 வயதான முன்னாள் பெண் விடுதலைப் புலிகள் போராளி, 16 வயதில் வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு போரின் போது மருத்துவராகப் பணியாற்றினார். 2010 இல் மறுவாழ்விலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு, அவர் தனது சமூகத்தினரிடமிருந்து நிராகரிப்பை எதிர்கொள்கிறார். அங்கு அவர் போரில் ஈடுபட்டதாகக் கூறப்பட்ட வதந்திகள் சமூகப் புறக்கணிப்புக்கு வழிவகுக்கின்றன. முறையான கல்வி இல்லாததாலும், முன்னாள் போராளிகளை வேலைக்கு அமர்த்த முதலாளிகள் தயங்குவதாலும் வேலையைப் பெற முடியாத அவர், பாதுகாப்புப் படையினரின் தொடர்ச்சியான கண்காணிப்பின் கீழ் வறுமையில் வாழ்கிறார். அவரது 'PTSD' அறிகுறிகளுக்கு - கனவுகள் மற்றும் மிகை கண்காணிப்பு - கலாசாரக் களங்கம் மற்றும் மனநலச் சேவைகள் இல்லாமை காரணமாகச் சிகிச்சையளிக்கப்படவில்லை. ஒரு கோயில் திருவிழாவில் பகிரங்கமாக ஒதுக்கலுக்கு ஆளான பிறகு, பூச்சிக்கொல்லியை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றார். ஒரு மருத்துவ உதவியாளரிடம்: "நான் இங்கே ஒரு பேய், இனி யாரும் என்னை மனிதனாகப் பார்ப்பதில்லை" என்று கூறினார். மருத்துவமனையின் உதவியால் அவர் உயிர் பிழைக்கிறார். ஆனால் தொடர்ந்தும் பாதிக்கப்படக்கூடியவராக இருக்கிறார். பெண் முன்னாள் போராளிகள் தனித்துவமான களங்கத்தை எதிர்கொள்கிறார்கள். இது, பாலின அடிப்படையிலான பாகுபாடு போர் தொடர்பான ஓரங்கட்டலுடன் இணைந்து, தற்கொலை நடத்தையை இயக்குகின்றது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

கிளிநொச்சியைச் சேர்ந்த 40 வயதான முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர், போர்க்களத்தில் ஏற்பட்ட உடல் காயங்களாலும், பொதுமக்கள் இறப்புகளைக் கண்டதால் ஏற்பட்ட மன அதிர்ச்சியாலும் போராடுகிறார். மறுவாழ்வுக்குப் பிறகு, தன்னை சந்தேகக் கண்ணோடு பார்க்கும் ஒரு சமூகத்திற்குத் திரும்புகிறார். தனது இருப்பு இராணுவக் கவனத்தை ஈர்க்கக்கூடும் என்று அஞ்சுகிறார். போருக்குப் பிந்தைய நில அபகரிப்புக் காரணமாக தனது குடும்பத்தின் விவசாய நிலத்தில் நுழைய மறுக்கப்பட்ட அவர், தன்னை 'புலி' என்று முத்திரை குத்தும் முதலாளிகளிடமிருந்து துன்புறுத்தலை எதிர்கொள்கிறார். ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளின் போராட்டத்துடன் இணைக்கப்பட்ட அவரது நோக்க உணர்வு மங்கி, அவர் ஒரு நண்பரிடம், "நான் ஒரு காரணத்திற்காகப் போராடினேன். ஆனால் இப்போது நான் யாருக்கும் தேவையில்லை. என் சொந்த மக்கள் கூட விலகிச் செல்கிறார்கள்" என்று கூறுகிறார். சிலகாலத்தின் பின் அவர் தற்கொலை செய்து கொள்கிறார். மறு ஒருங்கிணைப்புத் திட்டங்கள் இல்லாததும், தொடர்ந்து அவமானப்படுத்தப்படுவதும் முன்னாள் போராளிகளை இருத்தலியல் விரக்தியில் ஆழ்த்துகிறது, இது தற்கொலை அபாயத்தை அதிகரிக்கிறது என்பதை அவரது கதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

## பாலின வன்முறை மற்றும் சுரண்டல்

பாலின வன்முறை மற்றும் சுரண்டல் தற்கொலைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கின்றன. குறிப்பாக பெண்கள் மத்தியில் இது அதிக செல்வாக்குச் செலுத்துகிறது. குறிப்பாகப் போர் விதவைகள் மற்றும்

பெண் தலைமைத்துவ வீடுகளில் உள்ளவர்கள், ஆண் வருவாய் ஈட்டுபவர்களின் இழப்பு, இடப்பெயர்வு மற்றும் வளங்களுக்கான அணுகல் கட்டுப்படுத்தப்பட்டதால், பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருந்தனர். வடக்கு மற்றும் கிழக்கில் சுமார் 90,000 போர் விதவைகளுடன் இந்தப் பெண்கள், பாலியல் துன்புறுத்தல், சுரண்டல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை ஆகியவற்றின் அபாயங்களை எதிர்கொள்கின்றனர். பெரும்பாலும் வேலைவாய்ப்பு அல்லது உதவி தேடும் சூழலில் இந்த அபாயம் அதிகரிக்கின்றது. ஆணாதிக்கத் தமிழ்ச் சமூகத்தில் வேரூன்றிய கலாசார விதிமுறைகள், பாலியல் வன்முறையைச் சுற்றியுள்ள களங்கத்துடன் இணைந்து, உயிர் பிழைத்தவர்களை மௌனப்படுத்துவதோடு, அவமானம், சக்தியற்ற தன்மை மற்றும் தனிமை போன்ற உணர்வுகளைப் பெருக்குகின்றன; இதுவும் இதற்குப் பங்களிக்கிறது. முதலாளிகள் மற்றும் பாதுகாப்புப் படையினரால் நிகழ்த்தப்படும் பாலியல் சுரண்டல் உட்பட பாலின வன்முறைகள், வடக்கில் பெண்கள் மத்தியில் தற்கொலைக்கு ஒரு முக்கிய காரணமாகும். இது பொருளாதார விரக்தி மற்றும் சமூகக் களங்கத்தால் அதிகரிக்கிறது. மனநலச் சுமைகள் கடுமையானவை. வடக்குச் சமூகங்களில் 57.1% பேர் மனச்சோர்வையும் 60.7% பேர் பதட்டத்தையும் அனுபவிக்கின்றனர். குறிப்பாக துஷ்பிரயோகத்தை எதிர்கொள்ளும் பெண்களிடையே இது பொதுவாகவுள்ளது. பாதுகாப்பான அறிக்கையிடல் வழிமுறைகள் மற்றும் மனநலச் சேவைகள் இல்லாதது, பொருளாதாரச் சார்புடன் இணைந்து, பெண்களை பலிவாங்கும் சுழற்சியில் சிக்க வைக்கிறது. வடக்கின் மருத்துவமனைத் தரவுகள், வன்முறையுடன் தொடர்புடைய பெண் தற்கொலை முயற்சிகளில், போருக்குப் பிந்தைய அதிகரிப்பைக் காட்டுகின்றன.

கிளிநொச்சியைச் சேர்ந்த 32 வயது போர் விதவையொருவர், 2009 முள்ளிவாய்க்காலில் தனது கணவரை இழந்த பிறகு தனது இரண்டு இளம் குழந்தைகளை ஆதரிக்கிறார். குறைந்தபட்ச உதவியில் உயிர்வாழப் போராடி, உள்ளூர் ஆடைத் தொழிற்சாலையில் குறைந்த ஊதியம் பெறும் வேலையைச் செய்கிறார். இது பிராந்தியத்தில் பெண்களுக்கு உள்ள சில வேலைவாய்ப்பு விருப்பங்களில் ஒன்றாகும். அவரது முதலாளி, அவரது பொருளாதாரப் பாதிப்பைப் பயன்படுத்தி, வேலைப் பாதுகாப்பிற்காக பொருத்தமற்ற கருத்துகள் மற்றும் சலுகைகளைக் கோருவது உட்பட தொடர்ச்சியான பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்குகிறார். தமிழ்க் கலாசார விதிமுறைகள் பாலியல் வன்முறையை குடும்ப அவமதிப்புக்கு ஆதாரமாகக் கருதுவதால், களங்கம் மற்றும் பழிவாங்கலுக்குப் பயந்து அந்த விதவைப் பெண் அமைதியாக இருக்கிறார். அவமானத்தால் மூழ்கி, தனது சமூகத்தில் நம்பிக்கை வைக்க முடியாமல், ஓர் அண்டை வீட்டாரிடம், “இதை இனி என்னால் தாங்க முடியாது. நான் சிக்கிக்கொண்டேன். எனக்கோ அல்லது என் குழந்தைகளுக்கோ வேறு வழியில்லை” என்று கூறுகிறார். அவர் பூச்சிக்கொல்லியை உட்கொண்டு இறக்கிறார். வடக்கில் விதவைகள், பொருளாதார விரக்தி காரணமாக பாலியல் சுரண்டலுக்கு இலக்காகி, தாங்க முடியாத உளவியல் அழுத்தத்தை எதிர்கொள்கின்றனர். அவமானம் மற்றும் சக்தியற்ற தன்மையிலிருந்து தப்பிக்க தற்கொலைக்கு வழிவகுக்கிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு குழந்தைக்குத் தாயான 27 வயது விதவையொருவர், ஓர் இராணுவ அதிகாரியின் வீட்டில் வீட்டு உதவியாளராகப் பணிபுரிவதன் மூலம் தனது மகளை வளர்க்கிறார். இது இராணுவமயமாக்கப்பட்ட வடக்குப் பகுதிகளில் ஒரு பொதுவான வேலை. தொடர்ச்சியான பாலியல் தாக்குதல்கள் மற்றும் வேலை இழப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் அவர், தனது வருமானம் தனது குடும்பத்தின் உயிர்நாடி என்பதால், பயத்தின் காரணமாக இணங்குகிறார். சுரண்டலின் அதிர்ச்சி, சமூகம் தன்னை ‘அவமானப்படுத்தப்பட்டவர்’ என்று முத்திரை குத்துவதுடன் இணைந்து, அவரை மேலும் தனிமைப்படுத்துகிறது. வரையறுக்கப்பட்ட சேவைகள் மற்றும் கலாசார களங்கம் காரணமாக ஆலோசனையை அணுக முடியாமல், அவர் தூக்குப்போட்டுத் தற்கொலைக்கு முயற்சிக்கிறார். ஒரு குடும்ப உறுப்பினர் தலையீட்டினால் அவர் உயிர் பிழைக்கிறார். ஆனால், அதிகாரப் பிரமுகர்களால் நிகழ்த்தப்படும் பாலியல் சுரண்டல், சமூகத் தீர்ப்புகளுடன் இணைந்து, பாதுகாப்பான அறிக்கையிடும் வழிமுறைகள் இல்லாத சூழலில், பெண்களைத் தற்கொலை விரக்திக்கு இட்டுச் செல்கிறது என்பதை அவரது கதை எடுத்துக்காட்டுகிறது. ஓர் அரசுசாரா பெண்கள் குழு மூலம் அவர் ஓரளவு குணமடைவது, சமூக அடிப்படையிலான ஆதரவின் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இருப்பினும் அத்தகைய திட்டங்களுக்கு நிதி குறைவாகவே உள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த 40 வயது விதவை, போரின் போது அழிக்கப்பட்ட தனது வீட்டை மீண்டும் கட்டியெழுப்ப உள்ளூர் அரசு சாரா நிறுவனத்திடம் நிதி உதவி கோருகிறார். ஒரு திட்ட அதிகாரி தனது பாதிப்பைப் பயன்படுத்திக் கொண்டு, பாலியல்

சலுகைகளுக்கு ஈடாக உதவி வழங்குகிறார். உதவியை இழந்து சமூகப் புறக்கணிப்பை எதிர்கொள்வதற்குப் பயந்து, அப்பெண் இணங்குகிறார். ஆனால் குற்ற உணர்ச்சியிலும், வெளிப்படும் பயத்திலும் மூழ்கிவிடுகிறார். தனது கிராமத்தில் வதந்திகள் பரவிய பிறகு, அவர் ஒரு நண்பரிடம், "நான் என் கண்ணியத்தை இழந்துவிட்டேன். என் குழந்தைகளையோ அல்லது யாரையோ இனி எதிர்கொள்ள முடியாது" என்று கூறுகிறார். வீடு சுத்தம் செய்யும் திரவத்தைப் பயன்படுத்தி அவர் தற்கொலை செய்து கொள்கிறார். உதவி அமைப்புகளுக்குள் இருக்கும் சுரண்டல், கலாசார களங்கத்துடன் இணைந்து, போர் விதவைகளுக்கு ஓர் ஆபத்தான சூழலை உருவாக்கி, அவர்களைத் தற்கொலைக்குத் தள்ளுகிறது என்பதை அவரது கதை விளக்குகிறது.

## இடப்பெயர்வு மற்றும் நிலப் பிரச்சினைகள்

இடப்பெயர்வு மற்றும் நிலம் பறிபோதல், சமூகங்களை ஆழமாகப் பாதித்து, தற்கொலை விகிதங்களுக்குப் பங்களித்துள்ளன. போர், 600,000க்கும் மேற்பட்ட தமிழர்களை பலமுறை இடம்பெயரச் செய்து, தமிழர் அடையாளம் மற்றும் வாழ்வாதாரத்தின் மூலக்கல்லான நிலத்துடனான அவர்களின் பொருளாதார மற்றும் கலாசார உறவுகளைச் சீர்குலைத்தது. போருக்குப் பிந்தைய, தொடர்ச்சியான இராணுவமயமாக்கல் மற்றும் நில அபகரிப்புகள் - முகாம்கள், உயர் பாதுகாப்பு வலயங்கள் அல்லது மேம்பாட்டுத் திட்டங்களுக்காக தனியார் மற்றும் பொது நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்துள்ளமை - பலர் தங்கள் வீடுகளுக்குத் திரும்புவதையோ அல்லது விவசாய மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதையோ தடுத்துள்ளன.

வடக்கில் நிலம் கையகப்படுத்துதல், இழப்பீடு அல்லது மறுசீரமைப்பு இல்லாமை ஆகியவற்றுடன் சேர்ந்து, பொருளாதாரப் பாதுகாப்பின்மை மற்றும் ஆழ்ந்த இடப்பெயர்ச்சி உணர்வுக்கு வழிவகுத்தது; உளவியல் துயரம் மற்றும் தற்கொலைக்கும் வழிவகுத்துள்ளது. இடம்பெயர்ந்த தமிழர்கள் வறுமை, சொத்து இழப்பு மற்றும் சமூக மூலதனம் இழக்கப்படுவதை எதிர்கொள்கின்றனர். இதனால் பலர் நம்பிக்கையற்றவர்களாக உணர்கிறார்கள். மருத்துவமனைத் தரவுகள் 2009க்குப் பிறகு அதிகரித்த தற்கொலை முயற்சிகள், இடப்பெயர்வு தொடர்பான விரக்தியுடன் தொடர்புடையதாக இருப்பதைக் கோடுகாட்டுகின்றன.

மன்னாரைச் சேர்ந்த 48 வயது மனிதர், போரின் போது மூன்று முறை இடம்பெயர்ந்து, இறுதியாக 2010 இல் மீள்குடியேறி, போருக்குப் பிறகு நிறுவப்பட்ட இராணுவ முகாமால் ஆக்கிரமிக்கப்பட்ட தனது மூதாதையர் விவசாய நிலத்தைக் கண்டுபிடித்தார். இழப்பீடு அல்லது சட்டபூர்வ உதவி இல்லாமல், அவர் தனது குடும்பத்தின் பாரம்பரிய வாழ்வாதாரமான விவசாயத்தை மீண்டும் தொடங்க முடியாது. தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் ஒரு தற்காலிகத் தங்குமிடத்தில் வாழ வேண்டிய கட்டாயத்தில், அவர் அவ்வப்போது பகல்நேரக் கூலியை நம்பியுள்ளார். அடையாளம் மற்றும் பாதுகாப்பின் அடையாளமாக இருக்கும் அவரது நிலத்தை இழப்பது அவரது இடப்பெயர்ச்சி உணர்வை ஆழப்படுத்துகிறது. அவர் ஒரு பக்கத்து வீட்டுக்காரரிடம், "இந்த நிலம் என் தந்தையினது, என் தாத்தாவினது. அது இல்லாமல், நான் ஒன்றுமில்லை, இந்த நிலம் இல்லாமல் என் குழந்தைகளுக்கு எதிர்காலம் இல்லை" என்று கூறுகிறார். விரக்தியால், மனநல ஆதரவை அணுக முடியாமல், பூச்சிக்கொல்லியை உட்கொண்டு இறந்துவிடுகிறார். அவரது கதை, நில அபகரிப்பு தமிழர்களின் பொருளாதார மற்றும் கலாசார வேர்களை அகற்றி, நம்பிக்கையின்மையையும் தற்கொலையையும் ஒரு தப்பிக்கும் செயலாக வளர்க்கிறது என்ற கருத்தைப் பிரதிபலிக்கிறது.

முல்லைத்தீவைச் சேர்ந்த 55 வயதுடைய பெண், போரின் போது இடம்பெயர்ந்தவர். 2012 இல் தனது குடும்பத்தின் தென்னந்தோப்பைக் கண்டுபிடித்தார். அந்த இடம் இராணுவ ஆதரவுடன் கூடிய சுற்றுலாத் திட்டத்திற்காகக் கைப்பற்றப்பட்டிருந்தது. மாற்று வாழ்வாதாரம் இல்லாமல், மீள்குடியேற்ற முகாமில் வசிக்கும் அவர், போரின் போது காணாமல் போன தனது பிள்ளைகளின் பேரக்குழந்தைகளை ஆதரிக்கப் போராடுகிறார். சமூகப் பிரிவினையுடன் சேர்ந்து, சமூகத்தின் மீதான அவநம்பிக்கை அவரை மேலும் தனிமைப்படுத்துகிறது. போர் நினைவுகளாலும், தனது சொத்தை மீட்டெடுக்க இயலாமையாலும் வேட்டையாடப்பட்ட அவர், ஒருவரிடம், "நாங்கள் எங்கள் சொந்த நிலத்தில் அந்நியர்கள், இனி எங்களுக்கு இடமில்லை" என்று கூறுகிறார். அவர் தூக்குப்போட்டு தற்கொலைக்கு முயற்சிக்கிறார். ஆனால் உயிர் பிழைக்கிறார். இடப்பெயர்வு மற்றும் நில இழப்பு, குறிப்பாகப் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு, வறுமை மற்றும் விரக்தியின் சுழற்சியை எவ்வாறு உருவாக்குகிறது, தற்கொலை அபாயத்தை எவ்வாறு அதிகரிக்கிறது என்பதை அவரது கதை எடுத்துக்காட்டுகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 30 வயதான மீனவரொருவர், போரின் போது ஓர் அகதி முகாமுக்கு இடம்பெயர்ந்தார். 2011 இல் தனது கடலோர நிலம்

ஒரு கடற்படைத் தளத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதைக் காணத் தலைப்பட்டார். பாரம்பரிய மீன்பிடித் தளங்களில் இருந்து தடைசெய்யப்பட்டதால், அவர் பொருளாதார அழிவை எதிர்கொள்கிறார். மேலும் புதிய உபகரணங்களை மாற்றவோ அல்லது வாங்கவோ முடியாது. அவரது வாழ்வாதார இழப்பு மற்றும் அவரது கிராமத்தில் தொடர்ச்சியான இராணுவ இருப்பு அவரது சொந்த உணர்வைக் குறைக்கிறது. அதேநேரத்தில் போர்க்கால நினைவுகள் அவரது துயரத்தை அதிகரிக்கின்றன. 2019 ஆம் ஆண்டில், நில மறுசீரமைப்பிற்காக மனுச் செய்ய முயற்சித்ததில் தோல்வியடைந்த பிறகு, அவர் தனது சகோதரரிடம், "அவர்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டனர் - என் நிலம், என் கடல், என் நம்பிக்கை" என்று கூறுகிறார். அவர் மீன்பிடி வலைக் கயிற்றைப் பயன்படுத்தி தற்கொலை செய்து கொள்கிறார். வடக்கில் இராணுவமயமாக்கல் மற்றும் நில அபகரிப்புகள் பொருளாதாரப் பாதுகாப்பையும் கலாசார அடையாளத்தையும் எவ்வாறு சிதைக்கின்றன, இடம்பெயர்ந்த தமிழர்களை தற்கொலைக்கு எவ்வாறு தள்ளுகின்றன என்பதை அவரது கதை படம் பிடிக்கிறது.



Image Source : www.srilankaguardian.org

## மனநல ஆதரவு இல்லாமை மற்றும் களங்கம்

மனநல நோயைச் சுற்றியுள்ள களங்கம் மற்றும் மனநலச் சேவைகளின் பற்றாக்குறை ஆகியவை தற்கொலை விகிதங்களுக்குக் கணிசமாகப் பங்களிக்கின்றன. போர் பரவலான அதிர்ச்சியின் மரபை விட்டுச் சென்றது. தொற்றுநோயியல் ஆய்வுகள் மனநலக் கோளாறுகள் இங்கு அதிகமாக இருப்பதாகக் கூறுகின்றன. தமிழ், இந்து மற்றும் பௌத்த மரபுகளில் வேரூன்றிய கலாசார நம்பிக்கைகள் பெரும்பாலும் மனநோயை தனிப்பட்ட பலவீனம், தார்மீகத் தோல்வி அல்லது கர்ம பழிவாங்கலின் அடையாளமாக வடிவமைக்கின்றன. இது தனிநபர்கள் உதவியைத் தேடுவதைத் தடுக்கிறது. வடக்கில் மனநலப் பிரச்சினைகள் உள்ளவர்களில் 10% ஆனோர் மட்டுமே களங்கம் மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகள் காரணமாக பராமரிப்பை அணுகுகிறார்கள். எமது பிராந்தியத்தில் மனநல உட்கட்டமைப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. வடக்கில் மனநல ஆதரவு இல்லாதது, ஓர் ஆபத்தான இடைவெளியை உருவாக்குகிறது. அது சிகிச்சையளிக்கப்படாத மனச்சோர்வு மற்றும் அதிர்ச்சித் தற்கொலை நடத்தைக்கு வழிவகுக்கிறது. உணர்ச்சிகளை அடக்கி 'வலுவாக இருப்பதற்காக' தலைமுறை அழுத்தங்களை எதிர்கொள்ளும் இளைஞர்களிடையே, இது குறிப்பாகக் கடுமையாக உள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவின் மருத்துவமனைத் தரவுகள், போருக்குப் பிந்தைய முயற்சிகளில், குறிப்பாக இளம் பருவத்தினரிடையே அதிகரிப்பைக் காட்டுகின்றன.

2009 ஆம் ஆண்டு போரின் இறுதிக் கட்டத்தில் தனது மூத்த சகோதரனை இழந்ததைத் தொடர்ந்து மன அழுத்தத்துடன் போராடும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 16 வயதுச் சிறுவன் கனவுகள் மற்றும் நம்பிக்கையின்மை உணர்வுகளால் வேட்டையாடப்படுகிறான். நெருங்கிய நண்பரிடம் நம்பிக்கையுடன் பேசுகிறார், அவர் "வலுவாக இருங்கள்" என்றும், "பலவீனத்தை ஒப்புக்கொள்வதன் மூலம் குடும்பத்தை அவமானப்படுத்த வேண்டாம்" என்றும் அறிவுறுத்துகிறார். அச்சிறுவன் தயக்கத்துடன் தனது பெற்றோருடன் தனது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளும்போது, அவர்கள் அவனது துயரத்தை நிராகரித்து, "இது உங்கள் தலையில் உள்ளது. நீங்கள் பிரார்த்தனை செய்து முன்னேற வேண்டும்" என்று கூறுகிறார்கள். தமிழ்க் கலாசாரத்தில், மனநலப் போராட்டங்கள் பெரும்பாலும் மீள்தன்மை இல்லாதவை என்று களங்கப்படுத்தப்படுகின்றது. மேலும் அச்சிறுவனின் குடும்பம் சமூகத் தீர்ப்புக்கு அஞ்சுகிறது. ஆலோசனைக்கான அணுகல் இல்லாமல் அச்சிறுவனின் மனச்சோர்வு ஆழமடைகிறது. தனிமைப்படுத்தப்பட்டு, வெட்கப்பட்டு, வீட்டிலேயே தூக்கில் தொங்குகிறான் அச்சிறுவன். வடக்கில் உள்ள இளைஞர்கள், கலாசாரக் களங்கத்தை எதிர்கொண்டு, மனநல ஆதரவு இல்லாமல், தற்கொலையை சிகிச்சையளிக்கப்படாத மனநோயிலிருந்து

தப்பிப்பதற்கான ஒரு வழியாகக் கருதுகின்றனர் என்ற வாதத்தை இந்தக் கதை பிரதிபலிக்கிறது.

வவுனியாவைச் சேர்ந்த 19 வயதுச் சிறுமி, போரின் போது தனது குடும்பத்தினர் இடம்பெயர்ந்ததைக் கண்ட பிறகு, பதட்டத்தையும் தற்கொலை எண்ணத்தையும் அனுபவிக்கிறாள். அவள் தன் சின்னம்மாவிடம் தனது உணர்வுகளைப் பற்றி விவாதிக்க முயற்சிக்கிறாள். அவர் அவளிடம், "அப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றிப் பேசாதே. அது உன் திருமண வாய்ப்புகளை அழித்துவிடும்" என்று கூறுகிறார். பெண் அடக்கம் மற்றும் குடும்ப மரியாதைக்கு முன்னுரிமை அளிக்கும் கலாசார விதிமுறைகள் அச்சிறுமி உதவி தேடுவதைத் தடுக்கின்றன. ஏனெனில் மனநோய் அவளுடைய நற்பெயருக்கு ஒரு களங்கமாகக் கருதப்படுகிறது. அருகிலுள்ள மனநல மருத்துவமனைக்கு அவள் சென்றால், சமூக வதந்திகள் வரும் என்று அஞ்சுகிறாள். மன அழுத்தத்தால் ஏற்பட்ட பயத் தாக்குதலுக்குப் பிறகு, தற்கொலைக்கு முயற்சிக்கிறாள். ஆனால் அவள் உயிர் பிழைக்கிறாள். அவளுடைய கதை, மனநலத்தைச் சுற்றியுள்ள களங்கம் — குறிப்பாக இளம் பெண்களுக்கானது — பற்றாக்குறையான சேவைகளுடன் இணைந்து, வடக்கில் தற்கொலை முயற்சிகளை எவ்வாறு தூண்டுகிறது என்பதை வெளிப்படுத்துகிறது.

கிளிநொச்சியைச் சேர்ந்த 45 வயது தந்தை, போர்க்காலச் சித்திரவதை மற்றும் மனைவியின் இழப்புக் காரணமாக மன அழுத்தத்தால் அவதிப்படுகிறார். மனநலப் பிரச்சினைகள் பலவீனத்தைப் பிரதிபலிக்கின்றன என்ற சமூகக் கருத்துகளால் அவர் உதவி தேடுவதைத் தவிர்க்கிறார். அண்டை வீட்டார் "நீங்கள் ஓர் ஆலோசகரிடம் சென்றால், மக்கள் உங்களை பைத்தியம் என்று நினைப்பார்கள்" என்று எச்சரிக்கின்றனர். அவரின் அறிகுறிகள் மோசமடைந்து, சமூக விலகலுக்கு வழிவகுக்கிறது. சிலகாலத்தின் பின்னர், தான் தனது குழந்தைகளுக்கு ஒரு சுமையாக இருப்பதாக உணர்ந்த அவர், தற்கொலை செய்து கொள்கிறார். வடக்கில் கலாசாரக் களங்கம் மற்றும் மனநல உட்கட்டமைப்பு இல்லாமை வயதானவர்களைக் கூட சிகிச்சையளிக்கப்படாத அதிர்ச்சிக்கு ஆளாக்குகிறது, இதன் விளைவாகத் தற்கொலை ஏற்படுகிறது என்பதை அவரது கதை விளக்குகிறது.

### பொருளாதார நெருக்கடியும் தினசரி அழுத்தங்களும்

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, 2019 முதல் தீவிரமடைந்து 2022 இல் உச்சத்தை எட்டியது. இது வட இலங்கையைக் கடுமையாகப் பாதித்துள்ளது. மிகை பணவீக்கம், அந்நிய செலாவணிப் பற்றாக்குறை, எரிபொருள் மற்றும் உணவுப் பற்றாக்குறை மற்றும் அதிகரித்து வரும் வேலையின்மை ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் இந்த நெருக்கடி, போர் தொடர்பான அதிர்ச்சி, வறுமை மற்றும் மனநலப் பிரச்சினைகளை அதிகப்படுத்தியுள்ளது. போரிலிருந்து மீள்வது ஏற்கனவே பலவீனமாக இருந்த வடக்கில், பொருளாதார நெருக்கடி, அதிகரித்த மன அழுத்தம், சுயதீங்கு மற்றும் தற்கொலைகளுக்கு வழிவகுத்தது. அதிகாரபூர்வ தரவு, 2022 இல் தேசிய தற்கொலை விகிதம் 100,000 பேருக்கு 15 ஆக இருப்பதைக் குறிக்கிறது. குறிப்பாக ஆண்களைப் (100,000 பேருக்கு 27) பாதிக்கிறது. நெருக்கடி காரணமாக ஒரு சிறிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில், 2022 இல் 142 ஆக இருந்த தற்கொலைகள், 2023 இல் 175 ஆக அதிகரித்துள்ளன. இதற்கு நிதி நெருக்கடி மற்றும் அன்றாடக் கஷ்டங்கள் காரணங்களாகும்.

நெருக்கடியின் போது, மிதமானது முதல் உயர்ந்த நிலை வரை மன அழுத்தம் இருப்பதாகக் கணக்கெடுப்புகள் காட்டுகின்றன. இலங்கையர்களில் 34.1% பேர் உயர்ந்த மன அழுத்த நிலைகளை அனுபவிக்கின்றனர். இது இளையவர்கள் மற்றும் பெண்கள் மத்தியில் அதிகமாகும். பொருளாதார நிலையற்ற தன்மையால் 2018-2019 இல் 2.9% ஆக இருந்த மனநலப் பிரச்சினைகள், 2021-2022 இல் 6.1% ஆக இரட்டிப்பாகியுள்ளது. விவசாயம் மற்றும் மீன்பிடி வாழ்வாதாரங்கள் சீர்குலைந்த வடக்கில், உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் கடன் போன்ற தினசரி அழுத்தங்கள் விரக்தியை அதிகரிக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த 45 வயது தந்தை போரில் தனது வீட்டையும் வாழ்வாதாரத்தையும் இழந்தார். பின்னர் சிகிச்சையளிக்கப்படாத 'PTSD' மற்றும் மனச்சோர்வை எதிர்த்துப் போராடினார். 2022 பொருளாதாரச் சரிவின் மத்தியில், பணவீக்கம் 70%த்தினைத் தாண்டியதாலும், எரிபொருள் விலைகள் மூன்று மடங்காக உயர்ந்ததாலும், ஒரு சாதாரண தொழிலாளியாகப் பணிபுரியும் அவர் வேலை இழப்பை எதிர்கொள்கிறார். மேலும் அவரது மூன்று குழந்தைகளுக்குத் தேவையான அரிசி, பாடசாலைப் பொருட்கள் போன்ற அடிப்படைப் பொருட்களை வாங்க முடியாத நிலை உருவானது. குடும்பம் அவ்வப்போது பிறரிடம் உதவிகளை நம்பியிருப்பது ஒரு வழங்குநராக அவரது தோல்வி உணர்வை ஆழப்படுத்துகிறது. மானிய விலையில் உணவுக்காக ஒரு நாள் வரிசையில் நின்று வெறுங்கையுடன் திரும்பிய பிறகு, அவர் தனது மனைவியிடம், "என்

குழந்தைகள் பசியுடன் இருப்பதை என்னால் பார்க்க முடியாது. போரின் போது நான் தோல்வியடைந்தது போல் நான் அவர்களைத் தோல்வியடையச் செய்துவிட்டேன்" என்று கூறுகிறார். 2023 ஆம் ஆண்டில், அதிகரித்த அதிர்ச்சி மற்றும் பொருளாதார விரக்தியால் மூழ்கி, அவர் வீட்டிலேயே தூக்கில் தொங்குகிறார். இந்தக் கதை, கிராமப்புற வடக்குப் பகுதிகளில் நிதி அழுத்தம் சுயதீங்கை ஏற்படுத்தும் வடிவங்களைப் பிரதிபலிக்கிறது.

வவுனியாவைச் சேர்ந்த 38 வயதுப் போர் விதவை, இரண்டு பதின்ம வயது மகள்களைக் கொண்ட ஒரு குடும்பத்தைத் தலைமை தாங்குகிறார். 2022 நெருக்கடியின் போது மின்வெட்டு மற்றும் பொருள் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட அவர், ஒரு சிறிய தையல் தொழிலை நம்பியிருந்தவர். உணவுப் பொருட்களின் விலைகள் உயர்ந்து, சேமிப்பு இல்லாததால், அதிக வட்டி விகிதத்தில் நுண்நிதி நிறுவனங்களிலிருந்து கடன் குவிகிறது. மனநலம் குறைவாக இருப்பதால், சிகிச்சையளிக்கப்படாத பதட்டம் மற்றும் தூக்கமின்மையால் மேலும் மன அழுத்தம் வெளிப்படுகிறது. கடன் வழங்குநர்கள் பணம் செலுத்தத் தவறியதற்காக அவரைப் பகிரங்கமாக அவமானப்படுத்திய பிறகு, அவர் பக்கத்து வீட்டுக்காரரிடம், "போர் என் கணவரைப் பறித்தது. இந்த நெருக்கடி என் வாழ்வின் விருப்பத்தை எடுத்துக்கொள்கிறது" என்று கூறுகிறார். 2024 ஆம் ஆண்டில், விவசாயப் பகுதிகளிலிருந்து பெறப்பட்ட ஒரு பூச்சிக்கொல்லி மருந்தை உட்கொண்டு இறந்துவிடுகிறார். பொருளாதாரப் பாதிப்பு வடக்குப் பெண்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

கிளிநொச்சியைச் சேர்ந்த 50 வயது ஆசிரியர், நெருக்கடியின் மத்தியில் சம்பளத் தாமதங்களையும் அதிகரித்த வாழ்க்கைச் செலவுகளையும் எதிர்கொள்கிறார். அதேநேரத்தில் போர் இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட ஒரு நீட்டிக்கப்பட்ட குடும்பத்தை ஆதரிக்கிறார். எரிபொருள் பற்றாக்குறை, வேலைக்குச் செல்வதைத் தடுப்பது உள்ளிட்ட பொருளாதார நெருக்கடி அவரது மனச்சோர்வை அதிகரிக்கிறது. ஆசிரியர்கள் பற்றிய ஓர் ஆய்வு, நிதிச் சுமைகளுடன் தொடர்புடைய அதிக மன உளைச்சலைக் குறிப்பிடுகிறது. மின்தடை காரணமாக பயிற்சியிலிருந்து கூடுதல் வருமானத்தை இழந்த பிறகு, ஒரு சக ஊழியரிடம், "நான் குண்டுவெடிப்புகளில் இருந்து தப்பித்தேன். ஆனால் இந்த முடிவற்ற போராட்டம் என்னை உள்ளே கொன்று கொண்டிருக்கிறது" என்று கூறுகிறார். 2023 ஆம் ஆண்டில், அவர் தூக்குப்போட்டு தற்கொலைக்கு முயன்றார். ஆனால் உயிர் பிழைத்தார். இது வடக்கில் படித்த பணியாளர்கள் மீதான நெருக்கடியின் பாதிப்பைப் பிரதிபலிக்கிறது.

## நிறைவுக் குறிப்புகள்

மேற்சொன்ன கதைகள் சில முக்கியமான செய்திகளை எமக்கு அடிக்கோடிடுகின்றன. அதிக வேலையின்மை, இராணுவம் அல்லது பெருநிறுவனத் திட்டங்களுக்கு விளைநிலங்களை இழத்தல் மற்றும் சுரண்டல் நுண்நிதித் திட்டங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு தற்கொலைகளைத் தூண்டும், நசுக்கும் கடன் சுமைகளை உருவாக்குகிறது. போர் பாரம்பரியப் பொருளாதாரங்களைச் சிதைத்து, தமிழர்கள் நிலையற்ற வாழ்வாதாரங்களைச் சார்ந்து இருக்க வைத்தது. போருக்குப் பிந்தைய காலத்தில், மனித மேம்பாட்டை விட உட்கட்டமைப்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியதால் வேலைவாய்ப்பு உருவாக்கம் புறக்கணிக்கப்பட்டது. மீட்புக் கருவியாகக் கருதப்படும் நுண்நிதி, கொள்ளையடிக்கும் செயலாக மாறியது. விதவைகள் மற்றும் குறைந்த நிதிக் கல்வி உள்ள இளைஞர்கள் போன்ற பாதிக்கப்படக்கூடிய குழுக்களை குறி வைத்தது. இந்த நிறுவனங்கள் போரில் இருந்து தப்பியவர்களின் விரக்தியைப் பயன்படுத்திக் கொள்கின்றன. அவர்களால் திருப்பிச் செலுத்த முடியாத கடன்களை வழங்குகின்றன. இது அவமானம் மற்றும் தற்கொலைக்கு வழிவகுக்கிறது.

உளவியல் சமூகக் கண்ணோட்டத்தில் பகுத்தறிவு, போர் அதிர்ச்சியுடன் பொருளாதார மன அழுத்தம் எவ்வாறு தொடர்பு கொள்கிறது, மனச்சோர்வு மற்றும் நம்பிக்கையின்மையை எவ்வாறு அதிகரிக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. விவசாய அணுகல் காரணமாக பரவலாகக் காணப்படும் பூச்சிக்கொல்லித் தற்கொலைகள், வாய்ப்பு மற்றும் கலாசார விரக்தி இரண்டையும் பிரதிபலிக்கின்றன. குறிப்பாக, வழங்குநர்களாக இருக்க வேண்டும் என்ற சமூக எதிர்பார்ப்புகளால் ஆண்கள் அதிகமாகப் பாதிக்கப்படக்கூடியவர்கள். கடன் நிவாரணம், நிதிக் கல்வியறிவுத் திட்டங்கள் மற்றும் நிலையான வேலை உருவாக்கம் போன்ற தலையீடுகள் இதைத் தணிக்கக்கூடும். ஆனால் அரசியல் ரீதியாக ஓரங்கட்டப்படுதல் மற்றும் களங்கம் போன்றவை முன்னேற்றத்தைத் தடுக்கின்றன. வறுமை மற்றும் தற்கொலைச் சுழற்சியைத் தடுக்க, பொருளாதார மீட்சி உளவியல் சமூக ஆதரவுடன் இணைக்கப்பட வேண்டும். இந்த முறையான பிரச்சினைகளை நிவர்த்தி செய்யாவிட்டால், பொருளாதார விரக்தியில் சிக்கியவர்களுக்கு தற்கொலை ஒரு சோகமான தப்பிக்கும் செயலாகவே தொடர்ந்தும் இருக்கும்.

போருக்குப் பிந்தைய கொள்கைகள், இராணுவமயமாக்கப்பட்ட நில அபகரிப்பு மற்றும் மீன்பிடி மற்றும் விவசாய வளங்களுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துதல் போன்றவற்றுடன் இணைந்து, பொருளாதார உட்கட்டமைப்பை அழித்து, வட இலங்கையில் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை முடக்கியுள்ளன. இளைஞர்களைப் பொறுத்தவரை, இது ஓர் ஆழமாகச் சிக்கிக்கொண்ட உணர்வாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அங்கு கல்வி - தமிழ்க் கலாசாரத்தில் மிகவும் மதிக்கப்படுகின்றமை - எதிர்பார்த்த வாய்ப்புகளை வழங்கவில்லை. மனநலத்தின் சுற்றுச்சூழல் மாதிரியானது, நுண்நிலைக் காரணிகள் (திட்டமிட்ட புறக்கணிப்பு, வடக்கில் முதலீட்டின் பற்றாக்குறை), நுண்நிலை அழுத்தங்களுடன் (குடும்ப எதிர்பார்ப்புகள், தோல்வியைச் சுற்றியுள்ள களங்கம்) எவ்வாறு தற்கொலை அபாயத்தை அதிகரிக்கும் காரணிகளாகத் தொடர்பு கொள்கின்றன என்பதை விளக்குகிறது. வடக்கில் இளைஞர் வேலையின்மை என்பது ஒரு பொருளாதாரப் பிரச்சினை மட்டுமல்ல, ஓர் உளவியல் சமூக நெருக்கடியாகும். இளைஞர்கள் சமூக எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய இயலாமையை தனிப்பட்ட தோல்வியாக உள்வாங்கிக் கொள்கிறார்கள். கலாசார விதிமுறைகள் இதை அதிகரிக்கின்றன. ஏனெனில் தமிழ்ச் சமூகம் நிதி ஸ்திரத்தன்மையை அடையவும், குடும்ப கௌரவத்தை நிலைநிறுத்தவும் இளைஞர்கள் மீது பெரும் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. தோல்வி, சமூக விலக்குக்கு வழிவகுக்கிறது. உதாரணமாக, இளைஞர்கள் குடும்பத்திற்கு ஒரு வழங்குநராக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு, வேலைப் பற்றாக்குறையின் யதார்த்தத்துடன் மோதுகிறது. விரக்தியையும் தற்கொலை நடத்தையையும் வளர்க்கிறது.

தொழில் பயிற்சி அல்லது இளைஞர்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத் திட்டங்கள் போன்ற பாதுகாப்புக் காரணிகள் மிகக் குறைவு. அரசு சாரா நிறுவனங்கள் அவ்வப்போது ஆதரவை வழங்குகின்றன. ஆனால் முறையான அரசாங்கத் தலையீடு இல்லை. வேலைவாய்ப்பு மற்றும் சமூக இயக்கத்திற்கான கட்டமைப்புத் தடைகளை நிவர்த்தி செய்யாவிட்டால், வடக்கின் இளைஞர்கள் நம்பிக்கையின் நெருக்கடியை தொடர்ந்து எதிர்கொள்வார்கள்.

போரின் குடும்பக் கட்டமைப்புகள் சீர்குலைவு - வருவாய் ஈட்டுவோரின் இழப்பு, இடப்பெயர்ச்சி மற்றும் அதிர்ச்சி மூலம் - வட இலங்கையில் தலைமுறை மற்றும் பாலின அடிப்படையிலான பதட்டங்களை தீவிரப்படுத்தியுள்ளது. குடும்பக் கௌரவம், பெண்களுக்கான ஆரம்பகால திருமணம் மற்றும் ஆண் வழங்குநர் பாத்திரங்களை முன்னுரிமைப்படுத்தும் ஆணாதிக்கத் தமிழ்க் கலாசார விதிமுறைகள், பொருளாதாரக் கஷ்டம் மற்றும் துண்டுதுண்டான சமூக ஆதரவு போன்ற போருக்குப் பிந்தைய யதார்த்தங்களுடன் மோதும் கடுமையான எதிர்பார்ப்புகளை உருவாக்குகின்றன. தற்கொலை அபாயத்தின் சுற்றுச்சூழல் மாதிரி, குடும்ப அளவிலான அழுத்தங்கள் (வீட்டு வன்முறை, பெற்றோரின் மது அருந்துதல்) தற்கொலை நடத்தையைத் தூண்டுவதற்கு சமூக அளவிலான காரணிகளுடன் (களங்கம், மனநலச் சேவைகள் இல்லாமை) எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பதை விளக்குகிறது. தலைமுறை மோதல்கள் மற்றும் வீட்டு துஷ்பிரயோகம் உள்ளிட்ட குடும்பச் செயலிழப்பு, வடக்கு இளைஞர்களிடையே தற்கொலைக்கு ஒரு முக்கிய காரணமாகும்; குறிப்பாக உணர்ச்சிபூர்வமான வழிகள் இல்லாதபோது. மன அழுத்தத்தைப் பலவீனம் அல்லது கர்ம பழிவாங்கலாகக் கருதும் இந்து மற்றும் பௌத்த நம்பிக்கைகளில் வேரூன்றிய கலாசாரக் களங்கம், உதவி தேடுவதை ஊக்கப்படுத்துவதில்லை. இளைஞர்களைப் பொறுத்தவரை, உணர்ச்சிகளை வெளிப்படுத்த பாதுகாப்பான இடங்கள் இல்லாதது - போரினால் தூண்டப்பட்ட சமூகத் துண்டிப்பால் அதிகரிக்கிறது - சிக்கிக்கொண்ட உணர்வுகளை அதிகரிக்கிறது. போர் குடும்பங்களை ஆதரவு மற்றும் மோதலுக்கான ஆதாரமாக விட்டுச் சென்றுள்ளது. உளவியல் சமூகத் தலையீடுகள் இல்லாமல், வீட்டு அழுத்தங்கள் பாதிக்கப்படக்கூடிய இளைஞர்களை தற்கொலைக்குத் தள்ளுகின்றன. இந்த அழுத்தங்களை நிவர்த்தி செய்வதற்கு, ஆணாதிக்க விதிமுறைகளைச் சவால் செய்யும் மற்றும் இளைஞர்களுக்கு உணர்ச்சி வெளிப்பாட்டிற்கான வழிகளை வழங்கும் கலாசார ரீதியாக உணர்திறன் மிக்க தலையீடுகள் தேவை.

மது அருந்துவது போரின் உளவியல் மற்றும் பொருளாதார விளைவுகளுடன் ஆழமாகப் பிணைந்துள்ளது. மதுவால் தூண்டப்படும் வீட்டு வன்முறை, குடும்பங்களைச் சீர்குலைக்கிறது. வேலையின்மையை எதிர்கொள்ளும், இன்னும் வழங்குநர்களாக இருப்பதற்கான கலாசார எதிர்பார்ப்புகளால் சுமையாக இருக்கும் ஆண்கள், மதுவுக்குத் திரும்புகிறார்கள். இது தோல்வி உணர்வுகளை அதிகரிக்கிறது மற்றும் வன்முறை நடத்தையைத் தூண்டுகிறது. இது குற்ற உணர்ச்சியால் தூண்டப்பட்ட தற்கொலைகளுக்கு வழிவகுக்கிறது. துஷ்பிரயோகத்திற்கு ஆளான பெண்கள், சமூகக்

களங்கத்திலிருந்து கூடுதல் அழுத்தங்களை எதிர்கொள்கின்றனர். இது கலாசார நம்பிக்கைகள் குடும்பப் பிரச்சினைகளை தனிப்பட்ட அல்லது கர்மமாக வடிவமைப்பதன் காரணமாக புகாரளிப்பதையோ அல்லது உதவியை நாடுவதையோ தடுக்கிறது.

வடக்கில் மது துஷ்பிரயோகம் என்பது வெறும் தனிப்பட்ட தோல்வி மட்டுமல்ல, கூட்டு அதிர்ச்சியின் அறிகுறியாகும். அதை நிவர்த்தி செய்யாவிட்டால், வீட்டு வன்முறை மற்றும் தற்கொலைகள் நீடிக்கும். போதைச் சிகிச்சை அல்லது குடும்ப ஆலோசனை போன்ற பாதுகாப்புக் காரணிகளுக்கான நிதி பற்றாக்குறையாக உள்ளது. இதனால் சமூகங்கள் பாதிக்கப்படுகின்றன. மது துஷ்பிரயோகம் மற்றும் வீட்டு வன்முறையில் அதன் பங்கு ஆகியவற்றை இலக்காகக் கொண்ட ஒருங்கிணைந்த தலையீடுகள் இல்லாமல், வடக்கில் அதிர்ச்சி மற்றும் தற்கொலைச் சுழற்சி தொடரும் ஆபத்தை நாம் எதிர்நோக்குகிறோம்.

முன்னாள் போராளிகளின் சமூகத் தனிமைப்படுத்தல், போர் அதிர்ச்சி, சமூகக் களங்கம் மற்றும் மறு ஒருங்கிணைப்பில் முறையான தோல்விகள் ஆகியவற்றின் கலவையிலிருந்து உருவாகிறது. போரின் மரபு ஓர் உளவியல் சுமையை உருவாக்குகிறது. அதேநேரத்தில் இராணுவக் கண்காணிப்பு மற்றும் நிலக் கட்டுப்பாடுகள் போன்ற போருக்குப் பிந்தைய கொள்கைகள் பொருளாதார மற்றும் சமூக மறு ஒருங்கிணைப்பைக் கட்டுப்படுத்துகின்றன. தனிப்பட்ட அதிர்ச்சி, சமூக அளவிலான நிராகரிப்பு மற்றும் நுண்ணியளவிலான புறக்கணிப்பு என்பன நம்பிக்கையின்மையை வளர்க்கின்றன. முன்னாள் போராளிகள் ஒரு வரையறுக்கப்பட்ட இடத்தில் சிக்கிக் கொள்கிறார்கள். அவர்கள் சமூகங்களால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை அல்லது அரசால் ஆதரிக்கப்படவில்லை. இது ஆழ்ந்த அந்நியப்படுதல் மற்றும் தற்கொலை எண்ணத்திற்கு வழிவகுக்கிறது. இராணுவ விளைவுகள் குறித்த தமிழ்ச் சமூக அச்சங்கள் மற்றும் முன்னாள் போராளிகளை 'கறை படிந்தவர்கள்' எனும் கருத்துகளில் வேரூன்றிய கலாசாரக் களங்கம், விலக்குவாதத்தை அதிகரிக்கிறது.

அடிப்படை மறுவாழ்வு முகாம்களுக்கு அப்பால் வலுவான மறுசீரமைப்பு திட்டங்கள் இல்லாததால் முன்னாள் போராளிகள் திறன்கள் அல்லது ஆதரவு இல்லாமல் தவிக்கின்றனர். வேலையின்மை அதிகரித்த நிலையில் அவர்களின் அவலநிலை மேலும் மோசமடைகிறது. முன்னாள் போராளிகளை மீண்டும் ஒருங்கிணைக்கத் தவறியது, அவர்களின் அதிர்ச்சி மற்றும் சமூக நிராகரிப்புடன் இணைந்து,



Image Source : www.tamilguardian.com

தற்கொலைக்கான புயலை உருவாக்குகிறது. அவர்கள் தங்கள் நோக்கம் மற்றும் அவர்களின் மக்களால் கைவிடப்பட்டதாக உணர்கிறார்கள். சமூக நல்லிணக்க முயற்சிகள் அல்லது அதிர்ச்சியை மையமாகக் கொண்ட ஆலோசனை போன்ற பாதுகாப்புக் காரணிகள் அரிதானவை. நிதி மற்றும் அரசியல் கட்டுப்பாடுகள் காரணமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தேவையின் அளவை முழுமையாக நிவர்த்தி செய்ய முடியவில்லை. இன்றும் அதிகம் கவனம் பெறாத ஒரு குழுவாக இவர்கள் உள்ளார்கள்.

இலங்கையின் வடக்கில் பாலின வன்முறை மற்றும் சுரண்டல், போரினால் சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புகள் சீர்குலைந்ததில் வேரூன்றியுள்ளன. இதனால் பெண்கள் - குறிப்பாக மதிப்பிடப்பட்ட 90,000 போர் விதவைகள் - வேட்டையாடுதலுக்கு ஆளாக நேரிடுகிறது. வேலையின்மை மற்றும் நிலம் அல்லது வேலைகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் ஆகியவற்றுடன் பொருளாதார விரக்தி, பெண்களை நிலையற்ற வேலைவாய்ப்பு அல்லது ஏதேனும் உதவியைச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளுகிறது. அங்கு அவர்கள் முதலாளிகள், இராணுவ வீரர்கள் அல்லது சமூகத் தலைவர்களிடமிருந்து துன்புறுத்தலை எதிர்கொள்கின்றனர். வடக்கில் பெண்கள் பாலின வன்முறை மற்றும் சமூக அமைதியின் நச்சுக்கலவையை எதிர்கொள்கின்றனர். இது உளவியல் துயரத்தையும் தற்கொலை அபாயத்தையும் அதிகரிக்கிறது. பெண் கற்பு மற்றும் குடும்பக் கௌரவத்தை முன்னுரிமைப்படுத்தும் ஆணாதிக்கத் தமிழ் விதிமுறைகள், பாதிக்கப்பட்டவர்கள் துஷ்பிரயோகத்தைப் புகாரளிப்பதைத் தடுக்கின்றன. ஏனெனில் வெளிப்பாடு சமூக விலக்கிற்கான ஆபத்தை விளைவிக்கிறது. பாலியல் வன்முறையில் இருந்து

தப்பித்த பெண்கள் மீது சுமத்தப்படும் அவமானம், அவர்களின் பொருளாதாரப் பாதிப்புடன் இணைந்து, தற்கொலை மட்டுமே தப்பிக்கும் வழி என்ற சூழலை உருவாக்குகிறது. பாதுகாப்பான அறிக்கையிடல் வழிமுறைகள் மற்றும் மனநல ஆதரவு இல்லாமை இதை அதிகரிக்கிறது. பாலின வன்முறை மற்றும் அதன் உளவியல் பாதிப்புகளை நிவர்த்தி செய்யாமல், வடக்கில் பெண்களுக்கான தற்கொலைத் தடுப்பு முழுமையடையாது என்பதே நிதர்சனமாகும்.

தமிழர் அடையாளம் மற்றும் வாழ்வாதாரத்தின் மையமான நிலம், பொருளாதார மதிப்பை விடப் பெறுமதியானது. அதன் இழப்பு, சமூக மூலதனத்தையும் சொந்தத்தையும் இழக்கச் செய்கிறது. வடக்கில் நிலத்தை அபகரிப்பது வெறும் பொருளாதார இழப்பு மட்டுமல்ல, அது கலாசார மற்றும் உளவியல் ரீதியானது, நம்பிக்கையின்மை மற்றும் தற்கொலை உணர்வுகளைத் தூண்டுகிறது. மனநலத்தைச் சுற்றியுள்ள கலாசாரக் களங்கம், துயரம் பலவீனத்தைப் பிரதிபலிக்கிறது என்ற நம்பிக்கையில் வேரூன்றி, உதவி தேடுவதைத் தடுக்கிறது. நிலம் தமிழர்களுக்கு வாழ்க்கை; அதன் இழப்பு, தொடர்ச்சியான இராணுவமயமாக்கலுடன் இணைந்து, தற்கொலை நடத்தையைத் தூண்டும் ஒரு பரவலான இடப்பெயர்ச்சி உணர்வை உருவாக்குகிறது. நில மறுசீரமைப்பு அல்லது சமூக அடிப்படையிலான உளவியல் சமூக ஆதரவு போன்ற பாதுகாப்புக் காரணிகள், அரசியல் எதிர்ப்பு மற்றும் நிதிப் பற்றாக்குறைகளால் தடுக்கப்படுகின்றன. இதனால் இடம்பெயர்ந்த தமிழர்கள் பாதிக்கப்படக்கூடியவர்களாக உள்ளனர். நிலப் பிரச்சினைகள் மற்றும் அவற்றின் உளவியல் தாக்கத்தை நிவர்த்தி செய்யாவிட்டால், வடக்கில் தற்கொலைத் தடுப்பு பயனற்றதாகவே இருக்கும் என்பது வெறும் எச்சரிக்கையல்ல.

வடக்கில் மனநோய் குறித்த அவப்பெயர், அணுகக்கூடிய சிகிச்சை இல்லாததுடன் இணைந்து, மக்களை அமைதியாகச் சிக்க வைக்கிறது. பலருக்கு, தற்கொலை மட்டுமே வெளியேறும் வழியாகிறது. சமூக விழிப்புணர்வுப் பிரசாரங்கள் அல்லது பாடசாலை சார்ந்த ஆலோசனை போன்ற பாதுகாப்புக் காரணிகள் நிதி மற்றும் கலாசார எதிர்ப்பால் வரையறுக்கப்பட்டுள்ளன. இதனால் சிகிச்சையளிக்கப்படாத மனநோய், தற்கொலைக்கு ஒரு தொடர்ச்சியான உந்துசக்தியாக அமைகிறது. மனநலத்தைக் கவனிக்காமையும், சேவைகளை விரிவுபடுத்தாமையும் காரணமாக, வடக்கில் தற்கொலை முயற்சிகள் தொடர்ச்சியாக உயிர்களை இழக்கச் செய்கின்றன. பொருளாதார நெருக்கடி, வட இலங்கையில் போருக்குப் பிந்தைய அதிர்ச்சியுடன் பின்னிப் பிணைந்துள்ளது. இந்த நெருக்கடி தனிநபர், குடும்பம் மற்றும் சமூக மட்டங்களில் உளவியல் நல்வாழ்வு மற்றும் மன ஆரோக்கியத்தில் தீங்கு விளைவிக்கும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மேம்பட்ட மனநலச் சேவைகள் மற்றும் பொருளாதார உதவி போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் வடக்கில் போதுமானதாக இல்லை. தொடர்ச்சியான இராணுவமயமாக்கலுக்கு மத்தியில் அவ்வப்போது அரசு சாரா நிறுவனங்கள் மட்டுமே ஆதரவு அளிக்கின்றன. இவற்றை நிவர்த்தி செய்யாமை, நெருக்கடியும் விரக்தியும் உருவாகும் சுழற்சியை நிலைநிறுத்துகிறது.

பல்பரிமாணப் பார்வையில் போருக்குப் பின்னரான தற்கொலைகளை நோக்க வேண்டியுள்ளது. இதை ஆழமாக விளங்கி விரிவாகச் செயலாற்றுவதன் மூலமே தடுக்க முடியும். தற்கொலைகள் தனித்த நிகழ்வல்ல என்ற புரிதல் இதற்கான முதற்படியாக இருக்க வேண்டும். இதைப் புரிந்துகொண்டால் மட்டுமே, இதன் சமூகப் பரிமாணத்தைப் புரிந்துகொள்ள முடியும். எனவே போருக்குப் பிந்தைய இலங்கையின் வடபுலத்தில் ஒரு தற்கொலைச் செய்தியை ஊடகத்தில் பார்த்தாலோ, கேட்டாலோ அதை ஒரு தனித்த நிகழ்வாக விளங்காமல் இருப்பது மிகவும் முக்கியமானது. சமூகமாக நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதைத் தீர்மானிக்க இந்தப் புரிதல் அவசியமானது.

## அடிக்குறிப்புகள்


1. https://academic.oup.com/ije/article/36/6/1235/816375
2. https://pmc.ncbi.nlm.nih.gov/articles/PMC7592752/, https://www.ide.go.jp/English/ResearchColumns/Columns/2023/aida_takeshi.html
3. https://pmc.ncbi.nlm.nih.gov/articles/PMC11023397/, https://sljpsyc.sljol.info/articles/10.4038/sljpsyc.v15i2.8602
4. https://ijmhs.biomedcentral.com/articles/10.1186/1752445873, https://www.sciencedirect.com/science/article/pii/S2666560325000696
5. https://asu.elsevierpure.com/en/publications/politicalviolenceandmentalhealthinnepalprospectivestudy
6. https://bmcpsychiatry.biomedcentral.com/articles/10.1186/s12888024058121, https://psychologynepal.com/blog/ptsdinnepal/
7. https://pmc.ncbi.nlm.nih.gov/articles/PMC2241836/

பக்தவத்சல பாரதி



மானிடவியல் ஆய்வாளர். நாற்பது ஆண்டுகளாக மானிடவியல் புலத்தில் பங்காற்றி வருபவர். பழங்குடிகள், நாடோடிகள், விளிம்பு நிலையினர் தொடங்கி, தமிழர் மானிடவியல், திராவிட மானிடவியல், இலக்கிய மானிடவியல் ஊடாக, இலங்கை மானிடவியல் வரை பயணித்தவர். எழுத்து, பதிப்பு, மொழிபெயர்ப்பு என இதுவரை 32 நூல்களைப் படைத்திருப்பவர். புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தமிழ்ப் பல்கலைக்கழகம், காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம் இரண்டிலும் வருகைதரு பேராசிரியர்.

# பன்மைத் தேசங்களில் கண்ணகை: தாய்த் தெய்வ மரபில் கண்ணகையை மீள்வரையறை செய்தல்

தமிழ்ச் சமூகத்தின் தாய்த்தெய்வ மரபு மிக நீண்டது. அது சிந்துவெளி தொடங்கி, தமிழகம் ஊடாக, கிழக்கிலங்கை வரை விரிந்துள்ளது. இந்தக் கால இட நீள் மரபில் தமிழ்ச் சமூகம் கண்டுள்ள தாய்த்தெய்வங்கள் எவை? அவற்றின் இருத்தலியம் என்ன? படிமலர்ச்சி என்ன? பிற்காலப் பரிமாணங்கள் என்ன? இவற்றில் கண்ணகையின் வகிபாகம் என்ன? முதலான கருத்தினங்களை இக்கட்டுரை ஆராய்கிறது. தமிழர் தேவகணத்தில் கண்ணகை மிகவும் தனித்துவமானவள் என்பதும், அவளை வேறுவகையில் மீள்வரையறை செய்ய வேண்டும் என்பதும் இந்த ஆய்வின் கருதுகோள்கள்.

இலக்கிய மானிடவியலும், ஒப்பியல் இனவரைவியலும் இந்த ஆய்வின் ஆதார சுருதிகளாகும். செவ்வியல் இலக்கியத் தரவுகளும், வாய்மொழி இலக்கியத் தரவுகளும், பனுவலாக்கம் பெற்றுள்ள பத்ததி ஏடுகளும், மிக அண்மையில் (2025) ஈழம் தொடங்கி கேரளம் வரை மேற்கொண்ட களப்பணித் தரவுகளும் இந்த மெய்மைகளைக் கண்டடைய உதவும் தரவுக் களங்களாகும்.

சமகாலக் களப்பணியிலிருந்து சிலப்பதிகாரம் நோக்கிச் செல்வதும், சிலம்பிலிருந்து சமகாலம் நோக்கி மீள வருவதும் வரலாற்று ரீதியில் ஒன்றையொன்று இட்டுநிரப்பும் அணுகுமுறை (Complimentary Approach) சார்ந்ததாகும். அதாவது, சமகாலத்திலிருந்து கடந்த காலத்தையும், கடந்த காலத்திலிருந்து சமகாலத்தையும் ஒன்றிணைத்து வாசித்தல் இந்த ஆய்வுக்கான முறையியலாகும். இவையனைத்தையும் இலக்கிய இனவரைவியலாக (Literary Ethnography) இந்த ஆய்வு நோக்குகிறது.

## தாய்த் தெய்வ மரபின் வேர்கள்

தமிழ்ச் சமூகம் குழந்தையாக இருந்தபோதே சமய நம்பிக்கை தோன்றிவிட்டது. அப்போது உலகைப் படைத்தது கடவுள் எனும் சிந்தனை உருவாகவில்லை. சமயத்திற்கு முந்தைய 'முன் சமயம்' (Prereligion) ஏற்பட்ட காலமது. அக்கால கட்டத்தில் தமிழர்களின் தொல் சமயம் ஆவியுலகமாக இருந்தது. பல்வேறு மீவியல் ஆற்றல்கள் பரவியிருந்தன. பின்னர் உருவான சங்க இலக்கியம் அவற்றை அணங்கு, சூர், சூலி, கூளி, கழுது, கூற்று, காலன், பேய், பூதம், முருகு என்றெல்லாம் குறிப்பிட்டது. இவையனைத்தும் மீவாற்றல் கொண்டவை; தாக்கி வருத்தும் ஆற்றல் கொண்டவை; அருவமானவை. இவற்றில் அணங்கு, சூர், கூளி, பூதம் போன்றவை பெண்பால் வகையினத்தவை. அணங்குகள் அந்தியிலும் இரவிலும் பூச்சூடி விரும்பிய உருவெடுத்து சுற்றித் திரிந்தவை. மலைகளிலும், நீர்த்துறைகளிலும் எதிர்ப்பட்டாரைத் தாக்கித் துன்புறுத்தியவை (அகம். 7, நற். 319). சூரர மகளிர் (குறுந். 52), வரையர மகளிர் (அகம். 342), அர (வானர) மகளிர் (கலி. 40), பேய் (குறுந். 89), பூதம் (பட்டின. 57), கழுது (நற். 122, 171) முதலானவையும் பெண் உருவம் கொண்டவை. இவை யாவும் அணங்கு போன்றே செயல்பட்டவை. தாக்கித் துன்புறுத்துவதே இவற்றின் செயலாக இருந்தது. இயற்கை மீது மனித சமூகம் கையாடல் செய்யத் தொடங்கிய தருணத்தில் அவை எதிர்வினையாற்றியதாக நாம் அவதானிக்கலாம். இயல்பின் சமநிலையும், இயற்கையின் இயங்குநிலையும் பாதிக்காதவாறு இவை காத்து நின்றன. இயற்கையில் இயற்கையாக இயங்கிய ஆற்றல்கள் இவை. பேய் மகளிரின் ஆற்றல்களைக் க. கைலாசபதி பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் (1966) எனும் நூலில் கண்டுள்ள முடிவுகளையும் இங்கு ஒப்பு நோக்கலாம். இந்த மீவாற்றல்கள் இயற்கையின் சமநிலையைப் பேண முற்பட்டவை எனும் சூழலியல் வாதம் இங்கு நியாயம் பெறுகிறது. பேய்களின் பெண் பூசாரியே 'பேய் மகளிர்' எனவும் பொருள் கொள்ளலாம்.

தமிழ்த் தேவகணத்தின் உருவாக்கத்தில் ஏற்பட்ட அடுத்த கட்ட மாற்றத்தையும் சங்க இலக்கியம் காட்டுகிறது. பெண்ணுருவில் திரிந்த மீவாற்றல்களுக்கடுத்து, உருவம் சார்ந்து உருவான தாய்த் தெய்வங்களை இந்தக் கட்டத்தில் காண்கிறோம். பெருங்காட்டுக்கொற்றி (கலி. 89), கானமர்செல்வி/ காடமர்செல்வி (அகம். 345), துணங்கையஞ்செல்வி (பெரும்பாண். 459) என்றெல்லாம் இத்தெய்வங்கள் அழைக்கப்பட்டன. பெண் தெய்வங்கள் ஆதியில் 'செல்வி' என்றே அழைக்கப்பட்டன. காட்டில் வளத்தைத் தருபவள் என்பது இதன் பொருள். பழையோள், காடுகிழவோள் என்பவையும் செல்வியின் வழி நின்றவர்கள்தாம்.

சங்ககாலத்தில் பெண் தெய்வங்கள் உற்பத்தி சார்ந்த பொருண்மையில் அறியப்பட்டனர். அன்று 'செல்வி' என்பவள் வளரிளம் பருவத்தினள். இவள் காட்டில் வாழ்வாதாரப் பணிகளில் (உணவு உற்பத்தி) தன்னை முழுவதும் ஈடுபடுத்திக் கொள்ளும் தகுதி பெற்றவள். மணமான பெண்கள் உழைப்பதற்குத் தேவையான குழந்தைகளைப் பெற்றெடுக்கும் (மானுட உற்பத்தி) பொறுப்பில் இருந்தார்கள். அவர்களால் ஆண்டு முழுவதும் அன்றாடம் உணவாதாரங்களைத் தேடுவதில் ஈடுபட முடியவில்லை. ஆகவே, குறிஞ்சியில் 'செல்வி'யர் முக்கிய பங்கெடுத்தனர். பழையோள் (திருமுருகு. 259), காடுகிழவோள் (திவாகர நிகண்டு. 78) போன்றவர்கள் கானகத்தில் வன்புல விவசாயத்தில் ஈடுபட்டவர்கள் வணங்கும் தெய்வங்களாயின. சங்ககாலத்தில் கானக வாழ்வுக்கடுத்து வீரயுகம் உருவானது. சிற்றெல்லைகளைக் கொண்ட நாடுகள்,

சீறூர் மன்னர்கள், முதுகுடி மன்னர்கள், குறுநில மன்னர்கள், போர்கள், ஆநிரை கவர்தல் மீட்டல் முதலானவை மிகுந்து காணப்பட்ட காலகட்டம் அது. அக்காலகட்டத்தின் முக்கிய தெய்வமாகக் கொற்றவை திகழ்ந்தாள். கானக வாழ்வுக்குச் செல்வியும், வீரயுக வாழ்வுக்குக் கொற்றவையும் எனும் தனித்துவ உருவாக்கங்கள் தமிழ்த் தேவகணத்தின் ஒரு முக்கிய படிமலர்ச்சியாகும்.

போர், வீரம், வெற்றி ஆகிய கூறுகளை மையமிட்ட கொற்றவை உருவாக்கம் என்பது, பின்னாளில் மூவேந்தர்கள் உருவாக்கிய 'அரச தெய்வம்' எனும் வகையினத்திற்கான வேர்களாகும். பின்னாளில் அரசு ஆதரவில் உருவான கண்ணகிக் கோட்டங்கள் கொற்றவை நிலையிலிருந்து விருட்சமடைந்த ஒரு விரிநிலைப் படிமலர்ச்சி (Divergent Evolution) என இங்கு நாம் உய்த்துணரலாம்.

## தமிழர் தேவகணம்

மேற்கூறிய தொல்குடிச் சமயமானது உழுகுடிச் சமூகம் உருவான காலகட்டத்தில் நாட்டார் சமயமாக உருவானது. அது கால, இட, சமூக வேறுபாடுகளால் மிகப் பன்மியமாகப் பரந்து விரிந்துவிட்டது. இந்த வளர்ச்சியினூடாகப் பெருநெறிச் சமயம் (நிறுவனச் சமயம்) தோன்றியது. தொல்குடி மரபு, நாட்டார் மரபு, பெருநெறி மரபு ஆகிய இந்த மூன்று படிநிலைகளிலும் கண்ணகை பெறும் வகிபாகத்தை ஆராய வேண்டும். தமிழர் சமய வரலாற்றிலேயே கண்ணகையின் தெய்வமாதல் மரபு தனிப்பெரும் மரபாக வேறுபட்டு நிற்கிறது. அதனை இனிவரும் பகுதிகளில் ஆராய்வோம்.

## கண்ணகி ஒரு தனி வகையினம்

இந்திய இதிகாச காப்பிய மரபுகளைப் பார்க்கும்போது கண்ணகி மிகவும் தனித்துவமானவள். இதனை இன்னும் நாம் நுட்பமாக ஆராயவில்லை, நிறுவவில்லை. ஒருவித செவ்வியல் சார்ந்த, மைய நீரோட்ட மரபுக்குள்ளேயே நாம் கட்டுண்டு கிடப்பதாகத் தோன்றுகிறது.

சீதை, திரௌபதி, குந்தி, மண்டோதரி, காந்தாரி போன்றவர்கள் தலைசிறந்த ஒழுக்க சீலர்கள். கணவனே கண்கண்ட தெய்வம் என வாழ்ந்தவர்கள். இவர்கள் முன்மாதிரியான மனைவிமார்களாகப் புகழப்படுபவர்கள். பதிவிரத தர்மத்தைப் போற்றி மாபெரும் கற்புக்கரசிகளாகப் புகழப்படுபவர்கள்.

கண்ணகி கற்புக்கரசி, பதிவிரதை, பத்தினி என்பதையெல்லாம் தாண்டியவள். இந்தியக் காப்பிய மரபில் இவளுக்கு நிகரானவள் எவரும் இல்லை. அவளுடைய தனித்துவத்தை இன்னும் நாம் துல்லியமாக இனங்காணவில்லை. கண்ணகி புகாரில் பேசா மடந்தையாக இருந்தவள். மதுரையில் வழக்காடி நீதி வென்றவள். வஞ்சியில் தெய்வமானவள்.

கண்ணகி தன் கணவன் இறந்தவுடன் அன்றைய மரபுப்படி பதிவிரதப் பெண்ணாக உடன்கட்டை ஏறவில்லை. தீப்பாய்ந்தம்மனாக மாறவில்லை. சதிக்கல்லாக மாறவில்லை. மாறாக, நீதி கேட்டுப் போராடினாள். நீதி தவறிய மன்னனை உயிரிழக்கச் செய்தாள். மதுரை மாநகரையே எரித்தாள். கண்ணகி பதிவிரதையாகவோ, கற்புக்கரசியாகவோ நின்று நீதியை வென்றெடுக்கவில்லை. தன் மார்பகத்தைக் கிழித்தெறிந்து வஞ்சினம் உரைக்கிறாள். அக்னி தேவனுக்கு ஆணை இடுகிறாள். அதன் பின்னரே மதுரை எரிகிறது. கண்ணகி பெருந்துயரத்துடன் இருந்தபோது அவளுடைய தோழி தேவந்தி கண்ணகியிடம் 'நீ காமனை வழிபட்டால் உன் கணவன் விரைவில் வந்து சேர்வான்' என்று சொல்லி காமனை வழிபடத் தூண்டினாள். அதனை ஏற்காமல் 'பீடுஅன்று' எனக்கூறி மறுத்துவிட்டாள். அன்றைய உலக வழக்கை ஏற்காதவளாகவே கண்ணகி இருந்தாள்.

இந்தியத் தமிழ் மரபுகளில் இறப்பால் ஒருவர் தெய்வமாதல் உண்டு. கண்ணகி உயிரோடு வாழும்போதே தெய்வமானவள். இவ்வாறான சூழலில் காப்பியவாதிகள் கண்ணகியைப் 'பத்தினித் தெய்வம்' என அடையாளப்படுத்தினர். 'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல்' என்று சிலப்பதிகாரத்தின் மூன்று நோக்கங்களைப் பேசும் போது பத்தினி பற்றிக் கூறுகிறார் இளங்கோவடிகள். கண்ணகியைப் பத்தினித் தெய்வமாக சிலம்பு முழுவதும் காட்டுகிறார். இது இலக்கியவாதிகளின் காப்பிய மனம் சார்ந்தது. செவ்வியல் தன்மை கொண்டது. அனைத்திந்தியப் பார்வை கொண்டது. பெருமரபு சார்ந்தது. மைய நீரோட்டம் சார்ந்தது.

கண்ணகியைத் தமிழ் நாட்டார் மரபிலிருந்தும் நோக்க வேண்டும். நாட்டார் மரபே மக்கள் மரபு; சுதேசி மரபு; அகவய மரபு; தமிழ்ச் சிந்தனை மரபு. கொங்கு நாட்டையே நாம் இங்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். கொங்கு தேசத்தில் வீரமாத்திகள் அதிகம். மக்கள் வழிபடும் சக்தி தெய்வங்கள் இவை. கண்ணகியும் ஒரு வீரமாத்தியே; கற்புக்கரசியல்ல. நீதியை வென்றெடுத்த வீர மங்கை. இந்த வீர மங்கைக்குக் கற்புத்திறன் உதவியாக அமைந்திருக்கலாம். ஆனால் கற்பே முதன்மை பெறவில்லை. வீராயியாக வடிவெடுத்தாள்.

இதுவரை நாம் கண்ணகியைப் 'பத்தினித் தெய்வம்' என்றே பேசி வந்துள்ளோம். கண்ணகியின்

மூலப்படிமத்தை (*Archetype*) இன்னும் நாம் துல்லியமாக அவதானிக்கவில்லை. அவள் ஒரு தனி வகையினம். பழையோள், கொற்றவை, காடமர்செல்வி, கானமர்செல்வி, துணங்கையஞ்செல்வி முதலான சங்ககாலத் துடியான தெய்வங்களின் பிற்சங்ககால நீட்சியாகப் பார்க்க வேண்டியவள். அவள் ஒரு புது வடிவத்தில் பரிணமித்தவள். ஆதியில் “பெண் ஒரு வேட்டைக்காரி” (*Woman, the Hunter*) என்பது மனிதகுல வரலாற்றில் மானிடவியல் கண்ட உண்மை. அந்த வகையில் கண்ணகி ஒரு ‘வீராயி’. தமிழ் மரபில் இவள் ஒருவளே வீராயியாகப் பரிணமித்திருக்கிறாள். காட்டில் வேட்டையாடியது இயற்கைக் காலம். நாட்டில் வேட்டையாடியது அறநெறிக் காலம். கண்ணகி தன் வெற்றியின் மூலம் நாட்டில் நீதியை நிலை நாட்டினாள். அது வேட்டைக்கு நிகரானதே.

இவள் காளி, மாரியம்மன் போன்றவள். காளியும் மாரியம்மனும் மணமானவர்கள். ஆனால் என்றுமே கணவருடன் இணையாகத் தோன்றாதவர்கள். அதனால் அவர்களைத் ‘தேவித் தெய்வம்’ என்கிறோம். கண்ணகியும் அப்படித்தான். திருமணமாகி நான்காம் நாளன்றே கோவலன் மாதவியிடம் சென்று விட்டான். கண்ணகி காளி, மாரியம்மனைப் போல் மணமான ஒரு கன்னிப் பெண். தமிழ்த் தேவகணத்தில் தோன்றிய முதல் ‘வீராயி’ கண்ணகியே. இளங்கோவடிகள் முன்னிறுத்திய இந்த முதல் தமிழ் வீராயி பற்றி இன்னும் அதிகமாக விவாதிக்க வேண்டும். தமிழ் தேவகணத்தின் படிமலர்ச்சியில் கண்ணகி ஒரு தனி வகையினம். இவள் கன்னித் தெய்வமாகவோ, மனைவித் தெய்வமாகவோ உருவாகவில்லை. அவள் ஒரு தனித்துவமான தேவி தெய்வம்.

### இளங்கோவடிகள் உருவாக்கிய புதுமரபு

சேரன் செங்குட்டுவனின் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். இவனுடைய மனைவி நற்சேனை. தன் கணவன் இறந்தபோது உடன்கட்டை ஏறுகிறாள். சேரன் செங்குட்டுவன் தன் தாய்க்குப் பத்தினி படிமக்கல் எடுத்தான் என்கிறது சிலப்பதிகாரம். நற்சேனை தீப்பாய்ந்தவளாகவே கருதப்பட்டாள்.

தீப்பாய்ந்தவர்களுக்கு எடுக்கப்பட்டவை சதிக்கல், மகாசதிக்கல், மாஸ்திகல் என்றெல்லாம் அழைக்கப்பட்டன. ஆனால் கண்ணகியை வேறு வகையான தெய்வமாக்கினார் இளங்கோவடிகள். இதனை, தான் இயற்றிய சிலப்பதிகாரத்திலேயே காட்டுகிறார். பத்தினிக் கோட்டம் என்று சொல்கிறார்.

கண்ணகி தன் கணவன் கோவலன் இறந்தவுடன் தீப்பாயவில்லை. மாறாக, பாண்டிய மன்னனிடம் ஆவேச தர்க்கமிட்டு நீதி வென்றாள். மதுரையை எரித்தாள். சேர நாட்டை அடைந்து விண்ணுலகம் சென்று தெய்வமானாள். இந்திய மரபில் பதிவிரதைகளின் ஆற்றல்களை இங்கு நாம் ஒப்பிட வேண்டும். கண்ணகி ஒரு சக்திவாய்ந்த ‘பத்தினி’ மட்டுமல்ல. நீதியை நிலைநாட்டி, மதுரை நகரை எரித்த வீரமங்கை. வடமரபைச் சேர்ந்த பஞ்ச கன்னியரின் பதிவிரதத்தன்மை வேறு வகையானது. கண்ணகியின் ஆற்றல் வேறுவிதமானது. இரண்டு மரபுகளையும் பொதுமைப்படுத்த முடியாது. கண்ணகியிடம் அணங்குடை பேய்மகளிரின் ஆதிக்கூறுகள் அடங்கியுள்ளன.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கண்ணகி வழிபாட்டை நமக்குக் காட்சிப்படுத்துகிறார். கண்ணகி தன் வாழ்வின் கடைசி நாளில் தெய்வமாகிறாள். கண்ணகி கோவிலில் முதலில் பூசை செய்தவள் தேவந்திகை. இவள் ஒரு பெண் பூசாரி. இதனைச் சிலம்பின் வரந்தருகாதை பின்வருமாறு சொல்கிறது.

> பத்தினிக் கோட்டம் படிப்புறம் வகுத்து
> நித்தல் விழாவணி நிகழ்க என்று ஏவிப்
> பூவும் புகையும் மேவிய விரையும்
> தேவந்திகையைச் செய்க என்று அருளி
>
> (வரந்தருகாதை. 151-154)

மனித குலத்தில் முதல் பூசாரி பெண் பூசாரியே என்று நிறுவுவதற்குச் சிலப்பதிகாரம் மிக முக்கியச் சான்றாக விளங்குகிறது. வேட்டுவ வரியில் கொற்றவையின் பூசாரியாகச் சாலினியைக் காட்டுகிறார் இளங்கோவடிகள். கண்ணகியின் பூசாரி தேவந்திகை. இவ்விரண்டு சான்றுகளும் மிக முக்கியமானவை. பெண் பூசாரியம் (*Shawomanism*) பற்றி வேறெந்தத் தமிழிலக்கியமும் பேசவில்லை. இந்த வகையில் சிலப்பதிகாரம் தனித்துவமானது. மனித குல வரலாற்றை மீட்டுருவாக்குவதில் இந்தத் தரவுகள் மிக முக்கியமானவை.

கொடுங்கலூர் பூசகர்கள் இன்று ‘அடிகள்’ எனும் சாதியாராக இருப்பதும், இவர்கள் தாய்வழி முறையைப் பேணுவதும் சிலம்பின் நேர்த் தொடர்ச்சி எனலாம். மட்டக்களப்புக் கண்ணகைச் சடங்குகளில் கட்டாடியார் பெண்களாக இல்லை என்றாலும், சடங்குகளில் பெண்களின் பங்கேற்பே மிகுதியாகும். பொங்கலிட்டு மடை வைப்பதும், தீச்சட்டி ஏந்தி வேண்டுவதும், மடிப்பிச்சை எடுத்து நேர்ச்சை செய்வதும் பெண்கள்தான். ஆண்கள் வேடிக்கை பார்ப்பவர்கள்தான்.

### கண்ணகி வழிபாட்டின் படிமலர்ச்சி

கண்ணகி தன் குறுகிய கால வாழ்வில் பல்மதச் சூழலை எதிர்கொண்டவள். கோவலனின் பெற்றோர் பௌத்தர்கள். கண்ணிகியின் பெற்றோர் ஆசீவகர்கள். கோவலனின் குடும்பத்தார் கடல் வணிகர்கள். அதனால் அவர்கள் கடல் தெய்வமான மணிமேகலாவை முதன்மைத் தெய்வமாக வழிபட்டு வந்தனர். சேரன் செங்குட்டுவன் சைவர். கவுந்தியடிகள் சமணத் துறவி. சிலப்பதிகார காலத்தில் அறுவகைச் சமயங்களைச் சார்ந்த சமயக்கணக்கர்களிடம் நிகழ்ந்த கடுமையான விவாதங்களையும் மோதல்களையும் காண்கிறோம். இத்தகைய சூழல்கள் நிலவியபோது கண்ணகி எவ்வாறு தெய்வமானாள் என்பதை நுணுகி ஆராய வேண்டும்.

கண்ணகி மதுரையிலிருந்து கிளம்பி சேரர் தேசத்தில் நெடுவேள் குன்றத்தில் வேங்கை மர நிழலில் நின்றபோது, அங்கிருந்த குறவரின மூதாட்டி அவள் யாரென வினவினாள். கண்ணகி தன் விதிப் பயனை விவரித்தாள். பின்னர் அந்த மூதாட்டி தன் மக்களை அழைத்து "சிறுகுடியீரே! சிறுகுடியீரே!, தெய்வங்கொள்ளுமின்" என்று அறிவுறுத்தினாள். கண்ணகியைத் தெய்வமாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்றாள். கண்ணகியை முதன் முதலில் தெய்வமாக ஏற்றுக் கொண்டவர்கள் குறிஞ்சித் திணை குறவரின மக்கள்தான். ஒரு தொல்குடியின் தேவகணத்திற்குள் கண்ணகி ஐக்கியமாகி விட்டாள். அந்தக் கட்டத்தில் கண்ணகி ஒரு தொல்குடித் தெய்வமாகும்.

இங்கு இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். கோவலனும் கண்ணகியும் மதுரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது பயணக் களைப்பில் எயினர் குடியினர் வாழும் ஒரு சோலையில் இளைப்பாறினர். அங்குக் கொற்றவையாகத் தன்னை அலங்காரம் செய்து கொண்டிருந்த சாலினி கண்ணகியைப் பார்த்து ஒரு கணம் யோசித்துவிட்டு "இவளோ கொங்கச் செல்வி, குடமலையாட்டி, தென் தமிழ்ப்பாவை, செய்தவக்கொழுந்து, உலகிற்கு ஓங்கிய திருமாமணி" எனப் போற்றினாள் (வேட்டுவவரி 47 - 50).

சாலினி எனும் ஒரு தொல்குடிப் பெண் பூசாரி, செல்வச் செழிப்புள்ள ஓர் உயர்குடி வணிக குலப் பெண்ணைப் பார்த்து "உலகமெலாம் போற்றும் திருமாமணியாய் வருவாய்" என்று வாக்குரைத்தது ஓர் அதிசயம். இவளை எல்லா உலகத்துக்குமான தெய்வம் எனப் போற்றினாள். அதனால்தான் துளுநாடு, குடகுநாடு (புன்னாடு), சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, யாழ்குடா நாடு, மட்டக்களப்புத் தமிழகம், சிங்கள இலங்கை என எட்டுத் தேசங்களிலும் வழிபடும் தெய்வமானாள். தென்னாசியப் பரப்பில் வேறெந்த தெய்வமும் இவ்வளவு நாடுகளில் வழிபடப்படவில்லை. ஒரு வீரமாத்தியாகப் பெயர் பெறவும் இல்லை.

குன்றக் குறவர்களிடம் தெய்வமாகிய கண்ணகி அடுத்துக் கேரளத்தில் பகவதியாக உருவெடுத்தாள். இதனை நாம் கருத்தூன்றி ஆராய வேண்டும். கிறித்து பிறந்த காலத்தில் பல்வேறு மரபுகளின் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் உலகப்



**மங்கலதேவி கண்ணகி கோவில் - கேரளா**

Image Source : ta.wikipedia.org

பொதுமறையை வகுத்தார் திருவள்ளுவர். எல்லாருக்கும் பொதுவாக இறைவனை 'ஆதிபகவன்' என முன்மொழிந்தார். மதங்களைப் பொதுமையாக்கிய அறநூல் வள்ளுவம் என்பதை நாமறிவோம். அதனால்தான் அதுவரை யாரும் அழைக்காத வகையில் இறைவனை 'பகவன்' என்றார்.

பகவன் எனும் சொல்லுக்கு இணையான பெண்பாற் சொல்தான் 'பகவதி'. ஆண், பெண் தெய்வங்களைச் சமன்படுத்தினார் வள்ளுவர். தான் தெய்வமாகத் தோன்றிய சேர தேசத்தில் எல்லாருக்குமான ஒரு பொதுத் தெய்வமாக உருவெடுத்தாள் பகவதி. இளங்கோவடிகளின் நோக்கமும் ஒன்றுபட்ட தமிழகத்தை உருவாக்குவது தான். தொல்குடிகளின் தேசங்கள், சேர, சோழ, பாண்டியப் பேரரசுகள் ஆகிய அனைத்தையும் ஒற்றை தமிழ்நாடாக மாற்ற விரும்பினார். அந்தத் தேசத்துக்கு முன்னோடித் தெய்வம்தான் கண்ணகி. இதனை அரச தெய்வமாக உருவாக்கினார் இளங்கோவடிகள். ஆனால் பிராமண மதம், வைதீகம், இந்து மதம் எனும் பெயர்களில் எழுந்த பக்தி இயக்கப் பேரெழுச்சியால் பகவதி இந்துமயமாக்கப்பட்டாள். இது ஒரு சமய ரீதியான

விபத்துதான். அந்த விபத்திற்குப் பின்னர் தமிழ்நாட்டில் மீளெழுச்சி நிகழவேயில்லை. பொது இறைமை ஒன்று உருவாகவில்லை. கண்ணகி இந்து மதக் கடவுளாக மாற்றப்பட்டாள். காலம் நிகழ்த்திய மாற்றத்தில் பல்வேறு வடிவங்களை ஏற்றுக்கொண்டாள்.

## தமிழகத்தில் கண்ணகியின் உருமாற்றங்கள்

தமிழ்ச் சமய மரபில் கண்ணகி ஓர் அச்சு அசலான தொல் மூலப்படிமம் (Archetype). அவளுக்கு முன்பும், பின்பும் அப்படியொரு தெய்வத்தைத் தமிழர்கள் கண்டதில்லை. அந்தப் படிமம் நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை. அவள் பெருமரபாக இருந்த இந்து மதம் எனும் கூட்டமைப்பில் கரைந்து போனாள். பல்வேறு வித்தியாசங்களுடனும், வேறுபாடுகளுடனும், பன்முகத்தன்மையுடனும் உருமாற்றங்களையும் திரிபுவடிவங்களையும் பெற்றுக் கொண்டாள். இன்று அவள் பல்வேறு பெயர்களில் வணங்கப்படுகிறாள்.

1. மதுரை யாதவர் தெருவில் உள்ள செல்லத்தம்மன் கோயில் சிலப்பதிகார மாதரியின் வீடு எனும் வழக்குண்டு. கண்ணகிக்கு அடைக்கலம் கொடுத்த மாதரி செல்லத்தம்மனாகக் கருதப்படுகிறாள். நாளடைவில் கண்ணகி கோவிலாகவே அது மாறிவிட்டது.

2. கண்ணகி மதுரையை எரித்துவிட்டு அமர்ந்த இடத்தில் விராட்டி பத்து அம்மன் கோயில் உள்ளது. கண்ணகி ஓய்வெடுத்த இடத்தில் பொன்னமராவதி அழகிய நாச்சியம்மன் கோயில் உள்ளது.

3. மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் கம்பத்தடி மண்டபத்தில் உள்ள துர்க்கையின் மார்பில் வெண்ணெய் வீசுவது வழக்கம். ஒரு முலையிழந்த கண்ணகிக்கு இடையர் குலப் பெண்கள் வெண்ணெய் தடவியதன் ‘போலச் செய்’வதாக இது அமைகிறது. உண்மையில் அது கண்ணகியே என்பார்கள் ஆய்வாளர்கள்.

4. ஈரோடு சுணக்கம்பாளையம் பகவதி கோயில், கண்ணகி கோயிலே. ஆத்தூரிலும் கண்ணகி கோயில் சடங்கில் சிலம்பின் கூறுகள் உள்ளன.

5. சென்னை திருவெற்றியூர் சிவன் கோயிலில் வடக்கு வீதியில் இருக்கும் துர்க்கை கோயில் ஆதியில் கண்ணகி கோயில்தான். இங்கு நிகழும் திருவிழாவில் பந்தல் எரிக்கும் சடங்கு நிகழ்கிறது. இது மதுரையை எரியூட்டியதை நினைவூட்டுகிறது.

6. திருச்சி உறையூரில் உள்ள வெக்காளியம்மனும், தூத்துக்குடி கொற்கையில் உள்ள வெற்றி வேலம்மனும், சென்னையில் திருவெற்றியூர் தியாகராசர் கோயிலில் உள்ள வட்டபுரியம்மனும் கண்ணகியின் திரிபுவடிவங்களே.

7. திருச்சியிலிருந்து பெரம்பலூர் செல்லும் வழியில் மதுர காளியம்மன், தஞ்சாவூரில் செங்கிளாச்சியம்மன், சிவகங்கை மாவட்டத்தில் கண்ணுடைய நாயகி இவர்களும் கண்ணகியே.

8. கொங்கு நாட்டில் காங்கேயத்தில் பகவதியம்மன் கோயில் உள்ளது. இதனைக் கொங்கு ஆவணம் ஒன்று ‘தாய்பகவதி’ என்று கூறுகிறது.

9. தமிழ்நாட்டில் திருப்பூர் மாவட்டம் சாமளாபுரம் பகவதி கோயிலுக்குக் கேரள மாநிலம் திருச்சூர் பகுதி மக்கள் வந்து வழிபடுகின்றனர். அவர்கள் இந்தப் பகவதியைப் ‘பருமக்காவு காணி பகவதி’ என்கிறார்கள்.

10. சூலூர் கண்ணம் பாளையத்தில் கேரளப் பாணியில் மரத்தால் மிகப் பெரிய பகவதி கோயில் கட்டப்பட்டுள்ளது (புலவர் செ.இராசு. கொங்குக் குல தெய்வங்கள், பக். 62-64).

11. கோவை மாநகரில் உள்ள கோணியம்மன் கண்ணகியே.

12. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மண்டைக்காடு பகவதியம்மன் கேரளத்தின் தாக்கம் பெற்றதாகும்.

இப்படியான இன்னும் சில கண்ணகி கோயில்களைத் தமிழ்நாட்டில் இனங்காண இயலும் (இராசு, ம. 2005; செல்லன் கோவிந்தன் 2009; ஜெயகலா, வெ. 2022: 54).

## கண்ணகி வழிபாட்டின் மாற்றங்கள்

தமிழகத்தில் கண்ணகி வழிபாடு மாரியம்மன் வழிபாடாகவும், வட்டபுரியம்மன், செல்லத்தம்மன், செல்லாண்டி அம்மன் வழிபாடாகவும் மாறிவிட்டது. கொங்குப் பகுதியில் இந்த மாற்றங்களைக் கொங்கு மன்னர்கள் செய்தனர். இதற்கான எண்ணற்ற சான்றுகளைக் கொங்கு நாட்டிலிருந்து நிறுவுகிறார் ஆரோக்கியசாமி (1953). ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்திற்கு அருகில் உள்ள பண்ணாரியம்மன் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு என்கிறார் அவர் (மேலது: 157).

கேரளத்தை ஒப்பிடும்போது, தமிழகத்தில் கண்ணகி வழிபாடு மிகக் குறைவுதான். தமிழகத்தின் மீது படையெடுத்த கன்னடர், தெலுங்கர், மராட்டியர் செல்வாக்கால் கணிசமான மாற்றங்கள் நிகழ்ந்தன. வைதீகத்தின் தாக்கமும் மிக அதிகம். இதனால் கண்ணகி வழிபாடு நாட்டார், வைதீகத் தாய்த் தெய்வங்களுடன்

கரைந்து விட்டது அல்லது திரிபு வடிவம் பெற்றுவிட்டது எனலாம்.

## கேரளத்தில் கண்ணகி வழிபாடு

கேரளத்தில் கண்ணகி வழிபாடு திருவனந்தபுரம் முதல் காசர்கோடு வரையுள்ள இடங்களில் மிகுந்த செல்வாக்குடன் வழக்கில் உள்ளது. பாலக்காடு மாவட்டத்தில் மிகவும் பரவலாக உள்ளது.

கண்ணகி வழிபாடு கேரளத்தில் மூன்று நிலையில் உள்ளது.

1. ஆகம மரபுக்குரிய பகவதி அம்மன். வைதீக மரபு வழிபாடு. நம்பூதிரி பிராமணர்கள் பூசகர்கள்.
2. கண்ணகியின் சில அடையாளங்களுடன் பகவதியாக வழிபடப்படுகிறாள். நாட்டார் வழிபாடும் வைதீக வழிபாடும் கலந்து நடைபெறுகின்றன. தகுதி குறைந்த நம்பூதிரிகள் பூசைகள் செய்கின்றனர்.
3. ஸ்ரீகுரும்பாதேவியாக வழிபடுதல். இதில் நாட்டார் மரபு அதிகம். வைதீகம் உள்ளே நுழைந்து கொண்டிருக்கிறது (பால்சேகர், அ. 2005; சந்திரன், வி.ஆர். 2005; ஜெயகிருஷ்ணன், ப. 2023).

கேரளத்தில் ஸ்ரீகுரும்பா, பத்திரகாளி, நல்லம்மா, மணிமங்கா, மாரியம்மன் போன்ற தாய்த் தெய்வங்களை வழிபடும் பாடல்களில் கண்ணகி புராணம் உள்ளது என்கிறார் கே.கே.என். குரூப் (1977).

வடகேரளத்துச் சீர்மக்காவு கோயில்கள் கண்ணகிக் கோயில்களே என்கிறார் மலபார் வரலாற்றை எழுதிய ஆங்கில அதிகாரி வில்லியம் லோகன் (Malabar Manual 1887).

கி.பி.9 ஆம் நூற்றாண்டில் ஆரிய நம்பூதிரிகள் கேரளத்தில் குடியேறியபோது கண்ணகி வழிபாடு பகவதி வழிபாடாக உருமாற்றம் பெற்றது. கேரளத்தில் கண்ணகி வழிபாடு சிலப்பதிகார காலத்தில் உருவாகி விட்டாலும், கி.பி.14 ஆம் நூற்றாண்டு வரை அது பல இடங்களுக்கும் பரவலாகியது என்கின்றனர் அறிஞர்கள் (பெருமாள், அ.கா. 2022; செல்லன் கோவிந்தன். 2009).

8 ஆம் நூற்றாண்டில் கேரளத்தில் மகோதயப் பேரரசு உருவானது. இந்த அரசு கி.பி. 1102 வரை நீடித்தது. பண்டைய சேர வம்சத்தினரே மகோதய அரசர்கள். மகோதயப் பேரரசர்கள் பெருமாள்கள் எனப்பட்டனர்.

முதல் மகோதய அரசன் குலசேகர வர்மன் (கி.பி. 800-820). இவரே குலசேகர ஆழ்வார் என்ற கருத்தும் உண்டு. இரண்டாம் அரசன் ராஜசேகரன் (கி.பி. 820-844). இவரது காலத்திய முதல் கல்வெட்டு ஒன்று ‘நமச்சிவாய’ என்று தொடங்குகிறது. இவர் பெரிய புராணம் குறிப்பிடும் சேரமான் பெருமாள் நாயனாராக இருக்கலாம் என்ற ஒரு கருத்தும் உண்டு.

வட கேரளத்தில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டை ஒட்டி நம்பூதிரிகளின் செல்வாக்கு ஆரம்பமானது. வைதீகத்தின் வளர்ச்சி இங்கிருந்து தொடங்குகிறது. கண்ணகி வழிபாட்டை இந்துவயமாக்கும் முயற்சி இக்காலகட்டத்தில் முழுமை பெற்று விடுகிறது எனலாம். 14 ஆம் நூற்றாண்டில் கேரளத்தில் பகவதி வழிபாடு மிகப் பரவலான வழிபாடாக மாறிவிட்டது. நம்பூதிரிகளின் ஆகம முறை பெருநெறி வழிபாடானது. மறுபுறம் கிராமப்புறக் காவுகளில் நாட்டார் தெய்வமாகவும் அது தொடர்ந்து நிலைபெற்றது.

கண்ணகி மதுரையை எரித்ததும் மழைவளம் நின்றது. பஞ்சம், வறுமை வந்தன. வெப்பு நோயும் தோன்றியது. அதனால் கொற்கைப் பாண்டியன் 1000 பொற்கொல்லர்களைக் கொன்று நங்கையைக் குளிர்வித்தான். இதனைக் கேட்ட கொங்கியம் கோசர், கயவாகு, சோழன் மூவரும் கோவில் எடுத்தனர் என்கிறது உரைபெறு கட்டுரை. ஆக, கேரளத்தில் கண்ணகி வழிபாடு பரவ சேர மன்னன் மட்டுமல்ல, கோசர்களும் காரணமாகும்.

கேரளத்தில் பல்வேறு சமூகத்தினர் கண்ணகி கதையைப் போற்றி வருகின்றனர். நல்லம்மா பாட்டு, தோற்றம் பாட்டு, கோவலன் சரித்திரம், கோவலன் கண்ணகி கதை, மலை அரையர், மன்னான், இருளர், காணிக்காரர், முதுவான் ஆகிய பழங்குடியினரின் கண்ணகி கதைப் பாடல் முதலானவை இன்றளவும் பிரசித்தி பெற்றுள்ளன. இவற்றில் கதாபாத்திரங்களின் பெயர்கள் பொன்மகன், பொன்மகள், கோவலன், கண்ணகி, தேவி எனப் பல வகைகளில் வருகின்றன. ஆனாலும் கதையின் அடிக்கருத்தும் (Motif), செயல்கூறுகளும் பொது அமைப்பைக் கொண்டுள்ளன. காடர் பழங்குடி மக்களிடம் வழங்கும் கண்ணகிக் கதையில் கோவலன் - கண்ணகி திருமணம் நடைபெறவில்லை. கண்ணகியின் மண வாழ்க்கை வேதனையளிப்பதால் அதனைக் காடர்கள் தம் கதையில் சேர்க்கவில்லை போலும்.

கேரளத்தில் பெருமலையில் வாழும் முதுவான் பழங்குடி மக்கள் கண்ணகியை மலையாள அம்மனாக வழிபடுகின்றனர். தீயர், வேலன், கணியான், மன்னான் முதலான பழங்குடி மக்களும் கண்ணகியைத் தொன்று தொட்டு வணங்கி வருகின்றனர். அவரவர் ஊர்களில் உள்ள பகவதி காவுகளில் இவர்கள் பூசாரிகளாகவும் உள்ளனர் (ஜெயகிருஷ்ணன், ப. 2023: 68 - 75).



யாழ்ப்பாணம் - வற்றாப்பளை கண்ணகி அம்மன்
Image Source - vanakkamlondon.com

பாலக்காடு மாவட்டம் அட்டப்பாடி இருளர்களிடம் கண்ணகி கதைப்பாடல் வழக்கில் உள்ளது. ஆண்டுத் திருவிழாவில் கோவலன் கூத்து எனும் தலைப்பில் கண்ணகி கதையை நிகழ்த்துகின்றனர் (மேலது: 47).

கேரளத்தின் புவியியல் பரப்பு நீண்டு வளர்ந்தது என்றாலும், பல்வேறு பிரதேசங்களிலும் கதையின் அடிக்கருத்து தொடர்கிறது. கேரளத்தில் வழங்கும் மேற்கூறிய வழக்காறுகள் அனைத்தும் தேவி தெய்வமான வரலாற்றை முன்னிலைப்படுத்துகின்றன. ஒரு சாதாரணப் பெண் நீதி கேட்டுத் தெய்வமாதல் என்பது ஒரு மகிமைக் கதையாக உருவெடுக்கிறது. தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் இந்தத் தெய்வமாதல் நிகழ்வே பெரிதும் பேசப்படுகிறது.

கேரளத்தைத் தோற்றுவித்தவர் என அறியப்படும் பரசுராமர் எது எது எப்படி இருக்க வேண்டும் என வரையறை செய்ததாக கேரளோற்பத்தி எனும் மலையாள நூல் கூறுகிறது. அதன்படி சில வழிபாட்டு முறைகளில் வைதீகம் கலக்காமலிருக்க வரையறுத்தார். அதன்படி கண்ணகி வழிபாடும் தெய்யமும் (சங்ககால வேலன் ஆட்டம் - வெறியாட்டம்) இன்றும் தொடர்கின்றன.

கண்ணகி மதுரையை எரித்த பின்பு சிவனிடம் வரம் பெற்றுக் கேரளத்தில் கோயில் கொண்டாள் என்று தோற்றம் பாட்டுக் கூறுகிறது. கண்ணகியை இந்துவயமாக்கும் முயற்சி இது. கேரளத்தில் கண்ணகி வழிபாடு திருவனந்தபுரம் முதல் காசர்கோடு வரையுள்ள இடங்களில் பெருவழக்கில் உள்ளது.

கேரளத்தில் எண்ணற்ற தாய்த் தெய்வங்களின் தோற்றத் தொன்மங்களில் (Origin Myths) தாருகன் - காளி கதை மையமாக உள்ளது. கண்ணகியை வழிபடும் தெய்வமாக ஏற்கும்போது காளியின் இடத்தில் கண்ணகியையும், தாருகன் இடத்தில் பாண்டிய மன்னனையும் வைத்து தோற்றப் பாட்டுகள் இயற்றப்பட்டன. இது இந்துவயமாக்கத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியாகும்.

காளி தாருகனை அழிக்கச் சிவனால் தோற்றுவிக்கப்பட்டவள். கண்ணகியோ பாண்டியனை அழிக்கப் பிறந்தவள் என மணிமங்கா தோற்றப் பாட்டுக் கூறுகிறது. இதன் மூலம் இந்துவயமாக்கம் முழுமை பெறுகிறது.

### கேரளத்தில் கண்ணகி வழிபாட்டின் பரவலாக்கம்

கண்ணகி மதுரையை எரித்த பின்னர் வைகை வழியே 64 கி.மீ. நடந்து சென்று சேரநாட்டில் நெடுவேள் குன்றில் வேங்கை மரத்தடியில் நிற்கிறாள். அங்கிருந்த குன்றக் குறவர் இன மூதாட்டி கண்ணகியை யார் எனக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். பின்னர் தன் இனத்தாரை அழைத்து,

> சிறுகுடியீரே! சிறுகுடியீரே
> தெய்வம் கொள்ளுமின்
>
> (வஞ்சிக்காதை. 24.4)

என்றாள். கண்ணகியை முதன் முதலில் தெய்வமாக ஏற்றுக்கொண்டவர்கள் நெடுவேள் குன்றத்தில் வாழ்ந்த குன்றக் குறவர்கள் தான். இவர்கள் குறிஞ்சித் திணை மக்கள்; தொல்குடியினர்.

இன்றைய கொடுங்களூர் பகவதி அம்மன் கோயிலே கண்ணகியின் முதல் கோயில் என்றும் கருதப்படுகிறது. இந்தக் கோயிலுக்கும் ஒரு சிறிய மூலக் கோயில் உள்ளது. அது கொடுங்களூரில் சற்று தொலைவில் உள்ளது. மிகச் சிறிய பழைய கோயில் இது. இன்றும் விழா தொடங்கும்போது நிகழும் தாலப்பொலி இங்கிருந்துதான் தொடங்குகிறது. இக்கோயிலின் பெயர் ஸ்ரீகுறும்பா பகவதி கோயில் ஆகும். இக்கோயிலை நிறுவியவர்கள் குறும்பர் இன மக்கள். இவர்கள் முல்லைத் திணைக் குடியினர். தாலப்பொலி ஊர்வலம் நான்கு நாட்கள் நடக்கும். எல்லா நாட்களிலும் குறும்பா பகவதி கோயிலில் இருந்துதான் அது தொடங்கும்.

குறும்பர்கள் தமிழ்நாட்டில் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த பல்லவ வம்சத்தின் மரபினர். சோழ ஆட்சி உருவான பின்னர் இவர்கள் நீலகிரி, வயநாடு, குடகுப் பகுதிகளில் மறைந்து வாழ்ந்தனர். மலபாரில் குறும்ப நாடு ஒன்று உள்ளது. ஆக கண்ணகி குறிஞ்சித் திணையில் தெய்வமாகி, பிறகு முல்லைத் திணையில் வாழ்வெடுத்தாள் என்பதைக் காண்கிறோம். இறுதியில்

அவள் அனைவருக்குமான தெய்வமாகி சமவெளி எங்கும் பரவிவிட்டாள். பெருநெறி தெய்வமாக, இந்துக் கடவுளாக மாறி விட்டாள்.

வாய்மொழி வரலாற்றுக் கதையின்படி பன்னெடுங்காலத்திற்கு முன்பே கம்மாளர்கள் (பொற்கொல்லர்), அரையர் (மீனவர்), தீயர், வாணியன், வண்ணான், மூத்தன் முதலானவர்கள் தமிழகத்தின் கரூர், காங்கேயம் பகுதிகளிலிருந்து பாலக்காட்டுக்குக் குடிபெயர்ந்தனர். செட்டியார்களில் ஒரு பிரிவினர் கண்ணகியைத் தம் குலதெய்வமாக வழிபட்டு வந்தனர். இன்று கேரளத்தின் மற்ற சமூகத்தாரும் ஸ்ரீகுரும்பா (கண்ணகி) தேவியை வழிபடுகின்றனர்.

முல்லைத் திணையிலிருந்து பகவதியம்மன் கேரளத்தின் சமவெளிப் பகுதிகளுக்கும் பரவியது என்பது ஒரு விரிநிலையாக்க அசைவியக்கமாகும் (Universalization Process). சேர நாட்டில் தொடக்க காலத்தில் உருவான கண்ணகிக் கோட்டங்கள் அனைத்தும் பிற்காலத்தில் காளி கோயில்களாகவும், பகவதிக் காவுகளாகவும் உருமாற்றம் பெற்றுவிட்டன. இந்த அசைவியக்கத்தின் பின்னணியை நோக்க வேண்டும்.

ஒரு முறை கொடுங்களூர் அரசரை எதிரிகள் முற்றுகையிட்டனர். அப்போது ஒடுக்கப்பட்ட சாதியினர் ஆயுதங்களுடன் வந்து அரசரைக் காப்பாற்றினர். இதன் பொருட்டு நன்றி தெரிவிக்கும் வகையில் அரசர் எல்லா மக்களுக்கும் பகவதி வழிபாட்டில் உரிமை கொடுத்தார். இன்றைக்கும் மீனபரணிக்கு முந்தையநாள் நடக்கும் காவுதீண்டல் நிகழ்ச்சியில் எல்லாச் சாதிக்காரர்களும் பங்கேற்கிறார்கள்.

குறும்பர், குடும்பர் (குடும்பி), அரையர், புலையர், தட்டான் (கம்மாளர்), வேலன் (மண்ணார்), தீயர், நாயர், சாத்திரர் (நம்பூதிரிகளின் ஒரு தாழ்வான பிரிவினர் - இவர்கள் வேதம் படிக்க உரிமையில்லை. ஆயுதப் பயிற்சி செய்பவர். சமையல் தொழிலும் செய்வர்) முதலான பலரும் பகவதி அம்மன் ஆலயத்தில் வெவ்வேறு நிலைகளில் பங்கெடுக்கின்றனர்.

## கண்ணகி வழக்காறுகள்

கேரளத்தில் கண்ணகி வழக்காறுகள் அதிகம். அவற்றில் கதைகளும் பாடல்களும் அதிகமாகும். 12க்கும் மேல் கதை வடிவங்கள் உள்ளன.

1. சிலம்பு கதை, 2. கோயிலாண்டி கதை, 3. ஸ்ரீ குறும்பா கதை, 4. அட்டப்பாடி இருளர் கதை, 5. நல்லம்மா கதை, 6. பாலக்காடு சித்தூர் வண்ணார்களின் கதை, 7. கொடுங்களூர் கதை, 8. ஆற்றுக்கால் பகவதி கோயிலில் பாடப்படும் வில்லுப்பாட்டு கதை, 9. மணிமங்கலம், 10. தோற்றப்பாட்டுக் கதை, 11. தோல்பாவைக் கதை, 12. மன்னான் உள்ளிட்ட சில பழங்குடிகளின் கதை, 13. புகழேந்திப் புலவர் கதை.

கண்ணகி வழிபாட்டின் பன்மியத்தையும், பரவலாக்கத்தையும் இந்த வாய்மொழி நாட்டார் இலக்கியங்கள் காட்டுகின்றன. தென்னிந்தியாவில் கண்ணகியின் தேசம் ஒன்று உண்டென்றால் அது கேரளம்தான்.

## கர்நாடகத்தில் கண்ணகி வழிபாடு

துளுவ நாட்டை ஆண்ட கொங்கர் வம்சத்து அரசன் தென் கன்னடத்தில் மேற்குக் கடற்கரையில் மங்களபுரம் எனும் ஊரில் கண்ணகி கோயில் ஒன்றை நிறுவினான். இலிங்காயத்து மக்களின் நாட்டார் வழக்காறுகளில் கண்ணகி கதை உள்ளது. அங்குக் கண்ணகி, கோவலன், மாதவி ஆகிய மூவரும் முறையே சந்திரா, கொய்லா, மெதிகா எனப்படுகின்றனர் (ஃபிரீரி, 1870). கேரளத்தில் பகவதியம்மன் அளவிற்குக் கர்நாடகத்தில் மங்கலாதேவி பரவலாக்கம் பெறவில்லை.

## ஈழத்தில் கண்ணகை வழிபாடு

கண்ணகை வழிபாடு இந்தியத் தமிழகத்தில் இல்லை; ஈழத்தில் இருக்கிறது; இந்தியத் தமிழராக இலங்கை வந்து வாழும் மலையகத்திலும் இல்லை. இத்தகைய சீர்மையற்ற பண்பாட்டுப் படிமலர்ச்சி கண்ணகை வழிபாட்டில் தொழிற்பட்டுள்ளது. இதனை ஓர் அரிதான விரிநிலைப் படிமலர்ச்சி (Divergent Evolution) எனலாம். இந்தியத் தமிழருக்கும் ஈழத்துக் கண்ணகிக்கும் எந்தத் தாக்கமும் இல்லை என்றாகிவிட்டது.

இன்று வடக்கிலங்கையில் ஏறக்குறைய ஐம்பது கோயில்களும், கிழக்கிலங்கையில் ஏறக்குறைய எழுபது கோயில்களும், வன்னி, முல்லைத்தீவு, திரிகோண மலை ஊடாக பாணமை வரை ஏறக்குறைய நாற்பது கோயில்களும் கண்ணகை கோயில்களாக உள்ளன. சிங்கள இலங்கையில் ‘பத்தினித் தெய்யோ’ (கண்ணகை) துணைத் தெய்வமாக உள்ள கோயில்கள் பரவலாக உள்ளன.

கண்ணகி பிறந்து வளர்ந்து வாழ்ந்த தேசத்தில் அவளின் வழிபாடு மருவிவிட்டது. ஆனால் இலங்கைத் தேசமெங்கும் அவள் பூர்வ வடிவில் அருளாட்சி செய்கிறாள். இப்படியொரு தெய்வம் தென்னாசியப் புலத்தில் இல்லை எனலாம். பழங்குடி மக்கள் தொடங்கி நாகரிக மக்கள் வரை அனைவரும் வழிபடும் தெய்வமாகி விட்டாள் கண்ணகை. பக்தி இயக்கம்கூட கண்ணகி உட்பட நாட்டார் தெய்வங்களை நெருங்க முடியவில்லை. கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் ஆட்சி

செய்த கூத்திகன் காலத்திலிருந்தே சேர நாட்டுக் குடியேற்றம் ஈழத்தில் நடந்துள்ளது.

இலங்கையில் கண்ணகை தெய்வமான வரலாற்றைப் போற்றும் தொன்மங்கள், இலக்கியங்கள், காவியங்கள், கதைகள், வழிபாட்டு முறைகள், சடங்காற்றுகைகள், வழக்காறுகள், நம்பிக்கைகள், பிற ஐதீகங்கள் என அனைத்தும் இலங்கைக்குரியவையாகும். ஐந்து தலை நாகமாக உருவெடுத்து ஈழம் வந்த தொன்மமும், மீகாமன் வெடியரசன் வரலாறும் சிலப்பதிகாரத்தில் இல்லாதவை. சுயம்புவான சுதேசியான வழிபாட்டு மரபாக ஈழத்தில் கண்ணகை வழிபாடு உருவானது. தென்னிந்தியாவிலிருந்து தென்னிலங்கை வரை பரவிவிட்ட இந்த வழிபாடு தமிழீழத்தில் பிரதேசமயப்பட்டும், உள்ளூர்வயப்பட்டும் உயிர்ப்புடன் திகழ்கிறது. அதனால் அது இங்கு வாழும் மரபாக மட்டுமல்ல, தொன்மை மரபாகவும் விளங்குகிறது (சண்முகலிங்கன், என். 2014).

கயவாகு மன்னன் (கி.பி. 113 - 135) கண்ணகையைக் கொண்டு வருவதற்கு முன்பே, அவ்வழிபாடு சேர நாட்டிலிருந்து ஈழத்திற்கு வந்துவிட்டது எனும் வரலாறும் ஈழ மரபுக்கானது (சாந்தி கேசவன், 2024). ஏலவே கண்ணகை வழிபாடு சார்ந்து ஈழத்தில் உருவாகியுள்ள எல்லா வழக்காறுகளும் உள்ளூர் மரபாகப் பேணப்படுவது இதன் உயிர்ப்புத் தன்மைக்குக் காரணமாக உள்ளது.

கிழக்கிலங்கையில் வழங்கும் அம்மன் சிந்து, தோத்திரம், அகவல், பதிகம், குளிர்த்திப் பாடல்கள், ஊர்சுற்றுக் காவியம், வசந்தன் காவியம், மழைக்காவியம், கூத்து மரபு, ஆடல் மரபு, கொம்பு முறி விளையாட்டுகள் என அனைத்தும் இந்த மண்ணுக்கானவையாக உள்ளன. அவை பிரதேச மரபுகளாகவும், உள்ளூர் மரபுகளாகவும் செழித்து நிற்கின்றன. நாட்டார் வழிபாட்டின் அதிமுக்கியமான பண்புகள் இவை. இங்குள்ள கண்ணகை வழிபாட்டில் இவை யாவும் உயிர்ப்புடன் உள்ளன.

தமிழகத்தில் கண்ணகி பாண்டிய மன்னனை வீழ்த்திய புரட்சிப் பெண்ணாகவும், கற்புக்கரசியாகவும் கருதப்படுகிறாள். ஆனால் ஈழத்தில் அவள் மழையாற்றல் பெற்றவளாகவும், நோய் நொடிகள் தீர்ப்பவளாகவும், வாழ்வில் வளம் தருபவளாகவும், காவல் தெய்வமாகவும், பயிர்கள் கால்நடைகளைப் பாதுகாப்பவளாகவும் வணங்கப்படுகிறாள். இந்த முக்கிய வேறுபாடு ஈழத்தில் அவளின் இருத்தலைக் காட்டுகிறது.

## சிங்கள தேசத்தில் பத்தினி வழிபாடு

இலங்கையில் சிங்கள மக்கள் கண்ணகியைப் 'பத்தினித் தெய்யோ' என வணங்குகின்றனர். இதனை மிக விரிவாக ஆய்வு செய்திருப்பவர் உலகப் புகழ் பெற்ற இலங்கை மானிடவியல் அறிஞர் கணநாத் ஒபயசேகர.



மட்டக்களப்பு - தேற்றாத்தீவு பள்ளியங்கட்டு கண்ணகி அம்மன்
Image Source - www.thinakaran.lk

கணநாத் ஒபயசேகர (1984) கருத்துப்படி கண்ணகியின் உண்மையான வழிபாடு சிங்கள தேசத்தில் மட்டுமே உள்ளது. இவருடைய கருத்து நமக்குப் பெரும் வியப்பைத் தருகிறது. உண்மைதான். அவருடைய கருத்துகளைக் காண்போம்.

கண்ணகி ஓர் இந்துத் தெய்வம் எனும் கருத்து பலரிடம் உள்ளது. காரணம் சேரன் செங்குட்டுவன் முன்னெடுத்த தெய்வமிது. அவன் ஓர் இந்து மதத்தவன். ஆனால் இரட்டைக் காப்பியங்களை ஆராய்ந்தால் கண்ணகி ஒரு சமணத் தெய்வமாகவே அடையாளம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நிகழவில்லை.

சிங்கள இலங்கையில் அவள் ஒரு பௌத்த தெய்வம். பௌத்தர்கள் ஆதியிலிருந்தே நாட்டார் தெய்வங்களை வழிபட்டு வந்தார்கள். இன்றும் இலங்கையில் சிங்கள மக்கள் நாத (சிவன்), விஷ்ணு, கண (கணபதி), கதரகம (முருகன்), பத்தினி (கண்ணகி), கிரியம்மா (மலைத் தெய்வம்) உள்ளிட்ட 12 தெய்வங்களை வழிபட்டு வருகிறார்கள். இத்தெய்வங்கள் எல்லாம் ஆதியிலிருந்து வழிபடப்படும் இந்து நாட்டார் தெய்வங்களேயாகும். இது பற்றிய புரிதல் தென்னிந்திய பௌத்தத்தோடு தொடர்புடையதாகும். அதனை இங்கு பேசுவதற்கு இடமில்லை. இலங்கையில் 'நாட்டார் பௌத்தம்' பற்றி அறிவதற்குப் போதிய ஆய்வுகள் உள்ளன. சிங்கள மக்கள் புத்தரை மட்டும் வணங்குகிறார்கள் என எண்ணுகிறோம். அது தவறு. அவர்கள் பன்னெடுங்காலமாக இந்து நாட்டார் தெய்வங்களைத் துணைத் தெய்வங்களாக (காவல் தெய்வங்கள்) வழிபட்டு வருகின்றனர். இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் இலங்கையில் சிங்கள மக்களின் குடியேற்றமாகும். இன்றைய சிங்கள

மக்களில் குறிப்பிட்ட அளவிற்குக் கேரளத்திலிருந்தும் தமிழகத்திலிருந்தும் குடிபெயர்ந்தவர்கள் உள்ளனர். அவர்கள் தமிழை மறந்து பல நூற்றாண்டுகளாகி விட்டன. சிங்களவர்களாக மாறிவிட்டனர்.

கேரளத்தில் குலசேகரன் ஆட்சிக்கு முன்பு வரை அங்கு பௌத்தம் ஓங்கியிருந்தது. சங்கரரின் பக்தி இயக்கத்துக்குப் பின்னர் கேரளத்தில் பௌத்தமும், சமணமும் வலுவிழந்தன. இந்தச் சூழலில் 10 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் கேரள பௌத்தர்கள் இலங்கையின் மேற்கு, தெற்கு, சபரகமுவ மாகாணங்களுக்குக் குடிபெயர்ந்தனர். அங்கு பௌத்தம் அரச மதமாக ஓங்கியிருந்தது.

கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலேயே சிலோன் (இலங்கை) நாட்டிலிருந்து பாண்டிய நாட்டிலும் அதனையொட்டிய சேர நாட்டிலும் பௌத்தத்தைப் பரப்பும் நடவடிக்கைகள் நிகழ்ந்ததற்கான பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன (காண்க: அலெக்சாண்டர், பி.சி. 2025).

தென்னிலங்கை வரலாற்றில் கேரள பௌத்தர்களின் குடிப்பெயர்வை ஒபயசேகர தன் ஆய்வில் மிக விரிவாகப் பேசுகிறார். கேரளத்தில் பத்தினியைப் பன்னெடுங் காலம் வழிபட்டு வந்தவர்கள் சமணர்களும் பௌத்தர்களும்தான். பக்தி இயக்கம் எழுச்சி கண்டபோது பௌத்தர்கள் பெரிதும் விரும்பி இலங்கை சென்றார்கள். தம்முடன் தாம் வழிபட்டு வந்த நாட்டார் தெய்வ வழிபாட்டையும் கொண்டு சென்றார்கள். அதில் பத்தினி வழிபாடும் ஒன்றாகும் (ஒபயசேகர, 1984: 523).

இங்கு நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய விழுமியக் கருத்து ஒன்றுதான். கேரள பௌத்தர்கள் இலங்கைக்குக் குடிபெயர்ந்து சென்ற காலத்தில் பத்தினி வழிபாடு அங்கு மேலும் வீரியமடைந்தது. இந்த வரலாற்றுச் சூழலைப் பார்க்கும்போது கேரள பௌத்தர்களே பத்தினியின் தொடர்ச்சியான பக்தர்கள் எனத் தெளியலாம். பக்தி இயக்கத்துக்கு முன்பிருந்து இன்று வரை கண்ணகியைத் தொடர்ச்சியாகப் பெயர் மாறாமல் வழிபடுபவர்கள் இலங்கைக்குச் சென்ற கேரள பௌத்தர்கள்தான். இந்த வரலாற்றைக் கேரளத்திலிருந்தும் ஆராய வேண்டும்.

உண்மையில் தமிழகத்திற்கும் இலங்கைக்குமான உறவு விஜயன் காலம் முதல் (கி.மு. 520) கயவாகு காலம் வரை (கி.பி. 113) தொடர்ந்து நிகழ்ந்தது. அதன் பிறகும் அது தொடர்ந்தது. அதற்குப் படையெடுப்பு, வணிகம், குடிப்பெயர்வு ஆகிய மூன்று சமூக அரசியல் காரணங்களும் மிக முக்கியமாக அமைந்தன. சிங்கள மன்னர்களின் தொடர்ச்சியான வலுவான ஆட்சி அமையும் வரை, பல்வேறு தமிழ் மன்னர்கள் இலங்கையை ஆண்டனர். சங்க காலத்திற்கு முன்பிருந்தே தமிழகத்திலிருந்து இலங்கையுடன் வணிகம் நடைபெற்று வந்தது. அதேபோல தென்னிந்திய மக்கள் குழுவினர் பலர் தென்னிலங்கையில் குடியேறி மெல்ல மெல்ல சிங்கள மக்களாகவே மாறிவிட்ட வரலாறும் உண்டு.

இத்தகைய மூன்று அசைவியக்கங்களால் கண்ணகி வழிபாடு சேர நாட்டிலிருந்து இலங்கைக்குப் பரவியது. இது ஓர் இயல்பான 'நேர்ப் பரவல்' ஆகும். ஆனால் இலங்கையிலிருந்து ஒரு 'எதிர்ப் பரவல்' மூலம் தமிழகத்திற்குப் 'பத்தினி வழிபாடு' வந்தது. இது சிலருக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் அது வரலாற்று உண்மையாகும்.

பிற்காலச் சோழ அரசனான முதல் ராஜராஜன் இலங்கையுடன் போர் செய்த போது இலங்கை அரசன் மகிந்தனின் மனைவியைச் சிறைபிடித்துக் கொண்டு வந்தான். அவளைத் தஞ்சையில் சிறை வைத்தான். அவள் சோழனிடம் தான் வழிபட பத்தினித் தெய்வத்திற்குக் கோவில் கட்ட வேண்டும் எனக் கேட்டாள். மன்னன் இலங்கையில் மட்டக்களப்புப் பகுதியிலிருந்த கண்ணகி கோவிலிலிருந்து மண் எடுத்துவரச் செய்து தஞ்சை வல்லம் பகுதியில் பத்தினிக்குக் கோயில் கட்டினான். இக்கோவிலை சிங்கள நாச்சியார் வழிபட்டதால் சிங்கள நாச்சி கோவில் எனப்பட்டது. இக்கோவில் வழிபாடு சடங்குமுறைகளில் ஈழத்தைப் பின்பற்றியது. பேச்சுவழக்கில் இக்கோவில் செங்களாச்சி அம்மன் என இப்போதும் வழங்குகிறது. இக்கோவில் தொடர்பான செய்திகளிலிருந்து கண்ணகி வழிபாடு சேர நாட்டிலிருந்து ஈழத்துக்குப் போய், பின் பல காலம் கழித்து சோழ நாட்டிற்குத் திரும்பி வந்தது என்று தெரிகிறது. இது ஒரு 'மீள் பரவல்' ஆகும். பண்பாட்டுப் பரவலில் நேர்ப் பரவல், எதிர்ப்பரவல்/ மீள் பரவல் நிகழ்வதுண்டு.

இலங்கை பௌத்தர்கள் வழிபடும் 'பத்தினித் தெய்யோ' ஒட்டுமொத்த பௌத்த மதத்திற்கானதல்ல. ஏனெனில் பௌத்தம் பரவிய மியான்மர், தாய்லாந்து முதலான நாடுகளில் பத்தினி வழிபாடு இல்லை. இலங்கை தேரவாத பௌத்தர்கள் மட்டுமே இதனை வழிபடுகின்றனர். ஆகவே, கேரளத்திலிருந்து தென்னிலங்கைக்குக் குடிபெயர்ந்த பௌத்தர்களே பத்தினியை அங்கு கொண்டு சென்றார்கள் என அறுதியிட்டுச் சொல்ல முடியும். கேரளத்தில் பௌத்தம் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் இதற்கான வரலாற்றுச் சான்றுகளைக் காட்டுகின்றனர் (அலெக்சாண்டர், பி.சி. 2025). கண்ணகியைக் கயவாகு மன்னன் இலங்கைக்குக் கொண்டு சென்றது ஒரு முக்கிய நிகழ்வாகும்.

## பின்னுரை

கண்ணகி வழிபாடு சிலப்பதிகாரக் காலத்திலிருந்தே பல இடங்களுக்கும் பரவத் தொடங்கிவிட்டது. ஆனால் பின்னர் வெவ்வேறு அரசியல் சமூகக் காரணங்களால் கண்ணகி வேறு இந்துப் பெண் தெய்வங்களுடன் இணைக்க வேண்டிய சூழல் உருவானது. சேர நாட்டில் தொடக்க காலத்தில் உருவான கண்ணகிக் கோட்டங்கள் அனைத்தும் பிற்காலத்தில் காளி கோயில்களாகவும், பகவதிக் காவுகளாகவும் உருமாற்றம் பெற்றுவிட்டன.

கேரளத்தில் பகவதி, காளி ஆகிய தெய்வங்களுடன் கண்ணகி இணைக்கப்பட்டாள். தமிழகத்தில் மாரியம்மன், திரௌபதியம்மன், காளி, ரேணுகாதேவி, முத்தாரம்மன், செல்லத்தம்மன் முதலான தெய்வங்களுடன் இணைக்கப்பட்டாள். ஆனால் இன்றும் சில சுவடுகளும் எச்சங்களும் கண்ணகி வழிபாட்டைக் காட்டுகின்றன.

தமிழகத்தில் தசரா விழா நடைபெறும் குலசேகரப்பட்டினம் முத்தாலம்மன் கோயில் வழிபாட்டில் கண்ணகி கதை இடம்பெற்றிருப்பது இந்தத் தொல் எச்சங்களில் ஒன்றாகும். இவ்வாறான பல சான்றுகளை ஆராய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர் (பெருமாள், அ.கா. 2022). காலம் நிகழ்த்திய மாற்றத்தில் கண்ணகி வைதீகத்தின் தாக்கத்தாலும், இந்து மயமாக்கலாலும் தமிழ்நாட்டில் தன் உண்மையான அடையாளத்தை இழந்துவிட்டாள். ஆனால் ஈழத்தில் அவள் உயிர்ப்புடன் அருளாட்சி செய்கிறாள். ஆகவே தமிழ் மரபில் ஈழம் தனித்துவமாக நிற்கிறது.

கண்ணகியைப் 'பத்தினித் தெய்வம்' என வரையறுப்பது ஒரு செவ்வியல் சார்ந்த மரபான கண்ணோட்டம்தான். இளங்கோவடிகள் அதனைக் கையாண்டுள்ளார். உண்மையில் அவளை 'வீரத்தாய்', 'வீரத்திருமகள்', 'வீராயி', 'வீரநாச்சி', 'நீதித்தாய்' எனும் வகையில் ஒரு தனித்துவமான அடையாளமாகவே காட்டியிருக்க வேண்டும். 'பத்தினித் தெய்வம்' எனப் பொதுமைப்படுத்துவது பொருத்தமானதல்ல. தன் வெஞ்சினத்தால், வஞ்சினம் உரைத்து, பாண்டிய மன்னனை வீழ்த்தி, மார்பகத் தீயை மூட்டி, கோபத் தீயால் மதுரையை எரித்து, அறியாத் திசையில் சேர தேசம் நடந்து சென்று தெய்வமானவள். ஆக, நாம் உருவாக்க முனையும் அடையாள உருவாக்கத்தில் இந்தப் பொருண்மைகள் பிரதிபலிக்க வேண்டும்.

பண்டைத் தமிழ் மரபில் கொற்றவையைப் பத்தினித் தெய்வம் என்று கூறுவதில்லை. அவ்வாறே காளியையும் காண்பதில்லை. இவர்கள் வீரத்தின் அடையாளத்தைக் கொண்டவர்கள். எப்போதும் துடியான சாமிகள். கண்ணகியும் இதே வகையினம்தான். முன்னவர் இருவருக்கும் புராணம், தொன்மம் உண்டு. கண்ணகியோ மானுடப் பிறவி. இவள் கொலையால் உதித்த தீப்பாய்ந்தம்மன் (கொங்கு நாட்டில் வீரமாத்தி) இல்லை. கொலையைக் கண்டு வெகுண்டெழுந்து நீதியை வென்றவள். இவளை 'நீதி தேவதை' என்றே வரையறை செய்ய வேண்டும். அவள் தோன்றிய தென்னிந்தியா முதல், பரவிய தென்னிலங்கை வரை நீதியின் வெற்றி நாயகியாகவே அருளாட்சி செய்கிறாள்.

பொதுவாகத் தெய்வங்களைக் கன்னித் தெய்வம், தேவி தெய்வம், மனைவித் தெய்வம் என வகைப்படுத்துவதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். கண்ணகியை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் அது அவளை எல்லாத் தெய்வங்களிலிருந்தும் வேறுபடுத்திக் காட்ட வேண்டும். அத்தகையதோர் அடையாளத்தை அறிஞர்கள் கண்டடைய வேண்டும். தமிழ் மரபு மிகவும் தனித்துவமானது. அதன் சிறப்பியல்புகளைப் பிற மரபோடு கரைத்துப் பொதுமைப்படுத்த இயலாது. அதன் தனித்தன்மைகளை எல்லாத் தளங்களிலும் பேண வேண்டும். ஈழத்தில் கண்ணகை ஒரு பெருந்தெய்வமாக நிலைபெறுவதற்குக் காரணம் அதன் திணைவயமாக்கச் செயல்பாடுதான் (Indigenization Process). இத்தகைய அசைவியக்கங்களையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

கண்ணகி தன் கணவன் கொலையுண்ட செய்தி கேட்டு கோபாவேசத்துடன் மதுரை வீதிகளின் வழியே அரண்மனையை நோக்கிச் செல்லும்போது அந்நகர மக்கள்,

> செம்பொற் சிலம்பொன்று கையேந்தி
> நம்பொருட்டால் வம்பப் பெருந்தெய்வம்
> வந்த திதுவென்கொல்
>
> (சிலம்பு. ஊர் சூழ் வரி. 23 – 25)

என வியந்து பேசுவதாக இளங்கோவடிகள் காட்டுகிறார். புதியதொரு பெருந்தெய்வம் வரப்போகிறது என்பதை மதுரை மக்களே முதன் முதலாக ஊகித்தனர். கண்ணகியைப் புதியதொரு தெய்வமாகப் படைக்க வேண்டுமென்பது இளங்கோவடிகளின் நோக்கமாக இருந்தது.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கண்ணகியைப் 'பத்தினி' என்றும் சுட்டியுள்ளார். இதனை ஓர் 'இனம்சார் வகைமை' (Ethnic Category) எனக் கொள்ள வேண்டும். புலமையாளர்கள் தமிழ் மரபை மற்ற மரபுடன் ஒப்பிட்டுப் பேசும்போது 'பகுப்பாய்வு வகைமை'யை (Analytical Category) முன்னிறுத்த

வேண்டும். ஆய்வு என்றாலே அது பகுப்பாய்வு நெறி சார்ந்ததாக மட்டுமே இருக்க வேண்டும். ஆகவே, இந்தக் கண்ணோட்டத்தில் கண்ணகியின் அடையாள உருவாக்கம் அமைய வேண்டும்.

## உசாத்துணைகள்


1. அரங்கநாதன், ஜெகநாதன். 2024. பண்டைத் தமிழர் வழிபாட்டு மரபில் கண்ணகி. எழுநா மின்னிதழ் ஜூலை 2024.

2. அலெக்சாண்டர், பி.சி (தமிழில் கி. ஜெயபிரகாஷ்). 2025. கேரளாவில் பௌத்தம். தேவஸ்தானபடையூர்: திரிரத்னா பதிப்பகம்.

3. இராசு, ம. 2005. தமிழ்நாட்டில் கண்ணகி கோயில்கள். அச்சேறா கட்டுரை.

4. கந்தையா, வி.சீ. 1968. கண்ணகி வழக்குரை. மட்டக்களப்பு. காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கம்.

5. கனகரத்தினம், இரா.வை. 2016. ஈழத்து நாட்டார் வழிபாடு. பேராதனை: பேராதனைப் பல்கலைக்கழகம்.

6. சண்முகலிங்கன், என். 2014. ஈழத்தில் கண்ணகியின் அடையாளம். இலங்கை இந்திய மானிடவியல் நூலிலுள்ள கட்டுரை. பக். 13 - 26. (இணையாசிரியர் பக்தவத்சல பாரதி). சென்னை: என்சிபிஎச்.

7. சண்முகலிங்கன், என். & பக்தவத்சல பாரதி. 2025. ஈழத்தில் கண்ணகை வழிபாடு (களப்பணி விவரங்கள்).

8. சந்திரன், வி.ஆர். (தமிழில்: ஜெயமோகன்). 2005. கொடுங்களூர் கண்ணகி. சென்னை: யுனைடெட் ரைட்டர்ஸ்.

9. சபாரெத்தினம், க. & பிரசாத், சொ. 2017. ஆரையூர் கண்ணகை: வரலாறும் வழிபாடும். ஆரையம்பதி: மறுகா.

10. சாந்தி கேசவன். 2024 (2021). மட்டக்களப்புத் தமிழகத்தில் கண்ணகியம்மன் வழிபாடு. கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம்.

11. சிவசுப்பிரமணியம் ரகுராம். 2009. ஈழத்தில் கண்ணகி வழிபாடு. புதிய ஆராய்ச்சி இதழ் 2: 5 -

12. செல்லத்தம்பி சிறீக்கந்தராசா (செம்பதிப்பாசிரியர்). 2025. கோவலனார் கதை: வட ஈழத்து ஆதிகாவியம். இலங்கைத்தமிழியற் கழகம்.

13. செல்லன் கோவிந்தன். 2009. கண்ணகி வழிபாடு: தென்னகத்திலும் இலங்கையிலும். சென்னை: சேகர் பதிப்பகம்.

14. டாக்டர் நசீம்தீன். 1992. கோவலன் சரித்திரம். சிவகங்கை: அன்னம்.

15. தில்லைநாதன், சா. 2015. மட்டக்களப்பு தமிழர் பண்பாட்டு மரபுகள். கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம்.

16. பக்தவத்சல பாரதி. 2025. கண்ணகி வழிபாடு: காலம் நிகழ்த்திய மாற்றங்கள். கோயம்புத்தூர் குமரகுரு பன்முகக் கல்லூரியில் நிகழ்ந்த கண்ணகி பற்றிய பன்னாட்டுக் கருத்தரங்கில் வழங்கிய கட்டுரை (அச்சிடப் பெறாதது).

17. பால்சேகர், அ. 2005. இடுக்கி மாவட்டத்தில் கண்ணகி வழிபாடு. அச்சிடப்பெறாத முனைவர் பட்ட ஆய்வேடு.

18. பால சுகுமார். 2009. ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

19. பெருமாள், அ.கா. 2022. கேரளத்தில் கண்ணகி வழிபாடு. சென்னை: என்சிபிஎச்.

20. 20. மகேஸ்வரன், வ. 2011. இலங்கையில் சிங்கள மக்களிடையே கண்ணகி வழிபாடு: இருப்பும் நடப்பும். சங்கத்தமிழ் இதழ் 2: 13 - 20.

21. வெல்லவூர்க் கோபால். 2018. கண்ணகி வழிபாடு: பார்வையும் பதிவும். மட்டக்களப்பு: மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம்.

22. ஜெயகலா, வெ. 2022. தமிழகத்தில் கண்ணகி வழிபாடு: திருச்செங்கோட்டை முன்வைத்துச் சில விவாதங்கள். புதிய ஆராய்ச்சி இதழ் 10: 53 - 101.

23. ஜெயகிருஷ்ணன், ப. 2023. சிலப்பதிகாரமும் கண்ணகி வழிபாடும். சென்னை: என்சிபிஎச்.

24. Arokiaswami, M. 1953. The Cult of Mariamman or the Goddess of Rain. Tamil Culture 2, 2: 153 - 157.

25. Kurup, K.K.N. 1977. Aspects of Kerala History and Culture. Trivandrum: College Book House.

26. Obeysekere, Gananath. 1984. The Cult of the Goddess Pattini. Chicago: The University of Chicago Press.

27. Sreedhara Menon, A. 1967. A Survey of Kerala History. Kottayam: National Book Stall.

● சச்சிதானந்தன் சுகிர்தராஜா



ஈழத்தின் மட்டக்களப்பில் பிறந்த சச்சிதானந்தன் சுகிர்தராஜா அவர்கள், தற்போது ஐக்கிய இராச்சியத்தின் பெர்மிங்ஹம்மில் வாழ்ந்து வருகிறார். பெர்மிங்ஹம் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். இச்சர்வகலாசாலையிலேயே இவருக்குத் தனியார் இருக்கை வழங்கப்பட்டு விளக்கவியல் பேராசிரியாகப் பணிபுரிந்தார். இவருடைய பின்காலனித்துவ எழுத்துகள் இவரைக் கல்வி உலகில் பிரபலமாக்கிற்று. இவருடைய படைப்புகள் பிரபல பல்கலைக்கழகப் பிரசுரங்களான ஒக்ஸ்போர்ட், கேம்பிரிஜ், ஹார்வார்ட் ஆகியவற்றில் வெளியாகியுள்ளன. இவை ஜேர்மன், ஸ்பானிஷ், கொரியன், மலேசியன், சீன மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

எழுத்தாளர் அசோகமித்திரன் கணையாழியில் ஆசிரியராக இருந்தபோது, இவருடைய தமிழ் எழுத்துகள் வெளிவரத்தொடங்கின. காலச்சுவடு பதிப்பகத்தால் இவரின் ‘அசாதாரண மனிதன்’ எனும் ஒரு கதைத்தொகுப்பும், ‘பண்பாட்டுப் பொற்கனிகள், கலாசார அவதானிப்புகள், நூல்கள் நூலகங்கள் நூலகர்கள்’ ஆகிய மூன்று கட்டுரைத்தொகுப்புகளும் வெளியிடப்பட்டன. ‘யூதர்கள் சைவர்களான கதை, ஆசியாவை அசத்த முயன்ற பொதுவுடமைவாதிகள், நான் தடுப்பூசி குத்தப்போனேன்’ ஆகிய நூல்கள் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தால் வெளியிடப்பட்டன.

# தொலைந்த கிறிஸ்தவத் திருமறைகள்

‘யாழ்ப்பாணக் கிறிஸ்தவத் திருமறைகள்’ எனும் இத்தொடர் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட பல்வேறு கிறிஸ்தவ வேதங்கள் பற்றியது. கிறிஸ்தவ தமிழ் வேதாகமங்கள் தென்இந்தியாவில் மொழிபெயர்க்கப்பட்டவை என்பதே பொதுவான கருத்து. ஆனால் யாழ்ப்பாணத்திலும் இதற்கான பிரயத்தனங்கள் நடந்திருக்கின்றன. இவற்றில் பெரும்பான்மையானவை டச்சு மற்றும் பிரிட்டிஷ் காலனிய ஆதிக்கத்தின் உச்சத்தில் வெளிவந்தவை. இத்தொடரில் இந்த வேதாகமங்களுக்குப் பின்னால் இருந்த ஆளுமைகள், அவர்களின் இறையியல் கோட்பாடுகள், மொழிநயம், மொழிபெயர்ப்பு நடைமுறைகள், உபயோகித்த யாழ்ப்பாணச் சொற்கள் போன்றனவற்றோடு இவை உருவாகிய அரசியல், சமூக, சமய காலகட்டங்கள் போன்றன பற்றியும் ஆய்வு செய்யப்படும். அத்துடன் இவை எவ்வாறு அதிகாரபூர்வமான வேதாகம சங்கத்தின் பிரதான பதிப்புகளிலிருந்து வேறுபட்டன என்பதும் விவரிக்கப்படும். குறிப்பாக, வேதாகம உருவாக்கத்தில் தமிழர்களின் கவிதை மரபின் பங்களிப்புப் பற்றியும் அவர்களை ஈர்க்கவும், திருப்தியளிக்கவும் இந்தியப் புராண வடிவங்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பிலும் இத்தொடர் ஆராயும்.

பால்தேயஸ் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய பின்பு, இலங்கைத் தமிழர்கள் இன்னும் முப்பது ஆண்டுகள் இன்னுமொரு தமிழ் வேதத் திருப்புதலுக்கு (மொழிபெயர்ப்பிற்கு) காத்திருக்க வேண்டியிருந்தது. பதினேழாம் நூற்றாண்டின் காலனிய யாழ்ப்பாணத்தில், கிறிஸ்தவத் திருமறையின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் தமிழ்மொழி வடிவம் பெற்றன. இந்த முயற்சிக்கு வழிவகுத்த இரண்டு நபர்களும் இந்தியாவுடன் தொடர்புடையவர்கள்; இருவரும் இந்தியாவில் பிறந்து பின்னர் யாழ்ப்பாணத்திற்குக் குடியேறியவர்கள். அவர்களில் ஒருவர் டச்சு - தமிழ்க் கலப்பின சமூகத்தினரான அட்ரியன் டி மேய் (*Adrian de Mey*). மற்றவர் தென்னிந்தியாவைச் சேர்ந்த தமிழர், 'கூழங்கையார்' என்ற பெயரால் அறியப்பட்டவர்; ஒரு மனக்கசப்பினால் தன் தாயகத்தை விட்டு விலகி யாழ்ப்பாணத் தீபகத்தில் வேரூன்றியவர். மூன்றாவதாகவும் ஓர் ஆளுமையான நபர், தமிழ் வேத மொழிபெயர்ப்பில் ஈடுபட்டார். டச்சு மதப்பரப்பாளர் ஆல்பிரட் கிராம்மர் (*Alfred Crammar*) என்பவரே அவர்.

## பனையோலைச் சுவடிகளும் மறைந்த மறைநூல்களும் - அட்ரியன் டி மேய்

புதிய ஏற்பாட்டை அட்ரியன் டி மேய் தமிழாக்கினார் என்ற செய்தியை பிலிப் டி மெலோ என்ற தமிழரின் புதிய ஏற்பாட்டுக்கு எழுதப்பட்ட முன்னுரையின் மூலம் தான் அறிகிறோம். சிகிஸ்பெர்டஸ் பிரான்ஸ்வெல்ட் (*Sigisbertus Bronsveld*) மற்றும் ஜோயாகிம் ஃபைபிராண்ட்ஸ் (*Joachim Fybrandsz*) என்ற டச்சு உத்தியோகஸ்தர்கள் இந்த துவக்கவுரையை எழுதியிருந்தார்கள். 'வாசிப்பவனுக்கு முகவுரை' என்ற கலைநயமற்ற தலைப்பில் எழுதப்பட்ட தொடக்கக் குறிப்பில், பால்தேயஸ், அட்ரியன் டி மேய் மற்றும் சீகன்பால்க் ஆகியோரின் திருப்புதல்களில் காணப்படும் பிழைகளைத் திருத்துமாறு பிலிப் டி மெலோவிடம் அவர்கள் கேட்டுக்கொண்டதாகவும், கிரேக்க மூலத்துடன் ஒப்பிட்டு இந்தத் தமிழ் மொழிபெயர்ப்புகள் செம்மையாக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

பிலிப் டி மெலோ என்ற பெயரைப் படித்து ஏதோ அந்நியர் என்று பதட்டப்படாதீர்கள். இவர் பச்சைத் தமிழர். இவர் யார் என்பதையும், இந்த இலங்கைத் தமிழரின் மொழிபெயர்ப்பு பற்றியும் அடுத்த கட்டுரையில் விவரிப்பேன். டி மேய் பழவேற்காட்டில் (முன்னாள் புலிகாட்) பிறந்தார். இது சென்னையின் பெருநகரப் பகுதியில் உள்ள திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள ஒரு கடலோர நகரம்; இந்தியாவில் டச்சு அடிமை வர்த்தகத்தின் தலைநகராக இருந்த இடம். இவரின் தாய் உள்நாட்டுக்காரர்; தந்தை டச்சு நாட்டவர். இவரின் பெற்றோரின் பெயர்களைக் கண்டறிய முடியவில்லை. இவருக்கு இருந்த தமிழ் அறிவைப் போல் முன்னொருவருக்கும் இருக்கவில்லை என்று தம் இனத்தவர் பற்றி '*Journal of the Dutch Burgher Union of Ceylon*' என்ற இதழ் கொஞ்சம் மிகையாகவே புகழ்ந்தது. இவர் ஒரு மதகுருவாகவும், யாழ்ப்பாணத்தில் உள்ள இறையியற் பயிற்சி நிலைய முதல்வராகவும் இருந்தார். இவர் முழுப் புதிய ஏற்பாட்டையும் தமிழில் மொழிபெயர்த்ததாகக் கூறப்படுகிறது.

அந்தக்காலத்தைய மதச் சூழ்நிலையில் — குறிப்பாக தீபகற்பத்தில் ஆதிக்கம் செலுத்திய கிறிஸ்தவத்தின் வடிவத்தில் — மீண்டும் ஒரு வேதாகம மொழிபெயர்ப்புத் தேவைப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டின் காலனிய யாழ்ப்பாணத்தில், டச்சுப் பிரசங்கிகள் இரண்டு வலிமையான எதிரிகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஒன்று, அவர்கள் இகழ்ச்சியுடன் 'மூடநம்பிக்கை' என அழைத்த இந்து நம்பிக்கைகள் மற்றும் அதன் சடங்குகள்; இரண்டாவது, அவர்கள் தீவிரமாக வெறுத்து 'பாப்பரசவாதிகள்/ பேப்பிஸ்டுகள்' (*Papists*) என அவமதித்த ரோமன் கத்தோலிக்க மதம்.

டச்சுப் பொது ஆணையராக இருந்த ஏ. வான் ரேடே (*A. Van Rhede*) **1691** இல் யாழ்ப்பாண மாகாணங்களைப் பார்வையிட்ட போது, சில விஷயங்கள் தெளிவாயின. யாழ்ப்பாணம் அந்த நாட்களில் ரோமன் கத்தோலிக்க மதத்தினால் மிகப் பலப்படுத்தப்பட்ட நிலையிலிருந்தது. மதமாற்றம் பெற்ற யாழ் வாசிகள் "பாப்பாண்டவர் வழி மூடநம்பிக்கையில் ஆழ்ந்திருந்தனர்". இந்த 'மூடநம்பிக்கை'யை போர்த்துக்கீசிய மதப்பரப்பாளர்கள் கொரோமண்டல் கடற்கரைப் பகுதியில் இருந்து பரப்பினார்கள். கத்தோலிக்கக் குருமார்கள் ஏற்படுத்திய குழப்பம் மற்றும் பிளவுகளுக்கு அப்பாற்பட்டு இன்னொன்றையும் வான் ரேடே கவனித்தார். தமிழ்ப்படுத்தப்பட்ட டச்சு மறுமலர்ச்சி சபையின் கல்வினியப் போதனைகளை (*Calvinist doctrines*) மதமாறிய தமிழர்களால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்தக் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்ட போது, குறிப்பாக உள்ளூர் மக்களுடன் மொழிவழியாகத் தொடர்புகொள்ள முடியாத நிலையில் இருந்த டச்சு மதப்பரப்பாளர்களுக்கு டி மேயின் முக்கியத்துவம் தெளிவாகப்பட்டது. சுவிசேஷத்தைப் பரப்புவதற்கான உள்ளூர்க் குரலாக

அவர் மாறினார். மதம் பரப்பும் இடத்துடன் இணைந்திருந்தவர்களை ரோமன் கத்தோலிக்கப் பிரசார இயந்திரம் திறம்படப் பயன்படுத்தியதை ஒல்லாந்துக் குருமார்கள் அறிந்திருந்தார்கள். டி மேய் இந்தியாவின் தமிழ் பேசும் பகுதிகளில் பிறந்து வளர்ந்தபடியால், டச்சு மதப்பரப்பாளர்களை விட அதிக புலமை பெற்றிருந்தார். பாட்டாவியாவில் (இன்றைய ஜகார்த்தா) இலத்தீன் மொழி கற்றதும், ஒல்லாந்து நகரமான யூட்ரெக்டில் இறையியல் தேர்ச்சி பெற்றதும் இவருக்கு மேலும் சாதகமாக இருந்தது.

வான் ரேடே, யாழ்ப்பாணத்தில் ஒரு வேதப் பாடசாலையை நிறுவி, அதன் முதன்மை ஆசிரியராக டி மேயை நியமித்தார். இந்த இறையியல் கல்லூரி 1691 ஆம் ஆண்டு நல்லூரில் நிறுவப்பட்டது. உள்ளூர் ஆசிரியர்களை டச்சு மொழியில் பயிற்றுவிக்கவும், தமிழ்ப் போதகர்களையும், சபை ஊழியர்களையும் உருவாக்கவும் இது நிறுவப்பட்டது. இங்கு கற்றுக்கொண்டவர்களில் பெரும்பாலோர் முன்னர் ரோமன் கத்தோலிக்கராக இருந்தவர்கள்; பின்னர் இன்னுமொரு கிறிஸ்தவ சபையுடன் இணைந்தவர்கள்.

அந்தக்காலக் காலனிய மனப்பாங்குக்கு ஏற்ப, தன் பராமரிப்பில் இருந்த மாணவர்களைப் பற்றி, டி மேய் குறைந்த மதிப்பீட்டையே கொண்டிருந்தார். மூன்று வயதுக்குட்பட்ட டச்சுக் குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்ட யாக்கோபஸ் போர்ஸ்டியஸின் ஆரம்பக்கல்வி நூலை, இந்த வயதுவந்த தமிழ்ப் பெரியவர்கள் புரிந்துகொண்டதை அவர் ஏதோ ஆச்சரியமாகப் பார்த்தார்.

1692 ஆம் ஆண்டில் அவர் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், அவர் முழுப் புதிய ஏற்பாட்டையும் திருப்புதல் செய்தாரா, அல்லது லூக்கா எழுதிய 'தூதர்களின் செயல்கள்' என்ற பகுதியை மட்டும் தேர்ந்தெடுத்தாரா என்பது இன்னும் குழப்பமாகவே உள்ளது. மெலோவின் புதிய ஏற்பாட்டிற்காக பிரான்ஸ்வெல்டும் ஃபைபிராண்ட்ஸு ும் எழுதிய முன்னுரையில், மெலோ பரிசீலிக்க வேண்டிய திருமறைகளில் ஒன்றாக அட்ரியன் டி மேயின் புதிய ஏற்பாடும் இருந்தது என்பதை ஏற்கனவே பார்த்தோம்.

அச்சிடும் தொழில்நுட்பம் இலங்கையில் தொடங்காதிருந்த காலத்தில், டி மேயின் மொழிபெயர்ப்பு ஓலைச்சுவடியாகவே இருந்தது. 1737 ஆம் ஆண்டில் டச்சு ஆளுநராக இருந்த வான் இம்ஹாஃப் அச்சிடும் முறையை அறிமுகப்படுத்தினார்; கிறிஸ்தவத் திருமறை அச்சிடும் பணிக்கான பொறுப்பை அடால்பஸ் கிராம்மருக்கு வழங்கினார். டி மேய் மொழிபெயர்த்து கிட்டத்தட்ட நாற்பத்தைந்து



வான் ரேடே

Image Source : Paul E. Pieris

ஆண்டுகளுக்குப் பின், கிராம்மர் பால்தேயஸின் மத்தேயு நற்செய்தி, டி மேயின் புதிய ஏற்பாடு மற்றும் சீகன்பால்கின் புதிய ஏற்பாடு ஆகியவற்றை அச்சிடும் பணியில் ஈடுபட்டார். ஆனால் இவர் இந்த வேலையை முடிக்கும் முன் இறந்துவிட்டார். அவரின் இடத்தில் ஜொகன்ஸ் வெட்சீலியஸ் நியமிக்கப்பட்டார். இரண்டு தமிழ்க் கிறிஸ்தவர்களான டி மெலோ மற்றும் சைமன் டி சில்வாவின் உதவியுடன் இந்த வேலையை அவர் முடித்தார் என்று கூறப்படுகிறது. பால்தேயஸு ும் சீகன்பால்கும் செய்த மொழிபெயர்ப்புகளைப் பற்றி டி மேய் அறிந்திருந்தாரா என்பது தொடர்பாக எந்தத் தெளிவான தகவலும் இல்லை.

## வேத வாக்கைத் தமிழாக்கல்: கிராம்மரின் மத்தேயு நற்செய்தி

கிறிஸ்தவத் திருமறையின் முதற்கட்ட அச்சுப் பதிப்பு முழு ஆகமமும் அல்ல, ஒரு நற்செய்தி மட்டும் வெளிவந்தது. இதனைச் செய்தவர் ஏற்கனவே குறிப்பிட்ட அல்பிரட் கிராம்மர். அவர் 1706 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தார்; டச்சு ஆளுநர்கள் இவரை தமிழை முறையாகக் கற்க உத்தரவிட்டனர். மெலோவின் புதிய ஏற்பாட்டுக்காக பிரான்ஸ்வெல்ட் மற்றும் ஃபைபிராண்ட்ஸ் எழுதிய முன்னுரையில், கிராம்மரின் மொழிபெயர்ப்புப் பணி குறித்து நாம்

அறிகிறோம். அந்த முன்னுரையின் படி, அவரை மூன்று தமிழ்க் கிறிஸ்தவத் திருப்புதல்களைப் பரிசீலிக்கச் சொன்னார்கள். அவை: பால்தேயஸின் மத்தேயு சுவிசேஷம், அட்ரியன் டி மேயின் புதிய ஏற்பாடு மற்றும் 'தரங்கம்பாடியில் தயாரிக்கப்பட்ட புதிய ஏற்பாடு' எனக் குறிப்பிடப்படும் சீகன்பால்கின் பதிப்பு. இந்த மூன்று திருப்புதல்களையும் கிரேக்க மூலத்துடன் ஒப்பிட்டு 'சரிக்கட்டவும்', மேலும் தமிழ்ப்பாஷையின் 'குணத்திற்கும் பெலனுக்கும்' ஒத்திருக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டது. இந்தப் பணியை, தமிழை நன்கு அறிந்த உள்ளூர்த் தமிழர்களுடன் இணைந்து அவர் மேற்கொள்ள வேண்டும் எனக் கூறப்பட்டது. கிராம்மரின் தமிழ்ப்படுத்தப்பட்ட மத்தேயு நற்செய்தி, 1791 இல் அச்சிடப்பட்டு இலவசமாக விநியோகிக்கப்பட்டது. அதன் முகப்புப் பக்கத்தில் இருந்த வரிகள்:

"ஆற்ஸ்சிஷிட்ட அப்பொஸதலுவூஞ் சுவிசெஷகனுமாகிய மத்தேவுசு எழுதிவைத்த எங்களுடைய கர்த்னு மிரட்சகருமாகிய ஜெசுகிறிதுஸ்துவுடைய சுத்தமான சுவிசெஷம் ஆதியிலே கிறிக் பாஷையிலெயுள்ளதைத் தமிழ்ப் பாஷையிலே கொண்டுவரபட்டுத் திருச்சபைக் கட்டளைப்படிக்கு திட்டவட்டமாகப் பிளை தொப்பட்டது. கொழும்பில்லே உத்தம் கொம்பஞ்ஙியவின் அச்சுக்கூடத்தில் பதிக்கபட்டது சதஎளசயக அண்டு."

கிராம்மருக்குக் கொடுக்கப்பட்ட பணிகளில் ஒன்று ஏற்கனவே புழக்கத்திலிருந்த சீகன்பால்கின் தரங்கம்பாடி திருப்புதலைச் செம்மையாக்குதல்.

இந்த இரண்டு மொழிபெயர்ப்புகளுக்கிடையில் காணப்படும் சொற் தேர்வில் உள்ள வித்தியாசங்களை விளக்குவதற்காக, மத்தேயு நற்செய்தியில் இயேசுவின் பிறப்பை அறிந்து கிழக்கிலிருந்து ஞானிகள் வருகை தரும் (மத்தேயு 2:1-4) நிகழ்வை ஓர் உதாரணத்துக்கு எடுத்துக்கொள்கிறேன்.

இயேசுவைத் தரிசிக்க வந்தவர்களை சீகன்பால்க் 'சாஸ்திரிகள்' எனக் குறிப்பிடுகிறார்; கிராம்மர் அவர்களை 'கல்விமான்கள்' என அடையாளம் காண்கிறார். சீகன்பால்க் அவர்கள் வந்த திசை 'கிழக்கு' என்கிறார்; கிராம்மர் தமிழர் திசையைக் குறிக்கும் சொல்லில் 'எழுவான்' என்றார். ஏரோது இந்தச் செய்தியைக் கேட்டதும், ஜெருசலேம் நகர மக்களுடன் தத்தளித்த போது, விசாரிக்க அழைக்கப்பட்டவர்களைக் கிராம்மர் 'பூசாரிகள்' என வர்ணிக்கிறார்; சீகன்பால்க் அவர்களை 'பிராதான குருக்கள்' என்றும் 'வேதபாரர்கள்' என்றும் விவரிக்கிறார். ஜெருசலேம் தத்தளித்தது பற்றி இரு திருப்புதல்களிலும் உண்டு.

கிழக்கிலிருந்து வந்தவர்கள் பற்றி சிறு குறிப்பு: இவர்கள் மன்னர்களும் அல்ல; ஞானிகளும் அல்ல. மத்தேயுவின் விரித்துரைத்தலில் சொல்லப்பட்ட 'Magi' என்ற கிரேக்கப் பதம் தெளிவற்ற, இருமையான நிலைப்பாடுடையது. மாஜிகள் முதலில் பாரசீக அரசருக்குச் சேவையாற்றும் ஒரு மதகுரு சமூகமாக இருந்தனர். அவர்களது ஜோதிட அறிவை சில பேரரசர்கள் மிகுந்த முக்கியத்துவத்துடன் எடுத்துக்கொண்டனர். ஆனால் சில யூத மரபுகளில், மாஜிகள் எதிர்மறையாகவே பார்க்கப்பட்டனர். பழைய ஏற்பாடு நூல்கள், நம்பிக்கைக்குரியவர் கடவுளே; நட்சத்திரங்கள் அல்ல என்பதைச் சான்று அளிக்கின்றன.

கிராம்மரின் மொழிபெயர்ப்பின் எழுத்துரு மற்றும் வாக்கிய அமைப்பின் தன்மையை விளக்கும் உதாரணமாக, 'மத்தேயு 2:1-4' இல் அவர் செய்த மொழிபெயர்ப்பை அவரின் சொந்த வரிகளிலேயே இங்கே தருகிறேன். கிராம்மர் தனது உரையில் பழைய வகை 'ளை' பயன்படுத்தியிருக்கிறார். அது எனக்கு பல முறை தேடியும் கிடைக்காததால், இப்போது இருக்கும் வடிவத்தையே பயன்படுத்தினேன். இதற்காக அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

1. எரொதெஸ் என்கிற ராசாவின் யூதெயா தெசத்தில்லே பெத்திலெய மென்ற நகரிலே இயேசு நாதர் பிறந்த போது இதொ சில கல்விமான்கள் எழுவான் பிறத்திலே யிருந்து ஜெருசலெமுக்கு வந்து

2. யூதருக்கு ராசாவாகப் பிறந்தவரெங்கே அதெனன்றல் நாங்கள் அவரது நட்சேத்திரத்தைக் அவரை வணங்கத்தக்கதாக வந்தொ மென்று சொன்னார்கள்

3. ஏரெதெஸ் என்ற ராசா இது கெட்டவுடனெ அவனுக்கும் அவனுடனெ ஜெருசலெமுகுந்ததழிப் பாச்சுது

4. அவன் சகல பூசாரிகளையும் ஆகம சாஸ்திரங்களையுங் கூடப்பண்ணிக் கிறிஸ்துநாதர் பிறக்கப் பொகிறதெங்கே யென்று அவர்களிடதில் கேட்டான்.

இவற்றைப் படிக்கும் போது ஒன்று புலனாகிறது. மெய்யெழுத்துகளின் மேல் புள்ளிகளும், உயிர்மெய்யெழுத்துகளுக்கு மேல் கீறுகளும் போடப்பட்டிருகின்றன. இரண்டைக்கொம்பு இன்னும் தோன்றவில்லை.

மத்தேயு நற்செய்தியின் தமிழாக்கம் முடிவடைந்ததும், கிராம்மர் மறைந்தார். ஒல்லாந்தரின் கிறிஸ்தவ வேதத்தின் மொழிபெயர்ப்பு முயற்சியின் அடுத்தகட்டம், ஒரு தமிழறிஞரான பிலிப் டி மெலோவிடம் ஒப்படைக்கப்பட்டது; அவருடைய திருப்புதலை அடுத்த அத்தியாயத்தில் பரிசீலிக்கிறோம்.

## தமிழ்க் கவிதை வடிவில் யோசேப்பு

இக்காலகட்டத்தில் தான், கிறிஸ்தவத் திருமறையில் காணப்படும் ஒரு யூத கோத்திரத் தலைவரான யோசேப்பின் கதையை, கூழங்கைத் தம்பிரான் (1699 - 1795) தமிழில் கவிதைநேசமான பாணியில் உருவாக்கினார். 'கூழங்கை' என்பது 'கை ஊனமுற்றவர்' என்ற பொருளைக் கொண்டது. அவர் யோசேப்பின் கதையை தமிழில் இசைபூர்வமான வடிவத்தில் சொல்லியுள்ளார். இந்தக் கூழங்கைத் தம்பிரான், கிறிஸ்தவத் திருமறையை தமிழில் மொழிபெயர்த்த, போர்த்துக்கேயர் பெயர் கொண்ட பூர்விகத் தமிழர் பிலிப் டி மெலோவுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தார். இதனால் கிறிஸ்தவத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டார்.

கூழங்கைத் தம்பிரான், தமிழில் மிகுந்த மதிப்பிற்குரிய அறிஞராகவும், நன்னூல் எனும் தமிழின் பாரம்பரிய இலக்கண நூலுக்கான உரையாசிரியராகவும் அறியப்படுகிறார். சைமன் காசி செட்டி, தனது Tamil Plutarch (தமிழ்ப் பாவலர்கள்) நூலில் அவரைப் பற்றிக் குறிப்பிட்ட போது, 'தம்பிரான்' என்ற பட்டத்தைத் தவிர்த்து, வெறும் 'கூழங்கையார்' என்றே குறிப்பிடுகிறார். 'தம்பிரான்' என்பது சைவ மத மடங்களின் தலைவர்களுக்குக் கீழுள்ள ஒரு மதப்பட்டமாகும். தம்பிரான்கள், சைவ ஆகமங்கள் மற்றும் சைவ மத இலக்கியங்களில் ஆழ்ந்த அறிவு பெற்றவர்களாக இருந்தனர்.

இவரின் உண்மையான பெயர் தெரியவில்லை; ஆனால் கங்காசபாபதி யோகி என்ற பெயராக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. தமிழ் இலக்கண நூல்களைத் தொகுத்து வெளியிட்ட ஏ. தாமோதரன், 'கூழங்கையார்' என்ற பெயரின் வரலாற்றுச் சரித்திரத்தைக் குறித்து சந்தேகத்துடன் அணுகுகிறார். அவரது ஊகம் என்னவெனில், இது தமிழின் புராணப் புனைவுப் பண்பாட்டில் காணப்படும் பெயரிடும் மரபுக்குள் பொருந்தக்கூடும். அந்த மரபில், தனிப்பட்ட உடல் அம்சங்களை அடையாளமாகக் கொண்ட பெயர்கள் வழக்கமாக இருந்தன — பொற்கைப் பாண்டியன் (தங்கக் கை கொண்ட பாண்டிய மன்னன்), சீத்தலைச் சாத்தனார் (தலையில் சீதலைக் கொண்ட பௌத்த அறிஞர்) போன்றோர்.

தமிழ் இலக்கியமும் வரலாறும் பல்வேறு காலங்களில் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து இருப்பதால், உண்மை வரலாற்றையும் புனைவுப் பண்பாட்டையும் பிரிப்பது கடினமாகிறது.

இந்த அடிப்படையில், கூழங்கையார் என்பவர் வரலாற்றுச் சான்றுகளுக்குள் மட்டுப்படுத்த முடியாத ஒரு புனைவு ஆளுமையாகவும், தமிழ் நாகரிகம், நெறி மற்றும் அடையாளப் பரிமாற்றங்களுக்கிடையே இடம்பெற்ற இலக்கிய வெளிப்பாடாகவும் பார்க்கப்படலாம்.

பிலிப் டி மெலோவின் தொடர்புகள் மூலம், கூழங்கையார் கிறிஸ்தவத் திருமறையைப் பற்றிய ஆழமான புரிதலைப் பெற்றார். டி மெலோவுடன் அவர் அடிக்கடி கலந்துரையாடியதாலேயே இது சாத்தியமானது. பின்னர், வேத மொழிபெயர்ப்பில் டி மெலோவுக்கு உதவியவராகவும் இவர் இருந்தார். டி மெலோவுக்கு உரித்தெனக் கூறப்படும் சில உருவக விளக்கங்கள் கூட இவரால் எழுதப்பட்டவையாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இவர் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கிறிஸ்தவர்களால் எழுதப்பட்ட பல நூல்களுக்கு அறிவியல் அடித்தளமும் புலமை சார்ந்த ஆதரவும் வழங்கினார் எனக் கூறப்படுகிறது. The History of the People of God எனும் ஐந்து தொகுதிகளாக வெளிவந்த இஸ்ரவேலின் வரலாறும், கத்தோலிக்கத் திருச்சபையின் வளர்ச்சியும் பற்றிய நூல், ரோமன் திருச்சபையின் பிரிவான 'Oratorian' மதச் சமய ஆசிரியரான Gabriel Pacheco எழுதியது — இது கூழங்கையார் வழிநடத்தலின் கீழ் உருவானது. ஒவ்வொரு தொகுதியும் சுமார் 500 பக்கங்கள் கொண்டது. இந்தச் சிறப்புமிக்க நூலின் பிரதிகள் இன்று மிக அரிதாகவே காணப்படுகின்றன. இது தமிழ் - கிறிஸ்தவ அறிவியல் பரிமாற்றத்தின் ஒரு மறக்க முடியாத சான்றாகும்.

மேலும் முக்கியமாக, அவர் யோசேப்புப் புராணம் என்ற காவியத்தை இயற்றினார். இந்தக் காவியம் ஞாயிறு பள்ளிக்கூட மாணவர்களுக்கு மிகப் பரிச்சயமான கதை. யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டாலும், எகிப்தியப் பார்வோனின் வலதுகரமாக உயர்ந்தார். அவரது சொந்தக் குடும்பமே அவருக்கு இழைத்த துரோகம் எவ்வாறு இவனுடைய மீட்சிக்கும் அதிகாரத்துக்கும் வழிவகுத்தது என்பதை, இது ஒரு கதையாக விவரிக்கிறது. இப்போது கிடைக்காத இந்தக் காவியம், கூழங்கையார் கிறிஸ்தவத்தை அறியக் காரணமாக இருந்த இலங்கைத் தமிழ் டச்சு மதகுருவான பிலிப் டி மெலோ

என்பவருக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

யோசேப்புப் புராணம் மொத்தம் 21 படலங்களையும், 1,023 செய்யுட்களையும் கொண்ட ஒரு விரிவான இலக்கியக் கட்டமைப்பாக இருந்தது. ஆனால், முழுமையான கைப்பிரதி காலச்சுழற்சியில் அழிந்துவிட்டது. இந்த நூலை மீட்டெடுத்த சைமன் காசி செட்டி, இரண்டாவது படலமான ஆற்றுப்படலத்தில் (uppaalam) இருந்து சில செய்யுட்களையே வழங்குகிறார். இந்த ஆற்றுப்படலம், தமிழின் காவிய மரபில் கம்பராமாயணம் நூலில் வரும் சரயு நதியின் (தமிழில் 'சரசு') தேவியாக வணங்கப்படும் பகுதியைப் போலவே அமைந்துள்ளது — பக்தி உணர்வுகளால் நிரம்பிய உருவகங்களும், காட்சிகளும் கொண்ட ஓர் ஆன்மீக நயமிக்க எழுத்தாகும்.

நம்மிடம் இருப்பது கூழங்கையாரின் நான்கு செய்யுட்கள் மட்டுமே என்றாலும், இவை மூன்று முக்கிய காரணங்களுக்காகக் கவனிக்கப்பட வேண்டியவை. இவை பாரம்பரிய யூத வேதாகமப் படிப்பினைகளிலிருந்து மாறுபடுகிறது. யூத வரலாறுகளும் நூல்களும், முக்கியமாக அடிமைப்படுத்தப்பட்ட சரித்திரச் சம்பவங்களின் மீது சார்ந்து, தீர்க்கதரிசிகளின் எழுத்துகளை முன்நிறுத்தும். கூழங்கையாரின் செய்யுள் அப்படியல்ல. இவரின் பாடல்கள் யூத ஞானப் பரம்பரையின் சாயலைக் கொண்டவை. அந்த மரபு, தெய்வீகத்தின் தடயங்களை இயற்கையில் காண்கிறது. மலைகளின் மேன்மையில், மேகங்களின் நகர்வில், வானத்தின் மாறுபாடுகளில் உணர்த்தப்படுகிறது — அங்கு மௌனமான சிகரங்கள் படைப்பின் இரகசியத்தை மறைவாகச் சொல்கின்றன; ஆறுகள், நட்சத்திரங்கள், புயல்கள் ஆகியவை இயற்கையின் தெய்வீகத்தை வெளிப்படுத்தும் புனித வேதங்களாக மாறுகின்றன.

அவர் மேற்கோளாகக் கொண்ட சீயோன் மலை எபிரேய வேதாகமத்தில் கடவுளின் நாமம் மகிமைப்படுத்தப்படும் புனித மலை. அதன் மீது மழை இடையறாது பொழிகிறது; இந்த மழை பூமியை — முக்கியமாக சீயோன் மலையை — மகிழ்ச்சியாலும் வளத்தாலும் நிரப்பும், ஒரு சுத்திகரிக்கும் மற்றும் புதுப்பிக்கும் சக்தியாக மாறுகிறது. மலை உச்சியிலிருந்து வழியும் நீர், புனிதம் சாதாரணமாவதற்கான ஒரு தெய்வீக மாற்றத்தை உருவகப்படுத்துகிறது. மாணிக்கங்கள் வழியாகச் செல்லும் காட்சி, கடவுளின் ஆசீர்வாதங்கள் பூமியெங்கும் பகிரப்பட்டுச் செல்கின்றன என்ற எண்ணத்தையும் வெளிப்படுத்துகிறது. சீயோன் மலை போன்ற புனித இடங்களின் உருவகப் பெருமை, இந்து மரபில் 'மேரு மலை' குறித்த வர்ணனைகளை நினைவூட்டுகின்றன.

அதே அளவு முக்கியத்துவம் பெறுவது கூழங்கையாரின் பாடல்கள் வெளிப்படுத்தும் மூன்றாவது குறிப்பாகும். அது பிலிப் டி மெலோ என்ற அவரின் கிறிஸ்தவ ஆசானை நினைவூட்டுவதோடு, கூழங்கையாருக்கும் அவருடக்குமான தனிப்பட்ட தொடர்பையும் பிரதிபலிக்கிறது. டி மெலோ, இயற்கையும் தெய்வீகமும் இடையே ஆழமான ஒற்றுமையை வெளிப்படுத்திய ஞானமிக்க ஆசானாகச் சித்திரிக்கப்படுகிறார்.

ஒரு பாடல், இயற்கையின் சக்திகளான மின்னலையும் மழையையும், இந்த மதிக்கத்தக்க ஆசானின் குணாதிசயங்களுடன் ஒப்பிடுகிறது:

"மேகங்கள் மின்னலால் பிரகாசித்தன; அது, ஞானமிக்க ஆசிரியர் பிலிப் டி மெலோவின் அறிவைப் போலத் தெளிவானது. அவற்றின் இடிமுழக்கம், அவர் வழங்கிய போதனையின் வார்த்தைகளைப் போல ஒலித்தது. அவை பொழிந்த மழை, அவர் மனிதகுலத்திற்கு மகிழ்ச்சி தரும் விதத்தில் தாராளமாக வெளிப்படுத்திய கருணையைப் போல இருந்தது. ஞானம், இரக்கம், தாராளம் போன்ற தெய்வீக அல்லது பிரபஞ்ச குணங்கள் இயற்கையிலேயே மட்டும் வெளிப்படுவதல்ல; பிலிப் டி மெலோ போன்ற சிறந்த நபர்களிலும் நிறைவேறுகின்றன. இப்படிப்பட்ட நபர்களின் வழியே, இந்தக் குணங்கள் உலகிற்குள் பாய்ந்து செல்கின்றன."

கூழங்கையார் எழுதியதில் மிகச் சிறிய பகுதி மட்டுமே எஞ்சியிருந்தாலும், அவை தெய்வீக அல்லது இயற்கை ஆற்றல்களுக்கும் மனித வாழ்வுக்கும் இடையிலான தொடர்பைப் பற்றிய ஆழ்ந்த செய்தியை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக அவை உலகை எவ்வாறு வடிவமைக்கின்றன என்பதைக் காட்டுகின்றன.

இவரின் பாடல்களில் இயற்கை, தெய்வீகம், பிரபஞ்ச ஒழுங்கு ஆகியவை ஒன்றிணைந்த விதத்தில் வெளிப்படுகின்றன. மேகங்கள், மலைகள், நீர் போன்ற உருவகங்கள், மகாபாரதம், இராமாயணம், சைவ சித்தாந்த இலக்கியங்கள் ஆகியவற்றை நினைவூட்டுகின்றன. இவை தெய்வீக சக்தியின் பரவலையும், தூய்மையையும், அருளையும் குறிக்கின்றன. சைவ மரபின் தாக்கத்தால், பாடல்களில் சிவன் இயற்கையில், மலைகளில், நதிகள், மரங்கள், விலங்குகள் போன்ற தன்மைகளுடன் திகழ்வதாக வர்ணிக்கப்படுகின்றார். G. U. Pope என்பவர், திருவாசகம் எனும் முக்கியமான தமிழ் சைவ நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். அவர் இந்த இயற்கை உருவகங்களை மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார்: "சிவன், வெள்ளி மலை கைலாசத்தில் அமர்ந்திருக்கிறார்; அதன் எண்ணற்ற வெண்மையான உச்சிகள் பலவிதமான முத்துக்களால்

அலங்கரிக்கப்பட்டுள்ளன. அவரது ஜடாமுடியில் கங்கை மற்றும் திங்கள் நிலா வீற்றிருக்கின்றன" என அவர் எழுதுகிறார். இதன் மூலம் மனிதன், இயற்கை, தெய்வம் — மூன்றும் பரஸ்பரம் இணைந்தவை என்பது காட்டப்படுகின்றது; பிரபஞ்ச ஒழுங்கின் அழகு, அர்த்தம் மற்றும் ஆன்மீக இணைப்பு என்பன மீட்டெடுக்கப்படுகின்றன. கூழங்கையாரின் கவிதைப்பணிகள், கிறிஸ்தவ சத்தியத்தை உணர, இந்துப் புராணங்களில் ஒத்துப்போகும் கூறுகளைத் தேடும் ஆரம்ப முயற்சிகளில் ஒன்றாகும்.

சைமன் காசி செட்டிக்கு கூழங்கையார் பற்றி ஒரு வருத்தம் இருந்தது — அவர் வெளிப்படையாகத் தன்னைக் கிறிஸ்தவர் என்று அறிவிக்காதது. கூழங்கையார் அறிவாற்றலால் கிறிஸ்தவத்தை உயர்ந்த மதம் என்று மரியாதை செலுத்தினாரே தவிர, தன் சைவம் தவறானது, பின்னோட்டமானது என்று இழிவுபடுத்தவில்லை. அவர் இறுதி வரை இந்துவாகவே இருந்தார். அந்நிய மதத்தைத் தழுவவில்லை. தனக்குத் தோன்றியபோது, கிறிஸ்தவத்தின் தெய்வீகத் தோற்றத்தை ஆதரித்து திறமையாகவும் தீவிரமாகவும் வாதிடக்கூடிய திறமை அவருக்கிருந்தது. இந்துப் பக்தர்களை அதிர்ச்சியடையச் செய்யும் அளவுக்கு அவர் வாதங்களை முன்வைத்தார். சில நேரங்களில், தனது நம்பிக்கையை நிரூபிக்க, அவர் மிக எரிச்சலூட்டும் செயல்களிலும் ஈடுபட்டார்.

ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம் வண்ணார்பண்ணை சைவக் கோவிலின் கும்பாபிஷேகத்தின் போது நிகழ்ந்தது. அந்தக் கோவில், வைத்திலிங்கச் செட்டியார் கட்டி அர்ப்பணித்தது. விழாவைக் கவனித்துக் கொண்டிருந்த கூழங்கையாருக்கு, பூஜை நடத்திக் கொண்டிருந்த பிராமணர் திருநீறு அளித்தார். ஆனால், அவர் அதை நெற்றியில் பூசாமல், தனது செருப்பில் பூசினார். "தூசுடன் தூசே சேரட்டும்" என்றார். அவருடைய கருத்தும் செய்கையும் தெளிவாகவும் கடுமையாகவும் இருந்தது. அவை தெரிவித்த செய்தி: இந்துச் சடங்குகள் தூசுபோல் தாழ்வானவை; அவை அவருடைய பாதத்தில் இருக்கும் செருப்பிற்கே பொருத்தமானவை.

கூழங்கையார் 1795 இல் யாழ்ப்பாணத்தில் இறந்தார்; அடுத்த ஆண்டு ஒல்லாந்தாரின் கீழ் இருந்த வடக்கு - கிழக்குப் பிரதேசங்கள் ஆங்கிலேயர் கைக்கு வந்தது. காஞ்சிபுரத்தில் பிறந்த கூழங்கையார் சுண்டுக்குளியில் அடக்கம் செய்யப்பட்டார். அவரது மரணமும் அவர் புதைக்கப்பட்ட முறையும் நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகும் நினைவில் இருந்தன. ஜோசப் ராபர்ட்ஸ், *Oriental Illustrations of the Sacred Scriptures* எனும் நூலில், கூழங்கையாரின் மரணத்தைப் பற்றிய விவரங்களைச் சுட்டிக்காட்டுகிறார். "மிகுந்த பரிசுத்தம் கொண்ட சில நபர்கள் உப்பில் உட்கார்ந்த நிலையில் அடக்கம் செய்யப்படுகிறார்கள்; அவர்கள் மரணத்திற்குப் பிறகும் தவத்தில் இருக்கிறார்கள் என நம்பப்படுகிறது" என அவர் குறிப்பிடுகிறார். இவ்வாறு, யாழ்ப்பாணத்தைத் தன் சொந்த நாடாக ஏற்றுக்கொண்ட கூழங்கைத் தம்பிரான் அந்த மண்ணையே நிரந்திரத் துயிலும் இடமாக ஏற்றுக்கொண்டார்.

இந்த அத்தியாயத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முன் இன்னும் ஒருவர் பற்றிச் சொல்ல வேண்டும். அவர் ஒரு பெண் மொழிபெயர்ப்பாளர். இறையியல் கோட்பாடுகளையும் வேதாகமப் பகுதிகளையும் தமிழில் மொழிபெயர்த்த ஒரேயொரு பெண். அக்காலத்தில் மட்டுமின்றி, இன்றுவரையும் அவரே கிறிஸ்தவ வேதத்தைத் தமிழில் பெயர்த்த ஒரேயொரு பெண் மொழிபெயர்ப்பாளராக இருக்கிறார் — அவர், முதற்பெயர் தெரியாத 'மிஸஸ் ஸ்ரேடர்' (Mrs. Schrader) என்ற பெயரால் மட்டுமே அறியப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய டச்சு பிரெஸ்பிடேரியன் சபையின் உறுப்பினரான இவர், அங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு ஆறுதலும் ஆன்மிக வழிகாட்டுதலும் வழங்கினார். டச்சு மொழியில் இருந்த பல மத நூல்களை தமிழிலும், அக்காலத்தில் தமிழர்களிடையே பேசப்பட்ட போர்த்துக்கீசியிலும் இவர் மொழிபெயர்த்ததாக நம்பப்படுகிறது. அவை அனைத்தும் அவரது கையெழுத்தில், கைப்பிரதியாகவே சுற்றனுப்புச் செய்யப்பட்டதால், இன்றுவரை கிடைக்காமலேயே போய்விட்டன. அவர் வேதாகமத்தின் முக்கிய பகுதிகளைப் பாடல் வடிவத்தில் எழுதியது அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. இது அவரது இலக்கிய நயமிக்க பாணிப் படைப்புகளுக்கு தனிச்சிறப்பைத் தந்தது. அதுமட்டுமல்ல, தமிழரின் இலக்கிய உணர்வுகளுக்கு இசைவாகவும் அமைந்தது. ஆனால் அச்சில் வராததால், அவரது சாதனைகளை வருங்காலத்தவர்கள் வாசிக்க முடியாமல் போயிற்று. இவரின் இறையியல் சேர்ப்பு ஒரு பெண்ணின் மறக்கப்பட்ட வரலாறு ஆகும்.

## அர்த்தம் புரியாத மொழிபெயர்ப்புகள், அக்கறையற்ற பிரசங்கிகள்

டச்சுச் சமயப் பிரசாரக ஆவணங்கள், ஒல்லாந்தார் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த காலத்தில் இன்னும் சில வேதாகமப் பகுதிகள் தமிழாக்கம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கின்றன. 1693 ஆம் ஆண்டில், யாக்கோபு எழுதிய நிருபம், அப்போஸ்தலர் நடபதிகளில் பதினான்காம் அதிகாரம் வரை மொழிபெயர்க்கப்பட்டதாகப் பதிவுகள் உண்டு. இந்த மொழிபெயர்ப்புகள், சிங்களப் பகுதிகளில் பணியாற்றிய

மிஷனரியான சைமன் கேட் என்பவரால் செய்யப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இவை எல்லாம் இன்று நம்மிடம் இல்லை.

நான் இங்கு விவரித்தது எல்லாம் முழுமையான திருப்புதல்கள் இல்லை. என்றாலும், அந்தக் காலத்திலேயே தமிழில் வேதாகமத்தை உருவாக்குவதற்கான முக்கிய பணியில் டி மேய், கிராம்மர், கூழங்கையார், திருமதி ஸ்ரேடர் ஆகியோர் ஈடுபட்டிருந்தார்கள். இவர்கள் பாதை இல்லாத இடத்தில் முதற் பாதையை எடுத்தவர்கள் எனலாம்.

வடக்கு - கிழக்கு மக்கள், போர்த்துக்கீசியரும் ஒல்லாந்தர்களும் கொண்டு வந்த இரு வித முரண்பாடான கிறிஸ்தவ வடிவங்களைப் பெரிதாக ஏற்கவில்லை. அவர்களது அனுபவம், இந்த வெளிநாட்டு மதத்திற்கான நேர்மையான பார்வையை உருவாக்குவதற்குப் பெரிதும் உதவவில்லை. டச்சு ஆட்சிக்காலத்தில், யாழ்ப்பாணம் கிறிஸ்தவ நாடாகவே மாறியது — ஆனால் இது ஐரோப்பியமயமாக்கப்பட்ட மேற்காசிய மதம் அவர்களின் ஆன்மிகத் தாகத்தைத் தீர்த்ததால் அல்ல; நிர்வாக ஆதரவுடன் கட்டாய மதமாற்றம் நிகழ்ந்ததாலேயே இடம்பெற்றது.

அப்போது, அரசுப் பதவிகளைப் பெற கிறிஸ்தவராக இருக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டது. மேலும், பிள்ளைகள் பெற்றோர்களின் சொத்தை வாரிசாகப் பெற, தேவாலயத் திருமணம் அவசியமாக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திற்கு வடக்கே ஐந்து மைல் தொலைவில் உள்ள உடுவிலில் பணியாற்றிய அமெரிக்க மிஷனரி வில்லியம் ஹவுலண்ட் (1817-1892), இந்த நிர்வாக நிபந்தனைகளில் ஒன்று, ஹெல்வெட்டிக் கிறிஸ்தவ ஒப்புதலை (Helvetic Confession of Faith) ஏற்க வேண்டும் என்பதாக இருந்தது எனக் குறிப்பிட்டார். இந்த ஹெல்வெட்டிக் கிறிஸ்தவ ஒப்புதல் என்பது மறுசீரமைக்கப்பட்ட திருச்சபைகளின் (Reformed Church es) பொதுக் கொள்கை அறிக்கை ஆகும். அரசுப் பதவிகளைப் பெறுவதற்குத் தேவையான நிபந்தனையாக, இந்த நம்பிக்கைக் குறிப்பை மாற்றியதால், "தாளில் மட்டும் கிறிஸ்தவர்களாக மாறியவர்களின் எண்ணிக்கை பெரிதாக இருந்தது" என அவர் குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கில் கிறிஸ்தவம் பரவத் தவறியதற்கான காரணம், அந்தக் காலத்தில் ஒரு பிரசாரக் கட்டுரையாளர் சுட்டிக்காட்டியபடி, "தமிழர்களின் இயல்பான விரோதம், அலட்சியம் மற்றும் பிடிவாதம்" அல்ல. உண்மையில், டச்சு மதப்பரப்பாளர்களின் கவனக்குறைவும், தமிழ்மொழியை அறியாததுமே காரணம் — இவை பெரும்பாலும் அவர்களது சோம்பலின் விளைவாகும். போர்த்துக்கீசியர்களைப் போலவே, இந்த ஒல்லாந்தக் குருமார்களிடம் அவர்களின் சீர்திருத்தக் கிறிஸ்துவத்தைப் பரப்பும் ஆர்வமும், இந்துக்களை ஈர்க்கும் அவசரமும் காணப்படவில்லை.

ஞாயிறு வழிபாட்டில் மக்கள் குறைவாகவே கலந்துகொண்டனர். காரணம், டச்சு மதக்கோட்பாடுகள் மிக மோசமான முறையில் தமிழில் கொடுத்த விளக்கம்தான். ஆளுநர்களாக இருந்த டச்சுக் கிழக்கிந்தியக் கூட்டமைப்பும் மதமாற்றம் செய்வதில் பெரிதாக உதவவில்லை; அவர்களுக்கு இலாபமும் செல்வம் சேர்த்தலும், நாட்டின் மூல வளங்களை வணிகமாக்குதலும் தான் முக்கியமாக இருந்தன. அவர்களுக்கு மதம் பரப்புதல் பின்தள்ளப்பட்ட முக்கியத்துவமாகவே இருந்தது.

1796 இல் ஆங்கிலேயர்கள் தீவைக் கைப்பற்றிய பின், தமிழ்க் கிறிஸ்தவர்கள் தங்கள் மதச்சடங்குகளை சுதந்திரமாகக் கடைப்பிடிக்க அனுமதிக்கப்பட்டனர். அவர்கள்மேல் திணிக்கப்பட்ட அந்நிய மதத்தை விட்டு விலகி, பூர்விக மரபுகளுக்கே திரும்பினர். அவர்கள் தேவாலயங்களுக்கு வருவது குறைந்தது; அவை விரைவில் சிதைவுக்குள்ளாயின. இந்துக் கோவில்கள் மீண்டும் எழுப்பப்பட்டன; கிறிஸ்தவத்தின் சுவடுகள் பெரும்பாலும் மறையத் தொடங்கின. ஒருகாலத்தில் கிறிஸ்தவத்திற்குக் கிடைத்த குறுகிய, ஆனால் கேள்விக்கிடமற்ற அந்த உயர்ந்த நிலை மறுபடியும் கிடைக்கவில்லை. ஆறுமுக நாவலரின் எழுச்சி, சைவம் தீபகற்பத்தில் வலுவாக நிலைத்திருப்பதை உறுதிப்படுத்தியது.

## உதவிய நூல்கள்


1. *Howland, William W. **1865.** Historical Sketch of the Ceylon Mission. Boston, Mass.: American Board of Commissioners for Foreign Missions.*

2. *Chitty, Simon Casie. **1859.** The Tamil Plutarch Containing a Summary Account of the Poets and Poetesses of Southern India and Ceylon. Jaffna: Ripley and Strong Printers.*

3. *Palm, J. D. **1847-1848.** "An Account of the Dutch Church in Ceylon, Collected from the Local Records, Deposited in the Wolfendahl Church, Colombo." The Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society of Great Britain & Ireland, Vol. 1, No. 3, pp. 5-71.*

4. *Sathasivam Pillai, A. Pavalar Chariththira Theepakam or The Galaxy of Tamil Poets, Vol. 2.*

5. தாமோதரன், அ. **1991.** நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான் உரையும். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

இரத்தினவேலுப்பிள்ளை
மயூரநாதன்



இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.

தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார். தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.

# லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் வலிகாமம் – புத்தூர்

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.

லெயுசிக்காமின் வலிகாமப் பிரிவைக் காட்டும் நிலப்படத்தில் அச்சுவேலிக் கோவிற்பற்றுத் தொடர்பாகக் காணப்படும் தகவல்களையும், அவற்றோடு தொடர்புடைய வரலாற்றுக் குறிப்புகளையும் சென்ற கட்டுரையில் பார்த்தோம். இந்தக் கட்டுரையில், புத்தூர்க் கோவிற்பற்றுத் தொடர்பாக நிலப்படத்திலுள்ள விவரங்களை ஆராயலாம்.

புத்தூர்க் கோவிற்பற்றில் புத்தூர், சிறுப்பிட்டி, அச்செழு, ஆவரங்கால் ஆகிய நான்கு துணைப்பிரிவுகள் இருப்பதை நிலப்படம் காட்டுகிறது (படம்1).




லெயுசிக்காமின் வலிகாமத்தைக் காட்டும் நிலப்படத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட புத்தூர்க் கோவிற்பற்றுப் பகுதி

## எல்லைகள்

புத்தூர்க் கோவிற்பற்றின் வடக்கு எல்லையில் அச்சுவேலிக் கோவிற்பற்றும்; மேற்கில் மயிலிட்டி, மல்லாகம் ஆகிய கோவிற்பற்றுகளும்; தெற்கு எல்லையில் கோப்பாய்க் கோவிற்பற்றும்; கிழக்கில் உப்பாறு கடல்நீரேரியும் உள்ளன. அச்சுவேலிக் கோவிற்பற்றின் ஒரு துணைப்பிரிவான நவக்கிரி, அக்கோவிற்பற்றுடன் பொது எல்லை எதையும் கொண்டிராமல் பெரும்பாலும் புத்தூர்க் கோவிற்பற்றுக்குள் அடங்கியிருப்பதைக் காணமுடிகிறது. கோவிற்பற்றின் வடக்கு எல்லையை அண்டி ஆவரங்கால் துணைப்பிரிவும், அதற்குத் தெற்கே புத்தூர்த் துணைப் பிரிவும், தெற்கு எல்லையை அண்டிச் சிறுப்பிட்டித் துணைப் பிரிவும் அமைந்துள்ளன. சிறுப்பிட்டிக்கு மேற்கே அச்செழுத் துணைப்பிரிவு காணப்படுகின்றது.

ஒல்லாந்தர் காலப் புத்தூர்க் கோவிற்பற்றுக்குள் அடங்கியிருந்த பகுதிகள் தற்காலத்தில் கோப்பாய்ப் பிரதேசச் செயலர் பிரிவுக்குள்ளும், உள்ளூராட்சி அமைப்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை நிர்வாகத்துக்குள்ளும் அடங்குகின்றன.

## வீதிகள்




லெயுசிக்காமின் வலிகாமத்தைக் காட்டும் நிலப்படத்தைத் தழுவி வரையப்பட்ட புத்தூர்க் கோவிற்பற்றின் படம்

லெயுசிக்காமின் நிலப்படத்தின்படி, யாழ்ப்பாண நகரத்திலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் வீதி மட்டுமே புத்தூர்க் கோவிற்பற்றுக்கூடாகச் செல்கிறது (படம்2). அக்காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த மிக முக்கியமான வீதிகளுள் இதுவும் ஒன்று. இது தெற்கிலிருந்து வடக்காக சிறுப்பிட்டி, புத்தூர், ஆவரங்கால் ஆகிய துணைப்பிரிவுகளை ஊடறுத்துச் செல்கிறது. அச்செழு துணைப் பிரிவுக்குள் வீதி எதுவும் இல்லை.

நிலப்படத்தில் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியை, புத்தூர்க் கோவிற்பற்றுக்கும் அச்சுவேலிக் கோவிற்பற்றுக்கும் இடையிலான எல்லைக்குச் சற்று வடக்கே அச்சுவேலியிலிருந்து வரும் வீதி சந்திக்கிறது. தற்காலத்தில் இது ஆவரங்கால் பகுதிக்குள் இருக்கின்றது. எனவே, நிலப்படத்திலும் இது புத்தூர்க் கோவிற்பற்றுக்குள் அடங்கிய ஆவரங்கால் துணைப் பிரிவுக்குள் இருந்திருக்க வேண்டும் என ஏற்கெனவே சென்ற கட்டுரையில் சுட்டிக்காட்டினோம். அதாவது இதை முன்னர் குறிப்பிட்ட அச்சுவேலி - புத்தூர் எல்லைக்கு அருகில் அதன் தெற்குப் பக்கத்தில் குறித்திருக்க வேண்டும். எனவே, ஆவரங்கால் - அச்சுவேலி வீதியும் புத்தூர்க் கோவிற்பற்றுக்கு உள்ளேயே தொடங்குகிறது எனலாம்.

தற்காலத்தில் புத்தூர்க் கோவிற்பற்றை ஊடறுத்துச் செல்லக்கூடிய சுன்னாகத்தையும் புத்தூரையும் இணைக்கும் புத்தூர் வீதி, புத்தூர் - மீசாலை வீதி, ராச

வீதி முதலியவை நிலப்படத்தில் இல்லை. அடிமட்டம் வைத்து வரைந்தாற்போல் நேராக இருக்கும் அவை ஒல்லாந்தர் காலத்துக்குப் பிற்பட்ட, பிரித்தானியர் காலத்து வீதிகளாகவே தோன்றுகிறது. ஆனாலும், உள்நாடி இருந்த குடியிருப்புப் பகுதிகளை முக்கிய வீதிகளுடன் இணைக்கும் சிறிய வீதிகள் இருந்திருக்கக்கூடும். நிலப்படத்தின் நோக்கத்துக்குத் தேவையில்லை என்பதால் அவற்றைக் காட்டாமல் விட்டிருக்கலாம்.

## கட்டடங்கள்

ஏனைய கோவிற்பற்றுக்குள் இருப்பது போலவே இக்கோவிற்பற்றுக்குள்ளும் கிறித்தவத் தேவாலயத்தையும் தேவாலய இல்லத்தையும் நிலப்படம் முக்கியத்துவம் கொடுத்துக் குறித்துக் காட்டுகின்றது. இவற்றைவிட, இரண்டு அம்பலங்கள், இரண்டு மடங்கள், ஒரு யானைப் பந்தி என்பனவும் நிலப்படத்தில் உள்ளன. இவற்றை விட நிலப்படத்தில் அச்சுவேலிக் கோவிற்பற்றில் குறிக்கப்பட்டுள்ள ஒரு அம்பலமும் புத்தூர்க் கோவிற்பற்று எல்லைக்குள் இருந்திருக்க வாய்ப்புண்டு.

### தேவாலயமும் தேவாலய இல்லமும்

ஏற்கெனவே, மேலே குறிப்பிட்ட யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதிக்கு அருகில் அதன் மேற்குப் பக்கத்தில் இவ்விரு கட்டடங்களும் இருப்பதை நிலப்படம் காட்டுகிறது. இவை புத்தூர்த் துணைப் பிரிவுக்குள் உள்ளன. போல்தேயஸ் பாதிரியாரின் நூலில் தேவாலயத்தினதும் தேவாலய இல்லத்தினதும் கட்டட அமைப்புகளைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. அங்குள்ள மாணவர்களின் தொகையையும் போதனையைக் கேட்க வருபவர்களின் எண்ணிக்கையையும் மட்டுமே அவர் குறிப்பிட்டுள்ளார். அதுவும், வலிகாமப் பிரிவின் தேவாலயங்கள் பற்றிய விவரங்கள் அவ்வளவுதான் என முடித்த பின்னர் புத்தூரிலும் தேவாலயம் இருந்ததாகத் தகவல் தருகிறார்.[1] இவ்வாறு புத்தூர்த் தேவாலயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் விட்டதற்கான காரணம் தெரியவில்லை. ஆனால், புத்தூர்த் தேவாலயத்தையும் தேவாலய இல்லத்தையும் காட்டும் படம் நூலில் உள்ளது.[2] படத்தின்படி இவ்விரு கட்டடங்களும் நிரந்தரமான கட்டடப் பொருட்களால் ஆனவையாகவே தோன்றுகின்றன (படம்3). நூலில் இக்கட்டடங்கள் தொடர்பான எழுத்துமூலத் தகவல்கள் இல்லாததால், படத்தின் நம்பகத் தன்மை கேள்விக்குரியதே. எனவே இப்படத்தை வைத்துத் தேவாலயத்தின் அமைப்புத் தொடர்பான எந்த முடிவுக்கும் வரமுடியாது.

எவ்வாறாயினும், 1840 களின் தொடக்கத்தில் புத்தூரில் இருந்த ஒல்லாந்தத் தேவாலயத்தை அரசாங்கம் வெஸ்லிய மிசனிடம் கையளித்ததாகத் தெரிகிறது. அது பராமரிப்பின்றி மோசமான நிலையில் இருந்துள்ளது. 1848 இல் அது திருத்தப்பட்டு வழிபாட்டுக்காகத் திறக்கப்பட்டது.[3] இதுவே இன்று புத்தூரில் உள்ள வெஸ்லிய மெதடிஸ்த பரி லூக்கா தேவாலயம் ஆகும். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கைவிடப்பட்டுப் பராமரிப்பின்றி இருந்ததற்குப் பின்னரும் அதைத் திருத்திப் பயன்படுத்தக் கூடியதாக இருந்ததால், அது நிரந்தரமான கட்டடப் பொருட்களினால்




**போல்தேயஸ் பாதிரியாரின் நூலில் உள்ள புத்தூர்த் தேவாயத்தையும் தேவாலய இல்த்தையும் காட்டும் படம்.**

கட்டப்பட்ட உறுதியான கட்டடமாகவே இருந்திருக்கும் எனத் தோன்றுகிறது. அத்துடன், ஒல்லாந்தரின் தேவாலயமும் தேவாலய இல்லமும் இன்று மேற்படி பரி லூக்கா மெதடிஸ்த தேவாலயம் இருக்கும் வளவிலேயே இருந்திருக்கும் என்பதும் தெரிகிறது. நிலப்படத்தின்படி நுணுவில் குளத்துக்கு நேர் எதிராகவே ஒல்லாந்தரின் தேவாலயம் குறிக்கப்பட்டுள்ளது. அதே போலவே தற்காலத்திலும்

**லெயுசிக்காமின் நிலப்படத்தின்படி, யாழ்ப்பாண நகரத்திலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் வீதி மட்டுமே புத்தூர்க் கோவிற்பற்றுக்கூடாகச் செல்கிறது (படம்2). அக்காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த மிக முக்கியமான வீதிகளுள் இதுவும் ஒன்று. இது தெற்கிலிருந்து வடக்காக சிறுப்பிட்டி, புத்தூர், ஆவரங்கால் ஆகிய துணைப்பிரிவுகளை ஊடறுத்துச் செல்கிறது. அச்செழு துணைப் பிரிவுக்குள் வீதி எதுவும் இல்லை.**

**ஒல்லாந்தர் காலப் புத்தூர்க் கோவிற்பற்றுக்குள் அடங்கியிருந்த பகுதிகள் தற்காலத்தில் கோப்பாய்ப் பிரதேசச் செயலர் பிரிவுக்குள்ளும், உள்ளூராட்சி அமைப்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை நிர்வாகத்துக்குள்ளும் அடங்குகின்றன.**

நுணுவில் குளத்துக்கு எதிரிலேயே பரி லூக்கா மெதடிஸ்த தேவாலயம் உள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டும் இரண்டு தேவாலயங்களதும் அமைவிடங்கள் ஒன்றே என உறுதி செய்யலாம்.

### அம்பலங்களும் மடமும்

ஏதாவது பொருள் வேறுபட்டைக் காட்டும் வகையில் அம்பலம், மடம் ஆகிய சொற்கள் நிலப்படத்தில் பயன்பட்டுள்ளனவா அல்லது ஒரே பொருளில் ஒன்றுக்கொன்று மாற்றீடாகப் பயன்பட்டுள்ளனவா என்று தெரியவில்லை. அம்பலம் எனக் குறிக்கப்பட்ட இரண்டு அமைப்புகளும் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ளன. இவ்விரு அம்பலங்களும் முக்கிய வீதியோரம் அமைந்திருப்பதால் பயணிகள் அல்லது வழிப்போக்கர்கள் தங்கிச் செல்வதற்கு இவை பயன்பட்டிருக்கக்கூடும்.

ஒரு அம்பலம் புத்தூர்த் துணைப் பிரிவுக்குள் மேற் குறிப்பிட்ட வீதிக்குக் கிழக்குப் பக்கத்தில் உள்ளது. இது தேவாலயத்திலிருந்து குறுகிய தூரத்தில் இருப்பதுடன் அம்பலத்துக்கு அருகில் நுணுவில் குளம் என்னும் ஒரு குளமும் உள்ளது. இரண்டாவது அம்பலம் ஆவரங்கால் துணைப்பிரிவில் உள்ளது. இதுவும் வீதிக்குக் கிழக்குப் பக்கத்திலேயே குறிக்கப்பட்டுள்ளது. இதற்கு அருகிலும் இரண்டு குளங்கள் இருக்கின்றன. ஆனால், அம்பலத்தில் தங்குபவர்கள் வசதியாகப் பயன்படுத்தக் கூடியவாறு இவற்றில் ஒரு குளத்துக்கு மிக அருகில் இவ்வம்பலம் இருந்ததா என்பதை உறுதியாகக் கூறமுடியாது.

இக்கோவிற்பற்றிலுள்ள மேலே குறிப்பிட்ட மடங்களுள் ஒன்று வாதரவத்தைப் பகுதியில் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதிக்குக் கிழக்கே குறிப்பிடத் தக்க அளவு தொலைவிலேயே அமைந்திருக்கிறது. இது கடல்நீரேரிக் கரையிலும் அமையவில்லை. இந்தக் கட்டுரைத் தொடரில் இதுவரை மடங்கள் வீதிகளை அண்டி அல்லது கரையோரமாக அமைந்திருந்ததையே பார்த்தோம். இதற்கு அருகாக நிலப்படத்தில் குறிக்காத, முக்கியத்துவம் குறைந்த ஒரு வீதி அல்லது மக்கள் பயன்படுத்தும் ஒரு பாதை இருந்திருக்க வாய்ப்பு உண்டு.

இந்த மடம் தேவரின் மடம் எனப் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. லெயுசிக்காமின் தொகுப்பிலுள்ள இன்னொரு நிலப்படத்தில் இதே கட்டடத்துக்கு அம்பலம் எனப் பெயர் குறித்துள்ளனர். இந்த இடத்தில் மடம், அம்பலம் என்னும் இரு சொற்களையும் ஒன்றுக்கொன்று மாற்றீடாகப் பயன்படுத்தி உள்ளனர் என்பது தெளிவு. ஆனால், எல்லா இடங்களிலும் அவ்வாறு கொள்ளலாமா என்பது ஆய்வுக்குரியது. இதன் அருகிலேயே தேவரின் குளம் என்ற பெயரில் ஒரு குளமும் இருப்பது குறிப்பிடத் தக்கது.

ஒரே பெயரால் அறியப்பட்ட மடமும் குளமும் ஒரே நிர்வாகத்தின் கீழ் இருந்திருக்க வாய்ப்பு உண்டு. அதேவேளை, தேவர் என்ற பெயர் ஏற்கெனவே இக்கட்டுரைத் தொடரில் குறிப்பிட்ட வீர மாணிக்க தேவன், பெரிய நாட்டுத் தேவன் போன்று தேவர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரின் பெயரைத் தழுவியதா என்பது ஆய்வுக்குரியது. அதேவேளை, புத்தூர் எல்லைக்குள் இருந்திருக்கலாம் எனஏற்கெனவே குறிப்பிட்ட இன்னொரு அம்பலம் ஆவரங்கால் சந்தியின் வடமேற்கு மூலையில் காட்டப்பட்டுள்ளது. பிற கோவிற்பற்றுகளுடன் ஒப்பிடும்போது புத்தூரிலேயே கூடுதலான அம்பலங்கள் அல்லது மடங்கள் காணப்படுகின்றன.

## யானைப்பந்தி

வீதிக்கு மேற்குப் பக்கத்தில் அதற்குச் சற்றுத் தொலைவில் இந்த யானைப்பந்தியைக் குறித்துள்ளனர். வீதிகள், குளங்கள் முதலிய அடையாளங் காணத்தக்க அம்சங்களுடன் தொடர்புபடுத்திக் காட்டப்படாததால் இதன் துல்லியமான அமைவிடத்தை அடையாளம் காண்பது கடினம். ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியின் தேவைக்காக வளர்க்கப்பட்ட யானைகளைப் பராமரிக்கும் இடமாக இது இருந்திருக்கக்கூடும்.

## குளங்கள்

புத்தூர்க் கோவிற்பற்றுக்குள் 21 குளங்களை நிலப்படம் பெயர் குறித்துக் காட்டுகிறது. இவற்றுள் சிறுப்பிட்டித் துணைப்பிரிவுக்குள் வியாளவில் குளம், வேவியாக் குளம், புக்கெட்டைக் குளம், மருதங் குளம், பெரிய வயல் குளம், கட்டணைக் குளம், தவளைக் குளம், கள்ளியன்வட்டை ஆகிய எட்டுக் குளங்களும் வெறுமனே குளம் எனக் குறிக்கப்பட்ட ஒரு குளமுமாக மொத்தம் ஒன்பது குளங்கள் உள்ளன. புத்தூர்த் துணைப் பிரிவுக்குள் நிலாவரைக் கேணி, கிராலிக் குளம், வண்ணான் துரவு, பண்டாவளை, அட்டானைக் குளம், நுணுவில் குளம், தேவரின் குளம், நவான் குளம், வெட்டுத் துரவு என ஒன்பது நீர்நிலைகள் காணப்படுகின்றன. ஆவரங்கால் துணைப்பிரிவில் கொய்வளைக் குளம், கன்னாரைக் குளம் என இரண்டு குளங்கள் இருக்கின்றன. அச்செழுத் துணைப் பிரிவுக்குள் ஒரேயொரு குளம் மட்டும் உள்ளது.

இக்கோவிற்பற்றில் 21 குளங்களை நிலப்படம் காட்டுவதாக மேலே குறிப்பிட்டோம். தற்காலப் பதிவுகளின்படி இந்தப் பகுதிக்குள் 30 குளங்கள் இருக்கின்றன.[4] இக்காலத்தில் இருப்பதைவிடக் கூடிய குளங்கள் அக்காலத்தில் இருந்திருக்க வேண்டும். எனவே, அவ்வாறான பல குளங்களை நிலப்படம் காட்டவில்லை என்றே கொள்ள வேண்டும்.

நிலப்படம் காட்டும் குளங்களுள் வேவியாக் குளம், மருதங் குளம், கிராலிக் குளம், நாவான் குளம், நுணுவில் குளம், கன்னாரைக் குளம் ஆகிய ஆறு குளங்களின் பெயர்கள் மாற்றமின்றி இன்றுவரை புழக்கத்தில் உள்ளன. அமைவிடத்தையும் ஒலிப்பு ஒற்றுமையையும் கருத்திற் கொண்டால், அச்செழுவில் இருப்பதாக நிலப்படம் காட்டும் வியாவில் குளமும், தற்காலப் பதிவுகளில் உள்ள விசாவலிக் குளமும் ஒரே குளத்தையே குறிக்க வாய்ப்பு உள்ளது. விசாவலிக் குளம் என்ற பெயர் வியாவில் குளம் என்பதன் திரிபாக இருப்பதும் சாத்தியம். நிலப்படத்திலுள்ள பல குளங்கள் பெயர் மாற்றம் பெற்று இன்றும் இருக்கக்கூடும். ஆனலும், பல காரணங்களால் அவற்றை அடையாளம் காண்பது கடினம்.

## நிலாவரைக் கிணறு

புகழ்பெற்ற நிலாவரைக் கிணற்றை நிலப்படம் முக்கியத்துவம் கொடுத்துக் காட்டுகிறது. நிலப்படம் வரையப்பட்ட காலத்திலும் இவ்விடம் முக்கியத்துவம் பெற்று விளங்கியதை இது காட்டுவதாகக் கொள்ளலாம். 1658 - 1665 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த போல்தேயஸ் பாதிரியாரும் தனது நூலில் இந்தக் கிணற்றைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இதன்படி அச்சுவேலிக்கு அருகில் இருந்த இது ஆச்சரியப்படும் அளவுக்குப் பெரியதும் அகலமானதும் ஆழமானதும் வட்ட வடிவம் கொண்டதுமென அவர் தகவல் தந்துள்ளார். நடுப் பகுதியில் இதன் ஆழம் 24 பாதம் (144 அடி) என்கிறார். பிரம்மாண்டமான பாறையொன்றைக் குடைந்து உருவாக்கப்பட்ட ஒரு அற்புதமான வேலை என இக்கிணற்றைக் குறிப்பிடும் அவர், உள்ளூர் மக்கள் இது இடியினால் உருவானது என நம்புகிறார்கள் என்றும் தகவல் தந்துள்ளார்.[5] போல்தேயஸ் பாதிரியார் கிணறு வட்டமானது என்று கூறினாலும், நிலப்படம் இதை இன்றிருப்பதுபோல் சதுரமான பெரிய கேணி போன்ற குறியீட்டினாலேயே குறித்துக் காட்டுகிறது. பிரித்தானியர் காலத்தில், வற்றாத ஊற்று எனக் கருதப்பட்ட நிலாவரைக் கிணற்றிலிருந்து குளாய் மூலம் யாழ்ப்பாண நகரத்துக்கு நீர் வழங்கும் திட்டங்கள் தீட்டப்பட்டன. எனினும், இவற்றுக்கான செலவு அதிகம் என்பதால் இத்திட்டங்கள் கைவிடப்பட்டன. இப்போது இது தொல்லியற் திணைக்களத்தினால் மரபுரிமைச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.6 இது இன்று ஒரு சுற்றுலாத் தலமாகவும் பேணப்படுகிறது.

## குறிப்புகள்

1. *Phillipus Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos. 14 (July 1958April 1959), 328.*
2. *Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 331.*
3. *Mary B. Barker et all, A History of the Methodist Church in Ceylon 1814-1964 (Colombo: Wesley Press, -), 201.*
4. தகவல்: விவசாய அபிவிருத்தித் திணைக்களம்.
5. *Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 316.*
6. *"Part I, Section (1) - General, Government Notification" Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka, 2007 February 23, 129.*

கந்தையா சண்முகலிங்கம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.
'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

# இலங்கையின் சமய மறுமலர்ச்சி இயக்கமும் முதலாளித்துவமும்: அநகாரிக தர்மபாலவின் வகிபாகம்

'இலங்கையில் பௌத்தம்' என்னும் இந்தத்தொடர் பௌத்தம் பற்றி மானிடவியலாளர்களாலும் சமூகவியலாளர்களாலும், அரசியல் விஞ்ஞானிகளாலும் எழுதப்பட்ட ஆய்வுகள் பற்றி அறிமுகம் செய்வதாக அமைகின்றது. குறிப்பாக 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் பௌத்த சமய சீர்திருத்தவாதம், சமூகம், பண்பாடு, அரசியல், இன உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களில் அரசியல் பௌத்தத்தின் வகிபாகம் என்பன பற்றி ஆய்வாளர்களின் கருத்துக்கள் விரிவாக இந்தத் தொடரில் நோக்கப்படும். கணநாத் ஒபயசேகர, ஸ்டான்லி ஜே. தம்பையா, எச். எல். செனவிரத்தின, கித்சிறிமலல் கொட, சரத் அமுனுகம, ஜயதேவ உயன்கொட, குமாரி ஜயவர்த்தன, லெஸ்லி குணவர்த்தன ஆகிய இலங்கையின் சமூக விஞ்ஞானிகளின் நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் , ஹவ்வார்ட் றிஜின்ஸ், உர்மிலா பட்னிஸ், றிச்சார்ட் கொம்பிரிட்ஜ், யொனதன் ஸ்பென்சர் முதலிய இலங்கையரல்லாத ஆய்வாளர்களின் ஆய்வுகள் சிலவும் இந்தக் கட்டுரைத்தொடரில் விமர்சன நோக்கில் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவுள்ளது.

***ஆங்கில மூலம்: குமாரி ஜயவர்த்தன***

கு

மாரி ஜயவர்த்தன அவர்கள் எழுதிய '*Nobodies to Somebodies: The Rise of the Colonial Bourgeoisie in Sri Lanka*' என்னும் நூல் இலங்கையில் காலனிய காலத்து முதலாளித்துவத்தின் தோற்றம் பற்றியும், முதலாளித்துவ வகுப்பின் தோற்றத்தின் விளைவாக ஏற்பட்ட சமூக, பொருளாதார அரசியல் மாற்றங்கள் பற்றியும் ஆராயும் நூலாகும். இந்நூல் 'அநாமதேயங்களாக இருந்தோர் அறியப்பட்டவர்களானமை: இலங்கையில் காலனித்துவ முதலாளித்துவ வகுப்பின் தோற்றம்' என்ற தலைப்பில் எம்மால் மொழிபெயர்க்கப்பட்டது. இம் மொழிபெயர்ப்பை குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை, 2015 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. இந்நூலின் இயல் - 15 'சமய மறுமலர்ச்சியும் முதலாளித்துவமும்' என்னும் தலைப்பில் அமைந்துள்ளது (பக். 272 - 295).



குமாரி ஜெயவர்த்தன

Image Source - www.thehindu.com

இக்கட்டுரையின் பக்கம் 282 முதல் 288 வரையான 6 பக்கங்களில் 'அநகாரிக தர்மபாலவின் வகிபாகம்' என்னும் உபதலைப்பின் கீழ், ஆளுமைமிக்க சமயத் தலைவரான அநகாரிக தர்மபாலவின் வரலாற்று வகிபாகத்தைப் பற்றி குமாரி ஜயவர்த்தன அவர்கள் கூறியிருக்கும் கருத்துகள் இங்கே தரப்பட்டுள்ளன.

## அநகாரிக தர்மபாலவின் வகிபாகம்

வர்த்தகர்கள், காரீயச் சுரங்கங்களின் உடைமையாளர்கள், குத்தகைக்காரர்கள் பெருந்தோட்ட உடமையாளர்கள் போன்ற முதலாளிகளைவிட இன்னொரு பிரிவினரான கைத்தொழில் முதலாளிகளும் பௌத்த இயக்கத்திற்கு ஆதரவு வழங்கினர். கைத்தொழில் துறையில் சிறு கைத்தொழில்கள் பல ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இம்முதலாளிகளில் பலர் பௌத்த சமயப் பற்றாளர்களாக விளங்கினர். இருப்பினும் பெரும்பாலானோர் பிரித்தானிய அரசின் விசுவாசிகளாக இருந்தனர். இவர்களில் சிலர் தேசியவாதத்தைத் தழுவிக் கொண்டனர். தேசியவாதத்தின் தீவிர ஆதரவாளர்களுள் மிகவும் பிரபலமானவர்களாக அநகாரிக தர்மபாலவும் (1864 - 1933) அவரின் சகோதரர்களும் விளங்கினர். இவர்களது தந்தையார் ஹேவவித்தாரண டொன் கறோலிஸ் தளபாட உற்பத்தியாளராகவும் அதன் சில்லறை வர்த்தகராகவும் விளங்கினார். இவர்களது தாயார் மல்லிகா ஹேவவித்தாரண ஆவார். தந்தை - தாய் இருவரும், பௌத்த தியோசொபிக்கல் சங்கம், பௌத்த கல்வி இயக்கம், மதுவிலக்கு இயக்கம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தனர். ஒல்கொட்டின் பிரசார நடவடிக்கைகளுக்கு டொன் கறோலிஸ் நிதி உதவி வழங்கினார். பௌத்தப் பிக்குகளிற்குப் பயிற்சியளிக்கும் கல்வி நிறுவனமாகிய வித்தியோதயப் பிரிவேனவின் ஆரம்ப கர்த்தாக்களில் டொன் கறோலிசும் ஒருவராவார். தாயார் மல்லிகா ஹேவவித்தாரண பௌத்த அறக்கொடைகள் பலவற்றிற்கு நிதி உதவினார். பௌத்த பெண்களிற்கான முதியோர் இல்லம் இவற்றுள் ஒன்றாகும். அநகாரிக தர்மபால பௌத்த தியோசோபிக்கல் சங்கத்தில் 1881 ஆம் ஆண்டில் இணைந்து கொண்டார். இவர் பின்னர் மகாபோதி சங்கம் என்ற அமைப்பைக் கல்கத்தாவிலும் கொழும்பிலும் நிறுவினார். இச்சங்கம் பௌத்த சமய முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டது. ஹவாயைச் சேர்ந்த மேரி போஸ்டர் (MARY FOSTER) என்னும் செல்வச் சீமாட்டியான அமெரிக்க தியோசோபிஸ்ட் ஒருவர் மகாபோதி சங்கத்திற்குப் பெருந்தொகை நிதியை உதவினார் (ஜயவர்த்தன, 1995: 164 - 7). பிரித்தானிய அரசு அநகாரிக தர்மபாலவை இராஜ துரோக குற்றவாளி என்று சந்தேகித்து வந்தது. அவர் மதுவிலக்கு இயக்கத்தையும், 1921 ஆம் ஆண்டின் ரெயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தையும் பகிரங்கமாக ஆதரித்ததால் இச்சந்தேகம் ஏற்பட்டது (ஜயவர்த்தன, 1972:156). எட்மண்ட் ஹேவவித்தாரணவும், டாக்டர் சி.ஏ. ஹேவவித்தாரணவும் மதுவிலக்கு இயக்கத்தில் தீவிரமாகப் பங்கெடுத்தனர். எட்மண்ட் ஹேவவித்தாரண 1915 பௌத்த - முஸ்லிம் கலவரத்தின் போது கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறைவாசத்தின் போது காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டு மரணத்தைத் தழுவினார்.

அரசியல், பொருளாதார விடயங்களில் தர்மபாலவும் அவரது குடும்பத்தினரும் தீவிரப் போக்கைக்

கடைப்பிடித்தனர். ஹேவவித்தாரண குடும்பத்தினரிடம் முயற்சியாண்மைத் திறன் இருந்தது. அக்குடும்பத்தின் வரலாற்றை எடுத்து நோக்கினால் தர்மபாலவின் தாய் வழிப் பாட்டன் மர வியாபாரத்தில் சிறந்து விளங்கினார் என்பது தெரிய வரும். தர்மபாலவின் தந்தை பெரியதொரு சில்லறை விற்பனை நிலையத்தை நடத்திய வர்த்தகராவார். மரம், தளபாடம் என்பனவற்றின் உற்பத்தி முயற்சிகளிலும் அவர் முதலிட்டிருந்தார். இவ்வாறான உற்பத்தி முயற்சிகள், பெருந்தோட்ட விவசாயம், குத்தகை வியாபாரம் போன்று பிரித்தானிய காலனிய ஆட்சியாளர்களின் தயவில் நடத்தப்படுவன அல்ல. அவர்களது சலுகைகளும் பாதுகாப்பும் இல்லாமல் சுதந்திரமாக இயங்குவன. இருப்பினும் இவை பேரளவு உற்பத்தித் தொழில்களாகவும் இருக்கவில்லை. இக்காரணங்களினால் இத்தொழில்களில் ஈடுபட்டோர் அந்நிய ஆட்சிக்குப் பகிரங்க அறைகூவல் விடுக்கும் அளவிற்குச் சுதந்திரமும் தன்னம்பிக்கையும் உடையவர்களாய் இருந்தனர்.

கைத்தொழில் உற்பத்தி வர்த்தகர்களிடம் பண்பாட்டு, அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் அளவிற்கு விழிப்புணர்வு இருந்தது. மதுவிலக்கு இயக்கம், பௌத்த கல்வி இயக்கம், அரசியல் சீர்திருத்தம் ஆகியவற்றில் இவர்கள் அக்கறையோடு உழைத்தனர். புதிய முதலாளி வர்க்கத்தின் பௌத்த சமயப் பிரிவினர் இவ்வியக்கங்களிற்கு நிதி உதவி வழங்கினர். டொன் கறோலிஸ் குடும்பம் இவ்விடயத்தில் தீவிர பங்கேற்றது. இம்முதலாளி வர்க்கம் தனது இருப்பை வலியுறுத்த வேண்டும் என்பதைத் தன் எழுத்துகள் மூலம் தர்மபால எடுத்துக்கூறினார். நாட்டில் கைத்தொழில்களும் தொழில்நுட்பமும் வளராது இருப்பதையும், முதலாளி வகுப்பின் பலவீனங்களையும் இவர் கவலையோடு சுட்டிக்காட்டினார். முதலாளி வகுப்பினரின் அடிமை மனோபாவத்தையும் இவர் கண்டித்தார். காலியில் பௌத்தர்கள் நடத்திய ஊர்வலத்தை அரசு தடை செய்ததை எதிர்த்து, 1892 இல் தர்மபால எழுதிய போது 'கீழ்நிலை உத்தியோகத்தர்களின் தகாத தலையீடு' எனவும், 'அப்பாவிகளான சிங்கள பௌத்தர்கள்' துன்புறுத்தப்பட்டனர் என்றும் குறிப்பிட்டார் (குருகே, 1965: 532 மற்றும் 526). அப்போது அவர் பிரித்தானியக் காலனி ஆட்சியாளரின் ஏதேச்சதிகார நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டியதோடு, சிங்கள மக்களிடம் எதிர்ப்பியக்கம் எதுவும் தோன்றவில்லையே என்றும் கண்டனம் செய்தார். "சட்ட சபையில் உள்ளவர்கள் அனுதாபம் கொஞ்சமும் இல்லாதவர்கள்; சுயநலம் மிக்கவர்கள்; ஆக்கிரமிப்புக் குணம் கொண்டவர்கள். அவர்கள் சில வருடங்கள்



**அநகாரிக தர்மபால**

Image Source - theosophy.wiki

சட்டசபையில் பதவி வகித்தபின் கொழுத்த ஓய்வூதியத்துடன் வீட்டில் ஓய்வு எடுப்பவர்கள். இத்தகையவர்களைக் கொண்ட சட்ட சபையில் கொண்டுவரப்படும் ஒவ்வொரு அருவருக்கத்தக்க சட்டத்தையும் மௌனமாக ஏற்று அடிபணிந்து போவது சிங்களவர் செய்யும் பெருந்தவறு (மேலது: 525)."

தர்மபால சுதேச முதலாளி வகுப்பினை தொடர்ந்து கண்டனம் செய்து வந்தார். "நவீன காலத்துக் கலப்பினம் ஒன்று; மேலோட்டமான கல்வியும், அரைகுறையாக ஆங்கிலமயமாதலும் கொண்ட சுயநலமிக்க, தேசப்பற்றற்ற குழுமம்" என்றும் "பல்கலைக்கழகக் கல்வியைப் பெற்ற சிங்களவர்களில் இலங்கை மக்களுக்கு நன்மை செய்தவர்கள் என்று கூறத்தக்கவர் ஒருவர் கூட இல்லை. இவர்களிடம் பிறர்நலன் விழையும் சிந்தனை மங்கிப்போய்விட்டது. இராணி மாளிகையில் நடனத்தில் பங்கு கொள்ளலும், ஆளுநரின் விருந்துக்குப் போதலும் இவர்களுக்கு சுவர்க்க போகம் போன்றவை (மேலது: 524-25)" என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை முதலாளி வர்க்கத்தின் பழமைப் போக்குடைய பிரிவினரை தர்மபால தொடர்ந்து விமர்சித்ததோடு அவர்கள் தலைமைத்துவத்தை

வழங்கத் தவறியமையையும், தேசிய உணர்வு அற்றவர்களாய் இருப்பதையும் சுட்டிக்காட்டினார். ‘சிலோன் நேஷன்’ பத்திரிகையில் 1921 ஆம் ஆண்டு அவர் பின்வருமாறு எழுதினார்.

“நாம் வறியதொரு இனம். பணம் படைத்த சிங்களவர் சிலரே. அவர்கள் அறிவிலிகளாய் உள்ளனர். ஒரு தேசப்பற்றாளனின் கடமை தனது மக்களின் மகிழ்ச்சிக்காக உழைப்பது தான் என்பதை உணரும் அளவிற்கு அவர்களுக்கு அறிவு இல்லை. நியமனம் செய்யப்பட்ட இலங்கைப் பிரதிநிதிகள் ஆட்சியாளர் பக்கம் சாய்ந்து விடுகின்றனர். இந்நாட்டின் நிரந்தரக் குடிகளின் நலன்கள் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி ஒருவரின் பொறுப்பில் உள்ளது (மேலது: 534-35).”

“நாட்டில் தொழில்நுட்பக் கல்லூரிகள் எவையும் இல்லை; கைத்தொழில் சாலைகளும் இல்லை; பொறியியல் கல்லூரியும் இல்லை; புடவைக் கைத்தொழில் பற்றிக் கற்பிக்கும் நெசவுத் தொழில் கல்லூரிகளும் இல்லை” என்று 1909 ஆம் ஆண்டில் தர்மபால எழுதினார் (மேலது: 532). நவீனமயமாகிக் கொண்டிருக்கும் முதலாளி வர்க்கப் பிரிவினரின் குரலை இக்கூற்றில் கேட்க முடிகிறது. இலங்கையின் பொருளாதார முறைமையை அடிக்கடி கடுமையாக விமர்சித்தும் எழுதி வந்தார். இந்நாடு இறக்குமதியில் தங்கியிருப்பதையும் காலனியச் சுரண்டல் என்னும் யதார்த்த நிலையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

“பிரித்தானியப் பெருந்தோட்டச் சொந்தக்காரர்கள், 900,000 ஏக்கர் தேயிலை, றப்பர் தோட்டங்களைத் தமது உடைமையாக வைத்திருக்கிறார்கள். இவற்றில் இருந்து கிடைக்கும் லாபத்தை அவர்கள் இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்கிறார்கள். இலங்கையரின் பிரதான உணவாகிய அரிசி இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. குண்டூசி, தையல் ஊசி, மை, காகிதம், கண்ணாடிப் பொருட்கள், மட்பாண்டம், இரும்புப் பொருள், உடைகள், சப்பாத்து, தொப்பி, யந்திரங்கள், துணி வகை, குடை, தளபாடம் போன்ற யாவும் வெளிநாட்டில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன (மேலது: 535).”

‘இலங்கையின் இளைஞர்களுக்கு’ என்ற தலைப்பில் ஒரு விண்ணப்பத்தை 1922 ஆம் ஆண்டில் தர்மபால வெளியிட்டார். ‘எங்கள் நாட்டுப் பணக்கார நில உடைமையாளர்கள், காரீயச்சுரங்க முதலாளிகள், றப்பர், தென்னந்தோட்ட உடைமையாளர்கள் ஒப்பீட்டளவில் சிறிய தொகையினரேயாயினும் எழுச்சி பெறும் புதிய தலைமுறையை உயர்த்திவிடுவதற்கு எவ்வளவோ செய்யலாம்’ என்ற நம்பிக்கையை இவ்விண்ணப்பத்தில் தெரிவித்தார். சமயம், நாட்டுப்பற்று ஆகிய

‘இலங்கையின் இளைஞர்களுக்கு’ என்ற தலைப்பில் ஒரு விண்ணப்பத்தை 1922 ஆம் ஆண்டில் தர்மபால வெளியிட்டார். ‘எங்கள் நாட்டுப் பணக்கார நில உடைமையாளர்கள், காரீயச்சுரங்க முதலாளிகள், றப்பர், தென்னந்தோட்ட உடைமையாளர்கள் ஒப்பீட்டளவில் சிறிய தொகையினரேயாயினும் எழுச்சி பெறும் புதிய தலைமுறையை உயர்த்திவிடுவதற்கு எவ்வளவோ செய்யலாம்’ என்ற நம்பிக்கையை இவ்விண்ணப்பத்தில் தெரிவித்தார். சமயம், நாட்டுப்பற்று ஆகிய உணர்வுகளை வெளிப்படுத்தும் வார்த்தைகளைக் கொண்ட இவ்விண்ணப்பம், இந்தியா, அயர்லாந்து, சீனா ஆகிய நாடுகளின் தேசிய இயக்கங்களின் பாதையைப் பின்பற்றும்படி இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தது.

உணர்வுகளை வெளிப்படுத்தும் வார்த்தைகளைக் கொண்ட இவ்விண்ணப்பம், இந்தியா, அயர்லாந்து, சீனா ஆகிய நாடுகளின் தேசிய இயக்கங்களின் பாதையைப் பின்பற்றும்படி இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தது. தன்னம்பிக்கையையும், சுதந்திர உணர்வையும் வளர்த்துக்கொள்ளும் படியும் பிரித்தானியா, யப்பான், அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப முன்னேற்றங்களை கற்றுக்கொள்ளும் படியும் இளைஞர்களுக்கு இவ்விண்ணப்பம் அழைப்பு விடுத்தது.

“நாங்கள் சுயகால்களில் நிற்கப் பழகிக்கொள்ள வேண்டும். அந்நியர்களில் தங்கியிருக்கக்கூடாது. எங்கள் நாட்டுத் தொழில்களை மீளக்கட்டியெழுப்பி நமது மக்களுக்குத் தொழில் வாய்ப்புகளை வழங்க வேண்டும். அதற்குப் பதிலாக தூரதேசங்களான ஆஸ்திரியாவுக்கும், பெல்ஜியத்திற்கும் கைத்தொழில் பொருள் வழங்கலுக்காகப் பணத்தை அனுப்புவது முறையற்றது. தேசப்பற்றால் எழும் சுதந்திர உணர்வை நாம் இழந்துவிட்டோம். நாம் பிறரிடம் கையேந்தும் நிலையில் உள்ளோம் (மேலது: 511-12).”

தர்மபாலவின் கூற்றில் தொடக்கநிலைத் தேசியவாதத்தைக் காண்கிறோம். ஆயினும் இத் தேசியவாதம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அரசியல் எதிர்ப்பைக் கொண்டிருக்கவில்லை. இந்தியாவைப் போன்று சுயாட்சிக் கோரிக்கையை முன்வைக்கும் தேசிய வாதம் அன்று. இலங்கையின் முதலாளிகளுள்

தீவிரவாதப் பிரிவினர் தமது தேசப்பற்றினைச் சமய, பண்பாட்டு வடிவங்களில் வெளிப்படுத்தினர். குறிப்பாக பௌத்த மறுமலர்ச்சி, சிங்கள அடையாளத்துவம் என்பனவற்றை இத் தேசியவாதம் அழுத்தியது. இவ்வியக்கத்தின் தலைவர்கள் 20 ஆம் நூற்றாண்டில் எழுந்த எதிர்ப்பியக்கங்கள் பலவற்றிற்குத் தலைமை தாங்கினர். மதுவிலக்கு இயக்கம், தொழிலாளர் வர்க்கப் போராட்டங்கள் என்பனவும் இவ்வெதிர்ப்பியக்கங்களில் அடங்குவன (ஜயவர்த்தன, 1972).

இலங்கையில் முன்னோக்கிய பார்வையுள்ள 'தேசிய முதலாளித்துவ வகுப்பு' தோன்றவில்லையாயினும், பௌத்த சமூகத்தினரின் வர்த்தகர்களில் பலர் அரசியல் விழிப்புணர்வு பெற்றிருந்தனர். இவர்களிடம் தேசிய முதலாளித்துவத்தின் வகிபங்கைப் பெறும் உள்ளாற்றல் இருந்துள்ளது. இருப்பினும் இது வளர்ச்சி பெறவில்லை. ஒரு பக்கத்தில் பிரித்தானிய முதலாளித்துவம், சுதேசிய முதலாளிகளுக்கு வர்த்தகத்திற்கான கடன் வசதிகளை மறுத்தும் வேறுவகைகளிலும் நெருக்குதலைக் கொடுத்தது. இன்னொரு புறத்தில் இந்திய வர்த்தக மூலதனம், ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு சுதேச முதலாளிகளின் முன்னேற்றத்தைத் தடுத்துக்கொண்டிருந்தது. இதனால் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளில் சுதேச முதலாளிகள் முன்னேறுவதற்குத் தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிறுபான்மையினத்தவர்களுடனான சிங்களவர்களின் மனப்பாங்கிலும், நடத்தையிலும் குரோத உணர்வு வெளிப்பட்டதற்குரிய காரணம் இதுவேயாகும் என்பதில் சந்தேகமில்லை. சிங்கள பௌத்தர்களிடம் 'இம்மண்ணின் மைந்தர்கள்' என்ற நோக்கிலான பௌத்த சிங்கள உணர்வுநிலை தீவிரமாக வெளிப்படலாயிற்று. 1880களில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான கலகத்துடன் இக்குரோத உணர்வு வெளிப்படலாயிற்று. 19 ஆம் நூற்றாண்டின் முடிவில் இவ்வுணர்வு 'சிங்களவர் அல்லாத வர்த்தகர்கள்' மீது திரும்பியது. குறிப்பாக இந்தியர்கள் மீதும், உள்ளூர் முஸ்லிம்கள் மீதும் இக்குரோத உணர்வு வளர்ச்சி பெற்றது. 1915 இல் சிங்கள பௌத்த வர்த்தக முதலாளிகள், குட்டி முதலாளிகள் பிரிவினரால் தூண்டப்பட்ட இந்த உணர்வு பௌத்தர் - முஸ்லிம்கள் கலவரமாக வெடித்தது (ஜயவர்த்தன, 1972 மற்றும் 1985).

சிங்கள பௌத்த முதலாளித்துவப் பிரிவினரிடையே வளர்ச்சி பெற்ற பண்பாட்டுத் தேசியவாதம் 1915 கலவரத்தின் போது காலனிய அரசின் அடக்குமுறையின் மூலம் கட்டுப்படுத்தப்படும் நிலை தோன்றியது. அக்காலத்தில் சிங்கள முதலாளிகள் இன்னல்களுக்கு உள்ளாகினர். இவ்வகுப்பின் முக்கியமான பௌத்தத் தலைவர்கள் பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். இத்தகையவர்களையே எஸ்.சி. ஒபயசேகரா 'அநாமதேயங்கள்' என்றும், முஸ்லிம்களுக்கு எதிராகச் சிங்களவர்களைத் தூண்டிவிட்டு தாம் 'அறியப்பட்டோராக' மாறுவதற்கு சூழ்ச்சி செய்கிறார்களென்றும் குறிப்பிட்டார். சிறை சென்ற சிங்களத் தலைவர்களில் ஆர்தர் டயஸ், ஹரி டயஸ், றிச்சார்ட் சல்காடோ, டாக்டர் டபிள்யூ.ஏ.டி. சில்வா ஆகியோர் சாராய வர்த்தகத்துடன் தொடர்புடைய கராவ சாதிக் குடும்பங்களைச் சேர்ந்தோராவர். டி.சி சேனநாயக்க, டி.எஸ். சேனநாயக்க, எப்.ஆர். சேனநாயக்க என்ற மூன்று சகோதரர்களும் சிறை சென்றனர். நிலம், காரீயச் சுரங்கங்கள், சாராயக் குத்தகை என்பனவற்றில் இம்மூவரதும் தந்தையார் கட்டியெழுப்பிய பொருளாதாரத்தளத்தில் இவர்கள் நிமிர்ந்து நின்றனர். இன்னொரு தலைவரான டி.பி. ஜயதிலகவின் தந்தையாரும் கூலிகளை ஒப்பந்தத்திற்கு வழங்கும் வியாபாரத்தில் ஈடுபட்டார். இவ்விதமாகச் சிறை சென்ற தலைவர்கள் சுதேச முதலாளித்துவ நலன்களுடன் தொடர்புபட்டவர்களாய் இருந்தனர். இக்காலத்தில் அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு உள்ளான வேறு சிலரும் இருந்தனர். இவர்களுள் ஏ.ஈ. குணசிங்க என்ற தீவிரவாதக் கிளர்ச்சியாளரும், அநகாரிக தர்மபாலவும் அடங்குவர். அநகாரிக தர்மபாலவிற்கு 1920 வரை நாடு திரும்புவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. வர்த்தகத்துறையில் முன்னணியில் திகழ்ந்த சிங்களக் குடும்பங்களான பெர்னாண்டோ, விஜயசேகர, பெட்ரிஸ், ஹேவவித்தாரண, மிராண்டோ ஆகியவற்றைச் சேர்ந்தோர் சிலர் கொலையுண்டனர். வேறு சிலர் சிறைவாசத்தின் போது மரணத்தைத் தழுவினர்.

சிங்கள - பௌத்த இயக்கத்தின் கருத்தியலை எடுத்துக்கூறியவர்கள், சிங்களவர்கள் 'ஆரிய இனத்தவர்' என்ற பொய்ப் புனைவையும் பரப்பினர். சிங்களவர்களே இந்த நாட்டின் உண்மையான ஆதிக்குடிகள் என்றும், சிறுபான்மையினர் யாவரும் 'அந்நியர்கள்' என்றும் இவர்கள் வாதிட்டனர். சிங்கள - பௌத்த இயக்கத்தின் இக்கருத்தியலின் விளைவாக சிறும்பான்மை மக்களிடம் சமய உணர்வும், இனத்துவ அடையாள உணர்வும் உருவாகத் தொடங்கியது. 19 ஆம் நூற்றாண்டின் பொருளாதார மாற்றங்கள் சிறுபான்மையினரிடம் இவ்வுணர்வுகள் வளர்வதற்கான அடித்தளத்தை இட்டிருந்தது. சிறுபான்மையினர் தமது இனத்துவ அடையாளத்தை வலியுறுத்தத் தொடங்கியதும், இலங்கையின் அரசியலிலும் சமூகத்திலும் அடிப்படையான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.



சி. அ. யோதிலிங்கம்

சி. அ. யோதிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தையும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டமாணிப் பட்டத்தினையும் பெற்றவராவார். 'இலங்கையின் அரசியல் யாப்புகள்', 'இலங்கையின் இனகுழும அரசியல்', 'சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள்', 'இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்', 'இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு', 'அரசறிவியல் ஓர் அறிமுகம்', 'ஒப்பியல் அரசாங்கம்' போன்ற பல நூல்களை எழுதியுள்ள யோதிலிங்கம் பல ஆய்வுக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவருகின்றார்.

# 1949 – 1968: ஈழத்தமிழரின் தேசிய அரசியல் உருமாற்றமும் எதிர்ப்புப் போராட்டங்களும்

## பகுதி 4

1833 முதல் 1921 வரை நீடித்த ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் முதலாவது காலகட்டத்தில், தமிழர்கள் அரசியல்ரீதியில் 'இலங்கையர்' என்றும், பண்பாட்டுரீதியில் 'தமிழர்' என்றும் அடையாளம் கொண்டிருந்தனர். 1921 ஆகஸ்ட் 15 அன்று சேர்.பொன். அருணாசலம் தேசிய காங்கிரஸில் இருந்து விலகி தமிழர் மகாசபையைத் தொடங்கியதுடன், இரண்டாவது காலகட்டம் ஆரம்பமானது. இது 1949 டிசம்பரில் தந்தை செல்வா அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் தொடங்கும் வரை நீடித்தது. 1949 முதல் 1968 வரை நீடித்த மூன்றாவது காலகட்டத்தில், வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் என வரையறுக்கப்பட்டு, சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1968 இல் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்துடன் தொடங்கி, 2009 இல் ஆயுதப்போர் முடிவடையும் வரை நீடித்த நான்காவது காலகட்டத்தில், தனிநாட்டுக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. 'ஈழத்தமிழர் அரசியல் வரலாறு' எனும் இத்தொடர், இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த முக்கிய நகர்வுகளைத் தொகுத்து வழங்குகிறது; அதன்மூலம், இன்னும் முழுமையடையாத ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றுக்கு ஓர் அடித்தளம் அமைக்க முயற்சிக்கின்றது

### தமிழரசுக்கட்சி தடை செய்யப்படுதலும் அதன் தலைவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்படலும்

தமிழரசுக்கட்சி தடை செய்யப்பட்டதுடன் கே.எம்.பி. ராஜரட்னாவின் இயக்கமும் தடை செய்யப்பட்டது. தமிழரசுக் கட்சியின் பிரசார ஏடான 'சுதந்திரன்' பத்திரிகையும் தடை செய்யப்பட்டது. 1958 யூன் 05 ஆம் திகதி கட்சியின் தலைவர்களும் மத்திய குழு உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டனர். பெரும்பாலானோர் வீட்டுக்காவலில் வைக்கப்பட, அமிர்தலிங்கம், வன்னியசிங்கம், இராசவரோதயம், செ. இராசதுரை, வி.என். நவரத்தினம், வி. நவரத்தினம், செனட்டர் நடராசா என்போர் கொழும்பில் ஒரு வீட்டில் காவலில் வைக்கப்பட்டனர். மூன்று மாதங்களின் பின்னர் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் சுதந்திரன் பத்திரிகைக்கான தடை நீங்க மேலும் பல மாதங்கள் சென்றன. தடை நீங்கிய பின் செயற்குழுக் கூட்டம் 02.11.1958 இல் நடைபெற்றது. இதில், தொடர்ச்சியாக சாத்வீக வழியில் போராடுதல் என முடிவெடுக்கப்பட்டதுடன் தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### தீண்டாமை ஒழிப்புப் போராட்டம்

யாழ் நகரத்திலுள்ள தேனீர்க் கடைகளில் சாதி அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படுவதை ஒழிக்கும் பொருட்டு யாழ் நகரத் தேநீர்ச் சாலை உரிமையாளர்களின் மாநாடொன்றை நடாத்துவதென்றும், 24.11.58 தொடக்கம் ஒரு வாரம் தீண்டாமை ஒழிப்பு வாரமாக அனுஷ்டிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அ. அமிர்தலிங்கம், கு. வன்னியசிங்கம், சு. நடராசா என்போர் இவ்வேலைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டனர். வன்னியசிங்கத்தின் அழைப்பின் பேரில் கூட்டப்பட்ட தேநீர்ச்சாலை உரிமையாளர்களின் மாநாட்டில் யாழ் நகர உணவு விடுதிகளில் சாதி பேதம் பார்க்கப்படுவதில்லை என ஏகமானதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பிரசாரம், சமபந்திப் போசனம் என்பனவும் மேற்கொள்ளப்பட்டது.

### மலைநாட்டுக் குழந்தைகளின் கல்வி

உயர்கல்விக்கு வசதியற்ற மலைநாட்டுத் தமிழ்ப் பிள்ளைகள் 25 பேருக்கு உபகாரச் சம்பளம் பெற்றுக்கொடுக்கப்பட்டு, யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரிகளில் சேர்க்கப்பட்டனர். விடுதி வசதி, இலவசப் புத்தகங்கள் என்பன அவர்களுக்கு வழங்கப்பட்டன. இப்பணிகளில் கட்சியின் சார்பில் கு. வன்னியசிங்கம் ஈடுபட்டார். 1959 செப்டெம்பர் 17 இல் கு. வன்னியசிங்கம் மரணமடைந்தார். இதே மாதம் பண்டாரநாயக்காவும் சுட்டுக்கொல்லப்பட்டார். ஆளும் கட்சிக்குள் ஏற்பட்ட குழப்ப நிலையால் பொதுத் தேர்தல் ஏற்படும் சூழ்நிலையும் உருவாகியது.

### 1960 மார்ச் தேர்தலும் சிம்மாசனப் பிரசங்கத்தில் அரசாங்கம் தோற்கடிக்கப்படலும்

1959 புதிய தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 101 இலிருந்து 157 ஆக அதிகரிக்கப்பட்டது. இதன் கீழ் 1960 மார்ச் இல் தேர்தல் நடைபெற்றது. அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு - கிழக்கில் 19 தொகுதிகளில் போட்டியிட்டு 176, 492 வாக்குகளைப் பெற்று 15 தொகுதிகளில் வெற்றியீட்டியது.

இதைவிட கட்சியின் ஆதரவினைப் பெற்ற இரு சுயேட்சை வேட்பாளர்கள் நிந்தவூர், பொத்துவில் தொகுதிகளில் வெற்றி பெற்றனர். ஐக்கிய தேசிய கட்சியும் 50 இடங்களையும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி 46 இடங்களையும் கைப்பற்றியது. டட்லி ஆட்சியை அமைத்ததும் பாராளுமன்றத்தில் ஆதரவை நாடினார். தமிழரசுக்கட்சி இரு பெரும் கட்சிகளிடமும் நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தது. அவையாவன:

1. பண்டா - செல்வா உடன்படிக்கையில் கூறப்பட்டதன் பிரகாரம் பிரதேச சபைகள் நிறுவப்படல் வேண்டும். அதற்கிடையில் தமிழ்ப்பிரதேசத்தில் அத்துமீறிய குடியேற்றம் நிறுத்தப்படல் வேண்டும்.

2. பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகள் யாவும் தமிழ்மொழிக்குச் சட்டபூர்வமாக வழங்கப்பட வேண்டும்.

3. இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தில் குறிப்பிட்ட திகதி என்பது நீக்கப்பட்டு இரண்டு தலைமுறைக்கு இந்நாட்டில் பிறந்தோர் அனைவருக்கும் குடியுரிமை வழங்குவதன் மூலம் 'நாடற்ற தமிழர்' என்ற நிலை நாளடைவில் மாற வேண்டும்.

4. குடியுரிமைப் பிரச்சினை தீரும் வரை 06 நியமனப் பிரதிநிதிகளில் 04 பேர் மலைநாட்டுத் தமிழ்மக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனமான இலங்கை ஜனநாயக காங்கிரசினால் நியமிக்கப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

இதையொட்டிய விபரங்கள் ஆளும் கட்சிக்கும் தமிழரசுக்கட்சிக்கும் இடையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படல் வேண்டும். அத்துடன் ஏற்றுக்கொண்ட விடயங்கள் சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம்பெற

வேண்டும் எனக் கூறப்பட்டது.
இக்கோரிக்கைகளை எழுத்தில் பெற்ற டட்லி அதனை நிராகரித்தார். அதேவேளை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட சீ.பி.டி. சில்வா, ஏ.பி. ஜெயசூரிய, மைத்திரிபால சேனநாயக்க, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க என்போர், கோரிக்கைகள் பண்டாரநாயக்காவின் கொள்கைகளுக்கு ஏற்ப இருப்பதால் அதனைத் தாம் ஏற்பதாகக் கூறினர். சிறீலங்கா சுதந்திரக் கட்சி உடனான உடன்பாட்டின்படி 1960 ஏப்ரல் 22 ஆம் திகதி சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்பில் தமிழரசுக்கட்சி எதிர்த்து வாக்களித்தமையினால் அரசாங்கம் பதவி விலகியது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியானது லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து அரசாங்கத்தை அமைக்க முற்பட்ட போது தமிழரசுக்கட்சியும் அதற்கு ஆதரவை வழங்கியது.

இது தொடர்பான கடிதம் செல்வநாயகம், என்.எம். பெரேரா, எஸ்.ஏ. விக்கிரமசிங்க, சி.பி.டி. சில்வா என்போர் சார்பில் கையொப்பமிட்டு மகாதேசாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் மகாதேசாதிபதி இதனைக் கருத்திற் கொள்ளாமல் மரபை மீறி பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு ஏற்பாடு செய்தார்.

### 1960 யூலை தேர்தலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வாக்குறுதிகளை மீறுதலும்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையினை சிறிமாவோ பண்டாரநாயக்கா ஏற்றார். இருப்பினும் 1960 யூலை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தமிழர்கள் தம்மைத் தோற்கடித்தார்கள் என இனவாதப் பிரசாரத்தினை மேற்கொண்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஸ்ரீலங்கா சமஷ்டிக் கட்சி எனக் கேலி செய்தது. எனினும் ஐக்கிய தேசியக் கட்சி 30 ஆசனங்களை மட்டும் பெற்றுத் தோல்வியடைந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 75 ஆசனங்களைப் பெற்று தனியாக ஆட்சி பெறக்கூடிய நிலையை எய்தியது. தமிழரசுக் கட்சி 21 தொகுதிகளில் போட்டியிட்டு 218, 753 வாக்குகளைப் பெற்று 16 இடங்களைக் கைப்பற்றியது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியை அமைத்துக்கொண்டு தமிழரசுக் கட்சியுடனான உடன்பாட்டை நிறைவேற்றப்போவதாகக் காட்டிக்கொண்டது.

1957 ஆம் ஆண்டு தனிச் சிங்களத்தில் வாசிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிம்மாசனப்



அமிர்தலிங்கமும் மங்கையற்கரசியும்
Image Source - www.ceylonmirror.net

பிரசங்கத்தை பகிஷ்கரித்து வந்த தமிழரசுக்கட்சி இத்தடவை தமிழ் மொழிபெயர்ப்பும் உடன் வாசிக்கப்பட்டதால் பிரசங்கத்தில் கலந்துகொண்டது. எனினும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாது நடுநிலை வகித்தது. தொண்டமான் நியமனப் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டார். உடன்பட்ட விடயங்களை அமுல்படுத்துவது பற்றி பிரதமர் தலைமையில் அமைச்சர் குழுவுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையே அலரி மாளிகையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே எவ்வித முன்னறிவிப்புமின்றி சிங்களத்தை நாடு முழுவதும் நீதிமன்ற மொழியாக்கும் சட்டத்தை நீதியமைச்சர் சாம்.பி.சி. பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இதனால் அரசிற்கும் தமிழரசுக் கட்சியிற்கும் இடையிலான உறவு சிதைவடைந்தது. சட்டமூலத்திற்கு தமிழரசுக்கட்சி பலமான எதிர்ப்பைத் தெரிவித்த போதும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதே சமயம் தமிழ்மொழி உபயோகச் சட்டத்தின் கீழ் மிகக்குறைந்த உரிமைகள் வழங்கும் சட்டத்தையும் நீதிமந்திரி சமர்ப்பித்தார். இருப்பினும் தமிழரசுக்கட்சியின் எதிர்ப்பினால் அது கைவிடப்பட்டது. இரண்டாவது தடவையும் சிங்களத் தலைமைகள் வாக்குறுதிகளை கைவிட்டமையால் தமிழரசுக்கட்சி போராட்டத்திற்குத் தயாராகியது. 1961 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் வடக்கு - கிழக்கு உட்பட நாடு முழுவதும் தனிச் சிங்களச்சட்டம் பூரணமாக அமுல்படுத்தப்படும் என அரசு அறிவித்தது. இதனால் சிங்கள உத்தியோகத்தர்களும் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். தமிழரசுக்கட்சி நடாத்த இருந்த போராட்டத்தின் முதற்படியாக செல்வநாயகம்

தலைமையில் மக்கள் ஊர்வலமாக யாழ் கச்சேரிக்குச் சென்று தமிழில் நிர்வாகம் நடாத்தப்படல் வேண்டும் என்று மனுச் சமர்ப்பித்தனர்.

## தமிழரசுக்கட்சியின் ஏழாவது மாநில மாநாடு (1961 ஜனவரி, யாழ்ப்பாணம்)

1961 ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வன்னியசிங்கம் அரங்கில் மாநாடு நடைபெற்றது. பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்த சி. மு. இராசமாணிக்கம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து நேரடி நடவடிக்கைகளில் இறங்குவது என்றும், பெப்ரவரி 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் போராட்டத்தை ஆரம்பிப்பது என்றும், தொடர்ந்து மற்றைய மாவட்டங்களுக்கு விஸ்தரிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## சத்தியாக்கிரகப் போராட்டம் (1961)

சத்தியாக்கிரகத்தை ஒரு நாளைக்கு ஒரு தொகுதியின் மக்களினால் அத்தொகுதி உறுப்பினர் தலைமையில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது (பொலிசார் கைது செய்யலாம் எனக் கருதியே இவ்வாறு ஒழுங்கு செய்யப்பட்டது). 1961 பெப்ரவரி 20 ஆம் திகதி செல்வநாயகம் தலைமையில் காங்கேசன்துறை தொகுதி மக்கள் சத்தியாக்கிரகத்தில் பங்குபற்றினர். ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களும் வெளியில் உதவிக்கு நின்றனர். முதலாம் நாள் திட்டமிட்டபடி யாழ் அரசாங்கச் செயலக வாசலில் எவரும் உள்ளே செல்லவிடாது தடுத்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். பொலிஸார் பிரதான வாயில் ஊடாக அலுவலர்கள் உள்ளே செல்வதற்கு பாதை அமைக்க முற்பட்ட போது எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களும், மக்களும் அவ்விடத்துக்குச் சென்று பாதைக்குக் குறுக்கே படுத்துக்கொண்டனர். பொலிஸார் பலாத்காரமாக சத்தியாக்கிரகிகளை தூக்கி அப்புறப்படுத்த முற்பட்டு மிருகத்தனமாகத் தூக்கி வீசினர். இதனைப் பார்த்துக்கொண்டு வெளியில் நின்ற மக்களும் நூற்றுக்கணக்கில் சத்தியாக்கிரகிகளோடு சேர்ந்தமையினால் பொலிஸாரின் முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

அன்று பகல் 11 மணிக்கு மேல் நீதிமன்றத் திறப்புவிழா இடம்பெற்றது. அதற்குரிய ஆணையை அரசாங்கத்தின் சார்பில் அரசாங்க அதிபர் நீதியரசரிடம் கொடுப்பதற்குச் செல்ல வேண்டியிருந்தது. இதனால் அரசாங்க அதிபரின் வாசஸ்தலம் அமைந்திருந்த பழைய பூங்கா வாயிலிலும் சத்தியாக்கிரகவாசிகளினால் மறியல் போராட்டம் செய்யப்பட்டது. குண்டாந்தடிகளினால் சத்தியாக்கிரகிகளைத் தாக்கி அவர்களுக்கு ஊடாக அரசாங்க அதிபரின் வண்டியைக் கொண்டு செல்ல பொலிஸார் முற்பட்டனர். ஈ.எம்.வி. நாகநாதன் உட்பட பல சத்தியாக்கிரகிகள் காயங்களுக்கு உட்பட்டனர். 2 ஆம் நாள் சத்தியாக்கிரகம் வட்டுக்கோட்டைத் தொகுதி மக்களால் அ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

முதலாம் நாள் பொலிஸாரின் அட்டூழியத்திற்குப் பலத்த கண்டனம் ஏற்பட்டதால் அவர்களின் அட்டூழியம் சற்றுக் குறைவடைந்தது. எனினும் அரச ஊழியர்களை சத்தியாக்கிரகிகளுக்கூடாக அழைத்துச் செல்ல முற்பட்டனர். இதற்கு அரச ஊழியர்களும் மறுப்புத் தெரிவித்தனர்.

3 ஆம் நாள் வி.ஏ. கந்தையா தலைமையில் ஊர்காவற்துறை மக்களும், 4 ஆவது நாள் என். நவரத்தினம் தலைமையில் சாவகச்சேரி மக்களும் கலந்துகொண்டனர். இவ்வாறு தொடர்ந்து 50 நாட்கள் நடைபெற்றமையினால் யாழ் மாவட்ட அரச நிர்வாகம் முழுமையாக ஸ்தம்பிதமடைந்தது.

### 1961 பெப்ரவரி 27 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சத்தியாக்கிரகம் விஸ்தரிக்கப்படல்

1961 பெப்ரவரி 27 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டமெங்கும் யாழ்ப்பாணத் தாக்குதலுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் முகமாக ஹர்த்தால் நடைபெற்றது. 1961 பெப்ரவரி 28 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட அரசாங்கச் செயலகத்தின் முன்னாலும் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டது. 1961 மார்ச் 4 ஆம் திகதி திருகோணமலையில் அரசாங்கச் செயலகத்தின் முன்னால் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டது. பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் 10 பேர் காயமடைந்ததுடன் மூதூரின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் ஏகாம்பரம் உட்பட 3 பேர் படுகாயமடைந்தனர். மார்ச் 22 ஆம் திகதி படுகாயமுற்ற ஏகாம்பரம் மரணமடைந்தார். தொடர்ந்து மன்னார், வவுனியா அரசாங்கச் செயலகங்களுக்கு முன்னாலும் சத்தியாக்கிரகம் விஸ்தரிக்கப்பட்டது.

"இரண்டு மாகாணங்களிலும் அரசாங்கமே இல்லை" என பிரதமர் செனற் சபையில் கூறினார். சத்தியாக்கிரகத்தை நிறுத்துவது தொடர்பாக அரசு பேச்சுவார்த்தைக்குத் தயாராகியது. அரசின் சார்பில் நீதி அமைச்சர் பி.எல். பெர்ணான்டோ பங்குபற்றினார். மு. திருச்செல்வத்தின் கொழும்பு இல்லத்தில் 1961 ஏப்ரல் 05 ஆம் திகதி இரவு பேச்சுவார்த்தை நடைபெற்றது. மொழியுரிமை தொடர்பாக மிகக்குறைந்த கோரிக்கைகளில் கூட உடன்பாடு

ஏற்படாததால் போராட்டத்தைத் தொடருவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

### தமிழ் அரசு தபால் சேவை

போராட்டத்தின் தீவிரத்தினால் அரசாங்கம் பங்கீட்டு உணவு வழங்காது மக்களைப் பணியவைக்க முற்பட்டது. இதனால் போராட்டத்தை வேறு துறைகளிலும் விரிவாக்கும் நோக்கத்துடன், அரச தபால் சேவை சட்டத்தை மீறி, தமிழரசு தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது. 1961 ஏப்ரல் 14 ஆம் திகதி பகல் 12 மணிக்கு செல்வநாயகம் இதனை ஆரம்பித்து வைத்தார். 10,000 பேர் வரிசையில் நின்று தமிழரசு தபால் தலைகளைப் பெற்றுக்கொண்டனர். தமிழரசு தபால் சேவையின் தபால் மா அதிபராக செனட்டர் நடராசா நியமிக்கப்பட்டார். தமிழரசு தபால் பெட்டிகள் பல இடங்களிலும் வைக்கப்பட்டது.

### அவசரகால, ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படலும், இராணுவம் தாக்குதல்களை மேற்கொள்ளுதலும்

1961 ஏப்ரல் 17 ஆம் திகதி 12 மணிக்கு அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட அதேவேளை 48 மணிநேர ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டது. கச்சேரியின் முன் அமைதியாக இருந்த சத்தியாக்கிரகிகள் இராணுவத்தினால் தாக்கப்பட்டனர். பழனியப்பன் என்ற இளைஞரினது தொடை துளைக்கப்பட, அவர் மயக்க நிலையை எய்தினார். பெண் சத்தியாக்கிரகிகள் இராணுவத்தினால் வலுக்கட்டாயமாக ஏற்றப்பட்டு பல மைல்களுக்கு அப்பால் தனிமையான இடத்தில் விடப்பட்டனர். தலைவர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸ் - இராணுவ முகாம்களுக்கும் கொண்டு செல்லப்பட்டனர். வடக்கு - கிழக்கு இராணுவ ஆட்சியின் கீழ் விடப்பட்டது. திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் உட்பட தலைவர்களும் பிரதான தொண்டர்களுமாக 74 பேர் விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டு பனாகொடை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர். தமிழரசுக்கட்சி, சுதந்திரன் பத்திரிகை என்பன தடை செய்யப்பட்டதோடு சுதந்திரன் அலுவலகத்திற்கு சீல் வைக்கப்பட்டது. பத்திரிகைத் தணிக்கை அமுலுக்கு வந்தது.

### இரகசிய ஏடுகள் பிரசுரமாதல்

'சத்தியாக்கிரக' என்ற ஆங்கில ஏடு மாதம் இருமுறை தட்டச்சில் வெளியாகியது. 'தமிழன் கண்ணீர்' என்ற தமிழ் ஏடும் வெளியாகியது. கோவில் பிரார்த்தனைகளை கட்சி ஒழுங்கு செய்தலும், எஞ்சியிருந்த தலைவர்கள் அதில் பேசுதலும் (கூட்டம் நடாத்துவது தடை செய்யப்பட்டிருந்தமையால்) இடம்பெற்றது.

### சத்தியாக்கிரகிகள் தாக்குதல் தொடர்பில் மலையகத்தில் எழுச்சி

சத்தியாக்கிரகம் நடைபெற்ற போது தொண்டமான் நேரடியாகச் சென்று உற்சாகப்படுத்தினார். வவுனியா, மன்னார் பகுதிகளில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள் நேரடியாகவே பங்குபற்றினர். வவுனியா இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதி நடேசபிள்ளையும் தலைவர்களுடன் கைது செய்யப்பட்டார். சத்தியாக்கிரகம் நசுக்கப்பட்டதற்கு முதல் நாள், 1961 ஏப்ரல் 24 ஆம் திகதி தோட்டத்தொழிலை அத்தியாவசிய சேவையாக்கும் சட்டவிதிகளை அரசாங்கம் பிரகடனம் செய்தது. எனினும் 1961 ஏப்ரல் 25 ஆம் திகதி 5 லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். அன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தமிழரசுக் கட்சியின் நான்கு அம்சக் கோரிக்கைகளை அரசுக்குச் சமர்ப்பித்தது. இதேவேளை தோட்டப்பகுதிக்கும் இராணுவம் அனுப்பப்பட்டது. 1961 ஐப்பசியில் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். கட்சியின் தடை நீங்க மேலும் சில மாதங்கள் சென்றன.

### மீண்டும் சிங்கள 'ஸ்ரீ' பஸ்வண்டி

1958 ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து ஸ்ரீ பொறித்த பஸ் வண்டிகள் தமிழ்ப் பிரதேசத்தில் ஓடவிடப்படவில்லை. ஆனாலும் 1961 ஐப்பசியில் சிங்கள ஸ்ரீ பொறித்த பஸ் வண்டிகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டது. பஸ்வண்டி வந்து சேர்ந்த மறுநாளே இளைஞர்கள் சிலர் பஸ் நிலையத்திற்குள் நுழைந்து காவலாளிகளையும் சுட்டுக்காயப்படுத்தி பஸ் வண்டியையும் தீக்கிரையாக்கினர். அடுத்த நாள் எஞ்சிய ஸ்ரீ பொறித்த பஸ் வண்டிகள் மீளப் பெறப்பட்டன.

### தமிழரசுக் கட்சியின் 8 ஆவது மாநில மாநாடு - மன்னார் (1961 ஓகஸ்ட் 31, செப்டெம்பர் 1, 2)

தமிழரசுக் கட்சியின் 8 ஆவது மாநில மாநாடானது மன்னாரில் 1961 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31 மற்றும் செப்டெம்பர் மாதம் 1, 2 ஆம் திகதிகளில் இடம்பெற்றது. சி.மு. இராசமாணிக்கம் கட்சியின் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். 1963 ஏப்ரல் 17 ஆம் திகதிக்குப் பிந்தாமல் போராட்டத்தை ஆரம்பித்தனர். தோட்டத்தொழிலாளர்களுக்கு என கட்சியின் சார்பில் தொழிற்சங்கம் ஒன்றை அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதன்மூலம் இரண்டு சமூகங்களுக்கிடையேயும் அமைப்பு ரீதியான

ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சித்தனர். இதன்படி ‘இலங்கைத் தொழிலாளர் கழகம்’ ஹட்டனில் 22.12.1962 (சனி) அன்று காலை 10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைவராக அ. தங்கதுரை தெரிவு செய்யப்பட்டார்.

### இந்தியாவின் மீதான சீனாவின் படையெடுப்பில் இந்தியாவுக்கு ஆதரவு

1961 இறுதியில் சீனா இந்தியாவின் மீது படையெடுத்தது. இவ்விடயத்தில் சீனாவைக் கண்டித்து தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு 18.11.1961 இல் தீர்மானம் நிறைவேற்றியது.

### தீர்மானத்தின் விபரம்:

1. சர்வதேசக் கண்ணியத்தையும் கௌரவமான நடத்தையை மீறியும் உலகத்திற்குத் தானும் பிரகடனப்படுத்திய பஞ்சசீலக் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டும் கம்யூனிஸ்ட் சீனா, இந்தியா மீது நடத்தும் ஆக்கிரமிப்பை இலங்கைத் தமிழரசுக்கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும் கம்யூனிஸ்ட் சீன ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஆசியாக்கண்டத்தில் ஜனநாயகம் நிலைபெறவும், தனது நாட்டையும் தேசிய கௌரவத்தையும் காப்பாற்றவும் நடாத்தப்படும் இப்போரில், இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் சார்பில் இந்திய அரசாங்கத்திற்கும், இந்திய மக்களுக்கும் தனது ஆதரவை அளிப்பதுடன் இந்திய மக்களுடன் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கிருக்கும் ஐக்கியத்தையும் காட்ட, கட்சி விரும்புகின்றது.

2. ஏகாதிபத்தியச் சீனாவின் ஆக்கிரமிப்பைக் கண்டித்தும் தனது சுதந்திரத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும் போராடும் இந்தியாவிற்கு ஆதரவு நல்க வேண்டுமென்றும் இலங்கை அரசாங்கத்தை இக்கட்சி கேட்டுக்கொள்கிறது.

3. தனது பாதுகாப்பிற்குப் போதிய ஆட்பலம் இந்தியாவிடம் இருப்பினும், மாண்புமிக்க கொள்கைகளுக்காகவே இந்தியா போரிடுவதால், மனித சுதந்திரத்திற்காக நடத்தப்படும் இப் புனிதப்போரில் ஒரு சிறிதளவேனும் பங்கெடுக்க விரும்புவதனால், இப்போரில் பங்கெடுப்பதற்காக இலங்கைவாழ் தமிழ்பேசும் இளைஞர்களைத் தொண்டர்களாகச் சேரும்படி இக்கட்சி அழைக்கின்றது.



சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தின் போது

Image Source - sirimavobandaranaike.net

### மந்திரிமார் வருகைக்கு மீண்டும் எதிர்ப்பு

தமிழரசுக்கட்சியை மீண்டும் போராட்டத்திற்கு தயார்ப்படுத்தும் வகையில், 24.02.1963 இல் கட்சிச் செயற்குழு மந்திரிகள், அரச பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு - கிழக்கிற்கு வரும்போது, வருகையை எதிர்ப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. அவர்கள் வடக்கு - கிழக்கிற்கு கோலாகல விஜயங்கள் செய்யின் கட்சி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்கும் அமைச்சர் ரி.பி. இலங்கரத்தின வருகைதந்த போது கறுப்புக்கொடி காட்டினர். நூற்றுக்கணக்கில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பருத்தித்துறை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத் திறப்புவிழாவிலும் அணிவகுத்து நின்று கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தினை நடாத்தினர். இவ்வார்ப்பாட்டத்தின் போது ஊர்காவற்துறை பாராளுமன்ற உறுப்பினர் வி.ஏ. கந்தையா உட்பட பல ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டனர். தாக்குதலினால் பாதிக்கப்பட்ட வி.ஏ. கந்தையா 4.06.1963 இல் மரணமடைந்தார். தொடர்ந்து வ. நவரத்தினம் இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

### ‘எல்லாம் தமிழ் இயக்கம்’ உருவாதல்

சிங்களத் திணிப்பை எதிர்ப்பதற்கும், தமிழ் மக்களை அரசுடனான தம் கருமங்களைத் தமிழில் ஆற்றத் தூண்டுவதற்குமாக எல்லாம் தமிழ் இயக்கத்தை 1963 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 8 ஆம் திகதியில் உருவாக்கினர். இதன்படி தமிழ்ப் பிரதேசங்களில்

உள்ள தபால் நிலையங்கள், வேறு அரசாங்க அலுவலகங்கள் ஆகியவற்றின் முன் போராட்டக்காரர்கள் விண்ணப்பங்கள், தந்திகள், முகவரிகள் என்பவற்றை தமிழில் எழுதுமாறு தூண்டினர். தேவையானவர்களுக்கு தாமே எழுதிக்கொடுத்தனர். அரசாங்கம் 1964 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி சத்தியாக்கிரகத்தால் கைவிடப்பட்ட தனிச்சிங்கள சட்டத்தை வடக்கு - கிழக்கில் அமுல்படுத்தப்போவதாக அறிவித்தது. தமிழரசுக் கட்சி முழுச் சக்தியையும் திரட்டி இதனை எதிர்ப்பது என 30.6.1963 இல் கொழும்பில் தீர்மானித்தது. அரசாங்கம் தீர்மானித்தபடியே சிங்கள அரசாங்க ஊழியர்களை வடக்குக்கு அனுப்ப முயற்சி செய்யப்பட்டது. அதேவேளை தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களத்தைத் திணிக்கும் நோக்கில் 2000 சிங்கள ஆசிரியர்களையும் வடக்கு - கிழக்கிற்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சி இதனைப் பகிஷ்கரிப்பது என்றும் இப்போராட்டத்தில் மாணவர்கள், பெற்றோர்களை இணைப்பது என்றும் தீர்மானித்தது. தமிழரசுக் கட்சியின் போராட்ட அச்சத்தினால் சிங்கள ஊழியர்கள், ஆசிரியர்கள் வடக்கு - கிழக்குக்குச் செல்ல மறுத்தனர். இதனையொட்டி, அரசு 01.01.1964 அன்று அறிவித்தமைக்கு எதிரான மாபெரும் கண்டன ஊர்வலங்களை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா என்பவற்றில் நடாத்தியது. அவ்வவ் மாவட்டக் கச்சேரிகளுக்கு முன்னால் தனிச்சிங்களச் சட்டப்பிரதிகளையும் எரித்தது.

## பாதயாத்திரை

சாதி பேதத்தை ஒழிக்கவும் கட்சியின் இலட்சியங்களை மக்கள் முன் பிரசாரம் செய்யவும் என பாதயாத்திரை நடாத்தப்பட்டது. செல்வநாயகம் தலைமையில் காங்கேசன்துறை தொகுதியிலிருந்து பாதயாத்திரை ஆரம்பமானது. பலவாரங்களாக நடைபெற்ற பாதயாத்திரையின் போது தங்கிநிற்கின்ற இடங்களில் தீண்டாமை ஒழிப்பின் அவசியம் பற்றியும், தமிழ் மக்களின் அரசியல் நிலை பற்றியும் கருத்தரங்குகளை நடாத்தினர்.

## அரசு மீண்டும் சமரசப்பேச்சுக்கு வருதல்

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தலைமையில் தொழிற்சங்கங்கள் 21 கோரிக்கைகளை சமர்ப்பித்து பெரிய போராட்டத்துக்கு ஆயத்தங்களைச் செய்தன. இந்நேரம் தமிழரசுக்கட்சியின் ஆதரவை அரசாங்கம் வேண்டி பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் பிரதான அமைப்பான லங்கா சமசமாஜக் கட்சியை தன்னுடன் இணைப்பதில் வெற்றி கண்டது. இதன்பின்னர் தொழிற்சங்கப் போராட்டமும் நின்றுபோனது. தமிழரசுக் கட்சியுடனான பேச்சுவார்த்தையும் நின்றுபோனது.

## தமிழரசுக் கட்சியின் ஒன்பதாவது மாநில மாநாடு

தமிழரசுக் கட்சியின் ஒன்பதாவது மாநில மாநாடு 1964 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 21, 22, 23 ஆம் திகதிகளில் திருகோணமலை இடம்பெற்றது. இம்மாநாட்டில் செல்வநாயகம் கட்சியின் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். இதன்போது தொடர் போராட்டம் தொடர்பாக பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

## சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம்

சிறீமா - சாஸ்திரி ஒப்பந்தம் 1964 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 30 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இலங்கையின் சார்பில் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவும், இந்தியாவின் சார்பில் அப்போதைய இந்தியப் பிரதமர் லாவ்பகதூர் சாஸ்திரியும் கையொப்பமிட்டனர். இலங்கையில் வாழ்ந்த மலையகத் தமிழர்கள் 975,000 பேரில் 525,000 பேரை இந்தியா ஏற்றுக்கொள்வதென்றும் 300,000 பேரை இலங்கை ஏற்றுக்கொள்வதென்றும் முடிவிற்கு வந்தனர். மீதி 15,000 பேர் பற்றி பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் உடன்பாட்டிற்கு வந்தனர்.



டட்லி சேனநாயக்க

Image Source - www.senanayakefamily.org

1967 இல் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்த அமுலாக்கச் சட்டத்தின் மூலம் இது நடைமுறைக்கு வந்தது. திருப்பி அனுப்பப்படும் செயன்முறை 15 வருட காலத்திற்குள் இடம்பெற வேண்டும் எனத் தீமானிக்கப்பட்டது. மலையக மக்கள் மத்தியில் பலம் வாய்ந்த அமைப்பாக விளங்கிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுடன் எந்தவிதக் கலந்தாலோசனையும் மேற்கொள்ளாமலே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன் தலைவர் தொண்டமான் நியமன உறுப்பினராக இருந்தபோதும் அவருடன் எந்தக் கலந்துரையாடலையும் மேற்கொள்ளாது விட்டனர். தமிழரசுக் கட்சி இதனைக் காரசாரமாக எதிர்த்தது. இந்தியா தன்னுடைய நலன்களுக்காக மலையக மக்களை விலையாகக் கொடுத்த நிகழ்வாக இது இருந்தது. மலையக மக்களின் அரசியல் பலம் பலவீனமடைந்தது. இது பற்றி மனோகணேசன் கூறும் போது “இந்தியா முழு மலையக மக்களையும் இந்தியாவிற்கு அழைத்திருக்க வேண்டும் அல்லது முழுப்பேரையும் இலங்கையில் விட்டிருக்க வேண்டும்” எனக் குறிப்பிட்டார்.

### அரசாங்கம் கவிழ்தல்

அரசாங்கம் ஏரிக்கரை பத்திரிகையை தேசியமயமாக்கும் மசோதாவைக் கொண்டுவந்தது. அரசாங்கக் கட்சியின் சபை முதல்வர் சி.பி.டி. சில்வா தலைமையில் பல உறுப்பினர்கள் இதனை எதிர்த்து எதிர்க்கட்சிக்கு மாறினர். இந்நிலையில் அமைச்சர்கள் பலர் தமிழரசுக்கட்சியின் உதவியை நாடினர். ஆனால் முன்னைய அனுபவத்தினால் அதனை கட்சி நிராகரித்தது. மசோதா வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது தமிழரசுக்கட்சி எதிர்த்து வாக்களித்தது. இதனால் அரசாங்கம் கவிழ்ந்தது.

### 1965 மார்ச் பொதுத்தேர்தல்

இத்தேர்தலில் 20 தொகுதிகளில் போட்டியிட்டு 217,986 வாக்குகளைப் பெற்று 14 ஆசனங்களைக் கைப்பற்றினர். ஐக்கிய தேசியக் கட்சி 66 இடங்களையும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி 41 இடங்களையும் கைப்பற்றியது. ஐக்கிய தேசிய கட்சியினர் தமிழரசுக்கட்சியின் ஆதரவை நாடினர். இதனைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சி அரசில் சேர்ந்தது.

### டட்லி - செல்வா ஒப்பந்தம்

1965 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி டட்லி - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழ்மொழியில் நிர்வாகம் நடத்துவதற்கும், தமிழிலேயே பதிவதற்கும், தமிழ் பேசும் மக்கள் நாடு முழுவதிலும் அரச கருமங்கள் விடயத்தில் தமிழில் தொடர்பு கொள்வதற்கும், வடக்கு - கிழக்கிலுள்ள நீதிமன்ற அலுவல்களைத் தமிழில் நடாத்தவும் ஏற்றவகையில் தமிழ்மொழி உபயோகச் சட்டத்தைக் கொண்டு வந்தனர்.

**அரசாங்கம் 1964 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி சத்தியாக்கிரகத்தால் கைவிடப்பட்ட தனிச்சிங்கள சட்டத்தை வடக்கு - கிழக்கில் அமுல்படுத்தப்போவதாக அறிவித்தது. தமிழரசுக் கட்சி முழுச் சக்தியையும் திரட்டி இதனை எதிர்ப்பது என 30.6.1963 இல் கொழும்பில் தீர்மானித்தது. அரசாங்கம் தீர்மானித்தபடியே சிங்கள அரசாங்க ஊழியர்களை வடக்குக்கு அனுப்ப முயற்சி செய்யப்பட்டது. அதேவேளை தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களத்தைத் திணிக்கும் நோக்கில் 2000 சிங்கள ஆசிரியர்களையும் வடக்கு - கிழக்கிற்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது. தமிழரசுக் கட்சி இதனைப் பகிஷ்கரிப்பது என்றும் இப்போராட்டத்தில் மாணவர்கள், பெற்றோர்களை இணைப்பது என்றும் தீர்மானித்தது.**

அதிகாரப் பகிர்வை வழங்கும் வகையில் மாவட்ட சபைகளை உருவாக்குதல், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் குடியேற்றத்திட்டங்கள் உருவாக்கப்படும் போது; முதலில் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள காணியற்றவர்களுக்கு வழங்குதல், இரண்டாவதாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கு வழங்குதல், மூன்றாவதாக இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழ்பேசும் இனத்தவர்களுக்கு முதலிடம் கொடுத்த பின்னர் ஏனையவர்களுக்கு வழங்குதல் என்பன ஒப்பந்தத்தில் உள்ளடங்கியிருந்தன. இவ் ஒப்பந்தத்தின் பின்னர் தமிழரசுக்கட்சி அரசாங்கத்தில் சேந்தது. இதில் திரு.மு. திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராகப் பொறுப்பேற்றார். தமிழரசுக்கட்சியின் போராட்டங்கள் முடிவுக்கு வந்தன. அதன் வரலாற்றுப் பாத்திரமும் முடிவு பெற்றது.

தமிழரசுக்கட்சி அரசில் சேர்ந்ததினால் அரச ஊழியர்களில் பழையவர்களுக்கு சிங்களத் தேர்ச்சியின்றி, சம்பள உயர்வு, பதவி உயர்வு என்பன வழங்கப்பட்டன. புதிய ஊழியரின் சிங்களத் தேர்ச்சி 8 ஆம் தரமாக்கப்பட்டது. ஆனால் திறைசேரி அதிகாரிகள் 9 ஆம் தரச் சோதனையை 8 ஆம் தரம் என நடத்திச் சலுகையை முறியடித்தனர். நிதியமைச்சர்

வன்னி நாயக்கா, பிரதமரோடு தமிழரசுக் கட்சி நடாத்திய மாநாட்டில் இதனை ஒத்துக்கொண்டார்.

### தமிழ்மொழி உபயோகச் சட்டவிதிகள் மசோதா - 1966 ஜனவரி 08

1958 இல் பண்டாரநாயக்காவினால் கொண்டுவரப்பட்ட தமிழ்மொழி உபயோகச்சட்டத்தின் கீழ் அதன் இயங்கு விதிகள் தொடர்பான சட்ட மூலம் தமிழரசுக்கட்சியின் நிர்ப்பந்தத்தின் கீழ் 1966 ஜனவரி 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இதன்படி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழையும் நிர்வாக மொழியாகவும், நாடு முழுவதிலும் தமிழ்பேசும் மக்கள் தமிழில் அரசாங்கத்தோடு கருமமாற்றவும் ஒழுங்கு செய்யப்பட்டது. இதனை சிறீலங்கா சுதந்திரக்கட்சி, இடதுசாரிக் கட்சிகள் உட்பட சிங்கள எதிர்க்கட்சிகள் யாவும் காரசாரமாக எதிர்த்தன. இச்சட்டவிதிகள் மூலச்சட்டத்தின் எல்லையை மீறியுள்ளன எனக் கூறப்பட்டது. அரச தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதோடு எதிர்க்கட்சிகள், கொழும்பு விகாரமாதேவி பூங்காவிலிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும் நடத்தியது.

ஊர்வலம் கட்டுக்கடங்காமல் சென்றதால் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ரத்தினசாரதேரோ என்ற பௌத்தபிக்கு சூடுபட்டு மரணமடைந்தார். எனினும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் நடைமுறையில் பெரிதாகச் செயற்படவில்லை. இடதுசாரிக் கட்சிகள் இதன்மூலம் தமது இனவாதப் போக்கினை வெளிக்காட்டின.

### மாவட்ட சபை தொடர்பான வெள்ளை அறிக்கை

தமிழ்ப் பிரதேசங்களுக்கு ஓரளவு அதிகாரம் பகிரக்கூடிய சட்டமூலத்திற்காக வெள்ளை அறிக்கை மு. திருச்செல்வத்தினால் தயாரிக்கப்பட்டது. பல மாதங்கள் பிரதமரினாலும் அமைச்சர்களினாலும் கட்சித் தலைவர்களினாலும் ஆராயப்பட்ட வெள்ளை அறிக்கை பராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள், பௌத்த பிக்குகள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தனர். இவ்வெதிர்ப்புக்கு அஞ்சிய பிரதமர் டட்லி சேனநாயக்க "மாவட்ட சபை மசோதவை தாம் பராளுமன்றத்தில் நிறைவேற்ற மாட்டோம்" எனக் கூறினார்.

### தமிழரசுக்கட்சியின் பத்தாவது மாநில மாநாடு (1966 யூன் 23, 24, 25 - கல்முனை)

தமிழரசுக் கட்சியின் 10 ஆவது மாநில மாநாடானது 1966 ஆம் ஆண்டு யூன் மாதம் 23, 24, 25 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இம்மாநாட்டில் கட்சியின் தலைவராக ஈ.எம்.வி. நாகநாதன் தெரிவு செய்யப்பட்டார். முதன்முறையாக பிரதமர் டட்லி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார். "இலகுவில் வாக்குக்கொடுக்க மாட்டேன், கொடுத்தால் நிறைவேற்றத் தவறமாட்டேன்" என டட்லி மாநாட்டில் உறுதிமொழி அளித்தார்.

### சிறிமா - சாஸ்திரி ஒப்பந்த அமுலாக்கச் சட்டம்

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்த அமுலாக்கச் சட்டத்தை அரசாங்கம் இயற்ற முற்பட்ட போது தமிழரசுக் கட்சியினதும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசினதும் முயற்சியினால் ஆட்சேபத்திற்குரிய அம்சங்கள் நீக்கப்பட்டது. விருப்பத்திற்கு மாறாக யாரையும் இந்தியப் பிரஜையாகப் பதிவு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்தியா திரும்பியோரின் வீதத்திற்கே இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்யும் திட்டம், இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்தோரை தனிவாக்காளர் இடாப்பில் அடக்கும் அம்சம் என்பனவே நீக்கப்பட்டன.

ஆட்களைப் பதிவு செய்து அடையாள அட்டை வழங்குவதற்கான சட்டமும் மாற்றப்பட்டது. பிரஜை, நாடற்றவர் என்ற பேதமின்றி இந்நாட்டில் சட்டபூர்வமாக வாழும் 18 வயதிற்கு மேற்பட்டோர் எல்லோரையும் பதிந்து அடையாள அட்டை வழங்குவதற்கு சட்டமியற்றப்பட்டது.

இச்சட்டங்களை தமிழரசுக்கட்சியின் ஊர்காவற்துறை பாராளுமன்ற உறுப்பினர்கள் வ. நவரத்தினம் ஏற்றுக்கொள்ளவில்லை; எதிர்த்து வாக்களித்தார். இதனால் 24.04.1968 இல் கூடிய கட்சியின் பொதுச்சபை வ. நவரத்தினம் அவர்களைக் கட்சியிலிருந்து ஏகமனதாக வெளியேற்றியது. இதன்பின்னர் வ. நவரத்தினம் 'தமிழர் சுயாட்சிக் கழகம்' எனும் புதிய கட்சியை உருவாக்கினார்.

### மு. திருச்செல்வம் அமைச்சர் பதவியைத் துறத்தல்

திருகோணமலை கோணேசர் கோவிலைச் சார்ந்த பிரதேசத்தை புனித பிரதேசமாக்க மு. திருச்செல்வம் முயற்சித்தார். இதற்காக தமிழர், சிங்களவர், பறங்கியர் என மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. சேருவல பௌத்த ஆலயத் தலைமைப் பிக்கு இதை எதிர்த்தார். பிரதமர் டட்லி சேனநாயக்க மு. திருச்செல்வத்துடன் கலந்தாலோசிக்கமாலே குழுவை நிறுத்தி வைத்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 1968 புரட்டாதி மாதம் 16 ஆம் திகதி மு. திருச்செல்வம் அமைச்சர் பதவியை இராஜனாமாச் செய்தார். இதன் பின்னரும் தமிழரசுக் கட்சி சில மாதங்கள் அரசாங்கத்தில் நீடித்தது. 1968 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தில் இருந்து விலகியது.

சின்னையா மௌனகுரு



சின்னையா மௌனகுரு அவர்கள் இலங்கையின் மட்டக்களப்பைச் சேர்ந்த பேராசிரியர்; அரங்க ஆய்வாளர், பயிற்சியாளர், இயக்குநர், பிரதி உருவாக்குநர், நடிகர், கூத்துக் கலைஞர் என்று பல தளங்களில் இன்றும் இயங்கிவருபவர்.ஈழத்து அரங்கத்துறையின் வளர்ச்சிக்கு வித்திட்ட சிலரில் மௌனகுரு குறிப்பிடத்தக்கவர். ‘இராவணேசன்’, ‘சங்காரம்’ முதலிய புகழ்பெற்ற கூத்து நாடகங்கள் மௌனகுருவுக்கு தனியான அடையாளத்தை வழங்கின.

இவர், 20 ஆம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் இலக்கியம் – 1984, சடங்கில் இருந்து நாடகம் வரை – 1985, மௌனகுருவின் மூன்று நாடகங்கள் – 1985, தப்பி வந்த தாடி ஆடு – 1987, பழையதும் புதியதும் நாடகம் அரங்கியல் – 1992, சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும் – 1992, சங்காரம் – ஆற்றுகையும் தாக்கமும் (நாடகம்) – 1993, ஈழத்து தமிழ் நாடக அரங்கு – 1993, கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன் – நீலாவணன் – 1994, கலை இலக்கிய கட்டுரைகள் – 1997, சக்தி பிறக்குது – நாடகம் – 1997, பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திராவும் ஈழத்து நாடக மரபும் – 1997, ஈழத்து நாடக அரங்கு – 2 ஆம் திருத்திய பதிப்பு – 2004, தமிழ்க் கூத்துக்கலை – வடமோடி ஆட்டப் பயிற்சிக்கான கைந்நூல் – 2010, கூத்து யாத்திரை – 2021, கூத்தே உன் பன்மை அழகு – 2021 போன்ற பலநூல்களை எழுதியுள்ளார்.

# ஈழத் தமிழ்க்கூத்தின்
# நாடகக் கட்டமைப்பு முறை

ஈழத்து மரபுவழி ஆற்றுகைக் கலைகளுக்கு ஒரு வரலாறும் வளர்ச்சியும் உண்டு. தென்மோடி, வடமோடி, சிந்துநடைக் கூத்துகள், வாசாப்பு, இசை நாடகம், பள்ளு, குறவஞ்சி, வசந்தன், மகுடி என அது பன்முகப்பட்டது. இவற்றுள் சில அருகிவிட்டன; சில கால ஓட்டத்துடன் நின்று போராடி நிலைக்கின்றன; சில மாறுகின்றன. காலந்தோறும் ஏற்பட்ட பண்பாட்டு கலப்புகளும், அதனை உருவாக்கிய அரசியல், பொருளாதார, சமூக காரணங்களும் இம்மாற்றங்களுக்கு அடித்தளமாக உள்ளன. இந்த பல்வேறு வகைப்பட்ட ஆற்றுகை வடிவங்கள் தத்தமக்கென அழகியலையும், அமைப்பையும், வெளிப்பாட்டுத் திறனையும் கொண்டுள்ளன; ஒன்றிலிருந்து ஒன்று பெற்றும் வளர்ந்துள்ளன. இந்த மாற்றங்களைப் புரிந்து கொள்வதும், அவை மாற்றம் பெற்றபோது அது சம்பந்தமாக நடந்த விவாதங்களை அறிவதும், இதன் இருப்பைத் தக்கவைக்கும் முயற்சிகளில் ஈடுபடுபவருக்கும், அதனை மேலும் வளர்த்துச் செல்ல விரும்புவோருக்கும் உதவியாக இருக்கும். இப் பல்வேறு ஆற்றுகை வடிவங்கள் பற்றியும் அவை கல்வி உலகில் ஏற்கப்பட்ட பின்னணிகள் பற்றியும், அதனால் இந்த ஆற்றுகைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் அறிமுகம் செய்வதாக ‘ஈழத்துத் தமிழரின் ஆற்றுகைக் கலைகள் : மரபும் மாற்றமும்’ எனும் இக்கட்டுரைத் தொடர் அமைந்திருக்கும்.

## பொதுவான நாடக அமைப்பு

நாடகம் ஒரு முழுமையான வடிவமாக உருவாகியமைக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. ஆரம்பத்தில் சடங்குகளே ஆற்றுகைகளாக இருந்தன. இந்தச் சடங்குகள் நம்பிக்கையோடு செய்யப்பட்டன. அந்தச் சடங்குகள் செய்யும் முறையில் ஓர் அமைப்பு உண்டு. அதாவது இப்படி ஆரம்பித்து இப்படிச் சென்று இப்படி முடிக்க வேண்டும் என்று ஓர் அமைப்பு அதற்கு உண்டு. சடங்கில் இருந்து பிறந்தவைதான் பொழுதுபோக்குக்குரிய கதை தழுவாத ஆட்ட வடிவங்கள். அந்த ஆட்ட வடிவங்களுக்கும் ஓர் அமைப்பு உண்டு. அந்த ஆட்ட வடிவங்களை வைத்துக்கொண்டு ஒரு கதையை உட்புகுத்தி, ஓர் அமைப்போடு உருவாக்கப்பட்டது தான் நாடகம். இந்த அமைப்பு என்பது சடங்கிலிருந்து பெறப்பட்ட ஒன்றாகும். இந்த அமைப்பைப் பல்வேறுவிதமாக நாடக ஆசிரியர்கள் வெளிப்படுத்தினாலும் பொதுவாக நாடக அமைப்பு என ஒன்று உண்டு என்பதை அனைவரும் ஒப்புவர். இதனை நாம் நாடகக் கட்டுக்கோப்பு என அழைக்கலாம்.

நாடகம் அல்லது கூத்து என்பது இரண்டு பிரதிகளைக் கொண்டுள்ளது. ஒன்று எழுத்துப் பிரதி, இன்னொன்று ஆற்றுகைப் பிரதி. ஆற்றுகைப் பிரதி கேரளத்தில் ஆட்டப்பிரகாரம் என அழைக்கப்படுகிறது. அதாவது ஆடுகின்ற முறைமை. கூத்திலே ஏற்கனவே எழுதப்பட்ட ஒரு நாடகமே மேடையில் நடிக்கப்படுகின்றது. எனவே கூத்திற்கு இரண்டு பிரதிகள் உள்ளன. ஒரு பிரதி எழுதப்பட்ட பிரதி; அது தூலமானது, தொட்டுணரக்கூடியது. இன்னொரு பிரதி எழுதப்படாத பிரதி; அதுதான் மேடையில் நடிக்கும் பிரதி, அது சூக்குமமானது, தொட்டுணர முடியாதது.

நமக்கு ஈழத்தில் கிடைக்கும் தமிழ்க்கூத்துப் பிரதிகள் யாவும் எழுதப்பட்ட பிரதிகளாகும். அதன் ஆட்டவடிவப் பிரதி எங்கே? எனும் ஒரு வினா எழலாம். ஆட்டவடிவப் பிரதி அண்ணாவியாரின் அல்லது கூத்தரின் மூளைக்குள்தான் கிடக்கிறது. கூத்து நூல்களைப் பின்னால் பதிப்பித்தோர் கூட அதனை எவ்வாறு மேடையில் நிகழ்த்தலாம் என்று எழுதி வைத்தாரில்லை.

இலங்கையில் வடக்கிலும், கிழக்கிலும், மலையகத்திலும், மன்னாரிலும் நாடகமாக வளர்ச்சிபெற்ற பல்வேறு கூத்துகள் இருக்கின்றன. இவை பல்வேறு வகைப்பட்டனவாயினும், பிரதிகளை வைத்து நோக்குகின்ற பொழுது இவற்றிற்குள் ஒரு நாடகக் கட்டமைப்பு இருப்பதை நாம் அவதானிக்கலாம். அந்த நாடகக் கட்டமைப்பில் சிறிது வேறுபாடுகள் இருப்பினும், அது ஓர் உலகப் பொதுத்தன்மையையும் கொண்டிருக்கின்றது.

## மேற்கத்திய நாடகக் கட்டமைப்பும் கீழைத்தேய நாடகக் கட்டமைப்பும்

தனக்கு முன்னிருந்ததும் தன் காலத்ததுமான நாடகங்களை வைத்துக்கொண்டு அதற்கு இலக்கணம் வகுத்த அரிஸ்டோட்டில் நாடகம் என்பது முதல், இடை, முடிவு எனப்பட்ட முத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்றார். முதல் என்பது முன் நிகழ்ச்சி. இடை என்பது முன்னே சென்ற நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக அமைவது. முடிவு என்பது இந்தத்



Image Source : www.battinews.com

தொடர்ச்சியான வளர்ச்சியின் இறுதி. இந்த வகையில் பொதுவாக நாடக அமைப்பை,

1. ஆரம்பம்
2. முரண்பாடு
3. சிக்கல்
4. சிக்கலைத் தீர்த்தல்

என நான்கு பெரும் அமைப்புக்குள் அடக்கிவிடலாம். இது மேலைத்தேய மரபில்வந்த நாடக அமைப்பு வகுப்பு முறை. மேலைத்தேய நாடகம் பற்றிய இந்த இலக்கணம் கீழைத்தேயத்திற்கு, முக்கியமாக இந்தியாவுக்குப் பொருந்துமா என்பது ஒரு முக்கிய வினாவாகும். மேலைத்தேயச் செந்நெறி நாடகங்களையும், இந்திய நாடகங்களையும் பார்க்கும் பொழுது இவை பொருந்தும் போலவே படுகிறது.

அரிஸ்டோட்டிலின் கவிதை இயல் போல இந்திய மரபில் நமக்கு கிடைப்பது நாட்டிய சாஸ்திரமாகும்.

## நாட்டிய சாஸ்திரம் கூறும் நாடகக் கட்டமைப்பு

அரிஸ்டோட்டில் தன்கால நாடகங்களை வைத்து கிரேக்க நாடகத்திற்கு இலக்கணம் கூறியதுபோல, நாட்டிய சாஸ்திர ஆசிரியரும் தன்கால நாடகங்களை வைத்து இந்திய நாடகங்களுக்கு இலக்கணம் வகுத்தார். நாட்டிய சாஸ்திரம் தன் காலத்தில் இருந்த பத்து வகை நாடகங்கள் பற்றிக் கூறுவதுடன், சிறந்த நாடகத்துக்குரிய அமைப்புப் பற்றியும் விளக்குகிறது. நாடகத்தின் கருப்பொருள் எவ்வாறு ஓர் அமைப்பை எடுக்கிறது என்பதைப் பற்றி நாட்டிய சாஸ்திரம் கூறுவதைச் சுருக்கமாக பார்ப்போம்.

### நாடக வஸ்து, அதாவது நாடகத்தின் கருப்பொருள்

நாடகத்தின் பொருள் பின்வரும் அமைப்பினைப் பெறும்:

1. ஆரம்பம் (தொடக்கம்)
2. பிரயத்தனம் (முயற்சி)
3. ப்ராயற்யாச (வெற்றிக்கான சாத்தியப்பாடு)
4. நியற்பதி (வெற்றி நிச்சயம்)
5. பலாகம (பயன் பெறுதல்)

எனவும், வஸ்து வளரும் விதத்தினை:

1. பிஸ் (விதை)
2. விந்து (முளை)
3. பதகா (முளை வெளிவரல்)
4. பிரதானி (காரியத்தில் ஈடுபடல்)
5. கார்ய (காரியத்தை முடித்து வைத்தல்)

எனவும், நாடகச் செயல் நிகழ்வு அமைக்கப்படும் வகையினை சந்தி எனக் கொண்டு:

1. முக சந்தி (ஆரம்பம்)
2. பிரதிமுக சந்தி (வளர்ச்சி)
3. கர்ப்ப சந்தி (சிக்கல்)
4. விமர்சந்தி (நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வரல்)
5. நிர்வாண சந்தி (முடிவு)

எனவும் பகுப்பர்.

நல்லதொரு நாடகத்தில் இவை யாவும் சமநிலைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இதனைப் பார்க்கும் பொழுது மேற்குநாட்டு நாடக அமைப்பு இலக்கணத்திற்கும் நாட்டிய சாஸ்திரத்தின் இலக்கணத்திற்கும் இடையே பாரிய வேறுபாடுகளைக் காண முடியவில்லை. எனவே, நான் முன்னரே கூறியபடி ஆரம்பம், சிக்கல், வளர்ச்சி, உச்சம், முடிவு என்ற முறை நாடகத்தின் பொதுவிதி என்பது எனக்கு புலனாகின்றது.

### சமஸ்கிருத உயர்நாடக மரபும் பிரதேச நாடக மரபும்

சமஸ்கிருத உயர்மரபு நாடகங்கள் இப்பண்பினைக் கொண்டுள்ளன. பல்வேறு வளர்ச்சி படிநிலைகளில் இருக்கும் நாடகங்களுக்கு இவ்விதி முற்றாகப் பொருந்தாது. ஆனால் வளர்ச்சியுற்ற நாடக வடிவங்களுக்கு பொருந்தக்கூடியதே. சமஸ்கிருத நாடகங்களின் வளர்ச்சிக்குக் கிரேக்க நாடக வரவு ஊட்டம் கொடுத்தது போல, சமஸ்கிருத நாடக மரபு இந்தியாவின் பிரதேச நாடக மரபுகள் வளர ஊட்டம் அளித்தது போலவே தெரிகின்றது. இது பற்றி நாடக உலகில் வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்துள்ளன. சமஸ்கிருத நாடகமரபின் வீழ்ச்சியின் பின் வளர்ச்சி அடையத் தொடங்கிய இந்தியாவின் பிரதேச நாடகங்கள், சிறப்பாக மரபுவழி நாடகங்கள், சமஸ்கிருத நாடகத்திலிருந்து பல அம்சங்களைப் பெற்றுக்கொண்டன. இவ்வண்ணம் பிரதேச நாடக மரபு பெற்ற ஒன்று இந்த நாடக அமைப்பு எனலாம்.

### ஈழத்துத் தமிழ்க்கூத்துகளின் அமைப்பு

இந்தப் பின்னணியில் ஈழத்துத் கூத்துகளின் நாடக அமைப்பை நோக்குதல், கூத்தை மேலும் புரிந்துகொள்ள உதவும். ஈழத்தின் இந்தக் கூத்துகளை எடுத்துக்கொண்டாலும், அவற்றின் இடையே ஓர் ஆரம்பம், ஒரு சிக்கல், ஒரு வளர்ச்சி, ஓர் உச்சம், ஒரு முடிவு இருப்பதை நிச்சயமாக நாங்கள் காணலாம். இந்துக் கூத்துகள் ஆயினும், கிறிஸ்தவக் கூத்துகள் ஆயினும் இவை பொருந்தும்.

கூத்தின் நாடகக் கட்டமைப்பு பற்றி இதுவரை யாரும் ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. ‘மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்’ என்னும் நூலிலே மட்டக்களப்பில் ஆடப்படும் தென்மோடி, வடமோடி நாடகக் கட்டமைப்புகள் ஆராயப்பட்டுள்ளன. பல வடமோடி, தென்மோடி நாடகங்களின் அமைப்பினையும் ஆராய்ந்த அந்த நூலாசிரியர் எடுத்துக்கொண்ட முடிவு பின்வருமாறு:

தென்மோடி நாடகங்கள் சமஸ்கிருத நாடக மரபு கூறியது போல 5 சந்திகளைக் கொண்டதாக அமைந்திருக்கின்றன. அதிலே ஆரம்பம், சிக்கல், வளர்ச்சி, உச்சம் என்பன வருகின்றன. ஆனால் வடமோடி நாடகங்கள் அவ்வாறு அன்று. அவை ஒன்றுக்கும் மேற்பட்ட உச்சங்களைக் கொண்டதாக அமைந்திருக்கின்றன. அடுத்து இந்தப் பொதுவிதியினை மட்டக்களப்பில் ஆடப்படும் தென்மோடி, வடமோடி நாடகங்களுக்குப் பொருத்திப் பார்ப்போம்.

## தென்மோடி நாடகங்களும் நாடகக் கட்டமைப்பும்

தென்மோடி நாடகங்கள் பெரும்பாலும் கற்பனைக் கதைகளையே கருவாகக் கொண்டவை. கதைகூறும் பாணியில் ஓர் ஆரம்பம், வளர்ச்சி, உச்சம், முடிவு என்பன இருப்பது போல, நாடகமாக்கப்பட்ட நிலையிலும் இத்தகைய படிநிலைகளை இந்நாடகங்களில் காண முடிகிறது. இங்கு தென்மோடி நாடகங்களான அலங்காரரூபன் நாடகத்தை உதாரணமாகக் கொண்டு இதனைப் பார்ப்போம்.

*அலங்காரரூபன் நாடகக் கதையோட்ட விவரம் (கூத்து ஏட்டில் உள்ளபடி)*

1. *அண்ணாவியார் காப்பு விருத்தம்.*
2. *கட்டியக்காரன் வருதல். அதிவீரசூரன் வரப்போவதாகக் கட்டியங்கூறி மக்களை அமைதியாயிருக்கும்படி எச்சரித்தல்.*
3. *அதிவீரசூரன் தனது மந்திரியுடன் வருதல். நாட்டு வளமை கேட்டல்.*
4. *செகதனையாளி மன்னனின் கட்டியகாரன் வருதல். மன்னன் வரப்போவதாகக் கட்டியங்கூறிச் செல்லுதல்.*
5. *செகதனையாளி மனைவியுடன் வருதல். மனைவியிடம் மகளைப் பற்றி விசாரித்து மகளை அழைக்கும்படி கூறுதல்.*
6. *செகதனையாளியின் மகள் அலங்காரரூபி தோழிமாரோடு வருதல். மன்னனைக் கண்டு வணங்கி ஏன் அழைத்தீர்கள் என வினாவுதல். மன்னன் தோழிமாரோடு மகிழ்ந்து வாழும்படி கூறுதல்.*
7. *அதிவீரசூரன் மனைவி, தன் மகனான அலங்காரரூபனுக்கு மணம் செய்விக்க வேண்டுமெனக் கூறல். அதிவீரசூரன் மந்திரியிடம் மகனை அழைக்கும்படி கூறல்.*
8. *அலங்காரரூபன் வருதல்.*
9. *அதிவீரசூரன், மகனிடம் தான் அவனுக்குத் திருமணம் செய்ய நிச்சயித்திருப்பதாகவும், அதுவரைக்கும் மாளிகையில் இருக்கும்படியும் கூறிவிட்டு, மகனுக்குப் பெண் பார்க்கும்படி கூறுதல். மந்திரி, செகதனையாளியின் மகள் அலங்காரரூபி பற்றி அரசனிடம் கூற, அரசன் தூதுவரை வரவழைக்கும்படி கூறல்.*
10. *தூதுவர் வருதல்.*
11. *அதிவீரசூரன், செகதனையாளி மன்னனிடம் சென்று பெண் கேட்டு வரும்படி கூறித் தூதுவரை அனுப்புதல்.*
12. *தூதுவர் செகதனையாளியிடம் சென்று தம் மன்னனின் எண்ணத்தைக் கூற, செகதனையாளி தூதுவரைப் பரிகசித்து அடித்துத் துரத்தல்.*
13. *தூதுவர் திரும்பி வந்து நடந்ததைத் தம் அரசனிடம் கூற, அவன் சேனாபதியை அழைத்தல்.*
14. *சேனாபதி வருதல்.*
15. *அதிவீரசூரன் சேனாபதியைப் பார்த்து "செகதனையாளியிடம் சண்டையா? சமாதானமா?" எனக் கேட்டுவரும்படி அனுப்புதல்.*
16. *சேனாபதி செகதனையாளியிடம் தம் மன்னன் கேட்டதைக் கூற, அவன் முடிவு சண்டையே எனக் கூறி அனுப்புதல்.*
17. *சண்டை நடத்தல். சண்டையில் அதிவீரசூரன் இறத்தல். செகதனையாளி, அவன் மகன் அலங்காரரூபனைக் கட்டி இழுத்து வரும்படி தூதுவருக்குக் கட்டளையிடல்.*
18. *அலங்காரரூபனைத் தூதுவர் பிடித்து வருதல். அலங்காரரூபன் அழுதுகொண்டு வரல். அவனுடைய ஒரு கையை வெட்டிக் காட்டிற்குத் துரத்திவிடும்படி மன்னன் கூறுதல். அலங்காரரூபனின் மனைவியை அழைத்து கோட்டையிலுள்ள குப்பைகளைப் பொறுக்கும்படி பணித்தல். அதிவீரசூரனின் மனைவி தன்னையும் தன் மகனையும் விடுதலை செய்தால் தாம் நாட்டைவிட்டுச் சென்று விடுவதாகக்கூற, அவர்களை செகதனையாளி விடுதலை செய்துவிடல்.*
19. *தாயும் மகனும் காட்டிலே கஷ்டப்படல். அப்போது விசுவாமித்திர முனிவர் வருதல். விவரம் அறிந்து அலங்காரரூபனுக்கு கையைத் திரும்பக் கொடுத்தல். சில நாட்களுள் அவனுடைய மனக்கவலைகளைத் தான் அகற்றிவிடுவதாகக் கூறுதல்.*
20. *கிழவியொருத்தி வருதல்.*
21. *தாயையும் மகனையும் கிழவி கூட்டிச்சென்று பாதுகாத்தல்.*
22. *செகதனையாளி மன்னனின் மகள் அலங்காரரூபி குளிப்பதற்கு தோழிமாருடன் போதல்.*
23. *அலங்காரரூபன் விறகு வெட்டி விற்றல்.*
24. *அலங்காரரூபனை அலங்காரரூபி காணுதல். ஆசைப்படுதல்; அவன் வரலாறு கேட்டல்; அவன் அரசகுமாரன் என்பதை அறிதல்; செட்டி வேடமிட்டுத் தன் மாளிகைக்கு இரவிலே வரச் சொல்லுதல்.*
25. *செட்டி வேடம் பூண்டு அலங்காரரூபன் வருதல். அலங்காரரூபி ஆசையில் தன் மோதிரத்தை அவனுக்கு அணிதல். இருவரும் மகிழ்ந்திருத்தல்.*
26. *கள்ளவன் தன் மாளிகைக்கு வந்திருப்பதாகச்*

செகதனையாளி கனவு கண்டு எழுந்து, தலையாரிமாரை அழைத்தல்.

27. தலையாரிமார் வருதல்.
28. அரசன் தலையாரிமாரிடம் அரண்மனைக்குள் ஒரு கள்வன் புகுந்திருப்பதாகவும், அவனைப் பிடிக்கும்படியும் கூறல்.
29. தலையாரிமார் அலங்காரரூபனைப் பிடித்து அடித்து மன்னன் முன் கொண்டுவந்து நிறுத்தல்.
30. அரசன் அலங்காரரூபனிடம் உள்ள மோதிரத்தைக் கண்டு அதன் வரலாறு கேட்டல். அலங்காரரூபன் உண்மை கூறினும் மனமிரங்காத மன்னன் அவனை மரத்திற் கட்டும்படி கூறிவிட்டு குணபோதக சுவாமிகளை அழைத்தல்.
31. குணபோதகர் வருதல்.
32. அலங்காரரூபனைக் கண்டு குணபோதகர் சமயம், வாழ்வு பற்றி அறிவுரை கூறல்.
33. விசுவாமித்திர முனிவர் மீண்டும் வருதல்.
34. செகதனையாளி மன்னனைக் கண்டு நடந்த உண்மைகளைக் கூறி, அலங்காரரூபனுக்கும் அலங்காரரூபிக்கும் திருமணம் செய்து வைக்கும்படி கூறுதல்.
35. இருவருக்கும் திருமணம் நடைபெறல்.

விடியவிடிய ஆடப்படும் நாடகமானமையினால் மிக நீண்ட நாடகமாக இருப்பதுடன், கதை கூறுகின்ற பண்பினையும் இந்நாடகத்தில் காண முடிகிறது.

1 - 9 வரையுள்ள பகுதியினை அறிமுகம் என நாம் கூறலாம். இப்பகுதியில் அதிவீரசூரன், அவன் மனைவி, மகன் அலங்காரரூபன், செகதனையாளி, அவன் மனைவி, அவன் மகள் அலங்காரரூபி ஆகியோர் அறிமுகப்படுத்தப்படுவதுடன் திருமணப் பேச்சு என்ற சிக்கலுக்கான விதையும் ஊன்றப்படுகிறது.

10 - 19 வரையுள்ள பகுதியினைச் சிக்கல் எனலாம். இப்பகுதியில் திருமணம் கேட்டுச் சென்றதனால் கோபமுற்ற செகதனையாளி அதிவீரசூரனை வென்று கொல்வதுடன் அவன் மனைவி, மகனையும் காட்டுக்கனுப்புகிறான்.

20 - 29 வரையுள்ள பகுதியை வளர்ச்சி எனலாம். காட்டுக்கனுப்பப்பட்ட தாயும் மகனும் முனிவர் உதவியால் மீண்டும் நாடுவந்து வாழ்வதும்,



Image Source : www.battinews.com

அலங்காரரூபி அலங்காரரூபனைக் கண்டு மோகிப்பதும், தன்னுடைய கன்னிமாடத்திற்கு அவனை அழைப்பதும், செட்டியாக உருமாறி அலங்காரரூபன் செல்லுவதும், அரசனாற் பிடிக்கப்படுவதும் என வேகமாக இப்பகுதியில் நாடகம் வளர்ந்து செல்கிறது.

30 - 32 வரையுள்ள பகுதியை நாடகத்தின் உச்சம் எனலாம். அலங்காரரூபனிடம், தன் மகளின் மோதிரத்தைக் கண்டும் மனமிரங்காத மன்னன், அவனைக் கொல்ல மரத்திற் கட்டுவதும், அனைவரும் அவனுக்கு மரண தண்டனை நிச்சயம் என்ற நிலைக்குச் செல்வதுமான உச்சநிலையை இங்கு காணுகிறோம்.

33 - 34 வரையுள்ள பகுதியை நாடகத்தின் முடிவு எனலாம். பிரச்சினைகள் உச்சநிலைக்குச் சென்றதும் விசுவாமித்திரர் தோன்றிச் சிக்கல்களைத் தீர்த்து வைக்கிறார்.

பெரும்பாலும் தென்மோடி நாடகங்கள் இந்த வகையிலேயே அமைந்துள்ளன.

### வடமோடி நாடகங்களும் நாடகக் கட்டமைப்பும்

வடமோடி நாடகங்கள் பெரும்பாலும் பொதுவாக இதிகாசக் கதைகளையே, அதிலும் சிறப்பாக இதிகாசக் கதைகளில் வரும் நிகழ்ச்சிகளையே கருவாகக் கொண்டமையினால், ஒரு கதைக்குரிய ஆரம்பம், வளர்ச்சி, உச்சம், முடிவு என்ற படிநிலைகளைக் கற்பனைக் கதைகள் அளவு பெறாதவையாயும் உள்ளன. எனினும் ஒரு படிமுறை வளர்ச்சியை இவை பெற்றிருக்கின்றன. வடமோடி நாடகமான 'குருக்கேத்திரன் போர்' நாடகத்தை வைத்து இதனைப் பார்ப்போம்.

குருக்கேத்திரன் போர் கதையோட்ட விவரம் (கூத்து ஏட்டில் உள்ளபடி)

1. அண்ணாவியார் காப்பு விருத்தம்.
2. கட்டியகாரன் வருதல். கிருஷ்ணர் வரப்போவதாகக் கட்டியங்கூறி, சபையோரை அமைதியாக இருக்கும்படி எச்சரித்துச் செல்லல். கிருஷ்ணர் வருதல். தவம் செய்தல்.
3. குருக்கேத்திரன் மனைவியுடன் வருதல். ஆகாய மார்க்கமாகச் செல்லல்.
4. குருக்கேத்திரன் தாம்பூலம் உமிழ, அது கிருஷ்ணர் கையின் மேல் விழ, கோபம் கொண்ட கிருஷ்ணர் சக்கரத்தாழ்வாரை உடனே வரும்படி நினைத்தல்.
5. சக்கரத்தாழ்வார் வருதல்.
6. கிருஷ்ணர் சக்கரத்தாழ்வாரிடம் குருக்கேத்திரனை உடனே கொன்றுவிடும்படி கூற, சக்கரத்தாழ்வார் குருக்கேத்திரனைத் துரத்தல்.
7. நாரதர் வருதல். சக்கரத்தாழ்வாரிடம் நடந்த நிகழ்ச்சிகளை வினாவி அறிதல்.
8. குருக்கேத்திரன் நாரதரைக் காணுதல். நாரதர் அவனிடம் நடந்ததைக் கூறி, சக்கரத்தாழ்வார் துரத்தி வருவதையும் கூறி, அவனைத் தப்பித்துக் கொள்ளும்படி கூற, குருக்கேத்திரன் புலம்பியபடி சிவனிடம் செல்லல்.
9. பரமசிவன் வருதல். குருக்கேத்திரன் அபயம் கேட்க, கிருஷ்ணருக்குப் பயந்து மறுத்தல். குருக்கேத்திரன் இயமனிடம் செல்லல்.
10. இயமன் வருதல். குருக்கேத்திரன் அபயம் கேட்க, பயந்து மறுத்தல். குருக்கேத்திரன் இந்திரனிடம் செல்லல்.
11. இந்திரன் வருதல். மந்திரியிடம் நாட்டு வளம் கேட்டல், நாட்டியப் பெண்களை அழைத்தல்.
12. நாட்டியப் பெண்கள் வருதல். அரசனின் சபைக்கு வந்து நடனம் புரிதல். பின்னர் குருக்கேத்திரன் இந்திரனிடம் வந்து அபயம் கேட்க, இந்திரன் அருச்சுனனிடம் அவனை ஆற்றுப்படுத்தல்.
13. பஞ்சபாண்டவர் திரௌபதியுடன் வருதல்.
14. குருக்கேத்திரன் அருச்சுனனிடம் அபயம் கேட்க, அருச்சுனன் அபயமளித்து, பின்னர் சக்கரம் ஏவியவர் கிருஷ்ணர் என அறிந்தும், அபய வாக்கைக் காப்பாற்ற உறுதியுடன் நிற்றல்.
15. சக்கரத்தாழ்வார் கிருஷ்ணரிடம் நடந்த விடயங்களையும், அருச்சுனனின் உறுதியையும் கூறுதல். கிருஷ்ணர் சாத்தகியை அழைத்தல்.
16. சாத்தகி வருதல். அருச்சுனனிடம் கிருஷ்ணர் சாத்தகியைத் தூதனுப்புதல்.
17. சாத்தகியிடம், அருச்சுனன் குருக்கேத்திரனுக்கு கொடுத்த அபயத்தை மாற்ற முடியாது, அவனை விடவும் முடியாது எனக் கூறல்.
18. தருமர், தம்பிமார் அனைவரும் ஆலோசித்து குருக்கேத்திரனைக் காப்பாற்றுவது என முடிவு செய்தல். நாரதர் வந்து பாண்டவர்களின் வாட்டம் கண்டு, அதற்கான காரணத்தை வினாவ, அவர்கள் உண்மையுரைத்து, கிருஷ்ணரைச் சமாதானம் செய்யும்படி நாரதரை வேண்டல்.
19. நாரதர் கிருஷ்ணரிடம் சென்று கட்டாயம் படை எடுக்க வேண்டும் எனக் கலகமூட்டிச் செல்லல். கிருஷ்ணர் துரியோதனின் உதவி நாடிச் செல்லல்.
20. துரியோதனன், சகுனி, கன்னன், துச்சாதனன் ஆகியோர் வருதல். துரியோதனன் நாட்டு வளம் வினாவுதல். கிருஷ்ணர் துரியோதனனிடம் வந்து உறவாடி, அருச்சுனனைக் கொல்ல அவனையும் வரும்படி கேட்டல்.
21. பெருந்திருவாள் (துரியோதனன் மனைவி) வருதல். துரியோதனனைப் போருக்குச் செல்ல வேண்டாமெனத் தடுத்தும் அவன் போதல்.
22. துரியோதனன் படைகள் வருவதையறிந்து வீமன் சண்டை செய்யச் செல்லல். வீமன் - துரியோதனன் சண்டை, துரியோதனன் தோற்று ஓடல்.
23. அருச்சுனன் - கன்னன் சண்டை, கன்னன் தோற்று ஓடல்.
24. சகாதேவன் - சகுனி சண்டை, சகுனி தோற்று ஓடல்.
25. தருமர் - கிருஷ்ணர் சண்டை, தருமர் இறத்தல்.
26. வீமன் - கிருஷ்ணர் சண்டை, வீமன் இறத்தல்.
27. நகுலன் - கிருஷ்ணர் சண்டை, நகுலன் இறத்தல்.
28. சகாதேவன் - கிருஷ்ணர் சண்டை, சகாதேவன் இறத்தல்.
29. 29. அருச்சுனன் - கிருஷ்ணர் சண்டை. சண்டையில் அருச்சுனன் சக்கராயுதம் எடுக்க, கிருஷ்ணர் சமாதானமாகி, இறந்த நால்வரையும் எழுப்பி, குருக்கேத்திரனையும் மன்னித்தல்.
30. துரியோதனன், கிருஷ்ணர் தன்னை வஞ்சித்துவிட்டார் எனக்கூறி ஏசிவிட்டுச் செல்லல்.
31. கிருஷ்ணர் பாண்டவரை வாழ்த்திவிட்டுச் செல்லல்.

இங்கே முடிவைக் குறிப்பிடும் தென்மோடி நாடகங்கள் போல ஒரு சிக்கல், படிப்படியாக வளர்ச்சி பெற்று,

சமஸ்கிருத உயர்மரபு நாடகங்கள் இப்பண்பினைக் கொண்டுள்ளன. பல்வேறு வளர்ச்சி படிநிலைகளில் இருக்கும் நாடகங்களுக்கு இவ்விதி முற்றாகப் பொருந்தாது. ஆனால் வளர்ச்சியுற்ற நாடக வடிவங்களுக்கு பொருந்தக்கூடியதே. சமஸ்கிருத நாடகங்களின் வளர்ச்சிக்குக் கிரேக்க நாடக வரவு ஊட்டம் கொடுத்தது போல, சமஸ்கிருத நாடக மரபு இந்தியாவின் பிரதேச நாடக மரபுகள் வளர ஊட்டம் அளித்தது போலவே தெரிகின்றது. இது பற்றி நாடக உலகில் வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்துள்ளன.

உச்சநிலைக்குச் செல்வது போல அன்றி; ஒரு சிக்கல் தோன்றி வளர்ச்சியடைந்து முடிவு நிலை எய்த, இன்னொரு சிக்கல் மீண்டும் தோன்றி வளர்ச்சி பெற்று உச்சநிலை அடைந்து வருவதைக் காணலாம்: குருக்கேத்திரனுக்கு ஏற்படும் சிக்கல் ஒன்று; அருச்சுனனுக்கு ஏற்படும் சிக்கல் இன்னொன்று. குருக்கேத்திரனுக்கு ஏற்படும் சிக்கல் அருச்சுனன் அபயம் கொடுத்ததும் தீர்வு நிலையை அடைகிறது. அருச்சுனனுக்கு ஏற்படும் சிக்கல் அருச்சுனர் - கிருஷ்ணருடன் புரியும் சமரில் உச்சநிலை எய்தி சமாதானத்தில் முடிவடைகிறது.

*1 - 5* வரையுள்ள பகுதி அறிமுகம்: இதிலே கிருஷ்ணர், குருக்கேத்திரன், அவன் மனைவி ஆகியோர் அறிமுகம் செய்யப்படுகின்றனர். அத்தோடு கிருஷ்ணரின் கையில் தாம்பூலத்தை உமிழ; அத்தோடு சிக்கலுக்கான விதை ஊன்றப்படுகிறது.

*6 - 9* வரையுள்ள பகுதி சிக்கல்: கிருஷ்ணர் சக்கரத்தாழ்வாரை குருக்கேத்திரனைக் கொல்ல அனுப்புகிறார். இந்நிகழ்ச்சியுடன் குருக்கேத்திரனுக்குச் சிக்கல் ஏற்படுகிறது.

*10 - 14* வரையுள்ள பகுதி சிக்கலின் வளர்ச்சி: தனக்கு ஏற்பட்ட சிக்கலைத் தீர்க்கக் குருக்கேத்திரன் பலரிடமும் செல்கிறான். இறுதியில் இந்திரன் யோசனைப்படி அருச்சுனனிடம் செல்கிறான்.

*14 - 15* வரையுள்ள பகுதி உச்சம்: அருச்சுனன் குருக்கேத்திரனுக்கு அபயமளிக்கிறான். உண்மை அறிந்ததும் அருச்சுனன் யோசிக்கிறான். என்ன நடக்கும் எனப் பார்வையாளர்கள் எதிர்பார்க்கின்றனர். முடிவில் குருக்கேத்திரனின் சிக்கலைத் தீர்த்து அபயம் அளித்ததை உறுதிப்படுத்துகிறான்.

*15* ஆம் பகுதி முடிவு: அருச்சுனன், குருக்கேத்திரனைத் துரத்திவந்த சக்கரத்தாழ்வாரிடம் குருக்கேத்திரனுக்கு தான் அபயம் கொடுத்துவிட்டதாகக் கூறி, கிருஷ்ணரிடம் அனுப்பி வைக்கிறான். *15* ஆம் பகுதிக்குப் பிறகு மீண்டும் ஒரு சிக்கல் வளர்கிறது. இது அருச்சுனனுக்கு ஏற்படும் சிக்கல்.

### குருக்கேத்திரன் போர் நாடகத்தில் வரும் இரண்டாவது சிக்கல்

*15 - 18* வரை: இப்பகுதி இரண்டாவது சிக்கல் எனலாம். சாத்தகியை கிருஷ்ணர் அழைத்து, அருச்சுனனிடம் தூதுபோக ஏவுவதுடன் இரண்டாம் சிக்கலுக்கான விதை ஊன்றப்படுகிறது.

*19 - 20* வரை: தருமர் தம்பிமாருடன் யோசித்து குருக்கேத்திரனுக்கு அபயம் கொடுப்பது எனத் தீர்மானிப்பதனாலும், நாரதர், அருச்சுனன் மீது கட்டாயம் படை எடுக்க வேண்டுமெனக் கிருஷ்ணரிடம் கூறுவதனாலும் சிக்கல் மேலும் வலுவடைகிறது.

*21 - 29* வரை: கிருஷ்ணன் துரியோதனன் உதவி நாடி படை எடுப்பதும், பாண்டவரைக் கொல்லலும் என்பவற்றினூடாகச் சிக்கல் வளர்ச்சி அடைகிறது.

*30* ஆம் பகுதி: இப்பகுதி உச்சநிலையை அடைகிறது. கிருஷ்ணர் - அருச்சுனன் யுத்தத்தில் அருச்சுனன் சக்கராயுதத்தை எடுப்பது உச்சம். முடிவு என்ன என்று பார்வையாளரை நோக்க வைக்கின்றது இக்கட்டம்.

*31 - 32* வரை: இப்பகுதி முடிவு ஆகும். கிருஷ்ணரும் அருச்சுனனும் சமாதானமானதும், அருச்சுனனின் சிக்கல் தீருகின்றது. துரியோதனன் கோபித்துக்கொண்டு செல்ல, கிருஷ்ணர் பாண்டவரை எழுப்பி அவர்களை வாழ்த்திவிட்டுச் செல்ல, நாடகம் முடிவுக்கு வருகின்றது. இந்நாடகம் இரண்டு நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது. ஒன்று கிருஷ்ணருக்கும் குருக்கேத்திரனுக்கும் ஏற்படும் முரண் நிகழ்ச்சி. மற்றது அருச்சுனனுக்கும் கிருஷ்ணருக்கும் ஏற்படும் முரண் நிகழ்ச்சி. வடமோடி நாடகங்களில் பெரும்பாலானவை இவ்வாறே ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளன. ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள் வருவதனால் ஒன்றுக்கு மேற்பட்ட முடிவுகளும் இந்நாடகங்களில் இடம்பெறுகின்றன. நாடகக் கட்டுக்கோப்புக் குறைந்து நிகழ்ச்சிகளைத் தொடராகக் கூறுவதுபோல வடமோடி நாடகங்கள் அமைந்து விடுவதனையும்



Image Source : www.battinews.com

"அவை மிகுதியாக இதிகாச, புராண நிகழ்ச்சிகளாக இருப்பதனால் நாடகத்தின் முன்பின் நிகழ்ச்சிகளை நீக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அவற்றையும் நாடகம் காண்போர் நன்றாக அறிந்தே இருப்பர். ஆகையினால் நாடக ஆசிரியர்கள் இதிகாசங்களின் தொடக்கம், முடிவு ஆகியவையின்றி சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளையே நாடகமாக எழுதியுள்ளனர். அவற்றில் இத்தகைய பிரிவுகளை ஒழுங்காக எதிர்பார்க்க இயலாது. மேலும் கதைகள் பல சிக்கல்களைக் கொண்டு இருப்பதால் இடையிடையே தீர்வுகளைக் கண்டவாறு கட்டுக்கோப்பு அமைகிறது."

காண முடிகிறது. இன்னும் சில வடமோடி நாடகங்களின் அமைப்பினை நோக்கின் இவ்வுண்மை இன்னும் உறுதிப்படும்.

### தென்மோடி நாடகங்களுக்கும், வடமோடி நாடகங்களுக்குமிடையே நாடகக் கட்டுக்கோப்பிற் காணப்படும் வேறுபாடுகள்

தென்மோடி நாடகங்கள் பெரும்பாலும் ஒரு நாடகத்திற்குரிய ஆரம்பம், சிக்கல், வளர்ச்சி, உச்சம், முடிவு என்ற படிநிலைகளைக் கொண்டவையாக அமைகின்றன. ஒரு நிகழ்ச்சியைத் தன்னுட் கொண்டதாய், அதனை நோக்கி நாடகம் ஒருமைப்பாட்டுடன் நகரும் வகையில் அவை ஆக்கப்பட்டுள்ளன. ஆனால் வடமோடி நாடகங்களிற் பெரும்பாலும் இப்பண்பினைக் காண முடியாது. வடமோடி நாடகங்களிற் பெரும்பாலானவை ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளையும், சிக்கல்களையும், ஒன்றுக்கு மேற்பட்ட முடிவுகளையும் உடையவையாக அமைகின்றன. இதனால், தென்மோடி நாடகங்களிற் காணப்படும் நாடகக் கட்டிறுக்கம் வடமோடி நாடகங்களிற் காணப்படுவதில்லை. வடமோடி நாடகங்களிற் காணப்படும் இந்நாடகக் கட்டிறுக்கமின்மை எனும் பண்பு, 19 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் எழுந்த நாட்டார் நாடகங்களிலும் காணப்படுகின்றது என்பர் ஏ.என். பெருமாள். அதற்கான காரணத்தை அவர் பின்வருமாறு கூறுகிறார்.

பத்து நாடகங்களை எடுத்து அவற்றின் போக்கினைப் பற்றிக்கூறும் அவரது கூற்றுகள் பெரும்பாலும் வடமோடி நாடகங்களுக்கே பொருந்துவனவாயுள்ளன. வடமோடி நாடகங்களில் பெரும்பாலும் இதிகாச, புராண நிகழ்ச்சிகள் கூறப்படுவதால் அங்கு மைய நோக்கோ, பிரதான நிகழ்ச்சியோ, சிக்கலோ, அதனை நோக்கிய வளர்ச்சியோ எழ வாய்ப்பில்லை. நிகழ்ச்சிகளை ஒழுங்குபடக் கூறுதல் மாத்திரமே அங்கு பிரதானம். சுருங்கச் சொன்னால் புராண, இதிகாச நிகழ்ச்சிகள், அறிமுகப்படுத்தப்பட்டிருந்த ஒரு நாடக வடிவத்திற்குள் திணிக்கப்படுகின்றன; அவ்வளவே. இதனாலேயே தென்மோடி நாடகங்களுக்குரிய நாடகக் கட்டிறுக்கம் வடமோடி நாடகங்களுக்கு இல்லாமற்போயிற்று எனலாம். எனினும், வடமோடி மரபில் ஆடப்படும் எல்லா நாடகங்களையும் இக்குற்றச்சாட்டுக்குள் அடக்க முடியாது.

இராமநாடகம், தருமபுத்திர நாடகம் போன்ற முழு இதிகாசக் கதைகளைக் கருக்களாகக்கொண்ட வடமோடி நாடகங்களிலும், வீரகுமாரன், பத்மாவதி, கமலாவதி போன்ற கற்பனைக் கதைகளைக் கருவாகக்கொண்ட வடமோடி நாடகங்களிலும் தென்மோடி மரபில் காணப்படும் நாடகக் கட்டிறுக்கத்தினையும், படிமுறை வளர்ச்சியினையும் காணமுடியும். அதற்குக் காரணம் இராமநாடகம் இதிகாசத்தில் வரும் நிகழ்ச்சிகளையன்றி இதிகாசம் முழுவதையும் கருவாகக் கொண்டிருப்பதேயாகும்.

வீரகுமார நாடகமும் இவ்வாறேயாகும். வீரகுமார நாடகத்தின் கரு முழுமையான ஒரு கற்பனைக் கதையே. கற்பனைக் கதைகளாயினும் தனித்தனி நிகழ்ச்சிகளாகவன்றி முழுமையான கதைகளைக் கருக்களாகக் கொண்டெழுந்த பத்மாவதி நாடகம், கமலாவதி நாடகம், பகையை வெல்லல் நாடகம், கனகசுந்தரன் நாடகம் போன்ற வடமோடி நாடகங்கள் பெரும்பான்மை வடமோடி நாடகங்களைப் போல பல சிக்கல்களையும், பல முடிவுகளையும் கொண்டிராது, ஒரு சிக்கலையும், ஒரு முடிவினையும் கொண்டு தென்மோடி நாடகங்கள் போன்ற நாடகக் கட்டமைப்பினைக் கொண்டனவாகவுள்ளன.

மேற்குறிப்பிட்ட நாடகக் கட்டமைப்புடைய நாடகங்களின் கருக்கள் ஒரு முடிவு கொண்ட கதைகளாகும். ஆனால் பல வடமோடி நாடகங்களின் கருக்களாக இருப்பவை, இதிகாசங்களில் வரும் நிகழ்ச்சிகளே. நிகழ்ச்சிகள் கருக்களாக அமைகையில் இக்கட்டிறுக்கம் குறைவது முன்னரேயே உதாரணம் மூலம் விளக்கப்பட்டது. எனவே நிகழ்ச்சிகள் நாடகமாக்கப்படுகையில் நாடகக் கட்டிறுக்கம் குறைகிறது என்பர் சில ஆய்வாளர்கள். ஆனால் அதனையும் ஒரு நாடகக் கட்டமைப்பு என நோக்கின் புரிதல் இன்னும் கூடுதல் அடையும்.

கற்பனைக் கதைகளை வடமோடி நாடக மரபில் ஆக்கும்பொழுது, தென்மோடி மரபுக்குரிய நாடகக் கட்டமைப்பைப் புலவர்கள் பின்பற்றியமையினாலேயே, வடமோடி மரபில் எழுந்த சில நாடகங்களில் தென்மோடி மரபுக்குரிய அமைப்பு வந்தது எனக் கொள்ளல் பொருத்தம் போலத் தெரிகிறது. ஆனால் வடமோடி தனக்கென தனிக் கட்டமைப்பை உடையதாகவும், உச்சங்களைக் கொண்டதாக இருப்பதுமாகவும் ஒரு தோற்றம் காட்டுவது இங்கு நுனித்து நோக்கற்குரியது.

இவற்றினின்று நாம் பின்வரும் முடிவுகளுக்கு வரமுடியும்:

1. தென்மோடி மரபு பெரும்பாலான சிறந்த நாடகங்களுக்கு உரிய பண்பான சமஸ்கிருத நாடகக் கட்டுக்கோப்பினைக் கொண்டிருந்தது.

2. வடமோடி மரபில் அதிக நிகழ்ச்சிகள் முக்கியம் பெறுவதனால் இக்கட்டுக்கோப்புப் பண்பு இருக்கவில்லை. இதற்கான காரணங்கள், அவை தத்தமக்கெனத் தெரிந்துகொண்ட கதைக் கருக்களாகும்.

3. புராண இதிகாசக் கதைகளை நாடகமாக்குகையில் தென்மோடி மரபு, நிகழ்ச்சிகளை விடுத்து ஒரு நிகழ்ச்சியையே முதன்மைப்படுத்தி நாடகமாக்கியது.

4. கற்பனைக் கதைகளை நாடகமாக்கும்போது, வடமோடி தென்மோடியைப் பின்பற்றி ஒரு கட்டமைப்பைக் கொணர்ந்தது.

5. எனவே பிற்கால வடமோடி நாடகங்கள் தமக்குரிய கட்டமைப்பைத் தென்மோடியைப் பார்த்து ஆக்கிக் கொண்டன.

இப்படிச் சொல்வது கூட விவாதத்திற்குரியது. அந்த விவாதத்திற்குரிய ஆரம்பப் புள்ளியாக இந்தக் கட்டுரையைக் கருதலாம். இது பற்றி மேலும் ஆய்வுகள் தேவை.

இங்கு நான் மட்டக்களப்பில் ஆடப்படும் நாடகங்கள் இரண்டை வைத்தே இந்த முடிவுக்கு வந்துள்ளேன். யாழ்ப்பாணத்திலும், முல்லைத்தீவிலும், மலையகத்திலும், மன்னாரிலும் முழுமையான கூத்துகள் ஆடப்படுகின்றன. முழுமை பெற்ற ஆட்டக் கூத்துகளை நாம் வடமோடி, தென்மோடி என்ற இரு பிரிவுக்குள் அடக்கிவிடலாம். இப்போது நான் கூறும் இந்த முடிவு ஏனைய பிரதேசக் கூத்துகளுக்கும் பொருந்தும் என்பதே எனது கருதுகோள். ஆய்வுதான் இதனை உறுதிசெய்யும்.

## முடிவு

இந்த வகையில் இந்த இடத்தில் ஈழத்துக் கூத்திலே நான்கு வகையான நாடகக் கட்டமைப்புகளைக் காணுகிறோம்.

1. கிரேக்க மரபு கூறும் நாடகக் கட்டமைப்பு (அன்ரிகனி, ஈடீபஸ்).

2. சமஸ்கிருத மரபு கூறும் செந்நெறி இந்திய நாடகக் கட்டமைப்பு (சாகுந்தலம், மிருச்சகடிகம்).

3. சமஸ்கிருத செந்நெறி நாடக மரபைப் பின்பற்றி எழுந்த பிரதேச நாடக மரபுக் கட்டமைப்பு (தமிழ் கூத்துகள் - விசேடமாக தென்மோடி நாடகங்கள்: அனுருத்திரன், அலங்காரரூபன்).

4. தமிழர் மத்தியிலிருந்த பல உச்சங்களைக்கொண்ட ஒரு நாடகக் கட்டமைப்பு (தமிழ்க் கூத்துகள் - பப்பிரவாகன் நாடகம், வீரகுமாரன் நாடகம்).

ஈழத்துக் கூத்துகளின் கட்டமைப்பை நாம் இவ்வாறு புரிந்துகொள்ளலாம். அடுத்து அதன் ஆட்டப்பிரகாரம், அளிக்கை முறை என்பவற்றைப் பார்ப்போம்.



சின்னையா மௌனகுரு

# கூத்தின் ஆட்ட முறைகளும் அதன் ஆற்றுகை அமைப்பும்

#### கூத்துப் பிரதியும் ஆற்றுகைப் பிரதியும்

சென்ற முறை நாங்கள் கூத்தின் நாடக அமைப்பைப் பார்த்தோம். அது கூத்தினுடைய எழுத்துப் பனுவல் அல்லது எழுத்துப் பிரதி அமைக்கப்படுகின்ற முறை. இந்தப் பனுவலே மேடையில் ஆற்றுகை வடிவம் பெறுகிறது. எழுத்தில் உள்ள பனுவலில் அல்லாத மிகப் பல விஷயங்கள் மேடையிலே நடைபெறும். பனுவல் படிக்கும் அனுபவம் வேறு; பனுவலில் உள்ளவற்றைக் காட்சியாக மேடையில் பார்க்கும் அனுபவம் வேறு. இரண்டும் இரண்டு வேறு உலகங்கள் - ஒன்று கற்பனை உலகு, மற்றது காட்சி உலகு. கற்பனை உலகிலும் காட்சிகள் தோன்றும்; காட்சி உலகிலும் கற்பனைகள் தோன்றும். அது இரசிகரின் மனோவியலைப் பொறுத்தது.

கூத்தின் இந்த ஆற்றுகைகள் சம்பந்தமான குறிப்புகள் ஒருபோதும் கூத்தின் எழுத்துப் பிரதியிலே காணப்பட மாட்டாது. பிரதியை வாசிக்கையில் அங்கே விருத்தம், தரு, மறு தரு, தர்க்கத்தரு, அகவல், கொச்சகம், வெண்பா, கந்தார்த்தம் என்ற தலைப்புகளின் கீழ் பாடல்கள் மட்டுமே காணப்படும். ஆடும் முறை பற்றிய குறிப்புகள் காணப்பட மாட்டாது. அந்தப் பிரதியினையே அண்ணாவியார் உதவியுடன் கூத்தர்கள் ஆற்றுகை செய்கின்றார்கள். எனவே, கூத்துக்கு இரண்டு பிரதிகள் உள்ளன என நாம் கூறலாம்: ஒன்று எழுத்துப் பிரதி, இன்னொன்று மேடைப் பிரதி.

மேடைப் பிரதி என ஒன்று உண்டா? என்று நீங்கள் கேட்கலாம். ஆம், அதற்கும் ஒரு மேடைப் பிரதி உண்டு. ஆனால் அது தூலமானதாக இல்லை. அது பிரதானமாக அண்ணாவியாரின் மூளைக்குள்ளும், கூத்தை ஆற்றுகை செய்வோரின் மூளைகளுக்குள்ளும் சூக்குமமாக மறைந்து கிடக்கிறது. அவர்கள் முன்னோர் செய்ததை அவர்கள் பார்த்து, கேட்டு அதேபோலவே செய்கிறார்கள். எனவே ஆற்றுகை மீளச் செய்யப்படுகிறது.

(ஒன்றை அதேபோல் மீளச் செய்ய முடியுமா என்ற விவாதத்தில் நான் இச்சமயம் இறங்க விரும்பவில்லை. பின்னால் இது பற்றி எழுதுவேன்.)

#### ஆட்டப்பிரதி

ஒரு வகையில் ஆட்டப் பிரதி என்பது எழுதப்படாத பிரதியாகும்; ஒருவகையில் வாய்மொழிப் பிரதி. ஆற்றுகை என வந்த பிறகு அது மனிதர் சம்பந்தப்பட்டு விடுகிறது அல்லவா? முக்கியமாகக் கூத்தைப் பழக்கும் அண்ணாவியார், பழகும் நடிகர்கள் என்பவர்களோடு, உளம் - உடலும் சம்பந்தப்பட்டுவிடுகின்றன. எனவே அது எழுத்துப் பிரதியிலிருந்து மிக மிக வேறுபட்டுவிடுகிறது. விதிக்கப்பட்ட தாளக்கட்டுகளாக இருந்தாலும், அதாவது ஒரே தாளக்கட்டுகளாக இருந்தாலும், ஆட்டமுறையை வெளிப்படுத்தும் திறன் ஆளுக்கு ஆள் வேறுபடுவது இதனாலேதான். இந்த ஆட்டம், இந்த ஆற்றுகை எவ்வாறு நிகழ்த்தப்படுகிறது என்பது அடுத்த வினா. ஈழத்துக் கூத்துகள், ஒன்றல்ல, பல என்பது நாம் அறிந்த விடயம்.

#### கூத்து வகைகளும் ஆட்ட வகைகளும்

பிரதேசத்துக்குப் பிரதேசம் ஆடப்படும் கூத்து வகைகளிலும், நிகழ்த்தப்படும் முறைகளிலும் வேறுபாடுகள் உண்டு. மகுடிக் கூத்து, வசந்தன் கூத்து, காத்தவராயன் கூத்து, தென்மோடி - வடமோடிக் கூத்துகள், வாசாப்பு நாடகம், கோவலன் கூத்து, காமன் கூத்து, பொன்னர் - சங்கர், அருச்சுனன் தபசு என்பன இலங்கையில் தமிழர் மத்தியில் இன்றும் வழக்கிலுள்ள கூத்துகளாகும். இவை யாவும் ஒரு வகையில் கதை தழுவியவை. அதாவது, ஏதோ ஒரு கதையை நாடகமாக நடிப்பவை. ஆனால் ஆற்றப்படும் முறைகளில் வித்தியாசம் உண்டு.

மகுடிக் கூத்து திறந்த வெளியிலே பகல் நேரத்தில் ஆடப்படுவது. வசந்தன் கூத்தோ கோயில் வெளியிலே பட்டப்பகலில் ஆடப்படுவது; சிலவேளைகளில் சற்று உயர்த்தப்பட்ட மேடையில் ஆடப்படுவது. காத்தான் கூத்து, முப்பக்கம் அடைக்கப்பட்ட மேடையிலே, பின்னணியில் வரையப்பட்ட காட்சிகள் கொண்ட திரைகள் கட்டி நடத்தப்படுவது. யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் தென்மோடிக் கூத்து, வடமோடிக் கூத்து ஆகியவை முப்பக்கம் அடைக்கப்பட்ட மேடையிலே, காட்சிகள் வரையப்பட்ட திரைச்சீலைகள் கட்டி நடத்தப்படுகின்றன. மலையகத்தில் ஆடப்படும் காமன் கூத்து வெட்டவெளியில் நடத்தப்படுகின்றது. பொன்னர் - சங்கர், அருச்சுனன் தபசு ஆகியவையும் அவ்வாறே நடத்தப்படுகின்றன. மட்டக்களப்பில் நடத்தப்படுகின்ற வடமோடி, தென்மோடி கூத்துகள் வட்டக்களரியிலே ஆடப்படுகின்றன.

இன்று பொதுவாக கழகங்களும், பாடசாலைகளும் போடுகின்ற கூத்துகள் முப்பக்கம் அடைக்கப்பட்ட படச்சட்ட மேடைக்குள் தான் பெரும்பாலும் ஆடப்படுகின்றன. மேடைக்குத் தகுந்த ஆட்டங்களும் ஆட்ட வடிவங்களும் அமைந்திருப்பதை இப்போது காண்கிறோம். வெட்டவெளியில் ஆடப்பட்ட ஒருவகைக் கூத்துகள், உயர்த்தப்பட்ட மேடைகளில் ஆடப்பட்டு, பின்னர் வட்டக்களரியிலே ஆடப்பட்டு,

பிரதேசத்துக்குப் பிரதேசம் ஆடப்படும் கூத்து வகைகளிலும், நிகழ்த்தப்படும் முறைகளிலும் வேறுபாடுகள் உண்டு. மகுடிக் கூத்து, வசந்தன் கூத்து, காத்தவராயன் கூத்து, தென்மோடி – வடமோடிக் கூத்துகள், வாசாப்பு நாடகம், கோவலன் கூத்து, காமன் கூத்து, பொன்னர் – சங்கர், அருச்சுனன் தபசு என்பன இலங்கையில் தமிழர் மத்தியில் இன்றும் வழக்கிலுள்ள கூத்துகளாகும். இவை யாவும் ஒரு வகையில் கதை தழுவியவை. அதாவது, ஏதோ ஒரு கதையை நாடகமாக நடிப்பவை. ஆனால் ஆற்றப்படும் முறைகளில் வித்தியாசம் உண்டு.

அதன்பின் படச்சட்ட மேடைக்குள் ஆடப்படும் போக்கை வரலாற்றுக்கூடாக நாம் காணுகின்றோம்.

ஆடப்படும் மேடைக்கு ஏற்ப அதன் நிகழ்த்துகை, ஆட்ட முறைகள் அமைந்து விடுவதனையும் அல்லது மாறிவிடுவதனையும் மாற்றி அமைக்கப்படுவதனையும் காணுகிறோம். கூத்து நிகழ்த்தப்படும் மேடைக்கும், கூத்து ஆட்ட முறைக்கும் இடையே காணப்படும் பரஸ்பர ஊடாட்டம் இன்னும் நுணுக்கமாக ஆராயப்பட வேண்டும்.

வசந்தன் கூத்து, மகுடிக் கூத்து ஆகியவை வளர்ச்சி அடைந்த கூத்துகளுள் அடங்காது என்பர் சிலர். அதில் உண்மையுமுண்டு. தமக்கென ஒரு நாடக அமைப்பையும், எழுத்துப் பிரதியையும், நாடகக் கட்டுக்கோப்பையும் உடையவையாக அமைந்தவையே, வளர்ச்சி பெற்ற கூத்துகள் எனப்படும் ஏனைய கூத்துகள்.

### வளர்ச்சி பெற்ற கூத்துகளின் ஆட்ட வகைகளும் ஆட்ட முறைமைகளும்

வளர்ச்சி அடைந்த கூத்துகளாக கருதப்படுபவை யாவும், ஒரு காலத்திலே, ஏறத்தாழ 100-200 வருடங்களுக்கு முன்னரே, இலங்கை எங்கணும் தமிழர் பிரதேசங்களில், மக்கள் சூழ இருந்த வட்டக்களரியிலே தான் ஆடப்பட்டன என்பதை ஆய்வுகள் கூறுகின்றன. இங்கு நான் வட்டக்களரியில் ஆடப்படும் அந்தக் கட்டுக்கோப்பான ஆட்ட முறைகளையும், ஆற்றுகை முறைகளையுமே தருகின்றேன்.

கூத்துகள், ஆற்றுகை நிலையில், அடிப்படையில் மூன்று அம்சங்களைக் கொண்டுள்ளன:

1. தாளக்கட்டுகள்

2. ஆட்டக் கோலங்கள், ஆட்டங்கள்

3. தத்தமக்கான இசை வடிவங்கள்

இந்தத் தாளக்கட்டுகளும், அதனோடு அமையும் ஆட்ட வடிவங்களும், அதனோடு பிணையும் பாடல் வடிவங்களும் இணைந்த ஒன்றுதான் கூத்தின் உயிர்நிலை. 'கூத்து' என்பதன் அர்த்தமே ஆடப்படுவது என்பதாகும். அதனைச் சிறப்பிக்கவே ஒப்பனை, உடை, பின்னணி, வாத்தியங்கள் எல்லாம் இணைந்து கொள்கின்றன. இந்தப் பின்னணியில் வடமோடி, தென்மோடிக் கூத்துகள் ஆற்றுகை செய்யப்படும் முறையினைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

ஒரு கூத்திலே பாத்திரங்கள் தனியாகவும் வரும், பலவாகவும் வரும். பாத்திரங்கள் வந்து நின்றதும் அவர்களுக்கு முன்பாகச் திரைச்சீலை பிடிக்கப்படும். இந்தத் திரையின் பின்னணியிலேயே பாத்திரங்கள் தம்மை அறிமுகம் செய்யும், அல்லது அண்ணாவியார் அறிமுகம் செய்வார்.

### வடமோடி ஆற்றுகை முறை

வடமோடியில் பாத்திரம் தன்னை அறிமுகம் செய்யும்; தென்மோடியில் பாத்திரத்தை அண்ணாவியார் அறிமுகம் பண்ணுவார். திரை விலகியதும் ஒரு வரவுத் தாளம் ஆரம்பிக்கப்படும். அந்தத் தாளக்கட்டு அந்தப் பாத்திரத்தின் தன்மையை வெளிக்காட்டுவதாக அமையும். அந்த வரவுத் தாளத்திற்கு என்று வடமோடியில் வேறு ஆட்டக்கோலங்களும், தென்மோடியில் வேறு ஆற்றுகைக் கோலங்களும் உண்டு.

வடமோடியில் தாளக்கட்டுக்கு ஏற்ப நிற்றல், திரும்பல், வலது பக்க வீசாணம், இடது பக்க வீசாணம் (அதாவது சிறு வட்டம்), எட்டு (எட்டு எனும் இலக்கத்தில் ஆடுதல்), பொடியடி, ரத்து, ஒய்யாரம் போன்ற ஆட்டக்கோலங்கள் செய்து தாளம் தீர்ப்பார்கள். தாளம் தீர்த்தல் ஆட்டத்தின் முத்தாய்ப்பு; அது “தா தெய்யத் தா தளாங்கு ததிங்கிண தோம்” என முடியும்.

இந்த ஆட்ட அமைப்பும் ஆட்டக்கோலங்களும் ஒரு கேத்திர கணித முறையில் அமைந்திருப்பதை, அதனை



நுணுக்கமாக நோக்குவோர் அறிவர். கேத்திர கணித முறை என நான் இங்கு கூற வருவது, எல்லாம் அளவொத்துச் சமபங்காக இருப்பதாகும். வலது பக்கம் அசைக்கும் கைபோல் இடது பக்கமும் அசைத்தல்; வலது பக்கம் ஒரு சிறு வட்டம் போட்டால், இடது பக்கமும் அதேபோல ஒரு வட்டம் போடல். இந்தக் கேத்திர கணித முறை அமைப்பை நாம் பரத நாட்டியத்திலும் காணலாம். பரத நாட்டியத்தில் அந்த ஆட்ட முறைகளை விளக்கி நூல்கள் வந்த அளவிற்கு, கூத்து ஆட்ட முறைகளை விளக்கி நூல்கள் வெளிவராமை துரதிர்ஷ்டமே.

வடமோடி ஆட்டமுறை இயங்கும் நிலையை அவதானித்தால், ஒரு பக்கம் பார்வையாளரை நோக்கிப் பாத்திரத்தின் வரவு அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். வடமோடியில் ஒவ்வொரு பாத்திரத்துக்கும் ஒவ்வொரு தாளக்கட்டு இருக்கும். அரசருக்குரிய தாளக்கட்டில் ஒரு ராஜ கம்பீரம் இருக்கும். உதாரணம்,

*தத் தாங்கிட தரிகிட திமி தக*

*தா தாகிட தாகிட தோம் தரி*

வீரர்களுக்குரிய தாளக்கட்டு இன்னும் கம்பீரமாக இருக்கும். உதாரணம்,

*தாகிணங் கிட ததிந்தத் தத்துமி*

பெண்களுக்கு உரிய தாளக்கட்டுகள் நளினமாக இருக்கும். உதாரணம்,

*நாதர் தில்லானா தோம்தரிதாம் - தெய்ய*

*நாதர் தில்லானா தோம் தரி தெய்*

குதிரைக்குத் தனித் தாளக்கட்டு உண்டு. உதாரணம்,

*தக ஜொணு தகதிமி தாம் தாம் தாம் தெய்*

*தகஜொணு தக திமி தெய்*

அஃறிணைப் பொருட்களுக்குரிய தாளக்கட்டுகள் வித்தியாசமாக இருக்கும். பறையறைவோன், வேடன் போன்ற 'தாழ்நிலை'ப் பாத்திரங்களுக்கு மேலே சொன்ன தாளக்கட்டுகளைப் பாவிக்க மாட்டார்கள். அதற்கு,

*தெந்தின தின தினானா தினாதின*

எனும் இசைக்கட்டுகளைப் பாவிப்பர். பாத்திரங்களுக்கிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் தாளக்கட்டுகளிலும் உண்டு என்பதை நாம் இங்கு அவதானிக்க வேண்டும்.

இதன் தாளக்கட்டுகள், அதன் இசை அளவுகள் பற்றி இதுவரை யாரும் ஆராய்ந்ததில்லை. இப்போதுதான் ஒருவர் தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்ட ஆய்வுக்கு அதனைச் செய்துகொண்டிருக்கிறார்.

வடமோடிக் கூத்து, வரவுத் தாளக்கட்டு முடிந்தபின், கூத்தின் கதையை வட்டமாக ஆடியபடி, பாத்திர உரையாடலுக்கூடாக வளர்த்தெடுக்கப்படும். இந்த ஆற்றுகை, கதையை, வட்டமாகச் சுற்றிச்சுற்றி ஆடிப்பாடிக் கொண்டு செல்லும். இவ்விடத்தில் கூத்து இசை முக்கியமானதாக அமையும். மேலோட்டமாக இதன் இசையை அவதானித்த சில இசை வல்லுநர்கள், இதில் கர்நாடகச் சாயல் கொண்ட இசை அமைந்திருப்பதாகக் கூறியுள்ளனர். வடமோடிக்

கூத்தின் இசை பற்றியும் இதுவரை யாரும் ஆராய்ந்ததில்லை. இப்போதுதான் ஒருவர், அதிலும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில், இது பற்றிய கலாநிதிப் பட்ட ஆய்வை முடித்திருக்கிறார்.

### தென்மோடி ஆற்றுகை முறை

தென்மோடியிலும் வரவுத் தாளக்கட்டுக்குத் திரைபிடிக்கப்படும் பாத்திரத்தின் வரவுப் பாடலை அண்ணாவியாரே பாடுவார். இங்கு, வடமோடி போல பாத்திரம் பாடாது. திரை நீக்கப்பட்டதும் பாத்திரம் அசைந்து ஆடி வர நாடகம் ஆரம்பமாகும். வட்டக் களரியைச் சூழவிருக்கும் பார்வையாளரைப் பார்த்தபடி, வடமோடி போலவே தென்மோடிக் கூத்தும் ஆடப்படும்.

#### வடமோடி - தென்மோடி ஆட்ட வித்தியாசங்கள்

தாளக்கட்டுகளைக் கூறி ஆடும் முறையிலேயே தென்மோடிக்கும் வடமோடிக்கும் இடையே பெரிய வித்தியாசங்கள் உண்டு. வடமோடியில் ஒவ்வொரு பாத்திரத்துக்கும் ஒவ்வொரு தாளக்கட்டு இருப்பது போல, தென்மோடியில் இல்லை.

இங்கே ஆண்களுக்குரிய தாளக்கட்டு, பெண்களுக்குரிய தாளக்கட்டு, இந்த இரண்டு சாராரிலும் அடங்காத மற்றோருக்குரிய தாளக்கட்டு என மூவகைத் தாளக்கட்டுகளே உள்ளன. உதாரணமாக ஆண்களுக்குரிய தாளக்கட்டுகள் இவ்வாறு ஆரம்பமாகும்:

ததிதுளாதக ததிங்கிண திமிதக தாதெய்யத் தாதோம்

பெண்களுக்குரிய தாளக்கட்டு இவ்வாறு ஆரம்பமாகினும் இடையில் இவ்வாறு மாறுபடும்:

தாகத் தாகத் தாகத் தெய் தாதகம் தத்துமி

தெய்யத் தெய்யத் தெய்யத் தெய்

இதனைத் தொடர்ந்து பெண்களுக்குரிய அழகான நளினமான தாளக்கட்டுகளும் ஆட்டக்கோலங்களும் இடம்பெறும்.

இந்தப் பாத்திரங்கள் தவிர ஏனைய பாத்திரங்கள் பின்வரும் தாளக்கட்டுகளுக்கு இயைய ஆடும்:

ததிங்கிண தித்தா

ததிங்கிண தித்தா

அடிப்படைத் தாளக்கட்டுகளுக்கு இயைய பல ஆட்டக்கோலங்கள் ஆடப்படும். இதற்குக் கால் மாறி ஆடுவர்; இது ‘சீரணி’ என அழைக்கப்படும்.

### அவதானிக்க வேண்டியது

தென்மோடி வரவுத் தாளத்திற்கு பாத்திரம் அசைதலும் ஆடுதலும், அதன் பிறகு ஆட்டம் முன்னோக்கி நகர்வதும், வடமோடி போல முன்னோக்கி வருவதாக அன்றி வேறுவிதமாக அமைந்திருக்கும். அதாவது நாலு பக்கத்துக்கும் சென்று சுற்றிச்சுற்றி ஆடி வருவதை நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது. அதனை நுணுகி நோக்கினால், அதுவே ஒரு வட்டக்களரிக்குரிய ஆட்ட முறையாக இருப்பதைக் காணலாம்.

இந்த வகையிலே தென்மோடி ஆட்டமுறைகள் வட்டக்களரிக்குரிய கூத்து வடிவமாக அமைந்து, களரியைச் சுற்றி வட்ட வடிவமாக அமர்ந்திருக்கும் பார்வையாளருக்குத் தக்க அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதும், வடமோடி ஆட்டமுறைகள் ஒரு பக்கப் பார்வையாளரை நோக்கிச் செல்லும் வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதும் அவதானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த நுணுக்கத்தைப் பலர் அவதானிப்பதில்லை.

வடமோடி முறையில் ஆடப்பட்ட கூத்துகளை, பின்னால் மட்டக்களப்புக் கூத்து மரபில் அன்று பிரபலமாக இருந்த தென்மோடிக் கூத்து மரபு தன் வட்டக்களரி அமைப்புமுறைக்குள் உள்வாங்கிக் கொண்டதோ என்பது ஆராயப்பட வேண்டியது.

### கால்களைத் தரையில் வைக்கும் முறை

கால்களை வைத்து ஆடும் முறையிலும் இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. வடமோடியில் இரண்டு பாதங்களையும் நிலத்தில் அழுத்தி உராய்ந்து ஆடுதல் மரபு என்பர். இதனால் இதன் ஆட்டமுறையில் ஓர் அழுத்தமும் இறுக்கமும் காணப்படும். தென்மோடியில் விரல் நுனிகளையும், முக்கியமாக முன் அடிப்பாதத்தையும், பாதத்தின் பின் இரு குதிகளையும் மாறிமாறிக் குத்தியபடி எழுந்து எழுந்து குதித்து ஆடுதல் மரபு என்பர். இதனால் இந்த ஆட்டமுறையில் ஒரு துள்ளலும் நளினமும் காணப்படும்.

ஒரு கூத்தின் ஆட்டமுறையினைப் பார்த்து இது தென்மோடியா அல்லது வடமோடியா என்பதை ஒரு நுணுக்கமான பார்வையாளன் அல்லது ஓர் அண்ணாவியார் கண்டுபிடிப்பார். இது பற்றி மிக விவரமாக விளக்கப்படங்களுடன் எனது ‘மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்’ எனும் நூலிலே தந்திருக்கிறேன். மேலும் விவரமாக இது பற்றி அறிய விரும்புவோர் அதைப் படித்து அறிந்துகொள்ளலாம். அடுத்து, இந்தக் கூத்து முறை ஈழத்தில் ஆரம்பத்திலிருந்து வளர்ந்த முறையினைப் பார்ப்போம்.

கந்தையா சண்முகலிங்கம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

# இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அரசியல் விஞ்ஞானக் கல்வியின் வரலாறு

‘அரசறிவியல் கலைக்களஞ்சியம்’ (Encyclopedia Of Political Science) என்னும் தலைப்பில் அமையும் இத் தொடரில் அரசியல் கோட்பாடுகள் (Political Theories), அரசியல் விஞ்ஞான எண்ணக்கருக்கள் (Concepts) சமகால அரசியல் விவாதங்கள் என்பன குறித்த கட்டுரைகள் வெளியிடப்படவுள்ளன. பொதுவெளியில் (Public Sphere) நடைபெறும் அரசியல் விவாதங்களை ஆரோக்கியமுடையனவாக ஆக்குவதற்கு, அரசியல் கருத்தாக்கங்கள் குறித்த தெளிவான புரிதலை ஏற்படுத்துவதும், சமூகத்தின் பல மட்டங்களிற்கும் அரசியல் அறிவை எடுத்துச் செல்வதும் அவசியமான பணி என நாம் உணருகின்றோம். தமிழ் அரசியல் சூழலில் நிலவும் கோட்பாட்டு வறுமையை (Theoretical Poverty) நீக்குவதற்கு இக் கட்டுரைத் தொடர் உதவும் என்பது எமது நம்பிக்கை. தமிழ்ச் சமூகத்தில் அறிவியல் மூலதனம் (Intellectual Capital) ஒரு சிறு மேட்டிமைக் குழுவிடம் (Elite Group) குவிந்திருப்பதை நீக்கி, அறிவுச் செல்வத்தின் மறுபங்கீட்டின் மூலம் சமூக விடுதலை, ஜனநாயக மயப்படுத்தல், அடிமட்டத்தினர் அதிகாரத்தில் பங்கேற்றல் ஆகிய இலக்குகளை அடைதல் இத் தொடரின் நோக்கமாகும்.

*ஆங்கில மூலம்: ஏ.எம். நவரத்தின பண்டார, ஜயதேவ உயன்கொட*

## முன்னுரை

இலங்கையின் பல்கலைக்கழகங்களில் 'அரசியல் விஞ்ஞானம்' என்ற பாடம் ஒரு கல்வித் துறையாக வளர்ச்சியுற்ற வரலாற்றைப் பேராசிரியர் ஏ.எம். நவரத்தின பண்டாரவும், பேராசிரியர் ஜயதேவ உயன்கொடவும் இணைந்து எழுதியுள்ள 'Political Science and Public Policy: Cultivating the Critical Spirit' என்னும் தலைப்பிலான ஆங்கிலக் கட்டுரையில் விவரித்து எழுதியுள்ளனர். இக்கட்டுரை One Hundred Years of Humanities and Social Sciences in Sri Lankan Universities - Volume என்னும் கட்டுரைத் தொகுப்பு நூலில் (பக். 119 - 141) அமைந்துள்ளது. இக்கட்டுரையின் முற்பகுதியில் 119 முதல் 124 வரை 5 பக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளைத் தொகுத்தும் சுருக்கியும் தருவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## வரலாறு

1921 இல் இலங்கையில் பல்கலைக்கழகக் கல்லூரி (The University College) என்ற பெயரில் ஒரு கல்வி நிறுவனம் தாபிக்கப்பட்டது. இக்கல்லூரி லண்டன் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் கல்வி நிறுவனமாகச் செயற்பட்டது. அக்காலத்தில் பிரித்தானியப் பல்கலைக்கழகங்களில் அரசியல் என்னும் பாடம் வரலாறு, சட்டம், பொருளியல் என்ற துறைகளின் உபபிரிவாகவே இருந்து வந்தது. உதாரணமாக வரலாறு என்ற பாடத்தைக் கற்ற மாணவர்களிற்கு 'இங்கிலாந்து வரலாறு' கற்பிக்கப்பட்டது. அம்மாணவர்கள் 'இங்கிலாந்துப் பாராளுமன்ற முறையின் வளர்ச்சி' என்ற விடயத்தை அதன் ஊடாகக் கற்றனர். வரலாற்று மாணவர்கள் கற்ற இன்னொரு பாடமாக 'அரசியல் கோட்பாட்டின் வரலாறு' (History of Political Theory) என்ற பாடம் அமைந்தது. பண்டைக்காலம், இடைக்காலம், நவீனகாலம் ஆகிய மூன்று காலப்பகுதிகளிலும் மேற்கு நாட்டிலும், ஆங்கிலேயர் தேசத்திலும் ஏற்பட்ட வளர்ச்சிகள் பற்றி மாணவர்கள் இப்பாடம் மூலம் கற்றனர். பொருளியல் பாடத்தைக் கற்ற மாணவர்கள் மேற்கு நாட்டின் அரசியல் கோட்பாடும் அதன் வளர்ச்சியும் என்ற விடயத்தைக் கற்றனர். சட்ட மாணவர்கள் அரசியல் யாப்புச்சட்டம் (Constitutional Law) என்ற பாடத்தின் மூலம் இங்கிலாந்தின் அரசியல் யாப்பை பற்றிக் கற்றுக் கொண்டனர். பிரித்தானியாவின் கல்வி மரபைப் பின்பற்றிய இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி 'அரசியல்' என்னும் பாடத்தை பொருளியல், வரலாறு ஆகிய துறைகளின் ஊடாகக் கற்பிக்கும் நடைமுறையைப் பின்பற்றியது. 'Ceylon University College Prospectus 1936 - 37' எனும் கையேட்டில் தரப்பட்டுள்ள தகவல்களின் படி ஐந்து பல்கலைக்கழக ஆசிரியர்கள் அரசியல் எனும் பாடத்தை மாணவர்களுக்குக் கற்பித்தனர் என்பதை அறியமுடிகிறது.

1. பேராசிரியர் S.A. பேக்மன் - விரிவுரையாளர் - வரலாறு
2. பேராசிரியர் B.B. தாஸ்குப்தா - பொருளியல் - விரிவுரையாளர்.
3. திரு. W.J.F. லப்றோய் (W.J.F Labrooy) - வரலாறு - உதவி விரிவுரையாளர்
4. திரு. B.R. சொனி (B.R. Shony) - பொருளியல் - உதவி விரிவுரையாளர்.
5. உபவேந்தரான சேர். ஐவர் ஜெனிங்ஸ், அரசியல் யாப்புச்சட்டம் பற்றிக் கற்பித்தார்.

பல்கலைக்கழகக் கல்லூரிக் காலத்தில் செவ்வியல் இலக்கியம் (Classics), மெய்யியல், வரலாறு, சட்டம் ஆகிய பாடங்கள் கலைத்துறை மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டன. இப்பாடங்களைக் கற்பதன் மூலம் தாராண்மை - மனிதாய விழுமியங்களை (Liberal - Humanist Values) உள்ளீர்த்துக் கொண்ட பண்பட்ட அறிஞர் குழாம் இலங்கையில் உருவாக்கம் பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. இலங்கையில் பல்கலைக்கழக மட்டத்தில் அரசியல் என்ற பாடமும் மேற்குறித்த தாராண்மை உணர்வு நிலையை (Liberal Ethos) மாணவர்களுக்கு ஊட்டும் நோக்கத்துடனேயே கற்பிக்கப்பட்டது எனலாம். மாணவர்கள் வரலாறு, பொருளியல், சட்டம் ஆகிய பாடங்களின் ஊடாகப் பின்வரும் விடயப்பொருள் பற்றிய அறிவினைப் பெற்றுக்கொண்டனர்.

அ. அரசியல் கோட்பாடு (Political Theory)

ஆ. அரசியல் மெய்யியல் (Political Philosophy)

இ. அரசியல் சிந்தனை வரலாறு

ஈ. பிரித்தானியப் பேரரசின் வரலாறு (History of the British Empire)

உ. அரசியல் யாப்புச் சட்டம் (Constitutional Law)

ஊ. பிரித்தானிய அரசாங்கம் (British Government)

இவை வரலாறு, பொருளியல், சட்டம் ஆகிய கற்கைத் துறைகளின் துணைப்பாடங்களாக விளங்கின என்பது கவனிக்கத்தக்கது. அரசியல் நிறுவனங்களும் அரசியல் யாப்பு முறைகளும் (Political Institutions and Constitutional

Systems) என்ற விடயம் பற்றி மேற்படி மூன்று துறை மாணவர்களும் கற்றபோது, அப்பாடம் சட்டம், அரசியல் என்ற இரண்டு துறைகளுடனும் கலப்புடையதாக இருப்பது வெளிப்பட்டது. பிரித்தானிய மரபில் அரசியற் பொருளாதாரம் (Political Economy) என்ற விடயம் பற்றிய கல்வி அரசாங்கத்திற்கும் பொருளாதாரக் கொள்ளைகளுக்கும் இடையிலான இடைத்தொடர்புகள் பற்றிய ஆராய்ச்சியாக அமைந்தமை அவதானிக்கத்தக்கது. 1895 இல் 'லண்டன் ஸ்கூல்' என்ற பெயரில் பொருளாதாரமும் அரசியலும் இணைந்த துறை (London School of Economics and Political Science) தாபிக்கப்பட்டது. இதனை சிட்னிவெப், பீற்றிஸ்வெப் (Sydney and Beatrice Web) ஆகிய இருவரும் தாபித்தனர். அத்துறையின் தாபிதம் பிரித்தானிய மரபில் பொருளியல், அரசியல் விஞ்ஞானம் என்ற இருதுறைகளுக்கும் இடையில் பிணைப்பு இருந்து வந்ததை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையில் பல்கலைக்கழகக் கல்லூரி லண்டன் பல்கலைக்கழகத்தின் லிபரல் கலைப் பாடநெறிகளுக்கு (Liberal Arts Courses) மாணவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனமாகச் செயற்பட்டது. தாராண்மைச் சிந்தனையை மாணவர்களுக்கு ஊட்டும் தன்மையுடைய சமூக விஞ்ஞானம், மனிதப்பண்பியல் பாடங்களை இலங்கை மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்லூரி ஊடாகக் கற்றனர். செவ்வியல் இலக்கியம் (Classics), மெய்யியல், வரலாறு, பொருளியல், அறவியல் (Ethics), சட்டம் ஆகிய பாடங்களைக் கற்ற இம்மாணவர்கள் பலர் சிவில் சேவையில் இணைந்து இலங்கையில் பணியாற்றினர். இன்னும் சிலர் அயல்நாட்டுச் சேவையில் (Overseas Service) இணைந்தனர். வரலாறு, பொருளியல், சட்டம் போன்ற மேற்குறித்த பாடங்கள் ஊடாக இவர்கள் அரசியல் கோட்பாடு (Political Theory), பிரித்தானியப் பேரரசின் வரலாறு, அரசியல் யாப்புச் சட்டம், பிரித்தானிய அரசாங்கம் (British Government) ஆகிய விடயங்களில் மிகுந்த அறிவைப் பெற்றனர். இந்த அறிவு அவர்களுக்கு சிறந்த சிவில் சேவை நிர்வாகிகளாகவும் அயலுறவுத்துறையில் இராஜதந்திரிகளாகவும் சிறப்பாகச் செயலாற்ற உதவியது.

பிரித்தானியாவின் சிவில் சேவையின் சீர்த்திருத்தம் குறித்த 1854 ஆம் ஆண்டின் நோர்த்கோட் ரெவலியன் அறிக்கை சிவில் சேவைக்குத் தாராண்மைக் கலைக் (Liberal Arts) கல்வியைக் கற்றவர்களே மிகவும் பொருத்தமானவர்கள் எனச் சிபாரிசு செய்திருந்தது. அந்நாட்டின் ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் ஆகிய பல்கலைக்கழகங்களின் கலைப் பட்டதாரிகள் பிரித்தானியாவின் சிவில் சேவையிலும் பெரும்பாண்மை இடங்களைப் பிடித்துக்



W.J.F. லப்றோய்
Image Source : thuppahis.com

கொண்டதோடு சிறப்பாகவும் செயலாற்றினர். பல்கலைக்கழகக் கல்வியிலும், சிவில் சேவை ஆட்சேர்ப்பிலும், பிரித்தானிய மரபு இலங்கையில் பின்பற்றப்பட்டதைக் கட்டுரையாசிரியர்கள் விளக்கியுள்ளனர். இப்பின்னணியில் இலங்கையில் காலனிய ஆட்சிக்காலத்தில் அரசியல் விஞ்ஞானக் கல்வி சிறப்பிடம் பெற்றதில் வியப்பில்லை.

## பேராதனையில் அரசியல் விஞ்ஞானம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1952 ஆம் ஆண்டு முதல் அரசியல் விஞ்ஞானம் கற்பிக்கப்பட்டு வந்துள்ளது. அப்பல்கலைக்கழகம் அரசியல் விஞ்ஞானத்தைக் கற்பிப்பதிலும், ஆராய்ச்சி நூல்களை வெளியிடுவதிலும் முன்னோடியான பல்கலைக்கழகமாகச் செயற்பட்டது. அரசியல் விஞ்ஞானம் மட்டுமன்றிக் கலைத்துறைப் பாடங்களின் கல்வியில் பேராதனையில் 1950கள் முதல் 1970கள் வரை செழுமையான கல்வி மரபு இருந்தது எனக் கட்டுரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். 1980க்குப் பிற்பட்ட காலத்தில் பேராதனையில் ஒரு பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. பேராதனையின் ஏற்றம், இறக்கம் குறித்த காரணங்கள் பற்றிக் கட்டுரையாசிரியர்கள் கூறும் விளக்கங்கள், இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வி முறைக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றிய ஆழமான சிந்தனைக்கு உதவும் அரிய கருத்துகளாகும்.

1971 இன் ஏப்ரல் கிளர்ச்சி, இனத்துவ முரண்பாடுகள் (Ethnic Conflict) தீவிரம் பெறுதல், அரசியல் ஏதேச்சதிகாரம் (Political Authoritarianism) என்னும் பெரும்கேடு சூழ்ந்து கொண்டமை ஆகியன பேராதனையின் கல்வி வாழ்க்கையிலும் சடுதியான வீழ்ச்சியை ஏற்படுத்தின என கட்டுரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். 1970களிலும் குறிப்பாக 1980களின் பின்னரும் பேராதனையில் கல்வி கற்கப் புகுந்த மாணவர்களின் சமூகப் பின்புலம் (Social Background) முற்பட்ட காலத்து மாணவர்களின் சமூகப் பின்புலத்தை விட வேறானது. முற்பட்ட காலத்து மாணவர்கள் மத்தியதர வர்க்கப் (Middle Class) பெற்றோர்களின் பிள்ளைகளாக, சலுகை பெற்ற வகுப்பினைச் (Privileged Social Stratum) சேர்ந்தவர்களாக விளங்கினர். இதனால் பேராதனையின் கல்விப் பண்பாட்டில் 'Culture of Intellectual Elitism' என்னும் பண்பு இருந்தது எனக் கட்டுரையாசிரியர்கள் கூறுகின்றனர். 1980 ஆம் ஆண்டின் பின்னர் பேராதனையின் கல்வி வாழ்க்கையின் அமைதி குலைந்தோடு, ஆசிரியர்களும், மாணவர்களும் அரசியல் மயப்படுத்தப்படுத்தல் (Politicisation) இடம்பெற்றது. பேராதனை உட்பட இலங்கையின் பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் பிரச்சினைகள் அதிகரித்தன. போதிய வளங்கள் பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்படவில்லை; போதியளவு ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை; இலங்கையின் 'பழைய' பல்கலைக்கழகங்களும், 'புதிய' பல்கலைக்கழகங்களும் 1980க்கு பிற்பட்ட காலத்தில் 'பட்டதாரிகளை உற்பத்தி செய்யும் கல்லூரிகள்' (Undergraduate Colleges) என்ற நிலைக்குத் தரம் தாழ்ந்தன எனவும் கட்டுரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இப்பின்னணியிலேயே அரசியல் விஞ்ஞானம் என்னும் கல்வித்துறையின் கற்பித்தல், ஆராய்ச்சி, நூல் வெளியீடு ஆகியன மதிப்பிடப்படுதல் வேண்டும் எனவும் கட்டுரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

## இலங்கைப் பல்கலைக்கழகம் - (1942 - 1969)

1942 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் தாபிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் சுயாதீனமாகப் புதிய கற்கை நெறிகளை ஆரம்பிக்கும் சட்ட அதிகாரம் உடையதாகவும் இருந்தது. ஆயினும் 'அரசியல்' (Politics) தொடர்பான தனியான பட்டப்படிப்பை இப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கவில்லை. பொருளியல் பட்டப்படிப்பின் ஒரு பகுதியாகவே அரசியல் கல்வியை இலங்கைப் பல்கலைக்கழகம் கற்பித்து வந்தது. 1952 இல் கலைப்பீடம் பேராதனைக்கு மாற்றப்பட்ட பின்னரும் கூட அரசியல் பொருளியலின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது (Kodikara:1992:225). வரலாற்றுத்துறை மாணவர்கள் ஐரோப்பிய அரசியல் சிந்தனை வரலாறு, ஐரோப்பிய அரசியல் வரலாறு, ஐரோப்பிய நாடுகளில் தேசியவாதத்தின் எழுச்சி, தேசிய அரசுகளின் (Nation States) தோற்றம் ஆகியன பற்றிக் கற்று வந்தனர்.

பேராதனையின் பொருளியல் துறையில் அரசியல் கற்ற மாணவர்களுக்கு அரசியல் மெய்யியல், அரசியல் சிந்தனை, பிரித்தானிய அரசாங்கம், இலங்கை அரசாங்கம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் அரசியலை மாணவர்களுக்குக் கற்பித்தவர்களுள் கலாநிதி I.D.S. வீரவர்த்தன ஒரு முன்னோடியான புலமையாளராவர். இவர் டொனமூர் கால அரசியல் பற்றி கலாநிதிப்பட்ட ஆய்வாகச் சமர்பித்த 'Government and Politics in Ceylon 1931 - 1947' என்ற நூல் (1951) இன்றுவரை இப்பாருள் குறித்த சிறந்த ஆய்வாக மதிக்கப்படுகிறது. இந்நூல் 1962 இல் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டதாகவும், அம்மொழிபெயர்ப்பு மாணவர்களுக்குப் பாடநூலாகப் பயன்பட்டதாகவும் கட்டுரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர் (இந்நூல் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை). அரசியல் பீ.ஏ சிறப்புப் படிப்பை மேற்கொண்டவர்களுக்கு மூன்றாம், நான்காம் ஆண்டுகளில், இலங்கை அரசாங்கம், ஒப்பீட்டு அரசாங்கம், சர்வதேச அரசியல், அரசியல் சிந்தனை என்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. ஆயினும், அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டம் B.A Economics (Honours) எனவே பெயரிடப்பட்டது. இவ்வழக்கம் 1973 வரை தொடர்ந்தது.

## பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம்: 1969 முதல் இன்றுவரை

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை 1969 இல் 'அரசியல் விஞ்ஞானம்' என்ற பெயரில் அரசியல் பாடவிதானத்தை வடிவமைத்து நான்கு ஆண்டு சிறப்புப்பட்டப் படிப்பை ஆரம்பித்தது. முதலாவது ஆண்டில் 'G.A.Q' வகுப்பில் அரசியல் விஞ்ஞானத்தை ஒரு பாடமாகப் படித்த மாணவர்களில் இருந்து சிறப்புப் பட்டப்படிப்பிற்காக (Special Degree Course) மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். நான்கு ஆண்டு சிறப்புப் பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்பட்ட பின்னர், அரசியல் விஞ்ஞானக் கல்வியின் பாடப்பரப்பு விரிவாக்கம் பெற்றது. சிறப்புப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு பல புதிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

1. புதிய அரசுகளின் அரசியல் (Politics of New States)
2. அமுக்கக் குழுக்களும் பொதுசன அபிப்பிராயமும் (Pressure Groups and Public Opinion)

3. ஒப்பீட்டு அரசாங்கம்

4. பிரயோகப் பொருளியல்

5. புள்ளிவிவரவியல்

6. சர்வதேச அரசியல் கோட்பாடுகள்

ஆகிய பாடங்களை மாணவர்கள் மூன்றாம் ஆண்டில் கற்றனர். இறுதியான நான்காம் ஆண்டில் பின்வரும் பாடங்கள் கற்பிக்கப்பட்டன:

1. இலங்கையில் அரசியல் மாற்றம்

2. யப்பான் நாட்டின் அரசாங்கம்

3. அரசியல் சமூகவியல் (Political Sociology)

4. இருபதாம் நூற்றாண்டின் அரசியல் இயக்கங்கள்

இவற்றுள் 'யப்பான் நாட்டின் அரசாங்கம்' என்ற பாடம் ஆசியப் பிராந்தியத்தின் ஒரு நாட்டின் அரசாங்கமும் அரசியலும் பற்றிய மாணவர்களின் அறிவை வளர்ப்பதற்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இறுதியாண்டில் மாணவர்கள் ஆராய்ச்சிக் கட்டுரையொன்றை எழுதிச் சமர்ப்பித்தல் வேண்டும். அக்கட்டுரைக்கும் புள்ளியிடப்படும் என்ற விதி 1973 இல் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

மேற்குறிப்பிட்ட வகையில் 1969 முதல் 1973 வரையான காலத்தில் 'அரசியல் விஞ்ஞானம்' என்ற கற்கைத் துறையின் பாடப்பரப்பு, முன்னைய மரபுவழி அடிப்படைகளில் இருந்து விலகி, விரிவாக்கம் பெற்றதைக் காணமுடிகிறது. முன்னைய காலத்தில் அரசியல் கோட்பாடு, இலங்கையினதும் பிரித்தானியாவினதும் அரசாங்கங்கள் ஆகிய பாடங்களிற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன. 1969 இன் பின்னர் மாணவர்கள் பொது நிருவாகவியல், சர்வதேச அரசியல் கோட்பாடுகள், தென்கிழக்காசியப் பிராந்தியத்தினதும் ஆபிரிக்காவினதும் புதிய அரசுகள் ஆகிய புதிய பாடங்களையும் படித்தனர். இவ்வாறு பாடப்பரப்பு விரிவாக்கம் பெற்றதால் விரிந்த நோக்கில் இலங்கையினது அரசியலையும், பிராந்திய அரசியலையும் மாணவர்கள் புரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. புள்ளிவிவரவியல், பிரயோகப் பொருளியல் ஆகிய பாடங்களும் சிறப்புப் பட்டப்படிப்பு மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டன. இப்பாடங்கள் பற்றிய அறிவு இறுதியாண்டில் ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதுவதற்கு வேண்டிய திறன்களையும் அறிவையும் மாணவர்கள் பெற்றுக்கொள்ள உதவியது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1952 ஆம் ஆண்டு முதல் அரசியல் விஞ்ஞானம் கற்பிக்கப்பட்டு வந்துள்ளது. அப்பல்கலைக்கழகம் அரசியல் விஞ்ஞானத்தைக் கற்பிப்பதிலும், ஆராய்ச்சி நூல்களை வெளியிடுவதிலும் முன்னோடியான பல்கலைக்கழகமாகச் செயற்பட்டது. அரசியல் விஞ்ஞானம் மட்டுமன்றிக் கலைத்துறைப் பாடங்களின் கல்வியில் பேராதனையில் 1950கள் முதல் 1970கள் வரை செழுமையான கல்வி மரபு இருந்தது எனக் கட்டுரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். 1980க்குப் பிற்பட்ட காலத்தில் பேராதனையில் ஒரு பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. பேராதனையின் ஏற்றம், இறக்கம் குறித்த காரணங்கள் பற்றிக் கட்டுரையாசிரியர்கள் கூறும் விளக்கங்கள், இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வி முறைக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றிய ஆழமான சிந்தனைக்கு உதவும் அரிய கருத்துகளாகும்.

### 1980 இல் பேராதனையில் அரசியல் விஞ்ஞானம் என்னும் புதிய துறை ஆரம்பிக்கப்படுதல்

பொருளியல் துறையில் அரசியல் விஞ்ஞானம் சார்ந்த பாடங்களைக் கற்பித்து வந்த விரிவுரையாளர்களைத் தனியாகப் பிரித்து, 'அரசியல் விஞ்ஞானம்' என்ற புதிய துறை 1980 இல் உருவாக்கப்பட்டது. இவ்வாறு பிரித்து புதிய துறை ஆரம்பிக்கப்பட்டதனால், புதிய அலுவலகமும், புதிய ஆளணியும் பதவி நிலைகளும், அரசியல் விஞ்ஞானத்துறைக்குக் கிடைத்தன. பௌதீக வளங்களோடு, நிதிவளமும் அதிகரித்த அளவில் கிடைத்தது. இதனால், அரசியல் விஞ்ஞானம் தனித்துவமான பயில்நெறியாக (Independent Discipline) வளர்வதற்கான அடித்தளம் இடப்பட்டது. 1980களில் அரசியல் விஞ்ஞானம் மாணவர்களின் விருப்புக்குரிய பாடங்களில் ஒன்றாக வளர்ச்சி பெற்றது. ஓரிரு ஆண்டுகள் கழிவதற்குள் பேராதனையில் பொதுக்கலை முதலாம் ஆண்டில் (G.A.Q) அரசியல் விஞ்ஞானத்தைப் படிப்போர் எண்ணிக்கை 500 மாணவர்கள் வரை உயர்ச்சி பெற்றது. மாணவர்களில் பலர் பொது நிருவாகவியல், சர்வதேச அரசியல் ஆகிய பாடங்களைப் படிப்பதிலும் ஆர்வத்தை



**பேராதனைப் பல்கலைக்கழகம்**

**Image Source : www.elanka.com**

வெளிப்படுத்தினர். இதனால், 1990 ஆம் ஆண்டில் பின்வரும் நான்கு பாடங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

1. ஒப்பீட்டுப் பொது நிருவாகவியல் (Comparative Public Administration)
2. அபிவிருத்தி நிருவாகம் (Development Administration)
3. இலங்கையின் அயலுறவுக் கொள்கை
4. சர்வதேச நிறுவனங்கள் (International Organisations)

1996 - 2000 ஆண்டு காலப்பகுதியில் அரசியல் விஞ்ஞானம் பாடப்பரப்பு மேலும் விரிவாக்கம் பெற்றது. இக்காலத்தில் அரசியல் விஞ்ஞானம் பாடப்பரப்பு பின்வரும் விடயங்களைச் சேர்த்துக்கொண்டது. பொதுக் கொள்கை (Public Policy) என்ற விடயம் தொடர்பான பாடங்கள் இரண்டு சேர்க்கப்பட்டன. அவை:

1. பொதுக் கொள்கை: கோட்பாடும் நடைமுறையும் (Theory and Practice of Public Policy).
2. பொதுக் கொள்கைக் கோட்பாடுகள் (Theories of Public Policy)

பூகோளச் சூழல் (Global Environment), பூகோளப் பொருளாதாரம், பொதுத்துறை வளங்களின் முகாமைத்துவம், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், மனிதப் பாதுகாப்பு, விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ஆகிய விடயங்களில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் காரணமாக பொதுக் கொள்கை வகுத்தல் (Public Policy Making) முக்கியம் பெற்றுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே அரசியல் விஞ்ஞான மாணவர்களுக்கு இப்பாடங்களைக் கற்பிக்கும் தேவை எழுந்துள்ளது. 1996 - 2000 காலப்பகுதியில் அரசியல் விஞ்ஞானத்துறையில் பின்பட்டப்படிப்புக் கல்வியும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறையில் தற்போது ஒரு பேராசிரியரும், ஆறு முதுநிலை விரிவுரையாளர்களும் கலாநிதிப் பட்டம் (Ph.D) பெற்றவர்களாகவும், இரு விரிவுரையாளர்கள் முதுகலைப் பட்டம் பெற்றவர்களாகவும் உள்ளனர். ஆறு தற்காலிக விரிவுரையாளர்களும் அங்கு கடமையாற்றுகின்றனர்.

## பிற பல்கலைக்கழகங்களில் அரசியல் விஞ்ஞானக் கல்வி

கொழும்புப் பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் அரசியல் விஞ்ஞானம் ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கும் மேலாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகங்களில் வரலாறு, பொருளியல் ஆகிய இரு துறைகளின் உப பிரிவுகளாக அரசியல் விஞ்ஞானம் ஆரம்பத்தில் அமைந்திருந்தது. பின்னர் பேராதனையைப் போன்றே பிற பல்கலைக்கழகங்களிலும் 'அரசியல் விஞ்ஞானமும் பொதுக் கொள்கையும்' கல்விக்கான தனித்துறைகள் நிறுவப்பட்டன. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தனித்துறை 2001 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. தற்போது இலங்கைப் பல்கலைக்கழக முறைமையில் பேராதனை, கொழும்பு, சிறி ஜெயவர்த்தனபுர, யாழ்ப்பாணம், உருகுணை, களனி ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களிலும், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், சப்பிரகமுவ பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் அரசியல் விஞ்ஞானம் கற்பிக்கப்படுகிறது.

## தொகுப்புரை

ஏ.எம். நவரத்தின பண்டார, ஜயதேவ உயன்கொட ஆகிய இரு பேராசிரியர்களால் இணைந்து எழுதப்பட்ட 'Political Science and Public Policy: Cultivating

*the Critical Spirit'* என்னும் தலைப்பிலான 22 பக்க ஆங்கிலக் கட்டுரையின் முதல் 5 பக்கங்களில் உள்ள கருத்துகளைத் தொகுத்துத் தரும் முறையில் இத்தமிழ்க் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

சமூக விஞ்ஞானங்களில் ஒன்றான 'அரசியல் விஞ்ஞானம்' என்ற கல்வித்துறை, 1921 இல் பல்கலைக்கழகக் கல்லூரி அமைக்கப்பட்ட காலம் முதல் ஏறக்குறைய 80 ஆண்டுகளுக்கு மேலாக, பல்கலைக்கழக நிலையில் ஒரு கற்கைநெறியாக வளர்ச்சியுற்ற வரலாற்றைக் கட்டுரையாசிரியர்கள் இக்கட்டுரையில் விளக்கிக் கூறியுள்ளனர். அவர்கள் கூறியிருக்கும் முக்கிய கருத்துகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

1. காலனிய ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி (The University College) பிரித்தானியப் பல்கலைக்கழகக் கல்வி மரபைப் பின்பற்றி, வரலாறு, பொருளியல், சட்டம் ஆகிய பாடங்களின் உப பிரிவாகவே அரசியல் (Politics) என்ற பாடத்தை மாணவர்களுக்குக் கற்பித்து வந்தது.

2. 1942 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது, அரசியல் கல்வி பொருளியல் துறையின் ஓர் உப பிரிவாகவே இயங்கியது. 1952 இல் பேராதனைக்கு கலைப்பீடம் (Arts Faculty) மாற்றப்பட்ட பின்னரும் ஏறக்குறைய 27 ஆண்டுகள் அரசியல் கல்வி தனித்துறை என்ற அந்தஸ்தைப் பெறவில்லை.

3. பிரித்தானிய மரபில் சில மட்டுப்பாடுகள் (Limita tions) இருந்தபோதும், அக்கல்வி மரபில் நேர்மறை அம்சங்கள் பல இருந்தன. அரசியல் என்ற பாடத்தை இக்கல்வி மரபின் ஊடாகக் கற்ற மாணவர்கள் பல நன்மைகளைப் பெற்றனர்.

- இக்கல்வி மரபு 'தாராண்மைக் கலைக் (Liberal Arts) கல்விக்கு' முதன்மையளித்தது. வரலாறு, பொருளியல், சட்டம், மெய்யியல், இலக்கியம் ஆகிய கலைத்துறைப் பாடங்களைக் கற்றவர்கள் 'தாராண்மை விழுமியங்களை' (Liberal Values) உள்ளீர்த்துக் கொண்டவர்களாகவும், அரசியல், சமூக விடயங்களில் கூருணர்வு மிக்கவர்களாகவும் இருந்தனர். அவர்கள் பெற்றுக்கொண்ட அரசியல் அறிவு பொது வாழ்க்கையிலும், அரச நிர்வாகத்துறையிலும் சிறப்பான வகிபாகத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியது.
- பிரித்தானியாவின் கல்வி மரபில் தாராண்மைக் கலைக் கல்விக்கு முதன்மையிடம் அளிக்கப்பட்டது போன்று, அந்நாட்டின் நிருவாக சேவையிலும், கலைப் பட்டதாரிகளான 'Generalists' முதன்மையிடத்தைப் பெற்றனர். கலைப்பட்டதாரிகளே சிவில் சேவைப் பதவிகளுக்கு மிகவும் பொருத்தமானவர்கள் என 1854 ஆம் ஆண்டின் நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு அறிக்கை சிபாரிசு செய்திருந்தது. இலங்கையிலும் சிவில் சேவைப் பதவிகளில் வரலாறு, பொருளியல், சட்டம், மெய்யியல் ஆகிய கலைத்துறைப் பட்டதாரிகள் உள்ளீர்க்கப்பட்டனர். 1960க்கு முற்பட்ட காலத்தில் இலங்கையின் சிவில் சேவையின் தரம் உயர்வாக இருந்தமைக்கு இது பிரதான காரணங்களில் ஒன்றாகும்.

4. இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரிக்காலம், 1942 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் உருவாக்கம் பெற்ற பின்னர் உள்ள பத்தாண்டு காலம், 1952 இல் கலைத்துறை பேராதனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டது முதல் 1969 வரையான 27 ஆண்டு காலம் என்ற மூன்று கட்டங்களிலும் அரசியல் கல்வி இலங்கைப் பல்கலைக்கழக முறைமையில் பலமான அடித்தளத்தை உடையதாக வளர்ச்சி பெற்றது.

5. S.A. பேக்மன் (வரலாறு), B.B. தாஸ்குப்தா (பொருளியல்), W.J.F. லப்ரோய் (வரலாறு), B.R. சொனி (பொருளியல்) ஆகியோரும், சேர். ஐவர் ஜெனிங்ஸ், I.D.S. வீரவர்த்தன ஆகியோரும் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலும், இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் அரசியல் கல்வி வேரூன்றிச் செழித்து வளருவதற்கு வேண்டிய அடித்தளத்தை இட்டனர்.

6. 1969 இல் அரசியல் என்னும் துறை, அரசியல் விஞ்ஞானம் என்னும் (Political Science) புதிய அடையாளத்தைப் பெற்றது. அதன் பாடப்பரப்பு விரிவாக்கம் பெற்றது. பொது நிருவாகவியல், சர்வதேச அரசியல் கோட்பாடுகள், அரசியல் சமூகவியல், அபிவிருத்தி நிர்வாகம் போன்ற புதிய பாடங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

7. 1980 ஆம் ஆண்டில் பேராதனையில் அரசியல் விஞ்ஞானத்துறை என்ற தனித்துவமுடைய துறை (Separate Department) நிறுவப்பட்டது. புதிய துறையாக அரசியல் விஞ்ஞானத்துறை ஆரம்பிக்கப்பட்ட சில ஆண்டுகளுக்குள், முதலாவது ஆண்டில் (G.A.Q) அரசியல் விஞ்ஞானத்தைக் கற்கும் மாணவர்கள் எண்ணிக்கை 500 ஆக உயர்ச்சி பெற்றது. இக்காலத்தில் அரசியல் விஞ்ஞானம் மாணவர்களின் விருப்புக்குரிய பாடங்களில் ஒன்றாக மாறியது. 1990 - 96 காலத்திலும், 1996 - 2000 காலத்திலும் அரசியல் விஞ்ஞானப் பாடத்தின் விடயப்பரப்பு மேலும் விரிவாக்கம் பெற்றது.



நடேசன் இரவீந்திரன்

இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் ‘திருக்குறளின் கல்விச்சிந்தனை’ எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் ‘பாரதியின் மெய்ஞ்ஞானம்’, ‘இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்’, ‘பின்நவீனத்துவமும் அழகியலும்’, ‘கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்’, ‘இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்’, ‘சாதியமும் சமூக மாற்றங்களும்’, ‘இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்’, ‘சாதி தேசம் பண்பாடு’ என்பன குறிப்பிடத்தக்கவை.

# இன்றைய இருப்பின் மீதான கடந்தகாலத் தாக்கம்

இன்றைய இருப்பில் இயங்கும் சமூக சக்திகள் தத்தமக்கான நலன்களின் நோக்கில் கடந்த காலத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்துகின்றன. மேலாதிக்கத் தமிழ்த் தேசியம், தலித்தியம், விடுதலைத் தேசியம் என்பவற்றின் கருத்தியல் தளங்களை அடிப்படையாக உடைய சமூக சக்திகள் இன்றைய இயக்கங்களாகச் செயற்படுகின்றன. எமக்கான நவீன வரலாற்றைக் கட்டமைத்த ஆளுமையாகிய ஆறுமுக நாவலர் குறித்து இவை ஒவ்வொன்றும் தமக்கே உரிய கண்ணோட்டத்தில் மறுவாசிப்பை மேற்கொள்கின்றன; இதன்வழியாக, கடந்தகாலச் சமூக சக்திகள் வழிவகுத்துவிட்டிருந்த இயங்குமுறை அமைந்த அடித்தளங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்கின்றன. இதேபோன்ற பின்னணிக்குரிய ஏனைய சமூகங்களில் இயங்கிய ஆளுமைகளுடன் எமது இயங்கு தளத்துக்குரிய ஆளுமைகளை ஒப்பிடுவதன் வாயிலாக செய்யப்பட்டவற்றையும், செய்திருக்கத்தக்கன எவை என்பதையும் மதிப்பீடு செய்வது அவசியமானது. இவற்றின் பெறுபேறுகள் எமக்கான எதிர்கால மார்க்கத்தை வடிவமைப்பதற்கு மிகமிக முக்கியமானவை ஆகும். ”சமத்துவச் சமூகம் காணப் போராடுவோர் பார்வையில் ஆறுமுக நாவலர் எனும் இத்தொடரானது நாவலரின் பங்களிப்புக் குறித்த மதிப்பீட்டின் வழியாக சமகால இயங்குமுறையைக் கணிப்பிட்டு, சுயவிமரிசனங்களுடன் புதிய பாதையையும், அதற்குரிய சரியான மார்க்கத்தையும் கண்டடையும் நோக்கில் எழுதப்படுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கைவிட்டுப் போயிருந்த இஸ்ரேல் எனும் நாட்டை கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் 'கண்டுபிடித்து' மீள் குடியேற்றம் மேற்கொள்ள யூதர்கள் உத்தேசித்த போது ஐரோப்பியக் கண்டத்தைச் சேர்ந்த ஏகாதிபத்திய நாடுகள் அதனுடன் பிணைந்திருந்த தமது மேலாதிக்க நலன் காரணமாக இணக்கம் தெரிவித்தன. ஜெர்மனி புதிய மேலாதிக்க வல்லரசாகும் முனைப்பில் யுத்த வெறியுடன் இரண்டாம் உலக மகா யுத்தத்தைத் தொடக்கிய போது அதன் தலைவரான ஹிட்லர் நடாத்திய யூத எதிர்ப்புக் கொலைத் தாண்டவத்தால் யூதர்கள் மீது கழிவிரக்கம் ஏற்பட்டிருந்த காலம் அது. சென்ற நூற்றாண்டின் நடுக்கூறில் தொடங்கிய யூதக் குடியேற்றத்தில் பாதிக்கப்பட்டவர்கள் என்ற அனுதாப உணர்வும் மேலிட்டிருந்த காரணத்தால் தஞ்சம் வழங்கிய பலஸ்தீனம் தன்னைக் காணாமலாக்கும் சியோனிஸ வெறி மேற்கிளம்பி இத்தனை தூரம் விசுவரூபம் கொள்ளுமென அப்போது எண்ணியிருக்கவில்லை.

இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்த அந்த மண்ணுக்கே உரிய மக்களை வெளியேற்றிவிட்டு பலஸ்தீனம் முழுவதையும் ஆக்கிரமித்து ஏப்பமிடும் இஸ்ரேலின் யுத்த வெறியை மட்டுப்படுத்துவதற்கு ஏகாதிபத்தியத் திணை எந்தவொரு உருப்படியான செயற்திட்டத்தையும் முன்னெடுப்பதாக இல்லை. தேசங்கள் இடையே சமத்துவமான வர்த்தகப் பரிமாற்றத்தை மேற்கொள்ள ஏற்ற வகையில் ஒற்றை மையத் தகர்ப்புடன் கூடியதான புதிய உலக ஒழுங்கொன்று இப்போது ஏற்பட்டு உள்ளது; அதனை முறியடித்துத் தொடர்ந்தும் தமது தலைமையிலான ஏகாதிபத்திய அணியே உலகின் தீர்மானகரமான இயக்கு சக்தியாக இருக்க வேண்டும் எனக் கருதுகின்ற ஐக்கிய அமெரிக்கா, வெளிப்படையாக இஸ்ரேலின் யுத்த முன்னெடுப்பை ஆதரித்து வருகிறது.

உக்ரேன் - ருஷ்யப் போரில் ஐரோப்பிய நாடுகள் எதிர்பார்த்த ஆதாயங்களுக்கு இடமளிக்காமல் ஐக்கிய அமெரிக்கா தனக்குரிய வெகுமதியை உக்ரேனில் இருந்து ஒட்ட வறுகியெடுத்துக் கொண்ட திருப்தியுடன் சமாதானக் காற்றை அங்கே வீசுவதற்கு சமிக்ஞை காட்டியது தொடர்பில் ஏகாதிபத்தியத் திணைக்குள் தலைமைக்கு எதிராகப் புகைச்சல் தோன்றியதான தோற்ற மயக்கம் ஏற்பட்டு நீங்கி உள்ளது. சீனாவுடனுள்ள நட்புறவை ருஷ்யா விலக்கிக் கொள்வதற்கென ஐக்கிய அமெரிக்கா விரித்த தந்திர வலையை அறுத்தெறிந்து சுதந்திரமான முன்னெடுப்பை ருஷ்யா மேற்கொண்ட உடன் ஏகாதிபத்தியத் திணை சமாதான மாய்மாலங்களைக் களைந்தெறிந்து மீண்டும் வலுவான ஒற்றுமையுடன் தனது கோரமான போர் முகத்தை வெளிப்படுத்தத் தொடங்கி உள்ளது. இடைப்பட்ட ஊடல் காலத்தில் "இஸ்ரேலை உருவாக்கியதற்காக மன வருத்தம் கொள்கிறோம்" எனப் பிரித்தானியா கவலை வெளியிட்டு இருந்தது; ஜெர்மனியும் பிரான்சும் இஸ்ரேலுக்கான அனைத்து உதவிகளையும் நிறுத்தப்போவதாக அறிவித்திருந்தது!

இத்தகைய மிரட்டல் கண்டனங்கள் எவற்றையும் இஸ்ரேல் கண்டுகொள்ளவில்லை என்பதிலே எந்தவொரு இரகசியமும் இல்லை. ஐக்கிய அமெரிக்காவின் வெளிப்படையான ஆசீர்வாதம் மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகளது பகட்டு வார்த்தைகளுக்குள் மறைந்துள்ள இரகசியமான ஆதரவின் பலத்துடன் தான் இஸ்ரேல் தொடர்ந்தும் ஆக்கிரமிப்பு யுத்தத்தை முடுக்கிவிட்டபடி உள்ளது. இஸ்ரேல் பலவீனப்படக்கூடாது என்பது ஏகாதிபத்திய நலன் பேணப்படுவதுடன் பிணைக்கப்பட்ட நியதி. அதன் காரணமாகவே வெளிப்படையாக யுத்த எதிர்ப்பைப் பேசிய போதிலும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கு அவசியமான செயலொழுங்குகளை ஐரோப்பியத் திணை மேற்கொள்ளாது இருக்கிறது. தமக்குள் மேலாதிக்க வலு அதிகமுள்ள ஐக்கிய அமெரிக்கா உக்ரேன் விவகாரத்தில் மிக அதிகமாக அபகரிப்பை மேற்கொள்வது தொடர்பில் ஐரோப்பிய நாடுகள் அதிருப்திப்பட்ட போதிலும் ஒட்டுமொத்தமாக ஏகாதிபத்திய ஆதிக்கம் வலுவிழந்து மங்கிப்போக இடமளித்துவிட இயலாத நெருக்கடிக்குள் உழல்கின்றனர். ஒட்டுமொத்தமான ஏகாதிபத்தியத் திணைக்குள் எழுந்துள்ள இன்றைய நட்பு முரணைத் தீர்த்தவாறு ஒடுக்கப்பட்ட தேசங்கள் மீது ஐக்கிய அமெரிக்கத் தலைமையில் சுரண்டலை வலுப்படுத்த வேண்டுமெனும் செயலொழுங்குகளையே ஐரோப்பா மேற்கொண்டாக வேண்டிய நிர்ப்பந்த நிலை அவர்களைக் கட்டுப்படுத்துகிறது.

ஐரோப்பாவின் மூலதனத் திரட்சி மேலெழத் தொடங்கிய போது எமது தேசங்களை ஆக்கிரமித்த நிகழ்வுடன் இணைந்ததாகப் 'புதிய கண்டங்களைக் கண்டுபிடித்த' முயற்சியூடாக நடந்தேறிய ஆக்கிரமிப்பில் உருவான ஐக்கிய அமெரிக்கா இன்று தமக்குத் தலைமை தாங்குவதில் ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரை ஆதங்கப்பட ஏதுமில்லை. முழுவதுமாய்க் 'கூண்டோடு கைலாயம் போவதைவிட' லாபத்திலொரு பங்கை இழப்பதனால் ஏற்படுகிற பாதிப்புத் தாங்கிக்கொள்ள உகந்ததே என்பது அவர்களுக்கான இருப்பு; அந்த ஏகாதிபத்தியத் திணையின் அபகரிப்புக்கு ஆட்பட்டுத் தொடர்ந்தும் அல்லற்படும் அவதி எமக்கு அவசியமானது தானா?

நிலப்பிரபுத்துவச் சமூக முறைமை கெட்டிதட்டிப்போய்த் தொடர்ந்த முன்னேற்றம் எட்டபட இயலாத முடக்கத்தில் எமது தேசங்கள் வாடி வதங்கிய போது புதிய சமூக எழுச்சிச் சிந்தனைகளுடன் ஐரோப்பிய மூலதனம் எங்களை ஆட்படுத்திக் கொண்டது. அதன் காலனியாக மாற்றப்பட்ட எமது நாடுகள் புதிய வாழ்வியல் அம்சங்கள் சிலவற்றைக் கண்டபோதிலும், மேற்கொண்டு விருத்திகளைக் காண இயலாத வண்ணம் காலனித்துவ விலங்கு முடக்கங்களை ஏற்படுத்தியது. சென்ற நூற்றாண்டின் நடுக்கூறில் பாதிச் சுதந்திரம் எட்டப்பட்ட போதிலும் நவகாலனித்துவப் பிணைப்புக்குள் அகப்பட்ட வடிவத்திலேயே அந்த விடுதலை அமைந்திருந்தது; ஏகாதிபத்தியம் தொடர்ந்து சுரண்டுவதனை முறியடிக்கும் பூரண சுதந்திரம் இன்னமும் சித்திக்கவில்லை. இஸ்ரேல் தனது முயற்சியில் வெற்றிபெற்று ஏகாதிபத்தியத் திணையின் அரசியல் முன்னெடுப்புக்கு உரியதான பழைய உலக ஒழுங்கு தொடருமாயின் மீண்டும் சாதிய, மதவாத, இன பேதங்களின் மோதல்களில் நாங்கள் ஈடுபட்டவர்களாகத் தொடர்ந்தும் அல்லற்படுவோம். குழப்பியடிக்கும் அந்தக் குட்டைக்குள் ஏகாதிபத்தியம் தொடர்ந்து சுழியோடியவாறு ஆதாயங்களை வறுகியெடுக்கும்.


வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தின் முகப்புத் தோற்றம் (2004)

Image Source : ta.wikipedia.org

### ஈழத் தமிழரும் புலச்சிதறலும்

நாவலரை மறுமதிப்பீடு செய்யும் முயற்சியை மேற்கொள்வதாக அமைந்துள்ள இந்தத் தொடரில் இன்னும் ஏற்பட்டு வருகின்ற வரலாற்றுச் செல்நெறி மாற்றம் மிகுந்த முக்கியத்துவம் உடையதாக உள்ளது. மேற்கு ஆசியப் பிராந்தியத்தில் நீண்ட நெடுங்காலம் நிலைபெற்று வாழ்ந்த தேசிய இனமொன்றின் இருப்பை நாசப்படுத்தும் ஆக்கிரமிப்புச் சக்தியான இஸ்ரேலுக்குச் சாதகமாக கரிசனைகளை ஏற்படுத்தும் முயற்சிகள் பல எம் மத்தியில் உலவுவதனைக் காண்கிறோம்; தமிழ்த் தேசிய விடுதலைக்காகப் போராடுகிறோம் எனப் பசப்பிக் கொண்டே இந்த வேடிக்கையும் இடம்பெற்றவாறு உள்ளது.

எம்மிடையே விடுதலை வேட்கையை விடவும் மேலாதிக்க மனோபாவமே மேவியிருப்பதன் வெளிப்பாடு இது. ஏகாதிபத்தியத் தளத்தில் அடைக்கலம் கிட்டியது என்பதால் மட்டுமன்றித் தமிழ்த் தேசிய யுத்த முன்னெடுப்பைத் தொடக்குவதற்கு முனைந்த காலத்தில் இருந்தே இத்தகைய ஏகாதிபத்திய மனோபாவம் அந்தத் தரப்பினரிடம் இருந்து வந்தது. எழுபதாம் ஆண்டுகளின் நடுக்கூறில் “இஸ்ரேல் போன்ற ஒரு தமிழீழம் வேண்டும்” என்று வெளிப்படையாகப் பேசிய மேலாதிக்கத் தமிழ்த் தேசியப் பிரதிநிதிகளின் வாரிசுகளே இவர்கள். இலங்கை பூராவும் உத்தியோக ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் வகையில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் யாழ்ப்பாணக் குடாவினுள் ஏராளமான பாடசாலைகள் தோற்றம் பெறுவதற்கு வழிவகுத்தனர். அரைச் சுதந்திரம் 1948 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட பின்னர் சிங்களத் தேசியம் பூரண விடுதலைத் தேசியத்தினை முன்னெடுக்கும் செயலொழுங்குகளுக்கு முன்னுரிமை வழங்கி இருப்பின் கல்வியை மூலதனமாக முதலிட்டு இயங்கிய யாழ்ப்பாணத்துக்கான மாற்றுத் திட்டத்தை வகுத்த வண்ணமாக எமது உத்தியோக ஆக்கிரமிப்பில் இருந்து தமது பிரதேசத்தை மீட்டெடுக்க முற்பட்டிருக்க இயலும். சிங்களத் தேசிய நலனை முன்னறுத்தித் தேசிய முதலாளித்துவ நிலைப்பாட்டில் இயங்கிய சுதந்திரக் கட்சியிடம் அத்தகைய தெளிவு இருக்கவில்லை; அதனிடமாவது தமக்கான விடுதலை குறித்த அக்கறை இருந்தது. ஏகாதிபத்தியத்துடன்

இறுக்கமான பிணைப்புடன் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியை முறியடித்துத் தேசிய விடுதலைக்கான அரசியல் - பொருளாதார முன்னெடுப்புகளைத் தேசிய முதலாளித்துவச் சிங்கள அணி மேற்கொண்டது. அதனுடன் இணைந்து இயங்கும் உத்தேசம் அன்றைய தமிழ்த் தலைவர்களுக்கு (அவர்கள் 'தேசிய' அடையாளத்தையே வெறுத்தார்கள்; எழுபதாம் ஆண்டுகளின் நடுக்கூறு வரை 'தமிழ்த் தேசியம்' பேசுபொருளாகவில்லை) இருக்கவில்லை. ஏகாதிபத்தியத்தால் ஊட்டி வளர்க்கப்பட்ட மேலாதிக்கத் தமிழ்த் தேசியம் அதுவரை அனுபவித்த உத்தியோக ஆக்கிரமிப்பு மனோபாவத்துடன் யுத்த முனைப்பில் ஈடுபட்டு இன்றைய ஏகாதிபத்தியத் திணையினுள் (ஏகாதிபத்திய நாடுகளுக்குள்) சங்கமித்த வெற்றியைப் பெற்றுள்ளது.

தாயக மண்ணில் வாழ்ந்து யுத்தத்தால் பாதிக்கப்பட்டதோடு எமக்கான அர்த்தமுள்ள விடுதலையை வென்றெடுக்கும் அபிலாசையைக் கொண்டிருக்கும் தரப்பினர் எந்தப் பாதையைத் தேர்ந்தெடுப்பது? எமது இரத்த உறவெனக் கூறியபடி புலம்பெயர் ஏகாதிபத்திய அணி வீசுகின்ற எலும்புத் துண்டுகளுக்கு விலையாக மாறி அழுந்தப் போகிறோமா - இலங்கை மண்ணில் வாழும் அனைத்து இனத் தேசியங்களுடன் கைகோர்த்து எமக்கான சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் விடுதலைத் தேசிய மார்க்கத்தைக் கண்டு தெளிந்து பின்பற்றப் போகிறோமா? ஏகாதிபத்திய நலனை முன்னெடுக்கிறவர்கள் இஸ்ரேலை நியாயப்படுத்தியவாறு இங்குள்ள சகோதர இனத் தேசியங்களுடன் கூட்டமைக்க இடந்தராத தனி வழியில் செல்லும்படி தூண்டுகின்றனர். அந்த மேட்டிமைக் கனவான்கள் எம்மை நோக்கி, "இஸ்ரேலின் யூதர்களைப் போல அறிவில் மேலோங்கி இருந்த யாழ்ப்பாணத்தவர் நாம்" எனும் ஓர்மத்தை (மமதையைக்) கைவிட்டுவிட வேண்டாமென வலியுறுத்துகின்றனர்.

இத்தகைய மேலாதிக்க மிதப்பினை இயல்பாகக் கொண்டிருந்த ஆதிக்க சாதி மனோபாவத்தை நூற்றைம்பது வருடங்களின் முன்னர் இனங்கண்ட காலனித்துவவாதிகள் யாழ் மண்ணில் 'கல்விக்கூடத் தொழிற்பட்டறையை' நிறுவிக்கொண்ட போது ஐரோப்பியப் பண்பாட்டு அடிமைகளாக விளங்கத்தக்க உத்தியோகத்தர்களை உற்பத்தி செய்யும்



வ. உ. சிதம்பரனார்

Image Source : ta.wikipedia.org

நோக்கத்தை உடையவர்களாக இருந்தனர். இலங்கை பூராகவுமாக மட்டுமன்றி கடல் கடந்தும் கிடைத்து வந்த வேலைவாய்ப்பின் அசைவியக்கத்தினூடாக மனதையும் அந்நியரிடம் அடகு வைப்பதற்கான ஆபத்து மேற்கிளம்பி வருவதனை உணர்ந்த நாவலர் சைவப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அடித்தளமிட்டார்; அங்கு கற்பதன் வாயிலாகவும் அத்தகைய தொழில் வாய்ப்புகளை எட்டுவதற்கு ஏற்ற நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட நோக்கம் சாதக விளைவுகளைத் தரத்தவறவில்லை. வெள்ளைக்காரத் தொழிலின் வாய்ப்பை மனங்கொள்ளும் அதேவேளை, நவீன யுகத்துக்கான மதம் கிறிஸ்தவம் என்று மனமொப்பி மதமாற்றத்தையும் நாடிய சிலர் இதன் வாயிலாகத் தடுத்தாட்கொள்ளப்பட்டனர். அவ்வாறு சொந்தப் பண்பாட்டினைப் பாதுகாக்கும் முனைப்புக்கு ஒரு தரப்பினர் உடன்படாது போயிருப்பின் எமது மண் முழுவதும் அடிமைப் பண்பாட்டு மனவிகாரத்தைச் சந்தித்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

அதேவேளை, எமக்கான பண்பாட்டுத் தொடர்ச்சி எனக் கையேற்கப்பட்ட சைவ மனப்பாங்கு மக்கள் நலநாட்டத்தை நோக்கி ஆற்றுப்படுத்தி உள்ளதா என்ற கேள்வியும் எழக் காண்கிறோம். காலனித்துவம் வழங்கிய புதிய மதம் அதிகாரத் தரப்பாரிடமே அடிமை மனப்பாங்கை ஊட்டி வளர்க்க முனைந்தது என்றால், சாதியச் சழக்குகள் மேவியிருந்த நமது

பாரம்பரிய மதம் உழைக்கும் மக்களை இழிவுபடுத்திப் புறக்கணிப்புகள் வாயிலாகச் சுரண்டலை மேற்கொள்வதாக இருந்தது. காலனித்துவத்தில் நிறபேதம் வெள்ளை மேலாதிக்கத்துக்கு வழிகோலி இருந்ததாயினும் படித்துப் பட்டம் - பதவிகள் பெற்று மேனிலையாக்கம் பெற்ற நிறத்தோல் கனவான்களைச் சரியாசனம் தந்து மதிப்பளிப்பதற்குத் தடை ஏதுமிருக்கவில்லை (சாதியவாதம் அளவுக்குப் பிளவாக்கத்தைக் காலனியவாதம் மேற்கொள்ளவில்லை). எத்தகைய உயர்வுகளைத் தனியாளாக ஒருவர் எட்டிய போதிலும் தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்பட்ட ஒடுக்கப்பட்ட சாதிப் பிரிவுகளைச் சேர்ந்த அத்தகைய ஓர் ஆளுமை எந்த இடத்திலும் சரிநிகர் சமானமாக நடாத்தப்பட இயலாதவர் என்ற சாதிய நியதி கவனிப்புக்கு உரியது. நாவலரும் கூட ஒவ்வொருவரும் தமக்கென வரையறுக்கப்பட்ட சாதி ஆசாரங்களை மீறாதிருப்பது அவசியம் என்று வலியுறுத்தி உள்ளார். பிறப்புக்கு முன்னரான கருவறை தொட்டு இறந்த பின்னர் அடையும் இடுகாடு வரை சாதிய வழக்காறுகள் மக்களைப் பிளவுபடுத்தி இருப்பதனைக் கேள்விக்கு உள்ளாக்காத பண்பாட்டுப் பேணுகை ஏற்புடையதாக இருக்க இயலாது!

நாவலரின் கருத்தியல் தளத்துக்குரிய சாதியத்தை விடாது கையேற்ற மேலாதிக்கத் தமிழ்த் தேசியர்கள் அவரிடம் வெளிப்பட்ட காலனிய எதிர்ப்பு மனப்பாங்கைக் கையேற்பதாக அல்லாமல் காலனியமயமாதலுக்கு ஆட்பட்டனர் என்பது தான் இங்கு கவனிப்புக்கு உரியது. சொந்த மண்ணில் வாழ இயலாமல் வேற்று மண்ணில் பனிக்குளிருடன் மல்லுக்கட்ட வேண்டியுள்ளது  என நீலிக்கண்ணீர் வடித்து அனுதாபம் தேட முனைவது ஒரு பக்கம் என்றால், “என்ன இருந்தாலும் வெள்ளைக்காரன் உசத்திதான்” என்று கூறியபடி காஸாவில் மேற்கொள்ளப்படும் ஏகாதிபத்தியத்தின் கொலைத் தாண்டவத்துக்கு வக்காலத்து வாங்கும் மனோபாவம் மறுபுறமாக வெளிப்படக் காண்கிறோம். மேலைத்தேசச் சுகபோகத்தில் மூழ்கியபடி வாழ்ந்திருக்கப் புலிகளின் யுத்தம் தொடர வேண்டும் என்பது அவர்களது விருப்பமாக அமைந்திருந்தது; அதன் காரணமாகவே  மாவிலாறில் புலிகள் ‘இறுதி’ யுத்தத்தைத் தொடக்கிய போது, அதனைக் கைவிடுமாறு குரல் கொடுக்காமல், புலிகளால் மனிதக் கேடயமாக லட்சக்கணக்கான பொது மக்கள் கட்டாயப்படுத்திக் கொண்டு செல்லப்பட்டதை மூடிமறைத்து இன்றைய பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர். தமது தரப்பில் மக்களைப் பாதுகாப்புக் கவசமாக்கும் யுத்த மீறல் மேற்கொள்ளப்பட்டாலும் கூட, சிங்களப் பேரினவாத இராணுவம் மட்டும் சர்வதேச யுத்த நியமங்களின் படி ஒழுக வேண்டும் என்பதான எடுகோளை முன்வைக்க முனைகின்றனர். பேரினவாதத்தினதாக மட்டுமன்றி, தமிழின் பேரால் முன்னெடுக்கப்பட்ட மேலாதிக்கவாதச் செயலொழுங்குகளாலும், இறுதி யுத்தத்தில் காவுகொடுக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கிலான மக்களை வைத்து இன்றைய மேலாதிக்கத் தமிழ்த் தேசியத்தாலும் ‘பண்டமாற்று வணிக அரசியல்’ தொடரப்படும் அவலம் நிலவுகிறது.

புலச்சிதறலுக்கு உள்ளாகி அங்கே வாழ்கின்ற அனைவருமே மேலாதிக்கத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டினர் என்பதற்கு இல்லை; இருதரப்பு மேலாதிக்கவாதத் தலைமைகளினால் மக்கள் மீது திணிக்கப்பட்ட யுத்தம் காரணமாகச் சொந்த மண்ணில் வாழ முடியாத நெருக்கடி காரணமாகப் புலம்பெயர்ந்தோர் பலருள்ளனர். தமக்குரிய வாழ்வியல் புலத்தில் இருப்பைத் தொடர இயலவில்லையே என்ற நியாயமான ஏக்கமுடைய விடுதலை மனம் படைத்தோர் அங்கு கணிசமான அளவில் உள்ளனராயினும், மிகப் பெரும்பாலானவர்கள் மேலாதிக்கத் தமிழ்த் தேசியப் புலப்பெயர்வு மேட்டிமைகளின் கருத்தியலுக்கு ஆட்பட்டவர்களாக உள்ளனர் என்ற வகையில், காலனித்துவத்தின் வாரிசுகளாகவே திகழ்கின்றனர்.

## காலனித்துவம் ஊடாக ஏகாதிபத்தியம்

நான்கு நூற்றாண்டுகளின் முன்னர் வணிக நாட்டத்தில் உந்தப்பட்ட ஐரோப்பியச் சமூகம் அறிவியலுக்கு விரோதமாகத் தம்மிடம் புரையோடிப் போயிருந்த மனப்பாங்கைத் துடைத்தழிக்கத் தொடங்கினர். முன்னரான மத்திய காலத்தில் இலாபமீட்டும் வர்த்தகத் தொழில் பாவகரமானதெனக் கூறி கிறிஸ்தவத்தைப் பின்பற்றுவோர் வணிகத்தில் இருந்து தூரப்படுத்தப்பட்டு இருந்தனர். அதன் காரணமாக ஐரோப்பாவினுள் சிறுபான்மையினராக வாழ்ந்த யூதர்களே வணிகத்தை மேற்கொண்டனர். அத்தகைய இருண்டகால மனப்பாங்கைத் தகர்த்துப் புதிய சமூக உருவாக்கம் ஒன்று மேற்கிளம்பி மறுமலர்ச்சி உணர்வு உந்தித் தள்ளிய போது மதத்தில் இருந்து அரசையும் கல்வியையும் விலக்கிக்கொண்ட முதலாளித்துவ வர்க்கம் உதயமாகி விருத்தி பெறலாயிற்று. புதிதாக மேற்கிளம்பிய அந்தச் சமூகத் தளத்தினர் மூலதன

அபகரிப்பை மேற்கொள்ள வேண்டி இருந்த தேவை காரணமாக வணிக நாட்டத்துடன் வந்தடைந்த ஆசிய, ஆபிரிக்க நாடுகளை ஆக்கிரமித்துக் காலனித்துவப்படுத்தி ஆட்சியதிகாரங்களை நிரந்தரமாக்கினர். முன்னதாகச் சோழப் பேரரசு இது போன்று கடல் கடந்த ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டு வென்றடக்கிய போதிலும் அதே ஆட்சிகளைத் தொடர அனுமதித்துக் கப்பம் அறவிட்டனரே அல்லாமல் நேரடியாகத் தமது ஆட்சிக்குள் கொண்டுவரவில்லை. நிலவுடமைச் சமூக சக்திக்கு அத்தகைய அரசியல் தேவை அவசியமற்றது. லாபம் - மேலும் லாபம் எனத் தொடர்ந்து மூலதனம் வறுகியெடுக்கப்படுவது புதிய சமூக முறைமையாக ஆனபோது தமது 'சூரியன் அஸ்தமிக்காத சாம்ராச்சிய' எல்லைக்குள் தொலைதூர நாடுகளைக் கொண்டு வந்ததுடன், நேரடியாக ஆள இயலாத காலம் ஏற்பட்ட பின்னரும் நவகாலனித்துவ மயப்படுத்தித் தமது மேலாதிக்கத்தைத் தொடர வேண்டி இருந்தது.

எமது தேசங்களைக் காலனிகளாக்கி மேற்கொண்ட சுரண்டல் ஊடாகப் பெற்ற மூலதன விருத்தி ஒரு வகைப்பட்டது; அவர்களுக்கான புலத்தில் பண்ணையடிமைகளாக இருந்த விவசாயிகளை நிலப் பிணைப்பில் இருந்து விடுவித்துத் தமது உற்பத்தி சக்தியை விரும்பிய எந்தவொரு மூலதன உடைமையாளரிடமும் 'சுதந்திரமாக விற்கும்' பாட்டாளி என மாற்றிப் புனைந்து அபகரித்த உபரி மதிப்பை மூலதனமாகப் பெருக்கியது இன்னொரு வகை. இத்தகைய இரு முனை அபகரிப்புகளின் பொருட்டு தொழில்நுட்பப் புரட்சியை ஏற்படுத்தியதும் அதற்கு உறுதுணையாக விஞ்ஞான விருத்தியை விரிவாக்கியதும் என்ற செயலொழுங்குகளின் காரண, காரணிகளாக அமைந்த போக்குவரத்து - தொடர்பாடல் வளர்ச்சிகள் வாயிலாகப் படிப்படியாக உலகம் ஒரு கிராமமெனச் சுருங்கியது. நிலப்பிரபுத்துவத்தில் ஒரு பரம்பொருளோ, ஓரிறையோ ஒன்றிணைக்க இயலா வகையில் அன்றைய பொருளுற்பத்தி உறவு உலகப் பரப்புகளைப் பிளவுபடுத்தி வைத்தது என்றால், தனது சுயலாப வேட்கையில் மூலதனமோ கடவுளை விடவும் மேலான ஆற்றலுடன் உலகப் பரப்பு முழுவதையும் ஒன்று குவித்துவிட்டது!

மூலதன அபகரிப்பில் ஐரோப்பிய நாடுகளுக்கான முன்னேறிய கம்பனிகள் தமக்குள் கூட்டிணைந்து உருவான ஏகபோக மூலதனம் இன்றைய உலகை ஒரே குடைக்குள் கொணர முனைந்தன. இவ்வகையில் ஏகாதிபத்திய உச்சத்தை முன்னதாக எட்டிய பிரித்தானியா - பிரான்ஸ் - ஐக்கிய அமெரிக்கா என்பன நட்பு நாடுகளாக ஒன்றிணைந்து தமக்குள் உலகைப் பங்கு போட்டிருந்த நிலையில், புதிய ஏகாதிபத்திய நாடுகளாக எழுச்சி பெற்ற ஜெர்மனி - இத்தாலி - ஜப்பான் என்பன அச்சு நாடுகளாகக் கூட்டமைத்து உலகை மறுபங்கீடு செய்யவென முனைந்து இரண்டு உலக மகா யுத்தங்களை (1914, 1939) அரங்கேற்றின. இந்தப் பாரிய யுத்தங்களில் தத்தமது மனித வளங்கள், பொருளாதாரம், ஆற்றல்கள் என்பவற்றைப் பாரிய அளவில் செலவிட்ட ஐந்து வல்லரசுகள் பின்னடைந்து போய்விட, அந்தக் களத்தில் விளிம்பிலிருந்த வண்ணம் தனது பங்களிப்பை அளவோடு வழங்கி அணுகுண்டுப் பரிசோதனையையும் செய்ததன் வாயிலாகத் தனது வல்லமைகளைத் தக்க வைத்து வெளிப்பட்ட ஐக்கிய அமெரிக்கா, ஏகாதிபத்திய அணியின் தன்னிகரில்லாத் தலைவராக மேற்கிளம்பியது. பலவீனப்பட்டுப் போயிருந்த அனைத்து நாடுகள் இடையேயும் தங்கத்துக்குப் பதில் தனது டொலரைச் சர்வதேசப் பரிவர்த்தனைக்கான ஊடகமாக்கியதன் வாயிலாக மென்மேலும் பொருளாதார வல்லரசாக மிளிரும் வாய்ப்பையும் ஐக்கிய அமெரிக்கா பெற்றிருந்தது.

இவ்வகையில் தலைமைப் பாத்திரத்தை வென்றெடுக்க ஏற்றவாறு, முன்னதாக ஐரோப்பியக் காலனித்துவத்தில் இருந்து சுதந்திரத்துக்காகப் போராடிய எமது தேசங்களின் விடுதலைப் போராட்டங்களை ஆதரிப்பதான தோற்றப்பாட்டை ஐக்கிய அமெரிக்கா காட்டி வந்தது. ஐரோப்பியக் காலனித்துவப் பிடியிலிருந்து எமது தேசங்கள் 'சுதந்திரம் பெற்ற' கையோடு சுய விருப்புடன் தனது டொலருக்குக் கட்டுப்பட்ட நவகாலனிகளாக இயங்க ஏற்ற அரசியல் - பண்பாட்டு நியதிகளை வடிவப்படுத்தும் ஏகாதிபத்திய நடைமுறையை வகுத்துச் செயலுருப்படுத்தியது. ஆக, முந்திய காலனிய இயங்குமுறையில் சிற்சில மாற்றங்கள் எட்டப்பட்ட போதிலும் மேலாதிக்கச் சக்திகளது சூத்திரப் பாவைகளாகக் கையாளப்படும் வளையத்தை உடைத்து வெளியேற இயலாத அரசியல் - பொருளாதார - பண்பாட்டு சூழல் தொடர்வதாகவே அமைந்தது. பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயக் காலனியாக இலங்கை பிணைக்கப்பட்டதில் இருந்து மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாகப் போர்த்துக்கேய, ஒல்லாந்த, பிரித்தானிய ஆட்சியாளர்கள் தத்தமது முடிமன்னரின் சார்பாக இயங்கும் கவனர்கள் ஊடாக ஆட்சியை முன்னெடுத்தனர். முதலிரு நாடுகளும் வெளிப்படுத்தி இருந்த முதலாளித்துவ வர்க்கம் நிலப்பிரபுத்துவப் பிடிக்குக் கட்டுப்பட்டு இயங்கி வரவேண்டிய ஆரம்ப நிலையுடையன. மதப் பண்பாட்டு முனையிலும் நிலப்பிரபுத்துவத்துக்கு உரிய கத்தோலிக்கக் கிறிஸ்தவத்தையே

போர்த்துக்கேய முதலாளித்துவம் பின் தொடர்ந்தது. முதலாளித்துவம் இளமைத்துடிப்புடன் முன்னேறி வலுப்பெற்ற 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் நிலப்பிரபுத்துவ மதத்தை முற்றாக நிராகரித்துப் புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவம் உருவானது; அதனை வெளிப்படுத்திய புதிய வார்ப்புகளாக ஒல்லாந்தரும் பிரித்தானியரும் வரலாற்று அரங்கில் வெளிப்பட்டனர். முடியாட்சியைக் கட்டுக்குள் கொண்டு வந்த பிரித்தானிய முதலாளித்துவமானது தனக்கான ஜனநாயக அமைப்பாக ஆளுமையுடைய பாராளுமன்றத்தைத் தோற்றுவித்திருந்த போதிலும் பழமைப் பாரம்பரியப் பேணுகை எனும் தோரணையில் முடியை ஓர் ஆடம்பரப் பொருளாகத் தொடர்வதற்கு இணங்கியது. மிகப்பெரும் ஏகாதிபத்திய வல்லரசாக இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் இயங்கிய பிரித்தானிய ஏகாதிபத்தியம், இவ்வாறு பழமைப் பிடிப்புகளை ஏதோவொரு வடிவில் நீடித்து நிலைக்க வழிவகுக்கும் மனப்பாங்கினை எம் மத்தியிலும் விதைப்பதாகத் தனது ஆளும் முறைமையை முன்னெடுத்தது!

காலனித்துவ ஒடுக்குமுறையை முதலாளி வர்க்கம் எம்மீது திணித்த போதிலும் எமக்கான நிலப்பிரபுத்துவப் பொருளுற்பத்தி உறவை முற்றுமுழுதாகவோ, சிந்தனை முறையை அடியந்தமாகவோ மாற்றுவதற்கு முற்பட்டு இருக்கவில்லை.

காலனித்துவம் அறிமுகப்படுத்திய விஞ்ஞான - தொழில்நுட்பப் பிரயோகங்கள் அறிமுகப்பட்ட அளவிலும் ஆட்சியாளரின் ஏவலாளர்களாகச் செயலாற்றவென வழங்கப்பட்ட நவீன கல்வி முறைகளாலும் தூண்டப்பட்ட எமது தேசங்களின் சில முன்னோடிகள், எம்மீது திணிக்கப்பட்டுள்ள நுகத்தடி நிலப்பிரபுத்துவம் - காலனித்துவம் எனுமிரு முனைகளைக் கொண்டு எம்மவரைப் பிணைத்து இயக்குகிறது எனும் நிதர்சனத்தைக் கண்டுணர்ந்தனர். சிலர் காலனித்துவச் சலுகைகளில் ஆதாயம் பெறும்போது நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறைப் பக்கத்தைக் குற்றம் சாட்டினர்; காலனித்துவ ஒடுக்குமுறையைச் சாடியவர்களில் பலர் நிலப்பிரபுத்துவத்தின் அழுத்தங்களைக் கண்டுகொள்ள மறுப்பவர்களாக விளங்கினர்.

### மேலாதிக்கத்தில் சாதியம், தேசியம், இனத்தேசியம்

காலனித்துவ ஒடுக்குமுறையால் எமது பண்பாட்டு அடித்தளம் தகர்க்கப்படும் அபாயத்தை உணர்ந்த ஆறுமுக நாவலர் ‘சாதியின் காவலராக’ கணிக்கப்படுவதனை இந்தப் பின்னணியில் அணுகலாம். ‘காலனித்துவப் பிணைப்பு நீக்கப்படுவது சாதிய மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கே’ என்பதாக நாவலரது நிலைப்பாடு அமைந்ததா? இது பற்றிய தெளிவை எட்டுவதற்கு அவரது சமகாலத்தில் நிலவிய பாரம்பரியக் கருத்துநிலை, காலனித்துவம் ஊட்டிய கருத்தியல், நிலப்பிரபுத்துவத்தின் சிதைவு குறித்த சமூகப் புரிதல் எனும் தளங்களில் ஏனைய ஆளுமைகள் முன்னெடுத்த இயக்கச் செயற்பாடுகளுடன் நாவலரை ஒப்பாய்வு செய்வது அவசியம்.

இவற்றை அலசுகின்ற அதேவேளை, பின்னர் எழுச்சியுற்ற விடுதலைப் போராட்டத்தில் நாவலர் முன்னிறுத்திய சைவசித்தாந்தம் எத்தகைய வகிபாகத்தைப் பெற்றிருந்தது என்பதனை மதிப்பீடு செய்யும் வகையில் இந்திய சுதந்திரப் போராட்ட வீரரான வ.உ. சிதம்பரனாருடன் ஒப்பீட்டை மேற்கொள்வதும் அவசியமாகின்றது.

இத்தொடரின் இரண்டாம் பகுதியாகிய ‘இன்றைய இருப்பின் மீதான கடந்த காலத்தின் தாக்கம்’ எனும் இந்தப் பகுதி இவை சார்ந்து மூன்று இயல்களைக் கொண்டதாகக் கட்டமைக்கப்படுகிறது. இதன் வாயிலாக நாவலர் மீது பாரம்பரியத்தின் வீச்சு எவ்வகையில் வெளிப்பட்டது என்பதனைக் காணும் அதேவேளை, அந்தத் தாக்குறவுடன் அவர் தனது சமகாலச் சமூக நியதியை மாற்றுவதற்கு எத்தகைய முயற்சிகளை முன்னெடுத்தார் என்பதனையும், பின் தொடர்ந்த வரலாற்றில் அவற்றின் பாதிப்புகள் எவ்வாறு அமைந்தன என்பவற்றையும் தரிசிக்க இயலும்.

ஏகாதிபத்தியப் பிணைப்பைத் தகர்த்து விடுதலையை வெற்றி கொண்ட தேசியம், ஆதிக்க சாதி நலன்களை முறியடித்து அனைத்துச் சாதிகளையும் சமனாக நடாத்த வல்ல சமூக நீதி நிலைநிறுத்தப்பட ஏற்றதாக அமையவில்லை. அதன் நீடிப்பாகப் பேரினவாதச் செயலொழுங்குகள் மேலோங்கி வருவதற்கும் இடமேற்பட்ட நிலையில் இனத்தேசிய முரண்பாடுகள் பிரிவினைவாத நாட்டங்களை வலுப்படுத்தின. இனத் தேசியங்களினுள்ளேயும் இயங்கும் முதலாளித்துவ நிலைப்பாடுகள் சாதியவாதப் பிளவுகளை வலுப்படுத்தின.

இவ்வகைப்பட்ட காலனியவாத, தேசியவாத, இனவாத, சாதியவாத அணிகள் சார்ந்த வரையறைகளைக் கடந்து பரந்த மனப்பாங்குடன் மக்கள் விடுதலை உணர்வை முன்னிறுத்தியபடி எமது முன்னோடிகளை மறுமதிப்பீடு செய்யும் பொறுப்பு எமக்குரியது. அந்த வரிசையில் நாவலரையும் அவருடன் வைத்துப் பேச அவசியமுள்ள ஆளுமைகளையும் இந்தப் பகுதியில் தரிசிப்போம்!

● மு. திருநாவுக்கரசு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறை விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர், ஈழத்தின் புகழ்மிக்க அரசியல் ஆய்வாளராக அறியப்பட்டவர். தேசியம், ஜனநாயகம், ஏகாதிபத்தியம் குறித்த விவாதங்களை இருபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ச்சியாக எழுப்பிவருபவர். இலங்கை இனப்பிரச்சினையின் தோற்றுவாய் குறித்தும், சிங்கள ராஜதந்திரம் குறித்தும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அரசியல், ராஜதந்திர நகர்வுகள் பற்றியும் ஆழமான ஆய்வுகளைச் செய்துள்ளவர். ஈழத்து அரசியலை நுணுகிய, விரிந்த தளத்தில் தமிழில் ஆய்வுகளை நடத்தும் போக்கினை நிர்ணயிப்பதில் மு. திருநாவுக்கரசுவின் பங்கு தலையாயது. இலங்கை அரசியல் யாப்பு 1931– 2016, இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள், பூகோளவாதம் புதிய தேசியவாதம் என்பன இவரது படைப்புகளாகும்.

# முள்ளிவாய்க்கால் படுகொலையின் கொடிய வேர்களை இலங்கையின் நீண்டகால அரசியல், சமூக, பொருளாதாரக் கட்டமைப்புகளில் காண முடிவது எப்படி?

இனப்படுகொலை என்பது ஏதோ ஒரு நாளில் நிகழ்ந்துவிடும் தன்னியல்பான நடவடிக்கை அல்ல. அது ஓர் ஒடுக்கும் சமூகம் இன்னொரு சமூகத்தின் மீது நீண்டகால அளவில் படிப்படியாகச் செயற்படுத்தும் பல்வேறு விதமான ஒடுக்குமுறைகளின் இறுதி விளைவு. எனவேதான் அதனைக் 'கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை' என அழைக்கிறோம். இனப்படுகொலை நடைபெறும் பல்லினங்களைக் கொண்ட ஒரு நாட்டில் அரசற்ற தேசிய இனங்கள் எல்லாம் விடுதலை அடையலாம் என்றில்லை. ஆனால் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு, வெற்றி பெறுவதற்கான கடினமான பாதையாவது உண்டு. ஈழத்தமிழர் சார்ந்து காணப்படும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை வடிவம் மிகவும் வலுவானது. ஈழத்தமிழர் சார்ந்த அகத்தேசிய நிலை, உள்நாட்டு நிலை, அண்டை நாட்டு நிலை, அயல் நாடுகள் மற்றும் உலக நாடுகள் சார்ந்த நிலை, புவியியல் – வரலாற்று நிலை என்பனவற்றால் அது வலுவாக இறுக்கிக் கட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் அதனை விருப்பு – வெறுப்பிற்கு அப்பால், துல்லியமாக அளவீடு செய்யும் எத்தனமாக 'இலங்கையில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் தோற்றமும் இன்றைய நிலையும்: கோட்பாடு – நடைமுறை – வரலாற்றுப் போக்கு' எனும் இக்கட்டுரைத் தொடர் அமைகிறது.

தூய இலட்சியங்களினாலும், தர்ம போதனைகளினாலும், ஓசோனை உடைக்கவல்ல ஒப்பாரிகளினாலும், வரலாற்றை நிர்ணயிக்க முடியாது. சிங்கத்தின் பிடியில் யானையின் அலறல் காட்டைப் பிளந்து ஓசோனை உடைக்கும். ஆனாலும் கூட, யானையைக் கூறுபோட்டுச் சிங்கங்கள் உண்ணத் தவறுவதில்லை.

“எதனையும் அரசியலாகப் பார்க்க வேண்டும்;

அனைத்தும் அரசியலுக்குக் கீழ்ப்பட்டவையே”

அரசியல் என்பது நலன்களைக் கையாள்வது பற்றிய இயங்கியல் ஆகும். உறவுகள் நலன்களால் ஆனவை. நலன்கள் கொடுக்கல், வாங்கல் அல்லது ஆக்கிரமிப்பாலானவை. தாய்க்கும் - பிள்ளைக்கும், காதலனுக்கும் - காதலிக்கும், அயலவனுக்கும் - அயலவனுக்கும், அண்டை நாட்டுக்கும் - அயல் நாட்டுக்கும், உள்நாட்டுக்கும் - வெளிநாட்டுக்கும் இப்படி எதனை எடுத்துக்கொண்டாலும் அனைத்து உறவுகளும் நலன்களால் கட்டியெழுப்பப்படுபவை. தேவையே தர்மம்; நலன்களே அரசியல்; அரசியல் இன்றி அணுவும் அசையாது.

தேவையில் இருந்து நலனும், நலனில் இருந்து தேவையும், தேவையிலும் நலனிலும் இருந்து அதிகாரமும், அதிகாரமே அரசியலாகவும் வடிவம் பெறுகின்றன. அதிகாரத்தின் உச்சம் இறைமையாகவும் இறைமைக்கான நிறுவனப்பீடம் அரசாகவும் கட்டமைப்பாகின்றன. இந்த அரசைக் கோலோச்சுவது சார்ந்த நடப்பியலே அரசியலெனப்படுகிறது. இந்தவகையில், பூமியில் அனைத்துமே அரசியலுக்குக் கீழ்ப்பட்டவையே.

அதாவது, அரசு அதிகாரத்தைக் கையில் எடுப்பது பற்றிய வித்தைதான் அரசியலாகும். இந்த அரசியல் அதிகாரம் நீதி - தர்மம் - நியாயங்களால் நிர்ணயிக்கப்படுவதில்லை. அது தேவைக்கு ஏற்ப சூழல் சார்ந்த பலத்தினால் நிர்ணயிக்கப்படுகிறது. அதாவது, உள்ளடக்கத்தில் தேவையிலிருந்து சூழல் சார்ந்த பலத்தைக் கையாளும் வித்தையே அரசியலாகும்.

இதன்படி அனைத்துவகையான புனிதப் பிரகடனங்களுக்கும் அப்பால், ‘வரலாறானது வெற்றி பெற்றவர்களால் எழுதப்படுகிறது’ (‘History is written by victors’) என்பதே நடைமுறை உண்மையாகும்.

பூமியில் இருந்து கல்லை மேல் நோக்கி எறிந்தால், அது கீழ் நோக்கி விழுகிறது. இப்படி கல், கீழ் நோக்கி விழுவதற்குப் பெயர் தர்மம் அல்ல; அது இயற்கை விதி. ஆதலால், இந்தப் பிரபஞ்சத்தில் அனைத்துமே குறிப்பிட்ட விதிகளின் வழியே பயணிப்பவை என்பதால் தேவையிலிருந்து நலனைத் தெரிவு செய்து, தேவை + நலன் என்ற கூட்டு இணைப்பை விதிக்கு உட்படுத்தி, விதி வழியே இலக்கை அடையுமாறு வரலாறு கட்டளையிடுகிறது.

மொத்தத்தில், அனைத்துமே அரசியல். அரசியலின் உள்ளடக்கம் தேவைகளும் அதன்வழி நலன்களுமே. தேவைகளும் நலன்களும் ஏதோ ஒரு விதிக்கு உட்பட்டவை. அவ்விதியை அடையாளம் காண்பதற்கான கருவி அறிவியல். இதனால் அரசறிவியல், வாழ்வில் நிர்ணயகரமான ஒன்றாய்க் கோலோச்சுகின்றது. அந்த அறிவார்ந்த செங்கோலைக் கையில் ஏந்தித் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டும் என்பதே வரலாற்று நியதி.

### இனப்படுகொலையை ‘கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை’ என்று ஏன் சொல்கிறோம்?

இனப்படுகொலை ஏதோ ஒரு நாளில் திடீரென்று நடந்துவிடுவதல்ல. இனப்படுகொலை என்பது எப்போதும் கட்டமைக்கப்பட்ட ஒன்றுதான். கோட்பாட்டு அல்லது வரலாற்றுப் பரிமாணமின்றி ஒருபோதும் இனப்படுகொலை நிகழ முடியாது. அதன்படி, இனப்படுகொலை என்பது எப்போதும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையே ஆகும். இனப்படுகொலையானது தெளிவான தத்துவ அடிப்படையைக் கொண்டிருக்கும். ஆதலால், எப்போதும் இனப்படுகொலை என்பது தவிர்க்க முடியாதவாறு ஒரு தத்துவப் பிரச்சினையாயும் அமைந்திருக்கும். ‘கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை’ என்ற பதம் இங்கு வெறும் சட்டப் பதமாக (Legal Term) மட்டும் பயன்படுத்தப்படவில்லை. கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை, சூழல் சார்ந்த காரண - காரியங்களுடன் நிகழ்கின்றது. நீண்ட வரலாற்றுப் பரிமாணங்களுடன் கூடிய அரசியல் - பொருளாதார - சமூகத் தேவைகளின் நிமித்தம் அரங்கேறுகின்றது.

கட்டமைப்பு (Structure) என்பது இங்கே அரசு, அரசியல் யாப்பு, சட்டங்கள், இராணுவம், போலீஸ், நிர்வாகம் போன்ற ஓர் அரசின் அடிப்படைக் கட்டமைப்பையும், சந்தைகள், வேளாண்மை, உற்பத்தி, கல்வி, சுகாதாரம் போன்ற சமூக, பொருளியல் அடிப்படை கட்டமைப்புகளையும் சேர்த்துக் குறிக்கிறது.

ஒரு தெளிவான தனித்துவம் கொண்ட பண்பாட்டு மக்கள் இனத்தின் தனித்துவத்தை இன, மத, மொழி, பிரதேச அடையாளங்களை, வாழ்வியலை, கட்டமைப்பு ரீதியாக அழிப்பதுடன், அரசியல் ரீதியாக அவர்களுக்கென்ற அரசியல் அதிகாரம், அதிகாரத்தில் பங்குவகித்தல் என்பனவற்றை எல்லாம் தோலிருக்கச் சுளை பிடுங்குவது போல் ஒவ்வொன்றாகப் பிடுங்கிவிடுவது இனப்படுகொலையாகும். இந்த வகைப்பாடானது உயிர் அழிப்பல்லாது, பண்பாட்டு இன அடையாளங்களை கட்டமைப்பு ரீதியாக,

படிப்படியாக, நீண்டகால நோக்கில் அழித்தொழிப்பது என்ற போக்கிற்குரியது. இத்துடன் கூடவே இரத்தம் தோய்ந்த இனப்படுகொலையும், பொலீஸ், இராணுவ, சமூக, பொருளாதார, கல்வி ஒடுக்குமுறைகளும் கூட்டுச்சேரும். அதாவது, ஒரு மக்கள் கூட்டத்தின் தனித்துவத்தை, அவர்களின் அடையாளத்தை, அரசியல் - பொருளாதார இருப்பை, கடல், நிலம் வாழ் அதிகாரத்தை, உயிர் வாழ்வை கொஞ்சம் கொஞ்சமாகவும், பின்பு மொத்தமாகவும் அழிப்பது உட்பட, அனைத்தையும் உள்ளடக்கிய வகையில், ஓர் உடலின் அனைத்து உடற்கூறுகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து முழுவடிவம் பெற்றுள்ளது போல, அனைத்தையும் தழுவிய (Holistic) முழுமைப்பட்ட இத்தகைய அழித்தொழிப்பு அணுகுமுறைக்கு 'கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை' என்ற பதம் எடுத்தாளப்படுகிறது.

கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையானது ஒரு முறைமை (System) என்ற வகையில் அது அதற்கே உரிய தர்க்கபூர்வப் போக்கைக் (Logical Development) கொண்டிருக்கும். முறைமை, தர்க்கபூர்வப்போக்கு என்பன நல்மனம் கொண்ட ஒரு சிலரின் அல்லது தனிமனித விருப்பு - வெறுப்புகளுக்கு அப்பால் தன்னகத்தே செயற்படும் வல்லமை கொண்டவை. இது தொடர்பாகப் பின்வரும் கோட்பாட்டு வகையான பார்வை கவனத்திற்குரியது.

"*What is structural genocide?*

*Therefore, if adhering to the logic of a social system inevitably results in structural violence that causes death on a mass scale, then it is apparent that structural genocide is an intentional outcome of human behaviors that adhere to that logic.*"

"ஒரு சமூக அமைப்பில் காணப்படும் தர்க்கபூர்வ விதிகளைக் கடைப்பிடிப்பதனால், அது தவிர்க்க முடியாத வகையில் பாரிய அளவு வன்முறைகளையும், மரணங்களையும் ஏற்படுத்தும் என்றால், அவ்விதிகளை மாற்றாது தொடர்ந்து அப்படியே கடைப்பிடித்துவரும் மனிதர்களின் நடத்தைகளினால், வேண்டுமென்றே, திட்டமிட்ட வகையில் நிகழ்த்தப்படும் கட்டமைப்பே இனப்படுகொலை என்பது வெளிப்படை."

அதாவது புவியியல், பொருளாதாரம், அரசியல், வாழ்க்கை முறை, பழக்கவழக்கம், வரலாறு மற்றும் வரலாற்றியல் ஆகியவற்றால் ஒரு சமூகம் இனப்படுகொலைக்கு உரிய வகையில் கட்டமைப்புச் செய்யப்பட்டு, அந்தச் சமூக அமைப்பு ஒரு முறைமையாகச் செயற்படும் இடத்தில், அந்தச் சமூக அமைப்பு முறையை மாற்றாமல், கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்குத் தீர்வு காண முடியாது என்பதே தத்துவார்த்த அரசியல் உண்மையாகும். இந்தவகையில், 'இனப்படுகொலைக்கான பரிகாரம் பிரிந்து செல்லல் மட்டுமே' (*Genocide can be compensated only by secession*) என்ற கூற்றும் கவனத்திற்குரியது.

## இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினை அல்லது வர்க்கப் பிரச்சினை தீர்ந்தால், இனப் பிரச்சினையும் தீர்ந்துவிடுமா?

மேலும், ஒரு தத்துவார்த்தக் கூற்றைச் சிறிது விரிவாகப் பார்க்கலாம். "காணப்படும் நிஜமான வாழ்க்கை நிலைமைகளில் இருந்து தத்துவப் பிரச்சினைகள் எழுகின்றன. அந்த நிஜமான எதார்த்தபூர்வ நிலைமைகளை மாற்றுவதன் மூலமே - உலகை மறு உருவாக்கம் செய்வதன் மூலமாக மட்டுமே அப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்."

(*"...philosophical problems arise out of real - life conditions, and they can be solved only by changing those conditions - by remaking the world."*)

அதாவது, கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை, எதார்த்தபூர்வ வாழ்க்கை நிலையில், அதாவது அது நிஜமாக எவ்வாறு காணப்படுகிறதோ, அந்த வடிவில் தீர்க்காமல், வேறு வழியில், அதாவது பொருளாதாரப் பிரச்சினை தீர்ந்தால் அல்லது வர்க்கப் பிரச்சினை தீர்ந்தால் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்று ஞானப்பால் குடிக்க முடியாது.

கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையானது தனிப்பட்ட மனித மனதில் இருந்தோ அல்லது வெறும் கொலைவெறி மனப்பாங்கில் இருந்தோ உருவாகுவதில்லை. அது காணப்படும் புவியியல் - வரலாற்றுப் பின்னணியில் இருந்து உருவாகிறது. கி.மு ஆயிரமாம் ஆண்டுக்கு முன்பிருந்தே எகிப்தியர், பாரசிகர், பரந்த அரேபியர், ரோமானியர், பரந்த ஐரோப்பியர் என ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பியக் கண்டங்களைச் சேர்ந்த பல இனங்களாலும் யூதர்கள் அழிவுக்கும் துன்பத்திற்கும் உள்ளாகினர். இதற்கு இவர்களது புவிசார் அமைவிட அரசியற் பின்னணி பிரதான காரணமாகும். இத்தகைய புவிசார் அமைவிட வரலாற்றுப் பின்னணியில் (Geohistorical background) இருந்து இறைவனால் 'வாக்களிக்கப்பட்ட பூமி - *The Promised Land*' என்ற மத ரீதியான ஐதீகம் (Myth) கி.மு 1000 ஆம் ஆண்டளவில் வடிவம் பெறத் தொடங்கியது. எந்தவொரு ஐதீகத்துக்குப் பின்னாலும் அதற்கு அடிப்படையான ஒரு நிஜமான வாழ்வியற் பின்னணி அல்லது வரலாற்றுப் பின்னணி இருக்கவே செய்யும்.

யூதர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையானது மேற்படி மூன்று கண்டங்களையும் சேர்ந்த பல்வேறு இனங்களினாலும் காலத்துக்குக்காலம் அவரவர் பங்களிப்புக்கு உட்பட்டுச் சுமாராக மூவாயிரம் ஆண்டுகால வரலாற்றுப் போக்கில் திரட்சி பெற்ற ஒன்றாகக் காணப்படுகிறது. இனப்படுகொலை

என்றாலே அது கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைதான். அதனை அவ்வப்போது எழுமாற்றாக நிகழும் ஒன்றாய், வெறும் உதிரி அர்த்தத்தில் பொருள் கொள்ளக்கூடாது. இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னான ஆதி மனித இனக்குழுக்களின் மத்தியில் ஓரினத்தை இன்னொரு இனம் அழித்துள்ள வரலாறுண்டு. உயிரை உயிர் உண்டு வாழ்வதே உயிர் வாழ்வு என்ற நியதிக்கு அமைய இனங்களும் அப்போதைய தத்தம் தேவைகளுக்கேற்ப ஓரினத்தை இன்னொரு இனம் கொன்று உயிர் வாழும் வரலாற்றுப்போக்கு இலட்சம் ஆண்டுகால மனிதகுல வரலாற்றில் உண்டு.

இனக்கலவரம் (Ethnic Riots), ஓரினத்தின் மீதான திட்டமிடப்பட்ட பாரிய படுகொலை (Pogrom), இன, மத, அரச அடிப்படையில் ஒரு மக்கள் கூட்டத்துக்கு எதிராகப் பரந்த அளவிலான படுகொலைகள் உட்பட, தீ வைத்தல் முதற்கொண்டு நாசகார வேலைகளைச் செய்தல் (Holocaust) என இனப்படுகொலை பற்றிப் பல உதிரியான பதங்கள் பயன்படுத்தப்பட்டாலும் இவை அனைத்துமே கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்குள் அடங்குவனவாகும்.

முதன்முறையாக 1944 ஆம் ஆண்டு போலந்து யூத இனத்தவரான ராபேல் லிம்கின் (Raphael Lemkin) என்பவர் 'Genocide' என்ற பதத்தை வடிவமைத்தார். 1946 ஆம் ஆண்டு போலந்தில் நடந்த யூத இனப்படுகொலை விசாரணையின் போது 'Genocide' என்ற வார்த்தை ஒரு சட்டப்பதமாகப் பயன்பாடடைந்தது. இதன் பின்பு 1948 ஆம் ஆண்டு ஐ.நா 'Genocide Convention' உடன் சர்வதேச அளவில் 'Genocide' என்ற பதம் இணைத்துக்கொள்ளப்பட்டது.

'Capitalism: A Structural Genocide' என்ற தலைப்பில் Garry Leech என்பவர் எழுதி 2012 ஆம் ஆண்டு வெளியான நூலில், தற்போதைய உலகில் அரசுகள் மூலமாக நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகளுக்கு உலகளாவிய முதலாளித்துவம் அடிப்படைக் காரணம் என்று ஒரு தத்துவப் பின்னணி கூறப்படுகின்றது.

நவீன தொழில்சார் பண்ட உற்பத்தி, முதலாளித்துவம் போன்றவை தோன்றும் முன்பேயும் இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயேயும் இனப்படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. முதலாளித்துவத்தின் (Capitalism) மூலம் தனியார் முதலீடு (Private Investment), தனியார் முதலீட்டின் மூலம் தனியுடைமை (Private Ownership), தனி உடைமையின் மூலம் சொத்துடைமை (Property Ownership) என்று இதன் தத்துவப் பின்னணி பின்னோக்கிய மூலத்திற்குச் செல்லும். இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் ஓர் இனக்குழு தனது உயிர் வாழ்வுக்காக வளமான நிலத்தையும், நீர்நிலைகளையும், வளமான காட்டையும் கட்டுப்படுத்துவதற்காக இன்னொரு இனக்குழுவுடன் மோதி அதில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயல்வதில் இருந்து சொத்துடைமையின் மூலக்கூறை அடையாளம் காணலாம். இன்று காட்டுப் பிராணிகளின் வாழ்வியலில் பிராணிகளிடையேயான இருப்பிடத்திற்கு உரிமை கோருவதான மோதல்களில், இதற்கான தெளிவான மூலத்தைக் காணலாம். அதனை வனவியல் விஞ்ஞானத்தில் வாய்ப்பான பகுதி (Comfort Zone) என்றழைப்பர்.

தனியார் முதலீட்டை அடிப்படையாகக்கொண்ட உலகளாவிய முதலாளித்துவ அரசியல் பொருளாதாரக் கட்டமைப்புத்தான் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான மூலகாரணம் என்பது அறிவியல் சார்ந்த, தற்கால அரசியல் பொருளாதாரம் பற்றிய ஒரு கோட்பாட்டு விளக்கம். ஆனால், இதன்படி உலகளாவிய அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பு மாறும் போது கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையும் இல்லாது போய்விடும் என்கின்ற ஒரு முடிவுக்கு வர நேர்கிறது. உண்மை அப்படி அல்ல; 'ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்காது'. முதலாளித்துவக் கட்டமைப்பை மாற்றுவதற்கு இடையில் அந்தக் கட்டமைப்பின் விளைவான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை நடந்தேறி இன அழிப்புகள் ஆங்காங்கே பூர்த்தியாகிவிடும்.

'ஏகாதிபத்தியத்தை விடவும் ஆபத்தானது இன அழிப்பு' என்கின்ற வகையில் முதலில் இன அழிப்பைத் தடுப்பதற்கான பாதுகாப்பு முதன்மையானது. ஒரு பிரச்சினை எதார்த்தத்தில் எந்த வடிவில் காணப்படுகிறதோ அந்த வடிவில் அது முதலில் தீர்க்கப்பட்டாக வேண்டும். இது சார்ந்த குழப்பம் அதிகம் மார்க்சிச அல்லது கம்யூனிசவாதிகளிடம் ஏற்படுகிறது. ஆனால், இதற்கான சரியான நடைமுறையைப் பொதுவுடைமை அரசை நிறுவியவரான லெனினின் கோட்பாட்டிலும் நடைமுறையிலும் காணலாம். பொதுவுடைமைப் புரட்சிக்கு அடிப்படையான அம்சங்களில் ஒன்றாகத் தேசிய இனங்களின் பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையை வரையறுத்து அதனை லெனின் முதன்மைப்படுத்தினார் என்ற நடைமுறை உண்மையை மேற்படி இடதுசாரிகள் பலரும் கண்டுகொள்ளத் தவறுகின்றனர். 'தத்துவப் பிரச்சினை எதார்த்தத்தில் நிஜமான வாழ்நிலையிலிருந்து எழுகிறது' என்கின்ற அறிஞர் மார்க்ஸின் கோட்பாட்டையும் மார்க்சிசவாதிகள் கவனிக்கத் தவறுகின்றனர்.

மனித வாழ்வுக்கு 'உணவு, உடை, உறைவிடம்' என்பன அடிப்படையானவையே ஆனாலும், பிராணிகள் ஆயினும் சரி, மனிதர்களாயினும் சரி, உயிர் வாழ்வுக்கு முதன்மையானது பாதுகாப்பு. எனவே பாதுகாப்பு இன்றி வேறு எதுவும் இருந்து பயனில்லை. ஆதலால், அடிப்படையிலும் அடிப்படையானது பாதுகாப்பு.

உலகில் உள்ள அனைத்து நாடுகளும் முதலில் முன்னுரிமை கொடுப்பது தேசிய பாதுகாப்புக்காகும். இதனை மேலும் அழுத்தமாக தேசிய பாதுகாப்பும் பந்தோபஸ்தும் (National Defence and Security) என்ற பதமும் நடைமுறையும் விளக்கி நிற்கின்றது.

பொருளாதாரப் பிரச்சினை தீர்ந்தால் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும், இனப்படுகொலை தீர்ந்துவிடும் என்ற வெறும் பொருளாதார வாதமானது இனப்படுகொலையை இன்னொரு வழியில் முன்னெடுப்பதற்கான மார்க்கமே ஆகும். இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை; பொருளாதாரப் பிரச்சினைதான் உண்டு; பொருளாதாரப் பிரச்சினை தீர்ந்தால் இனப்பிரச்சினை தானாகவே தீர்ந்துவிடும் என்று மஹிந்த ராஜபக்சவும், கோத்தபாய ராஜபக்சவும் கூறிய ஆபத்தான பொருளாதார இனப்படுகொலை வாதத்தை உரிய வகையில் கண்டுகொள்ளத் தவற முடியாது.

2024 ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் அதன் முக்கிய வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுரகுமார திசாநாயக்க போன்றோரும் இத்தகைய கட்டமைக்கப்பட்ட பொருளாதார இனப்படுகொலை வாதத்தையே முன்நிறுத்தினர். இவர்கள் கூறும் பொருளாதார இனப்படுகொலை வாதத்துக்குள், தமிழ்த் தேசிய இனம், தன் தனித்துவத்தை இழந்து சிங்கள பௌத்த மயமாக்கத்திற்குள் கரைந்து அழிந்து போய்விடும்.

மனிதன் வெறுமனே ஒரு பொருளாதாரப் பிராணி அல்ல. பொருளாதாரத்துடன் கூடவே மொழி, பண்பாடு, கலை, தனித்துவம், வாழ்க்கைமுறை ஆகிய அனைத்து அம்சங்களினாலும் கூட்டாய்ப் பின்னிப்பிணைக்கப்பட்ட ஒரு தெளிவான சமூக வாழ்வைக் கொண்டவன்.

மனிதன் வெறுமனே ஓர் உணவுண்ணிப் பிராணியல்ல. சராசரி மனிதர்களின் கண்களில் வெறும் உணவுண்ணிகளாகத் தோன்றும் பிராணிகளிடத்திற்கூட தெளிவான பண்பாட்டு வேறுபாடுகளும், வாழ்க்கைமுறை வேறுபாடுகளும், தனித்துவங்களும் உண்டு என்பதைக் கண்டுகொள்வதற்கான மனத்தை மனிதன் விரிவாக்க வேண்டும். இன்று வளர்ந்து வரும் அறிவியல் துறையான பிராணிகள் நடத்தையியல் விஞ்ஞானம் (Animal Behavioral Science) பிராணிகளின் பண்பாட்டியல் பழக்கங்களைக் கூர்ந்து அவதானிக்கின்றது.

கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை விவகாரத்தில் பொருளாதாரம் ஓர் அம்சமாக இருக்கின்றதே ஆயினும், அதனைக் குறித்த புவியியல், அரசியல், வரலாற்று வளர்ச்சிப்போக்கு என்பவற்றுக்கு ஊடாக, நடைமுறை சார்ந்து, இரத்தமும் தசையுமான வாழ்வியலுக்கூடாகப் பார்வையிட வேண்டும்.

நல்லதோ, கெட்டதோ எந்தவொரு செயலும் அல்லது நகர்வும் அவை தொடங்கிய இடத்தில் இருந்து அவை அவற்றுக்குரிய தர்க்கபூர்வப் பாதையில் பயணிக்கும். சமைப்பதற்கு விறகைக் கொளுத்தினால் அதில் வெப்பம் நேரடி விளைவாக (Direct Effect) வரும்போது புகை பக்கவிளைவாக (Side Effect) வருகிறது. இதில் பக்கவிளைவான புகையை எதிர்கொள்ளத் தவற முடியாது. புகையைப் புகையாக அணுகியாக வேண்டும். சமூகம், அரசியல், வாழ்வியல் அனைத்திற்கும் இது பொருந்தும். எனவே இனப்பிரச்சினையை அல்லது இனப்படுகொலையை பொருளாதாரப் பிரச்சினையின் வெளிப்பாடு என்று கூறிவிட்டு அதனை அதற்குரிய பரிமாணத்தில் அணுகத் தவற முடியாது.

எப்போதும் அடிப்படையையும் அதனோடு இணைந்த வெளிப்பாட்டையும் இணைத்துப் பார்க்க வேண்டும். இதில் வெளிப்பாட்டைப் புறந்தள்ள முடியாது. அதாவது, நெருப்பில் இருந்து தோன்றும் புகை எப்படி பொய் இல்லையோ, அப்படியே வெளிப்பாடுகளுக்கும் அவையவற்றுக்குரிய உண்மைகள் அல்லது தாக்கங்கள் உண்டு. தத்துவம் நடைமுறைக்கு வழிகாட்ட வேண்டுமே தவிர, அது நடைமுறையில் இருந்து பிரிந்து கற்பனையில் இருக்க முடியாது.

ஆதலாற்தான் “எந்த ஒரு நடத்தையின் வெளிப்பாடும் அதற்குள் உள்ளடங்கி இருக்கும் தத்துவத்தை எமக்கு ஓரளவு சொல்லி நிற்கும்” (For the outcome, the outcome tells us something about the ideas.) என்ற தத்துவார்த்தக் கூற்றும் இவ்விடத்தில் கவனத்திற்குரியது.

அனைத்தையும் தழுவிய முழுமைப்படுத்தப்பட்ட அணுகுமுறை (Holistic Approach) என்ற அறிவியல் பார்வையில் நின்று, வேரில் இருந்து மரமென விரிந்து விழுது வரையான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் சூழலையும் உள்ளடக்கி, ஓர் உருவரை தீட்ட வேண்டும். அதனை அதனதன் சூழலில் வைத்து உரிய வகையில் அதற்கே உரிய தனித்துவமான வடிவில் எடைபோட வேண்டும்.

ஆதலால், கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகளை வெறும் பொத்தாம் போக்காகப் பார்க்காது அவற்றை அவற்றுக்குரிய தனித்துவமான பின்னணிகளில் வைத்து புவியியல் - அரசியல் - பொருளாதார - சமூகவியல் வரலாற்று வளர்ச்சிப்போக்கு என்பனவற்றிற்கு ஊடாக எடைபோட வேண்டியது முக்கியம்.

எந்த ஒரு தத்துவமும் நடைமுறையால் மெய்ப்பிக்கப்படாது விட்டால் அது வறண்ட வாதமே; எந்த ஓர் இலட்சியமும் நடைமுறைக்குப் பொருந்தாவிட்டால் அது கற்பனாவாதமே. கற்பனாவாதமும் வறண்டவாதமும் எதிரியின் கையில் கொடுக்கப்படும் கூரிய வாள்களாகும்.

கந்தையா சண்முகலிங்கம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.
‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

# இந்தியச் சமஷ்டி முறை

இனக் குழுமம், சமயம், மொழி, பண்பாடு ஆகியவற்றால் வேறுபாடுகளைக் கொண்ட பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களில் (MULTI – CULTURAL SOCIETIES) சமாதான வழிகளில் தீர்க்க முடியாதனவான சிக்கலான அரசியல் பிரச்சினைகள் தீவிரமடைந்து உள்நாட்டுக் குழப்பங்களிற்கும், உள்நாட்டு யுத்தங்களிற்கும் வழிவகுத்துள்ளன. இதனை மூன்றாம் உலக நாடுகளின் சமகால வரலாறுகள் உணர்த்தியுள்ளன. இவ்வரசியல் பிரச்சினைகளைப் பேச்சு வார்த்தைகள் மூலம் சமாதான வழியில் தீர்த்தல், சம்மந்தப்பட்ட நாடுகளின் அமைதிக்கும், சமூக – பொருளாதார – அரசியல் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைகிறது. அமைதி வழியான தீர்வை அரசியல் தீர்வாக (POLITICAL SOLUTION) அமைப்பதோடு அதிகாரப் பகிர்வு (POWER SHARING), சுயாட்சி (SELF RULE) ஆகியவற்றுக்கான ஆட்சிக் கட்டமைப்புக்களை, அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் மூலம் உருவாக்குவதும் இன்றியமையாத முன் தேவையாக உள்ளது. அந்த வகையில், ‘அதிகாரப் பகிர்வும் சுயாட்சியும் : மூன்றாம் உலக அனுபவம்’ என்னும் இப்புதிய தொடரில் மூன்றாம் உலக நாடுகளான இலங்கை, இந்தியா, மலேசியா, பாகிஸ்தான், நைஜீரியா, எத்தியோப்பியா, சூடான், மெக்சிக்கோ ஆகிய நாடுகளின் அனுபவங்களை விளக்கியுரைக்கும் கட்டுரைகளின் தமிழாக்கம் வெளியிடப்படும். பல்வேறு தீர்வு மாதிரிகள், அத்தீர்வு மாதிரிகளின் பின்னால் உள்ள அரசியல் கோட்பாடுகள் (POLITICAL THEORIES), அரசியல் யாப்புத் தத்துவங்கள் (CONSTITUTIONAL PRINCIPLES) என்பனவும் விளக்கிக் கூறப்படும்.

*ஆங்கில மூலம்: ஜயம்பதி விக்கிரமரட்ண*

உலக நாடுகளின் சமஷ்டி முறைகளில் இந்தியாவின் சமஷ்டி முறை தனித்துவம் மிக்கது. இந்தியாவின் சமஷ்டி முறை அரசியல் யாப்புகளை உருவாக்குதல் (Constitution Making) தொடர்பாகச் சிறந்த பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கான முன் உதாரணமாகத் திகழ்வது. சட்ட அறிஞர் ஜயம்பதி விக்கிரமரட்ண 'Constitution Making in Multi - cultural Societies: Some International Experiences' என்னும் கட்டுரையில் 'Success in India' என்னும் உப தலைப்பின் கீழ் ஐந்து பக்கங்களில் கூறியிருக்கும் கருத்துகளை தொகுத்தும் சுருக்கியும் கூறுவதாக 'இந்தியாவின் சமஷ்டி முறை' என்னும் இத்தமிழ்க் கட்டுரை அமைந்துள்ளது.

## பிரிவினையின் போது இந்தியா

பிரித்தானியாவின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த இந்தியத் துணைக்கண்டத்தின் விரிந்த நிலப்பரப்பை இரு தேசங்களாகப் பிரித்து, 'இந்திய ஒன்றியம்' (Indian Union) என்னும் புதிய தேசம் உருவாக்கப்பட்டது. புதிதாக உருவாகிய இந்திய தேசத்தில் மொழிவழி மாநில அரசு (Linguistic State) என்று கூறத்தக்கதாக 'ஒடிசா' (முன்பு 'ஒரிஸ்ஸா' என்று அழைக்கப்பட்டது) மட்டுமே இருந்தது. 1936 ஆம் ஆண்டு ஒரிஸ்ஸா மாகாணம் உருவாக்கப்பட்டது.

அம்மாகாணத்தின் பெரும்பான்மை மக்கள் ஒரியா மொழியைப் பேசுபவர்களாக இருந்தனர். இதனோடு ஒப்பிடக்கூடிய மொழிசார் ஒருமைத்தன்மையுடைய (Linguistic Homogeneity) மாகாணங்கள் எதுவும் அப்போது இந்தியாவில் இருக்கவில்லை. பிற மாகாணங்கள் யாவும் மொழிப் பண்பாட்டுச் சமூகங்களை எழுந்தமானமாகக் கூறுபோட்டுச் செயற்கையான புவியியல் எல்லைகளுக்குள் அடக்குவனவாக இருந்தன.

இக்காரணத்தால் இந்தியாவின் மொழிச் சமூகங்களின் (Linguistic Communities) நியாயமான கோரிக்கைகள் தொடக்ககாலத்தில் கவனிக்கப்படாமல் போயின. மொழிச் சமூகங்களின் கோரிக்கைகள், அரசியல் யாப்பை வரைவதற்கான சபையின் (Constituent Assembly) கவனத்தைப் பெறவில்லை. அச்சபையின் விவாதங்களின் போது மொழிவழி மாநிலங்களை அமைப்பதற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் சில ஆண்டுகள் கழிந்த பின்னர் சுதந்திர இந்தியாவின் மாநிலங்களின் எல்லைகளை மொழியடிப்படையில் மறுவரையறை செய்தல் (Re - demarcation on Linguistic Lines) முதன்மையான தேவை என உணரப்பட்டது.

## மொழிவழி மாநிலங்கள்

மாநிலங்களை மொழிப் பண்பாட்டு அடிப்படையில் மீள்வரையறை செய்தல் வேண்டும் என்னும் கோரிக்கைகளை இந்தியா தாராண்மை நோக்குடனும், துணிச்சலோடும் அணுகியது. வெவ்வேறு பிராந்தியங்களில் இருந்து இக்கோரிக்கைகள் தொடர்ந்து எழுந்தபோது நேரு தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழு மொழிவழி மாநிலங்கள் என்ற கருத்தாக்கத்தை முற்றாக நிராகரித்தது. ஆயினும், ஆந்திரப் பிரதேசத்தை தனி அலகாக உருவாக்குவதை, விதிவிலக்கான ஒன்றாக ஏற்றுக்கொண்டது. இதன் பின்னர் 'மாநில அரசுகளின் மறுசீரமைப்பு ஆணைக்குழு' (The States Reorganisation Commission) என்னும் பெயரில் ஓர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அதன் அறிக்கை 1953 - ஒக்டோபரில் வெளியாயிற்று. அவ்வறிக்கையில் 'மொழிவழி ஒருமைத்தன்மை' (Linguistic Homogeneity) என்னும் கருத்து மட்டுமே அரசுகளின் எல்லைகளை மீள்வரையறை செய்வதற்கான அறிவார்ந்த கொள்கையாக இருக்கும் எனக் குறிப்பிடப்பட்டது. 'அரசுகளின் மறுசீரமைப்புச் சட்டம் 1956' (The State Reorganisation Act of 1956) என்னும் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமும், இதையடுத்து இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்களும் இந்தியாவில் மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்தன. மொழிவழி மாநிலங்களை அமைப்பதன் மூலம் ஒவ்வொரு மாநிலத்தின் எல்லைக்குள்ளும் இயன்றளவிற்குப் பொதுவான பண்பாட்டு அடையாளமுடைய சமூகங்கள் உள்ளடக்கப்பட்டன. குஜராத்தி மொழி பேசுவோருக்குக் குஜராத்தி மாநிலம்; மராத்தியர்களுக்கு மகராஷ்டிரம்; பஞ்சாபியர்களுக்குப் பஞ்சாப்; தெலுங்கு மொழி பேசுவோர்களுக்கு ஆந்திரப் பிரதேசம்; மலையாள மொழியினருக்குக் கேரளா; கன்னடியர்களுக்கு கர்நாடகம் எனப் பல மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்டன. மொழிவழி மாநிலங்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து சென்றது.

## தமிழ்நாடு

திருவிதாங்கூர் - கொச்சின், மதராஸ், மைசூர் ஆகிய மூன்று அரசுகளின் எல்லைகளுக்குள் பிளவுபட்டிருந்த தமிழ்பேசும் மக்களை ஒருங்கிணைத்து, தமிழர் பெரும்பான்மையினராகவுள்ள தமிழ்நாடு (Tamil Majority Tamilnadu) என்னும் மாநில அரசு உருவாக்கப்பட்டது. இதனால், தமிழர்கள் தம் பண்பாட்டு அடையாளத்தை வலியுறுத்தும்

சுதந்திரமான அரசு ஒன்றை நிறுவிக்கொண்டனர். இந்திய ஒன்றியத்தின் ஓர் அலகாக அமைந்த இம்மாநில அரசுக்கு ‘தமிழ்நாடு’ என்று பெயரிடப்பட்டது. இந்தியத் தலைவர்கள் இவ்வாறான பெயரடையாளங்களைக் கண்டு அச்சம் கொள்ளவில்லை. உண்மையில் தனிநாடாகப் பிரிந்துபோதல் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த சி.என். அண்ணாத்துரை விரும்பிய பெயர் எதுவோ, அப்பெயரே மறுசீரமைக்கப்பட்ட இப்புதிய மாநிலத்தின் பெயராயிற்று. அண்ணாத்துரை தனிநாடு கோரிக்கையை கைவிடுவதாகப் பகிரங்கமாக அறிவித்தார். இந்தியாவின் வடகிழக்குப் பிராந்தியம் நூற்றுக்கணக்கான பழங்குடி மக்கள் குழுமங்களை (*Tribes*) கொண்ட பிரதேசமாகும். இப்பகுதியிலிருந்து பண்பாட்டு அடிப்படையிலான தனி அலகுகள் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன. அக்கோரிக்கைகளை ஏற்றுப் புதிய மாநில அரசுகள் உருவாகின.




Image Source - www.livelaw.in

### இந்தியாவின் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் புதிய மாநில அரசுகள்

2000 ஆம் ஆண்டில் சத்திஸ்கார், உத்தராஞ்சல், ஜார்க்கண்ட் என்னும் புதிய அரசுகள் உருவாகின. இப்புதிய அரசுகள் மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களின் எல்லைகளுக்குள் உள்ளடங்கியிருந்த மக்கள் சமூகங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் உருவாக்கப்பட்டன. இப்புதிய அரசுகளின் உருவாக்கத்தில் சமூக - பண்பாட்டு அரசியல் கூறுகள் கவனத்தில் கொள்ளப்பட்டன. இவை மொழி அடிப்படையிலான அலகுகள் அல்ல என்பதைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். சத்திஸ்கார் கனிமவளம் மிக்க பிரதேசமாகும். கனிமவளம் மிக்க இப்பகுதியில் இருந்து மத்திய பிரதேச அரசு பெருமளவு வருமானத்தைப் பெற்றது. ஆனால் இந்த வருமானம் பின்தங்கிய சத்திஸ்கார் பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்காக நீதியான முறையில் மறுபங்கீடு செய்யப்படவில்லை. சத்திஸ்கார் மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களின் பயனாக சத்திஸ்கார் என்னும் புதிய அரசு உருவானது.

உத்தராஞ்சல் மலைப்பாங்கான ஒரு பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் பண்பாடு தனித்துவமானது. இப்பிரதேசத்தின் சாதிப் பிரிவினைகளும், பொருளாதாரமும் தனித்துவமானவை. உத்தராஞ்சல் என்னும் புதிய மாநிலம் இவற்றைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது. ஜார்க்கண்ட், பழங்குடி மக்கள் வாழும் பிரதேசமாகும். இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முந்திய காலத்தில் இருந்தே இப்பிரதேசத்தின் பழங்குடிகள் தனிநாடு கோரிக்கையை முன்வைத்துப் போராட்டம் நடத்தி வந்தனர். இன்று ஜார்க்கண்ட் தனிமாநில அரசாக விளங்குகிறது.

### தெலுங்கானா

ஆந்திர மாநிலத்தின் தெலுங்கானா பகுதியை தனிமாநிலமாக ஏற்றுக்கொள்வதற்கு 2013 இல் இந்திய அரசு உடன்பட்டது. தெலுங்கானா ஆந்திர மாநிலத்தின் மொத்த சனத்தொகையின் 40% மக்களைக் கொண்டுள்ளது. அம்மாநிலம் ஆந்திர அரசின் திறைசேரிக்கு சனத்தொகை வீதத்தைவிடக் கூடியளவு வருவாயை அனுப்புகிறது.

ஆயினும் இப்பகுதியின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை எனத் தனிநாட்டுக் கோரிக்கையாளர்கள் குற்றஞ்சாட்டி வந்தனர். நீர்வளப்பங்கீடு, வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றிலும் பாரபட்சம் காட்டப்படுவதாகவும், தெலுங்கானா தேசியவாதிகள் குறைகூறினர். இந்திய அரசாங்கம் தெலுங்கானாவை தனிமாநிலமாக ஏற்றுக்கொள்ளும் முடிவை வெளியிட்ட போது, ஆந்திராவின் மற்றப்பகுதிகளின் மக்களிடம் இருந்து கடுமையான எதிர்ப்பு எழுந்தது.

## யூனியன் பிரதேசங்கள்

இந்தியாவில் 9 சிறிய சமூகங்களிற்கு 'யூனியன் பிரதேசங்கள்' (Union Territories - UT) என்ற அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. யூனியன் பிரதேசங்களின் சிறிய சமூகங்கள் இதன்மூலம் அரசு அதிகாரத்தைப் பெற்றுத் தமது தனித்துவத்தையும் அடையாளத்தையும் பேணுவதற்கு வழிசெய்யப்பட்டுள்ளது. யூனியன் பிரதேசம் என்ற வகை அதிகாரப் பகிர்வுக்குச் சிறந்த உதாரணமாக புதுச்சேரி விளங்குகிறது. புதுச்சேரி முன்னர் பிரான்சு தேசத்தின் காலனியாக இருந்து வந்தது. புதுச்சேரி யூனியன் பிரதேசம் நிலத்தொடர்பற்ற பல பகுதிகளை உள்ளடக்கிய அரச அலகாக விளங்குகிறது. இப்பகுதிகளுள் மிகப்பெரியதான புதுச்சேரி அந்த யூனியன் பிரதேசத்தின் தலைநகராக உள்ளது. தமிழ்நாடு மாநிலத்தின் நிலப்பகுதியோடு இணைந்ததாக 130 கிலோமீற்றர் தொலைவில் உள்ள காரைக்கால் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் பகுதியாக உள்ளது. புதுச்சேரி வாழ் மக்களைப் போன்றே காரைக்கால் மக்களும் தமிழ் பேசுவோராக உள்ளனர். மாகே (Mahe) என்னும் பகுதி 830 கிலோமீற்றர் தொலைவில் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. கேரள மாநிலத்துடன் நிலத்தொடர்புடைய மாகே மக்கள் மலையாள மொழி பேசுவோராவர். புதுச்சேரிக்கு வடக்கே 830 கிலோமீற்றர் தொலைவில் ஆந்திரா மாநிலத்தின் பகுதியாக விளங்கும் யனம் (Yanam) தெலுங்கு பேசும் மக்களைக் கொண்டுள்ளது. இந்நான்கு பிரதேசங்களும் பிரான்சின் முன்னாள் காலனிகள் என்ற பொது அடையாளத்தை உடையன. வெவ்வேறு பண்பாடுகளைக் கொண்ட இந்நான்கு சமூகங்களும் தமது பொது அடையாளத்தைப் பேணிப் பாதுகாப்பதில் விருப்பம் கொண்டுள்ளன. தமக்கு அயலில் உள்ள தமிழ்நாடு, கேரளம், ஆந்திரா ஆகியவற்றுடன் இணைக்கப்படுவதை இம்மக்கள் சமூகங்கள் விரும்பவில்லை. போர்த்துக்கல் நாட்டின் முன்னாள் காலனியான கோவா (Goa) சிறியதொரு பகுதியாக விளங்கியபோதும், தனிமாநிலமாக அரசு என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளது. தத்ராவும் நாகர் ஹவேலியும் (Dadra and Nagar Haveli), டாமன் மற்றும் டியு (Daman and Diu) என்பனவும் நிலத்தொடர்பற்ற சிறிய பகுதிகளாகும். இவை யூனியன் பிரதேசங்கள் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளன.




Image Source - www.mapsofindia.com

இந்தியாவின் பல பகுதிகளிலும் சுயாட்சிக்கான (Autonomy) கோரிக்கைகள் மக்கள் சமூகங்களால் முன்வைக்கப்பட்டன. சில பகுதிகளில் இவை ஆயுதம் ஏந்திய வன்முறைப் போராட்டங்களாகவும் அமைந்தன. கோர்க்கா தேசிய விடுதலை முன்னணி (Gorkha National Liberation Front) என்னும் அமைப்பு கோர்க்கா நாடு (Gorkha Land) என்னும் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து ஆயுதப் போராட்டத்தை நடத்தியது. இம்மக்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு 1988 ஆம் ஆண்டு 'டார்ஜீலிங் கோர்க்கா மலைப்பகுதிக்கான கவுன்சில்' (Darjeeling Gorkha Hill Council) என்ற அரச நிறுவனம் தாபிக்கப்பட்டு கோர்க்காப் பகுதிக்கு நிர்வாக அதிகாரம் (Gorkha Territorial Administration) வழங்கப்பட்டது. ஆயினும் இந்த நிர்வாக ஒழுங்கில் திருப்தியுறாத 'கோர்க்கா ஜனமுக்தி மோர்ச்சா' (Gorkha Janmukti Morcha) என்னும் அமைப்பு தனிநாட்டுக் கோரிக்கையை மீண்டும்

வலியுறுத்தி 2007 ஆம் ஆண்டு முதல் போராட்டங்களை முன்னெடுத்தது. 2011 ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் மாநில சட்டசபைத் தேர்தல்கள் நடைபெற்ற பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற புதிய அரசாங்கம் கோர்க்கா ஜனமுக்தி மோர்ச்சா அமைப்புடன் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டது.

இவ்வுடன்படிக்கையின்படி கோர்க்கா பகுதியின் கவுன்சிலிற்கு, கூடிய நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அசாம் மாநிலத்தில் 'போடோ' இன மக்கள் சமூகம் 'போடோ நாட்டு அரசு' (Bodoland State) என்னும் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துப் போராட்டம் நடத்தியது. 2003 ஆம் ஆண்டில் அசாம் மாநில அரசு, அசாம் மாநிலத்திற்குள் போடோ நாடு பிரதேச கவுன்சில் (Bodoland Territorial Council) என்ற நிறுவனக் கட்டமைப்பை உருவாக்கி போடோ மக்களின் சுயாட்சிக்கு வழி செய்தது. கோர்க்கா, போடோ ஆகிய இன மக்களிற்கு தனித்த சுயாட்சிக் கவுன்சில்களை அமைத்ததை ஒத்த நிர்வாக ஒழுங்குகள் லடாக், கார்க்கில் ஆகிய பகுதி மக்களுக்கும் ஏற்படுத்தப்பட்டன.

லடாக், ஜம்மு காஷ்மீர் பிரதேசத்தின் ஒரு பகுதியாகும். லெக் மாவட்டம் (Leh District) என அழைக்கப்படும் இம்மாவட்டத்தின் லடாக்கியர்கள் பௌத்த சமயத்தவர்கள் ஆவர். இவர்கள் சமயப் பண்பாட்டு அடிப்படைகளில் ஜம்மு காஷ்மீரின் பிற பகுதிகளை விட வேறுபாடு உடையவர்களாக இருந்தனர். இவர்களின் கோரிக்கைகளை ஏற்ற இந்திய அரசாங்கமும், ஜம்மு காஷ்மீர் அரசாங்கமும் லடாக் பகுதியில் சுயாட்சி மலைப்பகுதி அபிவிருத்திக் கவுன்சில் (Autonomous Hill Development Council) என்னும் சுயாட்சி அமைப்பை உருவாக்கின. ஜம்மு காஷ்மீரின் கார்க்கில் மாவட்டம் (Kargil District) ஷியா முஸ்லிம்கள் (Shia Muslims) பெரும்பான்மையினராக வாழும் பகுதியாகும்.

இப்பகுதி மக்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, லடாக் பகுதிக்கு அமைக்கப்பட்ட கவுன்சில் போன்ற அமைப்பு, கார்க்கில் பகுதிக்கும் அமைக்கப்பட்டது.

### அசமத்துவ அதிகாரப் பகிர்வு

இந்தியா போன்ற பெரிய தேசத்தில் பல்வேறு பண்பாட்டு சமூகங்களுடைய அபிலாசைகளை பூர்த்தி செய்ய வேண்டிய தேவை எழுகிறது. அசமத்துவ ஒழுங்கமைப்புகளை (Asymmetrical Arrangements) பொருத்தமானதொரு அரசியல் யாப்பு உபாயமாக ஸ்பானியா, ஐக்கிய இராச்சியம் என்பன கையாண்டு பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டன. இந்திய அரசியல் யாப்பிலும் அசமத்துவ அதிகாரப் பகிர்வு (Asymmetrical Devolution) என்னும் ஒழுங்கமைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது.

அருணாசல பிரதேசம், அசாம், மிசோராம், மணிப்பூர், நாகாலாந்து ஆகியன புவியியல் ரீதியில் ஒதுக்குப்புறமான பிரதேசங்களாகும். இவை இந்தியா சுதந்திரம் பெற்ற தொடக்ககாலத்தில் யூனியன் பிரதேசங்களாக இருந்தன. இவை இன்று தனிமாநில அரசுகளாக உருவாக்கம் பெற்றுள்ளன. சிக்கிம் 1974 இல் இந்தியாவுடன் இணைக்கப்பட்டு 'இணைப்பு அரசு' (Associate State) என்னும் அந்தஸ்துடையதாக விளங்குகிறது. மேற்குறித்த பிரதேசங்கள் யாவும் நூற்றுக்கணக்கான இனக்குழுமங்களைக் (Tribes) கொண்ட இனக்குழுமங்களின் வாழிடங்களாக உள்ளன.

நாகாலாந்து மக்கள், பெரும்பான்மை கிறிஸ்தவர்களாக உள்ளனர். இனக்குழுமச் சமூகங்களின் வழமைச் சட்டம், சமூக - சமய நடைமுறைகள், சிவில், குற்றவியல் நீதி (Civil and Criminal Justice) நில உடைமை (Land Ownership) ஆகியன தனித்துவமானவை. இவற்றைப் பேணிப் பாதுகாக்கும் ஏற்பாடுகள் இந்திய அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் பிராந்தியங்களிலும் மாநிலங்களிலும் எழும் பிரச்சினைகளுக்கு அவ்வப்போது தாமதம் இன்றித் தீர்வுகளை வழங்கும் நாடாக இந்தியா விளங்குகிறது. அந்நாடு சுதந்திரம் அடைந்த வேளையில், இந்தியா என்னும் ஒன்றுபட்ட தேசம் நிலைத்து நிற்க முடியுமா? அல்லது அது உடைவுற்றுப் பல தேசங்களாக உருமாற்றம் பெறப்போகிறதா? என்ற சந்தேகத்தைப் பலர் வெளியிட்டனர். ஆயினும் இந்தியா அரசியல் யாப்புப் புத்தாக்க வழிமுறைகளைக் கையாண்டு வந்துள்ளது; அவற்றால் இந்தியாவிற்குப் பல நன்மைகள் கிடைத்தன. ஆயினும் இந்தியாவினால் தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சினைகள் ஏராளம் உள்ளன.

இத்தமிழ்க் கட்டுரை ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்களின் 'Towards Democratic Governance in Sri Lanka' என்னும் நூலின் முதலாவது அத்தியாயமான 'Constitu tion Making in Multi - cultural Societies: Some International Experiences' என்னும் தலைப்பிலான கட்டுரையில் 29 முதல் 33 வரையான ஐந்து பக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளைத் தொகுத்தும் சுருக்கியும் கூறும் முறையில் எழுதப்பட்டுள்ளது. மேற்படி நூல் 'Institute of Constitution al Studies' என்னும் ஆய்வு நிறுவனத்தால் 2014 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.



வை. ஜெயமுருகன்

சமூக அபிவிருத்தி ஆய்வாளரான இவரது எழுத்துக்கள் அபிவிருத்தி பிரச்சினைகள் தொடர்பாக கவனம் கொள்வதுடன் போரின் பின்னரான நினைவுகொள் காலத்தின் மீள் கட்டமைப்புக்கள் மீதும் அழுத்தம் கொடுக்கிறது. இவர், அபிவிருத்திக் கல்விக்கான கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக 'இலங்கையின் போரின் பின்னரான அபிவிருத்தி முரண்நிலை' என்னும் கருப்பொருள் மீதான ஆய்வை முன்னெடுத்தவர். இவ் ஆய்வு நூலாக வெளிவரவுள்ளது. சர்வதேச கிறிஸ்டின் பல்கலைக்கழகத்தில் 'M.A in Peace Study' ஆய்வுப் பட்டம் செய்ய ரோட்டரி (Rotary Peace Fellow) புலமைப்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர்.

# மலையகத்தில் கூட்டுறவு முயற்சிகள்

2009 இல், போரின் முடிவில், போர் தந்த சிதைவுளுக்கு நாம் முகம் கொடுத்தோம். இதில் மிக முக்கியமானது போர் சிதைத்த எமது நிறுவன நினைவு வளம் (Institutional Memory) ஆகும். மனித இழப்புகளுக்கு அடுத்ததாக, எம்மால் கட்டமைக்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்வும், சிதைவும் பிடுங்கி எறியப்பட்ட பூசணிக் கொடிகள் போல எங்கும் பரவிக் கிடக்கிறது. நிறுவனங்களின் சிதைவுகளில் மிக முக்கியமானதும், மிகவும் பாதிக்கப்பட்டதுமாக அமைவது கூட்டுறவு இயக்கமாகும்; கூட்டுறவுத் துறையின் வெற்றிக்கு அச்சாணியாக இருந்த கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களும் அதனோடு இணைந்தே அழிவுக்குள்ளாகின. இச் சிதைவுகளைக் கண்டறிந்து மீள் உருவாக்கம் செய்ய வேண்டிய காலமிது. அதன் பொருட்டு, கூட்டுறவு இயக்கம் – கூட்டுறவின் கட்டமைப்புக்கள் மிக முக்கிய அசைவியக்கமாக மாற முடியுமா? போரின் பின்னரான மீள் கட்டுமானத் திட்டங்களுக்கும் நிலையான அபிவிருத்திக்கும் கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் யாது? எங்கிருந்து தொடங்குவது? போரின் பின்னரான சிதைவுகள், அதன் விளைவாக விளைந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு அதனால் உதவ முடியுமா? ஆகிய வினாக்களை இத் தொடர் முன்வைத்து ஆராய்கின்றது. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் மலையகம் உட்பட, இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள கூட்டுறவுத் துறையினால் ஒரு வலுவான மாற்றுப் பொருளாதாரக் கட்டமைப்புக்கு சிறப்பாக உதவ முடியும். கூட்டுறவுத் துறையின் வளர்ச்சி சார் விடயங்களை மையமிட்டு காத்திரமான விடயங்களை தர்க்கத்துடன் கலந்துரையாடி, சிந்தனைக்கான முன்மொழிவுகளை தரும் இத் தொடர் 'கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் : போரின் பின்னரான மீள் கட்டுமானமும் அபிவிருத்தியும்' எனும் பெயரில் அமைகிறது.

உலங்கைத் தேயிலை நாட்டுக்கு ஒரு தனித்துவமான இடத்தையும், மதிப்பையும், குறியீட்டையும் அளித்தது. ஆனால் பெரும்பாலான தேயிலைத் தொழிலாளர்கள் இன்னும் பல தசாப்தங்களாக லயன் காம்பிராக்களில் வசிக்கின்றனர். கல்வி, சுகாதாரம், சமூக நல்வாழ்வு ஆகிய துறைகளில் அவர்கள் தொடர்ந்தும் புறக்கணிப்பை அனுபவிக்கிறார்கள். 1948 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட குடியுரிமைச் சட்டம் (எண் - 18) இதற்கான முக்கிய தொடக்கமாக அமைந்தது. அப்போது, சுமார் 6.3 மில்லியன் மக்கள் தொகையில் 1.2 மில்லியன் இந்தியத் தமிழர்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டது; இது தீவின் மொத்த தமிழ் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு. இந்தச் சட்டம் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார, மத, உயிரியல், தார்மீக மற்றும் உடல் ரீதியான ஒடுக்குமுறைகளை சட்டரீதியாக உறுதிப்படுத்தியது. சுதந்திரத்திற்குப் பின் மலையக மக்களின் வாழ்வையும் மன உறுதியையும் திட்டமிட்டு நசுக்கிய சட்டமாக அது அமைந்தது.

இலங்கையின் மலையகப் பகுதி அதன் பொருளாதாரத்தின் மையமாக விளங்கினாலும், பெருந்தோட்டத் துறையின் முதுகெலும்பாக இருந்த மலையக மக்கள் சமூக-பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கியவர்களாகவே தொடர்ந்தனர். சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும் நாட்டின் முக்கிய வருவாய் மூலமான பெருந்தோட்டப் பொருளாதாரத்தை தாங்கிய இவர்களின் பங்களிப்பு வலுவானது. இருப்பினும், இருபத்தியோராம் நூற்றாண்டிலும் நவீன அடிமைகளாக வாழும் சூழலில், அதனை மாற்றக்கூடிய கூட்டுறவுத் துறையின் பங்குபற்றலும் இங்கு குறைவாக உள்ளமை மிகப்பெரும் சிக்கலாக அமைந்துள்ளது.

சுதந்திரமான கூட்டுறவு வளர்ச்சியின்றி மலையக மக்கள் இன்று எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பல கட்டமைக்கப்பட்ட காரணங்களின் விளைவு எனலாம். சுரண்டலுக்காக வடிவமைக்கப்பட்ட லயன் வாழ்க்கைமுறை ஒரு திறந்த சிறைபோல், இடைவிடாத உழைப்பை மட்டுமே பெறும் வகையில் உருவாக்கப்பட்டது. கூட்டுறவுகளை உருவாக்கத் தடையாகப் பெருந்தோட்ட தொழிற்சங்கங்களின் வலுவான வலைப்பின்னலும் அவற்றின் அரசியல் பின்னணியும் செயற்பட்டன. அதேபோல், கூட்டுறவுத்துறை சார்ந்த திணைக்களத்தின் குறுகிய அணுகுமுறை, நுண்ணரசியல், மேலும் பெருந்தோட்டக் கம்பெனிகளின் நில உரிமை மீதான கடுமையான போக்குகள் மலையக மக்களின் கூட்டுறவு முன்னேற்றத்தைத் தடுத்த முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன. இலங்கையின் இன்றைய சமூக-பொருளாதார நெருக்கடிகளின் வேர்கள், கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக மலையகத் தமிழர்கள் எதிர்கொண்ட அவலங்கள் மற்றும் போராட்டங்களோடு இறுகப் பிணைந்துள்ளன. இந்தச் சரிவின் விதை மலையக மக்களைச் சுற்றிய வன்முறை அரசியலின் வெளிப்பாடு ஆகும். இரு நூற்றாண்டுகளுக்கு முன் தென்னிந்தியாவில் இருந்து ஏமாற்றப்பட்டு கொண்டுவரப்பட்ட அவர்கள், கோப்பி மற்றும் தேயிலைத் தோட்டங்களில் ஒப்பந்தத் தொழிலாளர்களாக, வியர்வையையும் இரத்தத்தையும் சிந்தினர்; பிரித்தானியக் காலனித்துவத்தின் கீழ் நாட்டின் நவீன பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பினர். ஆனால் சமூகத்தில் அவர்களின் இடம் புறக்கணிக்கப்பட்டது. 1931 ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை, இலவச சுகாதாரம், கல்வி என இலங்கையில் ஜனநாயகமும் சமூக நலன்களும் விரிந்தபோதிலும், மலையகத் தமிழர்களின் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்க்கை தொடர்ந்து நெருக்கடிகளில் சிக்கிக்கொண்டது.

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பிந்தைய சமூக-பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவுத் துறையின் பங்கு முக்கியமானதாக இருந்தாலும், மலையக மக்கள் அதிலிருந்து திட்டமிட்டவாறு விலக்கப்பட்டனர். காணி உரிமை மறுக்கப்பட்டதும், காணிகளுக்கான விலாசம் இல்லாமையும், பெருந்தோட்ட வரையறைகளும் இவர்களின் கூட்டுறவுகளில் பங்கேற்பைத் தடுத்தன. சுதந்திரத்திற்குப் பிறகு மலையக மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதும், தொடர்ந்து சமூக ஒதுக்கலுக்குள்ளாக்கப்பட்டதும் நாட்டின் வரலாற்றில் மீளமுடியாத கறையாகவே உள்ளது.

குடியுரிமைச் சட்டம் இல்லாமல் இருந்திருந்தால், இன்று மலையக மக்களின் தொகை மூன்று மில்லியனாக உயர்ந்திருக்கும்; அவர்களின் சமூக-பொருளாதார நிலைமையும் உயர்ந்திருக்கும்; இன முரண்பாடுகள் இல்லாத சூழலில் இலங்கை, ஆசியாவில் முன்னணியில் விளங்கியிருக்கும்; அரசியல் பொறுப்பின்மையின் அழிவுகளைத் தவிர்த்திருக்கும்; ஒருங்கிணைந்த தேசத்தை உருவாக்கியிருக்கும். ஆனால், பேரினவாதமும் பல்லின மறுப்பும் நாட்டின் வளர்ச்சியைத் தடுத்தன.

மலையகத் தமிழர்களின் காலனித்துவ அனுபவம் கடினமான போராட்ட வாழ்வாகவே இருந்தது. தொழிலாளர் போராட்டங்களும் தொழிற்சங்க முன்னெடுப்புகளும் அவர்களின் அன்றாட வேலை மற்றும் வாழ்வை எதிர்கொள்வதற்கான ஆயுதங்களாக அமைந்தன. முற்போக்குச் சக்திகளின் ஒழுங்கமைப்பில் இந்தப் போராட்டங்கள், பிற உழைக்கும் மக்களுடன்

இணைந்த ஒரு வலுவான சக்தியாக மாறியபோதிலும், குடியுரிமையும் வாக்குரிமையும் மறுக்கப்பட்டதால் அவர்களின் முன்னேற்றம் முற்றாகத் தடுக்கப்பட்டது.

குடியுரிமைப் பிரச்சினை பின்னர் மெதுவாகத் தீர்க்கப்பட்டாலும், மலையக மக்கள் இரு நூற்றாண்டுகளுக்கான பொருளாதார வாய்ப்புகளை இழந்தனர். காணியுரிமை, கல்வி, சுகாதாரம், சமூக-பொருளாதாரக் கட்டமைப்பு ஆகியவை அவர்களுக்கு எட்டாதவையாகவே இருந்தன. இந்த அழுத்தங்களின் கூட்டுத்தொகை, கூட்டுறவின் அடித்தளத்தை உருவாக்கும் எந்த முன்னெடுப்பையும் முற்றாகத் துடைத்தழித்தது.

இலங்கையில் கூட்டுறவு இயக்க வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய தேசிய கூட்டுறவு மேம்பாட்டு நிறுவனம் (NICD), 1943 முதல் 2001 வரை கூட்டுறவு மேம்பாட்டுத் துறையின் கீழ் இலங்கை கூட்டுறவுப் பள்ளியாகச் செயற்பட்டது. பின்னர் அதன் விரிவாக்கத்தையும் தன்னாட்சியையும் உறுதிப்படுத்துவதற்காக, சட்டம் எண் 1 இன் கீழ் தேசிய கூட்டுறவு மேம்பாட்டு நிறுவனமாக மறுசீரமைக்கப்பட்டது. கண்டி மாவட்டம், பொல்கொல்லவில் மகாவலி அணைக்கு அருகில் 22 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருந்தாலும், இது மலையக மக்களின் கூட்டுறவுத் தேவைகளைப் முற்றிலும் புறக்கணித்தது. சட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க வழிகள் இருந்தபோதிலும், அதிகார மையநோக்கு அணுகுமுறை மாற்றமின்றி நீடித்தது. இதுவே கூட்டுறவுத் திணைக்களத்தின் நிலைப்பாடாக இருந்தது. அண்மைக்காலத்தில் மலையகப் பெண்கள் ஒன்றிணைந்து கூட்டுறவுச் சங்கம் ஒன்றை உருவாக்க முயற்சித்தனர்; வெறும் இரண்டு அதிகாரிகளின் கையொப்பத்தைப் பெறவே இரண்டு வருடங்கள் ஓடி அலைந்தனர். இதுவே இந்தச் சிக்கலின் தெளிவான சான்று.

வரலாற்றுப் பார்வையில், தோட்ட அமைப்பு பெரும் தனியார் தோட்டங்களின் நலன்களை மட்டுமே காக்கும் வகையில் செயற்பட்டதால், தொழிலாளர் தலைமையிலான சுயாதீன கூட்டுறவுகள் வளர்வதற்கான வாய்ப்புகள் தடுக்கப்பட்டன. இதற்கிடையில், சில தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய கூட்டுறவுகளை உருவாக்க முயற்சி செய்தன. ஆனால் காலப்போக்கில், அவற்றின் செயற்பாடுகளும் முடங்கிப் போயின; தோட்ட நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் கரைந்துவிட்டன. மலையகத்தில் கூட்டுறவு வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் காரணிகள் பின்வருமாறு:

1. பெருந்தோட்டக் கம்பெனிகளின் கட்டுப்பாடு: பெரிய தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்கள் ஆதிக்கம் செலுத்தி, தொழிலாளர்களை நேரடியாக வேலைக்கு அமர்த்தி நிர்வகிக்கின்றன. இதனால் சுயாதீனத் தொழிலாளர் அமைப்புகளுக்கும் கூட்டுறவுகளுக்குமான இடம் ஏற்படவில்லை; மலையக வாழ்விடங்கள் முழுமையாக ஒடுக்கப்பட்ட இடங்களாக மாறின.

2. சுரண்டல் நிலைமைகள்: குறைந்த ஊதியம், மோசமான வேலை நிபந்தனைகள், வாழ்வாதார நெருக்கடிகள் தொழிலாளர்களை தொழிற்சங்கக் கட்டுப்பாட்டில் சிக்கவைத்தன; கூட்டுறவுகள் மூலம் முன்னேற்றம் தேடுவது சாத்தியமின்றிப் போனது.

3. வளக் குறைவும் தோட்டக் கட்டுப்பாடும்: தொலைவிலுள்ள தோட்டங்கள், மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் ஆகியவை தொழிலாளர்களின் வளங்களையும் தகவல்களையும் கட்டுப்படுத்தின; அவர்களின் வாழ்க்கை முழுமையாக நிர்வாகக் கட்டுப்பாட்டில் சிக்கியதால், கூட்டுறவு வளர்ச்சி தடைப்பட்டது.

4. தொழிலாளர் பாதிப்பு: வேலை இழப்பு மற்றும் மேற்பார்வை அழுத்தம் குறித்த பயம், தொழிலாளர்களை நிலைமையைச் சமாளிப்பதிலிருந்து அல்லது கூட்டுறவுகளை அமைப்பதிலிருந்து விலக்குகிறது.

5. அரசியல்மயமான தொழிலாளர் உறவுகள்: அரசியல் செல்வாக்குகள் தொழிலாளர் இயக்கங்களையும் தொழிற்சங்க நடவடிக்கைகளையும் நிர்ணயித்தன; இதனால் சுயாதீனக் கூட்டுறவுகளை உருவாக்குவது மேலும் சிக்கலானதாகியது.

இந்தத் தடைகளுக்கு மத்தியிலும் சில தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுக்காக சில்லறை விற்பனைக் கடைகள் போன்ற சேவைகளை அறிமுகப்படுத்த முயன்றன. இதன் மூலம் கூட்டுறவின் பயன்கள் குறித்த ஒரு வரையறுக்கப்பட்ட விழிப்புணர்வு உருவானது. தேசிய தொழிலாளர் காங்கிரஸ் (NWC) போன்ற அமைப்புகள் கூட தோட்ட நிர்வாகத்துடன் இணைந்து இத்தகைய முன்னோடிக் கடைகளை நிறுவின. ஆனால் ஆரம்பத்திலேயே பல சவால்கள் எழுந்ததால், இந்த முயற்சிகள் பெரிதாக வளர முடியாமல் போனது.

இங்கு முக்கிய பிரச்சினை தொழிலாளர்களின் இடப்பெயர்வாகும். இளம் தலைமுறை வாய்ப்புகளைத் தேடி நகர்வதானது, முழுப் பெருந்தோட்டக் களநிலைமையையும் தலைகீழாகப் புரட்டக்கூடியதாக உள்ளது. இதனால் உற்பத்தி குறைவு, வேலைப்பளு அதிகரிப்பு என்பன ஏற்பட்டு, தொழிலாளர்களின்

அதிருப்தி படிப்படியாக உயர்கிறது. கூட்டுறவுத் துறை தொழிலாளர்களின் முழுமையான பங்களிப்பை ஊக்குவிக்கக்கூடும்; அதற்காக கூட்டுறவுகளின் நோக்கமும் முன்னெடுப்பும் தெளிவாகக் குறிவைக்கப்பட வேண்டும். ஆனால் இன்று முன்முயற்சிகள் குறைவாகவே உள்ளன. தோட்டத் தொழிலாளர்களின் நிலைமைகளை மேம்படுத்துவதையும், கூட்டுறவுகள் மூலம் சுரண்டலை எதிர்த்துப் போராடுவதையும் நோக்கமாகக் கொண்ட புதிய முறைமை அவசியமாக உள்ளது. தொழிற்சங்கங்கள் பல இடங்களில் சுரண்டலிற்கு மட்டுமே வழிவகுத்துள்ளன என்று மலையக இளைஞர்கள் கருதுகின்றனர்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக, இளைஞர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு மலையக சமூகத்தின் மிக முக்கிய கவலையாக மாறியுள்ளது. தோட்டங்களில் போதுமான வேலை மற்றும் வருமானம் இல்லாத இளம் தொழிலாளர்கள் நகர்ப்புறங்களில் குறைந்த ஊதியம் பெறும் தொழில்கள், சேவைத்துறைகள், வீட்டுப் பணிகள் உட்பட உணவகங்கள் மற்றும் கடைகள் போன்ற இடங்களிலும் வேலை செய்கின்றனர். அதேசமயம், தோட்டங்களில் அதிக ஊதியம், வீட்டுவசதி, பயிர்ச்செய்கை நிலம் போன்ற சமூக-பொருளாதாரக் கோரிக்கைகள் தொடர்ந்தும் முன்வைக்கப்படுகின்றன; இது தோட்டங்களின் நீண்டகால நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது. அரசு மற்றும் தோட்டக் கம்பெனிகள் வழங்கும் வாக்குறுதிகள் பெரும்பாலும் போலியானவை. உண்மையில், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வருமானம் பாதிக்கப்பட்டதால், இடையூறுகள் அதிகரித்து, நாடு பொருளாதார ரீதியாக முடங்கியிருப்பது, தோட்டங்களுக்கு நிதி வழங்குவதையும் கடினமாக்கியுள்ளது. நாட்டின் இன்றைய பொருளாதார மந்தநிலை மலையகச் சமூகத்தை மேலும் சீரழிக்க உள்ளது. மலையகத் தமிழர்களின் துயரங்களை அரசு எவ்வாறு நிவர்த்தி செய்யப்போகிறது என்பது பெரும் கேள்வியாகவே உள்ளது.

(மூலம் - 'தோட்டத் துறையில் வறுமை: அது தலைகீழாக மாறிவிட்டதா?', கே. ரோமேஷுன் மற்றும் பிரியந்தி பெர்னாண்டோ, 7 மே 2015. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை (2013), வீட்டு வருமானம் மற்றும் செலவுக் கணக்கெடுப்பு - 2012/13 - முதற்கட்ட அறிக்கை, கொழும்பு)

2024 ஆம் ஆண்டு நிலவரப்படி, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பீடுகளின்படி, இலங்கையின் மக்கள் தொகையில் 24.5% பேர் வறுமையில் வாழ்கின்றனர். வறுமை படிப்படியாகக் குறைந்தாலும், 2026 வரை அது 20%க்கும் அதிகமாகவே இருக்கும் என உலக வங்கி கணிக்கிறது. ஜூன் 2025 இல் வெளியிடப்பட்ட அறிக்கைகளில், மலையகத் தமிழர்கள் அதிகம் வசிக்கும் தோட்டப் பகுதிகள் போன்ற GIDA (புவியியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் பின்தங்கிய) பகுதிகளில் வறுமை மிகுந்த பரவலாகக் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு வறுமை விகிதங்கள் நாட்டின் பிற பகுதிகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளன.

இலங்கை மூன்று மத்திய பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது: நகர்ப்புறம், கிராமப்புறம் மற்றும் எஸ்டேட் (தோட்ட) பகுதிகள். பொதுவாக, கிராமப்புறப் பகுதிகள் நகர்ப்புறங்களை விட அதிக வறுமையைச் சந்திக்கின்றன. இருப்பினும், கிடைக்கும் தரவுகளின்படி மிகக் கடுமையான வறுமை மலையக மக்கள் மற்றும் அவர்களின் இடம்பெயர்ந்த சந்ததி பெரும்பான்மையாக வசிக்கும் தோட்ட மண்டலங்களிலும், கிழக்கு மாகாணத்தின் எல்லைப் பகுதிகளிலும் (குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள புல்லுமலை போன்ற இடங்களில்), மேலும் மத்திய, ஊவா, தெற்கு, வடக்கு மற்றும் அவற்றின் எல்லைப் பகுதிகளின் சில குறிப்பிட்ட இடங்களிலும் அதிகமாகக் காணப்படுகிறது. இலங்கையில் தலை எண்ணிக்கை வறுமை விகிதம் நகர்ப்புறங்களில் 4.4%

| | சொந்த வீடு | வீட்டு வரிசை அறைகள்/ குடிசைகள் | ஒன்றுக்கும் மேற்பட்ட படுக்கை அறைகள் | வளாகத்திற்குள் குடிநீர் வசதி | வீட்டுக்கு மட்டுமேயான கழிப்பறை | பாதுகாப்பான குடிநீர் | கல்வித் தகுதி: க.பொ.த (உ/த) தேர்ச்சி மற்றும் அதற்கு மேல் |
|---|---|---|---|---|---|---|---|
| தேசிய அளவில் | 86.1% | 5.5% | 79.2% | 81.2% | 89.8% | 88.7% | 12.0% |
| நகர மட்டம் | 81.2% | 5.0% | 78.1% | 92.0% | 88.6% | 98.7% | 19.7% |
| கிராம அளவில் | 91.5% | 2.7% | 81.0% | 79.6% | 90.8% | 89.0% | 10.9% |
| பெருந்தோட்ட மட்டம் | 8.2% | 56.9% | 51.6% | 67.4% | 75.9% | 43.2% | 2.1% |

ஆகவும், கிராமப்புறங்களில் 16.6% ஆகவும் உள்ளது. ஆனால், மலையக மக்களின் வாழ்விடங்களில் அது 51.3% என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது.

இலங்கையின் பெருந்தோட்டப் பகுதிகளில் வறுமை வரலாற்றுப் புறக்கணிப்பும் கட்டாய இடப்பெயர்வும் காரணமாக உருவானது. ஆங்கிலேயர் கொண்டுவந்த இந்தியத் தமிழர் சந்ததியினர் இன்றும் குறைந்த ஊதியம், மோசமான வீட்டுவசதி, சுகாதாரமின்மை, வேலைவாய்ப்புக் குறைவு ஆகியவற்றில் சிக்கியுள்ளனர். நுவரெலியாவைச் சேர்ந்த தோட்டச் சமூகங்கள் பொருளாதார வீழ்ச்சி, பணவீக்கம், உணவுப் பொருள் விலை உயர்வு, நலவாரியக் குறைபாடு, உர விநியோகக் குழப்பம் ஆகியவற்றால் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றன. இதனால் பொருட்களை வாங்கும் சக்தியும் ஊட்டச்சத்து உட்கொள்ளலும் குறைந்து, குழந்தைகளின் ஆரோக்கியம் தீவிரமாகப் பாதிக்கப்படுகிறது.

WFP இன் உதவி, சமூகத் தோட்டக்கலை, உர அணுகல் மேம்பாடு போன்ற முயற்சிகள் நடந்தாலும், உயரும் வறுமையைச் சமாளிக்க அவை போதவில்லை. நீண்டகாலத் தீர்வாக உள்ளூர் உணவு உற்பத்தியைப் பல்வகைப்படுத்தல், நுண்ணூட்டச்சத்து உணவுகளுக்கான அணுகலை விரிவாக்கல், காலநிலை மாற்றம் போன்ற அதிர்ச்சிகளுக்கெதிரான உற்பத்தி மீள்தன்மையை வலுப்படுத்தல் ஆகியவை அவசியம். சமூகக் கூட்டுப் பங்காண்மையின் மூலமே பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியும்.

குழந்தைத் தொழிலாளர் அதிகரிப்பு கடுமையான மாற்று நடவடிக்கைகளை அவசியப்படுத்துகிறது. குழந்தைகள் மற்றும் பெண்கள் மீதான பாலியல் வன்முறை அதிகரிப்பதும் மிகவும் கவலைக்குரியது. பல குழந்தைகள் பள்ளியை விட்டு வேலைக்குச் செல்வதால் வறுமைச் சுழற்சி நிலைத்துக்கொண்டே இருக்கிறது; இது அதிக இடைநிறுத்த விகிதங்களையும், அழுத்தங்களையும் உருவாக்குகிறது. தொழிலாளர்கள் பாகுபாடு, வன்முறை, துஷ்பிரயோகம் ஆகியவற்றை எதிர்கொள்கின்றனர். மருத்துவச் சேவைகள் தொலைவில் இருப்பதும், தரமான கல்வி மற்றும் குழந்தைப் பராமரிப்புக்கான அணுகல் குறைவதும் தோட்டக் குழந்தைகளின் வளர்ச்சியைத் தடுக்கின்றன. பல குடும்பங்கள் நெரிசலான, ஒரு அறை வீடுகளில், மின்சாரம், சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் இன்றி வாழ்கின்றன.

ஒருங்கிணைந்த அணுகுமுறையால் மட்டுமே குடும்ப வருமானம் உயர முடியும்: கல்விச் சீர்திருத்தம், மலிவான குழந்தைப் பராமரிப்பு, வேலை வாய்ப்புகள் மற்றும் சமூக ஆதரவு ஆகியன ஒன்று சேர வேண்டும். கூட்டுறவு முறை பரஸ்பர உரிமை மற்றும் நீடித்த வருமானத்திற்கான சிறந்த தீர்வாக இருக்கும். வடக்கில் சில கிராமங்களில் சமூக ஆர்வலர்கள் சமூக நிலையங்கள், கூட்டுறவுகள் மூலம் நிலம் மற்றும் கட்டுப்பாட்டைப் பெறுவதில் முன்னேற்றம் அடைந்திருந்தாலும், மலையக மக்கள் தங்கள் தனிச்சிறப்பையும் அமைப்பாற்றலையும் நிலைநிறுத்துவதில் இன்னும் பின்தங்கியே உள்ளார்கள். குறிப்பாகப் பெண்கள், இரட்டைப் பணிகளால் — வருமானத் தேடலும் குடும்பப் பராமரிப்பும் — சிரமடைகிறார்கள்.

பிந்தைய காலனித்துவ இலங்கை, மிகக் கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியைச் சந்திக்கிறது. இந்த அவலத்திலிருந்து மீள, விளிம்புநிலைச் சமூகங்களின் வரலாற்றுச் சவால்களைக் கணக்கில் எடுப்பது தவிர்க்க முடியாததாகின்றது. மலைநாட்டுத் தமிழர்களின் அனுபவம்—ஏற்றத்தாழ்வு, சுரண்டல், சமூகப் புறக்கணிப்பு—இன்றைய தேசிய நெருக்கடியின் மைய அம்சங்களை வெளிப்படுத்துகிறது. நாட்டின் புற எல்லைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால்தான், மையமும் தேசமும் நிலையான மாற்றப் பாதையில் செல்ல முடியும்.

### கூட்டுறவுத் துறையின் சமூக, பொருளாதாரப் பங்களிப்பு

மலையகத்தில் கூட்டுறவுகள் பரவலாக வேரூன்றினால், கூட்டுப் பேரம் பேசும் வலு ஊக்குவிக்கப்படும்; அத்தியாவசியச் சேவைகள் மற்றும் சந்தைகளுக்கான அணுகல் எளிதாகும்; சுயஅமைப்புச் சாத்தியமாகும். குறிப்பாகப் பெண்கள் தங்கள் வீட்டுவசதி, கல்வி மற்றும் சமூக - பொருளாதார நிலையை மேம்படுத்தும் அதிகாரத்தைப் பெறுவார்கள். மேலும் கூட்டுறவுகள், திட்டமுறையான விரிவாக்கம், வறுமைக் குறைப்பில் கணிசமான பங்களிப்பைச் செய்யும். இதனால் சமூக ஒருங்கிணைப்பு, கூட்டுப்பங்காண்மை மற்றும் இணைந்த உள்ளூர்க் கட்டமைப்பு உருவாகும். சமூகத் தலைமையிலான முயற்சிகள் நம்பிக்கையையும் மலர்ச்சியையும் ஊக்குவிக்கும்.

1. அதிகாரமளித்தல் மற்றும் சுயஅமைப்பு: கூட்டுறவுகள் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் அவர்களின் தலைமையில் கூட்டு வலிமையை உருவாக்க ஒரு தளத்தை வழங்குகின்றன. இதனால் அவர்கள் சிறந்த ஊதியங்கள், வேலை நிலைமைகள் மற்றும் சமூக நலன்களைப் பேச்சுவார்த்தை மூலம் எதிர்கொள்ள முடியும். இதன் மூலம் சமூகப் பொருளாதார அழுத்தமும் அதன் பாதிப்புகளும் குறையும்.

2. வளங்களுக்கான அணுகல்: கூட்டுறவு, உறுப்பினர்களுக்கு நிதி, கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாய ஆதரவு போன்ற முக்கிய சொத்துகள் மற்றும் சேவைகளை அணுக உதவுகின்றன. அவை பெரும்பாலும் இந்த ஓரங்கட்டப்பட்ட பகுதிகளில் நம்பிக்கையை வளர்க்கின்றன.

3. தரமான வாழ்க்கை நிலைமைகள்: கூட்டுறவு, வீட்டுவசதி முயற்சிகள் வீட்டுத்தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தலாம். இது சுகாதாரம் மற்றும் கண்ணியத்தை அதிகரிக்கும்.

4. சந்தை அணுகல் மற்றும் வருமான வளர்ச்சி: கூட்டுறவுகள், உறுப்பினர்கள் தங்கள் தயாரிப்புகள் அல்லது சேவைகளுக்கான சந்தைகளைக் கண்டறிய உதவுகின்றன; சிறு விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் சிறந்த விலைகளைப் பெறவும் வருவாயை அதிகரிக்கவும் அனுமதிக்கின்றன.

5. திறன்கள் மற்றும் கல்வி: இந்த அமைப்புகள் பயிற்சி மற்றும் கல்வி வாய்ப்புகள், திறன்கள் மற்றும் வேலைவாய்ப்புகளை மேம்படுத்துதல் மூலம் மனித மூலதன மேம்பாட்டை ஊக்குவிக்கின்றன.

6. இடர் பகிர்வு: அபாயங்களை ஒருங்கிணைப்பதன் மூலம், கூட்டுறவு நிறுவனங்கள் சமூகப் பாதுகாப்பை வழங்குகின்றன. நிதி அல்லது பிற கஷ்டங்களின் போதும் பாதுகாப்பை வழங்குகின்றன.

பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில், மலையகப் பகுதிகளில் கூட்டுறவின் அவசியம் அதிகமாக உள்ளது. சிறு விவசாயிக் கூட்டுறவு நிறுவனங்கள், பெரும்பாலான பெரிய தோட்டங்களைவிட, தொழிலாளர்களை மேம்படுத்துவதில் சிறப்பாகச் செயற்படுகின்றன. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பரிந்துரைகள் போன்ற கூட்டுறவுக் கொள்கைகளுடன் இணைந்த ஆதரவுக் கொள்கைகள் அவற்றின் நிலையான வளர்ச்சிக்கு அவசியம். வெற்றிகரமான கூட்டுறவுகளில் உறுப்பினர் பங்கேற்பும் பகிரப்பட்ட பொறுப்பும் வலுவாக உள்ளது. தோட்டச் சமூகங்களின் தேவைகளில் கவனம் செலுத்தி, சமூக ஈடுபாட்டுடன் வலுவான கொள்கை ஆதரவை இணைத்தால், கூட்டுறவு நிறுவனங்கள் மலையக வறுமை மற்றும் சமூக அசமத்துவத்துக்கு எதிரான மாற்றத்தின் சக்திவாய்ந்த கருவியாக அமைய முடியும்.

மலையக மக்கள் மாற்றத்தைக் கோரினாலும், சமூக - அரசுக் கட்டமைப்புகளும், திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இன ஒதுக்கல் நிலமையும், மாற்றமுடியாத தடைகளாக அமைகின்றன. அவர்கள் தோட்டங்களில் தேயிலை பறிப்பவர்களாகவும், வடக்கில் நீர்வசதி இல்லாத குடியிருப்புகளில் நிலமற்றவர்களாகவும் பேணப்படுகிறார்கள். இளம் பெண்களுக்கு சில தெரிவுகளே உண்டு: சிலர் வடக்கில் ஆடைத் தொழிற்சாலைகளில் சுரண்டப்படுகிறார்கள்; சிலர் கண்ணிவெடி அகற்றும் ஆபத்தான வேலையில் ஈடுபட்டுள்ளனர்; சிலர் இராணுவமயமாக்கப்பட்ட பண்ணைகளில் வேலை செய்கின்றனர். இவை நிரந்தரத் தெரிவுகள் அல்ல. அபாயகரமான வேலைவாய்ப்பிலும், நிலம் மற்றும் பிற வளங்களின் பற்றாக்குறையிலும், இந்தப் பெண்கள் பல தசாப்தங்களாக குறைந்த மாத வருமானத்தில் தமது வாழ்வாதாரத்தை நடத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

## நம்பிக்கை தரும் முன்னெடுப்புகள்: பதுளை மாவட்டக் கூட்டுறவுகளின் உருவாக்கம்

### 1. வானவில் தொழில் முனைவோர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம்

2023, 12 ஆம் மாதம் இரண்டாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. முதலில் 21 உறுப்பினர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போதைய உறுப்பினர்கள் 43 பேர். எல்வட்டன் கிராமமானது பதுளை மாவட்டத்தில் ஹாலிஎல பிரதேசத்தில் அமைந்துள்ளது. போகாமடித்த, திக் வெல்ல, அந்துவா வெல ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி உள்ளது. இச்சங்கம் ஊவா மாகாண கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கிராமம் வளங்கள் நிறைந்து காணப்படுகின்றது. இங்கு நீர் வளம், போக்குவரத்து, மருத்துவம், கால்நடை வளர்ப்பிற்கான வளம், சுய தொழில் வளம் போன்ற பல்வேறு வளங்கள் காணப்படுகின்றன. அத்துடன் தோட்டத் தொழிலாளிகள் கொழுந்து பறித்து, தேயிலை வளத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். மூன்று பிரிவுகளிலும் ஆசிரியர்கள், போலிஸ் அதிகாரிகள், தாதியர்கள், தபாற்காரர்கள் போன்ற அரச அதிகாரிகளும், உத்தியோகத்தர்களும் வாழ்ந்து வருகின்றனர். மேலும் தனியார் துறையில் பணியாற்றும் அதிகாரிகளும் வசிக்கின்றனர். இங்கு கால்நடை வளர்ப்பு அதிகமாகக் காணப்படுகின்றது. அதாவது மாடு, ஆடு, கோழி என்பவற்றை வளர்த்து தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர். தையல், இனிப்புப் பண்டங்கள் தயாரித்தல், உணவு பொதி செய்தல், பைகள் தைத்தல் எனப் பல்வேறு சுய தொழில்களையும் செய்து வருகின்றனர். மேலும் தமது அன்றாடச் செலவை மீதப்படுத்தும் வகையில் வீட்டுத் தோட்டச் செய்கையிலும் மக்கள் ஈடுபடுகின்றனர். தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர் என பல்லின மக்களும் இன, மத பேதமின்றி ஒற்றுமையாக

வாழ்ந்து வருகின்றனர். இங்கு ஒரே ஒரு தமிழ்ப் பாடசாலை 1 தொடக்கம் 5 வரையான வகுப்புகளைக் கொண்டு, 45 மாணவர்களையும், பத்து ஆசிரியர்களையும் உள்ளடக்கிச் செயற்பட்டு வருகின்றது. தற்போது இச்சங்கத்தில் 20 பேர் சுயதொழில் செய்து வருகின்றனர்.

**2. சிகரம் தொழில் முனைவோர் சிக்கனக் கடனுதவிச் சங்கம்**

டுமோ டிவிசன், மடுல்சீமை, கல்லுள்ள, 18 B கிராம சேவையாளர் பிரிவு; லுணுகலை பிரதேச செயலக எல்லைக்குள்ளும் பதுளை மாவட்டத்திற்கு உள்ளேயும் இருக்கின்றது. ஊவா மாகாண கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்தில் இச்சங்கத்தின் பதிவிற்கான அனைத்து ஆவணங்களும் வழங்கப்பட்டுள்ளன. 2023, 08 ஆம் மாதம் இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. பிரதான நோக்கங்களாக சேமிப்பை ஊக்குவித்தல், சுயதொழிலை ஊக்குவித்தல் ஆகியன அமைகின்றன. ஆரம்பிக்கும் போது 22 அங்கத்தவர்கள் காணப்பட்டனர். தற்போது 27 அங்கத்தவர்களுடன் இச்சங்கம் சிறப்பாக இயங்கி வருகின்றது. இதில் 12 பேர் சுயதொழிலாளர்களாக இருக்கின்றனர். அவர்கள் ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சில்லறைக் கடை, மரக்கறித் தோட்டம் போன்றவற்றைச் செய்கின்றனர். இதனைத் தவிர பிற தொழில்முனைவோரும் இருக்கின்றனர். தோட்டத்தில் 150 குடும்பங்கள் வசிக்கின்றன. நீர் வளம் பிரதான வளமாகக் காணப்படுகிறது. தேயிலைத் தோட்டம் மற்றும் ஆலயங்கள் போன்றவை காணப்படுகின்றன. அவை சமூக ஒருங்கிணைப்பைத் தருகின்றன. கூட்டுறவுச் சங்கம் அமைந்துள்ள பகுதி, பதுளை நகரத்தில் இருந்து 48 KM தூரத்தில் அமைந்துள்ளது. இதனைத் தவிர கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களும் இங்கு காணப்படுகின்றனர்.

சங்கத்தின் நோக்கம் எதிர்காலத்தில் சேமிப்பை ஊக்குவித்தலும், சுய தொழிலை வளர்ப்பதும் ஆகும். மேலும், புலமைப் பரிசில் பரீட்சையில் சாதித்த மாணவர்கள் மற்றும் கல்வியியற் கல்லூரி/ பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் மாணவர்களைக் கௌரவிப்பதும் சங்கத்தின் நோக்கத்தில் சேர்க்கப்படுகிறது. பொது நூலகம், பொது நிகழ்வுகளுக்குப் பொருட்கள் வழங்குதல், கோவிலுக்கு மண்டபம் அமைத்தல் போன்ற செயற்பாடுகளும் இதற்கு உட்பட்டவை.

சிகரம் சிக்கனக் கூட்டுறவுச் சங்கம் (31.08.2025 நிலவரம்)

1. சேமிப்பு: ரூ. 68,600
2. கடன் பெற்றோர்: 12 பேர்

ஒருவரைத் தவிர ஏனைய அனைவரும் முறையாகக் கடனை வழங்கி வருகின்றனர். புதிதாக 4 பேர் இணைந்துள்ளனர். இன்னும் சுய கைத்தொழில் செய்வதற்கு 4 பேருக்குக் கடன் வழங்கத் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

**3. அருவி சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம்**

ஆரம்பம்: 2023.06.18, தலைவர்: த. புஷ்பலீலா, செயலாளர்: த. கௌரீ, பொருளாளர்: ஆர். சதானந்தன். ஆரம்ப உறுப்பினர் தொகை 18. தற்போதைய உறுப்பினர் தொகை 28. 16 அங்கத்தவர்கள் சுயதொழில் கடன் பெற்று ஆடு வளர்ப்பு ,கோழி வளர்ப்பு, விவசாயம், சம்பல் உற்பத்தி, தையல், சிறுகடை போன்ற தொழில்களைச் செய்து வருகின்றனர். 1 நபருக்கான மாதாந்தச் சேமிப்பு 200/=, அங்கத்துவம் 500/= ஆகும். எதிர்காலத்தில் சங்கத்திற்கு வருமானம் தரக்கூடிய ‘கேட்டரிங்’ சேவை ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

**4. சக்தி தொழில் முனைவோர் சிக்கனக் கடனுதவிச் சங்கம்**

உடுவரை கீழ்ப்பிரிவு முகவரியுடன், 73A மற்றும் 73B அப்புவலகும்புர பிரிவுகள் மற்றும் கிரிந்த கிராம சேவையாளர் பிரிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. சங்கத்தின் பிரதேசம் ஹாலிஎல பிரதேச செயலக எல்லைக்குள், பதுளை மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. இந்தச் சங்கம் ஊவா மாகாண கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது (பதிவு எண்: ஊவா/பது/1070). சங்கம் 2023 மே மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

சங்கத்தின் பிரதான நோக்கங்கள் சேமிப்பு மற்றும் சுயதொழிலை ஊக்குவிப்பதாகும். தொடக்கத்தில் 20 அங்கத்தவர்கள் இருந்தனர்; தற்போதைய நிலையில் 32 அங்கத்தவர்கள் செயற்பட்டு வருகின்றனர். இதில் 25 பேர் சுயதொழிலாளர்கள். அவர்கள் ஆடு, மாடு, கோழி வளர்ப்பு, சில்லறைக் கடை, தோட்டம், மரக்கறி விற்பனை, சிற்றுண்டி விற்பனை, மல்லிகைப் பயிர்ச்செய்கை, தையல், ரெசின் ஆர்ட், மிளகாய் தூள் பொதி செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இதனுடன், பிற தொழில் முனைவோரும் உள்ளனர்.

தோட்டத்தில் 200 குடும்பங்கள் வசிக்கின்றனர். நீர் வளம் இங்கு முக்கியமானது. தேயிலைத் தோட்டம், பாடசாலை, தொழிற்சாலை, ஆலயங்கள் போன்றவை காணப்படுகின்றன. இது தவிர, ஊர் பிரதான

பாதையை அண்மித்ததாகக் காணப்படுகின்றது. இது எமது சங்கத்தின் சிறப்பம்சமாகும். எதிர்காலத்தில் சிறிய ஆடைத் தொழிலகம் அமைப்பதும், கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசுகள் வழங்குவதும் எமது நோக்கமாகும்.

பதுளைப் பிராந்தியத்தில், 'Friendly Ship' அமைப்பினரால் புதிதாக உருவாக்கப்பட்ட 3 கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான அறிமுக நிகழ்வு 2025 ஆகஸ்ட் 3 ஆம் திகதி நடந்தது. நிகழ்வில் நிதி ஆதரவு வழங்கிய இலண்டன் மீட்சி அமைப்பின் தலைவர் கிருபா மற்றும் குழுவினர்கள் கலந்துகொண்டனர். அவர்கள் கூட்டுறவு ஆவணங்களை வழங்கினார்கள். ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு சிறப்பாகச் செயற்பட்டு வரும் 4 கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்ற அறிக்கைகளை சங்கத் தலைவர்கள் சமர்ப்பித்தனர் (களக் குறிப்பு: 3 ஆகஸ்ட் 2025, நன்றி: எட்வின் விஜயரெட்னா, மீட்சி அமைப்பு).

## முடிவு

மலையகத் தமிழர்களின் பாரம்பரிய பூமியில் தொடரும் சமூக - பொருளாதாரப் பின்னடைவுகள் மலையகத்தின் மீட்சியைத் தடுக்கின்றன. அதன் வளர்ச்சிக்கு, கூட்டுறவுத்துறையின் பங்களிப்பே மிக அடிப்படையானது. வடக்கு - கிழக்கு கூட்டுறவு அமைப்புகள் தங்கள் வளங்களையும் அனுபவங்களையும் பகிர்வதன் மூலம், மலையகத்தில் உறுதியான சமூக - பொருளாதார நிலையை உருவாக்க முடியும். கூட்டுறவின் இணைவும் அதன் சமூகக் கூட்டுப் பங்காண்மையும் அதன் மக்களுக்கு நிமிர்வை அளிக்கும். வடக்கு - கிழக்கு மற்றும் மலையக இணைவும் வலுவானதாக அமைய வேண்டும்.

மீட்சி அமைப்பு, எட்வின் மற்றும் கிருபா, நெதர்லாந்து மனிதநேயச் செயற்பாடுகளுக்கான கூட்டுறவுச் சங்க முன்னெடுப்புகள் மற்றும் Dr. கௌரி பாலன் மற்றும் அவர்களின் தொடர்பு இணைப்புகள் மலையகக் கூட்டுறவின் துளிர்விற்கு முன்னோடிகளாகும். மலையகத்தில் மாற்றம் வர வேண்டுமானால், மக்களே முன்னிலை வகிக்க வேண்டும். கூட்டுறவுத்துறை அந்த இணைப்பை நிகழ்த்தும் கருவியாக அமையும்.

## உசாத்துணைகள்


1. *Dissanayake, Kristýna (2022). Cooperatives or Plantations? Critical Literature Review of Fairtrade Tea Farming in Sri Lanka. Bachelor of Science Thesis, Czech University of Life Sciences, Prague.*

*Available at: https://www.researchgate.net/publication/365096919_Cooperatives_or_Plantations_Critical_literature_review_of_Fairtrade_tea_farming_in_Sri_Lanka*

2. *Piyumali, K.D. & Balasooriya, V.P.S.S. (n.d.). The Impact of Cooperatives on the Economic and Social Empowerment of Women in Rural Areas of Sri Lanka. National Cooperative Council, Sri Lanka / Department of Sociology, University of Sri Jayewardenepura. Available at: https://sljsd.sljol.info/articles/8/files/67f479a811621.pdf*

3. *Kadirgamar, Ahilan (2025, June 24). Disenfranchisement, Landlessness, and Education in the Hill Country. Kuppi Talk. Available at: https://kuppicollective.lk/disenfranchisementlandlessnessandeducationinthehillcountry/*

4. *Kadirgamar, Ahilan (2025, February 4). Education, Emancipation, and the HillCountry. Network Ideas. Available at: https://www.networkideas.org/2025/02/04/educationemancipationandthehillcountry/*

5. *Senevirathne, Kalupahana Manula Sandaruwan; Quayle, Annette & West, Andrew (2025, December 15). Accounting for the Stateless: Indian Tamils and the Historical Construction of Racial Inequality in Sri Lanka. Accounting, Auditing & Accountability Journal, 38(9), 133-162. https://doi.org/10.1108/AAAJ1220236786*

6. *Peiris, G.H. (1978). Land Reform and Agrarian Change in Sri Lanka. Modern Asian Studies, 12(4), 611-628. Cambridge University Press. Available at: https://www.jstor.org/stable/312371*

7. *IMADR (2016, July 12). Sri Lanka: Discrimination against Tea Plantation Tamils Reported to the UN. The International Movement Against All Forms of Discrimination and Racism. Available at: https://imadr.org/srilankadiscriminationplantationtamilscerd/*

8. *IzsákNdiaye, Rita (2016, October 20). Statement by the United Nations Special Rapporteur on Minority Issues Regarding the Conclusion of Her Official Visit to Sri Lanka (October 10-20, 2016). Office of the High Commissioner for Human Rights. Available at: https://www.ohchr.org/en/2016/10/statementunitednationsspecialrapporteurminorityissuesritaizsakndiayeconclusion*

9. *Samarasinghe, Vidya & Jayawardena, Dhammika (n.d.). The Role of Cooperatives in Neoliberal Sri Lanka: A Case Study. University of Sri Jayewardenepura. Emails: vidya@sjp.ac.lk, dhammika@sjp.ac.lk*

10. *Wijeretne, Edvin (2025). Field Notes: Badulla Coop Exposure. Meedchi Foundation, Batticaloa, Sri Lanka.*

சுப்ரமணியம் சிவகுமார்



கலாநிதி. சுப்ரமணியம் சிவகுமார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளங்கலைப் (BSc Eng.) பட்டமும், இந்தியத் தொழில்நுட்பக்கழகம் ரூர்க்கியில் (IIT Roorkee) நீர்வள மேம்பாட்டுத்துறையில் முதுகலைப் (MSc) பட்டமும், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (PhD) பட்டமும் பெற்றவர். பின்னர் நோர்வேயின் உயிரியல் அறிவியல் பல்கலைக்கழகத்திலும் (NMBU, s), வடகிழக்கு நோர்வே பல்கலைக்கழகத்திலும் (Bod) பிந்தைய முனைவர் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும், நீர்ப்பாசனப் பொறியாளராகவும் 28 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பல்கலைக்கழகங்களில் மூத்த விரிவுரையாளராகச் செயற்பட்டார். விவசாய அமைச்சகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும், வடமாகாண அவசர மீளமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகவும் பணியாற்றினார். பல்வேறு சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் விருந்தினர் விரிவுரைகளையும், முக்கிய உரைகளையும் (Keynote Speeches) நிகழ்த்தியுள்ள இவர், குறியீட்டு அறிவியல் இதழ்களில் 45க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளதோடு, இதுவரை 7 நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், 18 சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார்.

# வடக்கு – கிழக்கு மாகாணங்களின் நீர்வளம், வேளாண்மைத் துறை பற்றிய அடிப்படைத் தகவல்கள்: முரண்பாட்டுக்கு முன்னரும் பின்னரும்

இலங்கையின் வறண்ட மண்டலமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நீர்வளங்களை நிலைத்தன்மையுடன் பயன்படுத்துவதற்கான கொள்கைகள் உருவாக்குவது மிகவும் அவசியமாக உள்ளது. இது மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த உதவுகின்றது. மேலும், நிலையான நீர்வள மேலாண்மை சுற்றுச்சூழலுக்கு உதவியாகவும், பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவாகவும் அமையும். இதன் மூலம், வறண்ட மண்டலங்களில் உள்ள நீர்வளங்கள் பாதுகாக்கப்படும். "வறண்ட மண்டல நீர்வளங்களின் இருப்பும் பேண்தகு பயன்பாடும்: வடக்கு – கிழக்குப் பிரதேசங்கள், இலங்கை எனும் இந்தக் கட்டுரைத் தொடர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து ஆற்றுப்படுகைகளின் நீர்வளங்களின் நிலையை ஆராய்ந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன், அவற்றின் திறம்பட்ட பயன்பாட்டை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பதைக்கூறும்.

## 3.1 அறிமுகம்

விவசாயத்துறையில் காடுகள் மற்றும் மீன்வளம் ஆகிய துறைகளும் அடங்கும். இது இம்மாகாணங்களின் முதன்மைப் பொருளாதார நடவடிக்கையாகும். 1980களில், நாட்டின் மொத்த விவசாய உற்பத்தியில் ஏறத்தாழ 20.5% வரை வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பங்களித்தன.

தேசிய திட்டமிடல் துறையால் தயாரிக்கப்பட்ட 1981-1990 காலகட்டத்திற்கான (1975 ஆம் ஆண்டு மாறாத விலையில்) மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (Provincial GDP) தற்காலிக மதிப்பீட்டின்படி, அக்காலகட்டத்தின் தொடக்கத்தில் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான (National GDP) இம்மாகாணங்களின் பங்களிப்பு சுமார் 15% ஆக இருந்தது. பின்னர், இந்தப் பகுதியில் ஏற்பட்ட போர் நிலைமையின் விளைவாக, 1980களின் பிற்பகுதியில் இந்தப் பங்களிப்பு 10% இற்கும் கீழாகக் குறைந்தது. விவசாயத்தின் ஒப்பீட்டு முக்கியத்துவம் மற்றும் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அதன் பங்களிப்பு, அட்டவணை 3.1 இல் பிரதிபலிக்கிறது. விவசாயத்தின் உட்பிரிவுகளான இந்தத் துறைகளின் தனித்தனிப் பங்களிப்புகளும் இதில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இம்மாகாணங்கள் நிறைந்த இயற்கை வளங்களைக் கொண்டுள்ளன. இவற்றை முழுமையாகப் பயன்படுத்தி வளர்ச்சி அடையும்போது, தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு (GDP) இம்மாகாணங்கள் அளிக்கும் பங்களிப்பு வலுவாகப் பெருகும். இந்த ஆவணத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள விவசாய மேம்பாட்டு மூலோபாயம், இந்த இயற்கை வளச் செழுமையை அடிப்படையாகக் கொண்டது. தற்போதைய தேசியக் கொள்கைகள் மற்றும் நிலவரங்களுக்கு ஏற்ப, மாகாணத்தில் விரைவான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டுவர, இந்த வளங்களின் ஆக்கபூர்வமான பயன்பாட்டிற்கான முழுத்திறனையும் பயன்படுத்திக்கொள்ள ஒரு சீரான திட்டமிடப்பட்ட மூலோபாயம் தேவைப்படுகிறது.

| Sector | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| Agriculture | 58,423 | 59,911 | 47,918 | 47,280 | 55,451 | 62,198 |
| Industry | 47,275 | 49,467 | 61,274 | 104,305 | 103,425 | 122,765 |
| Service | 136,814 | 168,450 | 193,073 | 227,831 | 260,915 | 270,137 |
| Others | 0 | 0 | 22,075 | 27,658 | 32,897 | 41,567 |
| Total in the Northern Province | 242,512 | 277,828 | 324,340 | 407,074 | 452,688 | 496,667 |
| Total in 9 Provinces | 6,543,313 | 7,578,554 | 9,592,125 | 10,361,151 | 10,950,621 | 11,906,752 |
| GDP contribution by North as % | 3.7 | 3.7 | 3.4 | 3.9 | 4.1 | 4.2 |
| GDP contribution by East as % | 5.8 | 6.3 | 5.7 | 5.5 | 5.7 | 5.7 |

**Gross Domestic Product in North East Province by sector**

Image Source : Annual Report - 2018 of Central Bank

## 3.2. மாகாண அமைப்பு பிரதேசத்தின் புவியியல்

வடக்கு - கிழக்கு மாகாணங்கள், எட்டு மாவட்டங்களை உள்ளடக்கியவை. இதன் மொத்தப் பரப்பளவு 18,881 சதுர கிலோமீட்டர்கள் ஆகும். இதில், சுமார் 558 சதுர கிலோமீட்டர் பரப்பு நீர்நிலைகளால் (உள்நாட்டு ஏரிகள், நீர்த்தேக்கங்கள்) ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. நாட்டின் மொத்தப் பரப்பளவில் இம்மாகாணங்கள் 28.77% பகுதியைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்தின் விவரமான பரப்பளவு, அட்டவணை 3.2 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| District | Land area | Inland waters | Total area | D.S.Divisions | G.N.Divisions |
|---|---|---|---|---|---|
| | | | | No | No |
| Jaffna | 983.60 | 41.70 | 1,025.30 | 14 | 435 |
| Kilinochchi | 1,235.00 | 44.30 | 1,279.30 | 4 | 95 |
| Mannar | 1,985.20 | 11.00 | 1,996.20 | 5 | 153 |
| Vavuniya | 1,966.90 | | 1,966.00 | 4 | 102 |
| Mullaitivu | 2,516.90 | 100.00 | 2,616.00 | 5 | 127 |
| Batticaloa | 2,686.30 | 168.00 | 2,854.30 | 10 | 342 |
| Amparai | 4,318.20 | 96.70 | 4,414.30 | 17 | 501 |
| Trincomalee | 2,630.80 | 96.00 | 2,726.80 | 11 | 320 |
| Total | 18,322.90 | 557.70 | 18,880.60 | 70 | 1985 |

**Area by districts within the north and east provinces**

Image Source : Annual Report - Dept.of Census and Ststistics

## நிர்வாகம்

மாகாண சபைக் கட்டமைப்பில், நடவடிக்கைகள் இரண்டு நிலைகளில் குவிக்கப்பட்டுள்ளன:

1. மாகாண சபை நிலை
2. பிரதேச சபை நிலை (இது பிரிவுச் செயலகங்களுக்கு இணையானதாகும்.)

மாகாண சபை நிலையில், செயற்பாடுகள் குறித்த கோட்பாடுகளை வகுத்தல், வளர்ச்சித் திட்டமிடல், வள ஒதுக்கீடு மற்றும் மேற்பார்வையிடுதல் ஆகியவற்றுடன் தொடர்புடையவை.

பிரதேச சபை நிலையில், நடைமுறைச் செயற்பாடுகளான திட்டச் செயற்படுத்தல், உள்ளீடுகள் மற்றும் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றில் கவனம் குவிக்கப்படுகிறது. மத்திய அரசு மற்றும் மாகாண சபையால் முடிவு செய்யப்பட்ட அனைத்து நிர்வாக மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகளுக்கும் பிரிவுச் செயலகங்கள் மையமாக (Focal Points) இருந்து செயற்படும். இதில், கிராம நிலைய நிர்வாக அலுவலர்கள் (கிராம சேவகர்கள்) பிரிவுச் செயலர்களுக்கு உதவி புரிவார்கள்.

மாகாண சபைகளின் அமைப்புக் கட்டமைப்பிற்காக, பொறுப்பான அமைச்சகம் அரசியலமைப்பின் 13

ஆவது திருத்தத்தின்படி ஒரு பொதுக் கட்டமைப்பை வரையறுத்துள்ளது. இருப்பினும், மாகாணத்தின் புவியியல் பன்முகத்தன்மைக்கு ஏற்ப இக்கட்டமைப்பில் சரிசெய்தல் (Adjustments) செய்து கொள்ளலாம். இது தொடர்பாக, மாகாணத்தின் அமைப்புக் கட்டமைப்பு மற்றும் பணியாளர் திட்டம் (Cadre) ஆகியவற்றை நிர்ணயிப்பதற்கான இறுதிப் பொறுப்பு ஒவ்வொரு மாகாண சபைக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 154 F (1) பிரிவின்படி, ஒவ்வொரு மாகாண சபையின் அமைச்சரவையும் ஒரு முதலமைச்சர் மற்றும் அதிகபட்சம் நான்கு அமைச்சர்களைக் கொண்டிருக்கும். அமைச்சரவையின் அளவு சிறியதாக இருப்பதால், ஒரு மாகாண அமைச்சர் பல வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறைத் துறைகளுக்கான பொறுப்பை ஏற்க நேரிடும். அமைச்சர்களுக்குத் துறைசார் பொறுப்புகளை (Sectorial Portfolios) ஒதுக்கீடு செய்யும் போது, முதன்மையான கவனம் தர்க்கரீதியான துறைக் குழுவாக்கத்தின் மீது இருக்கும்; இது துறைக்குள் (InterSectoral) மற்றும் அமைச்சகங்களுக்கு இடையே (InterMinisterial) ஒருங்கிணைப்பை எளிதாக்கும்.

முதலமைச்சர், நிதி, திட்டமிடல், திட்டச் செயற்படுத்தல், மேற்பார்வை, மாகாண பொதுச் சேவையின் பணியாளர் மேலாண்மை மற்றும் சட்டம், ஒழுங்குப் பராமரிப்பு போன்ற துறைகளுக்கான (InterSectoral) பிரச்சினைகள் குறித்த கட்டுப்பாட்டை வைத்திருக்க வேண்டும்.

நிர்வாக நிலையில், இந்தப் பொறுப்புகள் முதன்மைச் செயலாளரிடம் ஒப்படைக்கப்படும். குறிப்பிட்ட இந்தத் தலைப்புப் பகுதிகள் தொடர்பான அனைத்து அபிவிருத்திகளையும் முதலமைச்சருக்கு முதன்மைச் செயலாளர் தெரிவித்து, மாகாணத்தின் சீரான மற்றும் திறமையான நிர்வாகத்திற்கு உதவுவார்.

மாகாண சபைகள் மத்திய அரசிடமிருந்து பின்வரும் முறைகளில் நிதியைப் பெறுகின்றன:

அ) தொகுப்பு மானியங்கள் (Block Grants - BG)

இவை, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ்வரும் செயற்பாடுகளின் நடப்புச் செலவினங்களுக்காக வழங்கப்படுகின்றன.

ஆ) அடிப்படை நெறிமுறை மானியங்கள் (Criteria Based Grants - CBG)

இம்மானியங்கள், மாகாணத்தின் மூலதனச் செலவினத் திட்டங்களுக்காக வழங்கப்படுகின்றன.

இ) இடைக்கால முதலீட்டுத் திட்ட நிதிகள் (Medium Term Investment Program - MTIP)

தொடர்புடைய சார்பு அமைச்சகங்கள், தங்களது சொந்த வரவு - செலவுத் திட்டத்தின் கீழ், மூலதனச் செலவினத்திற்காக இந்த MTIP நிதிகளை வழங்குகின்றன. 'மாற்றப்பட்ட பிரிவுகளுக்கு' (Devolved Subjects) உட்பட்ட செயற்பாடுகளுக்காக இந்த நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

மாகாண சபைகள், உள்ளூர் வரிகள் மற்றும் சுங்கத் தீர்வைகள் மூலம் தங்கள் சொந்த வருவாயை ஈட்டுவதாக எதிர்பார்க்கப்படுகின்றன. எனினும், பிரச்சினைக் காலம் முழுவதும் சட்டபூர்வமான தேவைகள் சரிவரச் செயற்படுத்தப்படாத காரணத்தால், வடக்கு - கிழக்கு மாகாணங்கள் குறைந்த அளவிலேயே வருவாயை ஈட்ட முடிந்தது. 2015 ஆம் ஆண்டு மாகாணங்களுக்கிடையேயான வருவாய் மற்றும் செலவின ஒப்பீடு அட்டவணை 3.3 இல் கொடுக்கப்பட்டுள்ளது.



Revenue and expenditure provinces

nage Source : Annual Report - Economics and ststistics Sri Lanka 2018 of Central Bank

## 3.3. மக்கள் தொகை மற்றும் வேலைவாய்ப்பு

1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, வடக்கு - கிழக்கு மாகாணங்களின் மக்கள் தொகை 2.08 மில்லியனாக (20.8 லட்சம்) இருந்தது. கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத்துறையின் அடுத்தடுத்த

மதிப்பீடுகளின்படி, 1989 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 2.4 மில்லியனாக (24 லட்சம்) உயர்ந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் பரவல் ஏற்கனவே அட்டவணை 2.1 இல் கொடுக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மக்கள் தொகை 2.798 மில்லியன் (27.98 லட்சம்) என மதிப்பிடப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் 2.5 மில்லியன் (25 லட்சம்) என மதிப்பிடப்பட்ட மக்கள் தொகை, 1981 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் சுமார் 2% வளர்ச்சியைக் காட்டுகிறது. 1981 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பு, சராசரியாக ஒரு சதுர கிலோமீட்டருக்கு 240 பேர் என்ற அடர்த்தியையும் வெளிப்படுத்தியது. இருப்பினும், மாவட்டங்களுக்கிடையே இது பெரும் வேறுபாட்டைக் காட்டுகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு ச.கி.மீ. இற்கு 870 பேரும், மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் முறையே 53, 48 மற்றும் 31 பேரும் என அடர்த்தி இருந்தது.

ஜூலை 1983 முதல், இப்பிரச்சினைப் பகுதியில் பலர் உயிரிழந்ததோடு, மக்கள் அகதிகளாக வெளிநாடுகளுக்கும் குடிபெயர்ந்தனர். 130,000 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததாகவும், 600,000 இற்கும் மேற்பட்டோர் அகதிகளாகவோ அல்லது நாட்டினுள்ளேயே இடம்பெயர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில், 250,000 பேர் நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் தங்கியுள்ளனர். இதுதவிர, தென்னிந்தியாவில் பிரச்சினைப் பகுதிகளைச் சேர்ந்த 118,000 பதிவுசெய்யப்பட்ட அகதிகள் இருந்தனர். இவர்களில் 30,000 பேர் தாயகம் திரும்பியுள்ளனர். கூடுதலாக, இந்தியாவில் சுமார் 250,000 இடம்பெயர்ந்த மக்களும், மேற்கு நாடுகளில் 730,000 இடம்பெயர்ந்த மக்களும் வசிக்கின்றனர்.

2.08 மில்லியன் (1981) மக்கள் தொகையில், சுமார் 54% பேர் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள். இதில் ஆண்களின் எண்ணிக்கை பெண்களை விட சற்று அதிகமாக இருந்தது. வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நகர்ப்புற மக்கள் தொகை மொத்தத்தில் சுமார் 25% ஆகும். மொத்த மாணவர் தொகை (1985) 542,353 ஆகும். இது மொத்த மக்கள் தொகையில் 25% வீதமாகும்.

1,629 பாடசாலைகளில் கல்விச் சேவை தொடர்கிறது. இவற்றில், 91 பாடசாலைகளில் அறிவியல் பிரிவிலும், 133 பாடசாலைகளில் கலை/ வணிகவியல் பிரிவிலும் A/L வரை கற்பிக்கப்படுகிறது. வேளாண்மை, தொழிற்துறை, வணிகம் மற்றும் பிற துறைகளில் முக்கிய பொருளாதார வளர்ச்சிப் பகுதிகளில் நுழையும் வகையில், பெரிய மற்றும் கல்வியறிவு பெற்ற இளைஞர் (ஆண் மற்றும் பெண்) மக்கள் தொகையைப் பயன்படுத்துவது, நடு மற்றும் நீண்டகால அளவில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு நன்மைபயக்க வல்லது.

### வேலைவாய்ப்பு

1981 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அனைத்துத்துறைகளிலும் மொத்தம் 570,000 பேர் வேலையில் இருந்தனர். மொத்த வேலையில் உள்ள மக்கள் தொகையில் 50% இற்கும் மேற்பட்டவர்களுக்கு வேளாண்மையே முக்கிய வேலைவாய்ப்பு ஆகும். அதேநேரம், வணிகம் மற்றும் சேவைத்துறைகள் 27% வரையில் பங்களித்தன.

சமீபத்திய மதிப்பீடுகள், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சுமார் 145,000 விவசாய குடும்பங்கள் உள்ளன எனக் காட்டுகின்றன. இதில் 700,000 பேர் கால்நடை வளர்ப்பையும் உள்ளடக்கிய வேளாண்மையைத் தங்களின் முக்கிய வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். வட மாகாணத்தில் சுமார் 58% (36,500) குடும்பங்களும், கிழக்கு மாகாணத்தில் 85% (65,800) குடும்பங்களும் முக்கியமாக நெல் சாகுபடியில் ஈடுபட்டுள்ளன. வட மாகாணத்தில் மேலும் 14% (8,900) பேரும், கிழக்கு மாகாணத்தில் 13% (9,700) பேரும் கலப்புப் பயிர் மற்றும் பிற வயற்பயிர்த் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

வட மாகாணத்தில் மீதமுள்ள 28% (17,600) பேரில் பெரும்பாலோரும், கிழக்கு மாகாணத்தில் 2% (1,500) பேரும் தீவிர காய்கறி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். காய்கறி உற்பத்தியில் ஈடுபடும் இந்த விவசாயிகளில் கிட்டத்தட்ட முக்கால் பங்கினர் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் குவிந்துள்ளனர். 60,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மீன்பிடித்தல் இரண்டாவது மிகப்பெரிய வேலைவாய்ப்பு ஆகும்.

### 3.4. காலநிலை, நிலம் மற்றும் நீர்வளம்

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் மொத்தப் பரப்பளவு 18,881 சதுர கிலோமீட்டர்கள் ஆகும். இது நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 28.77% பகுதியைக் கொண்டுள்ளது. இம்மாகாணங்கள் வறண்ட மண்டலத்தில் அமைந்துள்ளன. இங்கு சராசரி வருடாந்திர மழையளவு 900 முதல் 1,500 மி.மீ. வரை இருக்கும். மழைப்பொழிவு முறை இருவடிவத்தைக் கொண்டது (Bimodal). 70-80% மழைப்பொழிவு வடகிழக்குப் பருவக்காற்றின் போது பெரும்

போகத்திலும், மீதமுள்ளவை சிறுபோகத்திலும், மேலும் இடைப் பருவக்காற்றுகளின் போதும் ஏற்படுகின்றது.

இப்பிரதேசத்தின் நில அமைப்பு, கடற்கரைப் பகுதியில் மிகவும் சமதளமாகத் தொடங்கி, உட்பகுதியை நோக்கி மெதுவான அலைவுநிலை (Gently Undulating) சமவெளியாக (Peneplain) நீண்டுள்ளது. யாழ்ப்பாணத் தீபகற்பம் மட்டும் இதற்கு விதிவிலக்காக உள்ளது. இது, ஆனையிறவுக்கு வடக்கே, மயோசின் யுகத்தின் (சுமார் 400 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு) காரஸ்டிக் சுண்ணாம்புக்கல் மூலம் முழுமையாக உருவாகியுள்ளது. கடல் மட்டத்திலிருந்து (MSL) சுமார் 6 மீட்டர் உயரமே இத்தீபகற்பத்தின் உயர்ந்த புள்ளியாக இருப்பதால், நிலம் மற்றும் நீர்வளம் தொடர்பான குறிப்பிடத்தக்க நதிகள் அல்லது பிற நில அமைப்புச் சிறப்புகள் எதுவும் இங்கு இல்லை.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பெரும்பாலும் வறண்ட மண்டலத்திற்குள் வருகின்றன. இம்மாகாணங்களின் முக்கிய விவசாயச் சூழல் (Agro - Ecological) பிரதேசங்கள் DL1, DL2, DL3, DL4, DL5 என வரையறுக்கப்பட்டுள்ளன; மிகச் சிறிய அளவில் IL2 பிரிவும் காணப்படுகிறது.

முக்கிய விவசாயச் சூழல் பிரதேசங்கள் படம் 3.1 இல் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த விவசாயச் சூழல் பிரதேசங்களின் தனித்துவமான பண்புகள் அட்டவணை 3.4 இல் வழங்கப்பட்டுள்ளன.




Agro Ecological Regions of Sri Lanka

| Agro Ecological Region | 75% Expectancy value of annual rainfall(mm) | 75% Expectancy of dryness for particular months* | Major soil Group** | Terrain |
|---|---|---|---|---|
| IL2 | >1150 | Feb1/2, Mar, May1/2, June, Jul, Aug1/2. Sept | RBE; IBL and LHG | Rolling, hilly, Undulating |
| DL1 | >775 | Jan1/2, Feb, 1/2Mar, May1/2, Jun, Jul, Aug, 1/2Sept | RBL and LHG | Undulating |
| DL2 | >900 | Jan, 1/2Feb, Mar, May, Jun, Jul, Aug, Sept | NCB, RBE, Soils on old alluvium solnz, LHG & Regosols | Undulating and flat |
| DL4 | >580 | Jan1/2, Feb, Mar, May, Jun, Jul, Aug, 1/2Sept | RYL and Regosols | Flat to slightly undulating |
| DL4 | >580 | Jan1/2, Feb, Mar, May, Jun, Jul, Aug, 1/2Sept | Soldz, Solnz Solonchaks & Grumusols | Flat |

North East Province Distinguishing characteristics of Agro - Ecological Regions

Image Source : Annual Report - Dept.of Agriculture/ National Atlas

## நீரின் சம மகசூல் (ISO - Yield Curves) வரைபடங்கள்

நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் (Catchments) நீரின் மகசூல், மஹா இலுப்பல்லம வேளாண்மை ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் மற்றும் நீர்ப்பாசனத் துறையால் தயாரிக்கப்பட்ட சம மகசூல் வரைபடங்கள் (ISO - Yield Curves) மூலம் கணக்கிடப்படுகிறது. மஹா பருவத்திற்கான மற்றும் யாலா பருவத்திற்கான சம மகசூல் வரைபடங்கள் முறையே படம் 3.2 மற்றும் படம் 3.3 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலப்பரப்பு, குறுகிய மற்றும் ஒப்பீட்டளவில் சிறிய ஓடைகளால் நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது. இந்த ஓடைகள் பருவமழையால் ஊட்டப்படுகின்றன. ஆண்டின் ஏனைய பகுதிகளில் இவை பெரும்பாலும் வறண்டு காணப்படுகின்றன. எனவே, பெரும்பாலான இடங்களில், மஹா பருவத்தில் மட்டுமே நீர்த்தேக்கங்கள் மூலம் முழுப் பரப்பளவிற்கும் நீர்ப்பாசனம் செய்ய முடியும். மகாவலி கங்கையால் நீர் வழங்கப்படும் கந்தளாய் மற்றும் அல்லை நீர்த்தேக்கங்கள் மட்டுமே இதற்கு விதிவிலக்காகும். பிற நீர்ப்பாசனத் திட்டங்கள், மொத்தப் பரப்பில் 10% முதல் 40% வரை மட்டுமே யாலா சாகுபடிக்கும் நீர் வழங்குகின்றன.

## நீர்ப்பாசனத் திட்டங்கள்

93 முக்கிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் உள்ளன. இவற்றின் ஆதாரப் பரப்பளவு (Command Area) 100,000 ஹெக்டயர் ஆகும். கூடுதலாக, மாகாணத்தில் 41,785 ஹெக்டயர் பரப்பளவிற்குச் சேவை செய்யும் நோக்கத்துடன் 2,398 சிறு நீர்த்தேக்கங்கள் உள்ளன. தற்போதைய பராமரிப்பின்மை நிலையின் காரணமாக, 1,018 சிறு நீர்த்தேக்கங்கள் பல்வேறு அளவிலான சீர்கேடுகளுடன் உள்ளன. இவை புனரமைப்புக்குத் தேவைப்படுகின்றன. மத்திய மற்றும் மாகாண



Maha Season ISO YIELD Curves



Yala Season ISO YIELD Curves

நீர்ப்பாசனத்துறைகளால் பராமரிக்கப்படும் நீர்ப்பாசனத் திட்டங்கள் முறையே அட்டவணை *3.5* மற்றும் *3.6* இல் கொடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் நிலத்தடி நீர்நிலைகள் (*Underground Aquifers*) உள்ளன. யாழ்ப்பாணத்தில் உள்ள நிலத்தடி நீர்நிலை, நீர்ப்பாசனம் மற்றும் உள்நாட்டுப் பயன்பாட்டிற்காக அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் பிறபகுதிகளில் இத்தகைய வளங்கள் போதுமான அளவு பயன்படுத்தப்படவில்லை.

| | Name of Scheme | Capacity<br>ac.ft. | Catchment<br>sq. miles | Irrigable Specified<br>ac. |
|---|---|---|---|---|
| 1 | Pavatkulam | 27,000.00 | 115.00 | 4,134.00 |
| 2 | Maruthamadu | 1,500.00 | 14.60 | 438.00 |
| 3 | Irratperiyakulam | 3,534.00 | 12.24 | 503.00 |
| 4 | Muhathankulam | 2,400.00 | 34.00 | 805.00 |
| 5 | Rajendrankulam | 580.00 | 2.40 | 295.00 |
| 6 | Kal Aru Anicut | - | 170.00 | 600.00 |
| 7 | Giants Tank | 31,500.00 | 38.00 | 24,438.00 |
| 8 | Akathimurippu | 6,948.00 | 1.50 | 6,331.00 |
| 9 | Vivadekulam | 840.00 | 3.50 | 1.223.00 |

**Scheme Maintained by Central Irrigation Department in North**

## 3.5. பயிர் விவசாயம்

### நெல்

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ‘அசுவெத்துமை’ செய்யப்பட்ட (*Asweddumized*) மொத்த நிலப்பரப்பு *261,000* ஹெக்டயர் ஆகும். இது நாட்டின் மொத்த ‘அசுவெத்துமை’ செய்யப்பட்ட பரப்பில் தோராயமாக *34%* ஆகும். இதில், *150,000* ஹெக்டயர் மட்டுமே முக்கிய மற்றும் சிறு நீர்ப்பாசனத் திட்டங்களால் பயன்படுத்தப்படுகிறது. இந்த நீர்ப்பாசனப் பகுதியின் பெரும்பாலானவை மஹா பருவத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. யால பருவத்தில் நீர்த்தேக்கங்களில் போதிய நீர் சேமிப்பின்மை மற்றும் குறைந்த மழையளவு ஆகிய காரணங்களால், யாலா சாகுபடிப் பரப்பு சுமார் *25%50%* மட்டுமே உள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தைத் தவிர, வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களும் நெல் உற்பத்தியில் உபரிப் பகுதிகளாகும். *85/ 86* மஹா மற்றும் *86* யாலா பருவங்களில் நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் இம்மாகாணங்கள் முறையே *23%* மற்றும் *31%* வரை பங்களித்தன. பல ஆண்டுகளாக, மழையின் அளவு மற்றும் பரவல் ஆகியவை வடக்கு - கிழக்கு மாகாணங்களின் உற்பத்தியைப் பாதிக்கும் முக்கிய காரணிகளாக இருந்துள்ளன.

இந்த எண்ணிக்கைகள், *1980*களின் நடுப்பகுதியில் இருந்து உற்பத்தியில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும், இம்மாகாணங்கள் நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் தோராயமாக கால் பங்கை ஈடுசெய்து வந்துள்ளன என்பதை வெளிப்படுத்துகின்றன. போர் முடிந்த பின்னர், வட மாகாணத்தில் நெல் மற்றும் தேங்காய் உற்பத்தியின் சிறந்த தரவை அட்டவணை *3.7* வழங்குகிறது.

| Year /Region | | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|
| Paddy Cultivation Extent '000 Ha | North | 75.1 | 33.2 | 93.9 | 86.0 | 41.4 |
| | Island | 1,067.3 | 792.9 | 1,088.4 | 1,011.6 | 554.6 |
| Paddy harvested ‘000 MT | North | 313.6 | 124.5 | 403.3 | 352.7 | 160.6 |
| | Island | 4,620.7 | 3,380.8 | 4,819.4 | 4,420.1 | 2,383.6 |
| Coconut Production million Nuts | North | 93 | 84 | 82 | 82 | 73 |
| | Island | 2,513 | 2,905 | 3,027 | 3,011 | 2,450 |

Northern Province paddy and cocunut production 2013 - 2017

Image Source : Central Bank Annual Report 2018

### பிற பயிர்கள் (Other Field Crops)

இந்த மாகாணங்கள் பாரம்பரியமாக மிளகாய் மற்றும் வெங்காயத்தின் முக்கிய உற்பத்தியாளர்களாக விளங்குகின்றன. பிரச்சினை தொடங்குவதற்கு முன்னர், நாட்டின் மொத்த உலர்ந்த மிளகாய் உற்பத்தியில் *40%*, மொத்த சிவப்பு வெங்காய உற்பத்தியில் *85%*

மற்றும் தானிய பருப்பு வகைகளில் 30% வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து வந்தன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளில் மிளகாய் மற்றும் வெங்காயம் நீர்ப்பாசனத்தின் கீழ் தீவிரமுறையில் சாகுபடி செய்யப்படுகின்றன. மாகாணத்தின் பிற பகுதிகளில், மஹா பருவத்தில், மழைநீரை நம்பியவாறு குறைந்த அளவில் இவை சாகுபடி செய்யப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தில் மழை நீரை நம்பிய உளுந்து (Black Gram) மற்றும் காராமணி (Cowpea) சாகுபடி செய்யப்படுகின்றன. அதேநேரம், கிழக்கு மாகாணத்தில் மழை நீரை நம்பிய சோளம் (Maize), நிலக்கடலை (Groundnut), மரவள்ளிக்கிழங்கு (Cassava), உளுந்து மற்றும் காய்கறிகள் ஆகியவை நிரம்பிய அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சாகுபடி செய்யப்படும் பிற வயற்பயிர்கள், அவற்றின் சராசரிப் பரப்பு மற்றும் பிரச்சினைக் காலத்தின் பன்னிரண்டு ஆண்டுகளின் சராசரி உற்பத்தி ஆகியவை 3.8 ஆம் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளன. 3.9 ஆம் அட்டவணையில் வடக்கு மாகாண ஒப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கைகள் 12 ஆண்டுக் காலத்தின் சராசரி சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தியை பிரதிபலிக்கின்றன. இந்தத் தகவலை விளக்கும் போது, இந்தப் பயிர்களின் உற்பத்தி 1980களின் நடுப்பகுதியில் இருந்து குறையத் தொடங்கியது என்பதால், கவனமாக விளக்க வேண்டியது அவசியமாகிறது. 1990 ஆம் ஆண்டு முதல், குறிப்பாக மிளகாய், வெங்காயம், நிலக்கடலை மற்றும் சோள உற்பத்தியில் கூர்மையான வீழ்ச்சி ஏற்பட்டது. ஆயினும், இந்த எண்ணிக்கைகள் மாகாணத்தில் பிற வயற்பயிர்களை (OFC) சாகுபடி செய்வதற்கு இருக்கும் திறனையும் சுட்டிக்காட்டுகின்றன. கந்தளாயிலும், கல்லோயாவிலும் 14,000 ஹெக்டயர் பரப்பில் கரும்பு, நீர்ப்பாசனத்தின் கீழ் தோட்ட அளவில் (Plantation Scale) சாகுபடி செய்யப்படுகிறது.

| Crop | North Province | | Nine Provinces | |
|---|---|---|---|---|
| | Extend (Ha) | Production (Mt) | Extend (Ha) | Production (Mt) |
| Chilli | 3,033 | 4,422 | 16,368 | 36,020 |
| Read Onion | 5,085 | 22,766 | 8,276 | 39,149 |
| Black gram | 7,412 | 2,901 | 16,604 | 7,447 |
| Cow pea | 2,133 | 554 | 16,396 | 6,185 |
| Ground nut | 5,522 | 4,077 | 22,537 | 25,022 |
| Maize | 1,161 | 1,368 | 110,551 | 321,618 |
| Total | 24,346 | 36,088 | 190,732 | 435,441 |

Cultivated Extent & Production in 2019

Image Source : Dept. of Agriculture, Technology Transfer Division

## தோட்டக்கலைப் பயிர்கள் (பழங்கள் மற்றும் காய்கறிகள்)

தக்காளி, கத்தரி, பூசணிக்காய் வகைகள், வெண்டை, காராமணி மற்றும் இலைக் காய்கறிகள் உள்ளிட்ட பல்வேறு வகையான தாழ்நிலக் காய்கறிகள், மஹா பருவத்தில் மழை நீரை நம்பியும், யால பருவத்தில் சிறு அளவிலான நீர்ப்பாசனத்தின் கீழும் சாகுபடி செய்யப்படுகின்றன. வாணிக அளவில் உருளைக்கிழங்கு, முட்டைக்கோசு, பீட்ரூட் மற்றும் நூக்கோல் (Kohlrabi) ஆகியவை மஹா பருவத்தில் குறைந்த அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. மஹா பருவத்தில் காய்கறிகள் சாகுபடியான பரப்பு 5,500 ஹெக்டயராகவும், யாலா பருவத்தில் 2,000 ஹெக்டயராகவும் இருந்தன. 1991 ஆம் ஆண்டின் வருடாந்திரச் செயற்படுத்தல் திட்டத்தின்படி, மாகாணத்தின் முக்கிய பழப்பயிர்கள் மா (சுமார் 2,900 ஹெக்டயர்), வாழைப்பழம் (சுமார் 3,260 ஹெக்டயர்) மற்றும் எலுமிச்சை வகைகள் ஆகும். உயர்தர மாம்பழ வகைகள் (கறுத்தக்கொழும்பான், வெள்ளைக்கொழும்பான் மற்றும் விளாட்) யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 2,700 ஹெக்டயர் பரப்பில் உள்ளன.

| Crop | Cultivated extent in Maha & Yala(ha) | Estimated production in NEP in Maha& Yala (M tons) | Estimated production in Sri Lanka in Maha & Yala (M tons) |
|---|---|---|---|
| Chilli (Dried) | 8,700 | 9,700 | 32,500 |
| Red onion | 6,000 | 62,000 | 88,000 |
| Black gram | 7,270 | 5,070 | 9,390 |
| Cowpea | 3,850 | 3,590 | 22,890 |
| Ground nut | 3,580 | 3,750 | 11,300 |
| Maize | 10,800 | 13,380 | 45,530 |

Cultivated Extent & Production over 12 years period (1980 - 1992)

Image Source : Dept. of Agriculture, Technology Transfer Division

யாழ்ப்பாணத்தில் வாழைப்பழம் நீர்ப்பாசனத்தின் கீழும், பிற மாவட்டங்களில் மழை நீரை நம்பியும் சாகுபடி செய்யப்படுகிறது. இம்மாகாணம் மா மற்றும் வாழைப்பழத்தில் உபரி உற்பத்தியாளராக உள்ளது. இவற்றின் பெரும்பகுதி கொழும்பு மற்றும் பிற நகரங்களில் எளிதாக விற்பனையாகிறது. வவுனியா மாவட்டம் முன்பு ஒரு

முக்கியமான எலுமிச்சை வகைப் பழங்களை உற்பத்தி செய்யும் பகுதியாக இருந்தது. ஆனால் சமீப காலங்களில் இது குறைந்துள்ளது.

### தேங்காய்

முல்லைத்தீவு முதல் திருக்கோவில் வரையிலான கிழக்குக் கடலோரப் பகுதி மற்றும் வடக்கிலுள்ள பாலைப் பிரதேசம் ஆகியவை பாரம்பரியமாக தேங்காய் வளர்ச்சிக்கு ஏற்ற பகுதிகளாகும். 1982 ஆம் ஆண்டில், சுமார் 40,000 உரிமையாளர்களிடம் 22,300 ஹெக்டயர் பரப்பில் தேங்காய் நடப்பட்டிருந்தது. ஒரு சில நடுத்தர அளவிலான உரிமையாளர்களின் நிலங்களைத் தவிர, மீதமுள்ளவை சிறிய அலகுகளாக நிர்வகிக்கப்படுகின்றன. உற்பத்தி, மாகாணங்களின் தேவையைப் பூர்த்தி செய்துள்ளது. தேங்காய், ரீகோசோல்கள் (Regosols) மற்றும் ஆழமான லேட்டோசோல்கள் (Latosols) ஆகிய இடங்களில் நன்கு வளருகிறது. இங்கு நன்னீர் ஏற்ற ஆழத்தில் கிடைக்கிறது.

1978 ஆம் ஆண்டு சூறாவளி கிழக்கு மாகாணத்தில் ஒரு பெரிய பகுதியை அழித்தது. சில புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும், அடுத்தடுத்த காலங்களில் வழக்கமான பராமரிப்புகளின் பற்றாக்குறை (புறக்கணிப்பு, உரமிடாமை) மற்றும் கட்டுமானத்திற்காக மரங்களை வெட்டுதல் ஆகிய காரணங்களால் உற்பத்தி குறையத் தொடங்கியது. மேலும், இனப்பிரச்சினையும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலே உள்ள அட்டவணை 3.6 தற்போதைய நிலையைக் காட்டுகிறது.

### பனை

வறட்சியைத் தாங்கக்கூடிய பனை, வடக்கில் 18,420 ஹெக்டயரிலும், கிழக்கில் 16,440 ஹெக்டயரிலும் மொத்தம் 10.8 மில்லியன் மரங்களுடன் உள்ளது. இந்த குறிப்பிடத்தக்க மரம், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு உண்ணத்தக்க மற்றும் உண்ணமுடியாத பொருட்களை உற்பத்தி செய்கிறது. 1960களில் பனை மேம்பாட்டு வாரியம் நிறுவப்பட்டதன் மூலம் இதன் வணிகப் பயன்பாடு தொடங்கப்பட்டது. பனைப் பொருட்கள் செயலாக்கத் தொழில் 23 கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்டு இயக்கப்படுகிறது. இவற்றில் 35,000 குடும்ப உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 10,000 பேர் நிலமற்றவர்கள். மரங்களில் சுமார் 2% மட்டுமே கள்ளும், பனைவெல்லமும் (கருப்பட்டி) போன்ற பிசின் சார்ந்த பொருட்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றன.

### முந்திரி

முந்திரி, பல தசாப்தங்களாக மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் மணற் கடலோரப் பகுதிகளில் ஒரு தோட்டக் கலைப்பயிராக (Homegarden) வெற்றிகரமாக வளர்க்கப்பட்டு வருகிறது. அதன் அதிக ஏற்றுமதித்திறன் காரணமாக, முந்திரி கார்ப்பரேஷன் மன்னாரில் கொண்டாச்சியில் 2,300 ஹெக்டயரிலும், மட்டக்களப்பில் மான்கொர்னியில் 600 ஹெக்டயரிலும் பெரிய அளவிலான தோட்டங்களை நிறுவியது.

ரீகோசோல் மற்றும் லேட்டோசோல் பகுதிகளில் வணிக அளவில் முந்திரி நடவு செய்வதற்கு பெரிய நிலப்பரப்புகள் கிடைக்கின்றன. 1978 ஆம் ஆண்டு சூறாவளியால் ஏற்பட்ட சேதம் மற்றும் தோட்டக் கலைப் பண்ணைகளை மீண்டும் நடவு செய்யாமை மற்றும் பராமரிக்காமை ஆகியவை உற்பத்தியில் வீழ்ச்சிக்கு வழிவகுத்தன. பிரச்சினைக் காலத்தில், மன்னார் மாவட்டத்தின் வேலங்குளம் பகுதியைச் சுற்றி, முந்திரிப் பண்ணைகள் ஒரு வாழ்வாதார நடவடிக்கையாக அறிமுகப்படுத்தப்பட்டன.

## 3.6. கால்நடை வளர்ப்பு

நாட்டின் மொத்த மாடுகளின் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கும் மேலும், வெள்ளாடுகளின் தொகையில் சுமார் 50% பங்கும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்றன. பிரச்சினைக்கு முந்தைய காலத்தில், 1982 ஆம் ஆண்டில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்த கால்நடைகளின் தொகை, கணக்கெடுப்புத்துறையின் அறிக்கையின்படி, அட்டவணை 3.11 இல் காண்பிக்கப்பட்டுள்ளது. பிரச்சினைக்கு முந்தைய காலத்தில், கால்நடை உற்பத்தியில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்திருந்தன; மேலும் நாட்டின் மொத்த உற்பத்தியில் 25% இற்கும் மேல் பங்களித்து வந்தன. போருக்குப் பிந்தைய மற்றும் போருக்கு முந்தைய கால்நடை நிலைமைகளின் ஒப்பீடு, எளிதான குறிப்பிற்காக, அட்டவணை 3.10 மற்றும் 3.12 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தில் உள்ள மாட்டு உரிமையாளர்கள் வெவ்வேறு அளவிலான மந்தைகளைக் கொண்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில், உரிமையாளர்கள் பெரிய மந்தைகளை விரிவான முறையில் (Extensive System) வளர்த்து வருகின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தில், சிறிய மந்தைகள் தீவிர மேலாண்மை (Intensive Management) மூலம் பராமரிக்கப்படுகின்றன. விலங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், ஒரு பசுவின் தினசரி சராசரி பால் உற்பத்தி வெறும் 12 லீட்டர் மட்டுமே. MILCO

மற்றும் NESTLE போன்ற அமைப்புகள் பாலை வாங்கினாலும், குறைந்த விலை என்பது, பால் உற்பத்தியை அதிகரிக்கும் ஊக்கத்தைக் குறைக்கும் ஒரு காரணியாக உள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இறைச்சிக்கான முக்கிய ஆதாரங்களாகும்; இறைச்சி நோக்கத்திற்காக, உயிருடன் கூடிய மாடுகள் கொழும்புக்கு அனுப்பப்படுகின்றன.

## 3.7. மீன்வளம்

| District / Year / Livestock | | Daily Milk Production (liters) | Monthly Chicken Production No | Monthly Egg Production No | Goat and Sheep No | Pigs No |
|---|---|---|---|---|---|---|
| Jaffna | 2016 | 34,330 | 351,270 | 3,210 | 47,980 | 20 |
| | 2017 | 32,640 | 374,950 | 3,207 | 48,610 | 0 |
| Kilinochchi | 2016 | 13,320 | 148,250 | 1,102 | 7,560 | 200 |
| | 2017 | 13,670 | 158,650 | 1,785 | 8,360 | 200 |
| Mannar | 2016 | 19,830 | 111,790 | 1,222 | 10,540 | 70 |
| | 2017 | 20,180 | 110,840 | 1,231 | 10,400 | 150 |
| Vavuniya | 2016 | 25,000 | 148,900 | 1,221 | 11,810 | 230 |
| | 2017 | 29,790 | 141,760 | 1,343 | 13,610 | 510 |
| Mullaitivu | 2016 | 16,900 | 107,320 | 913 | 5,200 | 90 |
| | 2017 | 15,710 | 102,280 | 976 | 5,740 | 90 |
| Total Nine Provinces | 2016 | 883,000 | 21,056,020 | 171,638 | 275,050 | 81,420 |
| | 2017 | 910,020 | 21,275,820 | 172,739 | 297,573 | 95,120 |

District Livstock Production 2016 - 2017

Image Source : Central Bank Annual Report 2018

இலங்கையின் கடலோரப் பகுதியில் 63% வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ளது. மேலும் 24,000 ஹெக்டயருக்கும் அதிகமான உவர்நீர்ச் (Brackish Water) சதுப்பு நிலங்களும் இங்கு உள்ளன. கூடுதலாக, நன்னீர் மீன்வள மேம்பாட்டிற்கு ஏற்ற 93 நன்னீர் நீர்த்தேக்கங்கள் உள்ளன. கண்டத்திட்டு (Continental Shelf) சுமார் 40 கி.மீ. வரை நீண்டுள்ளது. வட மாகாணத்தின் வடபகுதியில், பிரபலமான 'பீட்ரோ மீன் வங்கி' (Pedro Fish Bank) அமைந்துள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பாரம்பரியமாக மீனின் முக்கிய ஆதாரமாக விளங்குகின்றன. மீன்வள அமைச்சகத்தின் 1983 ஆம் ஆண்டு வருடாந்திர அறிக்கையின்படி, 1983 ஆம் ஆண்டில் உற்பத்தி 104,400 மெட்ரிக் டன் (M tons) ஆக இருந்தது. இது அந்த ஆண்டு நாட்டின் மொத்த மீன்பிடிப்பில் 56.6% ஆகும். பிடிபட்ட மீன்களில் சுமார் 60% பிற நகரங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்கப்படுகிறது. மாகாணங்களுக்கிடையேயான மீன் உற்பத்தியின் ஒப்பீடு அட்டவணை 3.13 இல் கொடுக்கப்பட்டுள்ளது. மீன்கள் தவிர, இறால், சுறா துடுப்பு (Shark Fin) மற்றும் கடலட்டை (BecheDeMer) போன்ற ஏற்றுமதிப் பொருட்களில் 50% இற்கும் மேல் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து வருகின்றன. இந்த நிலைமை, இனப் பிரச்சினையின் காரணமாக மாற்றமடைந்துள்ளது. 60,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மீன்பிடித்தல் முக்கிய வாழ்வாதாரமாக இருந்து வருகிறது.

இரண்டு நாடுகளின் மீனவர்களும், சர்வதேச கடல் எல்லைகளை (IMBL) மீறி, இந்தியா மற்றும் இலங்கை எல்லைகளுக்கு அப்பாலுள்ள மீன் இருப்புகளை கடத்தி அழைத்துச் செல்வது (Poaching), இரு நாடுகளுக்கிடையேயான ஒரு முக்கியமான சர்வதேச நேரடிச் சூழல் மோதலாக மாறியுள்ளது. இந்திய மீனவர்கள், இலங்கையின் கடலோர நீர்ப்பகுதிகளில் இருந்து US$ 750 மில்லியன் மதிப்புள்ள மீன்களைத் திருடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் செய்து கொள்ளப்பட்ட இருபுற ஒப்பந்தங்கள் மீறப்பட்டு வருகின்றன. கடலில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படாத ரோலர்களை (Trawlers) அதிக அளவில் பயன்படுத்துதல் மற்றும் இந்திய மீனவர்கள் சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட அடர்கடல் வலைகளை (Bottom Sea Nets) பயன்படுத்துதல் ஆகியன வட இலங்கையின் கடலோர வளங்களுக்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக உள்ளன.

ரோலர்கள் மீன் கூட்டங்களைத் தேர்ந்தெடுக்காமல் பிடிக்கின்றன; இந்தப் பிடிப்பில் பல இலக்கு அல்லாத இனங்கள் (NonTargeted Species) மற்றும் மீன்களின் இளம் நிலைகள் (Juveniles) நிலைக்காத முறையில் (Unsustain able) சிக்குகின்றன. இது வட இலங்கையின் மீன்வள சமூகங்களின் வாழ்வாதாரத்திற்கும், கடலோரப் பல்லுயிர்த்தன்மைக்கும் (Biodiversity) ஒரு அச்சுறுத்தலாக உள்ளது.

இரு நாடுகளின் கடலோரப் பாதுகாப்புப் படையினராலும் (Coastal Guards) மீனவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தல் தொடர்கிறது. இந்தச் சிக்கலுக்கு ஓர் உறுதியான தீர்வு தேவை என்பது உணரப்பட்டுள்ளது. இது இவ்வாறே தொடர்ந்தால், அடுத்த பத்து ஆண்டுகளில் பாக்கு நீரிணைப் (Palk Strait) பகுதியில் மீன் இருப்புக் கிடைப்பது கேள்விக்குறியாக இருக்கும்.

| Province\Year | | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|
| Northern Province | Marian | 55,640 | 72,730 | 72,560 | 75,470 | 83,155 |
| | Inland | 3,539 | 3,583 | 3,736 | 6,405 | 7,170 |
| Eastern Province | Marian | 84,570 | 75,720 | 70,800 | 72,460 | 77,790 |
| | Inland | 11,225 | 12,199 | 11,764 | 17,950 | 19,525 |
| Total Nine Province | Marian | 445,930 | 459,300 | 452,890 | 456,990 | 449,440 |
| | Inland | 66,910 | 75,750 | 67,300 | 73,930 | 81,870 |

Fish Production by North, East Provinces 2013 - 2017

Image Source : Central Bank Annual Report 2018

வட மாகாணத்தின் வடபகுதியில், பிரபலமான 'பீட்ரோ மீன் வங்கி' (Pedro Fish Bank) அமைந்துள்ளது. வடக்கு – கிழக்கு மாகாணங்கள் பாரம்பரியமாக மீனின் முக்கிய ஆதாரமாக விளங்குகின்றன. மீன்வள அமைச்சகத்தின் 1983 ஆம் ஆண்டு வருடாந்திர அறிக்கையின்படி, 1983 ஆம் ஆண்டில் உற்பத்தி 104,400 மெட்ரிக் டன் (M tons) ஆக இருந்தது.

### 3.8. வனவியல்

காடுகள் சுமார் 726,300 ஹெக்டயர் பரப்பை ஆக்கிரமித்துள்ளன. இவற்றில் அடர்ந்த காடுகள் முல்லைத்தீவு, அம்பாறை, திருகோணமலை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் சில பகுதிகளில் உள்ளன. திறந்த காடுகளும் (Open Forests) அதே மாவட்டங்களில் அமைந்துள்ளன. இந்தப் பரப்பு மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பில் 35% என தெரிவிக்கப்பட்டாலும், சமீபத்திய ஆண்டுகளில் வனப்பரப்பு பெரும் அளவில் குறைந்துள்ளது. இதன் விளைவாக, கடுமையான வெள்ளப்பெருக்குகள், நிலம் மற்றும் மண் அரிப்பு காரணமாக நீர்த்தேக்கங்களில் வண்டல் படிவது (Sediment Runoff) போன்ற சூழற் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன.

### 3.9. மின்சாரம்

2018 ஆம் ஆண்டில், நீர்மின்சார உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஆதரவாக, மின்சார உற்பத்தி தொடர்ந்து விரிவடைந்தது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2018 ஆம் ஆண்டில் 'உள்நாட்டு' (Domestic) மற்றும் 'மத' (Religious) வகைப்பாடுகளில் மின்சார விற்பனை 3.9 சதவீதமாகவும், நுகர்வோர் எண்ணிக்கை 2.6 சதவீதமாகவும் அதிகரித்தது.

| Mode of Connection \ Year | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|
| Domestic | 138.10 | 162.00 | 185.01 | 213.64 |
| Religious | 5.54 | 6.02 | 7.05 | 7.89 |
| Industrial | 20.67 | 26.12 | 29.81 | 31.85 |
| Commercial | 93.69 | 105.03 | 118.68 | 128.97 |
| Street lights | 1.63 | 1.63 | 1.03 | 1.63 |
| Total North | 259.63 | 300.80 | 341.58 | 383.98 |
| Total Island | 11,063.11 | 11,786.28 | 12,785.29 | 13,431.46 |

Electricity Consumption Northern Province 2014 - 2017

Image Source : Central Bank Annual Report

### 3.10. நீர் வழங்கல்

புதிய நீர் இணைப்புகளுக்கான அதிகரித்த தேவையைச் சந்திக்கவும், பாதுகாப்பான மற்றும் மலிவு விலை குடிநீருக்கு சமமான அணுகலை உறுதி செய்யவும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் (NWS & DB) தனது சேவைகளைத் தொடர்ந்து விரிவுபடுத்தியது. 2018 ஆம் ஆண்டில், பாதுகாப்பான குடிநீருக்கான மக்களின் அணுகல் மட்டத்தை அதிகரிக்கும் போது, 'NWS & DB' பல நீர் வழங்கல் வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தியது. பாதுகாப்பான குடிநீருக்கான அணுகல் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது; குழாய் நீருக்கான அணுகலும் கணிசமாக உயர்ந்துள்ளது.

| Type of Connection \ Year | | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| Domestic | No. of Connections | 10,825 | 13,291 | 16,102 | 19,736 |
| | Consumption in MCM | 1.60 | 1.90 | 2.20 | 2.60 |
| Government | No. of Connections | 210 | 239 | 279 | 316 |
| | Consumption in MCM | 0.20 | 0.30 | 0.30 | 0.30 |
| Industrial | No. of Connections | 5 | 7 | 7 | 7 |
| | Consumption in MCM | 0.10 | 0.10 | 0.10 | 0.10 |
| Others | No. of Connections | 1,149 | 1,297 | 1,429 | 1,594 |
| | Consumption in MCM | 0.10 | 0.30 | 0.30 | 0.40 |
| Total North | No. of Connections | 12,189 | 14,834 | 17,817 | 21,653 |
| | Consumption in MCM | 2.0 | 2.6 | 2.9 | 3.4 |
| Total Island | No. of Connections | 1,831,990 | 1,953,721 | 2,092,471 | 2,219,172 |
| | Consumption in MCM | 416.20 | 441.70 | 494.70 | 509.70 |

Pipe borne water consumption Northern Province 2014 -2017

Image Source : Central Bank Annual Report 2018

# நிகழ்வுகள்

07.09.2025





## ‘வாசலிலே கிருசாந்தி’ செம்மணி தொடர்பான கவிதைகள் புத்தக வெளியீடும் கவிதை வாசிப்பு நிகழ்வும்.








கிருசாந்தி குமாரசாமி அவர்களின் 29ம் ஆண்டு நினைவேந்தலின் ஒரு அங்கமான எழுநாவின் தொகுப்பில் வெளிவந்த ‘வாசலிலே கிருசாந்தி’ செம்மணி தொடர்பான கவிதைகள் புத்தக வெளியீடும் கவிதை வாசிப்பு நிகழ்வும் 07.09.2025 ஞாயிற்றுக்கிழமை காலை செம்மணி அணையா விளக்குத் திடலில் நடைபெற்றது.

இந்நூலானது 47 கவிஞர்களின் 54 கவிதைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ளது.

இந்நிகழ்வில் நூலின் முதல்பிரதிகளை கிருசாந்தியின் உறவினர்கள் பெற்றுக்கொண்டனர். தொடர்ந்து இந்நூலில் இடம்பெற்ற கவிதைகள் நிகழ்வில் கலந்து கொண்டோரால் வாசிக்கப்பட்டன.

**புகைப்படம் : குமணன்**

# ஆவணப்படத் திரையிடலும் புத்தக அறிமுக விழாவும்



27.09.2025

எழுநாவினால் தயாரித்து வெளியிடப்பட்ட 'நீதிக்காக நீண்ட காத்திருப்பு' எனும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஆவணப்படம் திரையிடலும் , செம்மணி தொடர்பான கவிதைகள் 'வாசலிலே கிருஷாந்தி' என்னும் நூலின் அறிமுக விழாவும் அச்சுவேலி தெற்கு, கலாநிதி சனசமூக நிலையத்தில் 27.09.2025 அன்று வலிகிழக்கு பிரதேச சபை உறுப்பினரும் கலாநிதி சன சமூக நிலைய தலைவரும் ஆகிய பி.நேருஜன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

நிலையத்தின் செயலாளராகிய தர்ஷன் அவர்களால் நூல் பற்றிய மதிப்பீட்டுரை வழங்கப்பட்டது. புதுவை இரத்தினதுரையின் வரிகளாகிய

*'காலாலுதைத்து நிலம்பிளந்து புதைகுழியிருந்து வெளிவருக*
*பொய்யமைதி குலைந்து போகச்*
*சாமப்பொழுதில் ஓலக்குரலெடுத்துப் பாடுக.*
*செம்மணி வீதியில்*
*உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கொன்றைப்*
*பிரகடனம் செய்க.*
*வருவோர் போவோர் எவரெனினும் வழிமறித்து*
*குருதிவழிய மூக்குடைத்துப்பொருதுக.*
*பேயடிப்பதாய் ஊர்பேசிப் பதறட்டும்.*
*இது பேசாதிருக்கும் ஊருக்குப்*
*பொருத்தமான தண்டனை.'*

இவ்வரிகள் தற்போது நடக்கும் புதைகுழி அகழ்வுகளை முற்கூட்டியே கணித்த வரிகளாக இருக்கின்றது எனக்குறிப்பிட்டிருந்தார். இந்நிகழ்விற்கு சனசமூக நிலைய உறுப்பினர்கள், கிராம மக்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.








# முனைவர் பால. சிவகடாட்சம் அவர்களின் ‘பதார்த்த சூடாமணி’

**கருத்துரை: மா. பாரதி முத்துநாயகம்**

பதார்த்தம் என்றால் உண்ணும் உணவு அல்லது அதில் பயன்படுத்தும் பொருள்கள். சூடாமணி என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. இங்கே தொகுக்கப்பட்ட நூல் என்று பொருள் கொள்ளலாம். கனடாவில் வசிக்கும் முனைவர் பால. சிவகடாட்சம் அவர்கள் எழுதிய ‘தமிழர் மருத்துவம் – ஒரு வரலாற்றுப் பார்வை’ நூலை மூன்று பகுதிகளாகச் சில மாதங்களுக்கு முன்பு பார்த்தோம். விரிவாக எழுத வேண்டும் என்று நினைத்து நாள்களைத் தள்ளிப் போட்டதில் சோம்பல் என்னை ஆட்கொண்டு அதை முழுமையாக முடிக்க முடியாமல் செய்துவிட்டது. இலங்கையில் ‘பதார்த்த சூடாமணி’ எனும் இந்த நூலின் முதற்பதிப்பு நடப்பாண்டில் வெளியான நிலையில் இந்தியாவிலும் விரைவிலேயே வெளியாக இருக்கிறது.

தேரையர் இயற்றிய பதார்த்த குண சிந்தாமணி நூலின் ஒன்றிரண்டு பாடல்களைத் தவிர முழுமையான அறிவை எதையும் பெறாதவன் நான். ”பாலுண்போம் எண்ணெய் பெறில் வெந்நீரில் குளிப்போம் என்று தொடங்கும் பாடலை 50 ஆண்டுகளுக்கு முன்பு படித்தபோது அதில் வரும், ”மண்பரவு கிழங்குகளில் கருணையன்றி புசியோம் என்ற வரியில், மண்ணுக்கடியில் விளையும் கிழங்கு வகைகளில் கருணைக்கிழங்கைத் தவிர மற்றவற்றை உண்ணமாட்டோம் என்பதைப் படிக்கும் நாள்களில், உருளைக்கிழங்கு, ஏழிலைக்கிழங்கு, சிறுகிழங்கு போன்றவற்றை விரும்பித்தின்னும் வழக்கமுடையவனாக இருந்தேன். அதன்பிறகு அவற்றை உண்ணுவதில் தயக்கம் இருந்தது.

இலங்கையில் 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மருத்துவரான இருபாலைச் செட்டியார் என்பவரால் (200 ஆண்டுகளுக்கு முன்பு) தொகுக்கப்பட்ட பதார்த்த சூடாமணி என்ற நூலிலுள்ள பாடல்கள் தரும் செய்திகளை நாமறியும் பொருட்டு அதே தலைப்பிலேயே விளக்கமாகவும் விரிவாகவும் தந்துள்ளார் முனைவர் பால. சிவகடாட்சம் அவர்கள். அந்தப் பதினொரு பொருள்களாவன:

1. குங்குமப்பூ
2. மிளகாய்
3. தூதுவளை
4. மரவள்ளிக்கிழங்கு
5. தக்காளி
6. ஈரப்பலா (அயினிச் சக்கை போலத் தோன்றும் இதை ஆங்கிலத்தில் ‘Breadfruit’ என்று சொல்கிறார்கள்.)
7. பப்பாளி
8. வத்தகப்பழம் (தர்பூசணி)
9. பறங்கிப்பூசணி
10. சர்க்கரை வள்ளிக்கிழங்கு (வத்தாளங்கிழங்கு)
11. அன்னாசிப்பழம்

இவற்றில் தூதுவளையைத் தவிர மற்றவை எல்லாம் 17 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர்

(ஹாலந்து/ டச்சு), ஆங்கிலேயர்களால் இங்கே கொண்டு வரப்பட்டவையாகும். அந்நிய மண்ணுக்குரிய இவற்றின் மருத்துவ அனுகூலங்களை அனுபவபூர்வமாக ஆய்ந்தறிந்து நூலாக வெளியிட்ட இருபாலைச் செட்டியாரை நன்றியுடன் நினைவுகூரத் தூண்டுகிறது இந்நூல்.

முதல் தலைப்பாகிய 'குங்குமப்பூ' உலகின் மிக விலையுயர்ந்த தாவரப் பொருள்களில் ஒன்று. சாமானியர்கள் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத விலை! ஏன் அப்படி என்றால் இதனை உற்பத்தி செய்வதில் உள்ள அபூர்வங்கள்தான் காரணம்.

"உலகிலேயே அதி விலை கூடிய சுவையூட்டி (Spice) குங்குமப்பூ. குங்குமப்பூவின் தரத்தின் அடிப்படையிலேயே அதன் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஸ்பெயினில் உற்பத்தி செய்யப்படும் சுத்தமான குங்குமப்பூ ஒரு இறாத்தல் (454 கிராம்) 3000 அமெரிக்க டொலர் முதல் 5000 அமெரிக்க டொலர் வரை விற்பனை செய்யப்படுகிறது. ஓரளவு தரமான குங்குமப்பூ ஒரு கிராம் 8 டொலருக்கு வாங்க முடியும். இதன்படி கணக்குப் பார்த்தால் இன்று ஒரு கிராம் குங்குமப்பூவின் விலை 2600 இலங்கை ரூபாவாகும். இது இந்தியக் காசில் 650 ரூபா.

"குங்குமப்பூ என்பது தனிப்பூ அல்ல. பூவின் உள்ளே சிவந்த நூலிழை போன்ற மூன்று கிளைகளையுடைய சூல்முடி (பெண்குறி) காணப்படும். இந்த 'ஸ்ரிக்மா' (Stigma) எனப்படும் சூல்முடியே குங்குமப்பூ எனும் பெயரில் பயன்படுத்தப்படும் வாசனைத் திரவியமாகும். ஒரு அவுன்ஸ் குங்குமப்பூ தயாரிப்பதற்கு ஏறத்தாழ 14,000 ஸ்ரிக்மாக்கள் தேவைப்படும். இதன்படி ஒரு இறாத்தல் குங்குமப்பூ தயாரிப்பதற்கு 72,000 மலர்களிலிருந்து குங்குமப்பூவின் ஸ்ரிக்மாக்களைக் கைகளினால் பிரித்தெடுக்க வேண்டும். இந்த மனித உழைப்புக்கான செலவை ஓரளவு ஊகித்துக்கொள்ள முடியும். அத்தோடு வருடத்துக்கு ஒரு கிழமை மாத்திரமே இந்தத் தாவரத்தில் பூக்கள் பூக்கின்றன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்

இந்தக் குங்குமப்பூ உணவுக்குச் சுவையூட்டுவது மட்டுமல்லாமல்,

"விந்து நட்டம் தாகமண்டம் மேகசலம் சூலைகபம்

உந்து சுரம் பித்தம் கால் உச்சி வலி – முந்து கண்ணில்

தங்கும் அப்பூவோடு உறுநோய் சந்தி இவை நீங்க வென்றால்

குங்குமப்பூ ஓர் இதழைக் கொள்

என்கிறது பதார்த்த குணவிளக்கம் எனும் நூல். இதன் பொருள்: விந்து இழப்பு, தாகம், சலரோகம், சளிக்கட்டு, காய்ச்சல், பித்தம், கால்வலி, உச்சிவலி, கண்ணில் பூ, வாந்தி போன்ற நோய்கள் தீர வேண்டுமானால், குங்குமப்பூவின் ஒரேயொரு இதழை உட்கொள்.

பெண்களுக்கேயுரிய இரத்தப்போக்கு மற்றும் கர்ப்பம் தொடர்பான நோய்களும் குங்குமப்பூவால் தீரும் என்று மற்றொரு பாடல் கூறுகிறது ('குங்குமப்பூவே' என்று சந்திரபாபு, காதலியை அழைத்துப் பாடியதன் பொருள் இப்போதல்லவா தெரிகிறது!). ஆனாலும் நம்மைப் போன்ற சாமான்ய மக்களுக்கு குங்குமப்பூ என்பது கைக்கும் வாய்க்கும் எட்டாத பூதான்.

தமிழர் உணவில் காரச்சுவைக்குப் பயன்படுத்தி வந்தது கறி என்று சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட மிளகுதான். போர்த்துக்கீசியரால் தென்னமெரிக்காவில் இருந்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் கொண்டுவரப்பட்ட மிளகாய் இல்லாமல் இன்று எந்தச் சைவ – அசைவ உணவும் இல்லை. மிளகாய் பொதுவாக சுவைக்காக மட்டுமே என்று கருதிக்கொண்டிருக்கும் நமக்கு அதன் மருத்துவக் குணங்களைப் பட்டியலிடும் யாழ்ப்பாண இருபாலைச்செட்டியாரின் பதார்த்த சூடாமணியிலிருந்து ஒரு பாடலைத் தருகிறார் முனைவர் பால. சிவகடாட்சம் அவர்கள்:

"தீதிலா மிளகாய்க்குள்ள செய்கையைச் சொல்லக் கேண்மோ?: உடலுக்கு எந்தக் கெடுதியும் செய்யாத மிளகாயின் மருத்துவக் குணங்களைச் சொல்லுகிறேன். கேட்கிறீர்களா?

"வாதமே சேடம் வாயு மந்தம் என்று இனைய எல்லாம்

காதம் போம்! : வாதம், சளித்தொந்தரவு, வாய்வுக்கோளாறு, மந்தம் எல்லாம் மிளகாயைப் பயன்படுத்தினால் உங்களைவிட்டு ஓடோடிப் போகும்!

"போசனங்கள் தம்மைக் கடிதினில் செமிக்கப் பண்ணும்: உண்ட உணவை விரைவில் செரிக்கும்படிச் செய்யும்.

"போதமார் பித்தம் தோன்றும் பிரிவில் சீ மலமும் போமே!: அளவுக்கு அதிகமாக சேர்த்துக்கொண்டால் பித்தமும் வயிற்றுப் போக்கும் ஏற்படும்.

மேலே கண்ட பதினொரு பொருள்களில் பத்து வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்குள்ளும் இலங்கைக்குள்ளும் வந்தவை. தூதுவளை நமது மண்ணிற்கே உரியது. இதை எப்படி இந்த வரிசையில் இந்நூலாசிரியர் இடம்பெறச் செய்தார் என்பது கேள்வியாக இருந்தாலும் இதுவரை நாம் அறிந்திராத பல விஷயங்களையும் எடுத்து இயம்பும் இந்நூலில் அனைவரும் விரும்பிப் படிக்கும் வகையில் செய்திகள் அமைந்துள்ளன.

கொலம்பஸ் தனது முதல் கடற்பயணத்தின் போது கண்டுபிடித்தது ஒரு புதிய கண்டத்தை மட்டுமல்ல; மிளகுக்குப் பதிலாகப் பயன்படப் போகும் மிளகாயையும்தான். அவரே தனது இரண்டாவது பயணத்தின் போது கண்டறிந்தது தான் அன்னாசிப்பழம். ஆண்டுகளுக்கு முன்பு அவ்வளவாகச் சீண்டப்படாமல் இருந்த அன்னாசிப்பழம் இன்று தமிழகத்தில் பழச்சாறுக் கடைகளில் கோலோச்சுகிறது. எலுமிச்சைச்சாறு எனும் சாதாரண 'லெமன் ஜுஸ்' தயாரிப்பவரும் அதில் இரண்டு அன்னாசிப்பழத் துண்டுகளைப் போட்டு 'மிக்ஸி'யில் அடித்துக்கொடுப்பது அண்மைக்காலமாகத் தவிர்க்க முடியாததாக மாறிவிட்டது (புது ருசியும் மணமும் ஒரு புறமிருக்க, இதில் வணிகத் தந்திரமும் இருக்கிறது. கூடுதலாக வசூலித்துக் கல்லாகட்ட முடியும்).

"1463 – நவம்பர் – நாலாம் நாள். கொலம்பஸ் தான் கண்டறிந்த புதிய கரீபியன் தீவு ஒன்றுக்கு 'சாண்டா மரியா டி குவாடெலூப்' என்ற பெயரைச் சூட்டினார். கப்பல் கரையை நெருங்கியபோது, அத்தீவில் வாழ்ந்த பூர்வீகக்குடிகள் படகுகளில் தண்ணீர் மற்றும் உணவை விற்பதற்காகக் கொண்டு வந்தனர். அவ்வாறு கொண்டுவரப்பட்டவற்றுள் கொலம்பஸை மிகவும் கவர்ந்த ஒன்று அன்னாசிப்பழமாகும்

". கொலம்பஸ் ஸ்பெயினுக்குத் திரும்பியபோது, அரசர் ஃபெர்டினாண்ட், ராணி இஸபெல்லா ஆகியோருக்குக் கொண்டுவந்த காணிக்கைகளுள் தங்கக் கட்டிகள், பூர்வீகக்குடிகளால் செய்யப்பட்ட ஆபரணங்கள், முகமூடிகள் என்பவற்றுடன் அன்னாசி உட்பட வெளிநாட்டுப் பழங்கள், பறவைகள், விலங்குகள், தாவரங்கள் அடங்கி இருந்தன.

எனினும் இவற்றுள் அரசர் ஃபெர்டினாண்டை மிகவும் கவர்ந்தது அன்னாசிப்பழமேயாகும். இதை அவர் பகிரங்கமாகவே அறிவித்தார். இதனைத் தொடர்ந்து ஐரோப்பாவுக்கு கொண்டுவரப்பட்ட அன்னாசிப்பழங்கள் மன்னர்கள் மற்றும் பிரபுக்களின் பெரும் ஆதரவைப் பெற்றன. அனைத்து வகையான உணவு வகைகளிலும் அன்னாசிப்பழம் மட்டுமே பரந்துபட்ட அங்கீகாரத்தைத் தந்தது என்று முனைவர் பால. சிவகடாட்சம் அவர்கள் கூறுவதைப் படிக்கும் நமக்கு வியப்பாக இருக்கிறது.

அன்றைய இந்தியத் துணைக்கண்டத்தில் இரண்டே இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு புகுந்த இவ்வகை இறக்குமதிகள் இன்று இந்திய உணவுப்பண்பாட்டின் அம்சமாக, தவிர்க்கவும் பிரிக்கவும் முடியாத அளவுக்குக் கலந்துவிட்டன.

ஒவ்வொன்றும் ஏதோவொரு விதத்திலாவது மக்களை இரட்சித்திருக்கிறது என்பதை வரலாற்று நிகழ்வுகளுடன் முனைவர் பல இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளார். எடுத்துக்காட்டாக, ஏழிலைக்கிழங்கு எனும் மரச்சீனிக் கிழங்கு! கடுமையான பஞ்சகாலத்தில் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களை பசிப்பிணியால் சாகாமல் காப்பாற்றியது இந்த மரச்சீனிக் கிழங்கு. அது எந்த நாட்டிலிருந்து வந்தால் நமக்கென்ன?

இந்தப் பட்டியலில் மணிலாக்கொட்டை எனப்படும் நிலக்கடலை இடம்பெற்றிருக்க வேண்டும் என்பது எனது கருத்து. ஓட்ஸ், சோயா போன்றவை சமீபத்திய வரவுகள். அதிலும் நமது நாட்டில் விளையாத ஓட்ஸ் சாப்பிடுவது ரொம்பக் கௌரவமானது! ஆசையாக பருப்பு (ஆமை) வடை, கார வடைகளைச் சாலையோரக் கடைகளில் வாங்கிச் சாப்பிடுகிறோமே, அவற்றுக்குத் தேவையான பட்டாணிப் பருப்பை (கடலைப்பருப்பு அல்ல) கனடாவிலிருந்தும் ஆஸ்திரேலியாவிலிருந்தும்தான் இன்னும் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம்.

எதுவானாலும் நமது தட்பவெப்ப நிலைகளுக்கேற்ற, சூழலுக்குத் தீங்கு ஏற்படுத்தாத விளைபொருள்களே இந்நூலில் காணப்படும் பத்துப் பொருள்களும். முனைவர் பால. சிவகடாட்சம் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இலங்கையில் இந்நூலின் முதற்பதிப்பு இந்த ஆண்டு 'எழுநா' பதிப்பாக வெளியாகியிருக்கிறது. விரைவில் தமிழ்நாட்டிலும் வெளியாக உள்ளது.




# மயூரநாதனின்

# யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு 1621 – 1948:

## கற்கைநெறி பேணிய ஒரு மாபெரும் படைப்பு

**கருத்துரை: சிவ தியாகராஜா**

“தான் பிறந்த மண்ணின் மீது அபாரமான அபிமானமும், எடுத்துக்கொண்ட ஆய்வுப்பொருள் மீது ஆழ்ந்த புலமைத்துவமும் இல்லாவிடின் இப்படியானதொரு வியத்தகு படைப்பை உருவாக்கியிருக்க முடியாது.

கொழும்பு குமரன் புத்தக இல்லமும் எழுநா, ஆதிரை நிறுவனங்களும் இணைந்து வெளியிட்டுள்ள இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதனின் ‘யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு 1621 – 1948’ என்ற நூலை எனது நண்பர் விசாகன் மூலம் பார்வையிட நேர்ந்தது. ஒரு பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தனது மாணவர்களின் துணையோடு ஒரு பேராசிரியரால் வெளியிடப்பட வேண்டிய இந்த நூல் கூறும் பொருள், ஒரு தனிமனித பிரயாசையுடன உருவாக்கப்பட்டு வெளிவருவதென்பதே பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயம். இந்த நூலை உருவாக்க உபயோகிக்கப்பட்ட உசாத்துணை நூல்களின் பட்டியலே ஒரு நூல் நிலையத்தை நிறைத்துவிடும் என்பதைக் காணும்போது இந்நூலைப் படைத்த நூலாசிரியரின் பகீரத உழைப்புப் புலனாகிறது.

இந்த நூலின் பொருள் கி.பி. 1621 ஆம் ஆண்டிற்கும் 1948 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட 327 ஆண்டுக்கால யாழ்ப்பாண நகரத்தின் பரிணாம வளர்ச்சி. இக் காலப்பகுதி யாழ்ப்பாண நாடு அந்நிய ஐரோப்பியரின் ஆட்சியின் கீழிருந்த காலப்பகுதி ஆகும். யாழ்ப்பாண வரலாற்றில் இக்காலப்பகுதி பற்றிய விரிவான நூல்கள் அருகியே காணப்படும் இக்கால கட்டத்தில் இந்த நூலின் வரவு ஒரு வரப்பிரசாதமாகும். சில வரலாற்றாசிரியர்கள் கூறுவதுபோல யாழ்ப்பாணப் பகுதியின் நாகரிக வளர்ச்சி ஐரோப்பிய ஆட்சியின் பின்விளைவு என்ற கருத்தாக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. இவர்கள் வரலாற்றுக்கால நாகரிக வளர்ச்சியின் பின்னணித் தத்துவத்தை அறிந்திராதவர்கள் என்றே கூறவேண்டும். 1970 ஆம் ஆண்டில் அமெரிக்க பென்சில்வேனிய பல்கலைக்கழக அருங்காட்சியகத்தின் தொல்லியலாய்வாளர்கள் கந்தரோடையில் மேற்கொண்ட அகழாய்வுகளும், அங்கே கண்டெடுக்கப்பட்ட கருவூலப் பொருட்களின் கதிரியக்கக் கரிம ஆய்வுகளும் கி.மு. 1350 ஆம் ஆண்டளவில் கந்தரோடையில் ஆதி இரும்புக் காலத்தைய பெருங்கற் பண்பாட்டைப் பேணிய மக்களின் குடியிருப்புகள் ஏற்பட்டுவிட்டதையும், அதைத் தொடர்ந்த தொல்லியல் ஆய்வுகள் கி.மு. 500 ஆம் ஆண்டளவில் கந்தரோடையில் நகரமயமாக்கம் ஏற்பட்டுவிட்டதையும் எடுத்துக்காட்டுகின்றன.

2017–18 ஆம் ஆண்டில் பிரித்தானிய டர்ஹாம் பல்கலைக்கழக தொல்லியல் பேராசிரியரும், UNESCO தொல்லியல் நன்னெறிக்கோட்பாட்டின் தலைவருமான றொபின் கொனிங்ஹாம் தலைமையில் யாழ்ப்பாணக் கோட்டைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் கி.மு. ஆயிரத்தாண்டு காலத்திலேயே பெருங்கற்காலப் பண்பாட்டைப் பேணிய மக்கள் இப்பிரதேசத்தில் குடியிருந்ததையும், கி.மு. 500 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் யாழ்ப்பாணப் பட்டினம் ஒரு புராதன நகரமாகிவிட்டதையும் எடுத்துக்காட்டியது. யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகளும், அதிலிருந்து பெற்ற தொல்கலைக் கருவூலப் பொருட்களும் வெளிக்கொணர்ந்த யாழ்ப்பாணக் கோட்டைக்கு அடியே கிடக்கும் புராதன யாழ்ப்பாணப் பட்டினத்தின் புதையல், வட இலங்கையின் பாரம்பரிய மரபுரிமைப் பொக்கிஷம் (Monumental Heritage of Northern Sri Lanka) என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டியது. இந்த அகழ்விற்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் றொபின் கொனிங்ஹாம் 2017 இல் வெளிவந்த தனது அகழ்வாய்வு அறிக்கையில் பின்வருமாறு பதிவு செய்திருந்தார் (From ‘Recent Excavations and Survey at Jaffna Fort in 2017 and Reflections on the Antiquity of the Indian Ocean Trade’ in Essays in Buddhism and Buddhist Monastic Archaeolo gy, Buddha Rashmi Vesak Volume 2018, Sri Lanka Central

Cultural Fund):

"மேற்கு – கிழக்கு ஆசிய உலகங்களையும், கிழக்கு ஆபிரிக்காவையும், அரேபியாவையும், மத்தியதரை நாடுகளையும், தென்சீனக் கடற் பகுதியையும் இணைத்த கடல்வழிப் பட்டுப் பாதையின் கேந்திர மையமாக அமைந்தது யாழ்ப்பாணம். சமீபகாலத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகள், ஆரம்பகாலக் குடியிருப்புக் காலத்திலிருந்து பதினாறாம் நூற்றாண்டின் காலனியாதிக்கத் தொடர்புவரை, சர்வதேச வர்த்தக வலைப்பின்னலில், யாழ்ப்பாணம் அளித்த மகத்தான பங்களிப்பை விளங்கிக்கொள்ளும் சந்தர்ப்பத்தை நமக்கு அளித்திருக்கிறது.

### நகர உருவாக்கம்

உலக வரலாற்றில் 'நகர உருவாக்கம்' என்பது வேறுபட்ட காலப்பகுதிகளை உள்ளடக்கிய படிநிலை வளர்ச்சியைக் குறிப்பிடுகிறது. தொல்பழங்கால நகர உருவாக்கம், பண்டைய நகர உருவாக்கம், இடைக்கால நகர உருவாக்கம், நவீன நகர உருவாக்கம் என நான்கு வேறுபட்ட நிலைகளை இதில் காண்கிறோம். தொல்பழங்கால நகர உருவாக்கம் செம்புக்கால யுகத்தைச் சேர்ந்தது: இற்றைக்கு எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கி கி.மு. 1500 வாக்கில் இது முடிவு பெறுகிறது. உதாரணம்: சுமேரிய, சிந்துவெளி நகரங்கள்.

அடுத்த இரண்டாவது அலை நகர உருவாக்கம் கி.மு. 6 ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 5 ஆம் நூற்றாண்டு வாக்கில் நிறைவு பெறுகிறது. கந்தரோடை, யாழ்ப்பாணப் பட்டினம், அநுராதபுரம், மகாகமம் ஆகியவற்றின் நகரமயமாக்கம் இக்காலகட்டத்திற்குரியன.

மூன்றாம் கட்ட மத்தியகால நகரமயமாக்கம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் ஆரம்பமாகி கி.பி. 1600 ஆம் ஆண்டுக்காலம் வரை நீடித்தது. இக் காலப்பகுதியில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் ஆரியச்சக்கரவர்த்தி அரச வம்சத்தினரின் கீழ் உருவான 'யாழ்ப்பாண இராச்சியத்தின்' சிங்கைநகர், நல்லூர் ஆகிய நகரங்கள் மத்தியகால நகரங்களாகும்.

நான்காம் கட்ட நவீன நகரமயமாக்கம்தான் ஐரோப்பியர் கால ஆட்சியின்கீழ் உருவான யாழ்ப்பாணப் பட்டணம். இதில் ஒரு காலகட்டத்து நகரமாக்கலின் பண்புகளை மற்றொரு காலத்துடன் ஒப்பிட்டு ஏற்றத்தாழ்வு காண்பது வரலாற்று – நெறி பேணிய ஒப்பீட்டாய்வு அல்ல.

"யாழ்ப்பாண இராச்சியத்தில் போர்த்துக்கேயர் காலடி வைப்பதற்குப் பல நூற்றாண்டுகள் முன்பிருந்தே இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணப் பட்டினம் அல்லது அதையொத்த பெயர்கொண்ட ஒரு நகரம் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன என தனது முன்னுரையை ஆரம்பிக்கும் ஆசிரியரின் கூற்றை சமீப காலத்தைய யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகள் ஐயந்திரிபற நிரூபிக்கின்றன. இன்று யாழ்ப்பாணக் கோட்டைப் பிரதேசம் இருக்கும் 'பண்ணை' என்ற இடப்பெயர், அவ்விடத்தில் முற்காலத்திலிருந்த ஓர் உலகப் பண்ணையின் பெயரின் (World Market) எச்சமாகவே தோன்றுகிறது.

இந்த நூலை ஆசிரியர் மயூரநாதன் ஐந்து முக்கியமான பகுதிகளாகப் பிரித்து வழங்கியிருக்கிறார். இந்த வரிசையிலேயே இந்நூற்பொருளின் முக்கிய பகுதிகளைப் பார்த்து மதிப்பிடலாம்.

### 1. அறிமுகம்

யாழ்ப்பாணத்தில் மக்கள் குடியேற்றங்கள் ஆரம்பித்த காலப்பகுதியை அவர்கள் உபயோகித்த மட்பாண்டங்களின் காலக்கணிப்பிலிருந்து கிரகிக்க முடிகிறது. அந்த வகையில் கந்தரோடை கறுப்பு – சிவப்பு மட்பாண்டம் கி.மு. 1350 ஆம் ஆண்டுக் காலத்தையும், யாழ்ப்பாணக் கோட்டை கறுப்பு – சிவப்பு மட்பாண்டம் கி.மு. 1000 ஆண்டுக் காலத்தையும் (கொனிங்ஹாமின் திருத்திய கணிப்பு) தருகின்றன. இம்மட்பாண்டங்கள் சாதாரண மக்கள் உபயோகித்த ஆரம்பகால மட்கலன்கள். இந்த மட்கலன்களின் காலப்பகுதியை இவ்விடங்களில் மக்கள் குடியேற்றங்கள் ஆரம்பித்த காலங்களாகக் கொள்ளலாம்.

யாழ்ப்பாண மாவட்டம் வடமாகாணத்தின் 11.5 வீத நிலப்பரப்பைக் கொண்டிருந்த போதிலும், மாகாணத்தின் 55 சதவீதமான மக்கள் தொகையினர் யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்ந்திருப்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்த மக்கள் செறிவே யாழ்ப்பாணம் இலங்கையின் பெரிய நகரங்களுள் ஒன்றாக வளர்ந்ததற்கான காரணிகளுள் ஒன்று என எடுத்துக்காட்டியிருப்பது முக்கியமான தகவல்.

வரலாற்றில் யாழ்ப்பாணத்தைக் குறிக்க எழுந்த பெயர்களில் 'பட்டினம்' அல்லது அதன் திரிபுகளைப் பின்னொட்டுகளாகக் கொண்ட பெயர்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. திருமாணிக் குழிக்கல்வெட்டிலும் சரி, திருப்புகழிலும் சரி, யாழ்ப்பாண நாயன் பட்டினம் (யாழ்ப்பாண அரசனின் பட்டினம்) என்ற அடிகளில் வரும் 'பட்டினம்' என்ற சொற்பதம், இது கடற்கரையில் அமைந்த ஒரு துறைமுக நகரம் என்பதைக் காட்டுகிறது.

பேராசிரியர் பரணவிதான எழுதிய 'வட இலங்கையின் ஆரிய இராச்சியம்' என்ற கட்டுரையில் 'யாபாபடுன' என்ற பெயரின் தோற்றத்தை ஆழமாக ஆய்வு செய்திருக்கிறார். வட இலங்கையை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகளின் நாட்டையோ, தலைநகரத்தைப் பற்றியோ நிக்காய – சங்கிரஹா எதையுமே கூறவில்லை. 'யாழ்ப்பாணம்' பற்றிய தகவல் கி.பி. 1450 இற்கும், கி.பி. 1465 இற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட செலலிஹினி – சந்தேஸ, கிரா – சந்தேஸ, கோகில – சந்தேஸ ஆகிய சிங்களச் செய்யுள் நூல்களிலே காணப்படுகிறது. ஆறாம் பராக்கிரமபாகு காலத்தில் அவரது சுவீகார மகனான இளவரசன் சப்புமால் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து இலங்கை முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்டமை பற்றிய புகழுரை இவற்றில் காணப்படுகிறது. இவை கூறும் சமகாலத் தகவல்கள் (Contemporary Accounts), ஆரியச்சக்கரவர்த்திகள் 'யாபாபடுன' எனப்பட்ட இன்றைய யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்தவர்கள் என அறியத்தருகின்றன. இலங்கையிலுள்ள எழுத்துப் பதிவுகளில் 'யாபாபடுன' என்ற பெயர் இந்தச் செய்யுட்களிலேயே முதலில் இடம்பெறுகிறது. 'யாபாபடுன' என்ற பெயர் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சிப்பீடத்தை மட்டுமின்றி, அவர்களின் ஆட்சிப்பரப்பையும் குறிப்பிடுகிறது. இந்தப் பெயர் குறிப்பிடுவது போல இது ஒரு துறைமுக நகரமாகும்.

### கொட்டகம கல்வெட்டு

தென்னிலங்கையில் கேகாலை மாவட்டத்திலுள்ள கொட்டகம என்ற இடத்தில் H.C.P. பெல் என்ற ஆங்கிலேயத் தொல்லியலாளரால் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு, யாழ்ப்பாண அரசின் ஆரியச்சக்கரவர்த்தி

ஒருவன் தென்னிலங்கை அரசன் ஒருவனுடன் போரிட்டு வெற்றி பெற்றதை எடுத்துரைக்கிறது. தமிழில் எழுதப்பட்டிருக்கும் இக்கல்வெட்டு 14 ஆம் நூற்றாண்டிற்குரியதாகக் கணிக்கப்படுகிறது (Bell, H.C.P. 1904: 85, South Indian Inscriptions, Vol. IV, p. 496).

இக்கல்வெட்டில் காணப்படும் வாசகம் இது:

*"சேது*

*கங்கணம் வேற்கண்ணினையாற் காட்டினார் காமர்வளைப்*

*பங்கயக் கைமேற்றிலதம் பாரித்தார் – பொங்கொலிநீர் (ச்)*

*சிங்கைநக ராரியனைச் சேராவனுரேசர்*

*தங்கள் மடமாதர் தாம்.*

இக்கவிதையின் பொருள்: யாழ்ப்பாண அரசர்கள் சேதுகாவலர்கள் என அழைக்கப்பட்டமையால் 'சேது' என்ற பதம் அவர்களைக் குறிப்பிடுகிறது. அனுரேசர் – சிங்கள அரச தலைநகரான அநுரையில் (அநுராதபுரத்தில் அல்லது சிங்கள அரசர்களின் தலைநகரில்) வாழும் – மடமாதர் பொங்குகடல் நீர் ஆர்ப்பரிக்கும் சிங்கை நகரத்து ஆரியனது பிரசைகள் அல்லர். அவர்களின் கண்களிலிருந்து உதிரும் நீர் கூரிய வேல்களைப் போல ஒளிருகிறது. அணிகலன்கள் அணிந்த தாமரை மலர் போன்ற கரங்களால் எள் நீரூற்றினார்கள் (இறந்தவர்களுக்குச் செய்யும் இறுதிச் சடங்கு). (Rasanayagam, C. 1926: p. 364).

இக்கல்வெட்டுக் கூறும் பாடல் சிங்கை ஆரியனது படைகளோடு போரிட்டு இறந்த போர் வீரர்களுக்குச் செய்யப்பட்ட இறுதி மரியாதையை எடுத்துரைக்கிறது. தென்னிலங்கையில் கேகாலை மாவட்டத்திலுள்ள கொட்டகமவில் இது கண்டெடுக்கப்பட்டபடியினால் அங்கிருந்த ஓர் அரசனோடு சிங்கை நகரத்து ஆரியச்சக்கரவர்த்தி போரிட்டிருக்க வேண்டும். அநுராதபுரத்தில் சிங்கள அரசர்களின் ஆட்சி முடிவுற்ற பின்னரும் தென்னிலங்கையில் வேறு இடங்களிலிருந்த அரசர்களையும் அநுரையர் என அழைக்கும் வழக்கம் இருந்தது.

இக்கல்வெட்டில் வரும் 'பொங்கொலிநீர்ச் சிங்கைநகர்' என்ற பதம் ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசிருக்கை இருந்த இடம் கடற்கரையிலிருந்த ஒரு நகரம் என்பதைக் காட்டுகிறது. மேலும், பிற்காலத்தில் எழுதப்பட்ட வரலாற்று நூல்களைக் காட்டிலும், சமகாலத்தைய கல்வெட்டுகள் தரும் தகவல்கள் நம்பகரமானவை.

## பிற ஆதாரங்கள்

பதினைந்தாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் ஆட்சி புரிந்த அரிகேசரி பராக்கிரம பாண்டியனுடைய (1422–1461) கல்வெட்டுகளிலும் 'சிங்கையும் அநுரையும்' (அநுராதபுரம்) என இலங்கை அரசுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இச்சான்றுகளை நோக்குமிடத்து யாழ்ப்பாண வரலாற்றின் முற்பட்ட கட்டத்திலே இராச்சியத்தின் தலைநகர் 'சிங்கைநகர்' என்ற இடம் என்பது தெளிவாகின்றது (Annual Report on Epigraphy, Madras, 1912, No.4).

யாழ்ப்பாண வைபவமாலையிலும், கைலாயமாலையிலும் ஆரியச்சக்கரவர்த்திகளின் தலைநகர் நல்லூர் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் முற்பட்ட தமிழ் நூல்களிலோ சாசனங்களிலோ நல்லூரைப் பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை. அவற்றில் 'சிங்கை நகர்' தலைநகராகக் கூறப்படுகிறது. ஆகவே யாழ்ப்பாண மன்னர்களுடைய முதலாவது தலைநகர் சிங்கைநகர் என்றும், பதினைந்தாம் நூற்றாண்டில் செண்பகப்பெருமாள் நடத்திய படையெடுப்பிற்குப் பின்னரே இரண்டாவது தலைநகரான நல்லூர் அமைக்கப்பட்டது என்றும் கொள்ளவேண்டும் (ஞானப்பிரகாசர், 1928: பக் 106107).

## இபின் பத்தூதா - கி.பி. 1344

கி.பி. 1344 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகைதந்த அரேபிய யாத்திரிகரான இபின் பத்தூதா இலங்கை அரசனான ஆரியச்சக்கரவர்த்தியை 'பத்தல' என்ற நகரத்தில் சந்தித்ததாகவும், அந்த அரசனிடத்தில் ஏராளமான முத்துகள் இருந்ததாகவும், அந்த அரசனின் உதவியோடு அவனளித்த பல்லக்கில் பாதபங்கய மலை வரையும் பயணம் செய்ததாகவும் தனது பிரயாண ஏடான 'ரெஹ்லா'வில் (Rehla) குறிப்பிட்டிருக்கிறார் (Husian, M. 1976: pp 217–224). ஆரியச்சக்கரவர்த்தி என்ற அரசனின் பெயர் இடம்பெறும் ஆதி இலக்கியப் பதிவு இதுவாகும். 'பத்தல' என இபின் பத்தூதா குறிப்பிடும் நகரம், 'பட்டினம்' (யாழ்ப்பாணப் பட்டினம்) என்பதன் திரிபே என பரணவிதான கருதியுள்ளார் (Paranavitana, S. 1961: p. 208).

## சிங்கை நகர் இருந்த இடம்

யாழ்ப்பாண வரலாற்றாசிரியர்களினிடையே சிங்கைநகர் எங்கே இருந்தது என்பது பற்றி வேறுபட்ட பல கருத்துகள் இருந்தன. சிலர் அது வல்லிபுரத்தில் இருந்ததாகவும், சிலர் யாழ்ப்பாண நகரில் இருந்ததாகவும், சிலர் பூநகரியில் இருந்ததாகவும் கூறியிருந்தனர். இன்னும் சிலர் நல்லூர்தான் சிங்கைநகர் என்றும் கூறியிருந்தார்கள். நல்லூர் 'பொங்கொலி நீர்க்கரை' நகரம் அல்ல.

கி.பி. 1450 ஆம் ஆண்டில் செண்பகப் பெருமாளின் படையெடுப்பைப் பற்றிக்கூறும் சந்தேஸ நூல்கள் யாழ்ப்பாண அரசர்களின் அரசிருக்கை இருந்த இடம் 'யாபாபட்டுன' என்றே கூறுகின்றன. அது முன்னர் 'யாழ்ப்பாணப் பட்டினம்' எனப்பட்ட இன்றைய யாழ்ப்பாணம் என பரணவிதான எடுத்துக்காட்டியிருந்தார் (Paranavitana, S. 1961: 174). கி.பி. 1450 இல் செண்பகப்பெருமாள் நடத்திய படையெடுப்பிற்குப் பின்னரே இரண்டாவது தலைநகரான நல்லூர் அமைக்கப்பட்டது என்பதை சுவாமி ஞானப்பிரகாசரும் எடுத்துக்கூறியிருந்தார் (ஞானப்பிரகாசர், 1928: பக். 106–107). இதிலிருந்து யாழ்ப்பாணப் பட்டினம் (யாபாபட்டுன) இருந்த இடத்தில் அமைந்திருந்த அரசிருக்கையே இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் 'சிங்கைநகர்' என்ற பெயரால் அழைக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவு. இதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. மாற்றுக்கருத்துக் கூறுபவர்கள் எல்லா இலக்கிய ஆதாரங்களையும் சரிவரப் படித்திருக்க மாட்டார்கள் என்றே தோன்றுகிறது. சமீபகாலங்களில் யாழ்ப்பாணக் கோட்டையில் நடைபெற்ற அகழ்வாய்வுகள் இது ஒரு புராதன துறைமுக நகரம் என்பதை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

இதன் பிரகாரம் ஆரியச்சக்கரவர்த்தி அரசர்கள் முதலில் 'சிங்கைநகர்' என அழைக்கப்பட்ட யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்தும், கி.பி. 1450 இன் பின்னர் நல்லூர் நகரிலிருந்தும் ஆட்சி புரிந்தார்கள் என்பதே

ஆதாரபூர்வமான கணிப்பாகும்.

### 2. நல்லூர்க்காலம் (1450 - 1619 வரை)

நல்லூர் இன்றைய யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியாக இருப்பதனால், யாழ்ப்பாண நகரின் வளர்ச்சியை வரலாற்று அடிப்படையில் புரிந்துகொள்வதற்கு, போர்த்துக்கேயருக்கு முற்பட்டகால நல்லூர் நகர வரலாற்றை அறிந்துகொள்ள வேண்டிய அவசியத்தை ஆசிரியர் வலியுறுத்தியுள்ளார். மத்தியகால 'யாழ்ப்பாண இராச்சியத்தின்' தலை நகரங்களுள் ஒன்று என்ற வகையில் நல்லூர் முக்கியத்துவம் பெறுகிறது.

ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசிருக்கை சிங்கைநகரில் இருந்த காலப்பகுதியிலேயே நல்லூர் அந்த அரசுக்குரிய மற்றொரு நகரமாக இருந்திருக்கலாம். பதின்மூன்றாம் நூற்றாண்டில் தமிழகத்திலிருந்து வந்த பாண்டியப் படையெடுப்பைத் தொடர்ந்தே யாழ்ப்பாணத்தில் ஆரியச்சக்கரவர்த்திகளின் அரச வம்சம் ஆரம்பமாகிறது. ஆரியச்சக்கரவர்த்தி என்ற பெயர் கொண்டவர்கள் பாண்டிய நாட்டு அரசில் உயர் பதவிகளில் இருந்திருக்கிறார்கள் என்பது பேராசிரியர் பத்மநாதனின் கலாநிதிப்பட்ட ஆய்வுரை தரும் தகவல் (Pathmana than, S. 1978: 173 – 179).

ஆரம்பத்தில் பாண்டியப் படையினர் இந்த நாட்டுக்கு வந்த காலத்தில் அப்பாண்டியப் படைகளின் இராணுவத்தளமாக நல்லூர் இருந்திருக்கிறது. அக்காலப்பகுதியில் தமிழகத்தில் துருக்கிய, விஜயநகரப் படையெடுப்புகளைத் தொடர்ந்து சமூக, பொருளாதார நிறுவனங்கள் சிதைவுற்று சீரழிந்த சமயத்தில், அப்போர் வீரர்களோடு வணிகர்கள், மாலுமிகள், கலைஞர்கள், பிராமணர்கள் என்போர் யாழ்ப்பாணத்திற்கு வந்து குடியேறியுள்ளார்கள். இதன் காரணமாக பலதரப்பட்ட கைவினைஞர்களும், பல வகையான கலைத்தொழிலாளர்களும் வட இலங்கையில் காணப்பட்டார்கள் (Pathmanathan, S. 1978: 194 – 195).

முதலாவது சிங்கையாரிய மன்னனின் புனிதப் பதவியேற்புப் (Consecration) பற்றி கைலாயமாலை தரும் விவரங்கள் சரியானதாக இருக்கலாம். சிங்கையாரிய மன்னனுக்கு முடிசூட்டும் அவனது முதல் மந்திரியான பாண்டி மழவன், பாண்டி நாட்டுப் படைத்தலைவர்களில் ஒருவன். அக்காலத்தில் நல்லூரிலிருந்த பிரசித்தி பெற்ற கைலாயநாதர் கோயில் முதலாவது சிங்கையாரிய மன்னனால் கட்டப்பட்டது என்ற தகவலையும் கைலாயமாலை தருகிறது. யாழ்ப்பாண அரசின் மிகப்பெரிய கோயிலான இந்த ஆலயம் போர்த்துக்கேயரால் முழுமையாக அழிக்கப்பட்டது. அதனுடைய அடித்தள அத்திவாரங்களின் கற்களும் நீக்கப்பட்டு வேறிடங்களின் கட்டுமானங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டதனால் இக்கோயிலின் கட்டடக்கலை அம்சங்களையோ, கட்டட அளவுகளையோ அறியமுடியாமல் இருக்கிறது.

நல்லூரின் அமைவிடம், அதன் நகர எல்லைகள், எல்லைக் கோயில்கள், பாதுகாப்பு அரண்கள், நகரத்தின் அமைப்பு, கோட்டை மதில், வீதிகள், அங்கிருந்த இரவுச் சந்தை என்பன விவரமாகக் கூறப்படுகிறது. நகரம் நான்கு காற்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அப்பகுதிகளிலிருந்த முக்கிய அம்சங்கள் கூறப்படுகின்றன.

நல்லூர் நகரின் வடகிழக்குப் பகுதியில் யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசனான சங்கிலி மன்னனின் பெயரைத்தாங்கிய 'சங்கிலித் தோப்பு' எனப்படும் நிலப்பகுதி காணப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த ஒரு நிலப்படத்தில் இந்நிலப்பகுதி 'பாண்டிய மாளிகை' எனக் குறிப்பிடப்பட்டிருப்பதாக ஆசிரியர் கூறுகிறார். யாழ்ப்பாணத்து அரசின் ஆரியச்சக்கரவர்த்திகள் பாண்டிய நாட்டைப் பூர்விகமாகக் கொண்டபடியினால் இப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

நல்லூரின் வடமேற்குக் காற்பகுதியில் பண்டார மாளிகை, பண்டாரக் குளம் என்ற பெயரைக் கொண்ட பகுதிகள் காணப்படுகின்றன. யாழ்ப்பாண அரசன் முதலாம் சங்கிலி மன்னனின் மகன் புவிராஜன் பண்டாரம் (1582–1591) போர்த்துக்கேயரின் இரண்டாவது படையெடுப்பின்போது அவர்களோடு போரிட்டு, கைது செய்யப்பட்டு, சிரச்சேதம் செய்யப்பட்டது இங்கே குறிப்பிடத்தக்கது.

இவற்றைத் தவிர நல்லூர்க்காலக் கந்தசாமி கோயிலின் அமைவிடம் தொடர்பான சிக்கல்கள், நல்லூர் நகர வீதிகள், மற்றும் நல்லூர்க்காலக் குடியிருப்புகளான வண்ணார்பண்ணை, அரியாலை, கொழும்புத்துறை, கரையூர் போன்ற முக்கியமான நிலப்பகுதிகள் மற்றும் நல்லூர்ப் பகுதிகளில் வாழ்ந்த அரசர், அந்தணர், வணிகர், வீரர் மற்றும் பலவகைப்பட்ட கைத்தொழில் புரிவோர் என்பன போன்ற விவரங்கள் விளக்கப்படங்களுடன் ஆழமாக ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன.

### 3. போர்த்துக்கேயர் காலம் (1619 - 1658)

நவீன யாழ்ப்பாணத்தின் நகர உருவாக்கம் போர்த்துக்கேயர் காலத்தில்தான் ஆரம்பமானது. 1619 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் முதலில் நல்லூர் பெரிய கோயிலில் (நல்லூர் கந்தசாமி கோயில்? கைலாயநாதர் கோயில்?) தங்களது தலைமையகத்தை அமைத்திருந்தனர். அவ்விடத்தின் பாதுகாப்பின்மையை உணர்ந்த போர்த்துக்கேய ஆட்சிச் சபையினரின் ஆலோசனைப்படி தளபதி பிலிப்தஒலிவேரா போர்த்துக்கேயரின் தலைமையகத்தை அங்கிருந்து பண்ணைத்துறைக்கு மாற்ற முடிவு செய்தான். ஒரு கோட்டை கட்டுவதற்கு தகுதியான இடம் பண்ணைத்துறை என முடிவு செய்யப்பட்டது. இது பற்றியும், கோட்டையின் அமைப்பு பற்றிய விவரங்களும் மிக விரிவாக, தகுந்த ஆதாரங்களுடன் இந்நூலில் கூறப்படுகிறது. 1658 ஆம் ஆண்டின் போர்த்துக்கேய நிலப்படத்தை மூலமாகக்கொண்டு, தனது விளக்க வரைபடங்களுடன், அன்றைய யாழ்ப்பாண நகரத்தின் தோற்றத்தை ஆசிரியர் விவரித்துள்ளார். போர்த்துக்கேயரின் யாழ்ப்பாண நகரம், கோட்டையை மையப்புள்ளியாகக் கொண்டு அமைக்கப்பட்டது. கோட்டை, நாற்பக்க வடிவில் அதன் தெற்கு மதில் கடல்நீரேரியை ஒட்டி அமைந்திருந்தது. கோட்டைக்குள் அரச நிர்வாகக் கட்டடங்கள், இராணுவ மற்றும் பாதுகாப்பு அமைப்புகள், புதுமை மாதா தேவாலயம் என்பன இருந்தன. இதைத்தவிர யாழ்ப்பாண நகரத்தை மூன்று பிரிவுகளாகப் பார்க்கலாம். கோட்டைக்குக் கிழக்குப் பக்கத்தில் அமைந்த போர்த்துக்கேயரின் குடியிருப்புப் பகுதி, கோட்டைக்கு மேற்கில் அமைந்த வெளிப்பகுதி,

கோட்டைக்கு வடக்கே முற்றவெளிக்கு அப்பால் அமைந்த சுதேச மக்களின் நகரப்பகுதி, அக்காலக் குடியிருப்புகளும், வீதிகளும், கட்டடங்களும் விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. இதுவரை எவருமே குறிப்பிடாத முக்கியமான பல தகவல்களைக் கொண்ட இப்பகுதியை ஆசிரியர் வெகு சிறப்பாக அமைத்திருக்கிறார்.

போர்த்துக்கேயரின் நிலப்படத்தில் கோட்டைக்கு நேர் வடக்கே ஐரோப்பியரல்லாதோரின் நகரம் எனக்குறித்துள்ள பகுதி இன்றைய பெரியகடைப் பகுதியில் அல்லது அதற்கு மிக அண்மையில் இருந்திருக்கிறது. தென்னிந்திய வணிகப் பிரிவினரதும், கைப்பணியாளர்களினதும் வாழ்விடங்களாகவும், தொழிலகங்களாகவும் இவ்விடம் இருந்திருக்கலாம். குறிப்பாகப் பண்ணைத்துறையில் இறங்கும் பொருட்களை விற்பனைக்காக பிற இடங்களுக்கு எடுத்துச்செல்லும் முன்னர் இவ்விடத்திலிருந்த சேமிப்பு மண்டபங்களில் வைக்கப்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன எனக் கூறப்பட்டிருக்கிறது.

## குடியேற்றவாதம்

ஆங்கிலத்தில் 'காலனித்துவம்' என்பது இன்னொரு தேசத்தின் மீது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அரசியல் அதிகாரக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தி, தங்கள் தேசமக்களை அங்கே குடியமர்த்தி, பொருளாதார ரீதியாக அவர்களின் இயற்கை வளங்களைச் சுரண்டி எடுத்துக்கொள்வதாகும் (Colonialism is the policy or practice of acquiring full or partial political control over another country, occupying it with settlers, and exploiting it economically). இக்கருத்தாக்கமே தமிழில் குடியேற்றவாதம் எனப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த போர்த்துக்கேயர் நமது வளங்களைச் சுரண்டியெடுத்தார்கள் என்பதைத் தவிர 'குடியேற்றவாதிகள்' என்ற தலைப்பு அவர்களுக்குப் பொருந்துமோ என்பது தெரியவில்லை. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த போர்த்துக்கேயரை அரசாங்க ஊழியர்கள், படையினர், மதகுருக்கள், வணிகர்கள், கைத்தெழிலாளர், அவர்களது குடும்பங்கள் ஆகிய வகைகளுக்குள் அடக்கிவிடலாம். அவர்கள் ஆட்சிபுரிந்த 39 ஆண்டுக்காலத்தில் தங்கள் சாதாரண தேசமக்களை இங்கே கொண்டுவந்து குடியேற்றினார்கள் எனக் கூறமுடியாது. சாதாரண போர்த்துக்கேய குடும்பங்களோ, அவர்களின் பிள்ளைகளோ, பெண்களோ, பாடசாலை செல்லும் சிறுவர்களோ இருந்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் ஏதுமில்லை.

## 4. ஒல்லாந்தர் காலம் (1658 - 1795)

இலங்கையில் கண்டியரசனின் வேண்டுகோளின்படி போர்த்துக்கேயரை விரட்டுவதற்காக வந்த ஒல்லாந்த டச்சுக்காரர், போர்த்துக்கேயரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இலங்கையின் கரையோரப் பகுதிகளை படிப்படியாகக் கைப்பற்றிக் கொண்டார்கள். மட்டக்களப்பு, காலி, நீர்கொழும்பு, கொழும்பு ஆகிய நகரங்களைக் கைப்பற்றிய பின்னர் இறுதியாக 16 மார்ச் 1658 இல் யாழ்ப்பாணக் கோட்டையை ரிஜ்குளொவ் வான் கோயன்ஸ் தலைமையில் முற்றுகையிட்டனர். கோட்டைக்குள்ளிருந்த போர்த்துக்கேய அதிகாரிகள் சரணடைய மறுத்தனர். இந்த முற்றுகை 99 நாட்கள் வரை நீடித்தது. கோட்டையைத் தகர்த்து போர்த்துக்கேயரை அடிபணியவைக்க அவர்களால் முடியவில்லை. இறுதியில் குடிநீர், உணவு, மருந்துகள் இன்றி அவர்கள் 24 ஜூன் 1658 அன்று சரணடைந்தார்கள் (De Queyroz, 1992: pp. 996 – 998).

ஆசிரியர் தரும் ஒல்லாந்தரின் புதிய கோட்டை அமைப்புப் பற்றிய தகவல்கள் மிகவும் சுவாரசியமாகவும், தகவல் விளக்கமாகவும், கற்பிப்பதாகவும் உள்ளன. அக்காலத்திற்குரிய தொழில்நுட்பங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒல்லாந்தரின் இந்த இலட்சியக் கோட்டை கிழக்கு நாடுகளில் உள்ள கோட்டைகளுள் பலம்மிக்கதாக உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது ஆய்வாளர்களின் கணிப்பு.

கோட்டைக்குள் அமைக்கப்பட்ட சிலுவை வடிவிலான தேவாலயம் தனித்துவமான கட்டட அமைப்பைக் கொண்டது. நடுவில் சதுரமான ஒரு மண்டபத்திலிருந்து நான்கு திசைகளிலும் நான்கு மண்டபங்கள் பிரிந்து சிலை வடிவில் சென்றன. இத்தேவாலயத்தின் தூண்கள், வளைவுகள், முக்கோண முகப்பு முகடுகள் ஆகியன இறக்குமதி செய்யப்பட்ட டச்சுக் கற்களினால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இலங்கையின் முதலாவது புரட்டஸ்தாந்து தேவாலயம் இதுவாகும்.

## நகர விரிவாக்கம்

1770 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு நிலப்படத்தின் உதவியோடு ஒல்லாந்தர் காலத்தைய யாழ்ப்பாண நகர விரிவாக்கம் கூறப்படுகிறது. ஒல்லாந்தரின் 137 ஆண்டுக்கால ஆட்சியில் யாழ்ப்பாண நகரம் பரப்பளவில் விரிவடைந்ததாகச் சொல்ல முடியாது என்பதைத் தகுந்த சான்றுகளோடு மயூரநாதன் எடுத்துரைக்கிறார். "போர்த்துக்கேயர் காலத்தைய கோட்டைக்கு மேற்கேயிருந்த பகுதியும், முன் வீதிக்கும் கோட்டைக்குமிடையில் இருந்த கட்டடங்களும் ஒல்லாந்தரால் அகற்றப்பட்டமையால், போர்த்துக்கேயரின் யாழ்ப்பாண நகரத்தைவிட ஒல்லாந்தர் நகரம் அளவில் சுருங்கிச் சிறிதானது என்றே கூறவேண்டும் என்கிறார் ஆசிரியர். ஆனால் இப்பகுதிக்குள் இருந்த வெற்று நிலங்களில் வீடுகளைக் கட்டியதால் மக்கள் செறிவு அந்த நகர எல்லைக்குள் அதிகரித்திருக்கும் எனக் கூறுகிறார். ஒல்லாந்தர் நகரத்திலோ, அதற்கு அருகாமையிலோ ஐரோப்பியர் அல்லாதோர் குடியேறுவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. மேலும், யாழ்ப்பாண நகரத்தில் பெரிய அளவில் வணிகம் வளர்ச்சியடைவதற்கு வழியிருக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

ஒல்லாந்தர்காலக் கட்டடங்களை விவரிக்கும் போது கோட்டைக்கு வெளியே இருந்த நீதிமன்றம், ஆதரவற்ற பிள்ளைகளுக்கான இல்லம், கட்டளைத் தளபதியின வீடு, பாடசாலைகள், வணிக நிறுவனங்கள், நீண்ட மதில்களுடன் கூடிய ஐரோப்பியர்களுக்கான மயானம் என்பவை பதிவாகியிருக்கின்றன. இன்றைய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இருக்கும் இடத்தில் கட்டடங்கள் இருப்பதை ஒல்லாந்தர்கால நிலப்படங்கள் காட்டுகின்றன. இன்றைய வேம்படி வீதிக்கு வடக்கே வெஸ்லியன் மிசன் இல்லம் இருந்த இடத்தில் கட்டம் இருந்ததை 1787 இல் வரையப்பட்ட நிலப்படம் காட்டுவதை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாண நகருக்குள் ஒன்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இருந்திருக்கின்றன. "அரசின் மிக உயர்ந்த பதவியை

வகிப்பதற்கு மாணவர்களை இத்தீவிலேயே பயிற்றுவிக்க முடிந்தது என்பது இலங்கையில் ஒல்லாந்தரின் கீழான கல்வி முறையின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது என இ.எச். வன்டவால் என்ற ஆய்வாளர் குறிப்பிட்டிருக்கிறார்.

## நகரச் சூழல்

ஒல்லாந்தர் ஆட்சிகால ஆரம்பத்திலிருந்தே நகரத்திற்கு வெளியே இருந்த நிலங்களை வேளாண்மைக்காகவும், குடியிருப்புத் தேவைக்காகவும் ஒல்லாந்த இனத்தவருக்கு வழங்கியதை அக்கால அறிக்கைகளிருந்தும், நிலப்படங்களிலிருந்தும் அறிந்துகொள்ள முடிகிறது. இப்பகுதியில் உருவான குடியிருப்புகள் அரச உதவியுடனும், சில அவ்வாறு இல்லாமலும் வளர்ச்சியடைந்துள்ளன. மணிக்கூட்டு வீதியை அண்டி நெசவாளர்களான 'சேணியர்' குடியேற்றம் குறிக்கப்பட்டிருக்கிறது ஆகிய தகவல்கள் தரப்படுகின்றன.

அக்கால நிலப்படம் ஒன்றில் சின்னக்கடை, பெரியகடை, வண்ணார்பண்ணைச் சிவன் கோயில், 'ரோமன் தேவாலயம்' எனப் பெயர் குறித்த மூன்று கட்டடங்கள் என்பன காணப்படுகின்றன. இதிலிருந்து ஒல்லாந்தர் காலத்தில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட சில இந்துக் கோயில்கள் திரும்பக் கட்டப்பட்டிருக்கலாம். யாழ்ப்பாண மக்கள் பாரம்பரியமாக விவசாயம், மீன்பிடித்தொழில் ஆகிய அடிப்படைப் பொருளாதார நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டிருந்தார்கள். வணிக முயற்சிகள் குறிப்பாக முஸ்லிம்கள், செட்டிமார் மற்றும் தென்னிந்திய மலையாளத்தினர் வசமாக இருந்தன. இவர்களுள் செட்டிமாரும், முஸ்லிம்களும் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாகக் குடியேறியிருந்தனர்.

### நல்லூர் செமினரி, தேவாலயம்

1692 தொடக்கம் 1722 வரையான காலப்பகுதியில் உள்நாட்டு மத போதகர்களை உருவாக்குவதற்காக ஒரு செமினரியை நல்லூரில் அமைத்திருந்தார்கள். ஒரு வரைபடத்தில் தேவாலயம், போதகரின் வீடு, 24 மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான வதிவிடப் பாடசாலை, ஒல்லாந்த ஆசிரியரின் வீடு என்பன குறிக்கப்பட்டிருப்பதை நூலாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

செமினரியின் வரைபடத்தில் பகரவடிவில் காணப்படும் கேணி இன்றைய 'யமுனா ஏரி'. வரைபடத்தில் இக்கேணியை முப்புறமும் சூழ்ந்த ஒரு மண்டபம் காட்டப்படுகிறது. இக்கேணியை 'மரங்களோடு கூடிய வெட்டப்பட்ட குளம்' என்றும், நடுவில் அமைந்த மண்டபத்தை 'கேட்போர் கூடம் அல்லது மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கான இடம்' எனவும் குறிப்பிடுகிறது. இந்த விவரங்களைப் பார்க்கும்போது 'யமுனா ஏரி' ஒல்லாந்தரால் வெட்டப்பட்டதாக எண்ணத் தோன்றுகிறது. 'யமுனா ஏரி' என்ற பெயர், இது பண்டைய நல்லூர்க் கோயிலின் கேணியாக இருக்கலாம் என்ற யூகத்தில், நமது சரித்திராசிரியர்கள் கொடுத்த பெயராகும்.

ஒல்லாந்தப் பாதிரியார் போல்டேயஸ் எழுதிய நூலில் குறிப்பிடப்படும் ஒல்லாந்தரின் நல்லூர்க் கோவிற்பற்றுத் தேவாலயத்தின் படம் மண்ணினால் கட்டப்பட்டு, ஓலை வேய்ந்த கூரைகளைக் கொண்டிருக்கிறது. இது தற்போதைய புனித யாக்கோபு தேவாலயம் இருக்கும் இடத்தில் அமைந்திருந்தது என்ற கருத்தே இன்றைய வரலாற்றாய்வாளர்களிடம் வலுவாக இருந்தாலும், இதை உறுதி செய்வதற்கு மேலும் சான்றுகள் தேவை என ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்.

## சங்கிலித் தோப்பு

சங்கிலித் தோப்பு வளைவு என்பது இன்றைய பருத்தித்துறை வீதியை அண்டி, அதன் கிழக்குப்பக்கத்தில் அமைந்துள்ள சங்கிலித் தோப்பின் நுழைவாயில் முகப்பு அகும்.

ஒரு காலத்தில் இது யாழ்ப்பாண அரசர்களின் மாளிகைக்கான வாசல் எனக் கருதப்பட்டிருந்தாலும், இருபதாம் நூற்றாண்டில் இது ஒல்லாந்தர்காலக் கட்டடம் என்ற கருத்து உருவாகிவிட்டது. இது ஒல்லாந்தர் ஆட்சியில் தளபதி அந்தோனியோ மென்ஸிஸ் என்பவனின் நிர்வாகத்தில் முதன் மந்திரியாகவிருந்து, பின்னர் அரசுக்கு எதிராகச் சதி செய்து மரணதண்டனை பெற்ற பூதத்தம்பி முதலியாரின் மாளிகை நுழைவாசல் என்ற கருத்தும் உண்டு. இப்பகுதியிலுள்ள குளத்துக்கு அருகில் ஒரு கட்டடத்தின் அத்திவார அழிபாடு காணப்படுகிறது. இது நுழைவாயிலுக்கு நேர் எதிரே காணப்படுவதால், இக்கட்டடம் அமைந்த வளவின் சுற்றுமதிலில் இருந்த நுழைவாயில் அமைப்பே இன்று எஞ்சியுள்ள சங்கிலித் தோப்பு நுழைவாயில் என ஊகிக்கப்படுகிறது.

## மந்திரி மனை

சங்கிலித்தோப்பு வளைவுக்கு அண்மையில், பருத்தித்துறை வீதிக்கு மேற்கே 'மந்திரி மனை' எனப்படும் பழைய கட்டடமொன்று உள்ளது. இதன் முன்புறத்தில் உள்ள கலப்புக் கட்டடக்கலை முகப்பு இலங்கையில் வேறெங்கும் காணமுடியாத தனித்துவமான கட்டடக் கலை அமைப்பாகும்.

### 5. பிரித்தானியர் காலம் (1795 - 1948)

பிரித்தானியர்களின் நீண்டகால ஆட்சி, கால அடிப்படையில் நான்கு பிரிவுகளாகக் கூறப்படுகிறது. அதன் முக்கியமான அம்சங்கள் மட்டும் இங்கே மதிப்புரை செய்யப்படுகின்றன. போர்த்துக்கேயர் காலத்திலும், ஒல்லாந்தர் காலத்திலும் அரச நிர்வாகக் கட்டடங்களும், அரச ஆளுநர்களின் கட்டடங்களும் கோட்டைக்குள்ளே இருந்தன. ஆனால் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் முக்கியமான அரச நிர்வாகக் கட்டடங்கள் கோட்டைக்கு வெளியிலேயே அமைக்கப்பட்டன. யாழ்ப்பாணக் கோட்டை இராணுவத்தினரின் தலைமை நிலையமாக விளங்கியது.

கோட்டைக்குக் கிழக்கே அரைமைல் தொலைவில் இருந்த புறக்கோட்டையில் ஐரோப்பியர்களும், உள்ளூர் மக்களுடனான தொடர்பினால் பிறந்த சந்ததியினரும் வாழ்ந்தார்கள். ஒல்லாந்தர் காலத்தைய நகரப்பகுதி அதிக மாற்றமின்றி தொடர்ந்திருந்தது.

1803 ஜனவரி முதல் அரச நிர்வாக அலுவலகங்கள் மக்கள் சென்றடையக்கூடிய வகையில் கச்சேரி என்ற பெயரில், சுண்டிக்குழியில், பழைய பூங்கா இருக்கும் பகுதியில் அமைக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்புறத்தில் அரசாங்க அதிபரின் வசிப்பிடமும் உருவாக்கப்பட்டது. இந்நிலத்தை தனது சொந்தப் பணத்தில் வாங்கிய அரசாங்க அதிபர் பேர்சிவல் டைக் அதன் ஒரு பகுதியை தனது வசிப்பிடமாக்கினார். மிகுதி நிலத்தை பழைய பூங்காவாக, இராணி விக்ரோறியாவின் அன்பளிப்பாக, யாழ்ப்பாண மக்களுக்கு வழங்கினார்.

## மாகாணத் தலைநகரம்

பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் யாழ்ப்பாண நகரம் ஒரு மாகாணத் தலைநகராக வளர்ச்சியடைந்தது. புறக்கோட்டைப் பகுதி முக்கியமடைந்து கோட்டைப் பகுதியின் முக்கியத்துவம் பின்னடைந்தது. 1800 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பிரித்தானிய வீரர்களையும், அரச நிர்வாகப் பணியாளர்களையும் தவிர ஆயிரக்கணக்கான உள்ளூர் மக்களும் நகரில் குடியேறியிருந்தார்கள்.

கேர்ணல் பேட்டன் பார்பட, பேர்சிவல் அக்லண்ட் டைக், ருவைன்ஹாம் ஆகிய பிரித்தானிய நிர்வாகிகள் மேற்கொண்ட முற்போக்கு நடவடிக்கைகளால் அரசியல், சமுதாய, நீதித் துறைகளில் அபார வளர்ச்சி காணப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உருவான புதிய பாடசாலைகள், புதிய தேவாலயங்கள், புதிய அரச பணித்துறைகள் என்பன நகரத்தின் தோற்றத்தை நவீனமயப்படுத்தின.

## கல்வி வளர்ச்சி

1816 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கோட்டைக்குச் சமீபமாக யாழ்ப்பாண முற்றவெளியிலிருந்த ஒல்லாந்தர்கால அனாதை இல்லக் கட்டடத்தையும், லூதரன் சிற்றாலயக் கட்டடத்தையும் விலைக்கு வாங்கிய வெஸ்லியன் மிஷன் பாதிரிமார், 1817 இல் வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்தார்கள். இது 1834 இல் யாழ்ப்பாண மத்திய பாடசாலை எனப் பெயர் மாற்றமடைந்து, இன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியாக விளங்குகிறது. யாழ்ப்பாண வெஸ்லியன் மிஷன் பாதிரிமார், யாழ்ப்பாண மத்திய பாடசாலையை ஆரம்பித்த 1834 ஆம் ஆண்டில், பெண்களுக்கான வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையையும் ஆரம்பித்து வைத்தார்கள்.

1818 ஆம் ஆண்டில் இங்கிலாந்திலிருந்து யாழ்ப்பாணம் வந்த யோசேப் நைற் என்ற பிரித்தானிய அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த பாதிரியார், 1823 இல், முதலில் நல்லூரில், 'நல்லூர் ஆங்கிலக் கல்விக்கூடம்' என்ற பெயரில் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். 1845 ஆம் ஆண்டில் இப்பாடசாலை சுண்டிக்குழிக்கு 'சுண்டிக்குழிக் கல்விக்கூடம்' என்ற பெயரில் மாற்றப்பட்டு, 1891 இல் பரியோவான் கல்லூரி எனப் பெயர் மாற்றம் பெற்றது. இதே நிறுவனத்தினரால் 1896 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதி பெண்களுக்கான ஆங்கிலக் கல்லூரி 'சுண்டிக்குழிப் பெண்கள் கல்லூரி' எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

1868 ஆம் ஆண்டின் மோர்கன் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்படி கிறிஸ்தவர் அல்லாதோரின் ஆங்கிலப் பாடசாலைகளுக்கும் அரசாங்க உதவி பெறும் வாய்ப்புக் கிடைத்தது. இதைத் தொடர்ந்து இந்து ஆங்கிலப் பாடசாலைகள் யாழ்ப்பாணத்தில் உருவாயின. வண்ணார்பண்ணை சைவ ஆங்கிலப் பாடசாலை (1869), கொழும்புத்துறை இந்துக் கல்லூரி (1874), யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (1890) என்பன குறிப்பிடத்தக்கவை.

## யாழ். வைத்தியசாலை

1850 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண ஆபத்துதவிச் சங்கம் இன்றைய மணிக்கூட்டுக் கோபுர வீதிக்கருகாமையில் ஒரு வைத்தியசாலையை ஆரம்பித்து வைத்தது. 1857 – 58 ஆம் ஆண்டுகளில் அரசாங்க உதவியுடன் விரிவாக்க வேலைகள் இடம்பெற்று, பெண் நோயாளர்களுக்கான ஒரு பிரிவும் அமைக்கப்பட்டது. 1906 ஆம் ஆண்டில் இந்த வைத்தியசாலை இலங்கை அரசினால் பெறப்பட்டு 1907 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாண குடிசார் மருத்துவ வைத்தியசாலையாக ஆக்கப்பட்டது.

## இந்துக் கோவில்கள்

போர்த்துக்கேயரால் முன்னர் அழிக்கப்பட்ட இந்துக் கோயில்களைத் திரும்பக் கட்டுவதற்கான அனுமதியை பிரித்தானிய அரசினர் வழங்கியிருந்தார்கள். இதைத் தொடர்ந்து பெரிதும், சிறிதுமான பல இந்துக் கோயில்கள் யாழ்ப்பாணக் கிராமங்களில் உருவாகின.

யாழ்ப்பாண நகரில் மீளுருவாக்கம் பெற்ற கோயில்களில் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயில் குறிப்பிடத்தக்கது. ஒல்லாந்தர் காலத்திலேயே இது உருவாகியிருந்த போதிலும், பிரித்தானியர் காலத்தில் இக்கோயில் வண்ணார்பண்ணைப் பகுதியின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தது. அக்காலத்தில் ஒல்லாந்த அதிகாரிகள் மட்டத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த வைத்திலிங்கம் செட்டியார் என்பவர் தனது தனிப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி இக்கோயிலைக் கட்டுவித்தார்.

ஒல்லாந்தர் காலத்தில் நல்லூர்க் கந்தசாமி கோயிலை மீளக் கட்டிய போது அது ஒரு சிறிய கோயிலாகவே இருந்தது. பின்னர் மேலும் நிலம் வாங்கி, கோவில் பெரிதாக விரிவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் கோயில் செங்கல்லிலாலான கருவறையையும், ஓரிரு மண்டபங்களையும் கொண்டதாக இருந்திருக்கக்கூடும். பிரித்தானியர் காலத்திலேயே இக்கோயில் பெரிதாகக் கட்டப்பட்டது.

யாழ் ஸ்ரீ வெங்கடேச வரதராசப் பெருமாள் கோயில் வண்ணார்பண்ணையின் தென்கிழக்குப் பகுதியில் மணிக்கூட்டுக் கோபுர வீதியில் அமைந்துள்ளது. மக்கள் இதைப் பொதுவாக 'பெருமாள் கோயில்' என்றே அழைப்பர். இக்கோயிலின் விரிவாக்கம் 1835, 1878 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றிருக்கிறது. மார்கழி மாதத்தில் சேமக்கலம் அடித்து திருப்பாவை பாடிய வண்ணம் நடைபெறும் பஜனை ஊர்வலம் இன்றுவரை நடைபெற்று வருகிறது.

யாழ்ப்பாணம் கோட்டை மதிலுக்கு அருகில் முற்றவெளியில் சிறுதெய்வ வழிபாட்டுக்கான ஒரு கோயில் முற்காலத்திலேயே இருந்ததாக அறியமுடிகிறது. இதுவே இன்றைய முனியப்பர் கோயிலாக இருக்கலாம் என ஆசிரியர் கருதுகிறார். 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியப் படையினர் பழங்கள், பூக்கள், தானியங்களை வழங்கி இத்தெய்வத்தை வழிபட்டதாக அறிய முடிகிறது.

## கத்தோலிக்க வழிபாட்டிடங்கள்

ஒல்லாந்தர் காலத்தின் இறுதிப்பகுதியில் உருவான சில கத்தோலிக்கத் தேவாலயங்களைத் தவிர, பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் புதிய தேவாலயங்கள் எதுவும் அமைக்கப்படவில்லை.

யாழ்ப்பாணப் பேராலயம் 1780களில் மதம் சார்ந்த கெடுபிடிகள் தளர்ந்த பின்னர் இன்றைய யாழ்ப்பாணப் பேராலய வளவுக்குள் ஆரம்பமானதாக அறிய முடிகிறது. 1789இல் முறையான தேவாலயக் கட்டட வேலைகள்

ஆரம்பமாகி 1794ஆம் ஆண்டில் கட்டடம் நிறைவு பெற்றது. அக்காலத்தில் இதற்கு புனித மரியாள் தேவாலயம் என்ற பெயர் வழங்கப்பட்டிருந்தது. அடைக்கல மாதா தேவாலயம் 1802 ஆம் ஆண்டில் ஆரம்பமானதாக அறியப்படுகிறது. 1907 ஆம் ஆண்டில் அந்த இடத்தில் மிகப் பெரியதான புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டியதாகக் குறிப்பிடப்படுகிறது. 1796 – 1833 காலப்பகுதியில் கட்டடத்தில் மேம்பாடுகள் இடம்பெற்றன. 19 ஆம் நூற்றாண்டு முழுவதும் இத்தேவாலயக் கட்டடம் பயன்பாட்டில் இருந்தது.

புனித யாகப்பர் தேவாலயம் ஐரோப்பியர் நகரத்திற்கும், குருநகருக்கும் இடையே அமைந்துள்ளது. இங்கே ஒரு கத்தோலிக்கக் குருவானவரை அடக்கம் செய்த 1783 ஆம் ஆண்டிற்குரிய ஒரு கல்வெட்டு காணப்படுவதனால் அதற்கு முன்னரே இத்தேவாலயம் இருந்திருக்கும் எனலாம். தற்போதைய தேவாலயத்திற்கு 1861 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டது.

புனித யாகப்பர் தேவாலயத்திற்கு 100 மீட்டர் அப்பால் தென்கிழக்கில் வங்கசாலை வீதியில் அமைந்த இத்தேவாலயத்தின் தோற்றம் குறித்த தகவல்கள் இல்லை. இந்தத் தேவாலயம் யாழ்ப்பாண இராச்சியகாலத்தில் முதன்முதலாக கத்தோலிக்க சமயத்தைத் தழுவிய கடையர் சமூகத்தவருக்கு உரியது.

## புரட்டஸ்தாந்து நிறுவனங்களின் தேவாலயங்கள்

16 ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்கக் கொள்கைகளை மறுத்து, கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து பிரிந்து சென்றதனால் இவர்கள் புரட்டஸ்தாந்தர் (Protestants) என அழைக்கப்பட்டனர். பிரித்தானியர் காலத்தில் யாழ்ப்பாணத்தற்கு வந்த வெஸ்லியன் மிசனரிகள் தமது தலைமையகத்தை முதலில் நல்லூரிலும் பின்னர் யாழ்ப்பாண நகரிலும் அமைத்துக்கொண்டனர்.

சுண்டிக்குழியில் போர்த்துக்கேயர் காலத்திலேயே ஒரு தேவாலயம் இருந்ததை போல்டேயஸ் பாதிரியார் குறிப்பிட்டிருக்கிறார். போர்த்துக்கேயரின் தேவாலயங்களை அதே நிலையிலோ அல்லது திருத்தியோ ஒல்லாந்தரும் பயன்படுத்தியபடியினால், ஒல்லாந்தரின் சுண்டிக்குழித் தேவாலயம் அதே இடத்தில் இருந்தது எனக் கொள்ளலாம். 1801 ஆம் ஆண்டளவில் இக்கட்டடம் சிதிலமடைந்து போய்விட்டதாகத் தெரிகிறது.

## இஸ்லாம் மதப் பள்ளிவாசல்கள்

ஒல்லாந்தர்கால இறுதிப்பகுதியில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்ந்த சோனகத் தெருப் பகுதியில் மூன்று பள்ளிவாசல்களை அமைத்திருந்தார்கள். முதலாம் குறுக்குத் தெருவிலிருந்த பள்ளிவாசலும் அதே காலப்பகுதியில் உருவாக்கப்பட்டது. பிரித்தானியர் காலத்தில் எல்லா மதத்தினருக்கும் வழிபாட்டு உரிமைகள் சட்டரீதியாக வழங்கப்பட்ட பின்னர் இப்பள்ளிவாசல் கட்டடங்கள் விரிவாக்கப்பட்டன. சோனகத் தெருவில் முஸ்லிம் கல்லூரி வீதி – காதி அபூபக்கர் வீதி சந்தியருகிலிருந்த முகியித்தீன் தைக்கா, பிரித்தானியர் காலத்தில் புதிதாக அமைக்கப்பட்டது.

## இந்துமத நிறுவனங்கள்

19 ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் யாழ்ப்பாண நகரின் இந்துப் பகுதியாக வளர்ச்சியடைந்தது வண்ணார்பண்ணையும், அதை அண்டிய பகுதிகளுமாகும். இப்பகுதியில் அமைந்திருந்த வண்ணார்பண்ணைச் சிவன் கோயில் இந்துமத வளர்ச்சியின் ஒரு மையமாக அமைந்தது எனலாம். இலங்கையின் சைவசமய மறுமலர்ச்சியின் மூலவராகக் கருதப்படும் ஆறுமுக நாவலர் தனது பிரசார மையமாக இச்சிவன் கோயிலையே ஆக்கிக்கொண்டார்.

கிறிஸ்தவ மதங்களைப் போலன்றி, இந்துமத நடவடிக்கைகள் நிறுவனமயமானதாக இருக்கவில்லை. வழிபாட்டிடங்கள், கோவில்கள் என்பன தனியாருக்கோ அல்லது சிறு சாதிக் குழுக்களுக்கோ உரியனவாக இருந்தன. இதன் காரணமாக கிறிஸ்தவ நிறுவனங்களில் இருந்தது போல், மதச் செயற்பாடுகளையும் கல்வியையும் ஒருங்கிணைந்த வகையில் இந்துக்களால் முன்னெடுத்துச்செல்ல முடியவில்லை. இக்காலப் பகுதியில் இந்துப் பிள்ளைகளும் அவர்களது மதச் சூழலில் கல்வி கற்பதை நோக்கமாகக்கொண்டு பாடசாலைகளை நிறுவும் எண்ணம் உருவானபோது, சமயத்தின் முழுமையான வளங்களை இதற்காகப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்புக் குறைவாகவே இருந்தது.

சைவப் பிள்ளைகளின் கல்வி தொடர்பாக தனது எண்ணங்களைச் செயற்படுத்த ஆறுமுக நாவலர் முதலில் வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்தார். 1848 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இப்பாடசாலையில் சைவச் சூழலில் கல்வி கற்பிப்பதுடன் பாடங்கள் தமிழ்மொழி மூலமாகவே கற்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கல்வித் தேவைகளுக்கும், தனது பிரசாரத் தேவைகளுக்குமான அச்சுக்கூடம் ஒன்றை ஆறுமுக நாவலர் வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலுக்கு அண்மையில் நிறுவிக்கொண்டார்.

## வணிகம்

யாழ்ப்பாண நகர வணிகத்தில் வண்ணார்பண்ணை வணிகப்பகுதி முக்கிய இடம் வகித்ததாக அறிகிறோம். வண்ணார்பண்ணைச் சந்தைப் பகுதியில் பருத்தி நெசவாளர், செக்கில் எண்ணெய் வடித்து விற்பவர்கள், பொற்கொல்லர்கள் மற்றும் மீன், உள்ளி, மிளகாய், புகையிலை, மஞ்சள், கிழங்கு வகைகள், அரிசி, பிற தானியங்கள், பருப்பு வகைகள், பழங்கள், இலைகள், காய்கறிகள் ஆகியன சந்தையில் குவிந்திருந்தன என்பதை அறிய முடிகிறது.

### பெரியகடைச் சந்தை

போர்த்துக்கேயர் காலத்திலேயே காங்கேசன்துறை வீதியை அண்டி ஒரு சந்தை இருந்திருக்கிறது. 1770 ஆம் ஆண்டின் ஒல்லாந்தர்கால வரைபடங்களிலும் இப்பெரியகடை இருந்ததை ஆர்.எல். புரோகியர் கூறுவதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். பிரித்தானியர் காலத்தில் இரண்டு பெரிய சொக்கட்டான் வடிவக் கட்டடங்களையும், இக்கட்டடங்கள் பெரிய தூண்களின் மீது தாங்கப்பட்ட மரத்தாலான கூரைச் சட்டங்களையும், ஓட்டுக் கூரைகளையும் கொண்டிருந்ததாகக்

கூறப்படுகிறது. ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக பெரும்பாலும் மரபு வழியான உற்பத்திப் பொருட்களை விற்கும் இடமாகவே இச்சந்தை விளங்கியது. மேற்குறிப்பிட்ட வணிகப் பொருட்களோடு பனம் பொருட்களை விற்கும் கடைகளும் இங்கே இருந்தன.

### முதல் வங்கிக் கட்டடம்

யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த முதலாவது வங்கியான 'ஓரியென்டல் பாங்க் கார்ப்பரேசனின்' யாழ்ப்பாணக்கிளை, 1864 இல் ஐரோப்பியர் நகரப் பகுதியில், நகரத்தின் பிரதானவீதி – மூன்றாம் குறுக்குத் தெருச் சந்தியில் இருந்த ஒரு வீட்டில் ஆரம்பிக்கப்பட்டு, அது வெற்றிகரமாக நடைபெற்றதால், பின்னர் இரண்டாம் குறுக்குத் தெரு – கடற்கரை வீதிச் சந்தியில் ஓர் இரண்டு மாடிக் கட்டடத்தில் அமைக்கப்பட்டது.

### தபால் நிலையம்

1882 இல் இந்த வங்கி முறிந்து போன பின்னர், 1899 இல் இக்கட்டடத்தை அரசாங்கம் வாங்கி, அதில் யாழ்ப்பாணத் தபால் நிலையத்தை அமைத்தது. பிற்காலத்தில் முற்றவெளிக்கு எதிரே புதிய தபால் நிலையத்தைக் கட்டும்வரை, யாழ்ப்பாணத் தபால் நிலையம் பழைய வங்கிக் கட்டடத்திலேயே நடைபெற்று வந்திருக்கிறது.

### உள்ளூராட்சிச் சபை

யாழ்ப்பாண நகருக்கான ஒரு மாநகரசபையை நிறுவும் வாய்ப்புகள் 1860களில் இருந்தும் அது செயற்படுத்தப்படவில்லை. 'சுகாதாரத்துக்கும் மேம்பாட்டுக்குமான உள்ளூர்ச்சபை' என்ற அமைப்பு 1906 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஆறு உறுப்பினர்களைக் கொண்ட இச்சபையின் தலைவராக அரசாங்க அதிபர் செயற்பட்டார். ஆரம்பத்தில் கச்சேரி நிர்வாகத்தின் பொறுப்பிலிருந்த சுகாதாரத்தைப் பேணுதலும் மேம்படுத்தலும்; மாவட்ட வீதிக்குழுவின் பொறுப்பிலிருந்த வீதிகள், வடிகால்கள், தெரு விளக்குகளை நிறுவிப் பேணுதல் ஆகிய பணிகள் இச்சபையின் பொறுப்பிற்கு வந்தன. பலதரப்பட்ட வரிகளையும் இவர்கள் அறவிட்டார்கள்.

1923 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து யாழ். நகரம் உள்ளூர் ஆட்சி நகரப் பகுதிச் சபையாக (Urban District Council) உயர்ந்தது. இச்சபையில் தேர்தல் மூலம் தெரிவான 8 உறுப்பினர்களும், 4 நியமன உறுப்பினர்களும் இருந்தார்கள். இவர்களுடன் அரசாங்க அதிபரும் சபையின் உறுப்பினராக இருந்தார். ஜனவரி 1940 ஆம் ஆண்டில் இச்சபை 12 அங்கத்தவர்களைக் கொண்டு உயர்வு பெற்றது. இச்சபையின் இருப்புக்காலத்தில் நீர் வழங்கல், வடிகால், கழிவகற்றல், மின்சாரம், தொலைத்தொடர்பு, போக்குவரத்து வசதி ஆகியவற்றை நிர்வகிப்பதில் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

### போக்குவரத்து - தொடர்வண்டிச் சேவை

ஆனையிறவுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான தொடர்வண்டிப் பாதை வழித்தடம், ஆனையிறவுக்கும் சாவகச்சேரிக்கும் இடையிலான வழித்தடம் என்பன குறித்த நீண்ட வாதப்பிரதிவாதங்களுக்குப் பின்னர், 1902 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் புகையிரத நிலையம் நிறுவப்பட்டது. முதலாவது புகையிரத வண்டி 1905 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. யாழ்ப்பாண நகரில் அமைத்த தொடர்வண்டி நிலையம் ஒரு மேடை மட்டும் கொண்டு சிறியதாக இருந்தது. இக்காலத்தில் இச்சேவையைப் பயன்படுத்திய மக்களின் எண்ணிக்கை பல மடங்காக உயர்ந்து, கூடிய வருமானத்தைக் கொடுத்திருந்த போதிலும் 1930 ஆம் ஆண்டுவரை வசதிகள் ஏதும் மேம்படுத்தப்படவில்லை.

### மோட்டார் வண்டிகளும் யாழ்ப்பாண வீதிகளும்

யாழ்ப்பாணத்திற்கு எந்த ஆண்டில் முதலாவது மோட்டார் வண்டி வந்தது என்பது தெரியவில்லை. 1920களில் ஒஸ்ரின், போஃர்ட், மொரிஸ் மைனர் ஆகிய அக்காலத்தைய தரமான வண்டிகள் (Vintage cars) யாழ்ப்பாணத்தை வந்தடைந்துவிட்டன. 1921 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாண பொது வேலைகள் திணைக்களத்தின் பராமரிப்பிலிருந்த பெரும்பாலான வீதிகள் மோட்டார் வண்டிப் போக்குவரத்திற்கு பொருத்தமானவையாகத் தரம் உயர்த்தப்பட்டன. 1926 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண நகரத்திலிருந்து காங்கேசன்துறை, பருத்தித்துறை, பலாலி ஆகிய இடங்களுக்குச் செல்லும் முக்கிய வீதிகள் பாரவூர்திகள் செல்வதற்கு ஏற்ற வகையில் மேம்படுத்தப்பட்டன.

### பேருந்துச் சேவை - பேருந்து நிலையம்

1923 – 1926 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் தனியார் இயக்கிய பேருந்துகளும், மோட்டார் வண்டிகளும் யாழ்ப்பாணத்தில் பொதுப் போக்குவரத்துச் சேவைகளை வழங்கியது பற்றித் தகவல்கள் இருப்பதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். தொடர்ந்து பொதுப் பேருந்துச் சேவைகள் அறிமுகமாயின. 1928 ஆம் ஆண்டின் நிலப்படம் பெரியகடைக்கு அருகே பேருந்து நிலையத்தைக் குறித்துக் காட்டுவதனால், அதற்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் பேருந்துகள் புழக்கத்திற்கு வந்துவிட்டன எனக் கொள்ளலாம்.

### திரைப்பட அரங்குகள்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாண நகரத்தில் பல திரைப்பட அரங்குகள் தோன்றிவிட்டன. ரோயல் தியேட்டர், மகேந்திரா ரோக்கீஸ், ரீகல் தியேட்டர் என்பன ஆரம்பகாலத் திரையரங்குகளாகும்.

### பூங்காக்கள்

1943 ஆம் ஆண்டில் வைத்தியர் சுப்பிரமணியம் முற்றவெளிக்கு அண்மையில் ஒரு நிலத்தை வாங்கி, அதை ஒரு பொதுமக்கள் பூங்காவாக உருவாக்கி அதன் நிர்வாகப் பொறுப்பை யாழ்ப்பாண நகரசபையிடம் கையளித்தார்.

### யாழ்ப்பாண வைத்தியசாலை விரிவாக்கம்

1907 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாண வைத்தியசாலை, அரசினரால் குடிசார் மருத்துவ வைத்தியசாலையாக (Civil Hospital) ஆக்கப்பட்டது என்பதை ஏற்கனவே பார்த்தோம். இவ்வைத்தியசாலையை அரசாங்கம் கையேற்றபோது இருந்த கட்டடங்கள், இரு முன்னாள் அரசாங்க அதிபர்களின் நினைவாக பேர்சிவல் டைக், சேர் வில்லியம் துவைனம் ஆகியவர்களது பெயர்களைத் தாங்கியிருந்தன. 1915 ஆம் ஆண்டளவில் பல புதிய கட்டடங்களும், 1929 ஆம் ஆண்டில் இரு புதிய நோயாளர் விடுதிகளும் அமைக்கப்பட்டன. 1928 – 1948 ஆம் ஆண்டுக்

காலப்பகுதிகளில் வைத்தியசாலை, மணிக்கூட்டுக் கோபுர வீதியின் கிழக்கிலும், மேற்கிலும் கட்டடங்களைக் கொண்டிருந்தது. இதன் காரணமாக மணிக்கூட்டுக் கோபுர வீதி வைத்தியசாலையினூடாகச் செல்வது தடைசெய்யப்பட்டது.

### யாழ்ப்பாண அருங்காட்சியகம்

யாழ்ப்பாண அருங்காட்சியகம் வடமாகாண அரசாங்க அதிபராகப் பணியாற்றிய சேர். வில்லியம் துவைனம் அவரது 91 ஆவது பிறந்தநாளில் 'துவைனம் நினைவு அருங்காட்சியகம்' என ஆரம்பிக்கப்பட்டு, 1869 – 1896 ஆண்டுக் காலப்பகுதியில் பரியோவான் கல்லூரி வளாகத்திற்குள் இயங்கி வந்தது. பின்னர் இந்த அருங்காட்சியகம் 'தொல்லியல் திணைக்களத்தினரால்' பெறப்பட்டு, பிரதான வீதியில் ஒரு கட்டடத்தில் இயங்கி வந்தது.

### முடிவுரை

இந்த நூல் ஏற்கனவே நமது வரலாற்றாசிரியர்கள் எழுதிவைத்த தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு இரண்டாவது வகைச் சரித்திர நூல் அல்ல. போர்த்துக்கேய, டச்சுக்கார, பிரித்தானிய ஆட்சிக்காலத்தைய அறிக்கைகளையும், ஆவணங்களையும், வரைபடங்களையும், சமகாலத்தைய மூல நூல்களையும் அலசி ஆராய்ந்து, அக்காலப் பகுதிகளின் ஆட்சியாளர்களினதும், குடிமக்களினதும் தேவைகளுக்கும், அரசியல், சமூக, பொருளாதார, வளர்ச்சிகளுக்கும் ஏற்ப, பாதுகாப்பு, நிர்வாகம், வணிகம், கல்வி, சமயம், வீதியமைப்பு, போக்குவரத்து, பொதுவசதிகள் ஆகிய பலதரப்பட்ட துறைகள் சார்ந்து யாழ்ப்பாண நகரம் வளர்ச்சியடைந்த விதம் குறித்த விரிவான விளக்கங்களை உள்ளடக்கிய நூல்.

அதுமட்டுமல்ல, இப்பொருள் பற்றி இதற்கு முன்னர் வெளிவந்த வரலாற்று நூல்களின் மெய்மையை வெளிப்படுத்தும் வரலாற்றியல் (Historiography) ஆய்வு நூல் என்ற வகையில் இது ஒரு முன்னோடி நூல். இதுவரை காலமும் வெளிக்கொணரப்படாத ஏகப்பட்ட தகவல்களை உள்ளடக்கி, நூற்றுக்கணக்கான நிலப்படங்களினதும், வரைபடங்களினதும், ஒளிப்படங்களினதும் உதவி கொண்டு இந்த நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் நூலாசிரியரின் அயராத உழைப்புக் காணக்கிடக்கிறது.

ஒரு மண்ணின் வரலாறு அதன் மக்களைச் சென்று அடைய வேண்டும். "பல்கலைக்கழகக் கோட்டையிலே, பேராசிரியர்களின் மூளைக்குள்ளே அணிவகுத்து நிற்கும் ஆயிரமாயிரம் விவரங்களும் நிகழ்வுகளும் சரித்திரமா? அல்ல. அல்லது, நூல் நிலையங்களிலே, கனத்த அட்டைகளுக்கு இடையே, பொடி எழுத்துகளில் திணிக்கப்பட்டிருக்கும் தேதிகளும், பெயர்களும், போர்க்களங்களும் சரித்திரமா? அல்ல. மக்கள் அறிந்ததே சரித்திரம். அவர்களின் இரத்தத்தோடு இரத்தமாய்க் கலந்துவிடும் நினைவுகளே சரித்திரம் என்கிறார் ஒரு வரலாற்றாசிரியர். அந்த வகையில் இலகுவாக விளங்கக்கூடிய தமிழில் எழுதப்பட்டிருக்கும் இந்த நூல் ஒவ்வொரு வாசகனின் உள்ளத்திலும் உறைந்துவிடும் என்பது உறுதி. இந்த நூல் யாழ்ப்பாண மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் படிக்க வேண்டிய வரலாற்றுப் படைப்பு ஆகும்.

'தான் பிறந்த மண்ணின் மீது அபாரமான அபிமானமும், எடுத்துக்கொண்ட ஆய்வுப்பொருள்மீது ஆழ்ந்த புலமைத்துவமும் இல்லாவிடின் இப்படியானதொரு வியத்தகு படைப்பை உருவாக்கியிருக்க முடியாது' என்றே எனக்கு எண்ணத் தோன்றுகிறது. இந்த வரலாற்றியல் ஆய்வு காலாகாலத்திற்கும் நிலைத்திருக்கப்போகின்ற ஒரு மகத்தான படைப்பு. இது, யாழ்ப்பாண மண்ணின் வரலாற்று ஆய்வில், நூலாசிரியர் மயூரநாதனின் ஒரு மகோன்னத சாதனை என்றே கூறவேண்டும்.

### அடிக்குறிப்புகள்


1. BELL, H.C.P. (1904): Report on the Kegalle District of the Province of Sabaragamuwa, Ceylon, Sessional Papers, Colombo: George J.A. Skene, Government Printer.

2. DAVIS, CHRISTOPHER; CONINGHAM, ROBIN; GUN AWARDHANA, PRISHANTA; PUSHPARATNAM, PARAMU; SCHMIDT, ARMIN; MANUEL, MARK (2018): "Recent Excavations and Survey at Jaffna Fort in 2017 and Reflections on the Antiquity of the Indian Ocean Trade, in Essays in Buddhism and Buddhist Monastic Archaeolo gy, Buddha Rashmi Vesak Volume 2018, Sri Lanka Central Cultural Fund.

3. DE QUEYROZ, FERNAO (1992): The Temporal and Spiritual Conquest of Ceylon, Vol. I, Book 1-2; Vol. II, Book 3-4; Vol. III, Book 5-6, Asian Educational Services, New Delhi.

4. KKILASANDSA (1906): Edited by P.S. Perera, Colombo.

5. PARANAVITANA, S. (1961): "The Arya Kingdom in North Ceylon, Journal of the Royal Asiatic Society, Ceylon Branch, Vol. VII, Part 2 (New Series), Colombo.

6. PATHMANATHAN, S. (1978): The Kingdom of Jaffna, Arul M. Rajendran, Colombo.

7. RASANAYAGAM, C. (1926): Ancient Jaffna, Madras.

8. REHLA OF IBN BATUTA (1976): Translation and Commen tary by Mahid Hussain, Oriental Institute, Baroda.

9. SLALIHINISANDSA (1924): Edited by Sir Dharmarama NayakaSthavira, Colombo.

10. திருப்புகழ் (1935 பதிப்பு): சைவசித்தாந்த சமாஜம், சென்னை (பாடல்: 759).




# க. பத்திநாதனின் உத்தியாக்கள் எனும் நூல் குறித்து

**கருத்துரை: து. கௌரீஸ்வரன்**

மட்டக்களப்பின் களுவன்கேணியைச் சேர்ந்த க. பத்திநாதன் எனும் ஆய்வாளன் எழுதியுள்ள பழங்குடிகள் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு நூல் 'உத்தியாக்கள்: கிழக்கிலங்கை கடலோர வேடர்களின் பண்பாட்டு அசைவுகள்' எனும் பெயரில் 'எழுநா'வினால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் கிழக்கிலங்கையில் வாழும் வேடுவர்களின் கடந்தகால, நிகழ்காலப் பண்பாடுகளைக் கேட்டும், பார்த்தும், அறிந்த தகவல்களை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பாகக் காணப்படுகிறது.

நவீன கல்வி, மிகப்பெரும்பாலும் அக்கல்வியைப் பெறுகின்ற மனிதரை அவர்கள் வாழும் சூழலுடன் ஒட்டி உறவாடவிடாமல் அதிலிருந்து அவர்களை அந்நியப்படச் செய்வதாகவே இயக்கம்பெற்று வருகிறது. இத்தோடு நவீன காலத்தில் பெரும்பாலும் பண்பாட்டு ரீதியாக ஒடுக்குமுறைக்குள்ளாகும் எண்ணிக்கையில் குறைந்த இனங்களும், சமூகங்களும், தமது தனித்துவங்களை மௌனமாக மறுதலித்தும், மறந்தும், அருகே வாழும் ஆதிக்கப் பண்பாடுகளுடன் கரைந்தும் வாழுகின்ற நிலைமைகள் வலுவாகக் காணப்படுகின்றன.

இத்தகைய நவீன கல்வி, பண்பாட்டுச் சூழல்களுக்குள் உருவாகி வளர்ந்த க. பத்திநாதன் எவ்வாறு தனது உத்தியாக்கள் (முன்னோர்கள்) பற்றிப் பேச முற்பட்டார்? இதற்குப் பின்புலமாக இருந்து, உத்வேகம் அளித்த கல்வி மற்றும் சமூகப் பண்பாட்டு மாற்றங்கள் எத்தகையவையாக இருந்துள்ளன? என்பதை இந்நூலின் வருகை வெளிக்காட்டி நிற்கிறது எனலாம்.

க. பத்திநாதன் நாடகமும் அரங்கியலும் கற்கவந்து அதற்கான ஆய்விற்காகத் தனது ஊரின் பழங்குடிச் சடங்குகளில் காணப்படும் குணமாக்கல் தன்மையினை ஆராயச் சென்றவர். 'ஓடும் புளியம்பழமும் போல' ஊருடனும் சடங்குகளுடனும் ஒட்டியும் ஒட்டாமலும் உறவாடி வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட நவீன மாணவனான பத்திநாதனுக்கு இளங்கலைமாணி ஆய்வும், அது தொடர்பான உரையாடல்களும், தனது உத்தியாக்களின் பெறுமதியை உணரச் செய்துள்ளதுடன், அதன் உள்ளே சென்று அதன் தத்துவங்களைக் கண்டறியும் ஓர்மத்தையும் வழங்கியுள்ளன எனலாம். இதனால் தனது இளங்கலைமாணிக் கற்கைக்குப் பின்னர் பத்திநாதன் ஆர்வத்துடன் கிழக்கிலங்கைப் பழங்குடிகள் பற்றிச் சுதந்திரமாகத் தேடினார், எழுதினார். இத்தகைய நிலைமாற்றத்தை இந்நூலிலுள்ள கட்டுரைகள் காட்டுகின்றன எனலாம்.

முன்கூட்டிய கருதுகோள்கள், கோட்பாட்டு வரையறைகள், ஆய்வுமுறைக் கட்டுப்பாடுகள் இன்றிச் சுதந்திரமாகத் தேடித்தேடிப் பழங்குடிகளின் பண்பாடுகளைக் கண்டறிய வேண்டியதன் அவசியத்தையும், அதனை எழுதும் முறைமையின் முக்கியத்துவத்தையும் உணர்த்துவனவாக பத்திநாதனின் சில கட்டுரைகள் காணப்படுகின்றன.

ஏற்கனவே களுவன்கேணிப் பழங்குடியினர் சார்ந்து திரு.கு. சண்முகம், திரு.க. சரவணபவன் ஆகிய ஆய்வாளர்கள் தமிழில் காத்திரமான ஆய்வு நூல்களை எழுதிப் பகிர்ந்துள்ள பின்புலத்தில், இளம் ஆய்வாளனாகிய திரு.க. பத்திநாதனின் 'உத்தியாக்கள்' நூல் மற்றுமொரு கவனத்திற்குரியதாக வெளிவந்துள்ளது.

# எழுநா வின் பதிப்புலகம்

கருத்துரை: த. சிவதாசன்

ஜூலை 20, 2025, 'எழுநா: 30 ஆவது வெளியீடு' கலந்துரையாடலுக்கு நண்பர், எழுத்தாளர், இதழாளர் நடராஜா முரளீதரனின் அழைப்பின் பேரில் சென்று, கலந்து, பேசும் வாய்ப்புக் கிடைத்தது. 'எழுநா' யாழ்ப்பாணத்தில் கருக்கொண்டு ரொறோண்டோ, கனடாவில் பிரசவமாகும் ஒரு மாத இதழ். சஞ்சிகைக்கும் ஜேர்ணலுக்கும் இடையிலான தன்மையுடன் வெளிவருவதாக அதை நான் கருதுவதுண்டு.

ஸ்காபரோவிலுள்ள கனடிய தமிழர் பேரவை மண்டபத்தில் (ஆம், அதே தான்!) சுமார் 4:00 மணிக்கு ஆரம்பமாகி சுமார் 8:00 மணிக்கு முடியும்போது சுமார் 40 பேர் முகமன் கூறி விடைபெற்றார்கள். ரொறோண்டோவின் இலக்கியக்கூட்டங்களுக்கு இது சராசரி. அரைவாசிக்கு மேல் வாராந்தரிகள்; அதாவது, வாரா வாரம் நடைபெறும் கலை இலக்கியக் கூட்டங்களில் தவறாது பிரசன்னமாகுபவர்கள். கனடாவில் தமிழை, இலக்கியத்தை, படைப்பாளியை வாழ வைப்பவர்கள்.



முதலாவதாக மூத்த படைப்பாளி கந்தையா சண்முகலிங்கம் பேசினார். இவர் 'எழுநா'வில் பிறமொழி, பெரும்பாலும் சிங்கள, ஆங்கிலப் படைப்புகளைத் தமிழில் தருபவர். சுமார் ஒரு மணித்தியாலம் நீண்ட பேச்சு. ஈழத்தின் பதிப்புலகில் எழுநாவின் அவசியம், அயலார் படைப்புகளை அறிந்து கொள்ளல் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றிப் பேசினார். கலை இலக்கியம் உறவை மேம்படுத்துகிறது; தவறான புரிதல்களால் எழும் சிக்கல்களை அவிழ்க்க உதவுகிறது என்ற சண்முகலிங்கம் அவர்களின் கருத்தில் எனக்கு உடன்பாடுண்டு. இலங்கையின் இரு மொழிக்காரரிடையேயும் (இருவரும் ஏறத்தாழ ஒரே இனம் என்ற வகையில் 'இனங்கள்' என்ற சொல்லைப் பாவிக்கவில்லை) மிக நீண்ட காலமாக இவ்வுறவு படகுப் பயணமாகவே இருந்து வருகிறது. படகு எப்போதாவது வந்தால்தான் தபால் வருமென்ற நிலை. இடதுசாரிகளுக்காகவே இப்படகும் ஓடியதாக நினைவு. இதனால் றெஜி சிறிவர்த்தன போன்ற முற்போக்குச் சிந்தனாவாதிகள் வடக்கிற்கு அறிமுகமாகினர். அதற்குக் காரணம் அவர்கள் எமது மூன்றாம் மொழியாகிய ஆங்கிலத்திலும் எழுதியமை. சண்முகலிங்கம் போன்றோர் இதைச் சாத்தியமாக்கினார்கள். ஆனால் தமிழர்களது படைப்புகள் போதுமான அளவு படகுகளில் சென்றடைந்ததற்கான தடயங்கள் இருந்ததாகவோ அல்லது அதன் அத்தியாவசியம் பற்றியோ கந்தையா சண்முகலிங்கம் போன்றவர்கள் குறிப்பிட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. 'எழுநா' மூலமாகவே

எனக்கு அவரைத் தெரியுமென்ற வகையில் அதன் வருகையும் இருப்பும் முக்கியம் பெறுகின்றன.




அடுத்து முனைவர் பால. சிவகடாட்சம் சுருக்கமாகப் பேசி கலந்துரையாடலுக்கு அழைத்தார்; எதிர்பார்த்த மாதிரி நடைபெற்றதாகத் தெரியவில்லை. பால சிவகடாட்சம் சித்த, ஆயுர்வேத வைத்தியத் துறையில் பாண்டித்தியம் பெற்றிருந்தாலும், ஏட்டுச் சுவடிகளிலிருந்து அவற்றை நவீன தமிழுக்குக் கொண்டுவருவதில் மிகுந்த சிரமத்துடன் பணியாற்றி வருபவர். பால. சிவகடாட்சத்தின் நூல்கள் ஈழத்திலும், தமிழ்நாட்டிலும் ஏற்கனவே பிரசுரமானவை. கனடாவுக்குப் புலம்பெயர்ந்ததிலிருந்து பல வாராந்தரிகளும், மாதாந்தரிகளும் இவரை வசப்படுத்தி வைத்திருந்தன. 'தாய் வீடு', 'எழுநா' இந்த வகையில் அடங்குபவை. இதைவிட அவ்வப்போது வானொலிகள், இணையக் கருத்தரங்குகள் என்று பிரசன்னமாகுபவர். ஆனாலும் 'எழுநா' அவரை உலகெங்கும் கொண்டு சென்றிருக்கிறது.

மாமூலன், ரஃபேல் ஆகிய பெயர்களில் எழுதி வரும் போல் (வரன்) சந்தியாப்பிள்ளை நாட்டாரியலில் முதுமாணிப் பட்டத்தை ஒளித்து வைத்துக்கொண்டிருந்தாலும், ஏறத்தாழ ஐரோப்பிய, கனடிய இலக்கியக் கோத்திரங்கள் அருகிப்போய்விடாது பாதுகாத்து வைக்க முயற்சிக்கும் சிலரில் ஒருவர். 'எழுநா' பற்றிய அவரது கருத்து 'முன்னேற இடமுண்டு' என்பதாகவே எனக்குப் பட்டது. அதற்கான பல்வேறு காரணங்களை அவர் முன்வைத்தார்.

அடுத்து நான். 'எழுநா' பற்றி எனது கருத்தில் பெரும் பகுதி எதிர்மறையானது. 'எழுநாவில்' வருகின்ற அனைத்துக் கட்டுரைகளும் மிகவும் கனதியான ஆய்வுத்தன்மை கொண்டவை (Academic). ஒரு ஜேர்னல் (Journal) என்ற வகைக்குள் அடங்க வேண்டிய ஒரு நூலை சஞ்சிகை வடிவத்தில் அச்சடித்து, ஜனரஞ்சக வாசகர்களைப் பிடித்து, அவர்களைப் பலவந்தமாக முனைவர்களாக்கும் முயற்சி போலவே எனக்குத் தெரிந்தது. எந்த ஒரு பண்டத்திற்கும், அது 'Brand' ஆக உருமாறுமட்டுமாவது, 'Marketability' இருக்கவேண்டும். சஞ்சிகை வடிவத்தில் வெளிவருகின்ற 'எழுநா'வை வாசிக்கும் ஒருவர் கவிதையையோ, சிறுகதையையோ தான் முதலில் எதிர்பார்ப்பார். மாறாக 'சிந்துவெளி நாகரிகத்துடன்' முதலாவது கட்டுரை ஆரம்பித்தால் அவர் அதைத் தூக்கி மாரிகால வாசிப்பிற்காக அப்பால் வைத்துவிடுவார். அதேவேளை அதை ஒரு ஜேர்னல் வடிவத்தில் தலைப்பை (Title) முனைப்பாகக் கொண்ட வடிவமைப்புடன் 'எழுநா' பதிப்பக வெளியீடு என்று வெளியிட்டால், வாசகர்கள் அத்தலைப்பினாலோ அல்லது அதை ஆக்கியோனின் பெயராலோ ஈர்க்கப்பட்டு அந்நூலை வாங்குவார். அநேகமாக அவருக்கு அது உகந்த ஒன்றாகவே இருக்கும். இப்படியான முயற்சியை 'எழுநா' பதிப்பகம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துவிட்டது என்பது உவப்பான செய்தி.

கனடாவில் 'எழுநா'வைப் பதிப்பிப்பது நண்பர் நடராஜா முரளீதரன். ஒரு காரியத்தைப் பொறுப்பெடுத்தால் அக்காரியம் பற்றி அலசி ஆராயாது அதை முடித்து வைப்பதில் மட்டுமே அவர் குறியாகவிருப்பார். 30 ஆவது 'எழுநா' இதழைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வைத்துவிட்டேன் என்பதில் அவருக்கு அலாதிப் பெருமை. நூலின் உள்ளடக்கத்திற்காக அல்லாது, அவருக்காகவும், அவரின் அயராத உழைப்பைக் கௌரவிப்பதற்காகவுமே அவரிடம் இந்நூல்களை வாங்குவோர் அதிகம் (அவர் சென்றபின் திட்டுவது வேறு விடயம்!). அவரது விக்கிரமாதித்த உழைப்பிற்கான ஊதியம் அவருக்குக் கிடைப்பதில்லை – உள்ளார்ந்த குட்டிப் புழுகத்தைத் தவிர – என்பதுவே எனது ஆதங்கம்.

'எழுநா' இதே வடிவத்தில், கொஞ்சம் வர்ண ஜாலங்களையும் இணைத்து, யாழ்ப்பாணத்தில் இப்போது வெளியாகிறது. அதனுடைய வணிக வெற்றி பற்றி எதுவும் தெரியாது. ஆனால் இதன் மூலம் ஈழத்தின் பதிப்புலகத்தில் ஒரு புரட்சியைச் செய்துவிடலாமென 'எழுநாவின்' நிறுவுநர் சசீவன் முயற்சிப்பது போலத் தெரிகிறது. இதற்காக ஓர் அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் அமைத்து, பலருக்கு வேலைவாய்ப்பு அளித்து, வழமைபோல இதை ஒரு 'குடிசைக் கைத்தொழிலாக' நடத்தக்கூடாது என்பதில் அவர் குறியாகவிருப்பார் போலத் தெரிகிறது. அதற்காக 'எழுநா'வில் வரும் கட்டுரைகளைத் தொகுத்து இப்பதிப்பகத்திற்கு வேலை கொடுக்கிறார். ஒரு சிறந்த தொழில்நுட்ப நிறுவனத்தை நிர்வகித்து வரும் அவருக்கு வணிக வித்தைகள் புதியனவல்ல. ஆனால் கனடாவில் வெளியாகும் 'எழுநா'வுக்கான இடம் எது என்பதில் எனக்கு மயக்கம் இருக்கிறது.

கனடாவில் பல வருடங்களுக்கு முன்னர் எனக்குத் தெரிந்த எழுத்தாளர் ஒருவர் மாதாந்த சஞ்சிகையை வெளியிட்டு வந்தார். வழமை போல ஒரு பிளாஸ்டிக் பையுடன் ஒருவர் முதலாளியின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கிக்கொண்டு ஓரமாக வெகுநேரம் நிற்பவராக இருந்தால் அது ஓர் எழுத்தாளராகவே இருப்பது வழமை. விற்ற 10 புத்தகங்களின் $2.50 கொமிஷனை வாங்குவதற்காக அவர் $10 பெற்றோல் செலவழித்து வந்திருப்பார். நமது இந்த எழுத்தாளர், தனது சஞ்சிகைகளில் 10 பிரதிகளை தெரிந்த ஒருவரின் பலசரக்குக் கடையில் விற்பனைக்குக் கொடுத்திருந்தார். ஒரு வார இறுதி நாளின்போது அக்கடைக்குப் போன நண்பர் தனது சஞ்சிகைகள் ஒரு கயிற்றில் மாலை போலத் தூங்குவதைக் கண்டு சந்தோசத்தில் அவற்றை எண்ணிப் பார்த்தார். 9 பிரதிகள் சாவகாசமாகத் தூங்கிக்கொண்டிருந்தன. "ஆஹா ஒன்று விற்றுவிட்டது என முதலாளியுடன் சந்தோசமாகச் சல்லாபிக்க ஆரம்பித்ததும், முதலாளி தனது விரலைக்காட்டி "அது மேல தூங்குது என்றுகூறி அவரது சந்தோசத்தை முடித்து வைத்தார். இது தான் கனடிய 'இலக்கியச் சந்தை நிலவரம்'. இந்த விடயத்தில் நடராஜா முரளீதரன் வித்தியாசமானவர். முரளியைக் கண்டால் சில எழுத்தாளர்கள் விரைவாக நடப்பதற்குக் காரணமும் உண்டு. கனடாவில் 'எழுநா' எழுந்து நிற்பதற்கு அவரே காரணம். அது அவரைவிட விரைவாக நடக்க வேண்டும், ஓட வேண்டும் என்பதில் எனக்கும் அக்கறையுண்டு.

இன்றைய விழாவும் வெற்றிகரமாக நடந்தேறியதற்கு அவரது உடலில் நிரந்தரமாகக் குடிகொண்டிருக்கும் 'விக்கிரமாதித்தனே' காரணம். வாழ்த்துகள்!

நன்றி: மறுமொழி (July 22, 2025)

# எழுநா

வெளியீடு



யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன்
இரசவர்க்கம்
முனைவர் பால. சிவகடாட்சம்




காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்
மரியநாயகம் நியூட்டன்




யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு
1621 - 1948
இ. மயூரநாதன்




மலையகம்:
சமூக - பொருளாதார - அரசியல் பரிமாணங்கள்
பேராசிரியர் எம். சின்னத்தம்பி
இரா. ரமேஷ்
பெ. சரவணக்குமார்




இலங்கையின் பிராமி மற்றும் சிங்களக் கல்வெட்டுகளில்
தமிழர்
கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம்




இலங்கையின் வேளாண்முறைமையில் நவீன நுட்பங்கள்
கந்தையா பகீரதன்




சமஷ்டி அரசியல் முறைமைகள்: ஓர் அறிமுகம்
தொகுப்பும் தமிழாக்கமும் :
கந்தையா சண்முகலிங்கம்


எழுநா
வடக்கு - கிழக்குப்
பிராந்திய அபிவிருத்தியும்
உயிர்ப்பல்வகைமையும்
சி.ஜேம்சன் அரசகேசரி


எழுநா
யாழ்ப்பாணத்தில்
சாதி அமைப்பும்
சமூக உறவுகளும்
தொகுப்பும் தமிழாக்கமும்:
கந்தையா சண்முகலிங்கம்


எழுநா
உத்தியாக்கள்
கிழக்கிலங்கை கடலோர வேடர்களின்
பண்பாட்டு அசைவுகள்
கமலநாதன் பத்திநாதன்


எழுநா
உத்தியாக்கள்
கிழக்கிலங்கை கடலோர வேடர்களின்
பண்பாட்டு அசைவுகள்
கமலநாதன் பத்திநாதன்


எழுநா
சூழ்ச்சிகளையும்
சதிகளையும்
கடந்த வரலாறு
இரா.சடகோபன்


எழுநா
பதார்த்த
சூடாமணி
பால. சிவகடாட்சம்


எழுநா
மாறுபாடில்லா
உண்டி
சித்தமருத்துவர்
தியாகராஜா சுதர்மன்


எழுநா
வடக்குப் பிராந்தியக்
காலநிலையியல்
நாகமுத்து பிரதீபராஜா






















முன்பதிவுகளுக்கு +94 777 97 5029

SpotOn Money



# SEND MONEY to SRI LANKA

**FIRST TRANSFER FEE FREE***

Immediate Payment to Any Account

*Partnership with*

CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount* on Purchases

**0207 341 7300**
www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

**OUR GROUP OF COMPANIES**

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

**CSR INITIATIVE**

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,**
**Paddington W21JA.**
**Phone : +44 203 5001380**
**Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,**
**Colombo 06.**
**Phone : +94 112 559854**
**Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,**
**Kallady, Thirunelvelly, Jaffna**
**Phone : +94 212 212797**
**Email : contact@xebiro.com**

**Nimal Vinayagamoothy, CPA, CGA**

Chartered Professional Accountant

nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

மானுடம் நிறுவனம்
maanudam foundation

# நூல்சார் செயற்பாடுகள்







தமிழ் அச்சுப் பண்பாட்டிலும் பதிப்பு வரலாற்றிலும் ஈழத்து அறிஞர் பணிகள் முன்னோடியானவை. வரலாற்றுக் கனதி மிக்கவை. ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை முதலியோரின் சீர்பதித்த நற்பதிப்புகளும் நுண்மாண் நுழைபுல ஆராய்ச்சிப் பதிப்புகளும் தமிழை அச்சு யுகத்திற்குத் தயார்படுத்தியும் தகுதிப்படுத்தியும் வைத்தவை. தமிழ்ச் சமூகத்தின் ஆய்வு அறிவுச் சூழலையும் படைப்பாக்கச் சூழலையும் மேன்மையுறச் செய்தவை. பாடாய்க் கிடந்த ஏடுகளை, எழுதா எழுத்தான அச்சு வாகனம் ஏற்றிப் பவனிவரச் செய்து, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்தை நல்கியவை. ஈழத்தில் தமிழ், தமிழர் குறித்த எந்தவொரு ஆய்வும் ஈழத்துப் பதிப்புலகின் அறிகையின்றிப் பூர்த்தியாகாது. ஆய்வுப் பரப்பில் ஈழத்துப் பதிப்புலகானது. வரலாறு மற்றும் சமூக பண்பாட்டுப் பின்புலத்தில், இதுவரை அதிகம் கவனிப்புறவில்லை. இதனால், ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகின் திசைவழிகளை அடையாளம் காணவும் அதன்வழி வரலாற்றைக் கட்டமைக்கவும் 'ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும்' எனும் பொருண்மையில் 'ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாட்டை எமது துறை ஒழுங்குசெய்தது. மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற ஆதார கருதி உரையையும் சமர்ப்பிக்கப்பெற்ற 27 ஆய்வுக் கட்டுரைகளையும் கொண்டு உருவானதே இந்நூல். தமிழியலுக்கு எம் தமிழ்த்துறையின் நன்கொடையாக அமையும் இந்நூல் அச்சுப் பண்பாடு, பதிப்பு வரலாறு ஆகியவற்றில் ஈழத்தின் சென்ற காலத்துப் பழுதிலாத் திறம் மீது ஒளி பாய்ச்சுகின்றது.

அனுசரணை:
மானுடம் நிறுவனம்
www.maanudam.org

# யாழ் மண்ணில்



வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

**RE/MAX ELITE**

021 224 2855 | 0777 44 1113

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

**BUY-SELL-RENT HOME AND LANDS**

WWW.REMAXELITE.LK


We work with 35 financial institutions
Business & Personal Insurance
Free Financial Education for everyone
We work with 35 financial institutions
Long Term Care | Elder's Insurance
Children's Insurance
Best Services
1. RESP/PRSP
2. Life Insurance
3. Auto Insurance
4. Estate Planning
5. Home Insurance
6. Disability Insurance
7. Mortgage Insurance
8. Travel/Visa Insurance
9. Non-Medical Insurance
10. Critical illness Insurance
11. Dental & Drug Insurance
12. Guaranteed Investments
416-731-2829


SS CAKES
Say "I Do"
to Sweet Perfection!
Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.
+94 76 347 0055
We do delivery around the world

# வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.



# XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

**OUR GROUP OF COMPANIES**

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

**CSR INITIATIVE**

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com



Helping you harness the power around you
**NEW DAWN ENERGY SOLUTIONS**

# SOLAR POWER சூரிய சக்தி

SAFE ☼ CLEAN ☼ FREE ☼ பாதுகாப்பானது ☼ இலவசமானது ☼ சுத்தமானது

**AUTOMATIC OPERATION | NO REFUELLING | POWER DIRECTLY TO YOUR HOME**

**GRID-TIED SOLAR**
With this solar system you can earn up to $3850 annually for 20 years.

**NANO GRID SOLAR**
With this solar system you can cut your electricity bill to zero and you are never without electricity.

**ENERGY CONSERVATION**
With this solutions you can reduce your energy bill.

**OFF-GRID SOLAR**
With this solar system you can have electricity wherever you want.

**SOLAR POOL HEATER**
With this solar system you can cut your pool heating bill to zero.



HomeStars
Read Our Reviews
www.homestars.com

A+ Rating BBB ACCREDITED BUSINESS

500 2015 TOP SOLAR CONTRACTORS

**info@NewDawn-ES.Com | www.NewDawn-ES.Com | 416-855-9377**

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

## BUSINESS PROCESS OUTSOURCING

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,**
**Paddington W21JA.**
**Phone : +44 203 5001380**
**Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,**
**Colombo 06.**
**Phone : +94 112 559854**
**Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,**
**Kallady, Thirunelvelly, Jaffna**
**Phone : +94 212 212797**
**Email : contact@xebiro.com**

Netwyn.Place

# Unleash Your Potential

www.netwyn.place

10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4

**+1 416-906-1414**




**BOOK YOUR TOUR TODAY**





